நானும் என் எழுத்தும்

முனைவர் நா. சந்திரசேகரன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

நானும் என் எழுத்தும்

பதிப்பாசிரியர்
முனைவர் நா. சந்திரசேகரன்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Nānum En̲ E̲luttum
Editor	:	Dr. N. Chandrasekaran
Publisher	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai - 600 113
Publication No.	:	411
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	2001
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	xxvi + 246
No. of Copies	:	1200
Price	:	Rs.60/- (Rupees Sixty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004
Subject	:	Writers and their Experiences

பொருளடக்கம்

		பக்கம்
	அணிந்துரை	iv
	படைப்பாளரும் படைப்பு முறைகளும்	vi
	படைப்பாளர் உரை முனைவர் நா. சந்திரசேகரன்	
1.	அசோகமித்திரன்	1
2.	இந்திரா பார்த்தசாரதி	13
3.	கந்தசாமி, சா.	17
4.	சமுத்திரம், சு.	40
5.	சிவசங்கரன், தி.க.	56
6.	சின்னப்பபாரதி, கு.	64
7.	சுந்தரராமசாமி	74
8.	செல்லப்பா, சி.சு.	78
9.	செல்வராஜ், டி.	97
10.	நீலபத்மநாபன்	104
11.	பிரபஞ்சன்	110
12.	பொன்னீலன்	119
13.	முகம்மது மீரான், தோப்பில்.	152
14.	முத்துசாமி, ந.	171
15.	ராமாமிர்தம், லா.ச.	182
16.	ராஜநாராயணன், கி.	192
17.	ராஜம் கிருஷ்ணன்	196
18.	வண்ண நிலவன்	210
19.	வாஸந்தி	220
20.	ஜெயகாந்தன், த.	227

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

அணிந்துரை

உலக இந்திய இலக்கியத்தில் (குறிப்பாக, தற்கால இலக்கியத்தில்) புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களை எழுதியமைக்கான நோக்கம் குறித்தும் அப்படைப்புக்களின் வெளியீட்டுப் பயன்பாடுகள் குறித்தும் அவ்வப்போது பேசியுள்ளனர்; அவை குறித்துப் பல்வேறு கட்டங்களில் எழுதியுமுள்ளனர். டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, செக்காவ், ஒஸாமின், பைரன், கீட்ஸ், ஷெல்லி, டி.எஸ். எலியட் போன்ற பல புகழ்பெற்ற படைப்பாளர்கள் பலர் தங்கள் படைப்பு வாழ்க்கை குறித்து கூறிவந்துள்ளமை இங்கு நினைவு கூறத்தக்கதாகும். இந்திய மொழிகளிலும் பல புகழ்பெற்ற உன்னதமான படைப்புக்களைத் தந்துள்ள படைப்பாளர்கள் பலரும் தத்தம் படைப்பு வாழ்க்கை குறித்துப் பேசியும் எழுதியும் வந்துள்ளனர். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் படைப்பு நோக்கங்கள் குறித்த செய்திகள் தொல்காப்பியர் காலம் தொட்டு ஆங்காங்கே கூறப்பட்டு வந்துள்ளன. ஆயினும் "நமக்குத் தொழில் கவிதை – நாட்டுக்குழைத்தல் – இமைப்பொழுதும் சோராதிருத்தல்..." என்று மகாகவி பாரதியார் தன் படைப்புக்களையும் தன் சமுதாய வாழ்க்கையையும் இரண்டறக் கலந்ததாய் அமைத்துக் கொண்டு தமிழ் இனத்தாரிடையே புலப்படுத்திச் சென்றுள்ளமை ஒரு முக்கியமான காலகட்டமாகும்.

பாரதியார் தான் மட்டுமன்றி தன் படைப்புப் பரம்பரையினரான பாரதிதாசன், புவியரசு, தமிழ் ஒளி, வாணிதாசன், வேழவேந்தன் போன்றோரையும் தன்னைப் போன்ற இலக்கிய நோக்குடையோராய் வாழ்ந்திடச் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. படைப்பாளர்கள் தாம் படைக்கும் எந்த ஒன்றின் மூலமாவது சமூகத்திற்கான தம் கடப்பாட்டையோ கலைத்துறைக்கான பங்களிப்பையோ நிறைவேற்றிடும் எண்ணமுடையோராய் இருப்பதைச் சமகாலத்தில் வாழும் நவீனத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்களிடையேயும் காணமுடிகிறது. படைப்பு வாழ்க்கை அதற்கான நோக்கு போக்கு குறித்த வெளிப்பாடுகளின் இலக்கிய மரபுத்தொடர்ச்சியின் அடுத்த ஒரு கண்ணியாக இந்நூல் கட்டமைப்புடன் வெளியிடப்படுகிறது.

இந்நூலுக்கான அடிப்படைத் தரவுகள் "நானும் என் எழுத்தும்" என்ற தலைப்பில் நடைபெற்ற படைப்பாளர் சந்திப்புக் கூட்டங்களில் பேசிய உரைகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. சமகாலத் தமிழ்ப் படைப்பாளர்களுக்கு நன்றி. இத்தகைய கூட்டங்களை முதலில் தொடங்கி நடத்திய ஆர்வலர்களில் முக்கியமான சிலரில் திரு. திருப்பூர் கிருஷ்ணன், திரு. சா. கந்தசாமி, திருமதி பிரசன்னா ராமசாமி போன்றோர் நன்றியுடன் நினைவுகொள்ளத் தக்கோராவர். இவர்களுடன் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்தது. நிறுவனம் மேலும் பல படைப்பாளர்களை - பல்தரப்பட்ட நோக்கு போக்குடையோரை - அழைத்து அதே தலைப்பின் கீழ் உரையாடவும் விவாதிக்கவும் செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளாய் அவ்வப்போது நடைபெற்று வந்த கூட்டங்களில் பதிவு செய்யப்பட்ட ஒலி/ஒளி நாடா உரைகள், கூட்டங்களில் நேரில் கேட்ட உரைகள், கூட்டங்களில் நன்கு பதிவாக உரைகளுக்குப் பதில் மீண்டும் படைப்பாளர்களிடமே கேட்டுப் பெறப்பட்ட உரைகள், பத்திரிக்கைப் பேட்டிகள் முதலியவற்றிலிருந்து இந்நூலுக்கான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த உரைகளையும் நூலுக்கான ஆய்வு முகப்புரையாக "படைப்பாளரும் படைப்பு முறைகளும்" என்ற கட்டுரையையும் எழுதி நூலாக்கம் செய்தவர் இந்நூலின் பதிப்பாசிரியரான முனைவர் நா. சந்திரசேகரன் ஆவார். இவர் மிகவும் பொறுமையுடனும் பொறுப்புணர்வுடனும் தரவுகளைச் சரிபார்த்துள்ளார்; ஒலி/ஒளி நாடா உரைகளில் தெளிவுப் பெறாத பகுதிகளையும் கூட எழுத்தாளர்களோடு தொடர்புகொண்டு சரி செய்துள்ளார். நூல் கட்டமைப்புக்கான அவரது உழைப்பு பெரிது. பதிப்பாசிரியரின் முயற்சிக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். மெய்ப்புப் பணிக்குத் துணை நின்ற முனைவர் ம. இளங்கோவன், கைப்பிரதிக்குத் துணை நின்ற மாணவி க. வசந்தகோகிலம், நல்ல முறையில் கணினியில் வார்த்துக் கொடுத்த நிறுவன கணிப்பொறி மையப் பணியாளர்கள் திரு. சு. கண்ணன் மற்றும் திருமதி. இரா. வெண்ணிலா, சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார் ஆகியோருக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத்தலைவர் மாண்புமிகு கல்விஅமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் கூடுதல் செயலர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றி.

இயக்குநர்

படைப்பாளரும் படைப்பு முறைகளும்

முனைவர் நா. சந்திரசேகரன்

மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபட்டு 'ஏன்', 'எப்படி' 'எங்கு' என்றவாறு தன் ஆறாவது அறிவு கொண்டு சிந்திப்பதாய் உணர்ந்த காலகட்டம் ஒரு பண்பாட்டு மானுடவியல் வரலாற்றுத் திருப்புமுனை. இந்நிலை மானுடர் அனைவருக்கும் பொதுவானது. மனித சமுதாயத்தையே சேர்த்து அடக்குவது 'பொதுமனிதன்' என்ற பெருவகை. பொதுமனிதன் என்பவன் பிறத்தல், உண்ணல், அருந்தல், உடுத்தல், சிரித்தல், பேசல், பேசாதிருத்தல், அழுதல், இறத்தல் என்பனவாய் இயங்கிடும் இயல்பான மனிதவாழ்க்கையைக் கொண்டவனாகிறான். மனித சமுதாயத்தின் இயக்கம் - மாற்றம் - வளர்ச்சிப் போக்குகளில் பொதுமனித வாழ்க்கைக்கும், தனிமனித வாழ்க்கைக்கும் இடையில் தெளிவான வேறுபாடுகள் காலம் தோறும் உருவாகி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

"தனிமனிதன்" என்பவனை ஒருவன் முற்றிலும் தன்னலம் காரணமாய் பிறமனிதர்களிடமிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு தனியாக நிற்பவன் என்று இங்கு பொருள் கொண்டிடத் தேவையில்லை. எந்த ஒரு மனிதன் சமூகத்திற்கான தனது செயல்பாங்கில் தனித்துவம் கொண்டு இயங்குகிறானோ அவனையே தனிமனிதன் என்கிறோம். அவனது தனித்துவம் அவன் சார்ந்துள்ள சமுதாயம் அல்லது ஒட்டுமொத்த மானிட சமுதாயத்திற்கே நன்மை பயக்கும் ஒன்றாய் அமைந்திருக்கும். அதாவது நேர்-பன்முகப் பயன்விளைவுச் செயல்பாடுகளுக்கான குணத்தை அடைந்தவனைத் தனிமனிதன் என்று அழைத்திட முயற்சிக்கிறோம்.

மானிட சமுதாயத்தில் பொதுநலத்தன்மை வாய்ந்த இத்தகைய தனிமனிதர்களின் செயல்பாடுகள் பண்பாட்டு வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளன. அதாவது ஒவ்வொரு சமூகமும் தனக்கு ஏற்படும் சிக்கல்கள் / போராட்டங்களின் தன்மையை மாற்றும் வகையிலோ அல்லது அப்போதைய தீர்வைப் பெற்று அடுத்தகட்ட வளர்ச்சி அடைந்த சிக்கல்கள் / போராட்டங்களுக்கு இடமளித்திடும் வகையிலோ இயங்குவதற்குத் துணைபுரியும் பாங்கில் இத்தனிமனிதர்கள் தொழில் படுகிறார்கள். இத்தனிமனிதர்கள் தத்துவவாதிகளாகவோ, ஆறாவது அறிவைச் செம்மைப்படுத்தும் அறிஞர்களாகவோ, அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பாளர்களாகவோ, பகுத்தறிவாளர்களாகவோ, சிறந்த அரசியல்வாதிகளாகவோ, பல்வேறு நுண்கலைக் கலைஞர்களாகவோ,

படைப்பாளர்களாகவோ வாழ்ந்திடலாம். சில தனிமனிதர்களிடம் மேற்கூறிய வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட தனித்துவ ஆற்றல்கள் கூட அமைந்து அவர்களால் மனிதவளம் மேம்பாடு அடைந்து வருவதை மானிட சமுதாய வரலாறு தெளிவாக்குகிறது. மானிட சமுதாயம் காலம் தோறும் தனித்துவ வல்லுனர்களைப் பெற்று வந்துள்ளது என்றாலும் மேலைநாடுகளின் பிரெஞ்சு-ரஷ்ய - தொழில் புரட்சிகள் நடைபெறலுக்கான தோற்றக்களன்கள் ஏற்பட்ட காலகட்டங்களிலும் அதன்பின்னரும்தான் இத்தனிமனிதர்களின் பெருவாரியான பிறப்பு-வளர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன.

இத்தனிமனிதர்களில் கலைப்படைப்பாளர்கள் என்ற பிரிவினர் ஏனைய பிரிவினர்களினின்றும் வேறுபட்ட உருவாக்க - செயலாக்கப் பின்னணிகளைக் கொண்டவர் ஆகின்றனர். பல்வேறு வகைப்பட்ட நுண்கலைக் கலைஞர்களையும் இங்கு ஒரு சேரக் கருதலாம். ஆனால் பிற நுண்கலைக் கலைஞர்களைக் காட்டிலும் இலக்கிய படைப்பாளர்களின் படைப்புகள், அவை படைக்கப்பட்ட பின்னணி, வெளியீடு, வாசிப்பு, திறனாய்வு, இலக்கிய வரலாறு, பண்பாட்டுச் சமூக வரலாற்று ஆவணமாதல் என்ற பல்தள நோக்குகளில் அதிகமான வீச்சு மற்றும் பரவல்தளங்களைப் பெறும் வகையில் முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன.

இலக்கியப் படைப்புகள் கர்ணபரம்பரையாக / செவிவழியாகப் பரவியதில் தொடங்கி ஓலைச்சுவடி, அச்சுத்தாள், புத்தகங்களில் விரிந்து இன்று செயற்கைக்கோள் இணையங்கள் வழியாக மண்ணிற்கும் விண்ணிற்குமாய் வீச்சுப் பரவல்களைக் கொண்டிருப்பது இன்று சாத்தியமாகி விட்டது. பாரதி சிலாகித்த "வானம் அளந்தது அனைத்தையும் அளந்திடும் வண்மொழி" களுள் ஒன்றாய் சாத்தியக் கூறுகளுடன் கூடிய தமிழ்மொழி அமைந்து அதன் இலக்கியங்கள் இயங்கிப் பரவுகின்றன. எந்தக் காலத்திற்கும் எந்தச் சூழலுக்கும் இயைபுபட்ட சாத்தியக்கூறுகளை இயல்பிலேயே கொண்டமைந்ததை "மனோன்மணீயம்" இயற்றிய பெசுந்தரனார் தம் தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலில் வியந்து பாராட்டி தமிழ்மொழியின் "சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தியதை" நினைவு கொள்ள வேண்டியதாகிறது.

நாம் அடையாளப்படுத்தும் படைப்பாளர்களும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, வளர்ந்து, மாய்ந்துதான் போகின்றனர். ஆனால் திறமையான படைப்பாளர்கள் மேற்படி புலன் உணர்வுகள் கொண்டு செயல்படும் நிலையில் பொது மனிதர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டு விடுகின்றனர். புலன் உணர்வுகள் வழி செயல்பாட்டில் அனுபவப் பட்டறிவைப் பெறுகின்றனர். இத்தகைய அனுபவப் பட்டறிவு பெற முதலில் தம் புலன் உணர்வுகளைக் கூர்மைப்படுத்துகின்றனர். பொது மனிதர்கள் போலன்றி, ஊர்ந்து செல்லும் சிதல் எறும்புகள் தொடங்கி அளவற்ற அழிவை உண்டாக்கும் அணுச் சிதறல்கள் வரை / சுவாசிக்கும்

காற்று முதல் பேரழிவை உண்டாக்கும் இயற்கைச் சீற்றங்கள் வரை நோக்குபவற்றை - உணர்பவற்றை தாமே மற்றொரு பெயர்த்தலுக்குட்படுத்தி அகநோக்காய் - அக உணர்வாய் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர்.

படைப்பாளர்கள் தம்முடைய அகநோக்கு - அக உணர்வுப் புரிதல்களை பக்குவப்படுத்திய நிகழ்வுகளாய் மாற்றுகின்றனர். அவ்வாறு பக்குவப்படுத்திய நிகழ்வுகளை பல்வேறு கால - இடத் தளங்களில் முன்-பின்னாக்கி, மேல்-கீழாக்கி, ஆணைப் பெண்ணாக்கி, பெண்ணை ஆணாக்கி, விலங்கை மனிதனாக்கி, மனிதனை விலங்காக்கி அதாவது இயற்கையைச் செயற்கையாக்கி, மனிதன் படைத்தவற்றை இயற்கை வர்ணனைகளாய் மாற்றிப் படைப்புத் தொழில்படுத்தும்போது அவை வாசகத்தன்மை பெற்றுவிடும் படைப்பாகி விடுகின்றன. இவ்வாறில்லாமல், கண்டது கேட்டதை அப்படியே இலக்கியமாக்கும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது. ஆயினும் கால-இடபாத்திரங்களின் பிறழ்கலப்பு இலக்கியங்களே வாசகத்தன்மைக்குரிதாய் காலந்தோறும் அமைந்திருத்தலைக் காணமுடிகின்றது. அமைதியான காலகட்டத்தில் கலகலப்பான இன்ப ரசனைக்குரிய தன்னுணர்ச்சி வெளிப்பாட்டுப் படைப்புகள், பொதுமனித ஒழுக்கம் அற்ற காலகட்டத்தில் நீதி நெறிகளை வலியுறுத்தும் படைப்புகள், சட்டதிட்டங்கள் கடுமையாயிருக்கும் காலகட்டத்தில் விடுதலையுணர்வுடைய படைப்புகள், விடுதலை உணர்வை அனுபவிக்கும் காலகட்டத்தில் அறிவியல் தொழில் நுட்பத்தில் சிறைபட்ட எந்திரமயமான வாழ்க்கைப் போக்கை வெளிப்படுத்தும் படைப்புகள் என்று பட்டியலிடும்படியாய் அமைந்திடும் முரண்பட்ட அல்லது கலகப்படைப்புகள் யாவும் பெருவாரியான வாசகத்தன்மை பெற்றிருப்பதைப் பற்றி (காலந்தோறும் வாசக நினைவில் தொடர்ந்திடும் படைப்புகளைக் கொண்டு) சிந்திக்க முடிகிறது.

மிகச்சிறந்த படைப்புகளைச் செய்திட்டவர்களனைவரும் மிகச் சிறந்த வாழ்க்கையைக் கொண்ட தனிமனிதர்களாகவும் அமைந்திடவில்லை. நமக்கு கிடைத்திருக்கும் சங்ககாலத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் முதல் இன்றைய புதுக்கவிதைகள் வரை / மிகப்பழைய நாட்டுப் புறக்கதை பாடல்கள் முதல் இன்றைய சிறுகதை - நாவல்கள் வரை / மிகப்பழைய கூத்து முதல் இன்றைய நவீன நாடகங்கள் வரை / என்பதான தமிழ்மொழிக்குக் கிடைத்திருக்கும் உன்னதமான இலக்கிய வரலாற்றை நோக்கும்போது புதிய சிந்தனையாகப் பேசப்பட்ட 'படைப்பை நோக்கு; படைப்பாளனை விடுவி' என்றிடும் "பிரதி முதன்மை வாதம்" இயல்பாகவே அதாவது "ஏற்கனவே சொல்லப் பட்டிருப்பதை" நினைவு கூர்தல் தேவையாகிறது. தெருவில் பண்ணுடன் பாடி பிச்சை எடுத்துக் கொண்டோ அல்லது காட்டில் கைப்பிடி யாழை மீட்டிக் கொண்டோ சஞ்சரித்து சென்ற சாமானியர்கள், கூவிக் கூவி கடைத்தெரு வியாபாரம் செய்திட்ட வணிகர்கள், சாதாரண பெண்கள் தொடங்கி வீரர், அமைச்சர், அரண்மனைவாசிகள், மன்னர்கள் என்ற உயர் தகுதிநிலை வரை பிறந்து, வாழ்ந்து, மடிந்து சென்ற

பலர் அவர்களது உன்னதமான படைப்புகளுக்காகத்தான் நினைவு கொள்ளப்படுகிறார்கள். இந்த நிலைமையின் தாக்கம் தமிழ் எழுதத் தெரிந்ததாலேயே கையில் தாள் கிடைத்ததும் எழுதிக் காண்பிக்கும் மனிதன் முதல் இன்றைய நவீன அரசியல் சூழல் வயப்பட்ட மிகப் பெரிய தலைவர்கள் வரை ஆட்டிப் படைப்பதையும் மறுப்பதற்கில்லை. இன்று ஏராளமாய் இலக்கியங்கள் படைக்கப்பட்டு, பல படிக்கப் படாமலேயே ஒதுக்கப்படுகின்றன; சில படிக்கப்பட்டு ஒதுக்கப்படுகின்றன; சில படிக்கப்பட்டு பட்டிமன்றங்களுக்கு உரியதாக்கப்படுகின்றன; சில படிக்கப்பட்டு திறனாய்வு செய்யப்படு கின்றன. எவ்வாறு செவிவழி தனி பாடல்கள் தொடங்கி காப்பியங்கள் / கதைகள் என்பன அவற்றின் வாழ்வியல் செய்திகளுக்காகவே, கலை நயத்திற்காகவே / தரத்திற்காகவே ஓலை / தாள் / கணிப்பொறி என்று வளர்நுட்ப ஊடகங்களில் பெயர்க்கப்பட்டு தொடர்ந்து உயிர்ப்பு பெற்று வருகின்றனவோ அதே போன்று இன்றைய சூழலில் ஏராளமாய் புற்றீசல்களாய் வெளிப்படும் படைப்புகளில் இலக்கிய நடையுடையன மட்டும் காலநதியில் கரையாமல் எதிரேறி வரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நல்ல தரமான தாள் / அட்டை கொண்ட வசதியான வெளியீடுகள் (படைப்புகள் தரமில்லாது போயினும்) நூலகக் கரையான்கள் அரிக்காமல், பதிப்பகங்களில் இடநெருக்கடி ஏற்படாமல் மேலும் சில காலம் தாக்குப்பிடிக்கலாம். நல்ல நூலகங்களைத் தஞ்சம் அடைந்து கிறுக்கு வாசகர்கள் கைபடாத வெளியீடுகளும் இப்படித் தப்பிக்கலாம். உயிரற்ற இந்தச் சடப்பொருள்களும் கூட (தரமான / தரமற்ற படைப்புகள்) அதிலேறி ஊர்ந்திடும் நுண்ணுயிர்களுக்கு இரையாகி அழியத்தான் செய்யும்.

இன்று வாசிப்பு நேரத்தை வலிந்து பிடுங்கிக் கொண்டன அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகள். இந்தக் காட்சி ஊடகங்களில் கூட, மேற்படி கூறப்பட்ட, படிக்கப்படாமல் ஒதுக்கப்பட்டன முதல் நன்கு திறனாய்வு செய்யப்பட்டனவரையிலான படைப்புக்களை வடிகட்டி மீண்டும் காட்சிகளாக்கிக் காட்டப்பட்டும் முடிந்தாகி வருகின்றன. காட்சிகளாக்கப்படுவன பெரும்பாலும் நுகர்பொருள் சந்தை விளம்பரங்களுக்கானவை. காட்சி ஊடகங்களையும் விழுங்கிக் கொண்டு இருக்கின்றன செயற்கைக்கோள்வழி இணையங்கள். தமிழ்ப் படைப்புகளில் இணையத் தளங்கள் ஏற்பவை ஒதுக்குபவை பற்றி நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைய இணைய காலகட்டத்தில் அறிவு மற்றும் கலைத் துறைகளுக்குரிய அனைத்தும் காட்சிகளாக்கித் தரப்படும்போது மிகக் கடுமையான அல்லது சிக்கலான செய்திகள் புரிதலுக்கு ஏதுவாகின்றது. ஆனால் கலைத் துறைகளில் ஒன்றான இலக்கியம் நூல் எழுத்தாகத் தரப்படும் நிலையிலிருந்து மாற்றப்பட்டு கணினி / ஒலி ஒளி

காட்சிகளாக்கித் தரப்படும்போது அந்த இலக்கியத்தின் வாசகப் பிரபஞ்சம் முடக்கப்படுகின்றது; அதாவது மறுதலிக்கப்படுகின்றது. எந்த ஒரு தரமான இலக்கியமும் வாசகர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான "அகமனக்காட்சி வியாபகம்" காட்டுவதுண்டு. ஒரே வாசகருக்குத் தான் வாசித்த அதே இலக்கியத்தை வேறுவேறு பருவ வயதுகளில் வாசிக்கும் போது வேறுவேறு பொருளுணர்த்தல்களும் வேறுவேறு அகமனக் காட்சி வியாபகங்களும் உண்டாவதைத் தேர்ந்த வாசகர் ஒருவரால் உணர்ந்து கூறமுடியும். எனவே நூல்களிலுள்ள (படைப்பு) எழுத்தைக் கண்களால் வாசிப்பது மிகவும் முக்கியமானது ஆகும். ஆக ஒரு தேர்ந்த வாசகரின் உருவாக்கம் திறமான படைப்பாளியை விட தேவைக்குரியதாகின்றது.

தமிழ்ப் படைப்புகளைப் பொறுத்தமட்டில் சங்க இலக்கியங்கள் படைத்து பலநூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்டதொரு இடைவெளியில் சிறந்த வாசகர்கள் தோன்றியதால் வளமான உரைகள் நமக்குக் கிடைக்கப்பெற்றன. பெரும்பாலான உரைநூல்கள் தம் காலம் வரையிலான பிற படைப்புகளின் அறிவைப் பெற்றுவந்துள்ளன. உரைகளின் உதவி கொண்டு இலக்கியங்களை வாசித்து அனுபவித்து வரும் நிலைதான் பெரும்பான்மையாய் இருந்தது. நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்ற தற்கால இலக்கியங்கள் வந்த இன்றைய காலகட்டத்தில் ஏதேனும் ஒரு தற்கால இலக்கிய வகையில் ஒருசிலவற்றை மட்டும் வாசிக்கும் வழக்கம் உடையோர் மிகுதியாகின்றனர். புதுக்கவிதை வாசிப்புக்காரருக்கு நாவல், சிறுகதைகள் பிடிப்பதில்லை. கதை வாசிப்புக்காரருக்கு கவிதைகள் பிடிப்பதில்லை. இந்த நிலையில் நாம் இன்றைய படைப்பிலக்கிய வாசகர்களை சங்க இலக்கியங்கள் வரை பின்னோக்கி ஆழ்ந்து வாசிக்கும் வாசிப்புக்காரராக எவ்வாறு காண்பது!

அத்தகைய பின்னோக்கி ஆழ்ந்து வாசிக்கும் முறையில் நன்கு தேறிய தற்கால இலக்கியப் படைப்பாளர்கள் தேர்ந்த படைப்பு களைப் படைத்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு இருப்பதைக் கவனிக்க முடிகிறது. இன்றைய புதுக்கவிதைகளில் / சிறுகதைகளில் / நாவல்களில் முறையான நேர்த்தியான வர்ணனைகள் அமைவதும் மேற்கூறிய பின்னோக்கி ஆழ்ந்து வாசிக்கும் அடிப்படையில்தான். இதையே வேறு விதமாக, இன்றைய படைப்பாளர்கள் ஓரளவு தமது படைப்பு திறனால் உந்தப்பட்டு தமது பெயர்கள் தொடர்ந்து பலராலும் உச்சரிக்கப்பட்டு விடும் நிலையடைந்திடலாம்; அவர்கள் தமிழ்மொழியில் காலம்தோறும் படைப்பிலக்கியங்கள் எதை ஏன் எவ்வாறு எத்தகைய சூழலில் (அப்படைப்புகள்) வெளியாகியுள்ளன என்ற தெளிவான இலக்கிய வரலாற்றையும் அவ்விலக்கியங்களையும் வாசித்திருக்க வேண்டும் என்று வலியுறுத்த தோன்றுகிறது. இன்றைய படைப்பாளர்களில் சிலர் முறையாகத் தமிழ்மொழி இலக்கண

இலக்கியங்களை ஆழ்ந்து கற்று பள்ளி / கல்லூரிகளில் பணியாற்றிக் கொண்டே கல்வி மற்றும் பணித்தாக்கத்தில் படைப்பவர்கள் ஒரு பிரிவினர். இத்தகைய தமிழாசிரியப் பின்னணி படைப்பாளர்கள் மேலை நாடுகளிலும் பிற இந்தியப் பிரதேசங்களிலும் காலம்தோறும் படைக்கப்பட்ட முன்னோடிப் படைப்புக்களை பற்றி அறிந்திருத்தல் தவிர்க்க முடியாததாகும். ஆனால் இத்தகைய பரவலான பிறமொழி இலக்கிய அறிமுகம் கொள்ள மறுக்கும் தமிழாசிரிய பின்னணிப் படைப்பாளர்களில் சிலர் மேலும் ஒருபடி சென்று ஒரு குறுகிய மனப்பான்மையுடன் எத்தகைய புதுவகை இலக்கிய வரவுகளையும் பற்றி தொல்காப்பியம் ஏற்கனவே கோடிட்டு காட்டியுள்ளது என்று தம் பிறவற்றைப் பற்றியறியாத தாழ்வு மனப்பான்மையை மறைக்கக் கூறிக் கொள்வர்.

தமிழாசிரியப் பணி தவிர்த்த பிற வாழ்க்கைத் தொழில் பின்னணியைக் கொண்டவர்கள் படைப்பார்வத்தால் உந்தப்பட்டு இயல்பாகவே தமிழ் உள்ளிட்ட பிறமொழி இலக்கியங்களில் பின்னோக்கி ஆழ்ந்து வாசித்தலில் ஈடுபட்டுவிடுகின்றனர். இவர்களில் சிலர் முயற்சியின்மை காரணமாக, மேற்கூறிய ஈடுபாடு கொண்டிராதவர்கள் தாம் அறிவுவயப்பட்ட நிலையில் நின்று பார்ப்பதாக எண்ணி 'தமிழ்ப் பண்டிதர்கள் படைப்புகள் எப்போதும் மொழிப் பிரச்சாரத்தைக் காட்டும் உணர்ச்சிவயம் சார்ந்த படைப்புகள்' என்று அங்கலாய்ப்பதுண்டு. எதுவாயினும் படைப்பாளர்கள் தமக்குப் படைப்பாற்றல் உள்ளது என்று எண்ணிவிட்டால் (அந்த நம்பிக்கையுடன் படைப்புகள் செய்யத் துவங்கிவிட்டால்) அவர் குறைந்த பட்சம் தாம் படைக்கும் ஊடக மொழியின் (காலத்தை வென்ற) படைப்புக்களை வாசித்திருத்தல் அவசியமாகிறது.

படைப்பாளர்களின் படைப்புகள் கலைநேர்த்தியுடன் அமைந்திடலில் வாசகர்க்கும் இணையான பங்கு உள்ளதை வெளிப்படுத்த வேண்டியதாகிறது. முன்பு படைப்பாளர்கள் எவ்வாறு தாம் படைக்கும் இலக்கிய வகை மட்டுமன்றி ஒட்டுமொத்த பிற இலக்கிய ஞானமும் பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டதோ அதே பாங்கில்தான் தற்காலப் படைப்புகளின் மீது வாசித்தல்கள் செய்யும் ஒரு வாசகன் அப்படைப்புக்கு முன் அதே மொழியில் எத்தகைய இலக்கியங்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்திட வேண்டும். பிறமொழி மற்றும் உலக இலக்கியங்கள் பற்றிய அறிவை மொழிபெயர்ப்புகள் வழியாவது பெற்றிட வேண்டும். முதலில் வாசகன் வாசித்தல் நேரத்தை விழுங்கிக் கொண்டிருக்கும் பிற தொலைத்தொடர்பு ஊடகங்களை மறுதலித்து விட்டு வரவேண்டியதாகிறது. பின்னோக்கி ஆழ்ந்து வாசித்தல் முறை படைப்பளாருக்கு எந்த அளவுக்கு முக்கியமோ அதைவிட ஒருபடி மேலாக அத்தகைய வாசித்தல், தேர்ந்த வாசகனுக்கு முக்கியம்.

அப்போதுதான் சமகாலத்தில் ஒரு வாசகன் தான் ஈடுபட்டிருக்கும் பிரதி எந்த மொழி இலக்கியவகை மரபுகளை ஊடுபாவு நுண் இழைகளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடியும். அவ்வாறான ஊடுபாவு நுண்ணிழைகள் தற்காலப் படைப்புகளில் இழையோடுவதை வாசித்தலில் உணர்ந்த பின்புதான் படைப்பாளர் முற்கால சங்கதிகளுடன் ஒத்திசைந்துள்ளனரா அல்லது மறுஆய்வு செய்துள்ளனரா என்பதையும் அனுபவித்து வாசிக்கமுடியும். பிரதிகள் எக்காலத்திற்கும் வாசித்தல்களுக்கு ஈடு கொடுக்கின்றன என்று பேசப்படும் நிலைவரும்போது அவை நல்ல படைப்புகள் என்பதையும் வாசகர்கள் பின்னோக்கி ஆழ்ந்து வாசித்தல்களை மேற்கொண்டதன் பயன் விளைவுகள் என்பதையும் ஒருசேர நம்மால் உணரமுடியும். எனவே தேர்ந்த படைப்புகளின் நிலைத்து இருத்தல் மற்றும் இயக்கத் தன்மைகள் என்பன தேர்ந்த வாசகர்களின் செயல்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டமைகிறது.

படைப்பாளர்கள் குறிப்பிட்ட பட்டியல்காரராய் சுருக்கப் படுவதற்கு அவர் மட்டுமன்றி வாசகர் இயக்கம், மதிப்பீடு, திறனாய்வு, ஆய்வு உள்ளிட்டவற்றைத் தொழில்படுத்துவோர் ஏற்படுத்தும் தாக்கங்கள் மற்றும் பின்னூக்கப்பாராட்டல்கள் முதலியனவும் காரணமாகின்றன.

வணிகமய இதழ்கள் அவ்வப்போது கலைநயம் மிக்க நேர்த்தியான படைப்புகளை வெளியிடுகின்றன. ஆண்டு மலர்களில் இத்தகைய படைப்புக்களை எளிதாகக் காணலாம். ஒரு சில படைப்பாளர்கள் அவ்வப்போது தம் படைப்புக்களை வெளியிடும் இதழ்வழிப் போக்கிற்கும், ஒரு சில சமயங்களில் வாசகர்களின் விருப்பத்திற்காகவும் தம் படைப்புப் போக்கை நெகிழ்த்துக் கொள்வதுண்டு. ஆனால் ஒரு தேர்ந்த படைப்பாளனை மேற்சொன்ன எந்தப் புறத்தாக்கங்களும் கட்டுப்படுத்த முடியாது. மாறாக, அப்படைப்பாளன் தன் அனுபவச் சேகரிப்பு, பட்டறிவு ஞானம், பிற இலக்கிய வாசிப்பு, சக படைப்பாளிகளின் படைப்பு வாசிப்பு, சோம்பலின்மை, தற்புகழின்மை முதலிய நேர்முகக் குணங்களைத் தொடர்ந்து தம்மிடம் தக்கவைக்க முடியாது இழந்து விடும்போதும், அதே சமயம் அவர்தம் பெயர் அரங்குகளிலும், இதழ்களிலும் உச்சரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதிடும்போதும் படைப்புகள் நீர்த்துப் போய்விடுகின்றன. ஒரு சில படைப்பாளிகள் தம் வாழ்நாளின் வறுமையான காலகட்டங்களில் பெற்ற பட்டறிவு கொண்டு எழுதியவை இலக்கிய உண்மையை இயல்பாகக் கொண்டு இருப்பதுமுண்டு. அவரே பின்னாளில் வசதியான மேட்டுக்குடி வாழ்க்கைமுறைக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டபின் அவர் தன் படைப்புகளை வறட்சியடையச் செய்திடக் காண்கிறோம். எனவேதான் ஒரு சில தேர்ந்த படைப்பாளர்கள் பின்னாளில் தம் “படைப்புச் சரக்கு” அல்லது “படைப்பு ஊற்று” அற்றுப் போய்விட்டதாகக் கூறிவிட்டு வெறும் அரங்கப் பங்கேற்பாளர்களாக மாறி விடுவதுண்டு.

படைப்புகள் அவற்றைப் படைத்த படைப்பாளர்களின் பின்னணியில் வகைப்படுத்தப்படுகின்றன. ஜனரஞ்சகப் படைப்பாளர்கள் அல்லது பொழுது போக்கும் படைப்பாளர்கள், தத்துவப் படைப்பாளர்கள், அழகியல் படைப்பாளர்கள், இடதுசாரி மார்க்சிய படைப்பாளர்கள், வட்டார வழக்குப் படைப்பாளர்கள், பெண்ணியப் படைப்பாளர்கள், தலித் படைப்பாளர்கள், பின் நவீனத்துவப் படைப்பாளர்கள் என்று வகைப்படுத்தியும், சில நேரங்களில் படைப்பாளர்களின் விருப்பம் இல்லாமலேயே 'இவர் இந்த வகை' என்று முரண்டுபிடித்து கூறியும் வகைப்படுத்தி 'பிரிக்கின்றனர்'. அதாவது மேற்கூறப்பட்ட பிரிவுகள் கொண்டோராக அவர்கள் அவ்வாறு இயக்கச் சார்பாளர்களாலோ, திறனாய்வாளர்களாலோ, அல்லது ஆய்வுப்பட்ட மாணவர்களாலோதான் வகைப்படுத்தப்படுகின்றனர். ஒரு சில படைப்பாளர்கள் தம் பணி, குடும்பச்சூழல், மனத்தைக் கவர்ந்த அரசியல் சூழல் முதலியவற்றின் அடிப்படையில் தாமாகவே சுய அடையாளம் இட்டுக் கொள்வதுண்டு. ஆனால் அவரது படைப்புகளை (துவக்கம் முதல் அப்போதைய படைப்புகள் வரை) கருத்தில் கொள்ளும்போது அவரை நிலையாக ஒரே வகையினராய் கூறிட முடியாதபடி அந்த ஒரே படைப்பாளனின் வேறுவேறு பருவகாலப் படைப்புகளில் ஜனரஞ்சகம், தத்துவம், அழகியல், காந்தீயம், முற்போக்கியம், மார்க்சீயம், பெண்ணியம், தலித்தியம், வட்டார வழக்கு என்ற இவற்றில் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளோ அமைந்திருத்தலை ஒரு முழுமையான வாசித்தல்வழி அறிந்திட முடிகிறது. என்றாலும் ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டுக்குள் ஒரு படைப்பாளரை அடக்கிக் குறுக்கிடுவது சமகால இலக்கிய அரசியல் களத்தில் நடைமுறையாகி விட்டது.

முற்போக்குத்தன்மையுடன் அல்லது கம்யூனிஸக் கோட்பாட்டுப் படைப்புகள் படைத்த ஒருவரின் பின்னாளைய படைப்புகளில் ஜனரஞ்சகத்தன்மை வெளிப்படுவதையும் மறுப்பதற்கில்லை. எந்த ஒரு படைப்பாளரும் தமது துவக்கக்கால படைப்புகளைச் சற்று நேர்த்தியுடன் படைத்தே வாசக உலகை அடைகின்றார். இவர்களில் ஜனரஞ்சகமாக எழுதும் படைப்பாளர்களில் அரிதாக வேண்டுமானால் பின்னாளில் சமூகக்கடப்பாடுடைய அல்லது கலைத்தன்மை மிளிர்ந்த படைப்புகளில் ஈடுபாடு கொள்வதும் உண்டு. அதே சமயம் வட்டார வழக்கில் படைப்போர் பின்னாளில் நகரவாழ்வை மையமாக்கிப் படைத்து இருப்பதையும் காணமுடிகிறது.

படைப்புக்களில் ஜனரஞ்சகம் தொடங்கி வட்டார வழக்கு வகைப்பாடுகள் வரையிலானவை அப்படைப்புகளின் அக / புறக் கட்டமைப்புகளைப் புலப்படுத்துகின்றன. கதைகள் / நாவல்கள் என்றதும் கரு, நிகழ்ச்சிப் பின்னல்கள், உரையாடல், பின்னணி, நனவோட்டம், நடை என்றிவைப் பற்றிய கருத்தோட்டங்கள்

குறிப்பிடத்தக்கதாய்க் கொள்ளப்பட்டு விமர்சனங்கள் கூறப்பட்டு வருகின்றன. கதைக்கரு என்ற இக்கூறு பெரும்பாலும் படைப்பாளிகள் மனதைப் பாதிக்கும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை (சம்பவத்தை) அடிப்படையாகக் கொள்வதுண்டு. சிறுகதைகளாக்கப்படும்போது கதைக்கரு நேரடி வரையறைக்குள் எளிதாய் வசப்படும். படைப்பாளிகள் தமது சில சிறுகதைகள் மீது கொண்டிருக்கும் அளவற்ற நம்பிக்கையில் அதையே நாவலாக விரித்து விவரிப்பதுண்டு. அவ்வாறு விவரிக்கும்போது நாவலின் கரு புதியதாகவோ அல்லது ஒன்று பலவாகக் கிளைத்தோ (இதனால் சில நேரங்களில் வலுவிழந்தும்) அமைந்து விடுவதுண்டு.

கதைக்குப் பெரும்பாலும் நிகழ்ச்சி அடிப்படையாவதால் தொடர் சித்தரிப்புகள் நிகழ்ச்சிப் பின்னல்கள் ஆக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சிப் பின்னல்கள் காலச்சுழற்சிகளையும் பாத்திரங்களின் செங்குத்து மற்றும் கிடைமட்ட வளர்ச்சிகளையும் ஒழுங்கான விகிதத்தில் கலந்து சித்தரிக்கும் போது நேர்த்தியான படைப்பு சாத்தியமாகிறது. பின்னணி என்றிடும் போது நிகழ்ச்சிப் பின்னல்களில் அமையும் காலச்சுழற்சிகள் அதாவது சிறுபொழுது, பெரும்பொழுது வர்ணனைகள் மட்டுமன்றி மானிட சமுதாய வரலாற்றுக் குறிப்புகள் தேவைக்கேற்ப நிகழ்ந்து மறையும்போது படைப்புக்கு வலு சேர்க்கிறது. இதனுடன் சூரிய, சந்திர, நட்சத்திரச்சுடர் தோற்ற-மறைவுகள் தொடங்கி ஐம்பெரும் பூதங்களின் இயக்க வர்ணனைகள் மட்டுமன்றி படைப்புகளில் பாத்திரங்கள் இயங்கும் குடும்பம், நிறுவனம் உள்ளிட்ட சமுதாயம் முதலியன பற்றிய சித்தரிப்புகளும் படைப்புப் பின்னணிக்கு அழகு சேர்க்கின்றன.

ஒரு படைப்பின் விறுவிறுப்பான போக்கு என்பது பலநேரங்களில் அதன் பாத்திரங்கள் ஊடாட்டம் கொள்ளும் உரையாடல்களின் வழி சாத்தியமாக்கப்படுகிறது. பாத்திரங்கள் இயங்கும் சமகாலச் சமுதாயம் கருத்தில் கொள்ளப்பட்டு இயல்பான முறையில் உரையாடல்கள் அமைத்திடல் முக்கியமானதாகும். பின்னோக்கு நிலைகளை ஏற்காத படைப்புகள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். மனித வாழ்வில் ஒவ்வொருவரும் தத்தம் கடந்த கால வாழ்க்கை நிகழ்வுகளை அவற்றைப் போன்றே நிகழும் சமகால நிகழ்வுகளின் போதோ அல்லது முரண்பட்டு நிகழும்போதோ நினைத்துப் பார்த்தல் இயல்பானதாகும். மனித வாழ்க்கையின் இயல்புத் தன்மை படைப்புகளில் ஒருசில பக்கங்களிலேனும் பின்னோக்கு நிலை ஓட்டங்களாக வர்ணிக்கப்படுதல் தவிர்க்க இயலாததாகும். ஆனால் நனவோட்ட நடையில் எழுதப்படும் படைப்புகள் தனித்துவம் கொண்டவை. ஒருவகையில் இவ்வுத்தியைப் பின்னோக்கு நிலை ஓட்டத்திற்கு எதிரானவை என்றே கூற வேண்டும். பாத்திரங்கள் தம் மனதில் முரண்பட்ட கால / இட / உறவுக் கலப்பு எண்ணங்களைக் கொண்டு (பாத்திரங்கள் ஒரு புள்ளியில் நிற்க) அம்முரண்கலப்பு எண்ணங்கள் கதையை வளர்த்துச் சென்று கொண்டிருக்கும்.

இதுபோன்ற நனவோட்டப் படைப்புகளில் பாத்திரங்களின் பிறப்பு - வளர்ப்பு - இறப்புகள் பின்தள்ளப்பட்டு அப்பாத்திரங்களின் முரண்கலப்பு எண்ணங்களின் பிறப்பு - வளர்ப்பு - இறப்புகளே பதிவுகளாக்கப்படுகின்றன. இத்தகைய படைப்புக்களில் படைப்பாளர் தொழில்படுத்தும் "படைப்புமொழி" கவனிக்கத்தக்கதாகும். இப்படைப்பு மொழியானது தமிழ் மொழி - இலக்கண இலக்கியத்தினைக் கற்றுத் தேருவதனால் மட்டும் சாத்தியமாகாத ஒன்றாகும். கவிதைக்கு உரியதாய் கூறலாகும் பன்முகப்பொருள் தருஞ்சொற்களைக் கதைப் படைப்பாளர்கள் தத்தம் படைப்புமொழி மூலம் உரைநடை வாக்கியங்களிலேற்றிச் சித்தரிக்கின்றனர். இத்தகைய சூழலில் சிலநேரங்களில் உரைநடைக்குரிய தன்மையான எளிமையாய்ப் பொருளுணர்த்தல் மறைந்து இருண்மை நடை தூக்கலாய் வெளிப்படலாம்.

படைப்பாளர் கையாளும் படைப்புமொழிதான் அவரவர் படைப்பு நடையாக வெளிப்படுகிறது. படைப்புமொழி என்பது அகவயப்பட்டு நிற்பது. அதன்புறவய வெளிப்பாடே நடையாக அமைகிறது. புறவய வெளிப்பாடு என்பதனால் அது எந்த நிலையிலும் படைப்பு மொழிக்குக் குறைவானதல்ல. ஒரு வகையில் "நடை" என்ற இக்கூறுதான் படைப்பாளர்களைத் தனித்துவப்படுத்திக் காட்டுகிறது. இந்தப் படைப்பு நடையானது ஒவ்வொரு படைப்பாளருக்கும் உரியதாய் தனித்துவம் கொண்டு அமைந்திட ஏதுவாய் படைப்புமொழி படைப்பாளரின் தேடல்களை உட்பொதிந்து கொண்டிருக்கும்.

படைப்பாளரின் தேடல்கள் என்பன கதைகளில் அவரது சமூகம், மானிட வாழ்வியல் தத்துவம், ஓவியம், இசை, நடனம், ஆன்மீகம், பகுத்தறிவு என்று நீளும் இவைகளில் ஒன்றோ பலவோ "தொனி"ப் பொருள்களாக்கப்படும் பாங்கில் அமைகின்றன. நடை உணர்த்தும் "தொனி"யை படைப்புத்தொனி, படைப்பாளர் தொனி என்ற இரு பிரிவில் வைத்தும் நோக்க முடியும்.

படைப்புத்தொனி என்பது கதைக்கான கருவை நியாயப்படுத்தி நிகழ்ச்சிகள் மற்றும் பாத்திரங்களின் வர்ணனைகள் மூலம் நயமுடன் தர்க்கரீதியாக வெளிப்படுவது. படைப்பாளர்தொனி என்பது நிகழ்ச்சிப் பின்னல்களில் பாத்திரங்களைப் பரவி வளரவிட்டு படைப்பாளர் தனது சுயநோக்குச் சிந்தனைகளை ஊடுபாவு இழைகளாக மென்மையான உணர்த்தல்களாய் வெளிப்படுத்துவது. இவ்விரண்டு தன்மைகளையும் மீறி வெளிப்படையாகத் தோன்றும் எந்த ஒரு வலிந்து நியாயப்படுத்தும் சார்பு நோக்கச் சிந்தனையும் படைப்பில் பிரச்சாரத் தன்மையைப்புகுத்திவிடும். குறிப்பிட்ட 'இனம்' 'கொள்கை' சார்புடையதாய் பிரச்சாரத் தொனி தூக்கலாய் அல்லது வெளிப்படையாய் படைப்பில் அமையும்போது அதே படைப்பில் பல நல்ல கூறுகள் இருந்தாலும் அவற்றை அமுத்தி மறைத்துவிடும் தன்மையை அப்படைப்பு பெற்றுவிடுகிறது. படைப்புகள் பதிப்பு / வெளியீடு அடிப்படையிலான

சார்புத்தன்மையை பெறும்போது முத்திரைகள் குத்தப்பட்டதாய் பிரசுரமாகி பலரால் வாசிக்கப்படாமலேயே நிராகரித்தல்களுக்கு உண்டாக நேரிடுகிறது. அவ்வாறின்றி, படைப்புகள் பொதுவாகச் சார்பற்ற நிலையிலிருந்து படைக்கப்பட்ட பின் பல்தரப்பு வாசகச் சார்புத் தன்மைகளைப் பெற வேண்டும்.

தமிழ் மொழி இலக்கியத்தின் சிறுகதை / நாவல் / நாடகம் திறனாய்வு இலக்கியவகைகளுக்கான பங்களிப்பைச் செய்தோர் பற்றிய குறிப்புகளை அறிந்திடல் இந்நூலுக்கு உறுதுணைபுரியும். (ஒரு வசதிக்காக அக்குறிப்புகளுக்கானோர் அகரவரிசையில் நோக்கப் படுகிறார்கள்). இந்நூலுக்கான ஒரு நுழைவாயிலாக அமையும் இக்கட்டுரையில், படைப்பாளர்கள் பலர் தமது தன் விவரக்குறிப்புகளைப் பற்றிக் கூறியிராத நிலையில், அவர்களைப் பற்றிய இச்சிறு குறிப்புகளைப் பதிவுசெய்திடல் தவிர்க்க முடியாததாகிறது.

அசோகமித்திரன் (22.09.1931) தற்போது சென்னையை வாழ்விடமாகக் கொண்டு வாழும் இவர் ஆந்திரப்பிரதேசம் மாநிலத்திலுள்ள செகந்திராபாத் நகரில் பிறந்து வளர்ந்தவர். பட்டப்படிப்பு முடித்துள்ள இவர் முழுநேர படைப்பாளி ஆவதற்கு முன் எந்தப் பத்திரிக்கையையும் சாராத தன்னிச்சை நோக்கு நிலை எழுத்தாளராகவும், சென்னையிலுள்ள ஜெமினி திரைப்படத் தொழில் நிறுவனத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் பணியாற்றியவர். தனக்கென ஒரு அங்கத வி'வாதப் போக்கு நடையைக் கொண்டவர். இவரது கதைப் பாத்திரங்கள் பெரும்பாலும் அகவயயாத்திரை செய்யும் போக்கில் அமைந்திருக்கும். ஏறத்தாழ முப்பது நூல்களுக்கு மேல் எழுதியுள்ள இவரது படைப்புகளில் **கரைந்த நிழல்கள், தண்ணீர், ஒற்றன், மானஸரோவர்** உள்ளிட்ட நாவல்களும் **விடுதலை, இருவர்** போன்ற குறு நாவல்களும், **வளைவிலே ஒருமுறை, காலமும் ஐந்து குழந்தைகளும்** என்பன போன்ற சிறுகதைத் தொகுதிகளும், **படைப்புக்கலை, வரவேற்புத்தொழில்கள்** போன்ற கட்டுரை நூல்களும் குறிப்பிடத்தக்கன. இவரது பல கதைகள் பிற இந்திய / ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இலக்கிய சிந்தனை விருது இருமுறையும் (1977 & 1984) தமிழ்நாடு அரசு விருது மூன்று முறையும், வில்லி நினைவு விருது (1992) அக்சரா விருது (1996) உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது **அப்பாவின் சிநேகிதர்** என்ற சிறுகதைத் தொகுதிக்கு சாகித்ய அகாடமி விருது (1996) அளிக்கப்பட்டுள்ளது.

இந்திரா பார்த்தசாரதி (10.07.1930) தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில், சமஸ்கிருத பண்டிதருக்கு மகனாகப் பிறந்த இவரது இயற்பெயர் ரங்கநாதன் பார்த்தசாரதி; தமிழை விரும்பிக் கற்று ஆய்வுப்பட்டங்கள் வரை வழங்கப்பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பின்னர் திருச்சி நேஷனல் கல்லூரியில் பணியாற்றி முன்னாள்

குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட் ராமன் அவர்கள் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு ஆசிரியப்பணி நிமித்தம் சென்றவர். டில்லி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராய் இருந்து கொண்டே போலந்து, கனடா பல்கலைக்கழகம் சென்று வந்தவர்; தன் பணி ஓய்வுக்காலத்திற்குமுன் பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகத்தின் நாடகத்துறைக்கு வந்து அத்துறை மேம்பட்டுநிற்கக் காரணமானவர்; தற்போது சென்னையில் வசித்து வருகிறார். இவர் நாற்பது வருடங்களுக்கும் மேலாக தன்னை ஒரு சிறந்த கல்வியாளராய் வெளிப்படுத்திக்கொண்டே இணையாக சிறந்த படைப்பிலக்கியவாதியாகவும் பரிணாமம் பெற்றவர். **மனிததெய்வங்கள்** என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்ட இவர் தொடர்ந்து **உச்சிவெயில், ஊனம்** போன்ற குறு நாவல்களையும் **காலவெள்ளம், தந்திரபூமி, மலைக்குகை, மாயமான் வேட்டை, குருதிப்புனல், வெந்து தணிந்த காடுகள்** போன்ற குறிப்பிடத்தக்க நாவல்களையும் எழுதி வெளியிட்டு தன் படைப்புவழி தமிழ்ச் சமுதாய மாற்றத்தையும் அரசியல் சீர்கேடுகளையும் தனக்கேயுரிய எள்ளல் நடையில் பதிவுசெய்தவர். பின்னாளில் **பசி, ஔரங்கசீப், நந்தன் கதை, கொங்கைத் தீ, இறுதி ஆட்டம்** என்பன போன்ற நாடகங்களைப் படைத்து தமிழ் நாடக இலக்கிய வரலாற்றின் உள்ளடக்க / உருவங்களில் ஒரு திருப்பத்தைப் பதிவு செய்துள்ளார். இவர் **இராமாநுஜர் வாழ்க்கைக் வரலாறு** குறிப்பிடத்தக்கதொரு நூலாகும். அவ்வப்போது இதழ்களில் தன் சிந்தனைகளைப் பதிவு செய்து கொண்டு வரும் இவருக்கு தமிழக அரசின் விருது தொடங்கி பாஷா பரிஷத், சரஸ்வதி சம்மன் போன்ற பிற மாநில விருதுகளும், இவரது **குருதிப்புனல்** நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதும் (1977) வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சா. கந்தசாமி (23.07.1940) சென்னையை வாழ்விடமாகக் கொண்டு இருக்கும் இவர் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் பிறந்து வளர்ந்துள்ளார். இவர் மைய அரசுக்குரிய உணவு நிறுவனத்தில் வேலை பார்த்தவர். இவர் பெரும்பான்மையும் தனிநிலை-படைப்பிலக்கியவாதியாகவும் பிறபத்திரிகையாளராகவும், குறும்படம், தொலைக்காட்சித்தொடர் மற்றும் செய்திப்பட தயாரிப்பாளராகவும் இயங்கிக் கொண்டிருப்பவர். தன் படைப்புகளில் கதைகளுக்கு முன்னுரிமை தருவதைவிட பாத்திரங்களின் உள்மன அலசல்களுக்கு இடமளிப்பவர். இவர் தான் சொல்லாமல் விட்ட கதையை வாசகர் தாமே தொடங்கிச் சிந்திக்கும்படி முடிப்பவர். இவரது முதல் நாவலான **சாயாவனம்** தமிழ்ப்படைப்பாளிகள் மற்றும் வாசகர்களிடம் இவரை மிகத்தெளிவாகக் கொண்டு சேர்த்தது. தொடர்ந்து இவரது படைப்புகளாக வெளியான **அவன்ஆனது, சூரியவம்சம், தொலைந்து போனவர்கள், எட்டாவது கடல்** முதலிய நாவல்கள், **தக்கையின் மீது நான்கு கண்கள், கிழக்குப்பார்த்த வீடு, சாந்தகுமாரி, சொல்லப்படாத நிஜங்கள், இன்னொரு மனிதன்** முதலிய சிறுகதைத் தொகுதிகள் குறிப்பிடத்தக்கனவாகும். தன் படைப்புகளுக்காகவும், படைப்புகளைத்

தொலைக்காட்சி தொடராக்கி வெளியிட்டமைக்காகவும் லலிதகலா அகாடமி, மயிலாப்பூர் கலைக்குழு சாந்தோம் கலைத்தொடர்பு மையம், இலக்கிய சிந்தனை முதலிய தனியார் அமைப்புகளின் விருதுகளோடு தமிழக அரசு விருதினையும் பெற்றுள்ளார். இவரது விசாரணைக்கமிஷன் என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி விருது (1998) வழங்கப்பட்டுள்ளது.

சு. சமுத்திரம் (15.12.1941) திருநெல்வேலி மாவட்டம் திப்பணம்பட்டி என்ற சிற்றூரில் பிறந்து சென்னையில் பயின்று புதுதில்லி, பெங்களூர், சென்னை போன்ற பெருநகரங்களில் மத்திய அரசுப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் தான் கண்ட, கேட்ட, அனுபவித்த பல்வேறுவகைப்பட்ட வாழ்க்கை ஊடாட்டச் செயற்பாடுகளைத் தமக்கேயுரிய - வெளிப்படையான விறுவிறுப்பான நடையில் எழுதிப் புகழடைந்தவர். இவர் தன்னுடைய முதல் படைப்பான 'அங்கே கல்யாணம் - இங்கே கலாட்டா' என்ற சமூக அங்கதக் கதையிலே தன்னை ஒரு சிறந்த எழுத்தாளராகப் பதிவு செய்து கொண்டவர். அரசு அலுவலகங்களிலும் தனியார் அலுவலகங்களிலும் நிகழும் பொருளாதார, உழைப்பு, பாலியல் சுரண்டல்களைத் தன் படைப்புகள் வழி வெட்டவெளிச்சமாக்கியதில் முன்னோடியாகத் திகழ்பவர். தான் பிறந்த கிராமப்பகுதிகளை அதன் காலங்காலமான மாற்றங்கள், வளர்ச்சிகள், தேக்க நிலைகள் உள்ளிட்டவற்றையும், அவற்றை உள்வாங்கிய சமுதாய மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும் நடப்பியல் பாங்குடன் படைத்துக் காட்டியவர். **ஒரு கோட்டுக்கு வெளியே, ஊருக்குள் ஒரு புரட்சி, சோற்றுப் பட்டாளம்** என்ற தொடக்கக் காலப் படைப்புகள் முதல் அண்மை வெளியீடுகளான **வாடாமல்லி, புதைமண்** வரை இருபது புதினங்களையும் முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியவர். இவை **குற்றம்பார்க்கில், காகித உறவு, மானுடத்தின் நாணயங்கள், கோரைப் புற்கள்** என்ற இருபதுக்கும் மேற்பட்ட தொகுப்புகளாக்கப் பட்டுள்ளன. சிறந்த நூலக்கான தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளவர். இவரது **வேரில் பழுத்த பலா** என்ற நாவலுக்கு சாகித்திய அகாடமி (1990) விருது வழங்கப்பட்டுள்ளது.

தி.க. சிவசங்கரன் (30.03.1925) திருநெல்வேலியில் பிறந்த இவர் தான் பெற்ற வங்கிப் பணியிலிருந்து விடுபட்டு கம்யூனிஸ சித்தாந்த ஈடுபாட்டின் வழி சோவியத் நாடு இதழின் தமிழ்ப்பதிப்பு ஆசிரியராகவும் சோவியத் தகவல் மையத்தில் ஊழியராகவும் பணியாற்றியவர். **தாமரை** இதழில் ஆசிரியராகப் பொறுப்பேற்று நவீன தமிழ் இலக்கியவகைகள் பரவலாக வெளியாகிடக் காரணமானவர். இவர் அப்போது ஒருசில கதைகள் எழுதி இருந்தாலும் தான் ஏற்றிருந்த பத்திரிகை ஆசிரியர் பணி நிமித்தமாய் இவரது சமகாலத்து தமிழ்ப் படைப்புகளை மதிப்பீடும், திறனாய்வும் செய்வோராய் தன்னை மாற்றியமைத்துக் கொண்டார். இந்த வகையில் வெளியான **தி.க.சி.யின் திறனாய்வுகள்,**

விமர்சனத்தமிழ் முதலியவை குறிப்பிடத் தக்கனவாகும். இவை மட்டுமன்றி **வசந்த காலத்திலே, போர்வீரன் காதல்** முதலிய ரஷ்ய, சீன மொழிபெயர்ப்பு நாவல்களை எழுதியுள்ளார். இளம் எழுத்தாளர்களை மனமுவந்து ஊக்கப்படுத்தும் குணமுடைய இவரது திறனாய்வு இலக்கியப் பணிக்கான அங்கீகாரமாய் சாகித்ய அகாடமி (2000) இவரது **விமர்சனங்கள்-மதிப்பீடுகள்-பேட்டிகள்** என்ற நூலுக்கு விருது அளித்துள்ளது.

கு. சின்னப்ப பாரதி (02.05.1935) நாமக்கல் மாவட்டம் பொன்னேரிப்பட்டியில் பிறந்து வளர்ந்தவர்; பட்டப்படிப்பை முடித்து வேளாண்தொழிலை விருப்புடன் ஏற்றுக் கொண்டவர். நல்ல பொருளாதார வசதியுடைய குடும்பத்தினராய் இருந்தாலும் இளமையிலேயே பொதுவுடைமைக் கொள்கைமீது ஈடுபாடு கொண்டு வளர்ந்தவர். **தாகம்** என்ற இவரது புதினம் வர்க்கப் போராட்டங்களைப் புனைந்துரைக்கும் புதினங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். **பவளாயி** மற்றொரு குறிப்பிடத்தக்க நாவல். **தமிழகக் கிராமியக் கதைகள்** என்ற தொகுதி மூலம் கிராமங்களை மையமாகக் கொண்ட நாட்டுப்புறச் சமுதாய ஆய்வில் ஈடுபாட்டை வெளிப்படுத்தியவர். **மனிதன் பேசுவதில்லை** என்ற தொகுதியில் இவரது சிறந்த கதைகள் இடம் பெற்றுள்ளன. கிராம மக்களிடையே காணலாகும் அவல நிலைக்குக் காரணம், அவர்களிடம் ஊட்டப்பட்ட வர்க்க சாதிப் பாகுபாட்டுணர்வு தான், என்பதைத் தன் படைப்புகள் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

சுந்தரராமசாமி (30.05.1931) கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பிறந்தவர். "பசுவய்யா" என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி வருபவர். கதை இலக்கியத்திற்குக் கூடுதல் கவனம் செலுத்தியவர். தனது வாழ்க்கையில் ஊடாட்டம் கொள்ளும் அனைத்து நிகழ்வுகளையும், சிந்தனைகளையும் பட்டறிவு மிக்க படைப்புகளாக மாற்றிக் கொண்டவர். கதைகளைப் படைக்கும்போது சம்பவங்களை நகைச்சுவையுணர்வுகலந்த சித்தரிப்புகளாக்கியவர். இளமைப் பருவத்தில் பொதுவுடைமைக் கொள்கையாலும் தமிழகத்திலுள்ள முற்போக்குக் கொள்கைச் சார்புடைய திறனாய்வாளர்களாலும் தாக்கம் பெற்று அத்தகைய தன்மையுடன் கதைகள் படைத்தவர். இவர் பின்னாளில் இலக்கியத்தை எந்த ஒரு இயக்கத்திற்கும் அப்பாற்பட்டதாயும் அழகியல் தன்மையுடையதாயும் அமைத்திடல் வேண்டும் என்பதாய் படைத்து வருகிறார். இவரது படைப்புகளில் **ஒரு புளிய மரத்தின் கதை** முதல் நாவல் என்ற போதிலும் இவரை நன்கு வெளிப்படுத்தியது. அடுத்ததான **ஜே.ஜே. சில குறிப்புகள்** என்ற நாவல் பற்றி அதில் "கதை இல்லை" என்றும், "புதுமை வடிவ அங்கத நடை சித்தரிப்பு" என்றும் இருவேறு விமர்சனங்கள் வெளியாயின. சமீபத்தில் இவர் எழுதிய **குழந்தைகள் பெண்கள் ஆண்கள்** என்ற நாவலும், **விரிவும் ஆழமும்தேடி** என்ற விமர்சன நூலும் குறிப்பிடத்தக்கன. இவர்

படைத்த சிறுகதைகள் அனைத்தும் தொகுதியாக்கப்பட்டு பிரசுரமாகியுள்ளது. பல விருதுகள் அளிக்கப்பெற்றவர். தகழியின் செம்மீன், தோட்டியின் மகன் நாவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவர் காலச்சுவடு என்ற இலக்கிய இதழை நடத்திவருகிறார்.

சி.சு.செல்லப்பா (29.09.1912–18.12.1998) திண்டுக்கல் மாவட்டம் வத்தலக் குண்டில் ஓர் அரசாங்க அதிகாரிக்கு மகனாகப் பிறந்தவர். பாளையங் கோட்டை, தூத்துக்குடி, மதுரை பகுதிகளில் பள்ளி / கல்லூரிப் படிப்பைப் பெற்றவர். இவர் தந்தை ஒரு காந்தீயவாதியாய் வாழ்ந்து இவரையும் அவ்வாறு வாழ்ந்திடத் தாக்கம் ஏற்படுத்தியமை; இவரது இளமைப்பருவக் காலத்தில் நாடு முழுவதும் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டம் தீவிரமடைந்திருந்த தாக்கம்; பின்னாளில் இவர் சென்னை வந்து புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, றாலி (எம்.கே. இராமலிங்கம்), பி.எஸ். இராமையா போன்றோருடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு முதலிய காரணங்களால் இவரது வாழ்க்கை முழுநேரப் படைப்பு வாழ்க்கையாக மாறியது. மணிக்கொடி இதழில் இவரது முதல் படைப்பு 'சரஸாவின் பொம்மை' வெளியானது. தொடர்ந்து இவரது படைப்புக்களை இவரது நண்பர்கள் உற்சாகமூட்டி இலக்கிய இதழ்களில் பிரசுரிக்கச் செய்தனர். இவரது ஒட்டுமொத்த படைப்புத்திறனைப் பிரதிபலிக்கும்படி மதுரை ஜல்லிக்கட்டை இயல்பாகச் சித்தரித்த வாடிவாசல் சுதந்திரப் போராட்டச் சூழலை விவரித்த சுதந்திரதாகம் என்ற நாவல்கள் வெளியாயின. சிறுகதை பிறக்கிறது, என் சிறுகதைப்பாணி என்பன இவரது திறனாய்வு நடையை இலக்கிய உலகுக்குச் சான்றாக்குவன. "மணிக்கொடி" என்றதும் ந. பிச்சமூர்த்தி பெயர் உச்சரிக்கப்படுவதுபோல் "எழுத்து" என்றதும் இவரது பெயர் மறக்காமல் தோன்றும் வண்ணம் அவ்விதழைத் துவங்கி தரமான பிரசுரங்களை வெளியிட்டார்.

டி. செல்வராஜ் (1935) தமிழக - கேரள எல்லையில் உள்ள கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டக் குடியிருப்பிற்கு நெல்லை மாவட்டக் கிராமங்களில் இருந்து குடிபெயர்ந்த ஒரு கங்காணிக் குடும்பத்தில் திருநெல்வேலி அருகே மாவடி என்ற கிராமத்தில் பிறந்தவர். நெல்லையில் பட்டப்படிப்பையும், சென்னையில் சட்டப்படிப்பையும் முடித்தவர். தற்போது திண்டுக்கல் மாவட்டத்தில் தங்கி வழக்கறிஞராகவும் படைப்பாளராகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவர் கதைகள் எழுதத் துவங்கும் போதே நா. வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன், தி.க.சிவசங்கரன் போன்றோர் தொடர்பையும் கொண்டிருந்து முற்போக்கு எழுத்தாளராகப் பதிவு செய்து கொண்டவர். இவர் கதைகள் இருநூறுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் ஜனசக்தி, சரஸ்வதி, தாமரை, பிரசண்ட விகடன், நீதி போன்ற இலக்கிய / இயக்க இதழ்களில் வெளிவந்துள்ளன. இவர் தனது சொந்த மக்கள் வாழ்க்கையை மையமாக்கிப் படைத்த தேநீர் நாவல், விவசாயமக்கள்

பிரச்சினைகளை மையமாக்கி முதலில் படைத்த **மலரும் சருகும்** நாவல், மற்றும் **மூலதனம்** நாவல் முதலிய இப்படைப்புகள் இவரைப் பலருக்கும் அடையாளம் காட்டியவையாகும். சமுதாய இயங்கியல் விதிக்குட்பட்டு தன் கதைகளையும் பாத்திரங்களையும் படைக்கும் இவருக்கு கலைஇலக்கியப் பெருமன்றம், இலக்கியசிந்தனை அமைப்பு போன்ற அமைப்புகளின் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. பல ஓரங்க நாடகங்கள் படைத்துள்ளார். இவரது முழுநீள நாடகமான **யுகசங்கம்** சங்கீத நாடக அகாடமி விருது பெற்ற ஒன்றாகும்.

நீலபத்மநாபன் (26.04.1938) கேரளமாநிலம் திருவனந்தபுரத்தை பிறப்பு மற்றும் வாழ்விடமாகக் கொண்டுள்ள இவர் கேரள மாநில மின்வாரியத்தில் பொறியாளராக வாழ்க்கையை மேற்கொண்டவர். சாகித்திய அகாடமி போன்ற இலக்கிய அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு இலக்கிய இயக்கப் பொறுப்புக்களைத் திறமையாகக் கையாண்டுள்ளவர். இவருடைய படைப்புகள் சமூக அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் குடும்பத்தினிடையே எவ்வாறெல்லாம் வெளிப்படுகின்றன என்பதைப் பற்றியும், தனி மனிதர்கள் தம் அக மனதில் தன்னுணர்வு விவாதங்கள் செய்து கொண்டிருப்பதைப் பற்றியும் சித்தரிப்பனவாய் அமைந்துள்ளன. **தலைமுறைகள், பள்ளிகொண்டபுரம், உறவுகள், தேரோடும் வீதி, பாவம் செய்யாதவர்கள், கூண்டினுள் பட்சிகள்** முதலிய நாவல்களும், **மூன்றாவது நாள், வெள்ளம்** முதலிய சிறுகதைத் தொகுதிகளும், தன்பெயரில் ஒரு கவிதைத் தொகுதியுமாய் படைத்துள்ள இவர் கட்டுரை மற்றும் திறனாய்வு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ் மலையாளம் மொழி இலக்கியங்கள் இடையே மொழிபெயர்ப்புகள் நிகழ பெரிதும் காரணமாகிறார். இவர் தம் படைப்புகளுக்காக தமிழக அரசு விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரபஞ்சன் (27.04.1945) பாண்டிச்சேரியில் பிறந்து, வளர்ந்து புலவர்பட்டம், ஆசிரியப் பணி பெற்றிருந்த இவர் பின்னாளில் சென்னையில் பல முன்னணி இதழ்களில் துணை ஆசிரியராய் பணியாற்றிவர். கடந்த சில ஆண்டுகளாய் தன்னிச்சை நோக்கு நிலைப் பத்திரிகையாளராயும் கதைகள் எழுதியும் வருகிறார். இவர் படைப்புகள் பெரும்பாலும் அவரது இணைக்கால வாழ்வியல் புலமாய் அமைந்திருந்த பாண்டிச்சேரி மண்ணின் சமுதாய வரலாறாக சித்தரிக்கப்பட்டுள்ளன. பிரெஞ்சுக் காரர்கள் வசம் பாண்டிச்சேரி இருந்தபோது வாழ்ந்து எழுதப்பட்ட **ஆனந்தரங்கம் பிள்ளை டைரி** என்ற நூல்தரவுடனும் வேறுபல பண்பாட்டுக் குறிப்புகளுடனும் இவர் நாவல்கள் எழுதியுள்ளார். **மானுடம் வெல்லும், வானம் வசப்படும்** என்ற நாவல்கள் மேற்கூறப்பட்ட பின்னணி கொண்டவை. **சந்தியா, மகாநதி, இன்பக்கேணி, கனவுமெய்ப் படவேண்டும்** முதலிய நாவல்கள், **ஒரு ஊரில் இரண்டு மனிதர்கள், நேற்று மனிதர்கள், பூக்களை**

மிதிப்பவர்கள் முதலிய சிறுகதைத் தொகுதிகள் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும். இவரது படைப்புகளில் சமூக பண்பாட்டு ஆய்வு அமைந்திடக் கண்ட பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் இவரை ஆய்வாளராய் அமர்த்திக் கொண்டது. இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசு விருது, பாரதிய பாஷா பரிஷத் விருது, சிறந்த எழுத்தாளர் விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவரது வானம் வசப்படும் நாவலுக்காக சாகித்ய அகாடமி (1995) விருது வழங்கப்பட்டுள்ளது.

பொன்னீலன் ஸ்ரீ கண்டேஸ்வர பக்தவச்சலன் (15.12.1940) கன்னியாகுமரி மாவட்டம் மணிக்கட்டிப்பொட்டல் என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆசிரிய / அலுவலகப் பணி நிமித்தம் தமிழகத்தின் பெரும்பாலான நகரங்கள் மற்றும் ஊர்களுக்குச் சென்று வாழ்ந்த அனுபவம் பெற்ற இவர் தற்போது தாய்க்கிராமத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழ் முற்போக்கு எழுத்தாளர் அமைப்பு, கலை இலக்கியப் பெருமன்றம், தாமரைபோன்ற இதழ்கள் முதலியவற்றுடன் ஊடாட்டம் கொண்டிருப்பவர். இவரது காலத்தைய தமிழகக் கிராமங்களின் அகப்புற மெய்ம்மைகளை தனது வளமான வர்ணனை நடையில் அதேசமயம் நடப்பியல் பாங்கு குறையாத தன்மையில் படைப்புகளாக்கியவர். கரிசல், புதிய மொட்டுக்கள், ஊற்றில் மலர்ந்தது முதலிய நாவல்கள், ஜீவா என்றொரு மானிடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் பொன்னீலன் கவிதைகள் என்ற கவிதைத் தொகுதி என்பன குறிப்பிடத் தக்கனவாகும். இவரது படைப்புத் திறனுக்கான அங்கீகாரமாய் தமிழக அரசு விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலை விருது உள்ளிட்ட வற்றோடு இவரது புதிய தரிசனங்கள் என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி (1994) விருது வழங்கப்பட்டுள்ளது.

தோப்பில் முகமதுமீரான் (26.09.1944) திருநெல்வேலியை வாழ்விடமாகக் கொண்டுள்ள இவர் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டினம் என்ற கிராமத்தில் பிறந்தவர். முஸ்லீம் சமுதாயத்தில் நிலவும் மூடப்பழக்கங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் அங்கதச் சுவையுடன் அதேசமயம் யதார்த்தத்தை வெளிப்படுத்தும், வட்டார வழக்குச் சொல்லாடல்களுடன் சித்தரிப்பதில் தனி முத்திரைப் பதித்தவராகிறார். ஒரு கடலோரக் கிராமத்தின் கதை, கூனன் தோப்பு, சாய்வு நாற்காலி, துறைமுகம் ஆகிய நாவல்களும் அன்புக்கு முதுமை இல்லை, தங்கராஜ், அனந்த சயனம் காலனி ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவர்தம் படைப்புகளுக்காக தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்ற விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழ்நாடு அரசு விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றள்ள இவருக்கு சாய்வு நாற்காலி என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி (1997) விருது வழங்கப்பட்டுள்ளது.

ந. முத்துசாமி (25.05.1936) **கூத்துப்பட்டறை** என்ற நவீன நிகழ்கலை நாடக அமைப்புடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு சென்னையில் வாழும் இவர் தஞ்சாவூர் மாவட்டம் புஞ்சை என்ற கிராமத்தில் பிறந்தவர். இவர்தன் படைப்புகளில் இயல்பாகக் கையாண்ட உரையாடல்களும், கதைப் போக்கினை நேரடியான காட்சி வெளிப்பாடுகளாக்கியும் சித்தரித்த வகையில் தனிமுத்திரை பதித்தவராகிறார். "கூத்துப்பட்டறை" கலைப்புல பின்னணியில் பல வெளிநாடுகளில் நிகழ்த்தி உள்ள இவரது படைப்புகளில் **நீர்மை** என்ற சிறுகதைத் தொகுதியும், **நாற்காலிக்காரர்** என்ற நாடகமும், **அன்று பூட்டிய வண்டி** என்ற நூலின் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவருக்கும் ஏனையோரைப் போலவே பல்வேறு அமைப்புகளின் விருதுகள் வழங்கப்பட்டு உள்ளன.

லா.ச.ராமாமிர்தம் (30.10.1916) லா.ச.ரா. என்றழைக்கப்படும் இவர் திருச்சி கண்டோன்ட்மெண்டில் பிறந்து வளர்ந்தவர்; தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வங்கிப் பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது சென்னையில் வசித்து வருகிறார். கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக சிறுகதைகளும் நாவல்களும் எழுதியவர். தான் படைப்பவை தனக்காகத்தான் என்று கூறிக்கொண்டாலும் இவர் படைப்புக்கள் தமிழ்க் கதைஇலக்கிய வரலாற்றில் நடை ரீதியாக ஒரு பதிவை ஏற்படுத்தியுள்ளதை மறுப்பதற்கில்லை. சிறுகதை நாவல்களில் இவர் கையாண்டுள்ள நனவோட்ட நடை பெரும்பாலான விமர்சர்களாலும் கருத்தில் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்திய / தமிழகப் பண்பாட்டின் ஆன்மீகக் கருத்தோட்டங்களை இவர் தன் நடைச்செழுமைக்குப் பயன்படுத்தியுள்ள முறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். **ஜனனி, அலைகள், கங்கா, இதழ்கள், உத்தராயனம், த்வனி, அவள்** என்ற சிறுகதைத் தொகுதிகள் (தற்போது இவர் கதைகள் அனைத்தும் தொகுதிகளாக வெளியாகியுள்ளன), **புத்ர, அபிதா, கழுகு, கல்சிரிக்கிறது, கேரளத்தில் எங்கோ** போன்ற நாவல்கள், **பாற்கடல், சிந்தாநதி** போன்ற தன் வாழ்க்கைப் போக்கின் தேடலும் தரிசலுமாய் நீளும் கட்டுரை நூல்கள் இவரது எழுத்துக்களாய் வருவனவற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் தான் கதைகள் எழுதத் துவங்கிய காலம் முதலே பலரது பாராட்டைப் பெற்றவராகிறார். தமிழக அரசின் சிறப்பு விருது, உலகக் கிறிஸ்தவர் சங்க விருது, லில்லி தெய்வசிகாமணி விருது, அக்னி அமைப்பு விருது என்று பல விருதுகள் பெற்றுள்ள இவருக்கு அவரது **சிந்தாநதி** என்ற தன்வரலாற்றுக் கட்டுரை நூலுக்காக சாகித்ய அகாடமி (1989) விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

கி. ராஜநாராயணன் (16.09.1923) தூத்துக்குடி மாவட்டம் இடைச்செவல் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். முறையாக பட்டப்படிப்பு எதையும் பெற்றிராத இவர் தாமாக முனைந்து கற்கவும், எழுதவும் அறிந்தவர். அத்துடன் நின்றிடாது தான் காணும் தன் சமுதாயத்தின் வாழ்க்கைப் போக்கினை அப்படியே எழுத்தோவியமாக்கிடும் ஆற்றல்

பெற்றவர். இவர் தன் பாத்திரங்களின் உரையாடல்கள் மட்டுமின்றி கதையை வளர்த்துச் செல்லும் ஆசிரியரின் நோக்குநடையும் அம்மண்வாசனை நடையிலேயே அமைந்திடச் செய்து அத்தகைய படைப்பு நடையில் முன்னோடியானவர். **கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள்** என்ற நாவல்கள். **கதவு, கிடை** என்ற சிறுகதைத் தொகுதிகள் என்ற படைப்புகளோடு நிற்காது **பிஞ்சுகள்** என்ற தலைப்பில் குழந்தைகளுக்கான கதைகள், **மாந்தருள் ஒரு அன்னப்பறவை** என்ற சாமானியர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை, **வட்டாரவழக்குச் சொல்லகராதி,** மற்றும் **பெண்மனம், கரிசல்காட்டு கடுதாசிகள்** என்ற நாட்டுப்புறக் கட்டுரை நூல்கள் முதலியன இவர் எழுதியவற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் தனது படைப்புகளுக்கான அங்கீகாரமாய் பல விருதுகள் பெற்றுள்ளார். இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசு விருது உள்ளிட்டவற்றோடு **கோபல்லபுரத்துமக்கள்** நாவலுக்காக சாகித்ய அகாடமி (1991) விருதும் பெற்றுள்ளார். இவரது படைப்புகளில் வெளிப்பட்ட நாட்டுப்புறவியலுக்காக பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் இவரை கௌரவப் பேராசிரியராக அத்துறையில் அமர்த்திக் கொண்டுள்ளது. **கதைசொல்லி** என்ற இலக்கிய இதழை இவர் நடத்தி வருகிறார்.

ராஜம் கிருஷ்ணன் (05.11.1925) திருச்சி மாவட்டம் முசிறி கிராமத்தில் பிறந்து வளர்ந்த இவர் பல்வேறு இடங்களுக்கு பணிமாற்றத்தால் சென்று வாழ்ந்த பொறியியல் வல்லுனரின் மனைவியாக வாழ்ந்து கொண்டே படைப்பாளியாக உயர்ந்தவர். குடும்பத்தில் கிடைத்த அமைதியான பொழுதுபோக்கு நேரத்தைப் படைப்பிலக்கிய நேரமாக்கிக் கொண்டவர். குடும்பம் உள்ளிட்ட அனைத்து சமூக நிறுவனங்களிலும் ஆண்-பெண் உறவு முறைகள், போராட்டங்கள், வாழ்க்கை மாற்றங்கள் முதலியனவற்றை உற்று நோக்கி தனக்கே உரிய நடையில் (அதாவது பெண்கள் பிரச்சினைகளைப் பற்றி இவர் எழுதிடுவதை ஆண்களில் பலரும் ஏற்றிடும் வண்ணம்) நயமான சொல்லாடல்கள் கொண்டு எழுதிடுபவர். தமது படைப்புகளுக்கான கருவையும், சித்தரிப்புகளையும் கூடுமானவரை சம்பவ இடங்களிலிருந்தே பெற்றிடும் வாய்ப்புப் பெற்றவர். இவரது படைப்புகளில் **பெண்குரல், குறிஞ்சித்தேன், அலைவாய்க்கரையில், வேருக்கு நீர், வளைக்கரம், கரிப்புமணிகள், சேற்றில் மனிதர்கள், மண்ணகத்து பூந்தளிர்** முதலிய நாவல்கள், **ஊசியும் உணர்வும், அவள்** முதலிய சிறுகதைத் தொகுதிகள், **பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பாதையில் பதிந்த அடிகள்** முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்கள், **காலம்தோறும் பெண்** என்ற பெண்ணியவாத கட்டுரைநூல் உள்ளிட்டவை இவரது எழுத்துக்களில் குறிப்பிடத்தக்கன. இவரது படைப்பாற்றலுக்கான அங்கீகாரமாய் நியூயார்க் ட்ரிப்யூன் விருது, சோவியத் நாடு நேரு விருது, கலைமகள் விருது, தமிழக அரசு விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். 'மித்ரா' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். இவரது **வேருக்கு நீர்** நாவலுக்கு சாகித்ய அகாடமி (1973) விருது வழங்கப்பட்டுள்ளது.

வண்ணநிலவன் (15.12.1949) திருநெல்வேலி மாவட்டம் தாதன்குளம் என்ற கிராமத்தில் பிறந்தவர். இயற்பெயர் இராமச்சந்திரன். பாளையங்கோட்டையில் தன் இளமைக்காலம் வரையில் வாழ்ந்து அங்கும் மதுரையிலும் பல்வேறு இடங்களில் சின்னஞ்சிறு வேலைகள் பார்த்து பின்னாளில் சென்னைக்குக் குடியேறியவர். இதழ்பணிகளுக்கு முயற்சித்து 'துக்ளக்' இதழில் பணியாற்றியவர். ஆனால் இவரது படைப்புக்கும் படைப்பு நெறிக்கும் இவர் பணிபுரிந்த இடங்களுக்கும் தொடர்பற்ற நிலைமை இருந்து வந்துள்ளது. தமிழ் வாசர்களுக்கு இவரை நன்கு அறிமுகம் செய்தவை இவரது சிறுகதைகள் தாம். இவர் சென்னை வந்த பின் கதைகள் வெளியிட்டாலும் பெரும்பாலானவை இவர் பிறந்து வாழ்ந்த இளமைப்பருவ வாழ்விடங்கள் பற்றிய பின்னணியைத் தான் முக்கியக் களன்களாகக் கொண்டுள்ளன. **எஸ்தர்** என்ற சிறுகதையும் **பாம்புப்பிடாரன்** கதையும், தூத்துக்குடி பகுதி மீனவர்கள் வாழ்க்கைப் போராட்டங்களை இயல்பாகச் சித்தரிக்கும் **கடல்புறத்தில்** நாவலும் இவரை நன்கு நினைவுபடுத்துவனவாகும். **கம்பாநதி இரேனியஸ் ஐயர் தெரு நேசம் மறப்பதில்லை நெஞ்சம் ஒரே ஒரு நாள்** முதலிய நாவல்களும் **காலம்** என்ற புதுக்கவிதை தொகுதியும் இவரது படைப்பாளுமைக்குச் சான்றாவன. இலக்கியச் சிந்தனை அமைப்பு போன்ற இலக்கிய அமைப்புகள் இவருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

வாஸந்தி (26.07.1941) கர்நாடக மாநிலம் தும்கர் என்ற ஊரில் பிறந்தவர். பள்ளி கல்லூரிப் படிப்புகளை பல்வேறு இடங்களில் பெற்றமையும், வளரும்போது பல மாநிலங்களுக்கு பயணித்துள்ளமையும் இவருக்கு பரந்துபட்ட அதிசயங்களை நிகழ்வுகளைப் புரியச் செய்துள்ளன. இயல்பாக ஏற்பட்ட படைப்பு ஆர்வம் இவருக்கு பல்வேறு இதழ்களுடனான நெருக்கம் ஏற்பட வழிவகுத்தது. இந்தியாடுடே (தமிழ்) பத்திரிகை ஆசிரியர் பொறுப்பில் இருந்துவரும் இவர் பெண்களுக்கான பல்வேறு அமைப்புகளில் ஈடுபாட்டுடன் கலந்துள்ளார் ஆனந்தவிகடன், அமுதசுரபி போன்ற இதழ்களில் கதைகள் எழுதி வெளியிடத் துவங்கியவர் நாளடைவில் **ஆகாசவீடுகள், மௌனப்புயல், நிஜங்கள் நிழலாகும்போது, நிற்க நிழல் வேண்டும், தாகம், கடைபொம்மை, வேர்களைத்தேடி, குற்றவாளி** முதலிய நாவல்கள் படைத்து குடும்ப நாவல்கள் வாசிக்கும் வாசகர் கூட்டத்தில் கலந்தவர். ஆனந்தவிகடன், அமுதசுரபி போன்ற இதழ்களின் விருதுகள், பஞ்சாப் மற்றும் உத்திரப்பிரதேச மாநில இலக்கிய அமைப்பு விருதுகள் உள்ளிட்டவை இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஜெயகாந்தன் (24.04.1934) கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் பிறந்த ஜெயகாந்தன் பள்ளிக்குப் போக முடியாத நிலையில் சென்னைக்கு வந்தவர். அறிவைத் தரும் மூலங்களான நூல்-இதழ்களை உருவாக்கும் அச்சகப் பணியில் தம்மைப் பிணைத்துக் கொண்டவர். அதிலும், வணிக நோக்குடைய அச்சகப்பணியில் இணையாது, பொதுவுடைமைக் கொள்கையை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்த

வெளியீடுகளின் பணியில் ஈடுபட்டவர். சிறுவனாய் இருந்தபோதே சித்தாந்தக் கருத்தாடல்களை - அறிவார்ந்த விவாதங்களை அறிந்திடும் வாய்ப்புப் பெற்றவர். சென்னையில் வாழும் சேரி மற்றும் கூலிகளின் வாழ்க்கையை அவர்களுக்கே உரிய சொல்லாடல்களில் சித்தரித்தவர்; அரசியலில் ஈடுபடும் உழைக்கும் மக்களின் வாழ்க்கை முறையினை நடப்பியல் புனைந்துரைகளாக்கியதில் வெற்றி கண்டவர். தொடக்கத்தில் பொதுவுடைமைக் கொள்கையுடனும் பின்னாளில் காந்தீயப் பொதுவுடைமைக் கொள்கை என்ற கலப்பு சித்தாந்தத்துடனும் எழுதியவர். ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், யுக சந்தி முதலியன இவரது குறிப்பிடத்தக்க புதினங்களில் சிலவாகும். இவரது கதை நூல்களில் முனைப்புடன் இவரால் எழுதப்பட்ட முன்னுரைகள் கதைகளுக்கு இணையான வரவேற்பைப் பெற்றன. பாஷா பரிஷத் உள்ளிட்ட பல விருதுகள் பெற்றவர். இவரது முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் பல தொகுதிகளாக வெளியாகியுள்ளன. சில நேரங்களில் சில மனிதர்கள் நாவலுக்கு சாகித்திய அகாடமி (1972) விருது பெற்றவர்.

படைப்பு வாழ்க்கைக் குறிப்புகளால் நோக்கப்பட்ட இவர்களைப் பற்றிய செய்திகளில் பல பொதுமையான கூறுகள் உள்ளன. அனைவருமே பலரது பாராட்டுகளாலும் பல அமைப்புகளது விருதுகளாலும் கௌரவிக்கப்பட்டவர்கள்; இப்படைப்பாளர்களது பெயர்களைக் கொண்ட சிறுகதைத் தொகுதிகள் சமீபத்தில் பல்வேறு பதிப்பகங்கள் மூலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அனைவரது நூல்களும் சாகித்ய அகாடமி அமைப்பினரால் பிற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி பிறநாட்டு மொழிகளிலும் குறிப்பாக ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் வழி இந்தப் படைப்பாளர்கள் நம் நாட்டு பண்பாட்டுச் சமூக வரலாற்றைத் தத்தம் படைப்புக்கள் வழி பிற இந்திய / உலகப் பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்துவது இந்திய வரலாற்றில் நேர்ந்திடும் சிறப்புச் செயல்பாடாகும். தமிழ் இலக்கியத்தின் நவீனக் கதைகளில் / நாவல்களில் ஈடுபாடு கொள்ளும் ஆய்வாளர்களுக்கு அடிப்படைத் தரவு நூலாகவும் இந்நூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஓர் இலக்கியப் படைப்பு அது படைக்கப்பட்ட காரண-காரிய அடிப்படைகளையும் ஒரு சேர அல்லது இணையாக பதிவு செய்து வரும்போது அவ்விலக்கியத்தின் வரலாறை அணுக உறுதுணை புரிகிறது. பின்னாளில் சிறுகதை நாவல் இலக்கியங்களுக்கான ஒரு தரமான இலக்கிய வரலாற்றைப் பதிவு செய்திட "நானும் என் எழுத்தும்" என்ற தலைப்பில் வெளியாகும் இது போன்ற நூல்கள் பெரிதும் பயனளிக்கும்.

அசோகமித்திரன்

நானும் என் எழுத்தும் என்ற ஒரு தலைப்பின் கீழ் இந்தக் கூட்டம் நடப்பதால் நான் ஓரளவுக்கு எழுதி வாசிக்கிறேன். கடந்த சில மாதங்களில் ஐந்தாறு முறை என்னைப் பற்றியே பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அக் கூட்டங்கள் வெவ்வேறு இடங்களில் நடந்ததால் கூடியிருந்தோர்க்கு என் பேச்சு முதன் முறையாகக் கேட்கக் கிடைச்சிருக்கும். ஆனால் என் பேச்சு ஐந்தாறு முறை எனக்குக் கேட்க ரொம்ப சங்கடமாக இருந்தது. நேற்றோடு எனக்கு 66 முடிகிறது. அதென்ன அவ்வளவு பெரிய சாதனையா? இந்த வயதைச் சொல்ல வேண்டிய அவசியம் பல சந்தர்ப்பங்களில் நேரிடுகிறது. வைத்தியர், டாக்டர் கிட்ட போனா சொல்ல வேண்டியிருக்கிறது. ரேஷன் கார்டுக்கு சொல்ல வேண்டியிருக்கிறது. ரயில்வே ரிசர்வேஷனுக்குச் சொல்ல வேண்டியிருக்கும். வயதைப் பற்றிய பிரக்ஞை அதிகரிக்கும் போது கடந்து போன காலத்தைப் பற்றிய நினைவுகளும் முக்கியமாகின்றன. 50 வருடம் முன்பு என்னோடு படித்தவர் ஒருவரை சமீபத்தில் சந்தித்தேன். எவ்வளவோ மாறுதல்கள் நேர்ந்து விட்டன. ஆனால் இருவருக்கும் நீ அப்படியே இருக்கியே! மாறவில்லையே! என்று வியக்கத்தோன்றியது. எதை வைத்துக் கொண்டு இதைச் சொன்னோம். மனிதரில் ஏதோ ஒரு அம்சம் மாறுதல் அடையாமல் அப்படியே இருக்கிறது. பழைய புகைப்படங்களைப் பார்க்கும் போது நேர் எதிராக எண்ணங்கள் வருகின்றன. ஒன்று மிகவும் மாறிவிட்டால்; இரண்டாவது மாறவே இல்லை என்றால். நேற்று என் முதல் தமிழ்ச் சிறுகதையைப் பற்றி சிறிது நேரம் விவாதிக்க நேர்ந்தது. அது எழுதிய போது எனக்கு வயது 22, 23 ஆகிவிட்டது. இந்த நாளில் இன்னும் நிறைய எழுதத் தொடங்க வேண்டும். இந்தக் கதையை எழுதிட எது உந்துதலாக இருந்தது? இப்படி நினைத்துப் பார்க்கும் போதுதான் நிறைய விஷயங்களை மறந்து போய்விடுவது பட்டுத் தெரிகிறது. நினைவில் நிற்பது கூட முழுக்க முழுக்க உண்மை என்று நம்ப முடியவில்லை. நாடகத்தின் முடிவு என்ற அந்த முதல் சிறுகதை பற்றி ஒவ்வொரு நேரத்திலும் வேறு வேறு விதமாகத்தான் நினைக்கத் தோன்றுகிறது. அதே நேரத்தில் இதெல்லாம் என்ன பெரிய விஷயம்; இதைப்போல் நினைவுப்படுத்திக் கொள்வதற்கும், இன்னொருவரிடம் சொல்வதற்கும் என்ன முக்கியத்துவம் இருக்கிறது என்றும் தோன்றுகிறது.

நான் பலமுறை சொல்லியிருக்கிறபடி 60 ஆண்டுகளுக்கு முன்பு நான் வசித்த ஊரில் தமிழில் படித்து கற்பனையை விரிவாக்கிக் கொள்ளும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. ஆதலால் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆறு இதழ்கள் - கலைமகள், ஆனந்த விகடன், 2வது உலக யுத்தம் மும்முரம் அடையும் போது கல்கி, (கல்கி பத்திரிகை) பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை, சங்கரதாஸ் சுவாமிகள் புனைந்த கோவலன் நாடகம், ஒரு சுதேசிமித்ரன் ஆண்டு மலர், (ஆண்டு மலர் என்றால் அவங்க பொங்கல் அன்று வெளியிட்டிருக்கிறார்கள்). அது 1938-ல் அதாவது எனக்கு 7 வயதாகும் போது அதில் பெரும்பாலானவைகள் அன்று எனக்கு அப்பாற்பட்டவை.

ஆனால் உ.வே.சுவாமிநாத ஐயர் எழுதிய ஒரு கட்டுரை அது எனக்குக் கதை போலவே இருந்தது. உண்மையில் நன்கு எழுதப்பட்ட ஒரு கட்டுரைக்கும் ஒரு நல்ல சிறுகதைக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. சாமிநாத ஐயரால் உப்பு சப்பு என்று எழுதமுடியாது. அவர் எதைப்பற்றி எழுதினாலும், என்ன அவசரத்தில் எழுதினாலும் வாசகர்கள், கவனத்தைச் சிறிதும் கலையவிடாமல் எழுதுவார். கலைய விடாதபடிதானே எழுத முடிந்திருக்கிறது. எனக்குத் தெரிந்து அவ்வளவு இயல்பாகவும், எளிதாகவும், பொருள் பொதிந்ததாகவும் அதே நேரத்தில் சுவாரஸ்யமாகவும் எழுதக்கூடியவர்கள் நானறிந்து வேறு யாரும் இல்லை. இது எல்லா மொழிக்கும் எனக்கும் என் வரைக்கும் எல்லா மொழிக்கும் பொருந்தாது. வேறு மொழி பெயர்ப்பாளர்களும் படித்திருக்கிறார்கள். இந்த மாதிரியான தெளிவு, சுவாரஸ்யம் இருந்திருக்காது. அவர் எழுதிய கட்டுரை அவருடைய தகப்பனார் சொன்ன நிகழ்ச்சி. கட்டுரைக்குத் தலைப்பு-பொறாமைக்கு அயலுமில்லை உறவுமில்லை. அது பற்றிச் சொல்லிவிடுகிறேன். அது போன நூற்றாண்டில் தஞ்சாவூர் மகாராஜாவுக்கு ஆஸ்தான வித்துவான்கள் இருந்திருக்கிறார்கள். ஒரு வீணை வித்துவான் இருந்திருக்கிறார். அவர் பேர் காளஹஸ்தியர். அவர் வந்து ராஜா பூஜை செய்யறப்போ வீணை வாசிப்பார். ஒரு சமயம் அந்த காளஹஸ்தியருக்கு மைசூர் மகாராஜா அழைப்பு கொடுக்கிறார். எங்க அரண்மனைக்கு வரணும். தஞ்சாவூர் மகாராஜா கிட்ட, காளஹஸ்தி கேட்கிறார். மைசூர் மகாராஜாகிட்ட இருந்து அழைப்பு வந்திருக்கிறது. நான் அங்கேபோயிட்டு வரேன் என்றும் நான் இல்லாத அந்த நேரத்தில் இங்கே யார் வாசிப்பாங்களோ எனக்கு தெரியாது. நீங்க முடிஞ்சா ஏதாவது ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். நான் 10 நாட்களில் வந்து விடுகிறேன். அவ்வாறு கூறி இவர் போன பிறகு, இந்த வீணையை இவர் ரொம்ப நன்றாக வாசிப்பார்

என்று கலாரசிகர் அவர்களுக்கு ஒரு பெரிய அகம்பாவம். தன்னை மிஞ்சி யாராலும் வாசிக்க முடியாது. அந்தக் காலத்தில் யாருக்கும் சொல்லிக் கொடுக்கறதும் கிடையாது. அவர் சிஷ்யர்களும், அந்த மாதிரி கிடையாது. அவர் மட்டும் தான் வாசிக்கணும், வீணையே அவர் தான் அப்படீன்னு இருப்பவர்கள். ராஜாவுக்கும். ஆனா வீணை நன்றாக வாசிப்பார் காளஹஸ்தியர். ராஜா கேட்கிறார் என்னப்பா அவரு போயிட்டார். வேற என்ன செய்யலாம்? அவர் போனா என்ன அவர் பையனைக் கூப்பிட்டு வாசிக்கலாமே என்றனர். அப்படியா அவர் பையன் வாசிப்பாரா என்கிட்ட சொல்லலியே. கூப்பிட்டு வாங்க. பையன் வந்து வாசிச்சான். அது ரொம்ப நன்றாக இருந்தது. அந்தப் பையன் வந்து எவ்வளவு வயசுன்னு சொல்லவில்லை. ரொம்ப ஒரு 12 அல்லது 14 வயது தானிருக்கும். "குமாரன், குமாரன்" என்ற சொல்லைத் தான் பயன்படுத்தியிருப்பார். "குமாரன்" எல்லாம் ரொம்ப அழகான சொல், இப்போ வழக்கில் இல்லாமல் போய்விட்டது. தமிழில் நிறைய சொற்களை இழந்து விட்டோம். இழந்த சொற்களில் குமாரன் என்ற சொல்லும் ஒன்று. சொல்லும் போய்விட்டது இருக்குனு சொல்லக்கூடாது. குமாரன் முதலில் அரண்மனையில் வாசிக்கரப்ப ரொம்ப இயல்பாகப் பயந்து, தயக்கதுடன் ரொம்ப மெதுவாகத்தான் வாசிச்சான். அப்ப வந்து ஒவ்வொரு நாளும், வாசிக்க வாசிக்க, நம்பிக்கை வர்ரது; அவனும் தன்னை மறந்து வாசிச்சான். பார்க்கப்போனா, என்ன இது அப்பாவை விட பையன் ரொம்ப நல்லா வாசிக்கிறான் என்று ராஜா சந்தோஷப்பட்டார். தினமும் அவன் வாசித்து வர்றான். போனவர் 10 நாட்களில் வாரேன் என்றவர் 15 நாட்கள் ஆகிவிட்டது. திருப்பி வாரார். வந்து ராஜாவை வந்து பார்க்கிறார். எனக்கு ரொம்பப் பரிசுகள் எல்லாம் கிடைத்தது. என்னென்றால் அப்புறம் உங்களைப் பற்றியே ஞாபகம் இருந்தது. அய்யோ பாவம் நீங்க என்ன நினைச்சி இருக்கின்றீர்களோ பூசை சமயத்தில் என்றார். அப்போது தஞ்சாவூர் மகாராஜா சொன்னார். அதெல்லாம் ஒன்றும் கவலையே இல்லை. உங்களுக்குப் பதில் உங்க பையன் வந்து வாசிச்சான். ரொம்ப நல்லா வாசிச்சான். உங்களைவிட ரொம்ப நல்லா வாசிச்சான். இனிமேல் அவனையே அனுப்புங்கள். அப்படி அவர் சொல்லியிருக்கார். நம்ம பையனாவது வாசிப்பதாவது, அப்படீன்னு சொல்லி வீட்டுக்கு வரார். வீட்டுக்கு வந்து, 'நீ வந்து அரண்மனைக்குப் போய் வாசித்தயாமே? பையன் ரொம்ப தயங்கிப் போய் சொல்றான். "ஆமப்பா என்னை வந்து வாசிக்கச் சொன்னாங்க" "ஆனா நீ எப்ப கற்றாய்?" "இல்ல நீங்க பழகினப்ப பார்த்தது தான். எனக்கா ஒன்றும் கிடையாது. உங்களைப் பார்த்துதான்" என்று சொன்னான். "நீ ரொம்ப நல்லா வாசித்தையாமே" என்று சொல்லியபடி 'எங்கே

அந்தக் கைய கொடு' என்று அந்தப் பையனுடைய கைய வாங்குகிறார். வாங்கிண்டு உடனே அந்த பையனுடைய விரலை கடிச்சிட்டார். கடித்த உடனே விரல் துண்டா விழுந்து விடுகிறது. இப்ப (அவர்) சாமிநாதன் ஒருவரி எழுதி இருப்பார். வீணை வாசிக்கின்றவர்களுக்கு நடு விரல் ரொம்ப முக்கியம். இத என்ன மாதிரியான ஃபிக்ஷன் டெக்னிக் வேற முன்னால எல்லாம் ஒன்னும் கிடையாது. அந்தப் பையனுடைய நடுவிரலை அப்பாவே கடித்து விடுகிறார். பொறாமையிலே. தலைப்புப் பெயர், அயலும் இல்லை உறவும் இல்லை. அப்படியே இரத்தம் கொட்ட பையன் அழுகின்றான். குமாரன் சின்ன பையன் தானே. இரண்டு பேரும் பிரமிச்சு நிற்கின்றார்கள். சொன்னான். என்னப்பா, இந்த மாதிரி செஞ்சிட்டீங்களே. ஓர் ஏகலைவன் மாதிரி ஆகிவிட்டது. "ஏகலைவன் ஒரு மானசீக குரு வைத்துக் கத்துக்கிட்டான். அவரே அவருக்கு குரு தட்சணையாக அவனது கை கட்டைவிரலை வாங்கிவிட்டார். நீங்க வந்து இப்போது நடுவிரலை வாங்கிவிட்டீர்களே!" அப்படீன்னு சொல்லி அழுகிறான். இவர் வந்து மனது திருந்தி, அப்போதிலிருந்தே வீணை வாசிக்கிறது இல்லைன்னு முடிவு எடுக்கிறார். பிறகு தற்கத்தினால் வீணை வாசிக்கிறார்; கொஞ்சம் சமாதானம் அடைகிறார். ஆனால் இந்தக் கதையிருக்கே அதை எழுதினப்ப அந்த எட்டு ஒன்பது வயிசிலே படிச்சப்ப இன்னும் மாறாதபடி அந்த அனுபவங்கள் இருக்கின்றன. அதுதான் இந்தப் பொறாமைக்கு அயலுமில்லை உறவுமில்லை. என்னுடைய தகப்பனார் எனக்கு 19 வயதாகும்போது இறந்தாலும் அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே அவருடைய உற்சாகம் மலர்ச்சி எல்லாம் போய்விட்டது.இது அப்பாங்கறதனாலே நான் சொல்றேன். 1941-ல் சென்னையில் என்னுடைய மூத்த அக்காவுக்குத் திருமணம் செய்தோம். அந்தத் திருமணத்திற்குப் பிறகு, என்னுடைய அப்பாவுக்குச் சிரிக்க முடியவில்லை. இதனால் இளமைக்காலத்தில் அப்பாவால் கிடைக்கக்கூடிய ஆலோசனைகளும் வழிகாட்டுதலும் கவனமும் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டன. இன்னொரு மகளுக்கு கல்யாணம் செய்துவிட்டபின் அதுவும் மூத்தப் பெண் திருமணத்தின் சங்கடத்திற்கும் துக்கத்திற்கும் சிறிதும் குறையில்லை. அந்தத் துக்கத்தினையே அவருக்குத் தாங்க முடியவில்லை. அவர் செத்துப் போய் விட்டார். என்னுடைய தொடக்கச் சிறுகதைகளில் என் அப்பா வர்றதில்லை. அந்த நேரத்தில் என்னைச் சுற்றியிருந்த சூழ்நிலை, மனிதர்களைப் பற்றிதான் எழுதினேன். இப்போது என் அப்பாவைத் தவிரவேறு எது பற்றியும் எழுதுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இப்படி எழுதிக்கிட்டு இருக்கும்போது எல்லாக் கதைகளும் ஏதோவிதத்தில் என் அப்பாவின் நிழலில் விழுவது போல் இருக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் நான் என் அப்பாவைப் பற்றி யோசித்து பார்த்திருக்கிறேன். கடந்த காலத்தைப்பற்றி நினைத்துப் பார்ப்பது மிகவும் குறைவு. இது நம்ப முடியுமா, இது நடக்குமா? ஆனாக்க நேற்றைப் பற்றி நினைக்க வேண்டான்னா, வேண்டாதான். யாரையும் பற்றி நினைக்க வேண்டான்னா வேண்டாதான். அதுமாதிரி பழகிப் போயிடுத்து. வேறு யார் யாரையோ பற்றி கவலைப்பட்டு துக்கப்பட்டு இருக்கேன். என் அப்பா, அம்மா, நண்பர்கள், உறவினர்கள் பற்றி, அப்படிப்பட்ட ஜீவ சிந்தனைப் பற்றி, கோபம், வருத்தம் என்று கொண்டது கிடையாது. எனக்குக் கோபமே இல்லை என்று சொல்ல முடியாது. அது ஒரு நீடித்த உணர்வாக இருந்தது கிடையாது. கோபமில்லாத எழுத்து என்ன எழுத்து என்று என்னைச் சிலர் கேட்கக்கூடும். எழுத்தின் விளைவு திட்டமிட்டு நடப்பதில்லை. பல சந்தர்ப்பங்களில் நான் எண்ணியதற்கு நேர் எதிராகவும் முடியும். மனிதன் மீது அக்கறை ஒன்றைத்தான் நான் திடமாக வைத்துக் கொள்ள முடியும். அதில் நாம் தீர்மானமாக இருந்தால் இதர அம்சங்கள் தானாகவே சரியாக அமைந்து விடும்.

இந்த சாமிநாத ஐயர் மீது ஒரு பெரிய பாதிப்பு இருந்தது. அவர் உரை சிறுகதை வடிவத்திலேயே பதிந்து, எனக்கு ரொம்பப் பாதித்தது. புதுமைப்பித்தனுடைய **சித்தி** ன்னு ஒன்று, யுத்தகாலத்தில் வந்தது. அப்போ 2-ம் உலக யுத்தம் நடந்தது. அந்த ஆறு இதழ்கள் (கலைமகள்) வந்தன. அந்த ஆறு இதழ் கலைமகளில் இந்தக் கதை ஓர் இதழில் இருந்தது. அது அப்புறம் எனக்குக் கிடைக்கவில்லை. அதை என்னால் சேகரிக்க முடியவில்லை. அப்போ வந்து சித்தி என்று தலைப்பு இருந்ததே அந்தக் கதை படிச்சேன். அது என்னை ரொம்பப் பாதித்தது. ஆனந்த விகடன் வரும். ஆனந்த விகடனில் **கள்வனின் காதலி** வந்தது. **தியாக பூமி** என்னை பாதிச்சது. அதனால் கல்கிக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கேன் என்று தான் சொல்லணும். கல்கியுடைய பாதிப்பு ரொம்ப இருந்தது.

வேற ஆங்கிலத்திலே சார்லஸ் டிக்கன்ஸ் கதைகள் ரொம்பப் பிடிக்கும். எனக்கு பெரிய பாதிப்பு உண்டாக்கியது. சார்லஸ் டிக்கன்ஸ் மாதிரிதான் கதை எழுதணும். அந்த மாதிரிதான் தெரியணும் என்பது என்னுடைய விருப்பமாக அந்த நாளிலேயே இருந்தது. இப்போ சார்லஸ் டிக்கன்ஸ் மாதிரி எழுதறேன்னு சொல்ல முடியாது. ஆனால் சார்லஸ் டிக்கன்ஸ் எனக்கு ஒரு முக்கியமான எழுத்தாளன். 17, 18 வயசுக்கு அப்புறம் எனக்கு யாரைப் படிச்சாலும், எனக்கு அவர்கிட்டேயிருந்து ஒரு பாடம் கிடைச்சமாதிரி இருக்கும். அதனால் நெஜமாவே எனக்குப் பிடித்தவர்கள் பற்றிப் பட்டியல் தர இங்கே உண்மையாகவே இடம் காணாது. அவ்வளவு பேர் எனக்குப்

பிடிச்ச எழுத்தளார்களாக இருக்காங்க. அந்த ஆரம்ப எழுத்தாளர் பற்றிதான் சொன்னேன். அந்த நாளில் புரியலை. என்னமோ நல்ல விஷயத்தை சொன்னாக் கூட, இப்ப சொன்னாக்கூட ஒரு பக்குவமடையாத வைராக்கியம். ஒரு மனுசாள் தன் மனைவிகூட கோச்சிண்டு சந்நியாசியாகப் போகிறார். மனைவியிடம் சொல்லாமல் சந்நியாசியாகப் போகிறான். சந்நியாசியாக நினைச்சிட்டு இருக்கிறார். ஒருவருடம் ஊரைச் சுற்றி விட்டு மறுபடியும், அவள் கிட்டேயே வருகிறான். அப்ப போறப்பத்தான் அவன் தனக்கு நிகரான அவளைப் பார்க்கிறான். அவர் ரொம்ப சுலபமாக பக்குவமற்ற நிலையை எடுத்துச் சொன்னார். எனக்கு அந்தக் கதை என்னை ரொம்பவும் பாதிச்ச கதை. அது இப்ப நினைச்சாலும், எனக்கு ரொம்ப விஷேசமான கதை. அவர் எழுதிய கதையெல்லாம் 309 கதைகள் தான். நான் சொல்ற மாதிரிதான் இருக்கு. பிச்சம்மாள் என்று ஒரு கதை. அதுல ஒருத்தி இறந்து போயிட்டுருக்கா. அதுபற்றி, வேற மத்தவங்களெல்லாம் இது வந்து ரொம்ப மோசமான இலக்கியம், லட்சியம் நெகடிவ் அப்ரோச்-னு சொல்லுவாங்க. ஆனா, ரொம்ப சிறப்பா எழுதியிருப்பார். எனக்கு அந்தக் கதையும் ரொம்ப விசேஷமாக பிடிக்கும்.

ஆங்கில பத்திரிக்கையில் ஆரம்பத்தில் எழுதியிருந்தேன். நிறைய ஒரே கதையை இரண்டு மொழிகளிலும் எழுதறது. பார்க்கபோனா, ஆங்கிலப் பத்திரிக்கையில் தான் முதன்முதலில் என் கதை வெளி ஆச்சு. அந்தப் பத்திரிக்கை எப்படி பரிச்சயம் ஏற்பட்டது என்றால் வந்து ஜெமினி ஸ்டுடியோவில் பொதுஜன தொடர்புத் துறைன்னு உள்ள இருந்தது. அதுல இரண்டு பேர்தான் இருந்தோம். வி.கே.என். சாரி, நான் இரண்டுபேர் மட்டும்தான் இருந்தோம். வி.கே.என். சாரி, போனபிறகு நான்மட்டும் தான் இருந்தேன். பொதுஜனத் தொடர்புக்கு நான் மட்டும் தான்; விளம்பர இலாக்கா எங்கள் பக்கத்திலேயே இருந்தது. எல்லா பத்திரிக்கைகளும் வரும். இந்தியா முழுவதிலிருந்தும் பத்திரிக்கைகளை நன்றாக வர வச்சிருந்தார் வாசன்சார். வாசன்சார் இல்லை வி.கே.என். சாரி. அவர் தான் முதலில் விளம்பர அதிகாரியாக இருந்தார். ரொம்ப அழகா ஏற்பாடு செய்து, ஒவ்வொரு பத்திரிக்கைக்கும் ஒவ்வொரு கேட்லாக் அதனுடைய விளம்பர கட்டண பட்டியல், அதெல்லாம் வச்சிருக்கும். டெக்கரான் வாரப்பத்திரிக்கை ஞாயிறு கிழமைகளில் வெளிவரும். நான் திங்கள், செவ்வாய்களில் படிப்பேன். அதில் போசன் ஜோசப்-னு ஒருத்தர் இருந்தார். அவருக்கு முன் 1950-60-ம் ஆண்டுகளில் இந்தியாவில் பல (ரொம்ப) விஷேசமான பத்திரிக்கை ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். அதில் போசன் ஜோசப் ஒருத்தர். அதே மாதிரி "ப்ராங்க்ப்ரே" என்று ஒருத்தர் அவரும் விஷேசமானவர்.

நான் எந்தக் கதை எழுதினாலும், முதலில் 'இந்து'வுக்கு அனுப்பிவிடுவேன். அங்க அனுப்பினா, அதிலிருந்து திருப்பி, அனுப்பிவிடுவார்கள். சில பத்திரிக்கைகளில் திரும்பி வராது. இதிலே தப்பே இல்லை. என் கதைகள் எல்லாம் அவனுக்கு பிடிக்கனும்னு என்ன நிர்பந்தம். அதனால் திரும்பி வந்து விடும். 10 நாளில் விற்றுவிடும். அதனுடைய ரிசல்ட் தெரிந்துவிடும். ஆனால் டெக்கரானில் போட்டாங்க; நான் அனுப்பின கதையெல்லாம் போட்டாங்க; ரொம்ப சந்தோஷமாக இருந்தது. போசன் ஜோசப்பை பார்க்கனும்னு போனா அவர் செத்தே போயிட்டார். குடிச்சே செத்தார்னு சொல்லுவாங்க. அப்ப பத்திரிக்கை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப நல்ல பத்திரிக்கை ஆசிரியராகவும் இருப்பார்கள். நல்ல குடிப்பீங்கன்னு சொல்லுவாங்க. ஆனால் பத்திரிக்கை ஆசிரியர்கள் குடிக்கிறதைப் பற்றி நிறைய கதைகள் இருக்கும். அதை எல்லாம் எழுதவில்லை. நிறைய கதை பற்றி கதைகள் இருக்கு. ஒருதரம் வந்து விந்தன் எனக்குக் கடிதம் எழுதினார். உங்க கதை ரொம்ப நன்றாக இருக்கு. ஆனால் ரொம்ப நீளமாக இருக்கு என்றார். ஒருநாள் நான் என்ன பண்ணினேன்னா அந்தக் கதையையே சின்னது செய்து அனுப்பினேன். அதைப் போட்டா அவர் நிஜமாக சொல்வார் அதுவந்து அந்த அளவு ஒரு நிர்ணயமில்ல என்பார். அவர் நிர்ணயித்து அதை அப்படியே பாலீஷ் செய்துவிட்டார். அதுக்கப்புறம் டைம்ஸ் ஆப் இந்தியாவிலிருந்து வந்தது. இதுவெல்லாம் 1960 வாக்கில் நடந்தது. அதுக்கப்புறம் கொஞ்ச நாட்களுக்கு எழுதுவதை விட்டு விட்டேன். இனியெல்லாம் எழுதறது சரியில்லை. பொய்யைப் பரப்புகின்ற மாதிரி இருக்கு. அதாவது இது எந்த அளவுக்கு நிஜம், எந்த அளவு பொய், இதெல்லாம் சாத்தியம், இலட்சியம் வாதம் என்றெல்லாம் சொல்ல முடியாது. என்னமோ அது சமயத்தில் தோன்றியது எல்லாமே உலகத்தில் பொய். இந்தப் பொய்யையும் எழுத்தின் மூலம் பரப்புகின்றோம். அப்பாடான்னு கொஞ்ச நாள் ஐந்தாறு வருடம் எழுதாமல் இருந்தேன். அப்புறம் மறுபடியும் எழுத ஆரம்பித்தேன். இப்பவும் இது அவ்வளவும் நிஜம் பொய் என்று தெரியாது. என்னுடைய ஆங்கிலக் கதைகளைப் பத்திரிக்கைகள் தான் வெளியிட்டன. அப்புறம் அது வந்த காலம் இருக்கே, பார்க்கப் போனா 15 வருடத்திற்கு முன் கதை பப்ளீஷ் செய்ய மாட்டார்கள். ஆர்.கே. நாராயணன் ஒருவர்தான் அவர்களுக்குக் கதை ஆசிரியர். அதுகூட நான் சொல்வேன். அது வந்து இங்க முஸ்லீம் இருந்தாங்களாம் அவங்க கடவுள அல்லா என்று சொல்வார்கள். அதே மாதிரி, இந்துவுக்கும். அப்படியிருந்தும் அதையும் வந்து பொருட்படுத்தாம ஒரு கதை பப்ளீஷ் பண்ணினார். அதுக்கப்புறம் வேற நிறைய கதைகள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

வேற பத்திரிக்கையும் வந்திருக்கு, அநேகமாக இந்தியாவில் இருக்கின்ற ஆங்கிலப் பத்திரிக்கைகள் எல்லாவற்றிலும், வந்திருக்குதுன்னு சொல்லலாம். அதில முக்கியமாக பத்திரிக்கைகளில் வெளியானது பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. இது ஏன் தெரியுமா நீங்க திரும்பித் திரும்பி செஞ்சீகன்னா அவருக்கும் ஒரு சமயத்தில் ஒரு பரிதாபம் தோன்றிடலாம். என்ன ஒருத்தன் இப்படி நான் அனுப்புறதைக் கோர்பிக்காமல் அனுப்புறானே என்று இருக்கலாம் இல்லையா? நிறையபேர் இரண்டு மூன்று தடவை திரும்பி வந்தாலே அவர்களுக்கு சலிப்பு வந்துவிடும். சலிக்காமல் அனுப்பினேன். தமிழ் பத்திரிக்கைகளிலும் அப்படித்தான். பார்க்கப் போனா குமுதம், ஆனந்த விகடன், கல்கி, அனைத்திற்கும். அப்போ அமுதசுரபி சரியா தெரியாது தெரிஞ்சிருந்தா அதையும் செய்திருப்பேன். சுதேசமித்திரன் ஒன்று. இதில் என்னுடைய கதை தொலைந்து போயிருக்கு. ஒருதரம் என்னுடைய கதைகள் ஒரு வருடம் இரண்டு வருடம் திரும்பி வரலைன்னு சொன்ன உடன் சீனிவாசன்னு ஒருத்தர் இருந்தார். அப்படி நாங்க அங்க போனாக்கா ஒருவருடம் முன்னாலே அனுப்பினீங்களா நீங்க வேணாத் தேடிப்பாருங்க. மேலே போங்கன்னு ஒரு ஆளைவிட்டு அனுப்பினார். அங்க கட்டுக்கட்டாக இருக்கு. பெரிய மலைபோன்றிருந்த கதைகள் அங்க இருந்தது. இதில் அசோகமித்திரன்னு இருந்தது என்னுடைய இயற்பெயர் தியாகராஜன். யாரோ தியாகராஜன் பேரில் 15 கதைகள் பார்த்தோம். எல்லாம் பப்ளீஷ் ஆகாம அப்படியே அங்கேயே இருந்தது. பிறகு ஒரு வி.ஐ.பி. அவற்றை வாங்கினாங்க. அதை என்ன செய்தார்கள் என்று நமக்குத் தெரியாது.

கதை ஆசிரியரே தன் எழுத்தினை மொழி பெயர்க்கிறப்போ ஒரு சுதந்திரம் இருக்கும். அவன் கூட்டி குறைச்சி செய்யலாம். அப்படி மொழிக்குள்ள இயல்புகளைப் பயன்படுத்திச் செய்யலாம். இன்னும் பார்க்கப்போனா அது ஒரு சங்கடத்தை விளைவிக்கிறது. இப்போ ஆங்கிலத்தில் எழுதறப்போ வந்து ஒரு சுதந்திரமாய் எழுதி இருக்கிறோம். ஏன்னாக்க இந்த மாதிரி கதைகள் எழுதறப்போ இந்த மாதிரி தமிழில் எழுதப்போறமான்னு, ஒரு கேள்வி எழுந்தது. அப்ப நான் தீர்மானம் பண்ணினேன். அப்ப வந்து எனக்கு சரியா பதில் கிடைக்கிறதில்லை அதனால் அப்ப இருந்து, ஆங்கிலத்தில் கதைகள் எழுதுவதை விட்டு விட்டேன். தமிழில் எழுதி தமிழைத்தான் ஒரு மாதிரி ஆங்கில வடிவில் மாற்றி அதே கதையை ஆங்கிலத்தில் எழுதி நிறைய கதைகள் அதுமாதிரி வந்து இருக்கு. அவனுக்கு மிகவும் பிடித்தமான நட்சத்திரம் அப்படின்னு ஒரு கதை. நிறைய கதைகள் 10, 15 கதைகள் இருக்கு. அதுவந்து என் மனதுக்கு

சங்கடமாக இருந்தது. இதெல்லாம் தனிப்பட்ட முறையில்தான் வந்தது. இது சரி அது தப்பு என்று கிடையாது. எனக்கு சரியாகாதது ரொம்ப. பெரிய கேள்வி இது; நிறைய கேள்வி இது; நிறைய வளர்ச்சி, விரிவு பெற்றிருக்கு.

சிறுகதை இலக்கியத்திலும் பார்க்கப்போனா நாம் ரொம்பக் குறைந்து போகவில்லை. நாவல் எழுதுவதற்கு அந்த அளவுக்கு பொறுமை இல்லையோ என்று எடுத்துக்கலாம். பெரிய அளவில் பாதிநாள் ரொம்ப நன்றாக எழுதினாங்க; அதுக்கப்புறம் சிதைந்து போகிறது. ஆனால் சிறுகதைகள் இருக்கே ரொம்ப அற்புதமான சிறுகதைகள் இந்தமொழியில் நன்றாக எழுதப்படுகிறது. அதனால் இது நம் பார்வையைப் பொறுத்திருக்குது. என் கருத்து வந்து வளர்ந்திருக்கு. எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் சொல்லுவேன். நிறைய எழுத்தாளர்கள் ரொம்ப நன்றாக எழுதுகிறார்கள். ஒரு காலத்தில் வந்த வெகுஜன பத்திரிக்கை நன்றாக இருக்காது. ஆனா வெகுஜன பத்திரிக்கையிலும், நடையைப் பொறுத்தவரைக்கு ரொம்ப நன்றாக எழுதறாங்க. பிஸிருதட்டாதபடி எழுதறாங்க. அவர்களுடைய மதிப்பீடுகள் மீது ஏதாவது சந்தேகங்கள் ஏற்படும். மற்றபடி நன்றாக எழுதுகிறார்கள். எழுதத் தொடங்குபவர் யாருமே கவிதை எழுதத் தெரியாத எழுத்தாளனாக இருக்க முடியாது. ஆனா ஏதோ ஒருமுறையில் ஏதோ ஒன்று எழுதுவாங்க; அந்த மாதிரி நான் எழுதியிருக்கேன். என்னை நான் ஒரு கவிஞனாக நினைச்சிருக்கேன்; அந்த உரைநடைதான் எனக்கு ஏற்புடைய வழி என்று நினைக்கிறேன்.

18வது அட்சக்கோடு முடிச்சி 20, 30 வருடங்கள் ஆயிடுச்சி. 1948-ல் நடந்தது. 1976-ல் எழுதினேன் கிட்டதட்ட 28 வருடங்களாயிடுச்சி. ஏன் ஒரு பொருள் உங்களுக்கு ஒரு அர்த்தம் பொருந்தியதாகவும் தெளிவாகவும் இருக்கு என்று தெளிவாக சொல்ல முடியவில்லை. எனக்கு வந்து இந்த 18வது அட்சக்கோடு நாவலை நான் அதற்கு முன்னாலே எழுதியிருக்க மாட்டேன். அதை 1976-ல் எழுதியிருந்தால் சரியானது. பாப்ரி மஸ்ஜிதுக்கு என்வரைக்கும் இதெல்லாம் ஒரு தகவல் என்று சொல்லணும். பாப்ரி மஸ்ஜித் இடிந்து போயிடுச்சி. ரொம்ப அநீதி நடந்துவிட்டது. ஆனால் சுமதிஐயர்னு ஒரு அம்மா மொழி பெயர்ப்பாங்க. தமிழில் இருந்து இந்திக்கு இந்தியிலிருந்து தமிழுக்கு. ரொம்ப படிச்ச பக்குவமான அவங்க மொழிபெயர்ப்பு ரொம்ப விசேஷமாகவும் இருக்கும். அவளை வந்து தமிழ்ப் பெண் என்று நினைக்கமாட்டாங்க அவர்கள் படைப்பு இந்தியிலும் வந்திருக்கு. அவள் இந்த பாப்ரி மஸ்ஜித்த இடிக்கறதுக்கு 2 மாதத்திற்கு முன் என் வீட்டிற்கு வந்தார். வந்தப்போ எல்லாருக்கும் இந்து என்ற உணர்வு ரொம்ப ஜாஸ்தியாக இருக்கே, அங்கே

சண்டை அயோத்தியாவில் நடந்திட்டுருக்கே என்றேன். ஆமாம் பாப்ரி மஸ்ஜிதுக்கு, பாபர் மசூதி கட்டியிருக்கிறான் என்று எவ்வளவு பேர் அங்கே போய் நமாஜ் படிக்கப் போறாங்க. ஆனா ராமர் பிறந்த இடம் என்றால் எல்லா இந்தியர்களுக்கும் இங்கே மட்டுமில்ல உலகத்தில் உள்ள வேறு இந்தியர்களுக்கும் அங்கதான் அப்படின்னு அவ சொன்னா. அவள் லக்னோவிலோ, கான்பூரிலோ இருந்தாள்; சரியான உ.பி.வாசி. அவளுக்கு வந்து இந்துத்துவம் என்ற அதெல்லாம் கிடையாது. நல்ல எழுத்தாளர் ஆன அவள் வந்து இத அப்ஜக்னாக சொன்னாள். நமக்கு வந்து தகவல்களில்தான் ரொம்ப விஷயங்களை வாசிக்கிறோம். உண்மையான நிலை என்றைக்கு? எது? ஆனா அதை இடித்திருக்க வேண்டாம். அந்தக் கட்டிடத்தை போட்டோவில் பார்த்தாக்க அது ஒரு நல்ல கட்டிடமாக இருந்தது. அது அப்படியே இருக்கப்பட்டிருக்கலாம். அதுவே பழசா போயிடுச்சி. பாபர் வந்து இருந்ததே 4 வருஷங்கள். 4 வருடத்திற்குள் (1526 - 1530) போயிட்டார். 1528ல் ஆரம்பித்து, 1529ல் முடித்து விட்டார். அது எப்படி கட்டியிருக்க முடியும். ஆனா விட்டிருந்தா அதுவே இடிந்து விழுந்திருக்குங்க. இவங்க இவ்வளவு எல்லாம் கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறது உண்டு. ஆனால் ஏன் சிலது நடக்குது சிலது நடக்கவில்லை சோவியத்து நாட்டில் எவ்வளவு அற்புதமாகச் செய்யப்பட்ட லெனின் சிலைகளை உடைச்சிருக்காங்க. பார்த்தீங்கன்னா அந்தச் சிலைகள் அவ்வளவு நன்றாக இருக்கு. பிரம்மாண்டமாக அவ்வளவு நன்றாக இருக்கு. அதை எல்லாத்தையும் உடைச்சி எறியராங்க. இது ஏன் நடக்கிறது? நம்ம நினைக்கிறோம் வெஸ்டன் சமூகம் பற்றி புதிய ஆர்வம் கொண்டவர்கள். இது இவர்களே சொல்கிறார்கள். ஆனால் இந்த பாபர் மசூதி பற்றி என்னால் எழுத முடியாது. எனக்கு அது தோணாது. எப்படியும் என்னைச் சுத்தியிருக்கிறதைப் பற்றித் தான் சொல்ல முடியும், எனக்கு அது தோணாது. என்னைச் சுத்தியிருக்கிறதைப் பற்றித்தான் செயல்படமுடியும். எனக்குப் பரிச்சயமானதை அப்போதான் உண்மையாக இருக்க முடியும் நம்ம எப்படி என்னதான் கதை புதிய கதையை சென்னாக்கூட எழுதறவனுக்கு அது உண்மையாக இருக்கணும் இல்லையா?

நான் ஒரு ஏழுமாதம் அமெரிக்காவுக்குப் போயிருந்தேன். 1973-74-ல் அங்கு வெவ்வேறு எழுத்தாளர்களைப் பார்த்தேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசத்தவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயங்களைப் பிரதிபலிச்சாங்க. அவங்க இயல்புகள், வேற மாதிரி இருந்தது. ஒவ்வொருத்தருடைய நோக்கமும் வேற மாதிரி இருந்தது. அந்த இதுல அவங்களுடைய சில அம்சங்களை வச்சி அது புதிய

கதையாகப் புனையப்பட்டது. அதை நெஜமாக எடுத்துச் சொன்னா, ரொம்ப கஷ்டம். ஏனென்றால் அதுல பாத்திரமாக இருந்த ஒரு பெண்ணை நான் மறுபடியும் பார்க்க வேண்டியிருந்தது. ஹிலாரியா என்ற அப்பெண். அவள் என்ன பண்ணுவா. இத்தாலியன்ஸ் அவங்க பேர்ல நாட்டம் வராது. எவனோ ஆசியாவிலிருந்து வந்தான்னா நாட்டம் வந்துவிடும். இந்த மாதிரி கல்யாணம் எல்லாம் ஆயிருக்கு. ஆனால் இந்தப் பெண் இருக்காளே, அவளுக்கு, அவள் வரிசையாக அவளுடைய அனுபவங்களை சொல்லிட்டிருப்பாள். பார்த்தாக்க எங்கேயோ இருந்தான் அவனுடன் ஆறுமாசம் இருந்தேன். அவன் சொல்லிட்டு போய் விட்டான். அப்புறம், சிலோன்காரன் வந்தான். அவனும் விட்டு விட்டு போயிட்டான்னு சொல்லுவா. அப்புறம் இந்தியனுக்காக நான் இருந்தேன் அவள் ரொம்ப புத்திசாலி. மொழி பெயர்ப்பதில் அவளை விஷேமாக சொல்லுவார்கள். இந்த ஒரு நிகழ்ச்சி இருந்தது. அந்த ஒரு சில அம்சங்களை வச்சி நான் எழுதினேன். பார்க்கப்போனா அது வந்து, அதை ஒரு கற்பனைக் கதையாகத்தான் எழுதுவேன். ஆனால் சில அம்சங்கள் சில ரெப்ரென்ஸ்-களை வச்சுதான் நாம எழுதறோம். ரியல் மாதிரி இருக்குன்னா, நான் நான்றாக எழுதியிருக்கேன் என்று பெருமை பட்டுக்காம இதை சில எழுத்தாளர்களாலே செய்யலாம். இல்லை என்றும் சொல்லலாம். பத்திரிக்கையில் கட்டுரை எழுதற குல்தீப்நையார்னு ஒருத்தர் இப்ப அவர் அதிகமாக எழுதறது கிடையாது. அருண்சோரி, அவர் வந்து ஒரு புத்தகம் எழுதினாங்க. ஆனா அதே மாதிரி ஒரு சிறுகதை ஆசிரியர் எழுதி ரொம்ப கஷ்டம் அடைந்தார். இப்ப சல்மான்ருஷ்டி வரிசையாக நாவல்கள் எழுதியிருக்கார். கடைசியாக **Saturnic Verses**. அதப்பத்தி உலகம் எல்லாம் சர்ச்சை. அதை மொழிபெயர்க்க வந்தவரைக் கூட கொலை பண்ணிவிட்டார்கள். அது ஒரு புனை கதைதான். ஆனா எவராலும் உட்கார்ந்து அதை 400, 500 பக்கம் படிச்சுட்டு அதனால சும்மா இருக்க முடியாது. ஆக முடிஞ்சுது, ரொம்ப அந்த மாதிரி ஒரு பயன் விளைவு. இருக்குன்னா ஒருவனை, கவிதைக்கு பாரதியார் கவிதைகளை படிக்கப் படிக்க எழுச்சி வருது. ஆனா முன்ன மாதிரி உரைநடை இருக்கே. உரைநடை தனியா உட்கார்ந்து படிச்சி நீங்களாகவே பண்ணி, ஒரு 20 வருடம் கழித்து ஒரு மாறுதல்கள் நோக்கம் ஏற்படலாம், உடனடியாக ஏற்படாது உரைநடை ஆசிரியரிடம் அந்த மாதிரி எதிர்பார்த்தோம்னு வச்சிக்குங்க, எதிர்பார்ப்பதுதான் தவறு, நான் அந்த மாதிரி நினைக்கவில்லை. இங்க இருந்த நேரத்தில், ரொம்ப ஜனநாயகவாதி என் கதைகளை இன்னொருத்தர் கிட்ட நீங்க படிங்க என்றுகூட சொன்னது கிடையாது. முயற்சி பண்றவங்க இருக்காங்க. எந்த அளவுக்கு ஆயிருக்கு இப்ப நாங்களும்

பார்த்தசாரதியுமா வந்தோம். இங்க ஒரு டி கடை அங்க ஒரு கடையிருக்கு. கிட்டதட்ட ஒரு 20,25 பயணிகள் பீர் குடிச்சியிருந்தாங்க. அதனால நம்ம ராஜம்மய்யரும், கல்கியும், விமர்சனம் செஞ்சார்னாக்க இது பாட்டு நடந்திட்டிருக்கு. அது நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கிறது. அப்படிதான் நாம் சொல்ல முடியும். உடனே இதனால வந்து குடிக்கிறவர்கள் குடிக்கறத விட்டுட்டாங்க அப்படீன்னா, நம்ம நாட்டில் 2000 வருடமாக இந்த மாதிரி ஒரு நன்னெறியை படைப்புகள் எல்லாவற்றிற்கும் வைத்திருப்போம். அப்போ இங்கே அப்படியே இருக்கின்ற 8 கோடி மனிதர்களும் ராமர்களாகவே இருந்திருக்கணும் இல்லையா. அப்படியெல்லாம் இல்லைசார், மனுஷ இயல்பு இருக்கே இதெல்லாம் மீறினதுதான்; வந்து தீண்டாமை நாள் இன்னொருத்தர் வந்து அந்த வீட்டுக்கு போகாமலிருக்கலாம்; சம்சா சாப்பிடமாட்டோம், ஆனா எனக்கு அவனை அடிச்சிக் கொல்ல உரிமை இல்லை. அது கூட அவ நம்மவான். அவரு சிறுகதையை உட்கார்ந்து நான் படிக்க வச்சிக்கலாம். அவருக்கு என் கதை வச்சிக்கலாம். முதல்ல கஷ்டம் என் சிறுகதைகள், அவருக்கு பிடிக்கணும்; இல்லன்னா பிடிச்சப்புறம்தான் அதைப் பற்றி விவாதிக்கப்படும். ரொம்ப கஷ்டம், அவ்வளவு பிரத்தியமாக எழுதினோம்னா கதைக்கும் கட்டுரைக்கும் வித்தியாசம் இருக்காது. பார்க்கப்போனா, நிறைய வந்து நம்முடையவற்றிலிருந்துதான் அந்த கலைஉணர்வு. என் கதைகளை கலைகள் என்ற படைப்பு ஆக்குறீங்க. நிறைய இடம் கொடுத்தீங்கன்னு வச்சிக்குங்க அதற்கு இருக்குற, ஒருவரி விமர்சனம், சின்ன குழந்தையில் நடந்தது. என் அப்பாவுடன் வேறு யார் யாரோ, நண்பரைப் பற்றி சொன்னேன். எனக்கு நிறைய விஷயங்கள், நானும் அவரும் சைக்கிளில் போனோம்னா கிடைக்கும். அவர் சைக்கிள் ரொம்ப நன்னா வைத்திருப்பார். அவர் இறந்து பார்த்தபிறகு எனக்கு இவ்வளவு நம் வாழ்க்கையின் இத்தனை நிகழ்ச்சிகளைப் பற்றி, திரும்ப நினைப்பதற்கு இருக்கிறது. நான் தேடிப் பார்க்க வேண்டி நேர்ந்திருக்காது.

ஒரு கதை எழுதறப்போ அப்படி தொடக்கம், ஒண்ணு கிடைச்சதுதான்னாக்க அது நல்ல தொடக்கமாக உண்மையான தொடக்கமாய் அமைய இந்த மாதிரி தகவல் இருப்பின் அவற்றிலிருந்துதான் வரும். அதாவது பிரக்ஞை பூர்வமாக வருவது குறைச்சல். அந்த ஒரு விபத்து இருக்கத்தான் இருக்கு. ஒரு எழுத்தாளன் பாராட்டப்படுகிறது தவறாக கருதப்படுகிறது என்று நினைக்கிறேன்.

இந்திரா பார்த்தசாரதி

1984ல் நான் கனடா பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தேன். 'வான் கோவர்' என்ற இடத்திலிருந்த போது, இந்திய - கனடா எழுத்தாளர்கள் சந்திப்புக்கு இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

அப்பொழுது, ஹிந்தி எழுத்தாளர்களைக் கனடா எழுத்தாளர்களுக்கு, இவர்கள் எங்கள் இந்திய எழுத்தாளர்கள் என்று அறிமுகப்படுத்திய, ஹிந்தி மாநிலங்களில் ஒன்றைச் சேர்ந்த நம் இந்தியத் துணைத் தூதுவர், நான் பல்கலைக்கழகச் சார்பில் சென்றிருந்த காரணத்தினாலோ என்னவோ, என்னை கனடா எழுத்தாளர்களுக்கு அறிமுகப்படுத்த மறந்து விட்டார். தவறு அவருக்குச் சுட்டிக்காட்டப் பட்டதும், அவர் திடீரென்று என் பக்கம் திரும்பி, மன்னிக்கவும் இவரை அறிமுகப்படுத்த மறந்துவிட்டேன். இவர் எங்கள் தமிழ் எழுத்தாளர் என்றார்.

நான் இந்திய எழுத்தாளன் இல்லையா? என்று நான் அவரிடம் கேட்டேன். என் கேள்வி அவருக்கு விளங்கவில்லை. இந்தியாவில், நான் தமிழ் எழுத்தாளன். ஆனால், வெளி நாடுகளில் நான் தமிழில் எழுதும் இந்திய எழுத்தாளன் என்று விளக்கினேன். இதுவும் அவருக்குப் புரிந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இந்திய அதிகார வர்க்கத்தினருக்கு எதுவும் எளிதில் புரிந்துவிடாது.

என்னால் படைப்பிலக்கியம் தமிழில்தான் எழுத முடியும். வரலாற்று ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் நான் இந்திய, தமிழ் மரபணுக்களால் உருவாகியிருக்கிறேன். என் எண்ணங்களும் உணர்ச்சிகளும் தமிழில்தான் அவற்றைப் புலப்படுத்துவதற்கான மிக நெருங்கிய வடிவம் கொள்ளும்.

ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் சூழ்நிலை நிர்ப்பந்தங்களினால் கற்றுக்கொண்ட வேற்று மொழியில் படைப்பிலக்கியம் ஆக்கும்போது ஏற்படுகின்ற கலாசாரச்சேதாரங்களை அவர்கள் உணர்வதில்லை. ரஷ்ய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட விலாடிமிர் நபக்காவ் (Vladimir Nabakov), ஆங்கிலத்தில் எழுதும் மிகச்சிறந்த அமெரிக்க எழுத்தாளராகக் கொண்டாடப்பட்ட போது சொன்னார். நான் ஆங்கிலத்தில் எழுத நேர்ந்திருப்பது எனக் கேற்பட்ட ஒரு பெரிய பண்பாட்டு இழப்பு.

இதனால்தான் ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற இந்திய ஆங்கிலப் படைப்பாக்கங்களில் எனக்கு அதிக ஈடுபாடில்லை. இந்திய மொழிகளில் எழுதப்படும் மிகச் சிறந்த இலக்கிய நூல்களுடன் ஒப்பிடும்போது ஆங்கிலத்தில் எழுதப்படும் இந்திய - ஆங்கிலப் படைப்பாக்கங்கள் மிகச் சாதாரணமானவை என்பது என் கருத்து.

நான் தமிழில் எழுதும்போது என் வாசகன் யாரென்று எனக்குத் தெரியும். எங்கள் இருவருக்குமிடையே உள்ள பண்பாட்டுப் பிணைப்பு, உள்ளீடுகள் ஆகிய எல்லாவற்றையும் என் எழுத்துக்கும் நுண்மையையும் (Subtlity) நாசூக்கையும் (Sophistication) ஏற்படுத்தித் தருகிறது. ஆங்கிலத்தில் நான் எழுத நேர்ந்தால், வேறொரு பண்பாட்டு வாசகனை உட்கொண்டு எழுத வேண்டிய நிர்பந்தம் பல மனத்தடைகளை உருவாக்கி, என் எழுத்தின் இயல்பான தன்மையைப் பாதித்து, அதற்கு ஒரு குறுக்குச் சுவராக நின்றுவிடக் கூடிய வாய்ப்பு உண்டு.

நான் ஏன் எழுதுகிறேன்?

ஒரு நிகழ்வு என்னை என் பாரம்பரிய உள்ளமைப்புத் தோற்றம் (genetic make-up), நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலை, என் அனுபவம் என் உளவியல் உருவாக்கம், என் எதிர் வினைப்பாடு, (response), என் கல்வி ஆகியவற்றுக்கேற்ப என்னைப் பாதிக்கின்றது. இவற்றால் விளையும் என் சிந்தனைகளையும், உணர்வுகளையும், உரத்து எண்ணுவதைக் காட்டிலும் நான் மற்றவர்களுடன் பகிர்ந்து, கொள்ளுதலையே விரும்புகிறேன். ஒரு காற்றாடி பறப்பதற்கு எதிர்க்காற்று தேவைப்படுவதைப் போல், எனக்கு ஒரு வாசகன் தேவை. இலக்கியம் தனிமொழியன்று; உரையாடல். மார்ட்டின் பூபர் (Martin Buber) சொல்வது போல், இது ஒரு 'நான்-நீ' பிணைப்பு.

'நான் - நீ' எனும்போது, எழுதுவது என்பது ஒரு சமூகப் பொறுப்பாகவும் ஆகிறது. 'பொறுப்பு' (responsibility) என்பதைச் 'சார்பு'டன் (Commitement), குழப்பப் படுத்திக் கொள்ளக் கூடாது. 'சார்பு' என்ற சொல்லில் அரசியல் மணம் வீசுகிறது. கோட்பாடுகளுடன் (political ideology) இணைத்துப் பேசப்படுவது. எக்காலத்துக்கும் பொருந்துவதான நிரந்தரக் கோட்பாடு என்று எதுவுமே கிடையாது. பழையன கழிதலும், புதிய புகுலுந்தான் நிரந்தரம். எழுத்தாளன் தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டேயிருக்கவேண்டும். "நிகழுங் கணம், கடந்து போன கணத்தைப் பார்த்து, 'யார் இந்த அயலான்?' என்று கேட்கின்றது" என்பது ஒரு பர்ஸியமொழிக் கவிதையில் வரும் வரிகள்.

கீழ்வெண்மணியில் ஒடுக்கப்பட்ட மக்கள் எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கதைக் கருவாகக் கொண்டு, நான் 'குருதிப்புனல்' எழுதினேன். மனித நேயம் அறவே அற்றுப் போனால்தான் இத்தகைய கொடூரமான சம்பவங்கள் நிகழும். அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் மட்டுமல்லாமல், இந்நிகழ்வு மனிதநேயம் சம்பந்தப்பட்ட செய்தியும் ஆகும். மனிதநேயம் எனும்போது, தனிப்பட்ட மனிதர்கள், ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையில் எப்படி உருவாகின்றார்கள் என்பதையும் பல பரிமாணங்களில் பார்க்க வேண்டும். எல்லாவற்றையுமே கறுப்பு வெள்ளையாகப் பார்ப்பது, பார்வைக் கோளாறு. இந்தப் பார்வைக் கோளாற்றின் காரணமாக, இந்த நாவல் (குருதிப்புனல்) வெளிவந்த போது, அது கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியது. விமர்சனம் செய்தவர்கள் 'நடந்த சம்பவத்தை உள்வாங்கிக் கொண்டு நிஜமனிதர்கள் கற்பனைப் பாத்திரங்களாக ஒரு படைப்பில் உருவாகும்போது, அவை படைப்பாளிக்குச் சொந்த மானவையே தவிர, யதார்த்தத்துக்கும் அவைகளுக்கும் சம்பந்தம் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை' என்ற விமர்சன அரிச்சுவடியை மறந்து விட்டார்கள் என்பதுதான் வருந்தத் தக்கது.

ஆதம் வாஷ்க் (Adam Waszk) என்ற போலந்து கவிஞன் பாடினான்:

1. சர்வாதிகாரி சொன்னான்:
'புரட்சிக்குப் பிறகு
ஆழ்கடல் பாற்கடலாகும்!
குருதி வெள்ளத்துக்குப் பிறகு,
என்ன நடந்தது?
கடல் நீரைக் குடித்தார்கள்
கரித்தது.
'பாற்கடல்' என்று கூக்குரலிட்டார்கள்.

2. சர்வாதிகாரி சொன்னான்:
புரட்சிக்குப் பிறகு
'விரலை வெட்டிக் கொண்டால்
வலிக்காது'
குருதி வெள்ளத்துக்குப் பிறகு,
விரலை வெட்டிக் கொண்டார்கள்.
வலித்தது!
நம்பிக்கையையும்,
தெய்வத்தையும் பறிகொடுத்தார்கள்!

அதனால்தான் சொல்லுகிறேன் எழுத்தாளன் என்ற வகையில், நான் எந்த சித்தாந்தத்துக்கும் அடிமையாகவில்லை. பிரச்சனைகள் என் மனத்தில் ஏற்படுத்துகின்ற சலனங்களை, என்னைப் படிக்க விரும்புகின்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

இராமன் மீதுள்ள ஆசையினால் கம்பன் இராமன் கதையைச் சொன்னானே தவிர, ஒரு மில்டனின் 'கடவுள் வழிகளை மனிதர்களுக்கு நியாயப்படுத்திக் காட்டவேண்டுமென்ற சமயக் கோட்பாட்டு வெறி' அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

என் கதைகள் மூலம் உங்களுடன் பேசுகிறேன். நீங்கள் கேட்கலாம், கேட்காமலிருக்கலாம். வள்ளலார் கூறியது போல், 'கடையை விரித்தேன், கொள்வாரில்லை' என்ற ஆதங்கமும் எனக்கு ஏற்படாது என்று உறுதியாகச் சொல்லுகிறேன்.

கந்தசாமி, சா.

என் கதைகளை நானே கேட்பது அவ்வளவு உசிதமாக எனக்குப் படவில்லை. கதை எழுதுகின்ற ஒரு மனோநிலையும் அதைக் கேட்கின்ற மனோநிலையும் ஒன்றாக இருப்பது இல்லை. அது யார் படித்தாலும் சரி. அநேகமாக நான் என் கதைகளை அச்சில் போட்டபின்பு படிப்பதை விட்டுவிடுவது உண்டு. அச்சில் போடுவதற்கு முன் இரண்டு அல்லது மூன்று முறை நானே படிப்பது உண்டு. ஆயினும் அச்சில் ஒரு கதை வந்துவிட்டால் படிக்கக் கூடிய ஒரு மனப்பக்குவம் வருவதில்லை. படிக்கிறபோது பல நேரங்களில் வெட்கமாகவும் 'இது நாம் செய்த காரியமா' என்ற உணர்ச்சியும் கூட என் கதைகளால் ஏற்படும். இம்மாதிரியான உணர்வு தான் எனக்குத் தோன்றியது இங்கு கேட்கிறபோது. ஆயினும் இந்தக் கதைகளில் இருந்து ஒரு விஷயம் எனக்குத் தோன்றியது. அதாவது இந்த 'காலம்' என்கிற விஷயம்.

சரித்திரத்தை என் கதைகளில், நாவல்களில் தொடர்ந்து பயன்படுத்தியிருக்கிறேன். ஒரு விஷயமாக எனக்குத் தோன்றுகிறது. என் முதல் நாவல் ஒரு காலத்தை பற்றிய நாவல்; அந்த நாவலை எழுதுகின்ற போது எனக்குக் கிட்டத்தட்ட 25 வயது அப்பொழுது. நான் அந்த நாவலை ஒரு நாவல் எழுதவேண்டும் என்று எனக்கு நானே தீர்மானித்துக் கொண்டு எழுதினேன். எப்பொழுதும் இந்தக் கேள்விகளை எனக்கு நானே கேட்டுக் கொள்கிறேன். கேள்விதான். கதை எழுதவேண்டும் என்று யாரும் என்னைக் கேட்பதில்லை. நான் என்னைக் கேட்டுக் கொள்கிறேன். "கந்தசாமி நீ ஒரு நாவல் எழுதவேண்டும்" என்று என்னையே நான் அடிக்கடி கேட்டுக் கொண்டது உண்டு. இன்றைய தினம் வரையில் நான் அவ்வாறு எனக்கு நான் கேட்டுக் கொண்டுதான் நாவல் எழுத தீர்மானித்தேன்.

நான் தமிழில் அனேகம் புத்தகங்கள் படித்தேன். அப்போது எனக்கு ஆங்கிலம் சரியாகப் படிக்க வராது. நான் தமிழில் தான் பலநூல்களைப் படித்தேன். தமிழில் என்றால் நான் நாவல் படித்தேன்; சரித்திரம் படித்தேன். அனேகமாக எனக்கு அப்போது விஷேசமாகக் கிடைத்த புத்தகங்கள் என்று சொல்ல வேண்டும் என்றால் வெ. சாமிநாத சர்மா உடைய புத்தகங்கள் எனக்குக் கிடைத்தன. ஜவகர்லால் நேரு உடைய உலகச் சரித்திரமும் எனக்குப் படிப்பதற்குக் கிடைத்தது.

அதற்கு முன்னால் எனது வீட்டில் எனது சகோதரர் தி.மு.க.வில் ஈடுபாடு கொண்டவர்; முரசொலியும், திராவிட நாடு பத்திரிக்கையும் என் வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுத்தார். நான் அவற்றை எல்லாம் படிக்கப் படிக்க, எனக்கு வெ. சாமிநாத சர்மா புத்தகங்களே பிடித்தன. ஜவகர்லால் நேரு புத்தகங்களைப் படிக்கிற போது வேறு வேறு விஷயங்கள் எனக்குத் தெரிய ஆரம்பித்தன. அந்தக் காலக்கட்டத்தில் உவே. சாமிநாத ஐயரின் **என் சரித்திரம்,** அவருடைய குருவைப்பற்றி - மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பற்றி எழுதிய சரித்திரம் எனக்குப் படிப்பதற்குக் கிடைத்தது. பிறகு எனக்கு ஐரோப்பிய நாவல்கள் குறிப்பாக **நிலவளம்** என்ற நாவல் (கா.நா.சு மொழி பெயர்த்தது) படிப்பதற்குக் கிடைத்தது. **அன்பு வழி** என்ற ஒரு நாவல், **பாரபஸ்** என்ற பெயரும் உண்டு. இப்படிப் பல நாவல்கள் படிப்பதற்குக் கிடைத்தன. பிறகு இந்திய நாவல்கள் தாகூர், பிரேம்சந்த், சரத் சந்திர சட்டர்ஜி என்று பலருடைய நாவல்கள் படிக்கக் கிடைத்தன; உருதுவிலிருந்து கிடைத்த நாவல்கள்; எனக்குப் படிப்பது என்பது மிகப்பெரிய உற்சாகமான காரியமாய் இருந்தது. எனது வீட்டில் அப்பொழுது மண்ணெண்ணெய் விளக்குத்தான்; சிம்னி விளக்கு. அந்த சிம்னிவிளக்கில் அநேகமாக நான் பல இரவு இரண்டு மணி மூன்று மணிவரையில் இந்த நாவல்களை எல்லாம் படித்தேன்.

படிக்கப் படிக்க தமிழிலே அப்போது பல- நாவல்கள் கிடைத்தன. இந்த நாவல்களில் பிறமொழி நாவல்களுக்கும் தமிழ் நாவல்களுக்கும் இடையில் அப்போது அதிகமாக வித்தியாசம் இருப்பதை நான் உணர்ந்தேன். என்ன? இந்த நாவல்கள் இவ்வளவு ஒரு தரமற்று இருக்கிறதே என்று எனக்குள்ளேயே ஒரு தரத்தை நான் தீர்மானித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இவற்றை எல்லாம் படித்த பொழுது இவ்வாறு நான் எழுதக் கூடாது என்ற ஒரு விஷயம் தான் முதலில் நான் கற்றுக் கொண்டேன். அதோடு எதை எழுதக்கூடாது என்பதையும் முதலிலே நான் கற்றுக்கொண்டேன். நான் மிகச்சிறந்த முறையில் எழுதியிருக்கிறேன் என்று ஒரு பொழுதும் சொல்வதற்கு இல்லை. எனக்கு இவற்றை எல்லாம் படித்த பொழுது நான் எவ்வாறு நாவல் எழுதுகிறேன் என்பதற்கு ஒரு பயிற்சியாகத்தான் எழுதுகிறேன். கிட்டதட்ட எனது நாவல் எந்தப்பக்கத்தில் முடிகிறதோ, உண்மையாக அந்தப் பக்கத்தில் தான் தொடங்குகிறது என்று எண்ணுகிறேன். ஒரு கதையினுடைய முடிவுதான் இந்தக் கதையினுடைய தொடக்கம்; தொடங்குவதற்காகத்தான் இந்த நாவலும் சிறுகதையும். கடைசிபக்கத்திலிருந்து தொடங்குகிறது என்று தான் நான் இன்னமும் கருதுகிறேன்.

ஒருவேளை எனது நினைப்பும் எனது செயலும் ஒன்றாகப் போகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் நான் நினைத்துச் செய்கின்ற காரியம் அது. எனது முதல் நாவல் **'சாயாவனம்'** எங்கு முடிகிறதோ அங்கு தான் நாவல் தொடங்குகிறதாக நான் கருதுகிறேன். இந்த நாவலைத் தொடங்குவதற்கு அப்போது 200 பக்கங்கள் நான் எழுதினேன்.

பிறகு இந்தப் படிப்பு எனக்கிருந்தது; கொஞ்சம் வேதம் எல்லாம் படித்தேன்; உபந்நிடதங்கள் படித்தேன். பல மேதாவிகளாக இருந்தவர்களுடையதைப் படித்த போது எனக்கு விவேகானந்தர் போன்றோர் புத்தகங்கள் தெம்பூட்டின. எனவே கேள்விதான் எனக்கு முக்கியம். கேள்விக்கான பதில் முக்கியம் இல்லாமல் போய்விட்டது. எப்போதும் கேள்வியில் இருக்கின்ற ஒரு அர்த்தமும் ஒருவேகமும் பதிலில் இல்லாமல் போய்விடுகிறது என்பது அந்தப் புத்தகங்களைப் படித்த போது தெரிந்தது. அப்போது 1965-ல் அவருடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அவருடைய ஒரு பத்து தொகுதிகள் எனக்குக் கிடைத்தன. அந்த பத்துப் புத்தகங்களையும் படித்தேன். பிறகு எனக்குக் கிடைத்த ஒரு விஷேசமான புத்தகம் **The Caste and Tribes in Southren India** என்ற ஒரு புத்தகம்; எட்கர் தர்ஸ்டன் எழுதியது; அது பற்றிய ஒரு குறிப்பு எனக்குக் கிடைத்தது; குறிப்பு கிடைத்த பிறகு பாலிகா என்பவர் தஞ்சாவூர் Manual ஒன்றை எழுதியளித்தார். அந்த Manual-ஐ நான் படித்தேன்; அப்போதைய படிப்பு என்பது நாவலை எவ்வாறு எழுதுவது என்பதற்கான ஒரு அடிப்படையைக் கொடுத்தது. வாழ்க்கைக்கும் நாவலுக்கும், விஷேச வேறுபாடு இல்லை என்பதை நான் கற்றுக் கொண்டேன். அப்போது நாவல் என்பது தமிழில் அநேகமாக எனக்குக் கிடைத்த நாவல்கள். பிறகு தமிழிலும் சிறந்த நாவல்கள் கிடைத்தன. ஆயினும் இந்த நாவல்களை எல்லாம் படிக்கிற போது நாம் இந்த மாதிரி நாவல்களை எழுதக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டிருந்தேன். தீர்மானித்துக் கொண்டிருந்த போது எனது குடும்பத்தில் எனது தாயாருடைய கதை, அது தான் **சாயாவனம்.** அவருக்கு இருந்த ஒரே சகோதரன் சிங்கப்பூருக்குச் சென்று திரும்பி வராமலேயே போய்விட்டார். என் தாய் மாமன் திரும்பி வந்தால் என்ன செய்வார் என்பதை ஒரு கதையாக அடிக்கடி சொல்வார். இதோடு, அசோக்மேத்தா அவர்கள் பர்மாவில் நடைபெற்ற சோசலிஸ்ட் மாநாட்டில் சமர்ப்பித்த ஒரு அறிக்கை எனக்கு கிடைத்தது; அதில் அவர் எழுதியிருந்தார்; பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் இந்திய விவசாயிகளிடம் முதல் முறையாக The Commercial Crop (அதாவது பணப்பயிர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான்) வந்தது என்று ஒரு விஷயத்தை எழுதியிருந்தார்.

எனக்கு இதெல்லாம் மனசுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. எனது குடும்பத்துக் கதையையும் இந்தப் பணப்பயிர் எவ்வாறு வந்தது என்பதையும் ஒரு பின்னணியாக வைத்து ஒரு பெரிய நாவல் எழுதலாம்னு நினைத்தேன். அதாவது தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடு சென்றவன் திரும்பி வந்து தனது மூதாதையரின் ஊரில் தான் பிறந்த ஊரில் கொஞ்சம் நிலம் வாங்கி ஒரு பேக்டரி வைத்து, அதனால் அந்த ஊரில் எவ்வாறு எல்லாம் மாறுதல் உண்டாகின்றது என்பதை ஒரு ஆயிரம் பக்கம் நாவல் எழுதலாம் என்று தீர்மானித்துக் கொண்டு நான் எழுதுவதற்கு ஆரம்பித்தேன்.

எனக்கு அப்பொழுது 25 வயது இருக்கும். அந்த நாவலை ஒரு பத்து பதினொரு நாட்களில் வேக வேகமாக எழுதி முடித்தேன். எழுதி முடித்த பிறகு ஒரு கட்டத்தில் அந்த நாவலை எனக்கு அதற்கு மேலே எழுதுவதற்கு வரவில்லை. மூடி வைத்துவிட்டேன். பிறகு இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து மறுபடியும் படித்துப் பார்த்த பொழுது நாவல் அங்கேயே முடிந்தது என்று தோன்றியது. ஆயிரம் பக்கத்தில் எதைச் சொல்ல வேண்டுமோ அந்த விஷயம் இருநூறு பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வாசகர்களுக்குத் தெரியும் என்று நான் கருதிக் கொண்டேன். இப்பொழுது அதிகமாகப் பேசப்படுவது சுற்றுப்புறச்சூழல் (Environmental) பற்றித் தான். இதுதான் இன்றைய அடிப்படையான ஒரு விஷயம். அப்பொழுது இந்த மாதிரியான வார்த்தைகள் கிடையாது. அதாவது தேவைக்காக என்ன செய்வது, அதாவது தற்காலிகமான தேவைக்காக செய்யப்படுகின்ற காரியம், பிறகு எவ்வாறு மாறும் என்பது ஊடகமாக அந்த நாவலில் சொல்லப்படுகிறது. இதுதான் எனது முதல் நாவல்.

இந்த நாவலை எழுதுகிற போது ஒரு காலம் வேண்டும் என்று நினைத்தேன். இந்த நாவல் எந்தக் காலத்தில் நடைபெறுகிறது என்பதை நான் சொல்ல வேண்டும் என்று முக்கியமாகக் கருதினேன். ஆயினும் அதை 1901-1902 என்றோ எழுதக்கூடாது. இந்த நாவலில் இந்த காலம் என்பது வரவேண்டும் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். அப்போது பேசிக் கொள்வார்கள் அந்த ஊரிலே சூரத்தில் காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது. வ.உ.சி. செல்கிறார்; பாரதியார் செல்கிறார்; நமது ஊரிலிருந்து ராம ஐயங்கார் போகிறார்; அவர்கள் எல்லோருக்கும் பணம் கொடுத்து அவரை சென்னைக்கு அனுப்பிவிடுகிறார்கள் என்று ஒரு விதமான குறிப்பு வரும். அதை நண்பர் படித்துவிட்டு 'ஒரு நாவலாக ஆக்க வேண்டும் என்றபோது இந்த பகுதி அவசியம் இல்லையே தூக்கி விடுவோம் என்று கேட்டார். நான் சொன்னேன். அந்த நாவலுடைய அடிப்படை எந்த காலத்தில் நடைபெறுகிறது என்று சொல்வதற்குத் தான் இந்த

விஷயம் ஒரு விதமான பூடகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை எடுத்து விட்டால் அந்த நாவலுடைய முகம் இல்லாமல் போய்விடும் என்றேன். இது தான் எனது அடிப்படையான கொள்கை.

குழந்தையைப் பற்றி அதிகமாக எழுதி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மனிதனுடைய மூளை வளர்ச்சி என்பது மூன்று வயதுக்குள் முடிந்து விடுகிறது என்றும் அதற்கு அப்பால் அவனுடைய வளர்ச்சி எல்லாம் இயந்திர வளர்ச்சிதான் என்றும் சொல்கிறார்கள். இதையெல்லாம் சரி தவறு என்று சொல்வதற்கில்லை. எனது நாவல்களைக் கிட்டதட்ட நான்தான் இந்த நாவல் எழுதுகிறேன். நான் என்ற 'I' என்பது என்னை மட்டும் பொருத்த விஷயம் அல்ல என்று கருதுகிறேன். எனது நாவல் உங்கள் கதையாகவும் நாம் எல்லோருடைய கதையாகவும் எவ்வாறு ஆகவேண்டும் என்ற அடிப்படையில் எழுதுகிறேன். நான் எழுதுகின்ற எல்லா நாவல்களிலும் 'நான்' இதிலே அடங்கியிருக்கிறேனா என்பது எல்லாம் கேள்விக்கான விஷயம். நான் எழுதுகிற பொழுது என் கதையாகத் தொடங்கி அதை நம்முடைய கதையாகத்தான் நான் முடிக்கிறேன். முடிக்கிற போது அது நம்முடைய கதையாக எவ்வாறு ஆகிறது என்று குறிப்பிட வேண்டும். ஒரு தனிமனிதனுடைய வாழ்க்கையைப் போல இந்தக் கதையைத் தொடங்கி, பின்னர் இந்தக் கதை தனிமனிதனுடைய வாழ்க்கையாக இல்லாமல் எல்லோருடைய வாழ்க்கையாகவும், அமைகிறது.

இங்கு நான் மொழியைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். மொழி மீது எனக்குரிய பார்வை என்ன என்று சொல்வதொன்றால் நமது சங்க இலக்கியம் காட்டும் நமது மரபுகளை எனது சிறுகதைகளில் பயன்படுத்துகிறேன். சிலப்பதிகாரத்திலிருந்து பலபகுதி எனக்குப் பயன்படுகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி இரண்டு முறைகள் தான் பேசுகிறாள். புகார் காண்டத்தில் பீடுஅன்று ஒருமுறை சொல்லுகிறாள். அதற்கு முன் அவளுக்குப் பேசத்தெரியுமா என்பது தெரியவில்லை. ஆயினும் வழக்குரை காதையில் அவள் ஒரு துப்பாக்கி போல் வெடிக்கிறாள். ஒரு கவிக்கு தன் கதாபாத்திரம் எங்கு பேசவேண்டும் என்பது தெரிந்திருக்கிறது. எங்கு பேசவேண்டும் எங்கு பேசக்கூடாது என்று மிகவும் தீர்மானமாக இருக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை எவ்வாறு நாம் பிரயோகிக்க வேண்டும் என்பது முக்கியம்.

நான் எழுதுகின்றபோதெல்லாம் எனது அறிவை உபயோகிப்பது இல்லை. அறிவில்லாமல் எழுதவேண்டும் என்று எனக்கு நானே விதித்துக் கொள்கிற விதி. இதை எவ்வாறு விளக்குகிறதென்றால்

ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். ஒரு மரத்திலிருந்து பூவோ இலையோ கீழே விழுந்தால் எவ்வாறு காற்றுக்கோ அந்த இலைக்கோ காயம் இல்லாமல் கீழே விழுகிறதோ அதே மாதிரியான ஒரு எளிமை - நம்மிடமிருந்து செல்கிற ஒரு விஷயம் - இருக்க வேண்டும். நம்முடைய அறிவைச் சார்ந்து பிறர் இருக்கிறார்கள். அறிவால் எழுதப்பட்ட எல்லா எழுத்துக்களும் நிராகரிக்கப்படுகின்றன. மகாத்மாகாந்தியை நான் மாபெரும் அறிவாளி என்று சொல்வதில்லை. ஆயினும் மாபெரும் சிந்தனையாளர்கள் இப்பொழுது டால்ஸ்டாயைப் படிக்கிற போது அவரிடம் இருந்து கற்றுக் கொள்கிற ஒரு விஷயம் அவருடைய எளிமை. அதை எவ்வாறு அடைவது? மிகபெரிய நாவல்கள் எழுதலாம். அந்த தொனியை நாம் எவ்வாறு அடைவது? நம்மிடையே வந்து போகிற கதாபாத்திரங்களுடைய விஷயங்களை எவ்வாறு செய்வார்கள். அதாவது எனக்கு Clever Conversation என்பது பிடிப்பதில்லை. எனக்குப் பேசுவது எப்படி என்று தெரியாது; பேசவே தெரியாது. எல்லா நேரங்களிலும் நாம் வீட்டிற்குப் போன பிறகு நினைத்துக் கொள்வோம். ‘நாம் இவ்வாறு பேசியிருக்கக் கூடாது’ என்று நினைத்து கொள்வோம். பிறகு அடுத்த நாளைக்கும் அவ்வாறே பேசிக் கொள்வோம். அது போன்று தான் என் கதாபாத்திரங்களும். அவர்கள் அறிவாளியாக ஒரு வார்த்தைகூட பேசுவதில்லை. அதாவது புத்தர் சொன்னார். ‘இவர்களுக்கு இப்படியும் போகத்தெரியவில்லை; அப்படியும் போகத் தெரியவில்லை. ஒரு மத்திம வாழ்க்கையில் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய அனுபவம் உங்களுக்குத் தெரிந்ததே என்பதை அவர்கள் வார்த்தைகளால் சொல்வதில்லை. அவர்கள் தங்களுடைய செயல் மூலமாக அவற்றை வெளிப்படுத்துகிறார்கள்.

என் நாவல்களில் அநேகமாக எனது எல்லாப் படைப்புகளிலும், நான் சொல்ல வருகின்ற ஒரே விஷயம் இவற்றை வார்த்தைகளால் சொல்வது அல்ல; வார்த்தைகள் இருக்கின்றன; வார்த்தைகளைக் கொண்டே வார்த்தைகள் இல்லாத உலகத்தை எவ்வாறு சிருஷ்டிப்பது? அதற்கு எனது எல்லாக் கதைகளிலும் கிட்டதட்ட 500, 600 வார்த்தைகள் மூலம் எல்லா நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதுகிறேன்.

தொனி தான் எனது இலக்கியத்தின் அடிப்படை. தொனியை எவ்வாறு கைப்பற்றுவது என்பது தான் முக்கியம். இது பல நேரங்களில் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.

இலக்கியம் உரைநடையில் எழுதப்பட்ட பிறகு மாயூரம் வேதநாயகம் பிள்ளையிலிருந்து உரைநடை வாழ்க்கை தொடங்கியது.

இந்த உரைநடை தொடங்கிய பொழுது நாவல் எழுதுவதற்குத் தகுதியற்றவர்கள் இல்லாவிட்டால் இவற்றை எவ்வாறு சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை இப்பொழுது தைரியமாக சொல்லலாம். மறைமலைஅடிகள், திருவிக போன்றவர்கள் படைப்பு இலக்கியத்திற்குப் பயன்படாத எழுத்தாளர்கள். இவர்களை முன் மாதிரியாகக் கொண்டு பலர் எழுதுவதற்குத் தொடங்கினார்கள். நாவல் என்ற பெயர் கொண்டது எல்லாம் நாவல் அல்ல. நமக்கு முன் பெரிய மனிதர்கள் வேறு வேறு துறையிலே அவர்கள் பிரபலமானபின் நாவல் எழுதவும் தொடங்கினார்கள். அதே காலத்தில் நாவல் எழுதுவதும் படிப்பதும் ஒழுக்கக் கேடாகக் கருதப்பட்டது. அதுபற்றி திரு.வி.க. அவர் தம் வாழ்க்கைக் குறிப்பில் எழுதியிருக்கிறார். "நாவல் படிப்பது ஒழுக்கக்கேடு என்று அவருடைய ஆசிரியர் குறிப்பிட்டதாகவும் அதிலிருந்து அவர் நாவல் படிப்பதை விட்டு விட்டதாகவும்" அவர் வாழ்க்கைக் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

ஒரு நாவல் எழுதும் எழுத்தாளர் எழுதும் எழுத்தை அவர்தான் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும். மொழி தமிழாகத்தான் இருக்கும். அவருடைய அந்த உரைநடை இருக்கிறதே அது அவருடைய சொந்த மொழி. அவர் தன்னுடைய விஷயத்தை எவ்வாறு சொல்லுவது? எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்ற ஒரு அந்தரங்க மொழியில் தான் அதை எழுதுகிறார். எனது மொழி தமிழாக இருந்தாலும் நான் இந்தத் தமிழைக் குறைந்த பட்ச வார்த்தைகள் கொண்டு அந்தரங்கமான மொழியில் எழுதுகிறேன். அது ஒரு முயற்சி. இந்த முயற்சி எவ்வாறு வெற்றி பெறுகிறது என்று ஒரு பொழுதும் நினைப்பது இல்லை. அது புத்தகத்தின் வாசகர் என்று ஒரு பொழுதும் நான் கருதுவதில்லை. யார் இதைப் படிப்பார்கள் இதற்கு என்ன வரவேற்பு கிடைக்கும் என்பதுபற்றி, எழுத ஆரம்பித்த அன்றும் நினைத்ததில்லை. இன்றைக்கும் நினைப்பது இல்லை. எனது ஒரே ஒரு முயற்சி எவ்வாறு நம்மால் இன்னும் சிறப்பாக எழுத முடியும் என்பது ஒரு அக்கறையாக இருக்கிறது. வேறு எந்த ஒரு விஷயமும் என்னைப் பொறுத்த வரை முக்கியமல்ல.

எனது நாவல்களுக்கு எவ்வாறு எம்மாதிரியான விஷயங்களைப் பற்றி எழுதுவது என்பதை எல்லாம் எனக்கு நானே தீர்மானித்து கொள்கிறேன். எனக்கு மாபெரும் சாதனை புரிந்தவர்களைவிட சாமானியர்களுடைய வாழ்க்கை வாழும் சாமானிய மக்களைப்பற்றி சாமான்னியமான ஒரு தொனியில் எழுதினால் போதும் என்று நான் கருதுகிறேன். இதுதான் எனது எல்லா படைப்புகளிலும் திரும்பத் திரும்பக் காணப்படும் விஷயம்.

எழுத்தாளனுக்கு ஒரு முறையான படிப்பு இல்லாவிட்டாலும் கூட ஒரு பரந்துப்பட்ட படிப்பு அதாவது கேள்விப் படிப்பு வேண்டும். படிப்பு என்பது Knowledge. அறிவு - அறிந்து கொள்வது. இப்போது Internet, Encyclopaedia என்று எதைப்பற்றி வேண்டுமானாலும் தகவல்களை அறிந்து கொள்ளலாம். இந்தக் கேள்விப் படிப்பு என்பது என்ன? எங்கள் ஊரில் வாசகம் எழுதியிருப்பார்கள். நான் சிறுவயதில் பார்த்தது இராமலிங்க ஸ்வாமிகள் 'பால் தயிராக மாறுவது போன்று அறிவை ஞானமாக மாற்ற வேண்டும்' என்று கூறியதன் எழுத்தைத்தான் நான் எப்போதும் நினைக்கிறேன். இப்போது இந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? எவ்வாறு கட்டப்பட்டது? இதைப்பற்றிய அறிவை நாம் அறிய வேண்டிய அவசியம் இல்லை. நான் ஒரு 5000 ரூ. கொடுத்து செயலாளரை நியமித்து விட்டால் எனக்கு என்ன வேண்டும் என்று சொன்னால் அந்த செயலாளருக்கு அறிவு இருந்தால் எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுத்து விடுவார். இப்போது எனக்கு கம்ப்யூட்டர் இயக்கத் தெரிந்திருந்தால் இன்டர்நெட்டில் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம். இது ஒரு விதமான அறிவு. ஆயினும் அறிவு என்பது இது மட்டும் அல்ல. இந்த அறிவு, அதாவது இந்த உலகத்தில் மனிதனைப் பற்றி அறிந்தது எல்லாம் அறிய ஒன்னாது அவனது மூளையைப் பற்றித்தான் பிரதானமாக இருந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. அதிகமாக அறியப் படாதது மூளையைப் பற்றிய விஷயம்தான். இது மாதிரி மனோதத்துவ ரீதியில் இல்லாத ஒரு நாவலில், அவர் கோபமாக பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டிருந்தார் என்பது மாதிரியான வேடிக்கை வரிகள் தமிழிலே பல நாவல்களில் இருந்து என்னைக் அயர்ச்சி அடைய வைத்தன. அவற்றில் முக்கியமான விஷேசமாக இன்றும் படிக்கிற நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளையினுடைய பிரதாப முதலியார் சரித்திரம். பிரதாப முதலியார் சரித்திரத்தில் லேசான ஒரு சரித்திரம் கூட உண்டு. அது ஒரு முஸ்லீம் ஆட்சி செத்து ஆங்கில ஆட்சி வருகின்ற ஒரு கால கட்டத்தைக் காட்டும். கவிகள் எழுத்தாளர்கள் எல்லாக் காலத்திலும் சமூகம் சார்ந்தே இருந்துவந்து உள்ளார்கள். அதிகாரம், பிரபலம் என்பதைத்தவிர்த்து அதாவது கம்பன் காலத்தில் ஒட்டக்கூத்தனுக்குத் தான் சிறப்பிடம் இருக்கிறது என்று சொல்வார்கள். அதாவது மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ? என்று கேள்வி கேட்கிறவர்கள் தான் இப்பொழுது முக்கியம். இம்மாதிரி எந்த நோக்கத்தையும் கருதாமல் எழுதப்படுகின்ற ஒரு மனோதைரியத்தை அவர்கள் அறிந்து பெற்றார்கள் என்று சொல்ல முடியாது. அறியாமலேயே அவர்களுக்கு ஒரு வேகம் வருகிறது.

நமது இந்தியாவில், குறிப்பாக நமது தமிழ் நாட்டில், நமது பல்கலைக் கழகங்கள் 1850-ல் தொடங்கியது என்று சொல்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகங்கள் தோன்றிய பிறகுதான் படிப்பு எல்லோருக்கும் கிடைத்தது. இந்தப் படிப்பு மூலமாகத்தான் அடிக்கடி ஒரு கேள்வி கேட்கிறோம். இந்த மாதிரியான முறையான படிப்பு பெற்றவர்கள் எல்லாம் இந்திய மொழிகளில் அநேகமாக கவிகள், எழுத்தாளர்கள் என வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் இந்தக் காரியம் நிகழவே இல்லை. பல்கலைக்கழகங்களுக்கு அப்பால்தான் இலக்கியம் என்பது வரையறைப்பட்டிருக்கிறது. இது ஏன் என்று தெரியவில்லை. இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அநேகமாக இன்றைக்குத் தமிழ்நாட்டில் யாரிடமிருந்து தமிழைக் காப்பாற்றி விடவேண்டும் என்று சொன்னால் இந்தத் தமிழ் ஆசிரியரிடமிருந்து தான். அவர்களுக்கு நவீன இலக்கியம் மட்டுமல்ல; இலக்கியமே தெரியவில்லை. அவர்களுடைய மொழி அவர்களுடைய செயல்பாடு என்பது முற்றிலும் விரோதமாக இருக்கிறது. அவர்கள் புரிந்து கொள்வதில்லை. இந்தக் காரியத்தை இந்தியாவில் எந்த மொழியிலும் பார்க்க முடியாது.

இந்தியாவில் 1800 ஆண்டுகளுக்குப் பிறகுதான் முதல் நாவல் வந்தது. இந்த முதல் நாவலில் இருந்து எல்லா இந்திய மொழிகளிலேயும் நாவல் எழுதுகிறார்கள், சிறுகதை எழுதுகிறார்கள் என்று ஒவ்வொரு மொழியிலேயும் ஐந்து, ஆறு பேர்களை ஏகமனதாகத் தேர்ந்து சொல்கிறார்கள்.

ஆனால் தமிழில் விஷேசமானது; ஐந்து பேரும் ஆளுக்கு ஐந்து ஐந்து பேர் கொண்ட பட்டியல் கொடுக்கிறார்கள். ஏனென்றால் தமிழ் தனித்தன்மை வாய்ந்தது என்ற தனிக்கருத்து உடைய தனியாளாக இருக்கிறார்கள். ஒரு சமயத்தில் ஒரு அமெரிக்கர் எங்களை வந்து சந்தித்தார். 20 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் பத்திரிக்கை நடத்திக் கொண்டிருந்த போது அவர் மதுரைப் பல்கலைகழகத்தில் அவர் ஓர் ஆய்வு நடத்திக் கொண்டிருந்தார்; அவர் வந்து பார்த்துவிட்டுச் சொன்னார் "எனக்கு அநேகமாக உலகம் முழுவதும் எல்லாப் பல்கலைக்கழகங்களுடனும் தொடர்பு இருக்கிறது. எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இலக்கியம் என்பது பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் இது பல்கலைக்கழகத்திற்கு அப்பால் இருக்கிறது, ஏன்?" என்று கேட்டார். நாங்களும் இதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஏன்? என்ன காரணம் என்று எனக்குத் தெரிய வேண்டும். கன்னடத்தில் ஏ.கே.ராமானுஜம் சொல்லுகிறார். 'எங்களுக்குப் புதிய

கவிதையை ஸ்தாபித்து கொடுத்தவர் ஸ்ரீகண்டையா. இன்று கன்னடத்தில் எழுதக்கூடியவர்கள் அநேகமாக ஆங்கிலப் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அத்தகைய ஆர்வம் இல்லை. படிப்பவர்கள் படைப்பாளிகள் எல்லாம் சொல்லுகிறார்கள். நான் மைசூரில் உள்ள Indian Language Institute-ல் உள்ள பலரிடம் பேசிக்கொண்டிருந்தேன்; இரண்டு தமிழர்கள் இருந்தார்கள். 'நான் தமிழ் படிப்பதில்லை; என் மனைவி படிப்பாள்' என்று சொன்னார்கள். தமிழில் படிப்பதை அவர்கள் கேவலம் என்று சொல்கிறார்கள். அவர்களுடைய புலமை புதுமைக்கு விரோதமாக உள்ளது. 'இதுதான் திரு.வி.க.வுடைய மனோநிலை என்பதாகும். என்றைக்கும் அவர்களுடைய மனைவி என்பவள் ஒரு மூன்றாம் தரமான பிரஜை. இவருடைய காரியத்தில் மனைவியைப் படிப்பது மகளைப் படிப்பது எல்லாம் மூன்றாந்தரமானவை. இவர்களுக்குப் பக்தி புஸ்தகங்கள் தான் தெரியும். எங்கேயாவது ஒரு குறிப்பைப் படித்துவிட்டு ஆங்கிலத்தில் கேட்டால் ஒருபட்டியல் சொல்வார்கள். சுயமாக இன்றைக்குத் தமிழ்நாட்டில் அடிக்கடி கேட்கிற தமிழ் எழுத்தாளர்கள் பத்துபேர் நாவல்களை பெயர் எழுதிக் கொடுங்கள் என்று யாராவது கேட்டால் இரண்டு பேர்களுக்கு மேல் அவர்களிடம் சாத்தியமில்லை. ஏன் என்றால் தமிழகத்தினுடைய எழுத்து நிலை அவ்வாறு இருக்கிறது.

அரசாங்கத்திற்கும் இலக்கியத்திற்கும் சம்பந்தம் இருக்கிறது. எல்லா மொழிகளிலும் அரசாங்கம் இலக்கியத்தினோடும் மொழியுடனும் சம்பந்தப்பட்டிருக்கும். தமிழ்நாட்டில் மட்டும்தான் கூக்குரல் அதிகமாகவும் காரியங்கள் குறைவாகவும் இருக்கிறது. இதைச் சொன்னால் கோபித்துக் கொள்வார்கள். யாருடைய கோபம் யாருக்கு என்பதெல்லாம் இருக்கட்டும். ஆயினும் தமிழிலிருந்து மிகச் சிறந்த புத்தகத்தை மொழி பெயர்ப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

நான் சென்ற மாதம் ஒரு ஜெர்மன் பேராசிரியரைச் சந்தித்தேன். அவர் சொன்னார். 'நீங்கள் எல்லாம் இவ்வளவு தூரம் வருத்தப்படத் தேவையில்லை. எங்கள் ஊரில் காப்காவை நூறு பேருக்குக் கூட தெரியாது. எல்லாருக்கும் அப்படித்தான். இது ஜனநாயக நாடு அவர்கள் படிப்பதற்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறது. எனது எழுத்தைப் படிப்பதற்கும் படிக்காமல் இருக்கவும் எல்லாருக்கும் உரிமை உண்டு. யாரையும் படிக்கச் சொல்வதற்கோ எழுதுவதற்கோ ஒரு எதிர்பார்ப்பு தேவையில்லை. ஒரு எழுத்தாளனுடைய வேலை எழுதுகின்ற காரியம் மட்டும் தான். ஏனென்றால் சமுதாயத்தின் மீது அவனுக்கு அதிகமாக அக்கறை இருக்கிறது. சமுதாயம் அவன்

மீது அக்கறை கொள்கிறதா? என்பது வேறு கேள்வி. இந்தக் கேள்விகளுக்கு அவரவர் தான் பதில் சொல்லி தெளிவு கொள்ள வேண்டும்.

எப்படி எழுதினது என்பது முக்கியம் இல்லை. எப்படி எழுதப்பட்டு உள்ளது என்பது தான் முக்கியம். நான் குறிப்பாக என் கதைகளைப் பல முறைகள் இரண்டாவது முறையாக எழுதிப்பார்ப்பேன். மூன்று முறை எழுதி கூட எழுதி பார்ப்பேன்; பெரிய மாறுதல்கள் ஒன்றும் இருப்பது இல்லை. அங்கங்கே ஒன்றொன்று மாறும். என் நாவலில், கடைசி வரி முதலில் வரும். கடைசியிலிருந்து தான் நாவல் எழுதுவேன். ஏன் என்றால், என் நாவல் எப்போதும் முடிவுறா கதைகள். தொடங்குகிற கதையாகத்தான் எழுதுகிறேன். கடைசி வரி தான் தொடங்குவதற்கான முதல் வரி, அப்புறம் முடிவுதான் எனக்கு ஆரம்பம்.. அதை நோக்கி நான் முன்பு எழுதினேன். நல்ல வார்த்தை என்று இருந்தால் அதை எடுத்து விடுவேன். அது வந்து இந்தக் கதையோடு சேராமல் இருக்கும். கொஞ்சம் புத்திசாலித்தனமாக யாராவது பேசியிருந்தாலும் கேள்விக்கு பதில் சொல்லியிருந்தாலும் அதை எடுத்துவிடுகிறேன். அந்த வார்த்தைகள் எல்லாவற்றையும், படிக்கும் போதும் கேட்டோம். சார் என்ன என்று கேட்கிறார். நீ வந்து பொய் சொல்கிறாய். மார்க் எத்தனை? கணக்கு தப்பு என்று கேட்டால் "ஒருவருடம் சென்றது" என்ற சிறுகதை வாசிப்பில் அவன் 2 கணக்கு தான் சரியாக செய்து இருக்கிறான். கடைசி வரைக்கும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறான். அவனுக்குத் தான் செய்த காரியத்தின் மேல்தான் கவனம் இருக்கிறது. இதை மாதிரி விஷயங்கள் தான் எனக்கு; 50 கதாபாத்திரங்கள் பிறகு எங்கே நிற்கிறதோ அதைச் சாதிப்பதற்கு சொற்கள் மேல் நம்பிக்கை இல்லாமல் லேசாக சொல்லக்கூடிய முக்கிய விஷயமாக ஆகிவிடும். நான் தொலைந்து போனவர்கள் கதையில் ஒரு பகுதியில் எழுதி இருந்தேன். ஒரு பாத்திரம் ஐந்தாறு தடவை ச்ரி சரி என்று தான் சொல்லும். அவள் சொல்வாள் 'எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது. 'சரி' அப்படி என்று சொல்வான். குழந்தை பிறந்திருக்கிறது என்பாள். 'சரி' என்று சொல்வான். அவன் ஹோமில் இருக்கிறான் என்பாள், 'சரி' என்று சொல்வான். அவன் இப்போ வரப்போறான் என்பாள். 'சரி' என்பான். "அவன் முரட்டு பையன்". அவன் உங்களைப் பார்த்தால் சண்டை போடுவான் என்பாள், 'சரி' என்பான், இந்த 'சரி' என்கிற சொல் எல்லாவற்றிற்கும் மொத்தமாக சரி என்பது தான் பொருள். ஆனால் வருகிறபோது ஒரு சரி அல்ல; அது அதுக்கு ஒரு விதமான அர்த்தமும், மனிதனுடைய மனோநிலையும் வந்து வேறு வேறு

பொருளைக் கொடுக்கிறது, அந்த "சரி" என்ற சொல்லை எடுத்துப்பார்த்தால் ஆறுமுறைவரும். ஆனால் அந்த ஆறுமுறை வரும் "சரி" ஒரு சொல் அல்ல. அது உணர்த்தக்கூடிய பொருள் வந்து இன்னொரு பொருள். அதுதான் முக்கியமானதாக எழுதுகிற போதே தீர்மானமாக ஆகிவிடுகிறது. இந்தக் கதாபாத்திரம் வந்து இப்படி தான் இருக்கணும். இதனுடைய சூழ்நிலையை இதை வைத்துத் தான் தீர்மானிக்கிறது. நாவல் எழுதும் போதும், பெரிதாய் ஒன்றும் நிகழ்ந்து விடுவதில்லை.

நான் நாவல் தான் எழுதுகிறேன். அதுவும் முடிவுதான் ரொம்ப முக்கியம். அந்த முடிவை நோக்கித்தான் அந்த நாவலை எழுதுகிறேன். அந்த முடிவிலிருந்து தான் மற்றது தோன்றுகிறது என்பது முக்கியமான விஷயம். நான் எழுதுகிற எல்லா நாவல்களிலும் கடைசி வரியில் இன்னொரு 200 பக்கம் 300 பக்கம் எழுதக்கூடிய கதை உண்டு. ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிற 200 பக்கமும் இது முடிவதற்காக அல்ல ஒரு தொடக்கத்தை உண்டாக்குவதற்காக. எவ்வாறு ஒரு பூ காலை மாலை மலர்வது நிகழ்கிறது என்பது அது பரிபூரணமாக ஆகும் போது தெரியும். படிக்கிறபோது அது எப்படி பரிபூரணமாக ஆகிறது? இலக்கியத்தில் நிரந்தரம் அவசியமா? என்பது ஒரு கேள்வி. இலக்கியத்தில் என்ன கொண்டு வருகிறீர்கள்? வாழ்க்கையில் அரசியல் என்ன காரணத்தினால் இருக்கிறது என்று கேட்டால் இந்த காரணத்திற்காக என்பது. நாமாக ஏற்றுக் கொள்வது.

நான் என்னுடைய குடும்பத்தைப் பற்றி சொல்லனும் என்றால் நான் என்ன நினைக்கிறேன். என்னுடைய பையன் சரியில்லை என்று, என்னுடைய மகள் சரியில்லை என்று அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? நான் சரியில்லை. ஆதலால் யார் சரியில்லை? என்ன காரணங்களால் இது சரியில்லை? அவர்களுடைய நோக்கங்கள் என்ன? இந்த மாதிரி நோக்கங்களைச் சொல்லிவிட்டால் வாசகர்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்து விடலாம். நான் முக்கியமாகக் கருதுவது என்னுடைய அடிப்படை விஷயங்களிலிருந்து என்ன கருதுகிறேனோ அதை நினைக்குமாறு தூண்டிவிடும் காரியம்தான். நாம் எதை அவசியம் என்றும்- முக்கியம் என்றும், செய்ய வேண்டும் என்றும் கருதுகிறோமோ அந்தக் காரியத்தினுடைய பக்கம் படிக்கிறவர்களைக் கொண்டு வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். இந்த தந்திரம் 'எவ்வளவு தூரத்திற்கு தந்திரம் இல்லை' என்பதை ஸ்தாபிக்கிறது, அப்படிங்கறதுதான் இதில் முக்கியம். சில பேர்களிடம் நான் தந்திரமாக பேசுகிறேன் என்றால் என்னுடைய பேச்சில் அவர் புரிந்து கொள்வது என்னுடைய தந்திரத்தைத்தான். 'இவர் தந்திரமாகக் காரியம் பண்ணுகிறார்' என்று யாருகிட்டேயும் பேசினோம் என்றால்

அவர் உடனே புரிந்து கொள்கிறார். நம்முடைய சொற்களிலிருந்து நம்மைத் தீர்மானிக்கிறது இல்லை. நாம் சொல்வதற்கு முன்னேயே அவர்கள் தீர்மானிக்கிறார்கள். இது மாதிரி தீர்மானங்கள் இல்லாமல் எப்படி சாதிக்க முடியும் அப்படிங்கற ஒரு முடிவுக்கு இதை சொற்களால் எவ்வளவு தூரம் விளக்க முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் இதைப்படிக்கிற போது முழு அளவும் எழுதுகிற போது இலக்கியத்தின் வாயிலாகப் பல காரியங்கள் அப்படித்தான் செய்து இருக்கிறார்கள்.

சங்க இலக்கியத்தில், அலங்காரம் என்பதை ஒழித்திருக்கிறார்கள். அதுவும் ரொம்பத் தீர்மானமாகப் பண்ணியிருக்கிறார்கள். எல்லோரும் சொல்கிறார்கள். அது வாழ்க்கைமுறை என்று. அது எந்த இலக்கியத்தில் செய்தார்கள் என்று தெரியவில்லை. சங்க இலக்கியத்தில் முழுவதும் அலங்காரத்திற்கு எதிரான ஒரு போராட்டமே நடந்திருக்கிறது. போராட்டத்திலிருந்து கிடைத்திருக்கிற கவிதைகள் தான் நம்முடைய சங்க இலக்கியத்தில் இருக்கிறது. நான் ஒரு பெரிய படைப்பாளி இல்லை. சங்க இலக்கியத்தில் உள்ள பல தமிழ் வார்த்தைகள் தெரியவில்லை. இது வந்து எவ்வளவு தூரம் படித்தேன் என்பது முக்கியம் அல்ல. நானாக அந்த விஷயங்களை ஊகித்துக் கொண்டேன். இப்படித் தான் என்று. இது கொஞ்சம் தப்பாகவும்; இருக்கலாம் சரியாகவும் இருக்கலாம். அதுக்கு முன்பு அந்த காஷ்மீர் சைவத்தைப் பற்றி, தொனியைப் பற்றித் தான் பல புத்தகங்களை நான் திரும்பத் திரும்ப படிச்சேன். ஆனால் இந்தப் படிப்பினாலே என்ன பெற்றேன் என்றால் அறிவுதான். கற்ற அறிவைப் பயன்படுத்தக் கூடாது என்பது தான் நான் அடைந்த அறிவின்பலன்.

ஒரு நாவல் எழுதுகின்றபோது அந்தக் கதாபாத்திரங்கள் அந்த நாவலை எப்படி எழுதனும் நான் என்று தீர்மானம் பண்ணின வரையில் இல்லாமல் வேறு வழியில் இழுத்துப் போனால் ஆரம்பத்திலிருந்து வேற வகையில் கதாபாத்திரங்கள் இழுத்திட்டு போகிற போக்கில் நாவலை எழுதி முடித்தேன் என்று பல பேர் சொல்லுகிறார்கள். நீங்கள் ஒரு படைப்பு ஆளுமையோடு முன் கூட்டியே தீர்மானித்து நாவலுக்கு ஏத்தமாதிரி கதாபாத்திரங்களை வடிவமைக்க முடிகிறதா? இல்லையென்றால் ஆரம்பித்துவிட்டு அது போகிற போக்கில் கொண்டு போகிறீர்களா? என்று கேட்கப்படுகிறது.

இல்லை. எனக்கு அவ்வாறு நேரவே இல்லை. எனக்கு ஒரு பெரிய விஷயம், அதாவது இந்த நாவலில் சொல்லக் கூடிய விஷயங்கள் பெரிய விஷயங்கள் இல்லை. தொலைந்து போனவர்கள் நாவலில், அவன் ஆனது நாவலில் ஒரு விஷயம் தான் சொல்ல

வந்தேன். அவன் தன்னைத் தெரிந்து கொள்கிறான். இது ஆண், பெண் எல்லோருக்கும். தான் முட்டாள் தனக்குப் பலவிஷயங்கள் தெரியாது என்பதை ஒரு சாதாரண மனிதன் தெரிந்து கொள்கிறான். அது மகத்தான விஷயமாகப் படுகிறது. எனக்குப் படிப்பின் மேல் நம்பிக்கை இல்லை. முதல் விஷயம் நான் அவநம்பிக்கை கொள்வது இந்த அறிவு மேல் எனக்கு இருக்கிற அவநம்பிக்கை. நான் நிறையப் படிக்கிறேன் என்பது வேறு விஷயம். எனக்கு இதைப்பற்றி எல்லாம் தெரியும் என்பது, கிரஹாம்பெல் முதலில் தொலைபேசி கண்டு பிடித்தார் என்றிடும் அவருடைய கட்டுரை மாதிரி அக்பர் எப்போது ஆட்சிக்கு வந்தார். அவருடைய அத்தையை ஹஜ்ஜிக்கு அனுப்பினார். இதெல்லாம் ஒரு புத்தகத்தைப் படித்தால் தெரிந்து கொள்ளலாம். இந்த விஷயங்கள் அக்பர் எப்படி தன்னை ஒரு மனிதனாக ஸ்தாபித்துக் கொண்டார். அது மாதிரி ஒரு பெரிய மனிதர் படிப்பாளி அவர்கள் மேல் ஒரு நம்பிக்கை இல்லை இருந்தாலும் படிப்பே இல்லாதவர்கள் சின்ன வேலை செய்றவன் பாமரனுடைய மேன்மை இருக்கிறது.

தமிழ்க்கலாச்சாரத்தில் ஜாதிகளைப் பற்றிய கீழ் ஜாதிகளைப் பற்றிய ஒரு விஷயம் என்றுகூடச் சொல்லலாம், கீழ் ஜாதி என்பது ஒன்றும் கிடையாது. ஆனால் இந்தத் தமிழ்நாட்டில் என்ன நேர்ந்தது என்று சொன்னால், சில பொருளாதார ரீதியிலும் உழைப்பைச் சார்ந்த மக்களுடைய நற்பண்புகளை எடுத்துச் சொல்லுவதற்கு அகமுடையோர் இல்லாத நிலை, அவர்களுடைய நற்பண்புகள் இழிவாக கருதப்பட்டது. தமிழ்நாட்டில் மூன்று முக்கிய ஜாதிகள் பிரதானமான ஜாதிகள். இந்த மூன்று ஜாதிகளும் ஒரு நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னும் இந்தஜாதிப் பெண்களுக்கு வேலை செய்வதற்கான சுதந்திரம் இருந்தது. அவர்களுக்கு மறுமணம் செய்துகொள்ள சமுதாய அங்கீகாரம் இருந்தது. அதை பிராமணர்கள், பிள்ளைமார்கள் இவங்களெல்லாம், கேவலமாக 'அறுத்து கட்டுகிற ஜாதி' என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் நற்பண்புகளை எடுத்துக் கூற அவர்களுக்குப் பேச்சாளர் கிடையாது? 'பரிசம்' தான் அவங்களுக்கு உண்டு. இந்த மாதிரியான சமுதாயத்தில் (மேல் ஜாதி என்று கருதக் கூடியவர்கள்) இவர்களிடமிருந்து ஆங்கிலேயர்கள் வந்தவுடன் அவரிடம் இருந்த பழக்கம், படிப்பு இவற்றிலிருந்து அடிப்படையில் என்ன செய்கிறார்கள் என்றால் அவர்களிடம் 'சதுர்' இருந்தது. அது ருக்குமணிதேவியிடம் பரதநாட்டியமாக மாறி கலை ஆர்வம் இல்லாமல் போய்விட்டது. சங்கீதம் இருந்தது. ஆனால் அவர்கள் வந்து பாடுவதே கேவலம் ஆடுவதே இழுக்கு என்றும் அதோடு சமுதாயத்திற்கே இழுக்கு என்றும் கருதும் பழக்கமும் இருந்தது.

ஐயோ இது நம்பகூட இருக்க கூடாது என்று ஒரு சமுதாயத்தில் இழுக்கு இருந்திச்சு; இதெல்லாம் காங்கிரஸ் இயக்கம் ஏற்பட்டு மகாத்மாகாந்தி ஒரு சுதேசியத்தைச் சாதித்த போது இந்தியாவின் கலைகளில் ஒரு மறுமலர்ச்சியாகவும் இருக்கிறது. யட்சகானத்தைப் பற்றி கேட்டால் இது எங்கள் யட்சகானம் கிடையாது; அது சிவராமக்காரந்த் உடைய யட்சகானம் என்கிறார்கள். அநேகமாக கேரள பக்கம் அப்படித்தான் சொல்கிறார்கள். இவர்கள் அதை யார் கைப்பற்றினார்களோ அவர்கள் அந்தக் கலையை சரஸ்வதி தேவி என போனால் சொல்வார்கள். சிருங்காரம் தான் அதில் முக்கியம். அதை ருக்குமணிதேவி அடித்து விரட்டிவிட்டார்கள். ஏன் என்றால் அவர்க்கு பக்திதான் முக்கியம், கடவுளை அடைவதற்குக் கலை ஒரு பிரதானம். அப்படி உயர்வாகக் கருதக் கூடிய இந்த ஜாதிகளும் பரிசம் போட்டுட்டு கெஞ்சி கேட்டு உங்கள் பெண்ணை எங்களுக்குக் கொடுக்கனும் என்று கேட்டு இவர்கள் கல்யாணம் பண்ணிக்கிட்டு இருந்தார்கள். அதையெல்லாம் மேல் ஜாதிகிட்டேயிருந்த பிரச்சனைகளால் இவர்களுடைய சமுதாய பிரச்சனையாய் மாற்றிவிட்டார்கள். இந்த கீழ் ஜாதியில் பேசுபவர் கிடையாது. வீட்டில் மீன் சாப்பிடுவதைப் பற்றியும் உணவுகளைப் பற்றியும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் பத்திரிக்கை படிப்போர், வாசகர் இதனுடன் இருக்கிற வாழ்க்கையை வந்து பிரதிபலிக்கவில்லை. இந்த சாப்பாட்டுக்கும் கலைக்கும் சம்பந்தம் உண்டா என்றால் இதெல்லாம் எவ்வளவுதூரம் இருக்கிறது என்பதுதான். கலையினுடைய நோக்கம் கடவுளை அடைவதா? அல்லது கட்சி சொல்வது மாதிரி சமதர்மத்தை அடைவதா?.

இவர்களெல்லாம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆதலால் சமுதாயத்தைப் பற்றிய பிரக்ஞை வந்துவிட்டது. இவர்களிடம் - இந்த மூன்று ஜாதிகளிடம் - காலச்சார மரபு இருக்கிறது. இதுதான் எட்கார்ட் தர்ஸ்டன் என்பார் புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. தமிழில் மூன்று தொகுதிகள் போட்டார்கள் ஆனால் அந்த புத்தகத்தில் - சமுதாயத்தில் - அப்படி இல்லை; இது மாதிரி விஷயங்கள் நம்முடைய வாழ்க்கையைச் சொல்வதற்கானவை; இவற்றிற்கு இலக்கியத்தில் இடமில்லை; அடிப்படைக் கல்வியும் அரசாங்கமும் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவரிடமிருந்து போய்விட்டது. சிதம்பரம் கோயிலில் நடனகாட்சிகள் சிற்பமாக உள்ளன. நடனமணியுடன் கூட ஆண்களும் வாத்தியங்களுடன் ஆடுவார்கள் ருக்குமணிதேவியுடன் ஆடுபவர் கூட இவர் இணை கிடையாது. டான்ஸ் ஆடுபவர் பிரதானம். கலாச்சாரத்தை விற்ற பின்தங்கியவர்கள் கலைகள் அவர்களே வெட்கம் அடையக் கூடிய

சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. இதில் சுயமரியாதை ஏற்பட்டது. அவர்கள் மரியாதையைத்தான் முக்கியமாகக் கருதினார்கள். கடவுள் இடத்தில் அவர்கள் வந்து உட்கார்ந்து விட்டார்கள். எங்களை நீங்கள் வழிபடுங்கள். உலகத்தில் எல்லோருக்கும் சிக்கல் வந்து சுயமாக காரியங்கள் செய்யக் கூடியவர்கள் இடமாக இது மாறிவிட்டது. இது தமிழ்நாட்டில், தமிழ் சமுதாயத்தில் இருக்கக்கூடிய கதைகள், சுதந்திரம் கொடுக்கக் கூடிய விஷயம் அல்ல. ஒரு சமுதாயம் அதை அனுபவிக்கிறது. அதனால் ஒரு எல்லைக்குள்ளேயேதான் இருக்கிறது. அதுக்குள்ளே பெண்களுக்கு சுதந்திரம் தெரிஞ்சி, ஆண்களுக்கு சுதந்திரம் தெரிஞ்சி பெண்ணும் டைவர்ஸ் பண்ணலாம். ஆணும் டைவர்ஸ் பண்ணலாம், பிடிக்கவில்லை என்றால் சமுதாயத்தைக் கூட்டித் தெரிவிக்கலாம் என்ற இவையெல்லாம் புறக்கணிக்கப்படுகிறது. அப்புறம் ஓவென கூச்சல். வரதட்சனை எங்கு கொடுமை ஆகிறது? நாம் நல்ல கணவனைத் தேடுவதை விட்டுவிட்டு, ஒரு பெரிய உத்தியோகத்தில் 'உள்ளவரை வாங்கப் போராடுறோம். பட்டு புடவை வாங்கினா ஒரு வகைக் காசு, கதர் வாங்கினா ஒரு வகை காசு, என்ன விரும்புகிறீர்களோ என்பதற்குத்தான் விலை. நல்ல கணவன் வேணுமா அல்லது அதிகாரி வேணுமா, பெண்களே தீர்மானிக்க வேண்டும். இது தான் சமுதாயத்தில் பெண் என்பவர் ஆணுடைய சொத்து; இன்னொருவனுடைய சொந்தம்; வீடு, நகை இருந்தும் இவள் அடுத்தவருடைய சொத்து ஆகக் கருதப்பட்டது. புருஷன் செத்தும் மொட்டை அடிக்கிறாங்க; சிலபேர் செய்கிறார்கள். சில பேர் வெள்ளைப் புடவை உடுக்கிறார்கள்.

பாடறது நடனம் இதெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் நாட்டிய சாஸ்திரத்தில் பரத நாட்டியத்தில் பார்க்கிறபோது பரதம் கற்றவர் அவர் பிராமணர், அவர் தேவருக்குக் களிப்பூட்ட நூறு பிள்ளைகளைக் கூட்டி நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள். இது ஒருவகை தேவர்களுக்கு எல்லாம் கிண்டல் செய்ற மாதிரி இருக்கு. உடனே முனிவர்கள் சபித்து விடுகிறார்கள். பூலோகத்தில் பிறந்து பிராமணனாகவோ இசையை பயிற்றுவிக்கின்ற ஜாதியில் இருப்பவர்களான பாணர்கள், விறலியர்களாகவோ உள்ளனர்; ஓரளவுக்குக் கீழேதான். நான் சொல்லுறது நம்முடைய கதையை வைத்து கொண்டு சமுதாயம் என்று சொல்ல முடியாது. நம் தமிழ் நாட்டில் ஒரு ஜாதியில் மட்டுமல்ல மெஜாரிட்டி மக்களில் அவர்களுடைய கலாச்சாரத்திற்குள் பெண்களுக்கு வேலை செய்வதற்கு சுதந்திரம், அவர்களுக்குக் கல்யாணத்திற்குப்பிறகு மணவிலக்கு பெற சுதந்திரம் இருந்தது. இது சமுதாய அங்கீகாரம் மட்டுமல்ல. இருந்தாலும் இதை மறுக்க எவ்விடத்திலும் ஆதாரம் இல்லை. மேல் ஜாதியிடம்

இது மாதிரி சமுதாய விஷயங்கள் இல்லை. இவர்கள் கணவர் இறந்து போனால் வெள்ளைப் புடவை கொடுத்தார்கள். நல்ல ஆகாரம் சாப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். இவை எல்லாம் சமுதாயத்தில் வளர்ச்சியடைந்ததால் ஐரோப்பியர் காலத்தில் வெளிப்பட்டது. மறுமலர்ச்சியில் வாலி வதத்தை வாலி மோட்சம் ஆக்கினார்கள். திரௌபதியின் துகிலுரிதல் என்பதை இவர்கள் திரௌபதிக்கு வஸ்திராபரணம் கொடுத்தல் என்கிறார்கள். இப்படி பெயர்களே வந்தது திட்டமிட்டுச் செய்ததா? திட்டமிடாமல் செய்ததா? என்று ஆய்வு இருக்கும். தமிழ் சமுதாயத்தினுடைய பல ஆங்கில, ஜெர்மன், பிரெஞ்சுக்காரர்கள் அதிகமாக இதுமாதிரி விஷயங்களை ஆராய்ச்சி செய்து கொடுக்கிறார்கள். இங்கு வந்து பல ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் 1901-ஆண்டில் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். கூட உதவி செய்தவர் ரங்காச்சாரி. இந்த இருவரும் எட்கர்ட் தர்ஸ்டன் (மூன்றாவது சூப்பிரண்டண்ட், சென்னை மியூசியம்) இவருக்கு உதவி செய்தவர் ஈ.பி.ஹெறல் என்பவர், 1884-ஆம் ஆண்டு சென்னை ஓவியக் கல்லூரியில் ரூ 300/- சம்பளத்தில் சூப்பிரண்டெண்ட் ஆக வேலைபார்த்தவர். ஏழாண்டுகளுக்குப் பிறகு அவர் கல்கத்தாவுக்குச் செல்கிறார். அவர்தான் ககனேந்திரநாத். தாகூர் உடைய பிரின்ஸ்பால். அவரை எதிர்த்து ஆனந்த குமாரசாமி எழுதுகிறார். 'இந்திய சரித்திரம் தெரியவில்லை. தப்புத்தப்பாகச் சொல்கிறார்' என்று அவருக்கு மறுப்பு சொல்கிற விதத்தில் எழுதினார். The Dance of Siva, என்று அவருடைய பல புத்தகங்கள். இன்றைக்கு பல விஷயங்கள் தெரிந்து கொள்ள ஈ.பி.ஹெறல்.-லும் ஆனந்த குமாரசாமியும் அடிப்படையாக இருக்கிறார்கள். இந்தியக் கலை இந்திய கலாச்சாரம் பற்றித் தெரிந்து கொள்ள உதவியிருக்கிறார்கள். தமிழ்ச் சமுதாயத்தில் சிதம்பரம் கோயிலைப் பற்றி சொல்கிறார்கள். 3000 தீட்சிதர்கள் இருந்ததாகச் சொல்கிறார்கள். தீட்சிதர்கள் ஒன்றாகக் கூடியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கூட்டம். அங்கு திராவிடர்கள், ஆரியர்கள், மங்கோலியர்கள் உண்டு, கன்னோசிக்காரர்கள் தலைமுடி உடல் வேறுபாடுகளுடன் இருப்பார்கள். அவர்கள் கூட்டமாக ஒன்றாகவும் வேறுபட்டும் இருக்கிறார்கள். இம்மாதிரியான துறைகளில் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

ஒரு படைப்புக்கு வலு கொடுக்கும். நாவலை 'துரத்திக்கிட்டு வந்தது' என்றால் அதில் ஒரு பலனும் இல்லை. அதை வந்து எவ்வாறு சொல்லனும்னா சிம்பிளாக சொன்னால், தண்ணீரில் உப்பு கரையறது மாதிரி. எந்த ratio - வில் கரையனும்கறதை எழுத்தாளர் தான் தீர்மானிக்கனும். எல்லா விஷயமும் கடைசியில் ஒரு கனவாக மாறாத வகையில் எதற்கும் ஒரு மதிப்பு இருக்கும். சமுதாய

உண்மைகள் வேறு விஷயங்கள்; ஆயினும் ஒரு நாவலாசிரியர் லட்சியம் என்ன? அது அவர் சொல்லக்கூடிய பதில் தான்; வேறு யாருடைய பதிலும் அல்ல. தமிழ் நாட்டின் சூழ்நிலை அநேகமாக எந்தக் காலத்திலும் எழுத்தாளனுக்குச் சாதகமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. என்ன தேவை என்பதை அவர் தான் தீர்மானிக்கனும்; ஏனென்றால் இது மாதிரி தகிடு தத்தம் செய்ய சர்க்காரால் தான் முடியும். ஒரு சமயம் கென்னடி அமெரிக்காவில் ஜனாதிபதி ஆக வந்தவுடன் ஒரு கமிஷன் போட்டு அமெரிக்க அரசாங்கத்தில் யார் வேலைக்கு வருகிறார்கள் என்று அறிந்து கூற ஒரு கமிஷன் போட்டு ரிப்போர்ட் கேட்டார். அந்த ரிப்போர்ட்ல சொன்னார்கள். முதல்தரமான ஆள் அவனே வேலை தேடிக்கொள்கிறான். இரண்டாம் தரமானாவன் முதலாளியைப் பிடித்துக்கொள்கிறான். மூன்றாம் தரமானாவன் சர்க்காரில் வேலைக்குப் போகிறான் என்று அந்த ஊரில் ரிப்போர்ட் செய்தார்கள்.

முக்கியமாக தொனியை (த்வனி) ஸ்தாபிக்கனும் என்பது கிடையாது. வாழ்க்கையை ஸ்தாபிக்கணுங்கறது முக்கியமாக இருக்கும். தொனி இதில் ஒரு அமைப்பாக வந்துவிடுகிறது. இப்போ ஒரு கடிகாரத்தைப் பார்க்கிறீர்கள் என்றால் நேரத்தைப் பார்க்கிறீர்கள் என்று நான் கருதுவது இல்லை. வேலையை முடித்துவிடுவோம் என்று நினைப்பதாகத் தான் நினைக்கிறேன். அதனால் எல்லா எழுத்தையும் நான் அப்படி தான் நினைக்கிறேன். இந்த மாதிரி விளக்கம் சொல்லக்கூடாது என்பது என் கருத்து. ஏன் என்றால் ஒரு கதையில் ஒரு ஆசிரியர் என்ன நினைக்கிறாரோ அதை அந்தக் கதையில் சொல்லியிருக்கிறார். அது தவிர வேறு எதுவுமே சொல்லக்கூடாது.

ஒரே ஒரு முறையில் கதை படிக்கப் பயிற்சி வேண்டுமாங்கறது ஒரு முக்கியமான விஷயம். கதையைச் சிரமப்பட்டு படிக்க வேண்டும். படிப்பதினால் என்ன லாபம் என்று இது மாதிரி பல கேள்விகளுக்கு மத்தியில் இந்த கேள்விகளுக்கான மதிப்பு அவரவர் மனநிலை தான். ஆர்.கே. நாராயணனைச் சந்தித்தேன். இரவு ஒரு ஏழு மணி ஆகிவிட்டால் என்ன செய்வீர்கள்? என்று கேட்டேன். நான் கம்ப ராமாயணம் எடுத்து ஐந்து பாட்டாவது படிக்காமல் படுக்க மாட்டேன். அவர் வயது இப்போ 91 வயது ஆகிறது. கம்ப ராமாயணம் படிக்க இப்ப என்ன சிக்கல், கம்பனைப் படித்தால் என்ன பிரயோசனம். இல்லை. கம்பனைப் படித்தால் நமக்கு தான் ஆதாயம். இது நம்முடைய சுயநலம் தான். நமக்கு சந்தோஷம் அளிக்கக்கூடிய காரியம் அதைத் தொடர்ந்து பண்றோம். நாம் ஏன் இந்த ஹாலில்

வந்து உட்கார்ந்து இருக்கிறோம்? இதைவிட மகிழ்ச்சி தரக்கூடியது வேறு இருக்கலாம். இந்தத் தமிழகத்தில் இந்த நேரத்தில் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது ஒன்றின் காரியமாக எது முக்கியம் எது முக்கியமில்லை என்றபடி நடக்கிறோம்.

இந்த தொனி விஷயங்களைக் கொஞ்சம் சைக்காலஜிக்கலாகப் பார்க்கலாம். தமிழ் நாட்டில் ஒரு சமயம் கூட்டம் நடத்திக்கிட்டிருக்கும் போது கிருத்திக்காவைப் பேசச் சொன்னோம். ஒரு கேள்வி. கிருத்திகா நீங்களும், ஜானகிராமனும் ஒரே மாதிரியாக எழுதறீங்க. ஜானகிராமனுக்கு என்ன அடிப்படையாக இருக்கு? ஜானகிராமனுக்கு சைக்காலஜி தெரியாது என்றார்கள். இது கூடுதலாக, குறைச்சலாக இருக்கலாம். இதைச் சொல்வதற்கு ஒரு frame இருக்கு. நான் புத்தரைப் பற்றிய சினிமாப் படம் பார்த்தேன். அது கிம்மன்ஸ்ராயும் தேவிகாராணியும் நடித்தது. 1920-ல் ஜெர்மனி படம். ஜெர்மன் படம் வந்து ஹாலிவுட் சினிமா படம் அல்ல. அது ஒரு விதமான படம். அந்தப் படத்தில் புத்தர் 32 வயதில் முதல் சொற்பொழிவு நடத்துவார். அதன்பின்னர் 52 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். இன்னொரு மாதிரியான களத்தில் உயிர் வாழ்ந்தார்; அதை டைரக்டர் நீக்கிவிட்டார். என்ன எடுத்துக்கிட்டேன் என்றால் புத்தர் எதை முதல் பொழிவில் பேசினாரோ அதில் வாழ்க்கையைப் பற்றி சொல்லிக்கிட்டு இருந்ததாக அந்த ஆசிரியர் கருதியதாய் நான் உள்வாங்கிக்கிட்டேன். அதனால் இதை வேற ஒருத்தர் வேறுமாதிரி உள்வாங்கிக் கொள்ளலாம். எவ்வாறு விஷயங்களை உள்வாங்கிக் கொள்வது? எவ்வாறு கொடுக்கப்படுகிறது? இதற்கு இடைவெளி இருக்கிறதா? இந்த இடைவெளி இல்லாமல் செய்ய நாம் முயற்சி செய்கிறோம்.

ஓர் எழுத்தாளன் என்ற என்னுடைய முயற்சி அதை படிக்கக் கூடிய வாசகர்களுக்கும் எழுத்தாளனுக்கும் இடையில் அதிகமான இடைவெளி இல்லாமல் ஆக்குவது எப்படிங்கறதுக்கு ஒரு முயற்சி பண்ணுறோம். ஆனால் பல பேர் அப்படிப் பழக்க முடியவில்லை. நல்ல முயற்சி பண்றோம். நல்லமுயற்சி வேணும்.

ஜானகிராமனுடைய மொழியில் ஒரு சங்கீதம் இருக்கிறதாக எனக்கு ஒரு மகிழ்ச்சி. இரண்டு சிறுகதைத் தொகுதிகள் மிகவும் பிடித்தமானது. கொட்டு மேளம், சிவப்பு ரிக்ஷா. இதில் ஒருவகை இசை இருக்கும் என எனக்குத் தோன்றும். அது மாதிரி, க.நா.சு. அவர்களுடைய கதைகள் பிடிக்கும். எல்லோரும் அவர் ரொம்ப சாதாரண தொனியில் எழுதறார் என்பார்கள். ஆனால் அது சாதாரணம் இல்லை; பாராபஸ் படிக்கிறப்போ ஏக நாதரைவிட இந்த பாராபஸ்

பெரிய செயின்ட் ஆகிவிடுகிறார். நாம் எல்லாம் யாரை பெரிய செயின்ட் என்று நினைச்சிக்கிட்டு இருக்கோமோ, அவனுள் ஏற்படுகிற ஓர் ஆன்மீக தாகம் வந்து அவனுக்கு பெரிய விஷயமாகிறது. ஏன் தன்னை இறக்கிவிட்டார்கள். யார் அந்த மகான்? அவரை அப்படிப் பார்க்கப் போறான். இவனே மகானாக மாறிவிடுகிறான் என்று எழுதினார்கள். ஒரு தொனி நாவலுக்குள் இருக்கிறது. ஹைத்தரன் என்ற உருது நாவல் 300 பக்க நாவல். அது வேதகால புத்தருடைய காலந்தொடங்கி, பிரிட்டிஸ் 1947 வரையான காலத்தில் ஓர் ஆத்மா தான் ஜீவிக்கிறது என்ற தொனியில் எழுதுகிறார். ஒரு விஷேசமான நாவல். இதில் பெண், ஆண் என்பது கிடையாது. தமிழ்நாட்டில் ஆண்டாள், ஔவையாரைப் பெண் என்று சொல்வதில்லை. இது நவீன காலத்தின் சிந்தனை. இது பெண்களுடைய காலம். மோசமான எழுத்து, நல்ல எழுத்து என்பதைத் தவிர எல்லா ஜாதிக்கும் எழுத்து உண்டு. ஜாதி மாறக் கூடியது. மொழி மாறக்கூடியது. என் தாயார் பேசிய மொழி அல்ல நான் பேசுவது, நான் பேசியது என் மகள் பேசுவதல்ல. எழுதுகிறபோது மொழியை ஜீவிதமாக மாற்றுவது முக்கியம். பலபேர் உடைய மொழி இறந்துபோன மொழி. எழுத்தாளர்கள் மொழி அச்சு மெஷினில் ஏறி வருகிறபோது அது இறந்து போய் விடுகிறது. சில பேர் உடைய மொழி ஜீவிதமாக இருக்கிறது.

பெண்களுக்கு விடுதலை வேணும், பெண்களுக்கு யாரிடமிருந்து, அவருடைய ரோல் என்ன? ஒருவர் பைத்தியக்காரனாக இருக்கலாம். எப்படி இருந்தார் என்பது விஷயம் அல்ல. ஆயினும் அவர் நாவல்கள் 2000 ஆண்டுகளாகக் கவிதை வளம் கொண்ட மொழியில் கவிதைகளில் சாதனை புரிந்த ஒரு மொழியில் சிறந்துள்ளது. ஏன் வசனத்தில் சிறந்த படைப்பு வரவில்லை. காரணங்கள் திரும்ப, கேள்வி வந்திருப்பதற்கு எடுத்துச் சொல்ல முயற்சி இல்லையா? அநேகமாக இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு மூலமாகக் கிடைத்த எல்லாமொழிகளிலும் சமமாக இருக்கணும். நமக்கு எடுத்துச் சொல்ல சரியான ஆட்களில்லை. அதாவது நம்முடைய பெருமையை அதிகமாக நாம தெரிஞ்சிக்கறது இல்லை என்பது தான். நாம் அடுத்தவனை இல்ல என்று சொல்லுவதற்கு நாம் முன்னோடியாக இருக்கிறோம். இவர் இல்லை என்று சொல்வதில் முக்கியத்துவம் தருகிறோம். பிற இந்திய மொழிகளில், இருப்பதைச் சொல்வதற்கு ஒரு மீட்டிங்கில் நண்பர் பேசினார். சாகித்திய அகாடமி விருது சரியான ஆட்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். பலமுறை விருதுபெற்ற அவர்கள் உங்கள் மொழியைச் சொல்லுங்கள் என்றும் எங்கள் மொழிகளில் தகுதியானவர்களுக்கு அதிகமாகவும் தகுதியற்றவர்களுக்கு

குறைவாகவும் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது ஒரு சின்ன பரிசு. இது சமுதாய அங்கீகாரம். இங்கு எழுத்தாளர்கள் என்று பத்து பேரை எடுக்க முடியும். இந்தியச் சிறுகதையில் தமிழின் பங்கு என்ன? நிறைய புத்தகங்கள் வருகின்றன. தமிழின் பிரிவு கிட்டதட்ட இல்லாமலேயே இருக்கும். இந்திய அளவில் கூறுகிறபோது சொல்வதற்கு ஆளில்லை.

கலாச்சாரத்தில் எழுத்தாளர் என்ன பண்ண முடியும்?. தைரியம் கொஞ்சம் குறைந்துவிட்டதாக எனக்குத் தோனுது. அடக்கமாக பேசறேன்னா எனக்கும் அவர்களுக்கும் ஒரு நாகரீகம் இருக்கு. அதனால் இதை விட்டுவிட்டுப் போயிடனும். நல்லவை இலக்கியத்தில் அங்கீகரிக்கப் படவில்லை என்பதைத் தவிர வேறு கோபம் இல்லை. அவர் பரிசு கேட்கிறார் என்று சொல்லிவிடுவார். ஒரு ஆளைக் கஞ்சன் என்றும் ஒருபெண்ணை விபச்சாரம் செய்றாள் என்றும் வார்த்தைகளால் அவமானப் படுத்தி விடுகிறார்கள். பொது நன்மையைப் பற்றி கேட்கும் போது அவரும் பரிசு கேட்கிறார். இந்த அம்சம் தான் நமக்கு ஒரு பெரிய அச்சம். தகுதியானவர்களை எவ்வாறு கண்டு கொள்வது? சினிமாவுக்கு ஒரு இடம் உண்டு. 12 மணி நேரம் சினிமா பார்க்க முடியாது. வாழ்க்கையினுடைய அம்சமாகப் பார்க்கனும். சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவில் பல இடங்களில் கட்டிடம் கட்டி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இரண்டே இரண்டு ஆர்க்கிடெக்ட்சர் கட்டியிருக்கிறார்கள். ஒன்று அண்ணா சமாதி; இன்னொன்று எம்.ஜி.ஆர். சமாதி, அதைத் தான் ஆர்க்கிடெக்ட் கட்டியிருக்கிறானே தவிர, வேறு ஒரு பப்ளிக்பில்டிங் கட்டி ஆர்கிடெக்ட்சர் என்று காட்ட முடியுமா? இது எங்களுடைய நவீனமான கலாச்சார முறைப்படி கட்டியிருக்கிறோம் என்று நமக்கு இன்னொருவர் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னுடைய நாவலை கா.நா.சு. ரொம்ப நல்ல நாவல் என்று சொல்லி விட்டார். இந்த மாதிரி சர்டிபிகேட் வாங்கும் புத்தியை எழுத்தாளன் விட்டுவிட வேண்டும். யாரிடமிருந்தும் எனக்கு சர்டிபிகேட் தேவை இல்லை அப்படிங்கறது தான் எனக்கு முக்கியம். நான் எழுதறேன். எனக்கு திருப்தியாக இருக்கிறது. அப்படீங்கற ஒரு மனோநிலை. அதைத் தங்களது தான் என்று எல்லோரும் சொல்வோம். ஏனென்றால் நோக்கம் இல்லாதவன்; தவிர அப்படி ஒரு மரபு தமிழ்நாட்டில் இருக்கு. நான் முக்கியமாக ஏதாவது பண்ண முடியுமா என்று யோசிக்க வேண்டியிருக்கு, இப்ப வந்து சுதந்திரத்திற்குப் பிறகு 50 ஆண்டுகளில் நல்ல நாவல்கள் என்று முருகன் ஓர் உழவன், தேசபக்தன் கந்தன் என்று கல்யாணசுந்தரம் 20 வருடங்கள் சொல்லியிருக்கிறார். சுதந்திர மூவ்மெண்ட் பற்றி பல பேருக்கு அக்கறை இருக்கிறது. நம்மளை

கூட்டிட்டு போவாங்க என்று செய்வாங்க. அவர்கள் அதை ஐக்கியப்படுத்திக்கொண்டார்கள். பிரச்சனைகள் வந்ததும் ஓடிப்போவாங்க. பிரஜைகளுடைய தனி சலுகைகள் கேட்கவில்லை. குறைந்த பட்சம் எழுத்தாளன் சொல்வது புத்தகங்களை வாங்குங்கள் என்று சொல்கிறான். தமிழ்நாட்டில் புத்தகம் வாங்கற ஊர் உண்டா? தமிழ் ஆட்சி, எல்லாம் தமிழ் என்று சொல்கிறோம். தமிழில் புத்தகம் வாங்குங்கள் என்று சொல்கிறார்கள். எழுத்தாளனுடைய புத்தகங்கள வாங்குங்கள். அதனால் ஓர் எழுத்தாளன் வேற ஒன்றும் கேட்கவில்லை. இது ஒரு கேவலமானது இல்லையா? இந்தக் கேவலத்தை எவ்வாறு நீக்குவது? சமூகம் தான் இதற்குப் பொறுப்பு; மொத்த சமுதாயத்தில் பல ஊரில் புத்தகங்கள் இல்லாமல் இருக்கிறது. ஏன் தமிழ்ச் சமுதாயத்தில் இத்தகைய சிக்கல்கள் இருக்கின்றன. அதிகாரத்தில் இருக்கிறார்கள். அவர்களைப் பெரிய மனிதர்களாக நினைக்கிற ஒரு மனோநிலை. அவர் இந்த வேலை செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய வேலை இதுவெல்லாம் இல்லை. ஏதோ தவறி இருக்கிறவனை தகுதியற்றவர்கள் தகுதியான இடத்தில் இருப்பதாயும், இதைச் செய்வது இலக்கியம் அல்ல, எல்லாத் துறைகளுக்கும் விரிக்கலாம். நமக்கு நாமே வந்து ஒரு தைரியமும், நல்லது என சொல்லக் கூடியதுமாய் நான் இதைப் படித்தேன் என்று சொல்லக்கூடிய நிலை. அப்படி சொல்லக்கூடிய அபிப்ராயம் நமக்கு வந்துவிட்டது என்றால் யாருடைய விஷயங்களும் நம்மை அணுகாது என்று நான் நினைக்கிறேன். என் சொந்த வாழ்க்கையில் நான் படித்ததில் பிடித்தது என்று சொன்னால், சொல்வதற்கு எந்தத் தடையும் வந்தது இல்லை; அதுபோன்று என்னைப் பொறுத்தவரை இது நன்றாக இருக்கிறது. அவ்வளவு தான். அந்த அம்மாவுடைய குடும்ப வரலாற்றைப் படிக்கும் போது ஏழு தலைமுறையாக அவர்கள் வீட்டில் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்; அவரெல்லாம் பெண்களாக இருக்கிறார்கள். முதலில் பர்ஸியனில் உருதுவில், ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். எழுத்தில் ஆண், பெண் வித்தியாசம் கிடையாது. காரைக்கால் அம்மையாரை யாராவது பெண் என்று சொல்லுவோமா? சக்தியற்றவர்கள் கால், கை அற்றவர்களில் 'எங்களுக்கு ஏதாவது ஒரு அலவன்ஸு கொடுங்க' என்பார்கள். ஆனால் ஜாதியின் பேரால் பாலின் பேராலே நல்ல எழுத்தாளன் எந்த அலவன்ஸும் கேட்க மாட்டான்.

விசாரணைக் கமிஷன் கதையிலே ஒரு செய்தி வருது. (எல்லா மனிதர்களும் சுற்றுச் சூழலின் உருவாக்கம்.) இந்த மாதிரி அந்த டீச்சர் தன் கணவனை நல்ல முறையில் கையாண்டதால் அவன் முரட்டு தன்மையிலிருந்து மாறி மென்மை ஆனவனாக ஆகிறான்.

இப்போது இந்த செய்தியை முன்னாடி வைத்துக் கதையை எழுதறீங்களா? இல்ல, கதையை எழுதி செய்தியைப் படிக்கிறவங்களுக்குக் கொடுக்கிறீர்களா? அப்படி விடும் போது ஏற்க கூடாத சில விஷயங்கள் செய்தியாக வருகிறதா? என்றெல்லாம் கேட்கப்படுகின்றன.

முக்கியமாக இது செய்தி இல்லை. என்னுடைய அடிப்படையான நோக்கம் ஒரு வாழ்க்கை அனுபவமாகத் தான் இதைப் பார்க்கிறேன். இது லேசா செய்தி மாதிரித் தோன்றுகிறது. அது பார்க்கப்போனா, இது எப்படி எல்லோருக்கும் பொதுவான கதை? ஏன் சிக்கல்கள் ஏற்படுகிறது? இந்தச் சிக்கலில் இருந்து என்னவெல்லாம் ஏற்படுகிறது? எதுக்கு ஒரு முரட்டுத் தனமான ஒரு இந்தக் கதை 20 வருடங்களுக்கு முன்பு எழுதினது. இது இன்றைக்குப் படிக்கும் போது சுதந்திரத்தோடயும், மகாத்மாகாந்தியோடும் வருவதாத் தோனுது; அது இல்லாவிட்டாலும் கூட அடிப்படையில் மனிதன் அன்பு செலுத்தினால் பல விஷயங்களைத் திருத்திக் கொள்ளலாம். அது மாதிரியான அன்பு மூலமாகச் சாதிக்க முடியும் எல்லாக் கதைகளின் அடிப்படையும் அதுதான். மனிதர்கள் எப்படி சிக்கல்களைத் தீர்த்துக் கொள்கிறார்கள்? அதாவது இதுக்குக் காரணம் என்ன என்று கேட்கும் போது இந்தக் காரணங்களுக்கானத் தீர்வு கிடைக்கும். இந்த மொத்தமும் என்னுடைய படைப்பில் கையாளுகின்ற விஷயங்கள். இது இவ்வாறு ஏன் ஏற்படுகிறது? அப்படின்னு ஒரு கேள்வியை எழுப்பனும். கேள்விக்கான பதில் இதிலிருந்து லேசாகக் கிடைக்கும். அவாக்கள். யோசிப்பதற்கு ஒரு தூண்டுதலாக இருக்கும். ஒரு விஷயம். நான் முதலில் நிராகரிக்கிறது அலங்காரமான மொழியும் அறிவும் தான். இந்த அறிவு இலக்கியத்திற்கு சத்ரு என்கிறேன். அறிவால் எழுதப்படுகிறதெல்லாம் விரைவில் அறிந்து நிராகரிக்கப்படுகிறது.

சமுத்திரம், சு.

"ஒரு படைப்பாளி தன்னையும் சேர்த்தே படைப்பாக்குகிறான்" நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கவிஞர் முத்துலிங்கம், தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் அப்படிக் கூறினார். பொதுவாக, ஒரு படைப்பில் அந்த எழுத்தாளனின் தாக்கம், பாதிப்பு, பின்னணி போன்றவை இருக்கும் என்று பொத்தாம் பொதுவாக நான் உட்பட பலர் குறிப்பிட்டு வருகிறோம். ஆனால், கவிஞர் முத்துலிங்கம் ரத்னச் சுருக்கமாக எல்லோருக்கும் உடன்பாடான ஒரு கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

அப்படியானால் ஒரே பின்னணியில் தோன்றும் படைப்பாளிகள் மாறுபட்ட கோணத்தில் எழுதுகிறார்களே என்ற கேள்வி வரும். இதற்கு ஒருவரின் அனுபவத்தின் சேர்மானம் அந்தப் படைப்பில் எவ்வளவு தூரம் வந்துள்ளது என்பதுதான் பதிலாக இருக்கும். ரஷ்ய இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய் அறிவுறுத்தியது போல், அனுபவம் என்பது ஒரு சாளரம். அந்த சாளரத்தின் வழியாகத் தெருவைப் பார்க்க வேண்டுமே தவிர அந்தச் சாளரமே தெருவாகிவிடாது. அதாவது, வாழ்க்கையின் மூலம் சமூகத்தையும், சமூகத்தின் மூலம் வாழ்க்கையையும் அணுக வேண்டுமே தவிர ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை சமூக வாழ்க்கையாகி விடக்கூடாது. இதானால்தான் டால்ஸ்டாய் அனுபவம் முக்கியமல்ல. அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்வதே முக்கியம் என்றார். இன்னொன்றையும் சொன்னார். படைப்புகள் அனைத்துமே இலக்கியம்தான். இவற்றில் நல்ல இலக்கியம் எது, நச்சு இலக்கியம் எது என்பதை அடையாளம் காண வேண்டும். ஒரு படைப்பாளி என்ன உணர்வோடு எழுதுகிறானோ அந்த உணர்வு வாசகன் மனதில் பதிவாக வேண்டும். நல்லுணர்வு பதிந்தால் அந்தப் படைப்பு நல்ல இலக்கியம் தீய உணர்வு பதிந்தால் அது நச்சு இலக்கியம். தெளிவாகச் சொல்லப் போனால் ஒரு கற்பழிப்பு சம்பவம் நமக்குத் தெரியவருகிறது. உடனே, கற்பழிக்கப்பட்ட அந்தப் பெண்ணைத் தன்னுடைய சகோதரியாகவும், அல்லது தாயாகவும் அனுமானித்துக் கொண்டு ஒரு எழுத்தாளன் அதைப் படைப்பாக்கினால் வாசகன் கற்பழிப்பிற்கு எதிராகப் போர்க்குரல் கொடுக்க வேண்டும் என்று எண்ணுவான். அந்த நிகழ்ச்சியையே காம ரசனையோடு எழுதினால் வாசகன்

மனதில் பாலியல் ரசனையே எஞ்சி நிற்கும். ஆக நிகழ்வுகள் மட்டுமல்ல அந்த நிகழ்வுகளை அணுகும் விதமும் இலக்கியத்திற்கு இன்றியமையாத இலக்கணமாகிறது.

இலக்கியத்தில் இயல்பு நிலையை யதார்த்தமாகக் காட்டுவதுதான் மக்கள் இலக்கியம். இப்போது நடக்கும் நல்லதையும் கெட்டதையும் அப்படியே காட்டுவது இலக்கியத்தில் இயல்பாகும். ஓர் இயல்பான நிகழ்வு நாளை, இதே நிகழ்வு மாறுபட்ட கோணத்தில் நடைபெறலாம் என்று காட்டுவது யதார்த்தம். எடுத்துக்காட்டாக கைகட்டி, வாய்புதைத்து நிற்கும் இன்றைய இயல்பான மக்களை நாளைய போராளிகளாகக் காட்டினால் அது யதார்த்தம். அதே சமயம் திரைப்படங்களில் வருவது போல் ஒருவர் முப்பது பேரை அடிப்பது போல் காட்டுவது யதார்த்தமாகாது. இன்னொன்று எந்த மக்களிடம் இருந்து இயல்பான நிகழ்வுகளை வாங்குகிறோமோ அந்த நிகழ்வுகளை சமூக உலைக்களத்தில் அலசி யதார்த்தத்தில் புரட்டி அந்த மக்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதுதான் மக்கள் இலக்கியம்.

இந்த இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான், சுய அனுபவங்களை, பிற நிகழ்வுகளைக் கண்டவை, கேட்டவை, படித்தவை ஆகியவற்றையும் புராணங்கள், பழமொழிகள் ஆகியவற்றையும் யதார்த்தத்தில் மக்களுக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறேன். இந்தப் பின்னணியில் என் பின்னணியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

படைப்பாளி தன்னையுஞ் சேர்த்து படைப்பாக்குவதால் அவனுடைய பின்னணியையும் குறிப்பிட வேண்டியது தவிர்க்க முடியாததாய் ஆகிவிடுகிறது.

நெல்லை மாவட்டத்தில் திப்பணம்பட்டி என்ற கிராமத்தில் எளியவர்கள் வாழும் சிறிய பகுதியில் 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதி நான் பிறந்ததாகச் சொல்கிறார்கள். நான் பிறப்பதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பே புதிதாக மணமுடித்த என் தந்தை கேரளத்திலுள்ள கொல்லத்திற்கு காய்கறிகளை ஏற்றிக் கொண்டு உயிரோடு சென்றவர் ஓரிரு நாட்களில் ஏதோ விஷ காய்ச்சலால் பிணமாகத் திரும்பியதாக பின்னர் அறிந்தேன். அதே சமயம் வண்டி மாட்டில் ஒன்று தளர்ச்சி அடையும் போது அந்த மாட்டை வாலை பிடித்து கடித்தோ பிட்டத்தில் தார்க்கம்பால் குத்தியோ கொடுமைப்படுத்தி ஓட்டாமல் அதை அவிழ்த்து வண்டியின் பின்பக்கம் கட்டிவிட்டு அந்த மாடு கட்டிய இடத்தில் தன்னை நிறுத்திக்

கொண்டு வண்டியை ஓட்டிய பாட்டாளி, மனித நேயர் என் தந்தை என்பதைப் பின்னர் கேள்விப்பட்டதால், அந்த நிகழ்வை இன்னும் மனதில் நிலைநிறுத்திக் கொண்டே இன்றும் ஒரு பாட்டாளி வர்க்கனாக வாழ்ந்து வருவதாய் நினைக்கிறேன். எனக்கு ஐந்து வயது வந்தபோது கம்மாக்காட்டில் அல்லாடிய என் தாய் சின்னத்தாயி காலரா நோயினால் உயிரிழந்தார். இரண்டு நாட்கள் அந்தக் கொலைகார நோயுடன் போராடிய என் தாயை பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருத்துவமனையில் சேர்த்திருந்தால் அவர் பிழைத்திருப்பார். ஆனால், காலரா அம்மனை பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற கண்மூடித்தனமான மூடத்தனத்தையே பழக்க வழக்கமாக கொண்ட எனது உறவினர்கள் அம்மாவை அப்படியே சாகவிட்டார்கள்.

அம்மா வழி வளத்தம்மா, வளத்தய்யா, அய்யா வழி பாட்டைய்யா, அய்யாம்மை ஆகியோர் கண்காணிப்பில் நான் வளர்ந்தாலும், என் வீடு என்று சொல்லிக் கொள்ள எனக்கு எதுவுமே இல்லை. எந்த பாசமும் கிடைக்க வில்லை தந்தையோடு கல்வி போகும், தாயோடு அறுசுவை உணவு போகும், சகோதரர்களோடு வீரம் போகும் என்று ஒரு புலவர் பாடிய இலக்கிய வரிகளுக்கு நான் ஒரு நாட்டுப்புற வெளிப்பாடாய் இருந்தேன் என்றும் சொல்லலாம். ஆனாலும், இந்த மூன்று சமூக நெறிகளையும், வீசியெறிந்து என்னுள்ளே கிடந்த ஒரு படைப்பாளி உருவானான்.

சொந்தவீடு என்று எனக்கு ஒன்றும் இல்லாததால் எங்கள் கிராமத்தையே ஒரு சொந்த வீடாக நான் வரித்துக் கொண்டேன். குடும்பச் சிக்கல்களுக்கு கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லாததால் கிராமச் சிக்கல்களிலும், அதன் கலை வெளிப்பாடுகளிலும் 'பிற பயல்களை' விட நானே அதிகமாக ஈடுபட்டேன். ஏழாவது வயதில் எங்கள் கோயிலில் வில்லடிக்கும் வெற்றிக்குமார் வில்லு பாட்டாளியை ரசித்துக்கேட்பேன். அம்மன் கொடை முடிந்ததும், ஒரு வாதமடக்கி கம்பை வில்லாய் வளைத்து கயிறு கட்டி பூவரசு கம்புகளால் வில்லடித்து பழைய பானையை குடந்தட்டி ஒரு சில சிறுவர்களோடு வில்லுப் பாட்டுப் பாடுவேன். நல்லதங்காள், நாட்டுப்புற மகாபாரதம், மதுரை வீரன் கதை, முத்துப்பாட்டன் கதை, 26 மாடதேவதைகளின் புராண வரலாறு ஆகிய அத்தனை பெரிய 'எழுத்துப் புத்தகங்களையும்' ராகம்போட்டு பாடியிருக்கிறேன்.

அந்தக் காலத்தில் கிராமங்களில் பெரியவர்கள் உயிருக்குப் போராடித் தங்களுக்கும் இருக்கிறவர்களுக்கும் சிரமம் கொடுப்பதாக ஊர் மக்கள் கருதும்போது என்னை அழைப்பார்கள். இந்தப்

பெரியவரின் தலைமாட்டில் உட்கார்ந்து நான் தருமர் மோட்சம் போன கதையைப் பாட வேண்டும். நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும். தருமர் சொர்க்கத்திற்குள் போனதாக நான் கதையை முடிக்கும்போது அந்தப் பெரியவரின் கதையும் முடிந்துவிடும். இப்படி கிராமத்தில் பல பெரியவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறேன். இதேபோல், பத்து வயதிலேயே கல்யாண வீடுகளில் 'கொழுந்தி கொழுந்தியடி' என்ற வாழ்த்துப் பாடலை 'கொழிஞ்சி கொழிஞ்சியடி' என்று மண்வாசனை தமிழில் பாடி வாழ்த்தியிருக்கிறேன். நான்கைந்து சிறுவர்களை ஒன்றுகூட்டி, காகிதங்களை இராமராக, அனுமாராக வெட்டிக் கட்டி ஒரு சின்ன குடில் கட்டி அதில் வெள்ளைத் துணியை திரையாக்கி பின்னால் ஒரு லாந்தர் விளக்கை மட்டும் வைத்துக் கொண்டு பாவைக் கூத்து அல்லது தோல் கூத்து நாடகத்தை போட்டுக் காட்டியிருக்கிறேன். எங்கள் வீட்டுக்கு அருகேயே ஒரு சின்னக்குடிசை கட்டி பல சிறுவர்கள் இரவில் ஒன்றாகப் படுத்திருக்கிறோம். அனுபவங்களை அதாவது பெரியவர்களின் காதல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கிறோம். வரம்பு மீறிப் போகிறவர்களை அல்லது எங்களுக்குப் பிடிக்காதவர்களை சுவர் இலக்கியம் மூலம்-அதாவது வெள்ளைச் சுவரில் வாதமடக்கி இலையை மையாக்கி அவர்களின் காதல் விளையாட்டுக்களை இலைமறைவு, காய்மறைவாக அம்பலப்படுத்தி இருக்கிறோம்.

பதினைந்து வயதானபோது என்னை கலைஞரின் தமிழ் ஆட்கொண்டது. அவரது பராசக்தி திரைப்படம் பட்டித் தொட்டி எங்கும் நாடகங்களாக உருவானது. கூடவே, காதல் கடிதங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அரைகுறை தமிழ் ஆர்வலர்களான இளைஞர்களுக்கு நான் கலைஞரின் பாணியில் காதல் கடிதங்களை எழுதி அந்த மை காயும் முன்பே அவர்களை தத்தம் காதலிகளோடு சேர்த்திருக்கிறேன். பின்னர் விவரம் தெரியத் துவங்கியதும் காதல் கடித இலக்கியத்தைக் கைவிட்டு விட்டு பாரதியார் மனைவி பிறந்த கடையம் உயர்நிலைப் பள்ளி வெளியிட்ட மலர்களில் கலைஞர் பாணி தமிழில் கவிதைகள் எழுதியிருக்கிறேன். கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். இந்த எழுத்து கல்லூரிக் காலம் வரை தொடர்ந்தது. பின்னர், அரசுப் பணி கிடைத்து அத்தனையும் மலரும் நினைவுகளாயின. ஒரு கட்டத்தில் தற்செயலாக பட்டுப் போய்விட்டதாக நினைத்த இந்த இலக்கிய முளைகள், மீண்டும் தழைத்து செடிகொடிகளாகி இப்போது ஒரு ஆலமரமாக என்னுள்ளே ஆகிவிட்டது என்று நான் நினைக்கிறேன். என்றாலும், வாசர்கள்தான் இது குறித்து சரியாக அனுமானிக்க முடியும்.

என்னைப் பற்றிய இந்தப் பின்னணி, எனக்கு மூன்று விதமான பெரிய அனுபவங்களையும் அதற்குள்ளே பல்வேறு உள் அனுமானங்களையும், இப்போது அந்த அனுபவங்கள் பரிணாமப்பட்ட மறுபக்கங்களையும் கொடுத்தன, காட்டுகின்றன. கிராமத்தையே வீடாக வரித்துக்கொண்டு அதனால் பெருமைப்பட்டும், சிறுமைப்பட்டும் போன இளங்கால அனுபவம். வடசென்னையில் சர் தியாகராய கல்லூரியில் படிக்கும்போது கிடைத்த கல்லூரி அனுபவத்தோடு முப்பது குடித்தனங்களைக் கொண்ட ஏழை எளியவர்களோடு வாழ்ந்த ஒரு சேரி அனுபவம். இந்தக் காலக் கட்டத்திலேயே காங்கிரஸ் பேச்சாளனாக பல மேடைகளில் சொற்பொழிவாற்றிய அனுபவம். மூன்றாவதாக, ஆரம்பப் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர், உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர், தமிழக அரசின் கூட்டுறவு ஆய்வாளர், ஊராட்சி வளர்ச்சி அதிகாரி ஆகிய சிறுசிறு காலங்களில் கிடைத்த சின்னச்சின்ன வேலைகள். பின்னர் மத்திய தேர்வாணையத்தின் மூலம் இந்திய தகவல் அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு வானொலி செய்தி வாசிப்பளராய், திட்டம் பத்திரிக்கை பொறுப்பாசிரியராய், தொலைக்காட்சி வானொலி செய்தி ஆசிரியராய், களவிளம்பரத் துறை மாவட்ட அதிகாரியாய், மாநில அதிகாரியாய், அரசு அலுவலர் சங்க செயலாளராய், கிடைத்த கீழ்மட்ட, மேல்மட்ட அனுபவங்கள். கூடவே மேட்டுக்குடித்தனமான காக்டெய்ல்ஸ் கலாச்சாரம். இப்போதோ இவையனைத்தையும் விட்டொழித்து, புலால் உணவையும் குறைத்து கிட்டத்தட்ட உணர்விலும், உணவிலும் சைவமாகி, அருட்பெருஞ்சோதி அகவலாகியிருக்கும் இப்போதைய அனுபவம்.

இந்த அனுபவங்களின் வெளிப்பாடுகளே என் கதைகள்.

கல்லூரிக்கால கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கிடைத்த வெற்றிகள், கவியரங்க மேடைகளில் கிடைத்த கைத்தட்டல்கள் ஆகியவற்றை பொய்யாய், பழங்கதையாய் ஆக்கியதுபோல், வாழ்க்கை என்னை டில்லி வானொலி நிலையத்தில் தூக்கிப் போட்டது. ஐந்தாண்டு காலம் டில்லி தமிழ்ச்சங்க சொற்பொழிவுகள் தவிர வேறெந்த இலக்கிய வெளிபாடுகளும் இல்லாமல் நான் அல்லாடினேன். இந்தக்காலக் கட்டத்தில் தாமரையிலும் கணையாழியிலும் சிறந்த சிறுகதைகளை உருவாக்கிய எனது தொழில் சகாவான திரு.செல்வராஜ் அவர்களிடம், அந்தக்காலச் சிறுகதைகளை கடுமையாக விமர்சித்தபோது அவர் முதலில் நீங்கள் ஒரு கதை எழுதிவிட்டு அதற்குபிறகு மற்றவர் கதைகளை விமர்சியுங்கள் என்று என்னை எழுதத் தூண்டுவதற்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

இதனால் மனக்கிளர்ச்சி அடைந்த நான் அதற்குப்பிறகு இரண்டு மூன்று நாட்களில் இரண்டு சிறுகதைகளை எழுதி ஒன்றை ஆனந்தவிகடனுக்கும், இன்னொன்றை குமுதத்திற்கும் அனுப்பி வைத்தேன். 1974ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் இந்த இரண்டு கதைகளுமே ஒரே வாரத்தில் பிரசுரமாயின. எனது இளமைக்காலத்தில் எனது கிராமத்தில் நடந்த அரசியல் அடிப்படையிலான ஒரு திருமண நிகழ்ச்சியை மையமாக வைத்து சென்னையில் கல்யாணம், குட்டாம் பட்டியில் கலாட்டா என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை அனுப்ப அதை ஆனந்த விகடன் **அங்கே கல்யாணம், இங்கே கலாட்டா** என்ற தலைப்பில் வெளியிட்டது. காதலர் இருவருக்கு அவர்களது குடும்பத்தினர் திருமணத்திற்காக நிச்சயதாம்பூலம் செய்யப்போனபோது, திருமண நிகழ்ச்சிக்கு இரண்டு அரசியல் கட்சிகளில் எந்தத் தலைவர் தலைமை தாங்க வேண்டும் என்று விவாதம் உருவாகி அது அந்தத் திருமணத்தையே நிறுத்திவிட்டது. வெறும் நிறுத்தத்தையே கதையாக்கினால் அது சரியாக இருக்காது என்று கருதி, கிராமத்தார்கள் இப்படி நடந்து கொள்ளும்போது அந்த இரண்டு தலைவர்களும் தத்தம் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் செய்து வைத்து சம்பந்தி ஆவதாகவும் சர்வகட்சி தலைவர்கள் இதை வாழ்த்தியதாகவும் ஒரு கதை விட்டேன். இந்தக் கதையைப் படித்த டில்லி வாசகர்கள் ஒரே சிரிப்பு என்று ஒற்றை வார்த்தை விமர்சனத்தை எழுப்பியபோது புதுடில்லியின் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் சிறப்பு செய்தியாளராக இருந்த பெரியவர் சீனிவாசன் கதையில பொடி வெச்சிருக்கீங்க என்று சொன்னது என்னைப் பெருமிதப்பட வைத்தது. இந்தப் பொடிதான் இப்போதும் வெடிகுண்டளவிற்கும் போய் இருக்கிறது என நினைக்கிறேன். அந்தக்கால கிராமத்தின் பழக்க வழக்கப் பதிவுகளாக இந்தக் கதை வெளியானது.

குமுதத்தில் எழுதிய கலெக்டர் வருகிறார் என்ற சிறுகதை அந்தக் காலத்தில் ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர், ஒரு பகுதிக்கு வருகை செய்தால் அந்தப் பகுதி ஆட்சியந்திரத்தின் சக்கரங்களான தாசில்தார், ஊராட்சி ஒன்றிய ஆணையர் உள்ளிட்ட அதிகாரிகள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதுதான் கதை. அப்போது சேலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு நடந்ததாக கேள்வி. அந்தக் கூட்டத்தில் இந்தக் கதை தாங்கிய குமுதம் கீழ்மட்ட ஊழியர்கள் பெருமளவில் வாங்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் பார்வைக்கு ஏளனத்தோடு வைக்கப்பட்டதாக இப்போது ஐ.ஏ.எஸ். உயரதிகாரியாகவும், அப்போது மத்திய அரசின்

களவிளம்பரத் துறை அதிகாரியாகவும் இருந்த என் நண்பர் பாஸ்கர் குறிப்பிட்டார். நானும் அரசு ஊழியனாக இருந்ததால் அலுவலக சம்பந்தப்பட்ட கதைகளை அப்போது கடல்மணி என்ற பெயரிலும், கிராமியக் கதைகளை சொந்தப் பெயரிலும் எழுதினேன்.

என்றாலும், என் அனுபவங்களோடு நான் உறைந்து விடாமல், மாறிவரும் நாட்டுநடப்புகளை மனதில் கொண்டு கதையின் நோக்கை மாற்றவில்லை என்றாலும் அதன் போக்கை மாற்றிக்கொண்டு காலமாற்றத்திற்குத் தக்கபடி எழுதியதே என் படைப்பில் ஒரு சிறப்பு என்று கருதுகிறேன்.

கிராமங்களில் பத்தாம் பசலியாக இருப்பவர்களை குட்டாம்பட்டி கிராமியத் தளத்திலும் திண்ணைப் பேச்சு வீரர்களாக இருப்பவர்களை சட்டாம்பட்டி கிராமியத் தளத்திலும் அடாதடியாக நடந்து கொள்பவர்களை வெட்டாம்பட்டி கிராமியத் தளத்திலும் வைத்தேன். இதில் குட்டாம்பட்டி தளத்தில் **அய்யாசாமி** என்ற பெரியவர் பல சிறுகதைகளில் வருவார். இவர் நல்லவர். ஆனால் வல்லவர் இல்லை. நீதி நெறி மிக்கவர் ஆனால் தனது கருத்தை செயலாக்கம் கொடுக்கும் ஆள்பலமோ, பணபலமோ இல்லாதவர் என்றாலும் இறுதியில் இவரே கதையின் உட்பொருள் நோக்கத்தை எடுத்துரைப்பார். இதைத்தான் சிலர் பிரச்சார நெடி என்றார்கள். குட்டாம்பட்டி தளத்தை வைத்து **அங்கே கல்யாணம் இங்க கலாட்டா, எந்நன்றி கொன்றார்க்கும், பால்கணக்கு** உள்ளிட்ட சிறுகதைகளையும் **ஒரு கோட்டுக்கு வெளியே, சோற்றுப்பட்டாளம்** போன்ற நாவல்களையும் ஆரம்ப காலத்தில் எழுதினேன். சட்டாம்பட்டி தளத்தில் **ஒரே ஒரு ரோஜா, ஒரு சந்தேகத்தின் பலன், அன்னக்கிளி** போன்ற சிறுகதைகளையும், **இல்லம்தோறும் இதயங்கள்** போன்ற ஆரம்பகால நாவல்களையும் வெட்டாம்பட்டித் தளத்தில் **ஊருக்குள் ஒரு புரட்சி** என்ற நாவலும் உருவாயின என்றாலும், ஒரு கால கட்டத்திற்கு பிறகு இந்த மூன்று கிராமங்களையும் ஒரே கிராமமாக ஆக்கி விட்டேன். அதே சமயம் ஒரு சாதி பெரும்பான்மை கிராமம், ஒரு சாதிமுழுமையில்லா கிராமம், பலசாதி சமச்சீர் கிராமம் என்று மூவகைக் கிராமங்களை உருவாக்கி அங்கே சிறுபான்மையினர் அனுபவிக்கும் கொடுமைகளையும் எடுத்துரைத்தேன். இந்த மாற்றத்தில் அன்று தற்கொலை செய்து கொண்ட காதல் தோல்வி பெண்கள் இன்று காதலனுக்கு எதிராக காவல் நிலையம் செல்கிறார்கள். அன்று வீட்டுக்குள் அடைபட்ட கிராமியப் பெண்கள் இன்று அறிவொளி இயக்கம், வீதி நாடகம் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள். அன்று காவலருக்கு கைகட்டி, வாய்புதைத்தவர்கள் இன்று அந்த நிலையங்களை முற்றுகையிடுகிறார்கள். இதன் பிரதிபலிப்பாக காலக்கிழம், சிக்கிமுக்கி

கற்கள், உட்கார்ந்தவள் போன்ற சிறுகதைகளும், **நெருப்புத் தடயங்கள்** என்ற நாவலும் உருவாயின.

அலுவலகக் கதைகளில் எள்ளல் நடையைக் கொண்டு வந்தேன். பொதுவாக அங்கதம் என்பது எனது எல்லாக் கதைகளிலும் இடம் பெற்றாலும், அலுவலகக் கதைகளில் இவை தூக்கலாக நிற்கும். ஆனாலும், இன்று அலுவலக நோக்கும் போக்கும் பெருமளவும் மாறியுள்ளன. அன்றைய ஆட்சித்தலைவர் போல் இன்றைய ஆட்சித்தலைவர் சர்வதிகாரியாக இயங்கமுடியாது. அன்று மேலதிகாரியை படர்க்கையில் பேசவேண்டிய அலுவர்கள் இன்று சங்கப் பின்னணியில் நேருக்கு நேராக ஆவேசிக்கிறார்கள். இவற்றை **சுண்டைக்காய் சுமப்பவர்கள்** போன்ற சிறுகதைகளில் பிரதிபலிக்க வைத்திருக்கிறேன்.

அன்றுமுதல் இன்றுவரை அலுவலகக் கதைகளில் பண்டாரம் என்ற ஒரு பாத்திரத்தைத் தொடர்ந்து கையாண்டு வருகிறேன். இந்தப் பண்டாரம் **கலெக்டர் வருகிறாரில் ஒரு கோடி ஒரு ரூபாய் என்று கலெக்டரிடம்** கூசாமல் பொய்சொல்லி சிக்கலில் மாட்டிக் கொண்டவன். இப்படிப்பட்டவனுக்கும் நான் பதவி உயர்வு கொடுத்தேன். இதே பண்டாரம் லஞ்ச லாவண்யங்களில் ஈடுபட்டாலும் எப்படி மேலதிகாரிகளை நடுநடுங்க வைத்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்கிறான் என்பதையும் **பண்டாரம் படுத்தும்பாடு, நீதியில்லாத விசாரணை** போன்ற சிறுகதைகளில் சித்திரித்தேன். பழத்தோட்டம், ஆட்டுத்தலை, அசைக்க முடியாது, சொகுசுகாரர்கள், டபிள்யு.கண்ணா டாக்டராகிறார் முதலிய அன்றைய அலுவலகக் கதைகளில் இருந்து வேலையில் காலமாற்றத்தை பிரதிபலிக்கும் **வேலையில் காயம், இவர்களின் உலகம், அரவிந்தும் ஆறுமுகமும், நான்காவது குற்றச்சாட்டு** போன்ற இன்றைய சிறுகதைகளைப் படைத்திருக்கிறேன். புது டில்லியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றிய போது மேட்டுக்குடியினர் என்னைப் படுத்திய பாட்டை வைத்து எழுதிய நாவலான **வேரில் பழுத்த பலாவுக்கு** சாகித்திய அக்காதெமி பரிசு கிடைத்தது.

எனது கல்லூரி பருவத்தில் எனக்குக் கிடைத்த சேரி அனுபவம் புதுமையானது. முப்பத்தாறு குடித்தனங்களுக்கிடையே வாழ்ந்த எனது சித்தப்பா வீட்டில் தங்கி நான் படித்தேன். அறைக்குள் படுத்தால் மூட்டைப்பூச்சி, வெளியே படுத்தாலோ கொசுக்கடி ஆனாலும், அங்கே பட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த லாரி டிரைவர், தோசைக்கார ஆயா, வண்டிக்கார மாரியப்பன், தொழிலாளி கண்ணையா, ஜெய்லர் தங்கமணி உள்ளிட்டோரை கொண்ட முப்பது குடித்தனங்களோடு

ஒரு குடித்தனமாக வாழ்ந்தேன். இங்கேதான் எலிசபெத் ராணிகளை விட வலுவான வீட்டுக்கார அம்மாக்களின் ஆணவத்தையும், சிற்சில சமயங்கள் எளிய மக்கள் அவர்களை எதிர்த்துப் போராடியதையும் கண்ணாரக் கண்டேன். அந்தக் குடித்தன வீட்டில் நான் ஒருவன் மட்டுமே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவன். என் மீது அத்தனை பேருக்கும் ஒரு தனி பாசம். நானும் அவர்களோடு ஒன்றிப் போய்விட்டேன். இங்கே ஒரு காதல் அனுபவமும் கிடைத்ததுண்டு. இந்த அனுபவங்களை அடிப்படையாக வைத்து, நல்லாக் கேட்டே ஒரு கேள்வி, மண்சுமை, பூவம்மாவின் பிள்ளை, இடம்தேடி, காகிதப் பெண்கள் போன்ற சிறுகதைகளையும் வளர்ப்பு மகள் என்ற நாவலையும் எழுதினேன். இதனை மத்திய உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் பேராசிரியர் சாலை இளந்திரையன் பாடநூலாக வைத்தார். பின்னாளில் சேரிகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்த நான் அவற்றின் நவீனத் தொழிலான கள்ளச்சாராயம், அதை எதிர்த்துப் போராடும் சேரி மக்கள் போன்றவற்றை மையமாக வைத்து **தாழம்பூ** என்ற நாவலை எழுதினேன். ஒரு பெண் குறிப்பாக சேரிப்பெண் அரசாங்க அலுவலகத்தில் தற்காலிக ஊழியராக சேர்க்கப்பட்டால் அவளுக்கு என்னென்ன கசப்பான அனுபவங்கள் நிகழும் என்ற அலுவலக தில்லுமுல்லுகளை இணைத்து இந்த நாவலை ஆக்கினேன். மண்சுமை, இடம் தேடி, புதிய விதைகள் போன்ற ஆரம்பகால சிறுகதைகளில் இருந்து கொடிகாய்ச்சி மரம், குப்பைத் தொட்டி, பதிலடி, காகிதப் பெண்கள் போன்ற பிற்காலச் சிறுகதைகள் சிறிது மாறுபட்டவை.

ஆனாலும், நான் வெறுமனே பாட்டாளி வர்க்கத்தை மட்டும் எழுதாமல் சமுதாயத்தால் கண்டுகொள்ளப்படாத மனிதர்களை எழுதுவதை ஒரு இலக்கியத் தொண்டாக கருதத் துவங்கினேன். இந்த அடிப்படையில் அலிகளைப் பற்றி **வாடாமல்லி** என்ற தலைப்பில் ஒரு நாவல் எழுதினேன். கடலூருக்கு அருகே மஞ்சக் குப்பம் என்ற கிராமத்தில் நடைபெற்ற அலி தோழர்களின் கூத்தாண்டவர் விழாவை பார்த்து பின்னர் நூற்றுக்கணக்கான, அலிகளை ஆய்வு செய்து உருவான படைப்பு இது. பொதுவாக ஓர் அலி ஆண் உடம்பில் சிறைப்பட்ட பெண். மானுடத்தின் மூன்றாவது பரிணாமம். இவர்கள் படாதபாடு படுத்தப்படுகிறார்கள். இந்த நாவலுக்கு ஆதித்தனார் விருதாக ஐம்பதாயிரம் ரூபாய் கிடைத்தது. இந்த நாவலைப் படித்துவிட்டு அலித்தோழர்கள் தங்களுக்கென்று ஒரு சங்கத்தைத் துவக்கினார்கள். இவர்களுக்கு இந்தப் பரிசுப் பணத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் சங்கத்திற்கு கொடுத்தேன். இந்த நாவலில் அலிகள் தங்களை அரவாணிகள்

என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு ஒரு சுயமரியாதை கொடுத்திருக்கிறேன். இதுபோல் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு, சகநோயாளிகளுக்காக ஒரு போராளியாகவும் இயக்கமாகவும் மாறிய ஒரு பெண்ணைப் பற்றி **பாலைப்புறா** என்ற நாவலை எழுதினேன். மத்திய அரசில் களவிளம்பரத்துறையில் தமிழக தலைமை அதிகாரியாக பணியாற்றிய நான் தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களுக்குச் சென்று எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். பல எய்ட்ஸ் நோயாளிகளோடு நேரடியாகப் பேசியிருக்கிறேன். இந்த அனுபவத்தின் விளைவே பாலைப்புறா. இந்த நோயாளிகளை நேர்காணல் செய்யும் போது ஓரினச் சேர்க்கைக்காரர்கள், போதை மருந்து உட்கொள்ளும் சிறுவர்கள், இளைஞர்கள் ஆகியோரையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கூடவே, ஆண்மைக்குறைவு ஏற்பட்ட ஒரு சிலரையும் சந்திக்க முடிந்தது. இவற்றின் அடிப்படையில் **ஒத்தைவீடு, புதைமண்** ஆகிய இரண்டு குறுநாவல்களை எழுதி வெளியிட்டேன்.

இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது கல்வராயன் மலைக்கு அரசுப் பணி நிமித்தமாக சென்றேன். அங்கே உள்ள மலைவாழ் மக்கள் எப்படி கொடுமைப்படுத்தப் படுகிறார்கள் என்பதைக் கண்டறிந்தேன். இந்த அனுபவத்தின் அடிப்படையில் **உயரத்தின் தாழ்வுகள்** என்ற குறுநாவலை எழுதினேன். இந்த நாவலில் மலைவாழ் மக்களுக்கு இயல்பாக இல்லாத போராட்டக் குணத்தை யதார்த்த பாணியில் சித்தரிக்க அதுவே இப்போது யதார்த்தமாகி விட்டது. ஓர் எழுத்தாளன் தனது அனுபவ காலத்தில் நடைபெறாத ஒன்றை அதே சமயம் எதிர்காலத்தில் நடக்கக் கூடியதைத் தீர்க்க தரிசனமாகக் கண்டறிந்து எழுத வேண்டும் என்பது எனது இலக்கியக் கோட்பாடுகளில் ஒன்று என ஏற்கெனவே தெரிவித்ததை இங்கே மீண்டும் கோடிக்காட்ட விரும்புகிறேன்.

மனோதத்துவ படைப்புகளையும் உருவாக்கியிருக்கிறேன். புதுடில்லியில் இரண்டாவது கட்டமாக வீறுமிக்க தமிழனாக நான் பணியாற்றிய போது மனஅழுங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஓர் இளைஞனோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவனோடு மனநல மருத்துவர்களைச் சந்தித்தது உண்டு. இந்த அனுபவத்தில் **வெளிச்சத்தை நோக்கி** என்ற நாவலை எழுதினேன். **மனம் கொத்தி மனிதர்கள்** போன்ற சிறுகதைகளையும் எழுதினேன். எனது பெரும்பாலான படைப்புகள் பெண்ணியம் சார்ந்தவை. அதேசமயம் ஒரு பெண்ணை அவள் சமூக விரோதியாகவோ, அல்லது சகபெண் விரோதியாகவோ இருந்தால் அவளை விமர்சிப்பது பெண்ணியத்திற்கு

எதிரான எழுத்தல்ல என்பது எனது திட்டவட்டமான இலக்கியக் கொள்கை. ஒரு பெண் அல்லது ஆண் மணமுறிவு ஏற்படாத ஓர் ஆடவனையோ அல்லது பெண்ணையோ காதலிப்பது மனித விரோத செயல் என்பது என் கருத்து. இந்த அடிப்படையில் பிறபகல் என்ற நாவலையும், அவள் ராட்சஸி போன்ற ஆரம்பகால சிறுகதைகளையும் எழுதியிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒருமித்து நிற்பது போல் படைப்புகள் வரவேண்டும் என்பது என் கருத்து. இந்தக் கருத்து யதார்த்தத்துக்கு முரணில்லாத வகையில் பல்வேறு சிறுகதைகளிலும் நாவல் படைப்புகளிலும் வெளிப்பட்டு உள்ளன. தலித்திய கதைகளை தலித்துகள் தான் எழுதவேண்டும் என்ற இலக்கிய கோட்பாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும், அந்தக் கோட்பாட்டிற்குப் பின்னால் உள்ள தார்மீகக் கோபத்தை என்னால் புறந்தள்ள இயலவில்லை.

ஓர் எழுத்தாளன் படைப்பில் அரசியல் வீச்சு இருக்கக் கூடாது என்பார்கள். இது குளிர்சாதன அறைகளிலிருந்து கற்பனைக் கதைகளையும், குற்றவியல் கதையையும் எழுதும் எழுத்தாளனுக்குப் பொருந்துமே தவிர, மக்கள் எழுத்தாளர்களுக்குப் பொருந்தாது. அரசியல் நம்மோடு கலந்த நாம் குடிக்கும் குடிதண்ணீர். இதில் சாக்கடை கலக்காமல் இருப்பதற்கு எழுத்துப் புரட்சியும் செய்தாக வேண்டும். இந்தக் கருத்தின் அடிப்படையில் ஒரு மாமரமும் மரங்கொத்தி பறவைகளும் என்ற சிறுகதைத் தொகுப்பைக் கொண்டு வந்தேன். காலில் விழுந்த கவிதைகள், அன்னை இட்ட தீ, பின்னோக்கிய ஓட்டம், யானைப்பூச்சிகள், எதிர்பரிணாமம் போன்ற பல்வேறு சிந்தனைக்கதைகளையும் எழுதியிருக்கிறேன். சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் முதல் அரசியல் அங்கதக் கதையாக ஐம்பெரும் விழாவும் பின்னர் கோரைப்புற்களும் வெளியாயின.

ஒரு புத்தகத்தைப் படிக்கும்போதே ஓர் எழுத்தாளனுக்குப் பல்வேறு எதிர்மறைச் சிந்தனைகள் ஏற்படலாம். இந்தச் சிந்தனை ஒரு சில இடங்களிலும் கிடைக்கலாம். வியாசரின் மகாபாரதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்தபோது ஏகலைவன் கொடூரமாகப் புறந்தள்ளப்பட்டது ஓர் அடாவடித்தனமான அரசியல் ஆகத் தோன்றியது. இதை வைத்து ஓர் ஏகலைவியின் கட்டை விரல், ஏகலைவன்களைத் தேடி போன்ற சிறுகதைகளை எழுதினேன். திருத்தணிக்கு அருகேயுள்ள திருவாலங்காடு சிவாலயத்திற்குச் சென்றபோது காளிக்கும், சிவனுக்கும் நடைபெற்ற நாட்டிய போட்டியும், அவளை நேரடியாக வெல்ல முடியாத சிவன் தனது

வலது காலை காதோரம் கொண்டு வந்து ஆடுகிறார். காளியால் அப்படி ஆட முடியும். ஆனால், நாணம் அவளைத் தடுக்கிறது. இந்த நயவஞ்சகத்தால் அவள் தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு ஊருக்கு அப்பால் தள்ளி வைக்கப்படுகிறாள். இது புராண அடாவடி. அதே காளி, பாரதியின் புதுமைப் பெண்ணாலும், அறிவொளி பெண்களின் செயல்பாட்டாலும் நாணமும், பெண்மையும் நாய்களுக்குத்தான் என்பதை உணர்ந்து சிவனாரை மீண்டும் நாட்டியப்போட்டிக்கு அழைப்பதாக **மாறிய பாதம்** என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதினேன். இது பெண்ணியம், தலித்தியம், பாட்டாளி வர்க்கம், மேட்டுக்குடியின் மோசடி போன்றவற்றை வெளிக்காட்டும் பன்முகத் தன்மை வாய்ந்த சிறுகதை என்று நான் சொல்லவில்லை. ஆனால் தோழர்கள் அப்படிச் சொல்கிறார்கள்.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள் இதேபோல் ஒரு படைப்பாளி தான் காணும் காட்சிகளைத் தற்குறிப்பு அணியாகவோ, அல்லது குறியீடுகளாகவோ சமூக நோக்கில் எழுத முடியும் என்று என் அனுபவம் கூறுகிறது. கர்நாடக மாநிலத்தில் சிமோகா மலைக்காட்டில் யானைகளைப் பார்த்த அனுபவத்தை வைத்து **யானையின் காதல்** என்று ஒரு சிறுகதை எழுதினேன். நெல்லை மாவட்டத்தில் ஒரு புறாக்கூண்டைப் பார்த்துவிட்டு **சிறைச்சாலை என்ன செய்யும்** என்று ஒரு சிறுகதை ஆக்கினேன். என் கண்முன்னால் ஒரு மேட்டுக்குடி நாயும், தெருவோர நாயும் நடந்து கொண்டதை அடிப்படையாக்கி **அர்த்தமுள்ள பார்வை** என்ற சிறுகதையை எழுதினேன். இந்த அனுபவத்தில் **நாட்டு மிருகங்கள்** போன்ற மிருகநேய கதைகளையும் எழுதியிருக்கிறேன். **காதல் குருவிகளின் பார்வையிலே** என்ற குருவி கதையையும் எழுதியிருக்கிறேன். கர்நாடகத்தில் பணியாற்றும் போது அங்கே நிலவும் தேவதாசி முறையைச் சுட்டிக்காட்டும் **சாக்கம்மா** சிறுகதையையும் கர்நாடக மக்களைப் பற்றிய **கள்ளி நியாயம், இடையில் வந்த இரிச்சான், தாய்மையில் தவித்து,** குப்பைத் தொட்டில் போன்ற சிறுகதைகளையும் எழுதியிருக்கிறேன். பெற்ற பிள்ளைகளாலும், உற்றார் உறவினராலும் கைவிடப்பட்டு கையறுநிலையில் தவிக்கும் முதியவர்களைப் பற்றி நேரிடை அனுபவத்தில் **பழத்தைத் தாங்கிய சருகு, பாசப்பிரிவினை, கண்மூடம்மா கண்மூடு,** தாயாகி மகளாகி போன்ற சிறுகதைகளையும் ஆக்கித் தந்திருக்கிறேன். இதேபோல் கட்டிடத் தொழிலாளரைப் பற்றிய **ஒருநாள் போதுமா,** மின்சாரவாரியத்தின் அணைக்கட்டுகளில் பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளர்களின் பிரச்சனைகளையும் இதனால் மீண்டும் பாட்டாளியான ஒரு சாமியாரின் மனமாற்றத்தையும் ஆன்மீகம் கலந்து சித்தரிக்கும் **புதிய திரிபுரங்கள்** என்ற குறுநாவலையும்

அந்தக்கால தனியார் பள்ளிக் கொடுமைகளை விளக்கும் கேள்வித்தீ என்ற குறுநாவலையும் எழுதியிருக்கிறேன்.

எனது நாற்பதாண்டுகால இலக்கிய அனுபவத்தில் இயக்கங்கள் சில சமயங்களில் தனிமனிதனாகி விடுகிற அவலத்தையும், மகத்தான தனிமனிதர்கள் இயக்கங்களாவதையும் நேரில் பார்க்க முடிந்தது. இதனால் நொந்து போயிருக்கிறேன். வெந்து போயிருக்கிறேன். வர்க்க பேதமற்ற, தனிநபர் சொத்துரிமை அற்ற ஒரு சமூகம் உருவாக வேண்டும், உருவாகியே தீரும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. என்றாலும், வாழ்க்கை வர்க்க நேர்க்கோட்டில் அப்படியே செல்வதல்ல என்பதை என் அனுபவம் உணர்த்தத் துவங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் தோளில் துண்டுபோட உரிமையில்லாதவர்களுக்கு தலைப்பாய் கட்டிவிட்ட வைகுண்டரும், மகத்தான ஆன்மிகப் புரட்சியாளரான வள்ளலாரும் என் இலக்கியத்திற்கு வழிதுணையாக வருகிறார்கள். இப்போது கிடைக்கும் இந்த அனுபவத்தில் அனைத்து மனிதர்களுக்கும் இறுதிக்காலத்தில் ஏற்படக்கூடிய மறுஉலக அல்லது மரணத்திற்குப் பின்னான பயத்தை அல்லது எதிர்பார்ப்பைச் சுட்டிக்காட்டும் பல்வேறு சிறுகதைகளைக் கொண்ட **ஆகாயமும் பூமியுமாய்** என்ற தொகுப்பைக் கொண்டு வந்தேன்.

கதாசிரியரான நான் கட்டுரை ஆசிரியராகவும் மாறியிருக்கிறேன். ஒருவேளை இது கதைச்சரக்கு தீர்ந்து போனதால் ஏற்பட்ட முயற்சிகளோ என்று நான் கூட நினைக்கிறேன். ஆனாலும், கட்டுரைகளும் நன்றாக வந்துள்ளதாக நண்பர்கள் குறிப்பிடுகிறார்கள். பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய **சமுத்திரம் கட்டுரைகள்,** எனது கதைகளின் பின்னணிகளை விளக்கும் **கதைகளின் கதைகள்** மகத்தான தலைவரான கலைஞருடன் எனக்கு மோதலாகவும், காதலாகவும் ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய **என் பார்வையில் கலைஞர்** என்ற தொகுப்பையும் கொண்டு வந்திருக்கிறேன். இறுதியாகச் சொல்லப்பட்ட படைப்பு வாழும் தலைவர்களின் வரலாற்று குறிப்புகளில் ஒரு புதுமை என்று ஒரு பிரபல பத்திரிக்கை பாராட்டியது.

வாழ்க்கையின் மாலைப்பகுதிக்கு வந்திருக்கும் நான் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நம் முப்பாட்டிகள் மாராப்புப் போட உரிமை கேட்டு பதினெட்டாம் நூற்றாண்டில் நடத்திய முப்பதாண்டுகால **தோள்சீலைப் போராட்டத்தைச்** சித்தரித்து ஒரு வரலாற்று நாவலை எழுதத் திட்டமிட்டிருக்கிறேன். இதேபோல் பெரியார் நடமாடிய இந்தத்

தமிழ்பூமி எப்படி மீண்டும் மேய்ச்சல் நிலமாகிவிட்டது என்பதை அரசியல்வாதிகளை அவர்களின் மெய்யான பெயர்களோடு பாத்திரங்களோடு விரிவாக எழுதப்போகிறேன். இவை தமிழகத்தில் எப்படி சினிமாத்தனங்கள் அரசியலில் எப்படி மண்டியாகிவிட்டன என்பதையும் சித்தரிக்கப் போகின்றன. கூடவே விந்தன் போன்ற தகுதிவாய்ந்த படைப்பாளிகள் மேட்டுக்குடியினரால் இருட்டடிப்பு முயற்சிக்கு உட்படுத்தப்பட்ட சாதீயத்தையும், வர்க்க பேதத்தையும் மனதில் உள்வாங்கிக் கொண்டு இன்று என்னைப் போன்ற சமூக நோக்கு படைப்பாளிகளின் பாதையில் எங்களை விடச் சிறப்பாக எழுதும் இளம் படைப்பாளிகளை மக்களுக்கு பிரசாரப் படுத்துவதையும் ஒரு கடமையாகக் கொண்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தளவில் எழுத்து என்பது சத்திய உபவாசம். உபன்யாசம் அல்ல. இதில் முழுமையாக ஒன்றிவிட்டால் அனைத்து இலக்கிய வகைகளும் கைவசப்படும். இவை கைவசப்பட்டிருக்கிறதா என்பதை அறியும் முன்பு சில யதார்த்தமான ஓரளவுக்குக் கடுமையான இலக்கியக் கொள்கைகளைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

சூத்திரக்கோடுகளுக்கும் கீழே உள்ளவர்கள் கூட மேட்டுக்குடி மயமாகி தங்கள் பின்னணியை புறந்தள்ளி மேட்டுக்குடியை மையமாக வைத்து எழுதி பெயர் வாங்கலாம். ஆனால் இந்தப் பெயரோ வெறும் வீக்கம்தான். பலூன் மாதிரி உடைந்து போகக் கூடியது.

ஓர் எழுத்தாளன் தான் கொண்ட கருப்பொருளில் மெய்யாக ஈடுபட்டு அதில் எந்தவித தொடர்கதை, பத்திரிகை சாகசங்களையும் மேற்கொள்ளாமல் எழுதினால் அது மகத்தான படைப்பாக வந்தே தீரும்.

இரண்டாவதாக எழுத்தில் எளிமை வேண்டும். இனிமையும் வேண்டும். எந்த மனிதப் பாத்திரத்தை வைத்து எழுதுகிறோமோ அந்தப் பாத்திரம் குறைந்தது பத்தாவது படித்திருந்தால் அவளுக்கு அல்லது அவனுக்கு தன்னைப் பற்றி எழுதியது புரிய வேண்டும். அதே சமயம் ஒவ்வொரு பத்தியிலும் அடடே என்று சொல்லும்படி இரண்டு வரிகளாவது வரப்பட்டிருக்க வேண்டும். வாசகனை பிரமிக்க வைப்பது மெய்யான எழுத்தல்ல. நாமும் இப்படி எழுதலாமே என்று அவனை ஊக்குவிக்கும் படைப்பே உண்மையான படைப்பாகும்.

மூன்றாவதாக, இலக்கியமாக எழுதவேண்டும் என்று நினைத்துக் கொண்டு எழுதுவது மருந்தைக் குடிக்கும்போது குரங்கை நினைக்காதே என்று உபதேசிப்பது மாதிரி. கருப்பொருளும் நம்

மனப்பொருளும் ஒன்றித்தால் அதுவே இலக்கிய நயமாகும். உருவம் சரிவர வந்தால் உள்ளடக்கம் நயமாகி விடும்.

நான்காவதாக ஒரு மையக்கருத்தை எழுதும்போது அதைப்பற்றி குறைந்தபட்ச விவரமாவது இருக்க வேண்டும். இல்லையென்றால் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக **மாறிய பாதம்** என்ற ஐந்தே ஐந்து பக்கச் சிறுகதைக்காக நான் சுமார் ஏழெட்டு நாட்டியப் புத்தகங்களைப் படித்தேன். **யானைப்பூச்சிகள்** என்ற சிறுகதைக்காக தேனீக்களின் திவ்ய வரலாறு என்று சென்ற நூற்றாண்டின் முப்பதுகளில் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தையும், பறவைகளைப் பற்றிய பல்வேறு ஆங்கிலப் புத்தகங்களையும் படித்தேன். **பொறுத்தது போதாது** என்ற புராண வழி சிறுகதைக்கும் **தோழி செய்த புரட்சி** என்ற சங்ககால வழி சிறுகதைக்கும் பல்வேறு புத்தகங்களைப் படித்தேன். **பாலைப்புறா** நாவலுக்காக இருபது நூல்களையாவது படித்திருப்பேன். இப்போது **தோள்சீலை** நாவலை எழுதுவதற்காக முப்பது புத்தகங்களை படித்து முடித்து விட்டேன். ஆனாலும், அந்த நாவலை எழுதும் துணிச்சல் இன்னும் எனக்கு வரவில்லை. எழுத்து என்பது கருவிலேயே திருவுடையான் என்பது மாதிரி அல்ல. அது யாருக்கு வேண்டுமென்றாலும் வரலாம். எனக்கே வரும்போது எவருக்கு வேண்டுமென்றாலும் இந்தக் கலை கைவரப் பெறும். இதற்கு மெய்யான ஈடுபாடு, சகபடைப்புகளை மதித்தல், முன்னோர்களின் படைப்புகளை முற்றுகையிட்டு வாசித்தல் போன்றவை நிகழவேண்டும். உழைப்புதான் எழுத்து. உழைக்கும் மக்களைப் பற்றியதே எழுத்து. மக்கள்தான் இலக்கியம். இதுவே மக்கள் இலக்கியம்.

முப்பதாண்டு கால எழுத்துப்பயிற்சியில் இப்போது கூட ஒரு சிறுகதையை எழுதவேண்டும் என்றால் அதை ஒரு மாணவத்தனத்தோடுதான் அணுகுகிறேன். இதுவரை எனது எந்தக் கதையும், எந்தப் படைப்பும் எனக்கு முழுநிறைவைக் கொடுக்கவில்லை. இந்த பிரபஞ்சமே விரிந்து கொண்டிருக்கும்போது இப்படி ஒரு நிறைவை எதிர்பார்க்கக்கூடாதுதான். நிறைவின்மை ஒரு குறையல்ல. அது எதிர்கால எழுத்து வளத்திற்கு ஓர் அச்சாரம். ஆக மொத்தத்தில் எழுதுவதற்காக சிந்திக்காமல் சிந்திப்பதால் எழுதினால் அது சமூக நோக்காக இருந்தாலும், குடும்பநல நோக்காக இருந்தாலும் சிறப்புறும். பிரபலமான எழுத்தாளர்களெல்லாம் சிறப்பான எழுத்தாளர்களும் அல்ல, சிறப்பான எழுத்தாளர்கள் எல்லாம் பிரபலமானவர்களும் அல்ல என்ற யதார்த்தத்தை இன்றைய இளம் படைப்பாளிகள் புரிந்து கொண்டால் ஆரம்பத்தில் இவர்கள் தங்கள் எழுத்தைத்

தீர்மானிப்பார்கள். பின்னர் இந்த எழுத்தே இவர்களைத் தீர்மானிக்கும். இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் பன்முக அனுபவத்தாலும் எனக்குக் கிடைத்த பேரனுபவம் இது. ஆக மொத்தத்தில் நானும் என் எழுத்தும் வேறல்ல.

மக்கள் இலக்கியத்தில் எளிமை, இனிமை, நேர்மை, புதுத்தகவல்கள் போன்றவைகள் இருக்க வேண்டும் என்று விடாப்பிடியாக எழுதுவதால் என்னுடைய நூல்கள் முனைவர் பட்டங்களுக்கு ஆய்வு செய்யப்படுகின்றன. பல்வேறு பல்கலைக் கழங்களில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு மேடைகளில் மேற்கோள் காட்டப்படுகின்றன. இதில் எனக்கு கிடைத்த வெற்றி என் வெற்றியல்ல. மக்கள் இலக்கிய வெற்றி.

சிவசங்கரன், தி.க.

1925 மார்ச்சு 30இல், திருநெல்வேலியில் பிறந்த நான், மிக இளம் வயது முதல் (9-10 வயதுப் பருவத்தில்) தேசவிடுதலை இயக்கத்தால் ஈர்க்கப்பெற்றேன். அதற்கான விதைகளை விதைத்தவர், மகாகவி பாரதியார்! மிக முக்கியமாக, அவரது தேசிய கீதங்கள்!

அப்போது காந்தியடிகளின் தலைமையில், இந்திய நாடெங்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நமது மக்களின் சுதந்திரப் போராட்டம், காட்டுத் தீ போலப் பரவிய காலம்! வீட்டுக்கு வீடு, விடுதலை வேட்கை மூண்டெழுந்த காலம்! நாட்டின் சகல பகுதி மக்களும், அடிமைத் தளைகளை அறுத்தெறியத் திரண்டு நின்ற காலம்! மகாகவி பாரதி, 1921-இல் அமரர் ஆகி விட்டாலும், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரம் தலைமையில், நெல்லை மாவட்டத்தில், அதன் தலைநகரான நெல்லையில் விடுதலை வேள்வியில், அலை அலையாக, அறப்போராட்டங்களில் திரள் திரளாக, தேச பக்தர்கள் ஈடுபட்டுச் சிறைகளை நிரப்பிய காலம்! புரட்சி வீரன் பகத்சிங்கும், அவரது தோழர்களும், தூக்கு மேடையில் தமது இன்னுயிரை ஈந்து, தியாகத் திருவிளக்குகளாக ஒளி வீசிய காலம்! அது மிகக் கொந்தளிப்பான காலம்!

இந்தக் காலகட்டத்தில், எங்கள் வீதி வழியே பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டு, தேசபக்தர்கள் ஊர்வலமாக அணி வகுத்துச் செல்வர். அவர்களது வீறுமிக்க பாடல்கள் ஒவ்வொன்றும், என் இளம் இதயத்தில், இனம் புரியாத எழுச்சியையும் கிளர்ச்சியையும் தூண்டிவிட்டன. அன்று முதல், பாரதி பாடல்களைப் பயின்றேன். பள்ளி வாழ்க்கையிலும், கல்லூரி வாழ்க்கையிலும், பாரதியின் எழுத்துக்களையும் இயக்கத்தையும் மேன்மேலும் நூல்கள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் - கூட்டங்கள் வாயிலாகவும், அறியத் தொடங்கினேன். அந்தக் கல்வி இன்றளவும் தொடர்கிறது! இனியும் தொடரும்!

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' எனும் பாரதி தத்துவத்தின் - வாழ்க்கை நெறியின் மகத்துவத்தைத் தமிழ் மக்களுக்குத் தமது வாழ்நாள் எல்லாம் வலியுறுத்தியவர்கள், பாரதிதாசனும், வ.ரா.வும், ஜீவாவும். எனவே தான், என்னைச் செதுக்கிய சிற்பிகளின் முன்னணி

வரிசையில் அவர்கள் இடம் பெற்றுள்ளனர். இம்மூவரது பேச்சும், எழுத்தும், வாழ்வும், பணிகளும் இவர்கள் மகாகவியின் மெய்யான வழித்தோன்றல்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

1941-ஆம் ஆண்டில் கல்லூரியில் அடியெடுத்து வைத்தபோது, பாரதிதாசன், வ.ரா. ஆகியோரின் படைப்புக்களுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. 1947-ஆம்ஆண்டு அக்டோபர் 13-இல் எட்டயபுரத்தில் பாரதிமணி மண்டபத் திறப்பு விழாவில், "பாரதிவழி" எனும் தலைப்பில் ஜீவா நிகழ்த்திய ஒரு மணி நேரச்சொற்பொழிவைக் கேட்ட பிறகு, அவரது சீடர்களில் ஒருவனாகி விட்டேன்! 'ஜனசக்தி' ஆசிரியர் என்றஅளவில் மட்டுமன்றி, பாரதியின் புரட்சிகரத் தத்துவத்தை, அருமை பெருமைகளைத் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் பரப்பிய ஜீவாவை நேசித்தது போலவே, நேரடிப் பழக்கம் இல்லாவிட்டாலும், 'மணிக்கொடி' ஆசிரியர் வ.ரா.வின் 'மகாகவி பாரதியார்' என்னும் வாழ்க்கை வரலாறும், அவரது கட்டுரைகளும், பிற படைப்புக்களும், இன்றளவும் எனக்கு உத்வேகம் ஊட்டி வருகின்றன. வ.ரா.வின் 'மழையும் புயலும்', 'நடைச்சித்திரம்' மற்றும் பல நூல்களை, 1941-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிப் படித்தேன். அவரது 'சுந்தரி', 'கோதைத் தீவு' 'தமிழ்ப் பெரியார்கள்' எனும் படைப்புகள், மிகவும் குறிப்பிடத் தக்கன. தமிழும், தமிழ் மக்களும் தமிழ்நாடும் எல்லாவகையிலும் மறுமலர்ச்சி பெற வேண்டும். பாரதி பாதையில் தமிழகத்தில் ஒரு புது யுகத்தைக் காண வேண்டும் எனும் சிந்தனையின் வரி வடிவங்களே வ.ரா.வின் எழுத்துக்கள் எனலாம். (வ.ரா.தோற்றம் 1889 மறைவு 1951)

1941-ஆம் ஆண்டில், பாரதிதாசன் கவிதைகள் முதற்தொகுப்பை விலைக்கு வாங்கினேன். அத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கவிதையும், "சொல்புதிது, பொருள் புதிது, சுவை புதிது" எனும் பாரதியின் மணி மொழிக்குச் சான்றாக விளங்குகின்றன. பின்னர் பாரதிதாசன் கவிதைகளின் இதர தொகுப்புக்களையும் ஆவலுடன் படித்தேன். "அழகின் சிரிப்பு', குடும்ப விளக்கு', 'பாண்டியன் பரிசு" முதலிய நூல்கள் அவரது படைப்பாற்றலின் சிறப்புக்குச் சான்றாகும்.

"எங்கள் வாழ்வும்
எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று
சங்கே முழங்கு!"

என்னும் பாரதிதாசனின் வரிகள் தமிழ் நெஞ்சம் படைத்த ஒவ்வொரு தமிழனின் இதய ஒலியாகும். தன்மானம், பகுத்தறிவு, சமநீதி, சமுதாய

முன்னேற்றம், மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று இவற்றின் தலை சிறந்த அடையாளமாக விளங்கிய பாரதிதாசன், 29.4.1891-இல் தோன்றி, 21.4.1964-இல் மறைந்தார். 73 ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்தார் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

பாரதிதாசனின் ஆளுமை, பன்முகம் கொண்டது. எனினும், புதுமைப்பித்தன் கூறியது போல, "மகாகவி பாரதி நமக்கு விட்டுச் சென்ற மிக முக்கிய சொத்துக்களில் ஒன்று, பாரதிதாசன்" என்பதில் எள் அளவும் ஐயமில்லை. பாரதிதாசன் ஆளுமையைப்பற்றி, இன்னும் ஆழமான, விரிவான, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அமைந்த ஆய்வுகள் தேவை. "தமிழ்த் தேசியத்தின் தலைசிறந்த புரட்சிக்கவி" என்று அவரை வருணித்தால், அதில் தவறில்லை.

தோழர் ஜீவாவைப்பற்றி - அவரது பன்முகச் சாதனைகள் பற்றி விரிவாகக் கூற இங்கு இடமில்லை. எனினும், பாரதி, பாரதிதாசன் மரபை, மார்க்சியக் கண்ணோட்டத்தில் வளர்த்தெடுத்த தமிழகப் பொது உடமை இயக்கத் தலைவர், உன்னதமான சர்வதேசியவாதி தமிழ் அறிஞர் என்று தயங்காமல் குறிப்பிடலாம். மணிவிழாக் காணுமுன்னர் 18.1.1963-இல் மறைந்தார் கவிஞர், 'ஜனசக்தி' ஆசிரியர் ஜீவா.... அவரைப் பாரதிதாசன் சொற்களில், இவ்வாறு வருணிக்கலாம்.

"புதுநெறி காட்டிய புலவன்;
புதிய அறம் பாடவந்த
அறிஞன் - நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு
மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா
நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக்
கணையா விளக்கவன்!"

மகாகவி பாரதியைப் பற்றி, 1946-இல் திருச்சி வானொலியில் பாரதிதாசன் பாடிய இவ்வரிகள், பாரதியின் வழியைத் தமிழகத்தில் தமது இறுதி மூச்சுவரை பரப்புவதில் முனைப்புடன் ஈடுபட்ட புரட்சிப் புயல் ஜீவாவுக்கும் பொருந்தும்.....

பாரதியும், பாரதிதாசனும், வ.ரா.வும், ஜீவாவும் என்னைச் செதுக்கிய சிற்பிகள் மட்டும் அல்லர். தமிழகத்தில் எண்ணற்ற படைப்பாளிகளை, கவிஞர்களை, கலைஞர்களை, கலை இலக்கிய ரசிகர்களை, திறனாய்வாளர்களை, கல்வியாளர்களை, பொதுவாழ்வுத் தொண்டர்களைச் செதுக்கிய சிற்பிகளும் ஆவர்.

இந்த நால்வரின் படைப்புகளில் மிகச் சிறந்த அழகியல், சமுதாய அறிவியல், அறவியல் ஆகிய அம்சங்கள், இணைந்து பிணைந்துள்ளன. எனவே, இவர்களின் வாழ்வும் பணியும், நாம் என்றென்றும் போற்றத்தக்கன. பின்பற்றத்தக்கன.

நுகர்வுக் கலாச்சார மோகமும், சாதிவெறி, மதவெறி, மொழிவெறி, இனவெறி, அதிகார வெறி மற்றும் பல கயமைப்பண்புகளும், போக்குகளும் தமிழகத்திலும் இந்தியாவிலும் மேலோங்கி நிற்கும் இவ்வேளையில், நாட்டின் சுதந்திரத்திற்கும், இறையாண்மைக்கும், பல்வேறு வடிவங்களில் அபாயம் சூழ்ந்துள்ள இச்சமயத்தில், பாரதி - பாரதிதாசன் - வ.ரா. - ஜீவா ஆகியோரின் புரட்சிகரச் சிந்தனைகளும், தன்னலமற்ற தமிழ்த் தொண்டும், உலகு தழுவிய மனித நேயமும், மனிதகுல முன்னேற்ற இலட்சியங்களும், புவியெங்கும் பரந்து கிடக்கும் எட்டுக்கோடித் தமிழ் மக்களுக்கு, ஒரு புதிய விடியலைத்தரும் என்பது உறுதி.

இன்றும் நான் ஒரு இலக்கிய மாணவன்தான். என்னைப் பெரிய இலக்கிய ஆய்வாளன் என்றோ அல்லது இலக்கியக் கொம்பன் என்றோ என்றைக்குமே நான் சொல்லிக்கொண்டதில்லை. இப்படி விமர்சிப்பவர்கள் குறைந்தபட்சம், என்னை இலக்கியச் சிந்தனையாளன் என்றாவது ஒப்புக்கொள்வார்களா என்பதுதான் என் கேள்வி. க.நா.சு. ஒப்புக்கொண்டிருக்கிறார். அவருக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தவுடன் நண்பர்களிடம் அவர் சொன்னது என்ன தெரியுமா? “நீங்களெல்லாம் பாராட்டுவது இருக்கட்டும், தி.க.சி. என்ன சொல்கிறார்..?” என்றுதான் கேட்டார். இலக்கியக் கோட்பாட்டு ரீதியாக எனக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தாலும், அவர் நடத்திய ‘இலக்கிய வட்டம்’ இதழிலேயே என்னுடைய கட்டுரையை வாங்கிப் பிரசுரித்திருக்கிறார். அந்த அளவுக்கு இலக்கியத்தில் அப்போது ஜனநாயகம் இருந்தது. என்னை ஒரு இலக்கியச் சிந்தனையாளன் என்று அவர் ஏற்றுக்கொண்டதால்தான், அவருக்குக் கிடைத்த விருது பற்றி என்னுடைய அபிப்பிராயத்தை அறிய ஆர்வம் காட்டியிருக்கிறார். என்னை விமர்சிப்பவர்களுக்கு அந்த நேர்மை இருக்கிறதா?

கைலாசபதி மாதிரியோ அல்லது சிவத்தம்பி மாதிரியோ அல்லது வானமாமலை மாதிரியோ தி.க.சி. ஒரு ‘ஸ்காலர்’ இல்லய்யா... என்னைக் குறைந்தபட்சம் இலக்கியக் கட்டுரையாளன் அல்லது இலக்கியப் பத்திரிகையாளன் என்றாவது ஏற்றுக்கொள்வார்களா..?

சிவத்தம்பி என்னை இலக்கியக் களப்பணியாளர் - Literary Activist என்று சொல்கிறார். இதையாவது ஒப்புக்கொள்வார்களா..?

குறைந்தபட்சம் மனித மரியாதையாவது தரவேண்டும். அதுவும் அவர்களிடம் இல்லை என்பதுதான் என்வருத்தம்.

இளம் வயதில் பாரதிதாசன், தான் எழுதிய பாட்டைப் பாரதியாரிடம் காண்பித்தபோது, 'எழுக புலவன்' என்று நெஞ்சம் நிறைய வாழ்த்தி அதைப் பத்திரிகையில் வெளியிடவும் ஏற்பாடு செய்தார். இளம் படைப்பாளிகளை ஊக்குவிப்பதில் நான் பின்பற்றும் வழி, பாரதி காட்டிய வழிதான்.

டிஎஸ். சொக்கலிங்கம் தந்த ஊக்கத்தில்தான் புதுமைப்பித்தன் என்ற மாபெரும் படைப்பாளி உருவாக முடிந்தது.

ரஷிய எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கியின் மேஜையில் இளம் எழுத்தாளர்களின் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் குவிந்து கிடக்குமாம். அவற்றையெல்லாம் பொறுமையாகப் படித்து, சம்பந்தப் பட்ட எழுத்தாளர்களுக்கு ஆலோசனைகள் கூறிப் படைப்புகளைப் பிரசுரிக்கவும் அவர் ஏற்பாடு செய்வாராம். இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டியது சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் கடமை என்றே அவர் சொல்லியிருக்கிறார். கார்க்கியின் அத்தகைய பாதையில் தான் நானும் செல்கிறேன்.

இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது.

"ஐந்து வயது மகள் கோலமிட்டால்
அதை அழகில்லை என்று அழிக்கும் தாயாரும் உண்டோ!"

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல் வரிகள் இவை. நாஞ்சில் நாட்டுக்காரர்களே தமிழர்களே இதை மறக்கலாமா?

ஒரு விமர்சகனுக்குத் தேவை, தாயுள்ளம். அதைக் கருத்தில் கொண்டே நான் செயல்படுகிறேன்.

ஒரு கார்டில் நான் எழுதும் பாராட்டு ஆரம்ப எழுத்தாளர் களுக்குப் பெரும் ஊக்கமாக இருக்கும். 'தேங்காய்மூடிக் கச்சேரி' செய்பவர் களுக்குக்கூடக் கைத்தட்டல் தேவை. இன்னொரு விஷயம். கார்டில்தான் எங்களால் எழுத முடியும்... நாங்கள் ஏழைகள் சாமீ!

நான் தட்டிக்கொடுக்கவும் செய்வேன். தட்டிக் கேட்கவும் செய்வேன். ஒரு விமர்சகனுக்கு இந்த இரண்டு உரிமையும் இருக்கிறது. சம்பந்தப்பட்ட எழுத்தாளனின் வயது, அனுபவத்தைப் பொறுத்து இது மாறுபடும். புதுமைப்பித்தனைக் கடுமையாக விமர்சிக்கலாம்.

ஆனால் நேற்றுதான் எழுதத் தொடங்கியிருக்கும் இளம் படைப்பாளியை நாம் தட்டிக்கொடுக்கத்தான் வேண்டும். பெரிய படைப்பாளிகளைத் தட்டிக் கேட்கலாம். அதுவும் தாக்குதலாக மாறிவிடக் கூடாது.

எனது விமர்சனத்தில் கடுமை இருந்தாலும் தனிப்பட்ட முறையில் யாரையும் நான் புண்படுத்தியதில்லை. எனது கடுமை கருத்தியல் ரீதியாகத்தான் இருக்கும். அந்த வகையில் மௌனியின் படைப்புகளை நான் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். அவர் சிறந்த படைப்பாளியாக இருந்தாலும், வாழ்க்கையை நிராகரிக்கக்கூடிய உலகே மாயம் என்ற கருத்தைப் பிரதிபலிப்பவராக இருந்ததால் எனது கடுமையான விமர்சனத்துக்காளானார்.

இன்றைய எழுத்தாளர்களில்..... 'ரப்பர்' ஜெயமோகனை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் 'விஷ்ணுபுரம்' ஜெயமோகனைக் கடுமையாகக் கண்டிக்கிறேன். அதேபோல 'ஜீரோ டிகிரி' சாரு நிவேதிதாவும் கடுமையான விமர்சனத்துக்குரியவர்.

சமூக முன்னேற்றத்துக்கும் சமூக நீதிக்கும் தடையாக இருக்கும் படைப்புகளை எதிர்க்க வேண்டியது அவசியம்.

ஒரு படைப்பை விமர்சிக்கும்போது, அதன் நோக்கம், நடை அல்லது உத்தி என்ற இவற்றில் அடிப்படையானது, படைப்பின் நோக்கம்தான். "அணிகள் வேய் பிணத்திற்கு ஒப்பாம்" என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். வெறும் அழகியல் மட்டும் போதாது அது சமூக மேன்மைக்குப் பயனளிக்கும் படைப்பாகவும் இருக்க வேண்டும். என் பார்வையில் தமிழின் சிறந்த மார்க்சீய விமர்சகர்கள் என்று எடுத்துக்கொண்டால் கைலாசபதி, சிவத்தம்பி, வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன், பொன்னீலன், அருணன் மற்றும் பலருண்டு. காந்திய விமர்சகர்களில் நான் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் சி.சு.செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி. மற்றபடி யாரையும் சொல்லத் தோன்றவில்லை.

1911-லிருந்தே தமிழில் விமர்சன இலக்கியம் இருந்து வருகிறது. கம்பராமாயணம் மற்றும் ரசனை இலக்கியம் சார்ந்த விமர்சனங்கள் அப்போதே வெளிவந்தன. பின்னாளில் கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் போன்றவர்கள் விமர்சன இலக்கியத்தில் தீவிரமாக ஈடுபட்டார்கள். சமீபத்தில் அ.சா. ஞானசம்பந்தன் கூடத் திறனாய்வுக் கலை குறித்த புத்தகம் எழுதியிருக்கிறார். தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் விமர்சனம் எழுதியிருக்கிறார்கள். எனினும் பத்திரிகைகள் பதிப்பகங்கள் ஆதரவு இல்லாததால் தமிழில் விமர்சன இலக்கியம் பெரிய அளவில் வளரவில்லை.

தமிழில் இன்றைய விமர்சனப் போக்கு திருப்திகரமாக இல்லை. நேர்மையாக, திறந்த மனத்துடன், எழுதுபவர்கள் மிகக் குறைவு. இவர்களின் எண்ணிக்கை பெருகினால் விமர்சன இலக்கியம் வேகமாக வளரும். தமிழில் மட்டுமல்ல, எந்த மொழியிலும் எழுத்தாளர்களைவிட விமர்சகர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். மேலும் பல சமயங்களில் விமர்சகர்கள் வெகுஜன விரோதிகளாகக் கருதப்படுகிறார்கள். விமர்சன இலக்கியம் வளராததற்கு இதுவும் ஒரு காரணம். விமர்சகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் சுமூக உறவு இல்லையெனில் இலக்கியமும் வளராது. தமிழ் இலக்கியத்தின் மேன்மைக்கான பங்களிப்பைக் காலம்தான் தீர்மானிக்கவேண்டும். நான் எழுதியுள்ள நான்கு விமர்சன நூல்கள், தமிழில் நியாயமான, பாரபட்சமற்ற திறனாய்வுக் கலை வளர்வதற்கு ஓர் அரிச்சுவடியாக இருக்கும்.

ரியலிஸம், தொடர்ந்து எக்ஸிஸ்டென்ஸியலிஸம், ஸ்ட்ரக்சுரலிஸம், போஸ்ட் மாடர்னிஸம்.... என்று 'இஸங்களின்' காலத்தைப் பற்றித் திட்டவட்டமாகப் பிரிக்கமுடியாது. ஒரே காலத்தில் பலவித இலக்கியப் போக்குகள் இருந்தன; இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. குறிப்பாகச் சொல்வதெனில் ரியலிஸத்தின் காலம் தொடரும். அதாவது விமர்சனப் பார்வை கொண்ட யதார்த்தவாதத்தின் (Critical Realism) காலம் எப்போதும் தொடரும். பெண்ணியம், தலித்தியம் சார்ந்த பார்வைகளை முன்னிறுத்துவதற்கு இது அவசியம். அதேசமயம் க்யூபிஸம் போன்ற பரிசோதனை முயற்சிகளும் தொடரும். 'கிரிட்டிகல் ரியலிஸம்' காலத்தின் தேவை. வரலாற்றின் கட்டாயம். எனினும் இலக்கியத்தில் பன்முகத் தன்மையையே நான் விரும்புகிறேன். ஆனால் அது பொதுமக்கள் நலம் நாடிப் புதுக் கருத்தைச் சொல்வதாக இருக்கவேண்டும்.

தமிழில் தற்போது தலைதூக்கி வரும் Literary Atrocities (இலக்கிய அடக்குமுறைகள்) பற்றி நாம் மிகுந்த எச்சரிக்கை கொண்டிருக்கவேண்டியுள்ளது.

ஈவ் - டீஸிங், ராகிங் என்றெல்லாம் சொல்கிறார்களே..... அதெல்லாம் இப்போது இலக்கியத்திலும் வந்துவிட்டது. ஜனநாயக உணர்வு உள்ளவர்கள் அடுத்தவர்களின் கருத்துக்கும் மதிப்பளிப்பார்கள். அதை விடுத்து கூட்டத்தில் கலாட்டாசெய்வது, விமர்சனம் என்ற பெயரில் அநாகரிகமாகத் தாக்குவது என்பதெல்லாம் கயமைத்தனம். இத்தகைய செயலில் ஈடுபடுபவர்கள் மனப்பிறழ்வு நிலையில் இருக்கிறார்கள். 'ஈகோயிஸம்', மேட்டிமைத்தன்மை, குறுங்குழுவாதம் போன்றவையே இந்த நோக்குக் காரணம்.

சிறந்த படைப்பாளி சிறந்த மனிதனாகவும் இருக்கவேண்டும். நுகர்வியம் (Consumerism) சார்ந்த மாற்றங்களுக்கே முன்னுரிமை அளிக்கும் உலகமயமாக்கல் சூழலில், கலையும் இலக்கியமும் சமூக மேன்மைக்குப் பங்காற்ற வேண்டும். சந்தைக் கலாசாரத்துக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறுப்பும் கடமையும் கலை-இலக்கிய வாதிகள், குழுக்கள், அமைப்புகளுக்கு உண்டு. இந்தக் கலாசாரப் படையெடுப்பால் ஏற்பட்டுள்ள ஆபத்தையும் மீறி, தமிழ் இலக்கியம் சமூக மேன்மைக்குப் பங்காற்றும் ஏனெனில் தமிழ் இலக்கியத்தின் வேர் பலமாக இருக்கிறது.

எனது இலக்கிய வாழ்க்கை நிச்சயமாக நிறை வாழ்வுதான். எனது இலக்கியச் சிந்தனையும் எழுத்தும் களப்பணியும் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பயன்பட்டிருக்கிறது என்ற வகையில் நிறைவடைகிறேன்.

கு. சின்னப்பபாரதி

என் படைப்பு என்பது இந்தச் சமூகத்தைப் பற்றியது. சமூகம் என்பது பல்வேறு வகைப்பட்ட மனிதக் குழுக்களின் கூட்டமைப்பால் உருவானது. ஒவ்வொரு குழுவிற்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்பது பொதுத்தன்மை கொண்ட ஒன்றாக இருந்தாலும் வாழும் முறைகளில் வேறுபட்ட தன்மைகள் இருக்கும். உணவு, உடை, கலாச்சார வெளிப்பாடுகள், மரபுகள், விழாக்கள், சடங்குகள், தெய்வவழிபாடுகள், நம்பிக்கைகள், இயற்கைச் சூழல்கள், என்று இப்படிக் கூறலாம். ஒவ்வொரு குழுவிற்கும் (சாதி என்று அர்த்தப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்) அவற்றிற்கே உரிய பிரத்தியேகத் தன்மைகளில் இவைகள் வெளிப்படும். அதுதான் அந்தந்த மண்ணிற்கே உரித்தான சிறப்பியல்புகள். இவைகள் அந்த மனிதர்களின் சகல குணாம்சங்களையும் வெளிப்படுத்துவதற்கான சன்னல் எனலாம். இந்த வகையில் என்னையும், என்படைப்புக்களையும் உங்கள் முன் வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிக் கூறுவதால் நான் ஏதோ சாதியத்தை நிலைநாட்ட விரும்புபவன் என்று கருதிவிடாதீர்கள். மேலே குறிப்பிட்ட சகல பண்பாட்டுத் தளங்களையும் புரிந்து கொள்வதற்கு இன்றைய அமைப்பு முறைப்படி பார்க்கும்பொழுதுதான் அந்தந்த மனிதர்களின் உண்மையான வளர்ச்சியை, உணர்வை முரண்பாடுகளை அளவிட்டுக் கண்டுணரமுடியும். இப்படிப் பட்ட மக்கள் எப்படித்தங்களின் அடிமைத்தளைகளை அடக்கும் சக்திகளிடமிருந்து உடைத்துக்கொண்டு சமத்துவநிலை காண விழிப்புணர்வு பெற முடிகிறது என்பதை சமூக வளர்ச்சிப்போக்கோடு இணைத்துக் கொண்டு நோக்கினால் புரிந்து செயல்பட உதவும்.

இந்தப் பார்வையில்தான் முதலில் என்னைப் பற்றிக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மத்திய தர விவசாயக்குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். என் தாயும் தகப்பனும் முழு நேர விவசாயப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்கள். நானும் அவ்வப்பொழுது அப்பணிகளில் ஈடுபட்டவன். இன்றும் தொடர்ந்து ஈடுபட்டு வருபவன்.

நான் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே பொறியாளரான நாராயணன் நாயர்

என்கிற மலையாளத் தோழரின் தொடர்பு ஏற்பட்டது. அவர்தான் எனக்கு மார்க்சீய சித்தாந்தத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தவர். மகாகவி பாரதியின் கவிதைகளை அறிமுகப்படுத்தி வைத்தவர். அவரின் கருத்தாக்கம் என்னை எழுதத் தூண்டியது. எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுதே கவிதை எழுதத்துவங்கிவிட்டேன். பத்தாம் வகுப்புப் படிக்கும் பொழுது சேரிமக்களுக்கான குடியிருப்பு உரிமைப் போராட்டம் ஒன்றை அங்கு செயல்பட்ட கம்யூனிஸ்ட்கட்சி முன்கை எடுத்து நடத்தியது. அதில் எனக்கும் சிறு பங்கு இருந்தது. அப்பொழுது நான் மாணவர் சங்கத் தலைவனாக இருந்து வந்தேன். அந்த அனுபவத்தை சிறுகதையாக எழுதி ஜனசக்தி பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். எழுதப்பட்ட முதல் கதை முதல் பிரசுரத்திற்கே தகுதி பெற்றுவிட்டது. முதல் கதையே ஒடுக்கப்பட்ட சக்கிலியர் மக்களின் உரிமைப் போராட்டம் பற்றியதாக அமைந்து விட்டது. அன்றிலிருந்து இன்று வரை உழைக்கும் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் வாழ்வுரிமைக்கான போராட்ட வழிமுறைகளை உருவாக்கும், உந்து சக்தியை ஊட்டும் படைப்புகளுக் காகவே அர்பணித்துக் கொண்டுவிட்டேன்.

நான் உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தேன். அங்கு சென்ற பொழுது நாராயணன் நாயர் விதைத்த முற்போக்குப் புரட்சிகர சிந்தனைக்கான மார்க்சீய ஞானம் விரிவடையவும், இலக்கியப் பார்வையில் ஆழ்ந்த முதிர்ச்சி பெறவும் எனக்கு வழிவகை பிறந்தது. இதற்கு மூல காரணம் மார்க்சீய அறிஞர் R.K.கண்ணன் அவர்களிடமிருந்து சிறந்த வழி காட்டுதலையும், அறிவுச் செல்வத்தையும் பெற முடிந்ததேயாகும். நான் புத்தகத்தில் கற்றதற்கு மேலாக அவர் வாயிலாகக் கேட்டறிந்து தெளிவு பெற்றது அதிகம் எனக் கொள்ளலாம். அவர் மூலமாக உலகமகா இலக்கிய மேதைகளான டால்ஸ்டாய், கார்க்கி, செகாவ், பால்சாக், டிக்கன்ஸ், பிளாபர்ட், ஹோவர்டு பாஸ்ட் ஆகியவர்களின் படைப்புக்களைக் கற்றறிய முடிந்தது. அவர்களின் அனுபவங்களை, தேடல்களை, உத்திகளை, பாத்திரச் சித்தரிப்புக்களை, கலை நுணுக்கங்களை இலக்கியப்பாடமாக நான் கற்றுணர வைத்தது.

கார்க்கியின் இளைய படைப்பாளிகளுக்கான ஒரு யோசனை என்னை மிகவும் கவர்ந்தது. "இளம்படைப்பாளிகள் முதலில் கிராமங்களுக்குச் செல்லவேண்டும். அங்குள்ள மக்கள் மத்தியில் வாய் மொழியாக யுகயுகங்களாகப் பேசப்பட்டு வரும் கதைகள், பாடல்கள், பழமொழிகள் இவற்றைக் கேட்டறிய வேண்டும். அவைகள் வெளிப்படுத்தும் உணர்வுகளின் வாரிசுகளே தற்பொழுது வாழும் மனிதர்கள், அவர்களின் அக உணர்வுகளை, நம்பிக்கைகளை

முரண்பட்ட குணாம்சங்களைப் புரிந்து கொள்ளப் படைப்பாளிக்கு மிகவும் உதவும்" என்பார்.

மிகவும் பின்தங்கிய, பாதை-மின் வசதியற்ற ஒரு குக்கிராமத்தவனான எனக்கு அம்மக்களிடம் தொடர்பு கொண்டவனாக இருந்தும் அவர்களைப் பற்றிய தெளிந்த ஞானம் இல்லாதவனாகவே இருந்துவிட்டேன். அதன்பிறகு அவர்களிடம் புதைந்து கிடக்கும் அறிவுச் செல்வத்தை அறிவுப்பூர்வமாகக் கற்கவும் சேகரிக்கவும் முற்பட்டேன். அச்செழுமையான அறிவுக் களஞ்சியம்தான் என்படைப்புக்களில் மணம் வீசும் மண்சார்ந்த மனிதர்களின் உளவெளிப்பாடுகள்.

வாழ்வியலின் எல்லாக் கூறுகளையும் ஒருமுகப் படுத்திப் பார்க்கவும், பகுத்துணரவும் எனது இலக்கிய ஆசானும் தோழருமான R.K.கண்ணன் புதிய தடம் போட்டுக் காட்டினார்.

கடந்த காலத்தின் பாரம்பரிய இலக்கியச் செல்வத்தை உதவியாகக் கொண்டே நாம் முன்னேறவேண்டும். பிற்போக்கு வாதிகள் இப்பாரம் பரியத்தின் உயிரற்ற பகுதிகளை இறுகப்பிடித்துக் கொள்கிறார்கள். மார்கசீயவாதிகள் அதன் உயிரோட்டமுள்ள பகுதிகளைப் பற்றிக் கொண்டு முன் செல்லவேண்டும் என்று எடுத்துக்கூறி நம் பண்டைய இலக்கியங்களையும், பண்டைய மரபுகளையும், கலாச்சாரங்களையும் கற்றுத் தெளிய உதவினார்.

இவ்வெளிச்சக் கீற்றுக்கள் மக்களிடத்தில் ஊடுருவிச் செல்லவும், அவர்களிடம் கற்றுக் கொள்ளவும் என்னை ஊக்குவித்தன.

என் படிப்பு முடிந்து என்கிராமத்திற்கு வந்தவுடன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊதியம் பெறாத முழுநேர ஊழியனாக மக்கள் மத்தியில் பணிபுரியத் தொடங்கினேன். விவசாயிகளின் குறைகளுக்கான போராட்டத்திலும், மலை மக்களின் அறியாமை நிறைந்த அடிமைத் தளையினால் விளைந்த சுரண்டல் கொடுமைகளில் இருந்து அவர்களை விடுவிக்கும் போராட்டத்திலும் கலந்து கொண்டேன். வழி நடத்தும் தொண்டனாகவும் செயல்பட்டேன். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள் ஆகியவர்களின் போராட்டத்தில் பங்கேற்றுச் செயல்படும் ஊழியனாகவும், அவ்வமைப்புக்களின் தலைவனாகவும் விளங்கினேன். அக்கால கட்டத்தில் 1960இல் நில உச்சவரம்பை 15 ஸ்டேண்டர்டு ஏக்கராக குறைக்க வேண்டுமென அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் வகையில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் தமிழகத்தில் மக்களைத்திரட்ட 35 நாட்கள் கொண்ட நீண்ட நடைப்பயணத்தைத்

துவங்கியது. கோவையிலிருந்து சென்னைக்கு தஞ்சையில் அடிமைப் பட்டுக் கிடந்த விவசாயத் தொழிலாளர்களை நிமிந்தெழுந்து "சாட்டையடியை நிறுத்து, சாணிப்பால் கொடுப்பதை நிறுத்து" என்று நிலப்பிரபுக்களுக்கெதிராகத் திரண்டெழ வைத்த மாபெரும் தலைவர் B. சீனிவாச ராவ் தலைமையில் 25 பேர்கள் கொண்ட குழுவில் நானும் கலந்து கொண்டு அனுபவம் பெற்றதுண்டு.

தனித்து வாழும் மனிதர்களால் நிவாரணமும், தீர்வும் காணமுடியாது. இயக்க ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்ட, சித்தாந்தப் படுத்தப்பட்ட கூட்டால்தான் உரிமைகளை வெல்ல முடியும், சமூகத்தை முன்னோக்கிய திசை வழியில் நகர்த்திச் செல்லமுடியும் என்கிற உண்மையை இதுபோன்ற அனுபவங்கள் புரிய வைத்தன.

எந்த ஒரு இலக்கியப் படைப்பிலும் ஒரு படைப்பாளி எதையாவது ஒரு கருத்தைச் சொல்லாமல் இருக்கமுடியாது. அது அவரவர் சமூகப் பார்வைக்கும், சித்தாந்த நோக்குக்கும் ஏற்ப அமைந்தே தீரும். நோக்கமற்ற இலக்கியம் என்பது எதுவுமே இருக்கமுடியாது. நோக்கத்தில் வேறுபடலாம் ஒருவர், இந்தச் சுரண்டல் சமூக அமைப்பை நீடித்திருக்க விரும்பலாம். அதற்காகச் சுரண்டப்படும் மக்களின் ஆவேசத்தைத் தணிக்கக் கூடிய முறையில் மூட நம்பிக்கைகளை வலியுறுத்தியும் வினைப்பயனை எடுத்தோதியும், முற்பிறவியின் பாவச் செயலே இச் சென்மத்தின் துன்ப துயரங்கள் எனவும், கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே என்பது போன்ற கருத்துக்களை வலியுறுத்தித் தர்மோபதேசங்கள் இலக்கியத்தில் புரிவார்கள். ஆனால் இவற்றிற் கெதிராகக் குரல் கொடுக்கும் படைப்பைப் பார்த்ததும் "இது இலக்கியமல்ல, பிரச்சாரம்" என்பார்கள். ஆனால் பிரச்சாரம் என்பது எப்படியிருக்க வேண்டுமென்று மார்க்சீய ஆசான்களில் ஒருவரான ஏங்கல்ஸ் இப்படிக் கூறுகிறார்.

"பிரச்சாரம் என்பது இலக்கியத்தில் அழகியல் சார்ந்து ஊடும் பாவுமாக இழையோடியிருக்கவேண்டுமே யன்றி தூக்கலாகவோ முனைப்பாகவோ வெளிப்படக் கூடாது" என்பார்.

டால்ஸ்டாய் தம் மகத்தான மூன்று படைப்புக்களில் (போரும் அமைதியும், அன்னாகரீனினா, புத்துயிர்ப்பு) வெளிப்படுத்தியுள்ள பிரச்சாரத்தை விட யார்தான் அதிகம் செய்திருக்கிறார்கள்? மதபீடத்திற்கெதிராக, நிலப்பிரபுத்துவச் சீரழிந்த ஒழுக்கக் கேடுகளுக் கெதிராக, போருக்கெதிராக அவர் எழுப்பியுள்ள குரல் சாதாரண மானதா? உலகத்தின் செவிகளில் பலமாகத் தாக்கினவைகள் அல்லவா அவைகள்? அவரது செய்திகள் உயர்ந்த கலைப் படைப்பிற்குள் மூக்கை நீட்டிக் கொண்டிராமல் ஊடும் பாவுமாய் இழையோடுவதால்தான்.

ஒரு எழுத்தாளனுக்குச் சமூகப் பொறுப்புணர்வு என்பது முக்கியமானது. சமூகத்தைப் பற்றி எனக்கு அக்கறையில்லை என்பவன் பெற்ற தாய் எனக்குப் பொருட்டல்ல என்பதற்கு ஒப்பாகும். ஒவ்வொரு மனிதனும் தனக்கென்கிற பொழுதே சமூகத்தின் பொதுக் கடைமையையும் செய்து முடிக்கிறான். அப்பொறுப்புணர்ச்சியின் அனுபவஞானத்தின் வெளிப்பாடுதான் சிறப்பான மகத்தான இலக்கியங்கள்.

நான் சமூகத்தின் முன்னேற்றம் கருதிய பொதுக் கடமையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவன். அதில் கிடைக்கின்ற அனுபவ ஞானமே என் படைப்புக்கள்.

அப்படியானால் அவ்வனுபவங்களை எப்படிச்சேகரித்து படைப்பாக்குகிறேன்? இது புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வி.

வாரத்துக்கு நாலு பத்திகைகளில் தொடர்கதைகளும், சிறுகதை களுமாக உலாவவிட்டு வெளிச்சத்தில் மின்னும் படைப்பாளிகளைப் போல் என்னால் எழுதமுடியாது. அது சாத்தியமும் அல்ல. மகத்தான படைப்பாளிகளின் அனுபவங்கள் இவ்விதத்தில் எனக்குக் கை கொடுக்கின்றன.

டால்ஸ்டாய் தன் படைப்புகளுக்கு ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் என்று அவ்வப்பொழுது தான் கண்ட, அனுபவித்த, உள்வாங்கிய விசயங்களைக் குறிப்பெழுதுவதற்கு மட்டும் செலவிட்டிருக்கிறார். ஒரு விசயத்தைக் கூறினால் ஆச்சரியப்படுவீர்கள். தமது புகழ் பெற்ற அன்னாகரீனினா நாவலில் வரக்கூடிய லெவின் என்கிற நிலப்பிரபுவை சித்திரிப்பதற்கு மட்டும் ரஷ்ய நாட்டின் ஒட்டு மொத்தப் பகுதிகளில் இருந்து தம்மைக் காண தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்த வந்த விவசாயிகள் பத்தாயிரம் பேர்களைப் பற்றிய குறிப்புக்களை தம் நாட்குறிப்பேட்டில் பதிந்திருந்தாராம். இப்படி அவர்தம் ஒட்டு மொத்தப் படைப்பான மூன்று நாவல்களுக்குமான பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் பல்வேறு வகைப்பட்ட நூற்றுக் கணக்கான வாழும் மனிதர்களைக் கண்டு தெளிந்தபின்பே அவர் படைப்பாக்கத்தில் புகுத்திருக்கிறார். அதனால்தான் அவரது படைப்புக்கள் காலம், தேசம், மொழி, கலாச்சாரப் பின்புலம் தாண்டி மக்களைக் கவர்ந்திழுத்துச் சாகாவரம் பெற்றுத் திகழ்கின்றன.

மகாகவி பாரதி கூறுவார். "பிழைபட வேதம் ஓதுபவனை விடச் செம்மையாகச் சிறைப்பவனே மேல்" என்று. இது எனக்கு

வேதவாக்குப்போல. அப்படி இலக்கியப் பணியில் எளியதானாலும் செம்மையாகச் செயல்பட நினைப்பவன்.

என் கருப்பொருளுக்கான, உப பொருள்தேடலுக்கான விசயத்தை இன்னும் தெளிவுபட விளக்க விரும்புகிறேன். ரஷ்யாவின் மகத்தான படைப்பாளியான மிகைல்ஷோலக்காவ் மேலும் எனக்கு வெளிச்ச தீபம் காட்டுகிறார்.

ஒருநாவல் உருவாக்குவது என்பதைக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பிடலாம். ஆனால் கட்டிட நிர்மாணத்தில் ஒவ்வொரு கட்டிட நிர்மானியின் வேலைகளும், கடமைகளும் கண்டிப்போடு வரையறுக்கப் பட்டுள்ளன. ஆனால் ஓர் எழுத்தாளர் விசயத்திலோ அவர் தம்மைத் தாமேதான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. கட்டிட நிர்மாணப் பொருட்களைச் சேகரித்து வரவேண்டியவரும் அவர்தான். மேலும் அவர்தான் மனைச் சிற்பியாகவும், கொத்தனாராகவும், இஞ்சினியராகவும் இருக்கிறார். மேலும் துர்ப்பாக்கியவசமாகப் பல சமயங்களில் கட்டிடத்தைக் கட்டிவரும் போதே மனைச் சிற்பியின் திட்டங்களை ஏதோ காரணத்தினால் மாற்றியமைக்கவும் நேர்ந்து விடுகிறது. அவ்வாறு நேரும் பொழுது கொத்தனார் ஏற்கனவே கட்டிமுடித்ததை எல்லாம் இடித்துத்தள்ள வேண்டியதாகி விடுகிறது. எனவே இத்தகையதொரு வேலையில் எவர்தான் எப்படித்தான் எந்தவொரு காலக்கெடுவை நிர்ணயிக்கமுடியும்?

நான் கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால் எந்த விதத்திலும் சுலபமான உழைப்பாக இல்லாத எழுத்தாளனின் பணியைப் பற்றி நான் நினைத்துப் பார்க்கும்போது நான் இவ்வாறே கருதுகிறேன். நாம் நமது அறிவினாலும், கரத்தினாலும் உருவாக்கப்பட்டு வரும் கட்டிடம் நம்பகமானதாக, உறுதியானதாக, நெடுங்காலத்துக்குப் பயன் படத்தக்கதாக இருக்கும் வரையிலும் அதைக் கட்டிமுடிக்க எவ்வளவு காலம் பிடிக்க வேண்டுமோ, அதைக் காட்டிலும் அதன் நிர்மாணத்துக்கு அதிகமான காலம் ஆகிவிட்டுப் போகட்டுமே" என்பார்.

அப்படியே அவர்தன் கன்னிநிலம் என்கிற நாவலை 1932ல் தொடங்கி 1954ல் முடித்தார் என்றால் சற்று யோசித்துப் பாருங்கள்.

இந்த வழியில் நான் எழுதத்தலைப்பட்டேன். தாகம் நாவலுக்கு எட்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டேன். சங்கம், சர்க்கரை நாவல்களுக்கு முறையே ஐந்தாண்டு காலம் எடுத்துக் கொண்டேன்.

என்கதை மாந்தர்கள் ஒவ்வொருவருக்கும் டால்ஸ்டாயைப் போல் முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் ஐம்பது வாழும்

பாத்திரங்களின் முன்மாதிரிகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு செயல்பட்டிருக்கிறேன்.

இயற்கை வழங்கியிருக்கும் கொடைகளான மரம், செடி, கொடிகள், பூக்கள், பறவைகள், மிருகங்கள், பருவகாலங்கள், நீர் நிலைகள், ஆறு, கடல் இவற்றின் மத்தியில்தான் மனிதன் வாழ்ந்து, உணர்ந்து, ரசித்து, மகிழ்ந்து துக்கித்து மடிகிறான், இவற்றினின்று விலகி வெறும் மனிதனாக வாழ்ந்து விடுவதில்லை. இவற்றோடு நாம் அன்றாடம் ஏதோ ஒரு வழியில் பின்னிப் பிணைந்திருக்கிறோம். இவைகள் பற்றிய செயல்பாடுகளை, இயக்கங்களைக் கூர்ந்து தெளிய வேண்டும். அவற்றின் குணநலன்களை, பயன்பாடுகளை நான் உணரும் பொழுதெல்லாம், தாக்கம் ஏற்படுத்தும் பொழுதெல்லாம் மனதில் எழும் , கற்பனைகளைக் குறிப்பெழுதி வைத்துக் கொள்வேன். இவற்றிற்குக் காலம் நிர்ணயிக்கமுடியாது.

ஒரு உதாரணம் கூறுகிறேன். தாகம் நாவலில் மாரப்பன் குடும்பம் புஞ்சை அறுவடை காலத்தில் அதிகாலையிலேயே எழுந்து வீட்டு வேலைகளைப் பெண்களும் காடு, தோட்டம் வேலைகளை ஆண்களும் துவக்கி விடவேண்டும். அவர்களுக்குக் காலம், நேரம் காண இன்றுபோல் எந்தக் கருவியும் கிடையாது. நட்சத்திரம்தான். 'தாய்க்கோழிமீன் உச்சிக்கு வரங்காட்டி எழுந்து வேலை பார்த்தாத்தான் காட்டுவேலைகள் முடிக்கமுடியும்' என்று கூறிக்கொள்வார்கள் மாரப்பனும் மனைவியும். இக்குறிப்பைப் படித்துவிட்டு பிரபல விமர்சகர் சிட்டி அவர்கள் ஆச்சரியப்பட்டுப் போனார். அதன் விபரங்களைக் கேட்டறிந்து வியந்தார். இதை நான் எப்படி வாசகர்களுக்கு உணர்த்துவது? பருவகாலத்துக் கேற்ப அந்த நட்சத்திரங்கள் இடம் பெயரும். நான் குறிப்பிடும் பருவகாலத்துக்கு ஏற்ப அதன் செயல்பாடுகளை நான் வெளிப்படுத்தவேண்டும். அக்குறிப்பிட்ட காலத்தை அறியத் தவறிவிட்டால் அடுத்த பருவம் வரை காத்திருக்கவேண்டும். இப்படித்தான் என் நாவல் கட்டிடத்துக்கான கலையம்சம் கூட்டுவதற்கு மலர்கள் பூக்கும் காலம், பறவைகள் கீதம் இசைக்கும் பருவம் மண்மணம் கிளர்த்தும் தருணம், பருவமாற்றத்தால் இயற்கைச் சூழலில் விளையும் வெட்ப தட்ப வேறுபாடுகள், மற்றும் பழமொழிகள் பழக்க வழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் இப்படிப் பல்வேறு அம்சங்கள் கொண்ட நாவல் எனும் கட்டிட நிர்மாணப் பொருட்களைச் சேகரித்த பின்பே எழுதத் துவங்குவேன்.

இவ்வழியில் எழுதி முடித்தபின் என் இலக்கிய ஆசான் R.K.கண்ணனிடம் படித்துக்காட்டுவேன். நான் படிக்கப் படிக்க

பாராவாரியாக, பக்கம் வாரியாக தாம் உள்வாங்கியதை குறிப்புப் போட்டுக் கொண்டே வருவார். படித்து முடித்தபிறகு நிறைகளையும் குறைகளையும் கூறத் தொடங்குவார்.

"இந்தப் பக்கத்தில் நீங்கள் தேவையில்லாமல் மூக்கை நீட்டுகிறீர்கள். அவற்றைத் தவிர்க்கவேண்டும். இந்த அத்தியாயத்துக்கும், அடுத்த அத்தியாயத்துக்கும் தொடர்பற்றுத் தெரிகிறது. சரியாக இணைக்கவேண்டும். இந்த இடத்தில் இந்தப் பாத்திரம் யதார்த்தத்துக்குப் புறம்பாகச் செயல்படுகிறது. ஒழுங்குப்படுத்தவேண்டும்" என்று இப்படிப் பல்வேறு விமர்சனங்களை நாவலைச் செழுமைப்படுத்த முன்வைப்பார். இவற்றை நான் உள்வாங்கிக் கொண்டு ஒரு ஆறுமாதகாலமோ அல்லது அதற்கும் மேற்பட்டோ மனதுள் ஊறப்போட்டு விடுவேன். மீண்டும் என் வழியில் திருத்தி எழுதுவேன். மீண்டும் அவர்முன் வாசிப்பு. விட்டுப்போன குறைகள் மீது மீண்டும் விமர்சனம். இப்படி மூன்று திருத்தங்கள் நிகழும். பிறகுதான் அச்சுக்குப் போகும். முதல் வாசிப்பில் **தாகம்** நாவலின் நூற்று எண்பது பக்கங்களை அவர் விமர்சனத்தைக் கேட்டுவிட்டு அவர் முன்னாலேயே கிழித்துப் போட்டுவிட்டு சரியான வழியில் எழுத ஆரம்பித்தேன். எனது மூன்று நாவல்களும் **(தாகம், சங்கம், சர்க்கரை)** இவ்வழியில் உருவாக்கப்பட்டவைகள்தான்.

ஷோலக்கோவ் கூறுவது போல் காலத்தைப் பற்றிக் கவலைப் படாமல் அர்ப்பணிப்புணர்வுடன் நெடுங்காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் வகையில் கலைக்கட்டிடத்தை உருவாக்க விரும்புபவன் நான்.

என் படைப்பில் கதை மாந்தர்களை சமூக இயல் வளர்ச்சிக்கேற்ப என் தலையீடு இல்லாமல் வாழ்நிலையின் புறநிலைத் தாக்குதலின் விளைவாக மனித மனதுள் நிகழும் அகநிலை மோதலின் வெளிப்பாடாக அவர்களே செயல்படும் சம்பவச் சூழலை உருவாக்குவேன். இப்படிப் புறப் போராட்டத்தின் பாதிப்பால் அகப்போராட்டத்தின் மூலம் தம்மைத்தாமே செதுக்கிக்கொண்டு எம் கதை மாந்தர் உருவாவதால் வர்க்கப் போராட்டப் படைப்புக்களான என் நாவல்கள் வெறும் பிரச்சாரம் என்கிற விமர்சனத்திற்கு ஆளாகாத சிறந்த கலைப்படைப்பென்று விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

புகழ்பெற்ற பிரஞ்சு நாவலாசிரியர் கூறுவார். "மரம் முதிர்ச்சி பெறப்பெற அதன் மேல் பட்டைகள் சிறுகச் சிறுக வெடிக்கும். அது மேலும் முதிர்ச்சி பெறப் பெற வெடித்த மேல் பட்டை மெது மெதுவாகத் தானே உதிர்ந்து விடும். முதிர்ச்சிபெறுவதற்கு முன் அதன் வெடித்த பட்டைகளை உரித்தெடுத்து விடாதீர்கள்.

அச்செயல் அதனை நோகச்செய்யும். வேதனையடையச் செய்யும். அதுபோலத்தான் கதாபாத்திர வளர்ச்சியையும் மெதுமெதுவாக அதன் போக்கில் வார்த்தெடுக்கவேண்டும்" என்பார்.

இந்நோக்கில் என் கதாபாத்திரங்களை அதன் அனுபவ முதிர்ச்சிக் கேற்ப உருவாக்க முனைவேன். அதனால்தான் வ.ரா.வின் மாணவரும் பாரதியை உலக மகாகவி என்று ஷெல்லியுடனும், பைரனுடனும் முதன்முதலில் ஒப்பீடு செய்து 1936ல் நூல் எழுதி ராஜாஜி, கல்கி ஆகியோரின் குறும்புத்தனத்திற்கு பதிலளித்த சிறந்த மூத்த விமர்சகருமான சிட்டி அவர்கள். தமிழ் நாவல் இலக்கிய நூற்றாண்டு வரலாற்று நூலில் அவற்றில் பத்து நாவல்களைப் பொறுக்கி எடுத்தால் தாகமும் ஒன்றாக இருக்கும் என்று கூறினார். இப்படிப் பலரின் கூற்றுக்களைக் கூறமுடியும்.

படைப்புக்கான கதைப் பொருளை இச்சமூகத்தில் இருந்து பெறுகிறேன். அதைக்கேட்டோ, பார்த்தோ எழுதாமல் அந்தமக்களின் வாழ்வுப் போராட்டத்தில் என்னை நானே உட்படுத்திக்கொண்டு அதன்மூலம் பெறும் அனுபவங்களையே நாவலாக உருவாக்குகிறேன். மகாகவி பாரதி தன்னைச் சுதந்திரப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மகாகவியாக, மக்கள் கவியாக உருவான அப்பாதை, மகத்தான ரஷ்யப்புரட்சி உருவாக்கிய உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்மாதிரி இலக்கியக் கர்த்தாவாக மலர்ந்த கார்க்கி வகுத்த அந்தப் பாதை எனக்கு வழிகாட்டும் பாதை. அதனால் தான் எனது மூன்று நாவல்களும் ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டு வரவேற்பைப் பெறுகின்றன. குறிப்பாகத் தெலுங்கில் பத்திரிகைத் தொடராக வெளியிடப்பட்டும் புத்தகமாகவும் பதிப்பித்து மூன்று பதிப்புக்கள், நான்கு பதிப்புக்கள் என்று விற்பனை ஆகி வருகின்றன. அங்கே போராடக்கூடிய தாழ்த்தப்பட்ட உழைக்கக் கூடிய மக்களின் கருவியாகப் பயன்படுவதை அறியலாம்.

ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன்.

எனது சங்கம் நாவல் மலைவாழ் மக்கள் எந்தெந்த விதத்தில் எல்லாம் கொடுமைகளுக்கும், துன்பங்களுக்கும், அவமானங்களுக்கும் அரசு அதிகாரவர்க்கத்தாலும், சுயநலசக்திகளாலும், கந்துவட்டிக் காரர்களாலும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைச் சித்திரிப்பதோடு அதை எதிர்த்துத் தங்கள் வாழ்வுரிமைகளுக்காக விழிப்புற்று அமைப்பு ரீதியாகப் போராடும் சித்திரம் ஆகும்.

ஆந்திரப் பிரதேசம் கம்மம் மாவட்டக் கம்யூனிஸ்ட் இயக்கம் **சங்கம்** நாவலில் நெறிமுறைப்படுத்தப்பட்ட அமைப்பின் மூலம் எவ்வாறெல்லாம் ஒன்றுபட்டுப் போராடித் தங்கள் உரிமைகளை அந்த மக்கள் வென்றெடுத்திருக்கிறார்கள் என்கிற அனுபவத்தை படித்தறிந்தார்கள். அங்குள்ள மலைவாசி மக்கள் தமக்கிழைக்கப்படும் துன்பதுயரங்களில் இருந்து மீண்டெழ நக்சலைட்டுகளின் தவறான வழிகாட்டுதலில் எப்படி ஈர்க்கப்பட்டு மேலும் அவதிக்குள்ளாக்கப் படுகிறார்கள் என்பதையும் பார்த்தார்கள். இத்தவறான பாதையில் இருந்து அம்மக்களை ஒன்று திரட்டப்பட்ட அமைப்பின் அடிப்படையில் ஜன நாயகப் பூர்வமாகப் போராட வைப்பதென்கிற தங்கள் முடிவுக்கு சங்கம் நாவலின் மூலம் பெறப்பட்டிருக்கும் நடைமுறை அனுபவத்தை தம் போராட்ட வழியில் எப்படி இணைப்பது என்று முடிவு செய்கிறார்கள். அந்த அடிப்படையில் மலைவாழ் மக்களில் இருந்து இருநூறு ஊழியர்களை ஒன்று கூட்டி **சங்கம்** நாவலின் அனுபவம் நமக்கு எந்தெந்த விதத்தில் கைகொடுக்கும் என்று விவாதம் நடத்தி அதில் தங்கள் போராட்டத்திற்குச் சாதகமான அம்சங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தாகம், சர்க்கரை நாவலில் உருவாக்கப்பட்டுள்ள அனுபவங்களையும் அவர்கள் பல்வேறு வழிகளில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மக்களின் வாழ்வையும், அவர்கள் அன்றாடப் போராட்டங்களையும் அனுபவ ரீதியாக ஒன்றிணைத்து கலைப்பாங்கோடு இலக்கியமாக்கப் பட்டதின் விளைவே இவ்வரவேற்பிற்குக் காரணமாகும். அடித்தளமாகும்.

எனது படைப்புக்கள் நமது தேசத்தின் உழைக்கும் மக்களின் மன உளைச்சல்களையும், போராட்ட வழி முறைகளையும், வெளிப்படுத்துவதாக இருந்தாலும் என் வழிமுறையும், சிந்தனையும் உலக இலக்கியத்தின் பொதுப்போக்கோடு இணைந்திருப்பதேயாகும்.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் கார்க்கி கூறுவதுபோல "ஒரு படைப்பாளி தன் படைப்பைவிட மேலானவனாக இருக்கவேண்டும்" என்கிற வழிகாட்டுதலின் செயல்பாட்டின் விளைவுதான்.

சுந்தர ராமசாமி

அனுபவம் சார்ந்தது தான் படைப்பு. கற்பனை சார்ந்த படைப்புகளில் கூட அனுபவம் நேரடியாக இல்லாமல் குலைக்கப்பட்ட பாவனையில் சிதறிக் கிடக்கும். குடும்பத்தில் தான் தோன்றுகின்றன எல்லாமும்.

நல்லதோ கெட்டதோ, நாம் விரும்பியது விரும்பாதது எல்லாமும் குடும்பத்திலிருந்துதான் வெளியே புறப்பட்டுச் செல்கின்றன. அதிகாலையில் எழுந்து படித்தால் மூளையில் பதியும் என்று இதை எல்லாரும் சொல்கிறார்கள். ஒரு குழந்தைக்கு இது எவ்வளவு சிரமம் என்பதை ஒருவரும் சொன்னதில்லை. இவ்வாறு சொல்லக்கூடிய அதிகாரத்தின் மீது, ஏதோ சொல்லத் தெரியாத ஒரு காரணத்தால், சிறுவயதிலேயே எதிர்நிலையான கருத்து கொண்ட மனோபாவத்தை நான் அடைந்தேன்.

என் அம்மா ஆழ்ந்த படிப்பாளி என்று சொல்ல முடியாது. படிப்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். என் சிறுவயதில் அவர் சில பெயர்களைச் சொன்னார். மணிக்கொடி, கு.ப.ரா. புதுமைப்பித்தன், பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, இப்பெயர்களை அவர் சொன்னார். இவை என் மனதில் பதிந்து விட்டன. ந.பிச்சமூர்த்தியின் 'தாய்' சிறுகதையைப் பலமுறை சொல்லி யிருக்கிறார்.

சுதந்திரத்துக்குப் பிறகு எங்கள் வீட்டில் புதிய ஆளுமை கொண்ட பெயர்கள் அடிபட்டன. ராஜாஜி, ம.பொ.சி., பாஸ்கர தொண்டமான், டி.கே.சி., முத்துராமலிங்கத்தேவர், அண்ணா, பெரியார், காமராஜ், சீனிவாச ராகவன், கிருபானந்தவாரியார்....... இதற்கு காரணம் தாய்மாமன் நாராயணன்.

இவர்களைப் பற்றி சுவையான செய்திகளை மாமா சொல்லும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அதற்குக் காரணம் இவர்களது ஆளுமையின் மீது ஏற்பட்ட மதிப்பு அல்ல. மாமா சொல்வது புரிகிறது. ஒரு பொது விஷயம் புரிகிறது என்பதால் ஆர்வத்தில் கேட்டுக் கொள்வேன். மற்றொரு புதிர். இவர்கள் யாரும் உறவினர் அல்ல. இவர்கள் வெவ்வேறு ஊர்களைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு எப்படி நம் வீட்டு உறவினர் போன்ற ஓர் உறவு ஏற்படுகிறது என்று எண்ணினேன்.

மாமா ஊர் சுற்றுவதில் மன்னன். அதனால் எனக்கும் ஊர் சுற்றும் பழக்கம் ஏற்பட்டது. வாசிப்பதைவிட எழுத்தைவிட அதிகம் பாதித்தது எது என்றால் ஊர் சுற்றுவது என்று சொல்வேன்.

முக்கியச் சாலைகளை அல்ல. சந்து பொந்து முடுக்குகளைச் சுற்றிக் கொண்டே இருப்போம். கால் வலித்தால் ஒரு திண்ணையில் உட்கார்ந்துவிட்டு மீண்டும் சுற்றுவோம். பகல் நேரத்தில் பசிக்காகவும் இரவு நேரத்தில் தூங்கவும் தவிர வீடு வர வேறு காரணங்கள் இல்லை. ஊர் சுற்றிப் பல அனுபவங்களைச் சேர்த்த காரணத்தால் தான் **ஒரு புளிய மரத்தின் கதை** எழுத முடிந்தது.

அழகான பெண்கள் கெட்ட வார்த்தை சொல்ல மாட்டார்கள் என்று நினைத்திருந்தேன். அது பொய் ஆயிற்று. ஏழைகள் அழுது கொண்டிருப்பார்கள் என்றே நினைத்திருந்தேன். அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இங்கிதமாகப் பேசுபவர்களை நம்பலாம் என்று நினைத்திருந்தேன். அவர்களை நம்பக் கூடாது.

மூளைக்குள் பல பெரிய விஷயங்கள் நொறுங்கின. மூளைக்குள் தவறான அபத்தமான எண்ணங்கள் நொறுங்கும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. சில படைப்புகளைப் படிக்கிற போதும் அதுபோல் ஏற்படுகின்றன.

என் பதினைந்து வயதில் நான் பார்த்த 5 வயது சிறுமியை இன்று வரை பார்த்துக் கொண்டே இருக்கிறேன். பள்ளி செல்லும் சிறுமியாக, கல்லூரி செல்லும் பெண்ணாக, கணவனுடன் செல்லும் லாஹிரியில் அவள் குழந்தைகளுடன், முன்பற்களை இழந்து நெற்றியில் திருநீறு அணிந்த கோலத்தில்...... அவள் என் மன உலகில் முக்கியமான பிரஜை என்று அவளுக்குத் தெரியாது. இது போலப் பல வீடுகள், பல மனிதர்கள் முக்கியமாக இருக்கிறார்கள். இந்த அனுபவங்கள் எழுதத் தூண்டுகின்றன.

இந்த அனுபவங்களை ஏற்று வரும்போது இவற்றை எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த அனுபவங்களை எழுதும் போது அதன் முக்கியமான பகுதியை மொழி ஏற்றுக் கொள்வதில்லை. அனுபவத்தின் ஜீவ ரசத்தை, தேனை மொழி ஏற்றுக் கொள்ளாததால் ஒரு ஏமாற்றம் ஏற்படுகிறது.

அனுபவம் மிக முக்கியமான கூறு என்ற எண்ணம் சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டது. அத் தீர்மானத்தில் சிறு சலனங்கள் ஏற்பட்டிருக்கலாம். பெரும் உளைச்சல் ஏற்பட்டுவிடவில்லை.

மும்பையைச் சேர்ந்த சிரிவிகர் கோஷ் என்ற எழுத்தாளர் அமெரிக்காவில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பல நாவல்கள் எழுதியுள்ளார். ஒரு தீவிர படைப்பாளி அனுபவங்களை முற்றிலுமாகத் தவிர்த்து விட்டு கற்பனை சார்ந்து படைப்புகள் எழுத வேண்டும் என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் படைப்புகளைப் படிக்கும்போது அதன் பின்னணியிலும் அனுபவங்கள் தான் நிற்கின்றன. அவை நேரடியாகப் பிரதிபலிக்காமல் குலைக்கப்பட்ட பாவனையில் சிதறிக் கிடக்கின்றன. காகிதத் துண்டுகளைக் கிழித்துப் போட்டு விடுவதைப் போல.

அனுபவத்தைச் சார்ந்து படைப்பதுதான் எனக்கு முக்கியமானதாக இருக்கிறது. பொறிகள் சார்ந்த இந்த அனுபவப் பதிவுகளைத் தவிர மூளைக்குள் என்ன இருக்கிறது.

என் மீது யார் செல்வாக்கு செலுத்தினர்? புதுமைப்பித்தன் எனக்குப் பாதிப்பை ஏற்படுத்தினார். அவரது காஞ்சனை தொகுப்பு படித்தபோது அவரது யதார்த்தப் பாங்கு என் மனத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

ஜீவாவுடன் பழகக் கிடைத்த சிறு சந்தர்ப்பம் வாழ்க்கையை, ஏற்றத்தாழ்வுகள் கொண்ட வாழ்க்கையைப் பார்க்க, சிந்திக்க, அக்கறை கொள்ளச் செய்தது.

புதுமைப்பித்தனைப் படித்தபின் ரகுநாதனைப் பார்க்க நினைத்தேன். அவர் மேடையில் பேசுவார். தனிப்பட்ட முறையில் அதிகம் பேசமாட்டார் என்றார்கள். ஆனால், நண்பர்கள் வியக்கும் அளவுக்கு அவர் என்னுடன் அதிகமாகப் பேசினார். நிறைய விஷயங்களைப் பகிர்ந்து கொண்டோம்.

ஜீவா, ரகுநாதன் இருவருடைய நட்புக்குப் பின்னர் நெல்லையில் பலர் நண்பர்களானார்கள். அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் ப. மாணிக்கம், வல்லிக்கண்ணன், சிவசங்கரன், பாலதண்டாயுதம், நெல்லை எஸ். வேலாயுதம் எனப் பலருடைய பழக்கம் ஏற்பட்டது. இவர்கள் வாசிப்பில் நம்பிக்கை கொண்டவர்கள்; படித்ததைப் பேசுவதில், கருத்து சார்ந்து விவாதிப்பதில் நம்பிக்கை கொண்டவர்கள்.

க.நா.சு.வின் படைப்புகள் என்னைப் பாதிக்கவில்லை. ஆனால், வாசிப்பில் எனக்கிருந்த ஆசையை வெகுவாக முடுக்கிவிட்டவர் க.நா.சு. ஒரு புத்தகத்தைப் படித்தால் ஓர் அபிப்ராயத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பாதிப்பை ஏற்படுத்தியவர் க.நா.சு.

கிருஷ்ணன் நம்பி மிகச் சுவாரஸ்யமான நண்பர். நகைச் சுவை உணர்வு கொண்டவர். அவர்தான் ஜி. நாகராஜன், மௌனி, அசோகமித்ரன் மீது இருந்த என் கவனத்துக்கு அழுத்தம் தந்தவர்.

எனக்குக் காலத்தின் மீது அக்கறை உண்டு. கருத்துக்கள் மீது மனிதர்கள் மீது, மனித உணர்வுகள் மீது அக்கறை உண்டு. ஒரு புளிய மரத்தின் கதை நாவலானது இடத்துக்கும் காலத்துக்கும் கருத்துக்குமான இணைப்பு என்றும், குழந்தைகள், பெண்கள், ஆண்கள் நாவலை காலத்துக்கும் மனித உறவுகளுக்குமான இணைப்பு என்றும் சொல்ல விரும்புகிறேன்.

செல்லப்பா, சி.சு.

என் சிறுகதை பாணி*

நான் ஒருநாள் சிறுகதை எழுத்தாளன் ஆவேன் என்று நினைத்ததே இல்லை. நான் பி.ஏ.பட்டம் பெற்று ஒரு பள்ளி ஆசிரியராகவோ அல்லது லோயர் டிவிஷன், அப்பர் டிவிஷன் சர்க்கார் குமாஸ்தாவாகவோ ஆகலாம். முப்பது நாற்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைக்கும். அதுதான் அப்போது உயர்ந்த பட்ச சர்க்கார் உத்யோக குறிக்கோள். என் தந்தை சர்க்கார் உத்யோகஸ்தர், ஓவர்சீயர். அதாவது குடிதண்ணீர் குழாய் போடுதல், சர்க்கார் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய 'பப்ளிக் ஒர்க்ஸ்' இலாகாவில் அதிகாரி. அவர் வழி வேலைக்கு நான் போக முடியாது. நான் அதுக்கு தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை. நான் ஹிஸ்டரி - எக்னாமிக்ஸ் மாணவன். கணக்கு என்றால் எனக்கு 'அலர்ஜி'. எஸ்.எஸ்.எல்.சி.யில் மற்றவைகளில் நல்ல மார்க்கு வாங்கியும் கணக்கிலே பாஸ்மார்க் (35) ஒரு சில மார்க் கூடுதலாக வாங்கி தப்பிச்சேன் பிழைச்சேன் என்று பாஸ் பண்ணினேன். அதிலும் ஒரு விசேஷம் அந்த வருஷம் வெளியான கணக்கு பரீட்சை பேப்பர் எனக்கு வகுப்புப் பையனிடமிருந்து கிடைத்ததாலே. இல்லையேனால் அதையே தாண்டி இருக்க மாட்டேனோ, என்னமோ! அது போகட்டும் இண்டர் மீடியட்டில் ஹிஸ்டரி, லாஜிக், பி.ஏ-யில் 'எகனாமிக்ஸ் மெயின்' மாணவன். அதிலும் தமிழிலும் பாஸ்செய்து விட்டேன். ஆனால் இங்கிலீஷ் பாடம் காலை வாரிவிட்டது. செப்டம்பர், மார்ச், செப்டம்பர், மார்ச் என்று மேலும் நான்கு தடவை பரீட்சை எழுதினேன். சரியாகத்தான் எழுதினேன். எகனாமிக்ஸ், பாலிடிக்ஸ் பாடங்களை எல்லாம் ஆங்கிலத்தில் பக்கக்கணக்ககாக எழுதி முதல் தடவையிலேயே பாஸ் செய்தவனை இங்கிலீஷ் பாடம் மட்டும் இப்படி பழி வாங்குவானேன்? எனக்கே புரியவில்லை. ஷேக்ஸ்பியரும் மில்டனும் மற்ற பாடங்களை வைத்த ஆங்கில நாவல், கட்டுரை ஆசிரியர்களும் என்னைப் பழி வாங்கிவிட்டார்கள். அதற்குக் காரணம் - நியாயம் உண்டு.

---

*திரு. சி.சு. செல்லப்பா அவர்கள் இந்நூலைப் படித்தால் தான் தன் படைப்பு முறையை அறியமுடியும் என்று கூறிச் சென்றதால், அந்நூலின் சிலபத்திகள் அவருடைய பின்னணியை அறிதலுக்காகத் தரப்படுகின்றன. நன்றி.

நான் பாளையங்கோட்டையில் - தூத்துக்குடியில் ஆரம்ப - நடுநிலைப்பள்ளி படிப்பு படித்து, திண்டுக்கல் உயர்நிலைப் பள்ளியில் படித்து மதுரையில் உள்ள மதுரை காலேஜில் கல்லூரிப் படிப்பு படித்தவன். தூத்துக்குடியில் ஐந்தாவது வகுப்பு (1920) படித்த சமயம் காங்கிரசில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பிளவு ஏற்பட்டு, லோகமான்ய திலகரின் தலைமைக்கு காங்கிரஸ் வந்ததும், வங்காளப் பிரிவினை சம்பந்தமாக ஏற்பட்ட கிளர்ச்சியும் அதன் விளைவாக திருநெல்வேலியில் வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமண்ய சிவா இவர்கள் தலைமையில் தேசிய எழுச்சி ஏற்பட்டு திருநெல்வேலி, தூத்துக்குடியில் பயங்கர கலவரம் ஏற்பட்டதும் அங்கே சப் கலெக்டராக இருந்த ஆஷ் என்ற பிரிட்டிஷ் அதிகாரி கொடூரமாக மக்களைத் தாக்கியதும், வ.உ.சி., சிவா முதலியோர் கைதாகி, தண்டிக்கப்பட்டதும் அந்த வெள்ளையனைப் பழிவாங்க வாஞ்சிநாதன் அவனைச் சுட்டுக் கொன்று (1911) தன்னையும் சுட்டுக் கொண்டதும், உலக மகாயுத்தம் நடந்தபின் ஜாலியன்வாலாபாக் 'மாசகர்' படுகொலை நிகழ்ச்சியும் (1919) நடந்து, திலகரும் காலமாகி தேசியப் போராட்டம் மகாத்மா காந்தி தலைமைக்கு மாறியதும், அவர் தன்னுடைய நிர்மாணத் திட்டங்களை வெளிப்படுத்தியதும், போருக்குப்பின் ஏதோ சுதந்திர சாரம் தருவதாகச் சொல்லி பிரிட்டிஷ் அரசாங்கம், ஏமாற்றிவிட மகாத்மா மூவம்ச திட்டமாக காலேஜ், அன்னியத் துணி, கோர்ட் மூன்றையும் பகிஷ்கரிக்கவும், அதே சமயம் நிர்மாண திட்ட அம்சங்களாக கதர், தீண்டாமை, மதுவிலக்கு, சமூக ஒற்றுமை ஆகிய விஷயங்களில் மக்களிடையே தீவிர பிரச்சாரம் செய்ய திட்டங்கள் வகுத்ததும் நாடு முழுவதும் அவற்றில் ஈடுபட, தூத்துக்குடியும் பழைய எழுச்சி நிலையைப் புதுப்பித்துக் கொண்டு புதிய காந்திய வழியில் பின்பற்றி இயங்கிய காலம் அது.

சர்க்கார் அதிகாரியான தந்தை எப்படி அந்தக் காலத்திலேயே தேசியவாதியாக மனப்பாங்கு கொண்டார் என்பது எனக்கு வியப்பு. அவர் சென்னையில் படித்தபோது பிரபல வங்க தேசீயவாதி பிபின் சந்திரபாலரின் சென்னை பிரசங்கங்களைக் கேட்டிருக்கிறார். திலகரின் தேசிய இயக்கம் அவரைப் பாதித்திருக்கிறது. அப்போதைய புரட்சி இயக்க சம்பவங்களையும் கவனித்திருக்கிறார். என் எட்டாவது வயதில், அவர் அதுக்கு முந்தின இந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டு தேசீய நடப்புகளை எனக்கு கதைகள்போல தினம் நிறைய சொல்வார். தூத்துக்குடி, திருநெல்வேலியில் நடந்த கலவரங்களை, அவை நடந்த விவரங்களைச் சொல்லி அந்த இடங்களையும் எனக்குக் காட்டுவார். தூத்துக்குடியில் உள்ள ஆஷ்மெமாரியல் உருவச் சிலையைக் காட்டி அவனது

அட்டகாசங்களைச் சொன்னார். நாங்கள் இருந்த சிவன் கோவில் தெரு நடுவில் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி அந்த இடத்தில்தான் குதிரை மீது வந்த ஆஷ்துரை தெருவில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் ஓடிப்போன கோலிக்குண்டை எடுக்கப் போனபோது, அவன் தன்னை அடிக்க கல்லை எடுக்கிறான் என்ற பயந்து அந்த சிறுவனைச் சுட்டுக் கொன்ற இடத்தைக் காட்டுவார். இளைஞன் வாஞ்சி ஆஷ்துரையை மணியாச்சி ஜங்ஷனில் சுட்டுக் கொன்று விட்டு ஜங்ஷனில் உள்ள பழையகால லெட்ரினில் நுழைந்து அதுக்குள் வாஞ்சி தன் வாய்க்குள் ரிவால்வரை விட்டுக் கொண்டு வெடிக்கச்செய்து உயிர்த்தியாகம் செய்து கொண்ட இடத்தை காட்டுவார்.

வீட்டில் தினமும் தந்தை, நான், என் தம்பி மூவரும் பருத்தியை கொட்டை நீக்கி, பன்னி வில்லடித்து பட்டை போட்டு நூற்போம். நூல் சேரவும் மெல்லிசாக இருந்ததால் திருப்பூரில் நெய்ய முடியாமல் ராஜபாளையத்தில் நெய்து வந்தது. அதைப்பார்த்தபோது, அணிந்த போது சுயராஜ்யமே கிடைத்து விட்ட மாதிரி சந்தோஷப்படுவோம். சர்க்கார் அதிகாரியின் வீடு காந்தீயவாதியின் வீடாக இருந்தது. இதெல்லாம் என் தாய்க்குப் பிடிக்காது. படிக்கிறதை விட்டு விட்டு கூட்டம், பஜனை இதுக்கெல்லாம் கூட்டிக் கொண்டு போய் என் படிப்பைக் கெடுக்கிறதாக அம்மாவின் கணிப்பு. அம்மா முணுமுணுப்பதை அப்பா லட்சியம் செய்யவே மாட்டார். அவர்தான் காலையும், மாலையும் படிப்பு 'கசரத் வாங்கி விடுகிறாரே. அவருக்குத் தெரியாததா?'

என் கல்லூரி நாட்களைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதிய போது பதினைந்து வயதுக்கு ஆறுமாதம் குறைவு. எனவே 'எக்ஸம்ஷன்' வாங்கி பரீட்சை எழுதி பாஸ் பண்ணினேன். மதுரை நகரத்தில் ரூம் எடுத்தேன். ஹோட்டல் சாப்பாடு, வாழ்க்கை புதுமையாக இருந்தது. இதுவரை தந்தை, சிறிய ததந்தை வீட்டு கட்டுப்பாட்டு வாசம். இப்போது சுதந்திரமானதாக உணர்வு ஏற்பட்டது. வகுப்பு நண்பர்கள், ரூம் நண்பர்கள் இப்படி புதியவர்களுடன் பழக எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது (1927) மதுரையில் தேசிய உணர்ச்சி தலைதூக்கி இருந்தது. தூத்துக்குடி நாட்களிலிருந்து இந்த ஏழு ஆண்டுகால நாட்டின் நிலை காந்தியத்தால் பாதிக்கப்பட்டு பொதுமக்களின் தேசிய உணர்ச்சி வெப்ப சூழ்நிலையில் நகரம் முழுவதுமே பொங்கி வந்திருந்தது. கதர், காந்திக்குல்லா மயம், எங்கு பார்த்தாலும் தேசிய கொடிகள், வீட்டுக்கு வீடு ராட்டை சுற்றுதல்கள், அந்நியத் துணி

பகிஷ்கார இயக்கம், தேசிய ஊர்வலங்கள், தேசிய பஜனைக் கோஷ்டிகள், பொதுக் கூட்டங்கள். அப்பா, சிற்றப்பா ஊட்டிய தேசிய உணர்ச்சி வெளியீட்டுக்கு இங்கே எனக்கு வாய்ப்பு கிடைத்தது. இவற்றில் கலந்து கொண்டேன். காலையில் சென்னையிலிருந்து வரும் ஹிந்து பத்திரிகை வாங்கி படிக்க ஆரம்பித்தேன் நண்பர்களுடன். (அதன் விலை அப்போது ஒரு அணா) நாட்டின் சுதந்திரக்காற்று வீச்சு அதன் மூலம் எட்டியது.

என் தந்தை ஸ்ரீவைகுண்டத்துக்கு மாற்றப்பட்டதும் (1933) அங்கே இருந்து மூன்றாம் தடவை பரீட்சை எழுத படித்துக் கொண்டிருந்தேன். அங்கே என்னைப் போல படித்துவிட்டு வேலை இல்லாமல் இருந்தவர்கள் மூன்று பேர் எனக்கு பழக்கமானார்கள். அங்கே ஒரு பையன் பத்திரிக்கை ஏஜண்டாக இருந்தான். அவனிடமிருந்து ஆனந்த விகடன், பிரசண்ட விகடன் பத்திரிக்கைகளை நாங்கள் வாங்கிப் படித்துக் கொண்டிருப்போம். அதுக்குமுன் நான் அவற்றைப் படித்ததில்லை. நான் கல்லூரியில் படிக்கும்போது கூட கல்லூரி லைப்ராரியில் அபூர்வமாகத் தான் நாவல்களைப் படிப்பேன். என் பாடத்துக்கு இருந்த ஜார்ஜ் இலியட், ஜேன் ஆஸ்டின் ஜார்ஜ்மெர்டித், வால்டர் ஸ்காட், ஆர்.எல். ஸ்டீவென்சன், சார்லஸ் டிக்கன்ஸ் ஆகிய சிலரது நாவல்களைப் பாடத்துக்குப் படித்தவன். அவைத்விர லைப்ராரியில் படித்தவை கானன்டாயில், ஆர்தர் பிளாக்மூர், அலெக்ஸாண்டர் டூமாஸ் ஆகியோரது நாவல்கள் ஆக இருபது தான் இருக்கும். எனக்குத்தான் ஆங்கிலமே பிடிக்காதே. ஆனால் தமிழ் நாவல்களை நிறைய என் தாய் ஊராகிய வத்தலக்குண்டில் மாமன் வீட்டில் இருந்த சிறு லைப்ராரியில் படித்திருக்கிறேன். அங்கே தெரு பெரிய பையன்களாகச் சேர்ந்து வெங்கடவிலாஸ் லைப்ராரி என்ற பெயர் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களில் என் மாமா ஒருவர். பி.எஸ். ராமையாவும் உண்டு. பி.எஸ். சங்கரன் (கமலாம்பாள் சரித்திரம் நாவல் ஆசிரியர் ராஜம் அய்யரின் சகோதரி மகன்) உண்டு. புத்தகங்கள் என் மாமா வீட்டில் தான் இருந்தன. ஹைஸ்கூல் படிக்கும் போதும் காலேஜில் படிக்கும் போதும் நான் பெரும்பாலும் லீவுக்கு அங்கேதான் போவேன் பாட்டி வீட்டுக்கு. அந்த வீட்டுக்கு நான் முதல் பேரன். அப்பா அம்மா வீட்டில் மாதிரி கண்டிப்பு இருக்காது. என் அம்மாவே சொல்வாள் அப்பாவிடம் 'அவனுக்கு பாட்டியகம்தான் பெரிசு' என்று. மனதுக்குள் சொல்லிக் கொள்வேன், 'அங்கே திட்டு, அடி கிடைக்காதே' என்று. கிராமத்திலேயே பெரிய மிராசுதார் வீடு. அபூர்வபேரன். கேட்பானேன் செல்லத்துக்கு.

இந்த நிலையில் தான் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்தபோது மேலே குறிப்பிட்ட பத்திரிகைகளைப் படிக்க நேர்ந்தது. நண்பர்கள் பேசிக்கொள்வோம். ஆனந்தவிகடனில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியின் நகைச்சுவை எழுத்துப் போக்கை ரசித்துப் பேசுவோம். ஆனந்த விகடனில் 'பெண்கள் சீர்திருத்தப் போட்டி' 'ஆண்கள் சீர்திருத்தப் போட்டி' என்றெல்லாம் வரும். அந்தக் கட்டுரை முடிவுகள் வெளிவரும். விகடன் நகைச்சுவைத் துணுக்குகள் பற்றி பேசிக் கொள்வோம். அப்போது என் நண்பன் சங்கரன் ஒருநாள் புதிய பத்திரிகை ஒன்றை ஒருவரிடமிருந்து வாங்கி வந்தான். அதுதான் 'கலைமகள்'. அப்போது தான் ஆரம்பம். அதையும் படித்து பேசுவோம். அந்த சமயத்தில்தான் விகடன் 'சிறுகதைப் போட்டியை விளம்பரப்படுத்தியது. முப்பத்தி ரெண்டு இறுதியில். அடுத்த ஆண்டு மே மாதத்தில் பரிசுக்கதைகள் வெளிவந்து 'ருலி' (எம்.ஜே. ராமலிங்கம்) கதை (ஊமைச்சிகாதல்)க்கு பரிசும் பி.எஸ். இராமையா கதை 'மலரும் மணமும்'க்கு ஆறுதல் (கான்ஸொலேஷன்) பரிசும் கிடைத்தன.

கதை தலைப்பில் பி.எஸ். இராமையா என்றுதான் இருந்தது. (பின்னால்தான் தெரியவந்தது) என் நண்பர்களும் நானும் பரிசுக் கதை என்பதால் 'ருலி' கதையையும் இந்தக் கதையையும் ஆழ கவ்னித்து படித்தோம். அப்போது அந்த ஊரில் இருந்த ஒருவரிடமிருந்து வ.வெ.சு. அய்யரின் மங்கையர்க்கரசி கதைத் தொகுப்பைப் பெற்று 'குளத்தங்கரை அரசமரம்' கதையை ரசித்திருந்தோம். எனக்காவது ஏதோ கொஞ்சம் ஆங்கில இலக்கியம் தெரியும். அவர்களுக்குத் தெரியாது. எங்கள் 'காமன்ஸென்ஸை' வைத்து இந்தக் கதையையும் ரசித்து புதுவிதமாக இருப்பதாக பேசிக் கொண்டோம். அந்தச் சிறுகதை போட்டியை ஒட்டி 'கலைமகள்' பத்திரிகையில் ஒரு சிறுகதைப் போட்டி விளம்பரம் வந்தது. அந்தப் போட்டி முடிவு ஒருசில மாதங்களில் வெளிவந்தபோது, 'முள்ளும் ரோஜாவும்' என்ற கதைக்கு பரிசு கிடைத்தது. அதை எழுதியவர் என். பிச்சமூர்த்தி என்று போட்டிருந்தது. அந்தக் கதையும் எங்களுக்குப் பிடித்தது. எங்களுக்குப் பிடித்ததை வைத்துதான் கணிப்பு.

பிறகு பரீட்சை எழுத சென்னைக்குப் போனேன். என் உறவினன் உதவியால் ஒரு ரூம் திருவல்லிக்கேணி, ஹைரோட்டில் கிடைத்தது. அந்த வீட்டு மாடியில் 'பாரதி பிரசுராலயம்' கடை இருந்தது. அதில் பாரதி புத்தகங்கள் விற்பனைக்கு வைத்த பெரிய ஷெல்புகளுக்கு பின்னால் சிறு இடத்தில் பெட்டி படுக்கையுடன் தங்கி இருந்தேன். அந்த பிரசுராலயத்துக்கு பொறுப்பாக ஒரு இளைஞர் இருந்தார். அவர் பகலில்தான் இருப்பார். இரவில் நான்

மட்டும் இருப்பேன். இல்லை, பாரதியும் கூட இருப்பார். எந்த பாரதியின் தேசீயப்பாடல்களை எட்டு வயதில் பாடினேனோ, அவரது முழு கவிதைத் தொகுப்பை அங்கேதான் முதல் முதலாக பார்த்தேன். ஒரு பிரதி வாங்கி வைத்துக் கொண்டேன் (ரூ2.50). செப்டம்பர் ஆரம்பத்தில் பரீட்சை எழுதினேன். பிறகு அங்கே இரண்டு மாதகாலம் இருந்தேன். அப்போதுதான் 'மலரும் மணமும்' கதையை எழுதியது எங்கள் ஊர் ராமையா என்று தெரிந்து கொண்டேன்.

அந்த ரூமில் இருந்தபோது திடுமென ஒரு விகடத்துணுக்கு தோன்றியது. உடனே அதை கார்டில் எழுதி விகடனுக்கு அனுப்பினேன். ஆங்கிலத்தில் ஒரு ஜோக் எழுதி 'மெர்ரி மகஜின்' என்ற ஆங்கிலப் பத்திரிக்கைக்கு அனுப்பினேன். அப்போது 'காந்தி' என்ற பத்திரிகை மாதம் இருமுறையாக வந்தது. அதற்கு ஒரு விகடத்துணுக்கு அனுப்பினேன். ஒன்றும் வரவில்லை. ஒரு நகைச்சுவை சம்பவம் தோன்றியது. ஒருவன் தன் பையில் ஒரு ரூபாயை போட்டுக்கொண்டு கிராமத்துத் தெருவில் போய்க் கொண்டிருக்கிறான். சில வீடுகள் தள்ளி போய் விட்டு, திரும்ப அதே வழியில் வருகிறான். எதிரே கீழே ஒரு ரூபாய் கிடந்தது. எடுத்து கையில் வைத்துக் கொண்டு வீட்டுக்குள் வருகிறான். வந்ததும் ஏற்கனவே தன் பையில் இருந்த ஒரு ரூபாயை எடுக்க கையை நுழைக்கிறான். பையில் ரூபாய் இல்லை. கீழே இருந்து எடுத்த ரூபாயைப் பார்த்தான். அதே ரூபாய் அது. பையில் ஓட்டை இருந்தது. அது வழியே விழுந்ததுதான் திரும்பக் கிடைத்திருக்கிறது. அவனுக்கு அசடு வழிகிறது.

வெறும் சம்பவம் மட்டும் போதாது.

அன்று காலையில் அவன் வயல் பக்கம் போனபோது ஓடும் ஒரு நரியை பார்த்திருந்தான். காலை நரி முகத்தில் விழித்தால் அன்று நல்ல பலன் கிடைக்கும் என்று பெரியோர்கள் சொன்னது நினைவுக்கு வர அந்த ரூபாய் கிடைத்தது, பலன் என்று நினைத்ததுக்கு ஏமாற்றம் தான் மிச்சம். இதையும் சேர்த்து இந்த நகைச்சுவை (ஸ்கிட்) வேடிக்கை கதையாக "நரிமுகத்தில் விழித்த பலன்" என்ற தலைப்பில் விகடனுக்கு அனுப்பினேன். அது விகடனுக்கு பிடித்திருக்கும், நிச்சயம் வரும் என்று நம்பினேன். இரண்டு வாரம் கழித்து 'நரி முகத்தில் விழித்த பலன்' என்ற தலைப்பில் ஒரு பக்கத்தை விகடனில் பார்த்தேன். அது கதையாக இல்லை. ஒரு முழு பக்கத்தில் கார்ட்டூன் சித்திரமாக ஐந்தாறு சிறு வரைபடம். எனக்கு எப்படி இருந்திருக்கும்! இதுவும் ஒரு பத்திரிக்கை தர்மம்

போலும் என்று நினைத்தேன். காந்தியில் ஒரு நகைச்சுவைத் துணுக்கு வெளிவந்தது. இதுதான் என் எழுத்து முதல் அனுபவம்.

ஒருநாள் பத்திரிகைகள் விற்கும் கடையை வழக்கம் போல் பார்க்கும்போது ஒரு புதிய போஸ்டர் கடையில் தொங்கியது. **'மணிக்கொடி'** (17.9.33) வாரப்பத்திரிகை. ஏதோ புது பத்திரிக்கையாக இருக்கே என்று ஒரு அணா கொடுத்து வாங்கிப் பார்த்தேன். தினசரி பத்திரிகை அளவு பெரியது. எட்டு பக்கங்கள், புதுவிதமாக இருந்தது. கே. சீனிவாசன் ஆசிரியர். வ.ரா. என்பவர் நிறைய எழுதி இருந்தார். வத்தலக்குண்டு ராமையா என்று பெயர் போட்டு சென்னை மூர்மார்கட்டைப் பற்றி ஒரு நகைச்சுவை கட்டுரை இருந்தது. மற்ற பெயர்கள் நினைவில் இல்லை. வ.ரா.வின் எழுத்துக்கள் எனக்குப் பிடித்தது. புதுமையாகவும் பட்டன. பிறகு ஒன்றிரண்டு இதழ்களை வாங்கிப் பார்த்தேன். ஆழ்ந்து படிக்கத் தூண்டியது. அடுத்த மாதம் புறப்பட்டு ஸ்ரீவைகுண்டம் வந்து சேர்ந்தேன். மறுபடியும் பரீட்சை எழுத உற்சாகம் இல்லை. அங்கேயே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தேன். தந்தைக்கும் மனம் கசந்திருக்கும். எதுவும் சொல்லவில்லை.

பரீட்சை எழுதி முடிந்துவிட்டது. தினமணி பத்திரிக்கையில் மணிக்கொடி விளம்பரம் வந்திருந்தது. முப்பத்தோராம் தேதி வெளிவரும் என்றும் அதில் கதை எழுதியவர்கள் பெயர்களும் காணப்பட்டது. சங்கு சுப்ரமண்யன், பி.எஸ். இராமையா, பிச்சமூர்த்தி, கி.ராமச்சந்திரன், புதுமைப்பித்தன், பி.எம். கண்ணன், பெ.கோ. சுந்தரராஜன், கே.சீனுவாசன் ஆகியோர் பெயர்கள் இருந்தன. இவற்றோடு என் பெயரும் இருந்தது. இரண்டு நாட்கள் கழித்து முப்பத்தோராம் தேதி காலை மணிக்கொடி வந்திருக்கும் என எதிர்பார்த்து இருந்தவன் எழுந்ததும் வழக்கமான பத்திரிக்கை கடை நோக்கி போனேன். கடையில் மணிக்கொடி போஸ்டர் தொங்கியது. எழுதியவர்கள் பெயர்கள் இருந்தன. என் பெயரும் கதை பெயரும் இருந்தது. "ஸரஸாவின் பொம்மை" சி.எஸ். செல்லப்பா என்று. எனக்குப் பெரிய வியப்பு. நான் போனதுமே கடைக்காரர் 'மணிக்கொடி வந்திருக்கு ஸார்' என்று எடுத்துக் கொடுத்தார். அந்தக் கடைக்காரர் இளைஞன். தேசியவாதி. பத்திரிக்கையை வாங்கிக்கொண்டு பிரித்துக்கொண்டே ரூமுக்கு வந்தேன். நான் கதைக்குக் கொடுத்திருந்த தலைப்பு 'ஸரஸா விரும்பியபடியே' என்பது. அதை ராமையா 'ஸரஸாவின் பொம்மை' என்று மாற்றி இருக்கிறார். ஏனோ? உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தேன். நான் எழுதியபடியே இருந்தது. கதை முடிவில் என் ஐந்தாறு வரி சிறு பாராவை எடுத்து விட்டு அதே

அளவுக்கு ஒரு பாராவைச் சேர்த்திருந்தார் ராமையா. அந்தக் கதை முடிப்புக்கு (டினோமெண்ட்) ஏற்ப தலைப்பை மாற்றி இருக்கிறார்.

சுதந்திர தாகம் என்ற நாவல் ஸ்தூல சம்பவங்கள் ரிபோர்ட் ஆக வந்த பகுதிகளை அடிப்படையாய்க் கொண்டது. நாவல் பூரா இப்படி இல்லை. 1500 பக்கத்தில் சிந்தனை ஓட்டம்; பிளாஷ்பேக் (Flashback). அதிலேயே நாவல் செல்லும். 2வது இந்த மாதிரி சம்பவங்களுக்கு மேலாக காந்தியத் தத்துவத்தைப் பற்றிய புரோபகேண்டா என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அதை அடிப்படையாகக் கொண்ட இந்த நாவலைப்பற்றிச் சிலவார்த்தைகள் சொல்லுகிறேன். அது என் உத்தேசம். சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் நடந்தது மாதிரி வேறு எங்கும் இந்த மாதிரி இயக்கம் நடந்தது இல்லை. மேற்கத்திய நாட்டிலும் சரி. தப்பித் தவறி அசோகன் ஒருத்தன்தான் தப்பு செய்துவிட்டு, இம்சை செய்துவிட்டு பிறகு அகிம்சை என்றான். அவ்வளவுதான். அதுக்கப்புறம் உலகத்தின் எந்த மூலையிலும் ஒரு கன்னத்தில் அடிச்சா மறு கன்னத்தைக்காட்டு என்று சொன்னதை வெஸ்ட்ல கூட கேட்கவில்லையாம். அப்படிப்பட்ட ஒரு யுத்தம். அப்ப கேட்டான், அகிம்சையிலேயே சத்தியத்தைச் சொல்லி எதிராளியை விரட்ட முடியுமா? உப்பள்ளி சுதந்திரம் கிடைக்குமா? இதெல்லாம் என்னது? எனச் சிரித்தார்கள் பெரிய தலைவர்கள் உள்பட. காந்தி இந்த இரண்டு கருத்துக்களையும் சரியல்ல என்று நிரூபித்துக்காட்டி விட்டார். உப்புச் சத்தியாகிரகம், உப்பு பெறாத காரியம் என்பார்கள். ஒரு உப்புக் கல்லாலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஆட்டம் கண்டது பற்றி மகாத்மாவே அப்படி நினைத்தாரோ? சொல்லமுடியாது. ஆப்பிரிக்காவில் செய்ததில் சக்ஸஸ் ஆனது. இந்தியருக்கு சம வாழ்க்கை உரிமை வாங்கிக் கொடுத்ததில் அந்த அனுபவத்தில் நான் செய்யறேன். இங்கே சோதனை பண்ணி பார்க்கிறேன் இப்படின்னு கோகலேகிட்டேயும், திலகர்கிட்டேயும் சொன்னார். இது நடக்குமா? இந்தியாவைச் சுற்றி ஜனங்கள் எப்படி இருக்காங்க என்று தெரிஞ்சிக்கோ, அதற்கு அப்புறம் செய்யலாம் என்ற கோகலே அதுக்குள்ளே போய்விட்டார். 1921-ல் மகாத்மா காந்தி வாஸ் லெப்ட் பை ஆல். அதையடுத்து வந்த திலகரும் சொன்னாராம். நீ செய் காந்தி. எனக்கு இதுலே உடன்பாடு இல்லை. ஆனால் என் காரியம் எல்லாம் செய்தாச்சு, நீ செய்துபாரு உனக்கு அதிலே வெற்றி கிடைக்கிறதை நான் பார்த்தேன்னா அப்புறம் உங்ககூட சேர்ந்துக்கிறேன் என்று விட்டு திலகர் உடனே போய்விட்டார். காந்தி, நாடு பூரா சுற்றி எல்லாப் பெரிய தலைவர்களை லாலாலஜபதிராய், நேரு, சி.ஆர்.தாஸ், விஜயராகவாச்சாரியார் இப்படி

ஒவ்வொரு மாநிலமொழி தலைவர்களையெல்லாம் சந்தித்துக் கேட்டார். கேட்டுப்ட்டு 'என்னது இவன் உளறுகிறான்' என்று பேசிட்டுப் போனாங்க. இதெல்லாம் The Hinduவின் ரிக்கார்டில் உள்ளது. நூற்றாண்டு விழா நடத்தும் போது அவர் பேசினது. சென்னையில் வந்து பேசினது எல்லாவற்றையும் இந்து ரெக்கார்ட் பண்ணியிருக்கிறது. அதுல சொன்னார் "I want the spiritualistic politics". இதுதான் காந்தியத் தத்துவம். ஸ்பிரிச்சுவலைஸேஸனுக்கு எது முக்கியம்? தார்மீகம், சத்தியம், அகிம்சைதான் முக்கியம். வயலன்ஸ் வச்சி ஒன்னும் பண்ண முடியாது. அவர் அரிச்சந்திரனை எடுத்துக்கிட்டார். சத்தியத்துக்காக பிரகலாதனை எடுத்துக்கிட்டார். என்ன சித்ரவதை செய்தும் அவனிடம் வயலன்ஸ் எடுபடவில்லை. ஆகவே இந்த இரண்டையும் உதாரணமாகக் கொண்டு மகாத்மாகாந்தி, இந்த இயக்கத்தை நடத்தினார். நான் அதன் உடன் நிகழ்காலத்தவன். 20-லிருந்து எனக்கு தெரியும். 8 வயதிலிருந்து காந்தியத்துல ஈடுபட்டவன். எல்லாம் என் வரலாற்றில் இருக்கு. என்ன நடந்தது? காந்தியம் - ஒன்று இன்னிக்கு மற்ற இஸம்களோடு காந்தியினுடைய சத்தியாகிரகப்போர். இந்தப் போரை அவர் சாதிச்சுக் காண்பிச்சார். மலத்தை அள்ளிப்போட்டு சாக்கடை தள்ளிவிட்டு அதுக்குள்ளே ராத்திரி, பூரா இருந்த தொண்டன்; முள்ளிலே இருந்த தொண்டன் ஜெயிலில் என்னென்னமோ சாப்பிட்டான். புழு, பூச்சி இருக்கும். இப்படிச் சித்ரவதைகளை அனுபவிச்சவர் காந்தி. அந்த செல்ப் ஸேக்ரிபைஸ்-ன்னா அவர் என்ன சொன்னார் தெரியுமா? மனம் ஒப்பி இத்துன்பங்களைச் சகிக்கவேண்டும். இதைக் கடைபிடித்தவர்கள் காந்தியவாதிகள். அந்தக் காலத்தில் இதைப் பின்பற்றியவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் இப்ப போயாச்சு. அந்தத் தலைமுறை போய் இப்ப இரண்டாம் தலைமுறை வந்தாச்சு. இது நடக்குமா? நடக்காதா? நடந்தது. நெஜமா? வரலாற்றிலும் கிடையாது. எழுதி வைத்தவங்களும் கிடையாது. அதுக்குத்தான் இந்த நாவல எழுதினேன். பேராசிரியர்கள், மாணவர்கள், பெண்கள், வெற்றிலை பாக்கு கடைக்காரர்கள், ஓட்டல் நடத்துபவர்கள் என்று எல்லாரும் எப்படி காந்தியத்தில் ஈடுபட்டார்கள்? படித்தவன், படிக்காதவன், கிராமவாசி, நகரவாசி என்று பலதரப்பினர். மதுரையில் ஒரு பட்டிக்காட்டான் - குடியானவன் - அவன் காந்தியைப் பார்த்தது கூட இல்லை. கேட்டு விட்டு வந்து ஜவுளிக்கடை முன்னாலே நின்று 100 அடி 'லட்டி'யால வாங்கினான். என் கண்ணாலே பார்த்தேன். நம்புவீர்களா? 100 அடி லட்டியாலே வாங்கியவன் மறுநாள் வந்திட்டான் திரும்பவும். அவனைத் தரதரவென்று இழுத்துப் போனார்கள். நாய் மாதிரி. அப்படியும், 'வந்தேமாதரம்' என்றான்.

மூச்சிருக்கா என்று கூடத் தெரியாது. வந்தேமாதரம் வரும். அதான் மந்திரம்; தாரக மந்திரம். அரஹரமஹாதேவ் அல்லாஹு அக்பர் என்று கூறி யாரெல்லாம் மதத்தின் பெயரால் போருக்குப் போனாங்களோ அவங்களுக்கெல்லாம் வந்தேமாதரம் தான் மருந்து. இப்ப இந்துவில் போட்டிருக்கான். ராமன் பெயர் சொன்னாபோதும் உங்களுக்கு வேதனைகள் தெரியாதுன்னு. இது அவரது சொந்தபிரஸ். அப்ப எங்களுக்கு முழங்கக் கொடுத்தது 'வந்தேமாதரம்'. ஆகவே வரும் தலைமுறைகளுக்கு இது சாத்தியம். மந்திரம் போட்ட ரியலிஸம் அல்ல. அப்படிப்பட்ட நாவல் அல்ல; இலக்கியம் அல்ல. ஸ்பிரிச்சுவலிஸம் இருக்கு. இப்படி எத்தனை இலட்சம். ஒரு லட்சம் பேரு ஜெயிலுக்கு போயிருக்கலாம். பத்து லட்சம் பேர் அடிப்பட்டு இருக்கலாம். அடிப்பட்டு அங்கங்கள், ரணமாகியிருக்கலாம். கோடிக்கணக்கானவர்கள் தளர்ந்திருக்கலாம். சுடப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கலாம். ஆனால் காந்தீய தாக்கம். இந்த காரியத்தைச் சாதித்துக் கொடுத்தது. நம்ம கைமேல சுதந்திரம் வாங்கினோம். மேலே சொல்லத் தயாராக இல்லை. உங்க கையில் கொடுத்தோம். இப்போ பேக் நம்பர்ஸ். ஏதோ ஒருத்தர் இரண்டு பேர் மேலும் கீழும் பார்த்துட்டு அந்தரத்திலே இருக்கோம். இது ஹிஸ்டரியில் வரவில்லை. எந்த நாவலிலும் வரலை. இந்த நாவலில் அதை போர்ட்ரைட் பண்ணியிருக்கிறதுதான் இந்த நாவலுடைய விஷேசம். சாகித்யம், மாஸ்டர்பீஸ் இதுக்கெல்லாம் மேலே இது இதிகாசம். இராமாயணம், பாரதத்திற்குப் பிறகு இதுதான் அந்த வழியில் முதலில் எழுதியது என நான் நினைச்சு எழுதல்ல. தாகூர் பீஸ் ஆஃப் வாலண்டரி எழுதின மாதிரி எங்கோ ஆரம்பித்து எழுதினேன். பிளான் செய்து எழுதவில்லை. பாமுலா கிடையாது. ஆகவே இது ஒரு தனி விதமான நாவல். டெக்னிக் பலதினுசு. இந்த நாவலுடைய வேல்யூ பற்றி சொல்லிட்டேன். இதன்படி நடந்ததால் இப்ப தேசியவாதியா பேசறேன். இப்ப இருக்கிற நிலைமைக்கு நேற்று பேப்பரில் கோடம்பாக்கம் ரோட்டில் பக்கத்து வீடு பையன் 10 வீடு தள்ளி இருந்த வீட்டு, 10 வயது பொண்ணை ரேப் பண்ணி, எங்கெல்லாமோ புதைத்துவிட்டான் என்று செய்தி. நடுங்குகிறது எனக்கு. இப்படி எத்தனை வருகிறது. இதுக்கெல்லாம் என்ன விமோசனம்? என்ன பண்றோம்? அன்னிக்கு நாங்க பாதிக்கப்பட்ட மாதிரி இப்ப பாதிக்கப்பட்ட தலைமுறை இல்லை. காந்திய தத்துவத்தில் வேறொன்றும் காப்பாற்ற முடியாது. சும்மா லஞ்சத்தை ஒழிக்கக் கமிட்டி போட்டுள்ளோம். எல்லாம் ஏமாத்து. கிரிமினல் பாலிடிக்ஸ் தான் நடந்திட்டிருக்கு. ஆப்ரகாம் லிங்கன் மூவ்மெண்ட் நாவலினால் Slavary யை ஒழிச்சான். அந்த நாவல்

மூவ்மெண்ட் ஒவ்வொருத்தர் கையிலும் இருக்கணும். திருப்பித் திருப்பி படிக்கணும்; சாத்தியமா இல்லையா? இதைச் செய்தவனுக்கு 20 வயசுதான். இப்ப இருக்கிறவனுக்கு 20-30 வயது இருக்கு. இராமாயணத்தை நம்பினோம். நெப்போலியனை நம்பினோம். மார்க்ஸை நம்பினோம். சங்கரரை நம்பினோம். அதுமாதிரிதான். இனி வரும் தலைமுறையைப் பார்க்க போறோம்னு தெரியாது. என்னோட வாழ்நாளை எண்ணிட்டு இருக்கிறவன். அந்த ரெக்கார்ட் தான் இந்த புக் (நாவல்) இவ்வளவுதான் சொல்லணும். இது எத்தனை தலைமுறைக்கு நிற்கும்? ஆனா எத்தனைபேர் படிக்கிறாங்கண்ணு தெரியாது. அதனாலே நாங்க திருந்தின மாதிரி 18 வயது இப்போது சேர்ந்து செய்யலாம். நடுத்தரக்காரன் என்ன பண்றான்னு தெரியாது. கடவுளுக்குத்தான் தெரியும்.

இந்த விஷயம் இதோடு போதும். வேறென்ன வேணும் என்ன கேட்கணுமோ கேளுங்கள். எதைக் கேட்டாலும் சொல்கிறேன். இலக்கியத்தைப் பற்றியோ, இப்ப இது முக்கியமாக வந்ததாலேயோ இதைப்பற்றிக் கூட சொல்றேன்.

எனக்கு இலக்கியத்தோட கன்டென்ஸ் எல்லாம் தீர்ந்துபோச்சு. நான் தினமும் செய்திகள் படிக்கிறேன். காந்தியிஸம், மார்க்ஸிஸம், புத்திஸம், எல்லாம் போயிட்டது. காந்தியா சுயராஜ்யம் பண்ணிக் கொடுத்தார்? என்று இப்படி எல்லாம் பேசலாம் எழுதலாம் வெஸ்டர்ன் ரைட்டர்ஸ் எழுதறத ஆதாரமாக்கி இங்க இருக்கிற தினப் பத்திரிக்கையில் உபதேசம் பண்றாங்க ஒவ்வொருத்தருக்கும். யார் கேட்கப் போறா அதை நீ போய் சொல்லத்தான் முடியுமா? முடியும், கேட்கிறது யாரு? போடா நீயாரு சொல்றது? மறக்கப்பட வேண்டியவர்கள். வரலாறு கிடையாது. எப்படி எதிர்காலம் போறது என்று எனக்குத் தெரியாது. எங்கேயிருந்து பார்ப்பேனோ? ஆனால் இன்னொரு வாழ்க்கை இந்த உலகத்தில் வாழ்ந்தாகனும் என்றும் நினைச்சிப்பேன்.

ரிட்டரேச்சர் பற்றி (நிறையப்) படிச்சிருக்கேன். பையோகிராபி (Biography) பற்றியும். இரண்டிலும் நான்தான். சிவராமனும் நான்தான். **'என் சிறுகதைபாணி'**யில் என் இலக்கியத்தைப் பற்றி சொல்லியிருக்கிறேன். யார் படிக்கிறார்கள். இங்க வந்து கேட்டா சொல்லுகிறேன். படிச்சவங்களுக்கு சொல்ல வேண்டியது இல்லை. வேறென்ன வேணும்? என்கிட்ட என்ன எதிர்பார்க்கிறீர்கள்? இன்னும் பத்து நிமிஷமோ பதினைந்து நிமிஷமோ குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டச் சொல்றேள் - முடியுமா - என்ன வேணும் சொல்லுங்க உங்களுக்கு சந்தேகம் இந்த தலைமுறைக்கு.

'வாட் டு யூ மீன் பை மாஜிகல் ரியலிஸம்' முட்டாள் பையன்கள் செய்தான்னா, அதவச்சிக்கிட்டு, இந்தியாவில் மாஜிகல் ரியலிஸம், ஸ்ரியலிஸம், மாடர்னிஸம்னு தற்கால சிறுபத்திரிக்கையாளர், தற்கால எழுத்தாளர்கள் சொல்லுவாங்க. மாஜிகல் ரியலிஸம்னா என்ன? அப்புறம் இராமாயணத்தை நம்பறவனுக்கும் புராணத்தை நம்பறவனுக்கும் அது புராணகாலம். அந்த காலத்தில் இவை இல்லை. இது பகுத்தறிவுக்காலம், ஆகையினால் அதை வச்சி பார்க்க முடியாது. நீங்க நம்பரேன்னு என்ன நிச்சயம்.

வால்மீகி ராமாயணம் லிட்டரேச்சர் தான். (அடகஷ்டமே) அது மாஜிகல் ரியலிஸம் இல்லை. ஸுப்பர் நேச்சுரல் லிமிட் உண்டு. கிருஷ்ணன் உலகத்திற்கு வந்தது எல்லாம் புராணம். புராணத்தையும் மாஜிகல் ரியலிஸம் ஐயும் கலக்காதீர்கள். வால்மீகி காலத்தில் மாஜிகல் ரியலிஸம் இருந்தால் இத்தனை காலமும் அதை நீங்க ஏன் பாலோவ் பண்ணவில்லை. அமெரிக்கா, பிரெஞ்சுக்காரன் சொன்ன பிறகு தான் ஞானம் வருதோ. வால்மீகிக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? வால்மீகிக்கும் மாஜிகல் ரியலிஸக்கும் என்ன சம்பந்தம்?

கேள்வி: கனவையும் நெஜவாழ்க்கையில் நடக்கிற விஷயத்தையும் மிக்ஸ் பண்ணி சொல்றது மாஜிகல் ரியலிஸம் ஒருவர் கேட்கிறார். இந்த இஸம்கள் பற்றி இந்த மாதிரி எதுவுமே அவருக்கு தெரியாதாம். அவர் கதை எழுதலாமா? கூடாதா?

அது தெரிய வேண்டிய அவசியமில்லை அவருக்கு. அவர் காலத்திற்கு அது தேவையில்லை. என் காலத்திற்கும் அது தேவையில்லை. சா.க. போன்ற அவருடைய முதல் நாவல் மாஜிகல் ரியலிஸமா? அது அவருக்கே தெரியாது. இப்ப இந்த மாதிரி, அமெரிக்கன் பப்ளிஷர்ஸ் புத்தகங்களைப் பார்த்திட்டு, என்னனென்னலாமோ புத்தகம் கொண்டுவராங்க. இதப்பாருங்க நமக்கு இருக்குற ஹெரிடேஜ்ல் நம்பிக்கையில்லை. தெரியாது உங்களுக்கு அதைக் கடன் வாங்குகிறீர்கள். டெபனிட் ஆகத் தெரியாது உங்களுக்கு. ஸர்ரியலிஸம் தெரியாது. சும்மா ஒருத்தர் பேரைச் சொல்லிட்டு இங்க வந்து லேட்டர்ஸ்ட் மாகஸின்ஸ் படித்துட்டு இந்தப் பேராசிரியர்கள் திணிக்கிறார்கள்.

நம்ம சிலப்பதிகாரத்திலேயும் சங்க இலக்கியத்திலும் தமிழுக்குன்னு ஒரு மரபு உண்டாக்கி இருக்கிறோம். வெஸ்டர்ன் இதெல்லாம் வேண்டாம். சிலப்பதிகாரத்திலும், சங்க இலக்கியத்திலும் இருக்குற மரபு போதும்ன்னு சொன்னாக்க அதைத் தாண்டி இந்த

நூற்றாண்டு வரும்போது என்ன செய்தோம். நம்ம சிலப்பதிகாரத்திலும், பழைய சங்க இலக்கியத்திலும் நிக்கலை. இடையிலும் தெனாலிராமன் கதையும், பஞ்சதந்திர கதைகளும், இந்த மாதிரி சின்ன கதைகளும் வர ஆரம்பித்து விட்டது. அது அச்சு இயந்திரம் வந்த நூற்றாண்டு துவக்கத்தில் புது இலக்கியம் உருவாகும் போது நமக்கு அதுதான் முன்மாதிரியாக இருந்தது. அதை உடைத்து பிரதாப முதலியார் சரித்திரம் எழுதும்போதும் சுந்தரபிள்ளை மனோன்மணீயம் எழுதும்போதும் மேலைநாட்டுத் தாக்கம் வந்துவிட்டது. இந்த வருடம் கழித்து விமர்சகர் இதனைச் சொல்லணும் இல்லையா? உங்களுக்குக் கோபம் வருகிறதே தவிர நம்ம அறியாமல் பிரதாப முதலியார் சரித்திரமும், மனோன்மணி சுந்தரம்பிள்ளையும், மேலைநாட்டுப் படைப்புகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். பிற்கால விமர்சகர் அதைப் பாக்கிற இதெல்லாம் செய்ய வேண்டிய அவசியம் வந்துவிட்டது. நம்ம படிக்கக்கூடாது சொல்லக்கூடாது என்று ஏதோ ஒரு அன்னியன் வந்து சொல்ற மாதிரி இருக்கு. இவர் ஒரு காந்தியவாதிங்கறதாலே இவர் வந்து அந்த மேலைநாட்டு விமர்சகர் பேரை சொல்றதுதானே காந்தியத்திற்கு முரண்பாடு என்பதால் இலக்கியத்திற்கு ஒவ்வாது என்று நான் நினைக்கிறேன். காந்தியம் என்பது இலக்கியத்தில் இவரது பாணி அவ்வளவு தானே தவிர காந்தியவாதி வேறு இலக்கியம் பண்றவர் வேறு மேலைநாட்டு ஆசிரியர்களைப் பற்றியே சொல்லக்கூடாது இப்படி சொன்னா அது முரண்பாடு என்பது ஒத்துக்கும்படியா இல்லை, சரி இவருக்கு இல்லாட்டிக்கூட யாருக்கும் இருந்தாக்கூட இந்த விஷயங்களை வச்சி சங்கடப்படறார் என்று சங்கடம் வருகிறது. அப்படி அந்தக் கேள்வி கேட்கப்படுகிறது.

நீங்க என்ன சொன்னாலும், அந்த மூன்றாம் தர மேலைநாட்டு இலக்கியங்களக் கொண்டாந்து நம்ம இலக்கியங்கள் ஆரம்பிக்கும்போது மனோன்மணி சுந்தரம் பிள்ளைகளும் பிரதாப முதலியாரும், அந்த இலக்கியத்தை மூன்றாம் தரம் என்று சொல்லவில்லை. ஒரு திருப்பத்தைக் கொண்டு வந்துட்டாங்க அப்ப. வந்தப்புறம் நாம் அதைத்தானே சொல்லணும்; இலக்கியம் அரசியல் இரண்டும் வேற வேற; இரண்டையும் போட்டு குழப்பாதீர்கள், அதை நீங்க தெரிஞ்சிக்கணும், சிலபேர் இரண்டிலேயும் ஈடுபட்டதினாலேதான், இரண்டையும் பற்றி குழப்பிக்கிறேள். காந்தியவாதி என்பது வேற, இலக்கியம் என்பது வேற. காந்தியம் பிரச்சாரம் இல்லை; மார்க்சிஸ்ட் பிரச்சாரம் இல்லை; நான் இதுவரைக்கும் அந்த வார்த்தையைப் பயன்படுத்தவில்லை இப்படி பல இருக்கு, மனுசனோடு சம்பந்தப்பட்டவற்றையே ஒவ்வொருத்தரும் எழுதுகிறார். உங்கள்

ஊரில் வாழையை அழித்து, சர்க்கரை ஆலை வைக்கிறது போன்று ஆலை இல்லாத இடத்தில் போய் நிறுவப்படுகிறது. இந்தக் காலத்தில் ஏழை கீழே போய்விட்டான். இதை எப்படி பண்ணினர். அமெரிக்காவிலே வெள்ளைக்காரன், பிரெஞ்சுக்காரன் குடியேறினபோது அந்தக் காடுகளில் நகரங்கள் வந்தது. எப்படி வந்தது? அந்த மாடல் அமெரிக்கா எப்படி உருவானதோ, அதை மாதிரி ஊரை உண்டாக்கினர். அதுக்கும் சங்க இலக்கியத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை; ஆகவே அது அந்த பாதிப்புதான் அவனை மறுக்கிறது. முரண்பாடு பற்றிக் கேளுங்க. ஒருவரே இவ்வளவு பேசினா இன்னொரு ராமாயணம் எழுதணும்.

காந்தியம் இன்றைய காலக்கட்டத்தில் உள்ளதா? இன்னும் இதில் காந்தியம் சக்ஸஸ் ஆகவில்லை. இனியும் பெரும்பாலான விஷயங்களுக்குத் தொடர்ந்து காந்தியத்தின் தேவை இருக்குன்னு நினைக்கிறீர்களா?

காந்தியத்தினுடைய நடைமுறை சம்பந்தமாக நாங்க பிராக்டிஸ் பண்ணினோம். இது தலைமுறை ஆட்களாலே தீண்டாமை சம்பந்தமாக அரசியலாக்கப்பட்டுள்ளது. ஹரிஜன்னு சொல்லுவோம் இப்போ தலித். இங்கிருக்கிறவர்கள் அங்கு போய் யாருக்கு என்ன செய்தீர்கள்? நாங்க என்ன செய்தோம் என்றால் காலேஜ், பள்ளிகளில் தீண்டாமையை ஒழிக்கிறதுக்காக குப்பங்களுக்கு போய் தீண்டாமையை ஒழிக்கிறதுக்காக அவர்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்கிறது. அவர்களைச் சுத்தமாக இருக்க சொல்லி கொடுக்கிறது. ஹரிஜனக்காரர்களை சுத்தம் பண்ண வேண்டியது. அதற்காக சுத்தியிருக்கிற மலங்களை அள்ள வேண்டியது இதெல்லாம் செய்தவர்கள் ஹரிஜன சேரியில் போய் ஹரிஜனக்காரர்கள் கடவுளின் மக்கள் என்று கேலிபண்ணினார்கள். இப்போ தலித் வார்த்தை என்று சொல்லி, அது அந்தம்மா மாயாவதிக்குப் பிடிக்கவில்லையாம்; கிருஷ்ணசாமி அவர்களுக்கும் பொறாமையாம்; நான் படிக்கலை இன்னிக்கு காலை பேப்பர் நியூஸ் சொல்கிறேன். ஆக தீண்டாமையை ஒழிக்கறதுக்கு அரசியல் ரீதியாக பாடுபட்டவன், ஜெயிலில் கல் மலை பண்ணினவன், காந்தி போன்று ஹரிஜன் கூட சாப்பிட்டவன். நான் பிராமணன். என் வீட்டிற்குள் முதன் முதலாகக் கிராமத்திலே ஹரிஜனை உள்ளே விட்டவன் தெரியுதா? எத்தனையோ பண்ணியிருக்கிறேன். உங்களுக்கு என்ன தெரியவேண்டியது. அது என் ஆத்மா சம்பந்தபட்டது. என்னைப் போய் கேட்கிறேனே. கோயிலில் பிராமண சங்கத்தலைவனாக உட்கார்ந்தவன். ஒரு பக்கத்தில் தோட்டி மறுபக்கத்தில் சக்கிலியன் செருப்பு தைப்பவன் இருவரும்

இருந்தான். பிராமண சங்கத் தலைவனாக இருப்பேன் என்று சொன்னவன். இதெல்லாம் உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. என் ஆத்ம திருப்தி, என் காந்தியம் தெரியும் எனக்குத் தெரியும். அதை ப்ராக்டிஸ் பண்ணினவன். பேசாமலே உட்காந்துட்டு கேள்விமேலே கேள்வி கேட்டு கூட்டத்திலே மடக்குற புத்திதான் வளராது. சமூகரீதியா, பொருளாதார ரீதியா இன்றைக்கு பொருந்துமா இந்த கேள்விக்கு நேரடியா பதில் வேண்டும் பொருந்தும் காந்தீயம். பொருந்தும் என்று சொல்லக்கூடிய ஆட்கள் இன்று இல்லை. தலைமுறை மாறிவிட்டது. இப்ப இருக்கிற காந்தியவாதிகள் மாறி விட்டார்கள். செய்ய முடியும், மறுபடியும் காந்தீயத்தைக் கொண்டு வந்து இந்த ப்ரைப் மண்ணாங்கட்டி லஞ்சத்தை ஒழிக்க முடியும். சோம்பேறிகளாகக் காலத்தை நடத்தும் 100 ஜனகோடிகள் செயல்ல குற்றம் கண்டுபிடிக்க முடியும். காந்தீயம் செய்தது. நாட்டில் 35 கோடிகளோடு செய்துகாட்டியது,

'சரசாவின் பொம்மை' பி.எஸ். ராமையா திருத்திக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறீர்களாம். இப்ப பி.எஸ். ராமையா இல்லை இருந்தா தேவலாம். அப்படி கருத்து சொன்னா நீங்க என்ன நினைப்பீர்கள்.

என்ன கேள்வியிது? இல்லாதவனைப் போய் (பற்றி) என்ன பேச்சு? எதுக்கு பி.எஸ். ராமையா வரார். புதுமைபித்தன், வ.ரா. எல்லோரையும் சொல்லுங்களேன். நீங்க சரியா சொல்லலே, பி.எஸ். ராமையா மட்டும் சொல்லுவானேன். புதுமைபித்தன் சொல்லுங்களேன். பி..எஸ். ராமையா வந்து "சரசாவின் பொம்மை" கதையை திருத்திக் கொடுத்ததாக நீங்க சொன்னீங்க இல்லையா நீங்க ஒரு வார்த்தையில் அதுக்கு, பதில் சொல்ல முடியாது. அந்த கதையைப் பற்றி, என் புத்தகத்தில் படிச்சிக்கலாம். என் சிறுகதைபாணியில் என்ன எழுதியிருக்கேன் என்று மொத்தமா சொல்றேன். அதைப் படிக்கல; படிக்காத கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; சிறுகதை சம்பந்தமா அதைப் படிச்சா போதும்; நீங்க அதைப் படிக்கல்ல; நான் உங்க நாவல்களை எல்லாம் படிச்சிருக்கேன். நீங்க விமர்சனங்களைப் படிக்கலை. ஒருத்தரும் கேள்வி கேட்கவில்லை.

பலர் விமர்சனம் படிக்கறதில்லை என்ற தீர்மானத்தில் இருக்கின்றனர். அப்பப் பேசவேண்டிய அவசியமில்லை. என் கூட பலரை படைப்பாளியாகத்தான் சந்திச்சேன். இந்த நாவலில் எந்த காலத்தில் ஒருவர் மற்றவர்களை விட படைப்பாளியாக இருக்கிறார். அவர் விமர்சகர் ஆகணும்னு அவசியம் இல்லை; யாரும் படைப்பாளி ஆகவில்லை. நான் ஒருத்தன் போன்று எல்லோரும் விமர்சகர் ஆக முடியாது. இந்த ஆசிரியர் சிறுகதை ஆசிரியராக இருக்கிறார்.

ஆனால் சிறுகதை ஆசிரியருக்கான குணாம்சம் இல்லை. பேங்க் மேனேஜர், பேங்க் ஆபிசர் அதுதான் அவருடைய தொழில். அதுல வச்சிக்கிட்டு இலக்கியத்தை நிழலுக்கு ஒதுங்கப் பார்க்கின்றனர். முடியாது இயக்கம் நடத்த முடியாது. 27 வருஷம் ஆச்சு எழுத்து நின்னு. ஒரு இயக்கம் நடத்த முடியவில்லை. பாரதிக்குப்பின் மணிக்கொடி 27 வருஷம் இயக்கம் வந்தது. கடைசி கால் நூற்றாண்டிற்கு ஒரு இயக்கம் வந்திருக்கணும். பலபல ஆயிருக்கணும். உங்களைத் தாண்டி போயிட்டது. இப்ப இருக்கற தலைமுறை ஒண்ணும் செய்ய முடியாததினால் இப்படி வெறுமை. இதெல்லாம் பற்றி பேசிட்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை.

எழுத்துக்காலம் மணிக்கொடி காலம் மாதிரி இல்லை. பிரச்சனைகளை அந்த வகையில்தான் பார்க்கிறேன். நான் சொல்கிறேன். மணிக்கொடி காலங்கள் பாரதி வேதநாயகம் பிள்ளை காலமில்லை. மணிக்கொடி கோஷ்டி கிடையாது. இப்படி 10 பேரும் 10 தினுசு; 10 பேர் உடைய கதைகளும் படித்தவன்; சிட்டி வேற. கிருஷ்ணமூர்த்தி வேற. கு.ப. ரா. வேற. நான் வேற. ஏதோ சேர்ந்தோம். பொதுத் தன்மைதான். ஞானகூத்தன் கவிதையும் எழுத்துக்கவிதையும் ஒன்னாக முடியாது. தானே உண்டாக்கணும். அப்புறம் கோஷ்டியாகக் கொள்கையாக கால வளர்ச்சியில் மரபில் சேருகிறது. அதுதான் நம்ம மரபு. ராமாயண மரபு; பாரத மரபு; அடுத்த இடத்தில் சிலப்பதிகார மரபு, இப்படியே சித்தர்கள் மரபு வந்திருக்கும். ஆனால் இந்த 25 வருஷத்திலே என்ன புது மரபு ஏற்பட்டிருக்கு? புதுகவிதையாக இருக்கட்டும் நாவலாகட்டும், கதையாகட்டும் என்ன பேரை சொல்லி மரபு காண்பது.

பேசிட்டு போவதை இயக்கத்தில் பண்ணக்கூடாது. இப்ப இருக்கிற படைப்பாளிகள் அதன் போக்கு மற்ற இயக்கப்போக்கு பற்றி சொல்லமாட்டான். செல்லப்பா தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார் என்று என்னைச் சொல்கிறார். இன்னிக்கு படைப்பும் தேவைபற்றி எழுதியிருக்கேன். அவர் படிச்சிருக்காரா கேளுங்கள் இவர் படிச்சிருக்காரா கேளுங்கள், நான் படிச்சிருக்கேன். நான் சொல்லியிருக்கேன். தமிழும் தெரியலை. இங்கிலீஸ் தெரியணும் வெறும் தமிழனாக இருந்திடக்கூடாது. எழுதச் செய்யமாட்டேங்க. எழுத்தாளர்களுக்குக் கவலை இல்லை. அப்படிப்பட்ட சிறுகதை பத்திரிக்கை ஆசிரியர்கள். அத்தனைபேரும். இவரும் சரி, அந்த கோயம்புத்தூர்க்காரரும் சரி, அப்புறம் இவருக்காக ஒரு பத்திரிகை நடத்தினாரே சொல்லுங்க சார், எல்லாவரும் சரி, படிக்கவில்லை என்கிறீர்களே அத்தனை பத்திரிக்கை வேணா கொண்டு

கொடுத்திருக்கிறார். எழுத்துக்கு எழுதினதுக்கு அப்புறம் கசடதபற விலிருந்து இன்னிக்கு வரைக்கும் பத்திரிக்கை அனைத்தும் பார்த்திருக்கேன். நான் படிக்காம சொல்லலை. படித்துவிட்டுத் தான் பேசறேன். இலக்கியம் வளரவில்லை. மெல்லத்தமிழினி சாகும் என்று யாரோ சொன்னார்னு பாரதியார் சொன்னார். நிச்சயமாக சாகப்போறது. 2000 வருடம் ஆரம்பிக்கறதுக்குள்ளே ஒன்றும் நடக்கவில்லை. ஒரு இயக்கம் நடத்த முடியவில்லை. கோஷ்டியா தனி மனிதனா செயல்படவில்லை. சிறுபத்திரிகைகளைப் பற்றி குட்டி போட்ட மாதிரி, எல்லோரையும் சேர்த்து செத்தவன் வீட்டில் அழலாம். இலக்கியம் நடத்த முடியாது. எல்லாவற்றையும் சேர்த்து தொகுத்து பார்த்தீங்கண்ணா தெரியுங்கறார். பார்த்துவிட்டுதான் சொல்றேன். நீங்க உங்களை மட்டும் பார்த்துக்கறேள். உங்களைத்தான் தெரியும். உங்களைப் பத்தி பத்திரிக்கைக்குத் தெரியாது. விருட்சத்துக்காக தோப்பல்ல. தனி விருட்சம், அது புதுசாக இருந்தால் என்ன? பழைய விருட்சமாக இருந்தால் என்ன? பட்டுப் போன விருட்சம். நீங்க செழிப்பா வளரவில்லை. நீங்க மட்டுமல்ல அத்தனை சிறுபத்திரிகையும் எழுத்தைப் பார்த்துப் பெருமையா செல்லப்பாதான் எழுத்து மூலம் சிறுபத்திரிகை உலகத்திற்கு ஒரு பேரு கிடைக்கச் செய்தார் என்ற அந்த இரண்டு வழியையும் தொடர முயற்சி பண்ணல. என்னோட மரபு, சந்ததி என்று ஒருத்தரும் சொல்லிக்காதீர்கள். என் சிறுகதை பத்திரிக்கை வேற. நீங்க எங்கேயோ போய்விட்டீர்கள். எழுத்தில் வந்தவர்களை தடம் தவறி போனவர்கள் ஆயிட்டார்கள் "மணி" யாரு? அப்படி என்ன எழுதிவிட்டார் என்று கூட இருந்த சிஷ்யனே கேட்டார் என்று சேர்த்துப் பார்க்கிறேன்.

உலக இலக்கியங்களைப் படிச்சாத்தானே எழுத்தை படிச்சவங்களாம் இப்படி வாங்க. ஒருத்தனுக்கும் தெரியவில்லை. எழுத்தே போய்விட்டது. போகட்டும். போறது நல்லது. உங்களிடம் இல்லை. அது கஷ்டப்படாம போய்விட்டது. ஒரு பத்திரிக்கையில் வரலை. ஏன் த்தம எழுதுவதற்கு என்ன? நாகார்ஜுனனை விட்டு எழுதச் சொல்றதுக்கு என்ன? செல்லப்பாவை தாக்கறதுக்கு கார் போட்டேளே. வேடிக்கை பார்க்கறாங்க. பலர் உண்மையான இலக்கியவாதி இல்லை. இப்படிப் பேசறத விட்ட இலக்கியம் பேசறது போயிடுச்சு, ஒருத்தரை மிஞ்சின ஒருத்தர். சிட்டி, (எனக்கு) என்னுடைய காலம் ஆயிடுச்சி. பேரன் பேத்திகளுடன் பேசறேன். பலர் கேட்கிற கேள்வியெல்லாம் வெஸ்டன் சைட். இங்கிருப்பதை மாற்றுகிற மாதிரி இலக்கியம் பண்ண முடியாது. மாத்தமுடியாது. அங்கல்லாம் வேலை பார்த்துவிட்டு எங்கிட்ட வந்து பேசப்படாது. இந்த மண்ணிலே ஊறினவர்கள் அதிலே நிக்கணும். கொள்கைக்குப் பின்பற்றவில்லை.

ஒரு பொண்ணு. என் கதையைப் பயன்படுத்தவில்லை. நான் காதல் கதை எழுதவில்லை. இதைச் சொல்றதுக்கு காதல் சீன் கிடையாது.

உதாரணங்களைப் பார்த்துவிட்டு எல்லாம் படிக்கபோறிங்களா? அதற்காக வாங்கல்ல. அந்தப் பெண்ணுடையது 30ரூ காப்பி வித்தாச்சு. என்னுடையது நான் இன்னும் 100 காப்பி விற்கவில்லை. மாதம் 2ரூ கொடுத்து அனைவரும் வாங்கி படிக்கமாட்டீங்க தெரியும். இப்படி பேசிட்டே 20-நூற்றாண்டைக் கடத்தப் போறீங்க. அடுத்த காலத்திற்கு 19 நூற்றாண்டு எப்படி நமக்கு இருண்ட காலமோ 20 நூற்றாண்டு காலம் அடுத்த இலக்கிய நூற்றாண்டிற்கு. நீங்கள் இருக்கின்ற இடம் புல் முளைக்கப் போகிறது. இன்னும் 10 வருடம் போனா கந்தசாமி யாருன்னு, கேட்கப் போறா. அப்புறம் கேள்வி கேட்கப் போறா? கிருஷ்ணமூர்த்தி யாருன்னு கேட்பா. கந்தசாமியை விட்டு வச்சிருவாளா? அதுதானே நேரும். உன் தகப்பானாருக்கு நீ செஞ்சது உன் பிள்ளை உனக்கு செய்வான். ஏதோ ஒரு பாஷன் வச்சிக்கிட்டு அதைத் தேடிச் சென்றுபேசறமே. சாமிநாதன் எழுதினது எல்லாம் சொன்னேன், படிச்சோம். நீங்க படிக்க மாட்டீங்க தெரியும். ஆனா அவன் ஓரளவோடு நின்னுட்டான். ஆகவே, பேசிட்டே போலாம். உண்மையா உலகம் தெரிய எந்த நபரையும் மதிப்பிட முடியாது. பத்திரிக்கை பக்கம் போட்டு 10 ரூபாய் விலைபோட்டு வித்துக்குங்க. வீட்டிலேயே வச்சிங்குங்க. 300 காப்பி வச்சிக்கிட்டு, ப்ரீயாக அனுப்பிச்சு, வீட்ல வச்சிட்டு எலிக்கடிக்கிறது. பொண்டாட்டியிடம் "ஏன் இதெல்லாம், வச்சிக்கிறே" என்றால் "நானா சொன்னேன் என்ன வந்து கேட்கிறீங்களே" என்பான். 500 காப்பியை எடுத்து (இன்னிக்கு இருந்தா ஒவ்வொன்றும் 1000/-ரூ) கிழித்து போட்டவன் இதெல்லாம் யாரு பார்க்கப் போறா இப்ப இதை மறுபடியும் கொண்டு வரணும். இது வெளிவர பணம் 1 லட்சம் வந்தா போட்டுப் பார்க்கலாம். பார்க்கறேன். எழுத்துக்கு வாரிசு வரவில்லை. 27 வருடம் ஆயிருச்சி. வாயை மூடியிருந்தவன் கேட்கிறான். மணிக்கு என்ன தெரியும்? யாரும் சொல்ல வேண்டாம். கிருஷ்ணமூர்த்தியிலிருந்து மாறுபட்டவர். அவரிலிருந்து ராஜகோபால்; தமிழ் எழுதியிருக்கார். நான் படிக்கிறேன். நீங்க அத்தனை பேரும் கேள்வி கேட்கிறவர்கள். படித்ததே இல்லை. ஒன்னும் படித்ததேயில்லை. இங்கே வந்து பொய் சொல்கிறீர்கள். ஒரு எழுத்தாளன் படிக்கணுமா என்ன? ஏன் படிக்கணும்?

அப்போ நான் உங்களதைப் படிக்கவேண்டாம்; நீங்க என்னோடதைப் படிக்க வேண்டாம். போயிட்டே இருக்கட்டும். என்ன கேள்வியிது? படிக்க வேண்டுமா? படிக்க வேண்டாமா? நீங்க படிக்கத்தான்

எழுதினீங்களா? என்ன படிச்சு பாஸ் பண்ணியிருக்கிறீர்கள்? நான் பள்ளிக்கூடத்தில் படிக்கவில்லை. அப்போ நீங்க ஜீனியஸ். ராமையாவும் படிக்கலை. அவரும். ஜீனியஸ் கிட்ட நான் பேசி வாதம்பண்ண முடியாது.

வெஸ்டனில் ஒரு கேள்வி கேட்டா கரெக்டா பதில் வரும் நீங்க கோபப்படுகிறீர்கள்.

உங்களுக்கு கேள்வி கேட்க தெரியலியே வெஸ்டனில் நன்றாகக் கேட்கிறார்கள். ஒன்னும் படிக்காமல் புரிதல் இல்லாமல் கேட்கிறீர்கள். விமர்சனத்துறைத் தெரியாது. யாரும் கட்டுரை போடுகிறீர்களா விமர்சனத்தைப்பற்றி? எங்க யாராவது சொல்லுங்கள். அதனால எல்லோரும் முதல்ல நிறைய படித்து புரிந்து கொள்ளும் செயல செய்து காட்டுங்க. தமிழ் இலக்கியம் நல்ல நிலையை அடையும்.

செல்வராஜ், டி.

நான் ஒரு எழுத்தாளனானது நான் எதிர்பார்த்திராத ஒன்று. எனவே எனது படைப்புக்களைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் என்னைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். எனக்கு எந்தவிதமான எழுத்துப் பாரம்பரியமும் கிடையாது.

எங்கள் குடும்பத்தின் பூர்வீகம், நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமம் என்ற போதிலும் எனது மாணவப் பருவம், மலைப்பிராந்தியத்திலேயே கழிந்தது. எனது தாத்தா ஆறுமுகம் கங்காணி. பிழைப்புக்காக கேரளா மாநிலத்தில் உள்ள ஜேம்ஸ்-பின்லே என்கிற பிரிட்டீஸ் கம்பெனிக்குச் சொந்தமான கண்ணன் தேவன் டீ எஸ்டேட் லிமிடெட் என்கிற தேயிலைக் கம்பெனிக்குக் கூலியாகப் போனவர். அவருடைய கடுமையான உழைப்பின் காரணமாக, மூன்றாவது தலைமுறையினரான நாங்கள் பிறக்கும் போது, மூன்று எஸ்டேட்டுகளில், சுமார் ஆயிரம் ஆட்களைத் தனது "கேங்கில்" வைத்து வேலை வாங்கும் கங்காணியாக உயர்ந்திருந்தார். கங்காணியின் "கேங்கில்" உள்ள ஒரு தொழிலாளர் ஒரு அணா சம்பாதித்தார் என்றால், காலணா கமிஷனாகக் கங்காணிக்குக் கம்பெனி நிர்வாகம் கொடுக்கும். அந்தக் கமிஷனுக்குத் "தலைக்காசு" என்று பெயர்.

கண்ணன் தேவன் தேயிலைக் கம்பெனி (பிரிட்டீஸ் கம்பெனியாக இருந்த போதும் கண்ணன் தேவன் என்கிற மலைஜாதி முதுவானின் பெயரைக் கொண்டிருந்தது) திருவிதாங்கூர் அரச குடும்பத்திடமிருந்து, தேவிகுளம் என்கிற தாலுகா முழுமையையும் (இப்போது, தேவகுளம் தாலுகா, தேவிகுளம், பீக மேடு, இடுக்கி என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது) தொண்ணூற்று ஒன்பது வருடங்களுக்குக் குத்தகைக்கு எடுத்துத் தேயிலை எஸ்டேட்டுகளை உருவாக்கி நடத்தி வந்தது. சுமார் அய்யாயிரம் முதல் பத்தாயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட சுமார் நாற்பது எஸ்டேட்டுகள் கண்ணன் தேவன் தேயிலைக் கம்பெனியின் நிர்வாகத்தில் இருந்தது. எஸ்டேட்டுகளை நிர்வாகம் செய்யும் மானேஜர்களும் அஸிஸ்டெண்ட் மானேஜர்களும் வெள்ளைக்காரர்கள்.

கண்ணன் தேவன் கம்பெனி தனது எஸ்டேட்களில் வேலை செய்யும் கங்காணிகள், உத்தியோகஸ்தர்கள் பிள்ளைகள்

படிப்பதற்கென, கம்பெனியின் தலைமையிடமான (HEAD QUARTERS) மூணாறு நகரத்தில் ஒரு ஆங்கிலப் பள்ளிக் கூடத்தை நடத்தி வந்தது. அந்தப் பள்ளிக் கூடத்தில் தான் பத்தாம் வகுப்பு வரையில் நான் படித்தேன். தாய்மொழி தவிர மற்ற பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே சொல்லிக் கொடுக்கப்பட்டன. பள்ளிக் கூடத்தின் 'கரஸ்பாண்டெண்ட்' வெள்ளைக்காரர். தலைமை ஆசிரியர் தாமஸ்ஜாண் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கல்வி பயின்றவர்.

மூணாறு நகரமானது, தென் இந்தியாவிலேயே மிகவும் உயரமான சிகரம் என்று சொல்லப்படும். ஆனைமுடி சிகரத்தின் அடிவாரத்தில் உள்ள பள்ளத் தாக்கில் அமைந்துள்ள வனப்பும்மிக்கச் சிறிய நகரம் மூணாறு. அந்த நகரமும் வெள்ளைக்கார கம்பெனியினால் பராமரிக்கப்பட்டதால் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். தினம் காலையில் நகரத்தின் வீதிகள் தண்ணீர் பீச்சிக் கழுவப்பட்டுச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். வருடத்தில் ஏழு மாதங்கள் வரையில் மழை இருக்கும். ஆறு மாதங்கள் அடைமழை. அதாவது மழையானது இடைவிடாது இராப்பகலாகப் பெய்யும்.

நாங்கள் இருந்த எஸ்டேட் ஆனைமுடிச் சிகரத்தை ஒட்டிய எஸ்டேட்டாக இருந்ததால், வானுயர வளர்ந்து நிற்கும் அடர்காடுகள் நிறைந்த வனப் பிரதேசத்தைக் கொண்ட தேயிலை எஸ்டேட்டாக இருந்தது. எனவே, பள்ளிக் கூட விடுமுறை நாட்களில், மாணவர்களாகிய நாங்கள் காட்டுப் பறவைகளை வேட்டையாடு வதற்கும், காட்டாறுகளில் மீன் பிடிப்பதற்கும், பாறை இடுக்குகளில் கூடுகட்டியிருக்கும் தேனடைகளையும் தேடி, நாளெல்லாம் வனாந்தரங்களில் சுற்றி அலைவோம். இப்படி, பசுமையான வனப் பிரதேசத்தில் இயற்கையின் குழந்தையாக வளர்ந்தேன். எங்களுக்கு நாட்டு விடுதலைப் போராட்டம் பற்றியும், நாடு வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற விவரம் ஏதும் தெரியாது.

இந்த நிலமையில் நான் எனது பத்தாவது வகுப்புப் பரீட்சை தேறியதும் மேல் படிப்புக்காக திருநெல்வேலி வீரராகவபுரம் ஜங்ஸனில் உள்ள மதுரை தாயுமானவர் இந்துக் கல்லூரியில் மேல் படிப்புக்காகச் சேர்க்கப்பட்டேன். மேல் படிப்புக்காக எஸ்டேட் சூழ்நிலையில் இருந்து வெளியே வந்த ஒரு சில கங்காணி பிள்ளைகளில் நானும் ஒருவன். பெரும்பாலும் கம்பெனி உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகள்தான் மேல் படிப்புக்காக, தேவிகுளம் பகுதியை விட்டு வெளியே வருவார்களே யல்லாமல், கங்காணிகள் பிள்ளைகள் மேல் படிப்புக்குப் போவது கிடையாது.

நாகரிகத்துக்கு வெகு தொலைவில் மலைப் பிராந்தியத்திலிருந்து வந்த எனக்கு, புதிய சூழல் மிகவும் வியப்புத் தருவதாக இருந்தது. குழந்தைப் பருவம் முதல், மேகக்கூட்டம் நிறைந்த வானத்தையும் மழையையும், மஞ்சு மூட்டத்தையும் பார்த்துப் பழகிப்போன எனக்கு நாளெல்லாம் சூரியன் காய்வது கூட வியப்புக்குரிய ஒன்றாக இருந்தது. வகுப்பு நேரம் போக மீதி நேரத்தைக் கல்லூரி நூலகத்திலேயே செலவழித்தேன். அந்த நூலகம் கூட எனக்கு வியப்பூட்டுவதாக இருந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் எனது சக மாணவர்களான சேதுராமன் (இவர் கோவில்பட்டிக்காரர் - புதுமைப்பித்தன் ரசிகர்) திருவரங்கன் (இவர் ஒரு கவிஞர் - பிற்காலத்தில் ஆசிரியர்) நம்பி, இவர்கள் மூவருடன் ஓவியர் இசக்கி போன்றவர்களின் நட்பு ஏற்பட்டது. இந்த நண்பர்கள் வாயிலாக அப்போது நெல்லையில் ஆரம்பிக்கப்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினராகச் சேரும் வாய்ப்பும் கிட்டியது. சிந்துபூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, சென்னையில் இருந்து மாற்றலாகி வந்து தாம்கேகஸ் வங்கியில் காசாளராகச் சேர்ந்திருந்த தி.க. சிவசங்கரன், சக்தி பத்திரிக்கையிலிருந்து விடுபட்டு, தனது சொந்த ஊரான திருநெல்வேலிக்குக் குடும்பத்துடன் குடிவந்திருந்த தொ.மு.சி. ரகுநாதன், பேராசிரியர் நா.வானமாமலை ஆகியவர்களுடனான தொடர்பு எனக்கு ஏற்பட்டது. நான் நெல்லை கல்லூரியில் படித்த நாட்களில் தி.க.சிவசங்கரன் அவர்களையும், தொ.மு.சி.ரகுநாதன் அவர்களையும் சந்திக்காத நாளே இல்லை என்று சொல்லலாம். தி.க. சிவசங்கரன் அவர்களும், தொ.மு.சி.ரகுநாதன் அவர்களும், வீரராகவபுரம் நெல்லைச் சந்திப்பில் இருந்து திருநெல்வேலி டவுன் வரையில் நடந்தே போவார்கள். நானும் உடன் நடப்பேன். அப்போது அவர்களிடையே நடைபெறும் சம்பாஷனை முழுமையாக இலக்கியம் பற்றியதாகவே இருக்கும். சில வேளைகளில் நெல்லை ஜங்ஸனில் இருக்கும் மரக்கடை ஒன்றில், பேராசிரியர் நா.வானமாமலை, அண்ணாச்சி சண்முகம்பிள்ளை ஆகியவர்களைச் சந்தித்து இலக்கிய சர்ச்சைகளும் விமர்சனங்களும் நடைபெறும். மட்டுமல்லாமல், இவர்கள் கலந்து கொள்ளும் இலக்கியச் சந்திப்புகளுக்கும் கூட்டங்களுக்கும் என்னைக் கூட்டிக்கொண்டு போவதுண்டு. இவ்வாறு இலக்கிய உலகம் எனக்கு அறிமுகமாயிற்று. இவர்களது வழி காட்டுதலில், குறிப்பிட்ட இலக்கியங்களையும், சித்தாந்தப் புத்தகங்களையும் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. எனது ஆங்கில அறிவு இவற்றைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவிற்று. மட்டுமல்லாமல் அப்போது நெல்லை ஜங்ஸனில் நடத்தப்பட்ட இளங்கோ புத்தக நிலையத்தின் மூலம் நல்ல தரமான

இலக்கியங்களையும், தத்துவார்த்த நூல்களையும் வாங்கிப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

நான் சிறுகதை எழுத ஆரம்பித்தேன்; எனது முதல் சிறுகதையானது தோழர் தி.க. சிவசங்கரன் அவர்களால் சரி பார்க்கப்பட்டு 'ஜனசக்தி' வாரமலருக்கு அவரால் அனுப்பப்பட்டு பிரசுரமாயிற்று. அப்போது நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர்கள் போராட்டத்தைக் கருவாகக் கொண்டிருந்தது. இரண்டாவது கதையும் ஜனசக்தி வார மலரில் பிரசுரமாயிற்று. இந்தக் கதையானது வங்க தேசத்தில் சந்தால் மக்கள் (அவுரி விவசாயிகள்) வெள்ளைக் காரர்களை எதிர்த்துப் போரிட்ட சமரத்தைப் பின்புலமாகக் கொண்ட கதையாகும். இப்போது கூட நான் எழுதிய சிறந்த கதைகளில் ஒன்றாக அந்தக் கதையைக் கருதுகிறேன். இதைத் தொடர்ந்து நாரண-துரைக்கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த பிரசண்ட விகடனில் பல கதைகள் எழுதினேன். இதற்கிடையில் தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் தனது 'சாந்தி' என்கிற இலக்கிய மாத இதழை நெல்லையிலிருந்து வெளியிட்டார். சாந்தியில் நானும், நண்பர் சுந்தர ராமசாமியும் பல சிறுகதைகள் எழுதினோம். பொள்ளாச்சியிலிருந்து தோழர் கே.ஸி.எஸ். அருணாச்சலம் அவர்களால் நடத்தப்பட்ட நீதி என்கிற இலக்கிய ஏட்டிலும் எனது சிறுகதைகள் பிரசுரமாயின.

நெல்லையில் பி.ஏ. பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு சென்னைக்குச் சட்டப் படிப்புக்காக வந்தபோது, தலைவர் ஜீவா அவர்களுடனும், இதர முற்போக்கு முகாமைச் சேர்ந்த எழுத்தாளர்களுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்படலாயிற்று. தோழர் விஜயபாஸ்கரன் அவர்கள், சிந்தாதரிப்பேட்டையில், இருந்து நடத்தி வந்த சரஸ்வதி ஏட்டில் பல சிறுகதைகள் எழுதும் வாய்ப்பும் ஏற்பட்டது.

அப்போது தோழர் டிகே. பாலச்சந்திரன் மக்கள் நாடகமன்றம் என்கிற நாடக அமைப்பை நிறுவி 'கண்ணின் மணிகள்' என்ற நாடகத்தை நடத்தி வந்த போது அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'பாட்டு முடியுமுன்னே' என்கிற நாடகம் என்னால் எழுதிக் கொடுக்கப்பட்டு நாடகம் தமிழகமெங்கும் பல நகரங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மன்றத்தில் நடிக்கப்பட்டது. நடிகர் டிகே பாலச்சந்திரனுடன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், நடிகர் என்.என். கண்ணப்பா, பாடகர் ராகவன் ஆகியவர்கள் நாடகத்தின் பங்களிப்பாளர்கள். டிகே. பாலச்சந்திரன் அவர்களுக்குத் திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்த தால், நாடக சபை

நடக்காமல் போய்விட்டது. பிறகு, நடிகர் என்.என். கண்ணப்பா அவர்களின், நாடக மன்றத்துக்கு நான் எழுதிக் கொடுத்த **யுகசங்கமம்** என்கிற நாடகம் அண்ணாமலை மன்றத்தில், திருமதி செளந்தரா கைலாசம் அவர்கள் தலைமையில் நடிக்கப்பெற்று, திருவாளர்கள், எஸ்.வி. சகஸ்ர நாமம், டிகே. ஷண்முகம், வெங்கட்ராமன் ஆகியவர்கள் அடங்கிய குழுவினரால், சங்கீத நாடக சங்கத்தின் மானியம் பெறும் நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகத்தின் பல ஊர்களில் நடிக்கப்பெற்றது. இந்த நாடகம், மல்லிகைப் பதிப்பக உரிமையாளர் சங்கரன் அவர்களால் புத்தகமாக வெளியிடப்பட்டு, டில்லி பல்கலைக்கழகத்தில் பட்ட மேல் படிப்பு மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டது.

நான் சென்னையில் இருந்த காலத்தில் ஜீவா அவர்களை ஆசிரியராகக் கொண்டு தாமரை இலக்கிய ஏடு ஆரம்பிக்கப்பட்டது. உண்மையில், தாமரைக்கு, தொ.மு.சி. ரகுநாதன்தான் ஆசிரியராக வந்திருக்கவேண்டும். ஏனோ, ஆசிரியர் பொறுப்பு ஜீவாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜீவாவுக்கும் நிறைய இயக்க வேலைகள் இருந்ததால், தோழர் மாஜினியுடன் இணைந்து ஆசிரியர் குழுவில் செயல்பட்டேன். தாமரையில் பல கதைகள் என்னால் எழுதப்பட்டன. துரதிர்ஷ்டம் என்னவென்றால், ஜனசக்தி, பிரசண்டவிகடன், நீதி, தாமரை, சாந்தி ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமான எனது சிறுகதைகள் இன்று வரையில் தொகுக்கப்படாமல் உள்ளன. எனது ஓரங்க நாடகங்களும் தொகுக்கப்படவில்லை.

மலையாளம், வங்காளம், ஹிந்தி போன்ற மொழிகளைப் போல், தமிழ் எழுத்துலகைப் பொறுத்த மட்டில், கொள்கைப் பிடிப்புடன், ஓர் எழுத்தாளன், எழுத்தை நம்பியே வாழ்க்கை நடத்த முடியாத சூழ்நிலை உள்ளதால், என் பிழைப்புக்காக வக்கீல் தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. எழுத்து மூலம் நான் சம்பாதித்தது மிகக் குறைவு. இன்று வரை இலக்கியத்துக்கு எனது முழு நேரத்தையும் செலவு செய்ய முடியவில்லை. அதன் காரணமாக அவ்வப்போது எழுதிப் போடப் பட்ட கதைகள், நாவல்கள், பூர்த்தி செய்யப் படாமல், பதிப்பகத்துக்கும் போகாமல் குறைப் பிரசவங்களாகக் கிடக்கின்றன. ஒரு கால் இவை எல்லாம் ஒட்டு மொத்தமாகப் பிரசுரமாகும் என்கிற நம்பிக்கை மட்டும் எனக்குண்டு.

எனது படைப்புக்களைப் பொறுத்த மட்டில், சிறுகதையானாலும், நாடகமானாலும், நாவலானாலும், ஒவ்வொரு படைப்புக்கும் ஆழமான சமுதாயப் பின்னணி இருப்பதைப் பார்க்கமுடியும். கதா பாத்திரங்களும்,

சமுதாயத்திலிருந்து எடுக்கப்பட்டுப் பொதுமைப்படுத்தப் பட்டவை. சமுதாய இயங்கியல் விதிகட்குட்பட்டு, கதையும், கதாபாத்திரங்களும், படைக்கப்படுவதால், கதையிலும் சரி, கதாபாத்திரங்களிலும் சரி, அவற்றைப் பார்க்க முடியும். இந்தப் பின்னணியிலேயே எனது படைப்புக்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

தோழர் தொ.மு.சி. ரகுநாதன் அவர்களது பஞ்சும் பசியும், நாவலுக்குப்பின் வெளிவந்த முற்போக்கு நாவல் என்றும், தலித் நவீனம் என்றும் பேசப்படும் மலரும் சருகும் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகளின் 'முத்திரை மரக்கால்' போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட படைப்பு. இதில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் சித்திரிக்கப்பட்டிருந்த போதிலும், தாழ்த்தப் பட்ட மக்கள் மத்தியிலிருந்தே அவர்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்ட மத்தியதர 'Elite' வர்க்கம் உருவாவதையும், அந்த வர்க்கம் எப்படி ஆளும் வர்க்கத்தின், அடக்குமுறை 'Coersive' அமைப்பின் அங்கமாகிப் போகிறது என்ற நிதர்சன உண்மை நாவலில் பிரதான இடம் வகிக்கிறது. அல்லாமலும், நிலமான்ய அமைப்பின் உறவில் இருந்து புதிய பணக்கார வர்க்கம் NEO RICH என்கிற ஒரு வியாபார வர்க்கம் தலைகாட்டுவதையும் நாவல் சுட்டிக்காட்டுகிறது. இன்றையச் சமூக அரசியல் சூழலில், பட்டாளத்து ரெங்கனும், பத்மநாபனும் கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

தேநீர் நாவல், என் வாழ்வோடு மிகவும் நெருக்கம் கொண்ட படைப்பு. புலம் பெயர்ந்து கொத்தடிமைகளாக வாழ்ந்த தமிழ் மக்கள் எப்படி வர்க்கபோதம் பெற்று, தங்களது விடுதலைக்காகவும், வாழ்வுக்காகவும், போராடுகிறார்கள் என்பதை நாவல் சித்திரிக்கிறது. தேநீர் நாவலில் காட்டப்படும் எழுச்சிக்குப்பின், இன்று அந்த மக்களின் வாழ்க்கையில் மகத்தான மாறுதல் ஏற்பட்டுள்ளது. நாட்டுக்குச் சுதந்திரம் வந்ததே தெரியாத அளவுக்கு, இருட்டிலும், அறியாமையிலும் வாழ்ந்த அம்மக்கள், சட்ட மன்றத்துக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு வர்க்க போதம் பெற்றவர்களாக மாறிவிட்டார்கள்.

மூலதனம், நாடுவிடுதலை அடைந்த பின்பு, கூட்டுக்குடும்ப அமைப்பு எவ்வாறெல்லாம் பலவீனமடைகிறது என்கிற பரிணாம மாற்றம், அவசர கால நிலையின் (EMERGENCY) பின்னணியில் எழுதப்பட்ட நாவல். மட்டுமல்லாமல் நாட்டில் மூலதனமாகக் கருதப்படும் விஞ்ஞானிகளின் உழைப்பும் திறமையும் ஆதிக்க வர்க்கத்தின் (BUROCRECY), சுயநலத்தால், எவ்வாறு இந்த நாட்டுக்கும்,

மக்களுக்கும் பயன்படாமல் சீரழிக்கப்படுகிறது என்பதையும் நாவல் குறிப்பிடுகிறது.

நீதித்துறை நாட்டின் மனச்சாட்சியாக இருக்கிறது; இருக்க வேண்டும் என்று கற்றோராலும் மற்றோராலும் கருதப்படுகிறது. நீதித்துறையிலும், மற்ற துறைகளைப் போல், சீரழிவும், மேலாண்மைப் போக்கும் தலைதூக்கிவிடக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வைத் தூண்டும் வகையில் எழுதப்பட்ட நாவல் அக்னி குண்டம். அதேபோல், இன்றையச் சட்டங்கள், நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் மனச் சோர்வு, இந்த அமைப்பின் பால் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கசப்பு முதலியவை நாவலில் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன. அக்னி குண்டம், விமர்சகர்களின் கவனிப்பைப் பெறவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறு, நாகரிகத்துக்கு வெகு தொலைவுக்கு அப்பால், மலைப்பிரதேசத்தில், இருந்து வந்த ஒரு சாமானிய மனிதனாகிய நான், தமிழ் இலக்கிய உலகில், எனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டதற்குக் காரணகர்த்தாக்கள் ஆரம்ப நாட்களில், என்னை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தி, முறையான தரமான இலக்கியப் படைப்புக்களையும், தத்துவார்த்த நூல்களையும் அறிமுகப்படுத்திய நெல்லை முற்போக்கு எழுத்தாளர்கள் அதிலும் குறிப்பாக, திருவாளர்கள் தொ.மு.சி. ரகுநாதன், தி.க. சிவசங்கரன், பேராசிரியர் நா. வானமாமலை ஆகியவர்கள். தமிழ் மக்களின், அதிலும் இந்தச் சமுதாயத்தின் ஆணிவேராக நின்று போராடுகின்ற மக்களையும், அவர்களின் வாழ்வையும், ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களையும் உள்வாங்கிய சிறந்த படைப்பை நான் படைக்கவில்லை என்றே எண்ணுகிறேன். அப்படிப்பட்ட படைப்பை, உருவாக்குவதற்கு நான் பெரிதும் முயன்று வருகிறேன்.

நீல பத்மநாபன்

எழுத்துப்பணி இருக்கட்டும். எந்த மனிதனும் ஒரு புருஷாயுள் முழுவதும் பெரிய ஆரவாரமின்றி தன்னளவில் ஆத்மார்த்தமாக - ஓர் அர்ப்பண மனப்பான்மையுடன் ஈடுபட்டிருந்தாலும் கூட- அவனவன் துறையைப்பற்றி நரையேறிய கடைக்காலத்தில் திரும்பிப் பார்க்க விழையும் போது, உள்ளுக்குள் ஒரு நிறைவு அனுபவப்பட்டாலும் 'நான்', 'என்' போன்ற ஒலிச்சேர்க்கைகள் (ஒருவித நாராசமாக) பரிபக்குவ நிலையையோ, முதிர்ச்சியையோ, அடைந்து விட எத்தனித்துக் கொண்டிருக்க இயலாது. குறிப்பாக வாய்ச்சவடால்கள், சவால்கள் இந்த 'நான்', 'என்' போன்ற சொற்றொடர்களை அழுத்தி வீறும் வீராய்ப்பும் விதைக்கும் ஒரு துறையில்.

இங்ஙனம் நான் சொல்வது வேதாந்த விசாரணையாலோ மெய்ஞான போதத்தாலோ அல்ல. எழுத்திலும் பேச்சிலும் ஒன்று போலவோ, ஒன்றை மிஞ்சி மற்றொன்றோ தேர்ச்சியும் திரட்சியும் கைவரப் பெற்ற ஜீனியஸ்கள் - அதிமேதாவிகளின் - முன் நான் தலை வணங்குகிறேன். என்னைப் பொறுத்த வரையில் சமயோசிதமாய் பேசிச் சமாளிப்பதை விட, என்னை வெளிப்பிரகடனம் பண்ண என் அந்தரங்க அக உணர்வுகளுக்குக் கலை வடிவம் அளிக்க என்னதான் உணர்ச்சி உந்துதல்களினால் ஊக்குவிக்கப்பட்டு ஆற்றொழுக்காய் கொட்டப்பட்டாலும், பிறகு ஆறஅமர சிந்தனையில் சீர் செய்ய எழுத்துத்தான் எனக்கு வசதியாக இருந்து வந்திருக்கிறது. எய்யப்பட்டு விட்ட பாணமாய் பேசி விட்ட பேச்சுக்குப் பின் 'அப்படி பேசியிருக்கலாம், இதைத் தவிர்த்திருக்கலாம்' என்பதைப் போன்ற ஆதங்கங்கள், அங்கலாய்ப்புக்கள். ஆனால் இன்றைய நாளில், எழுதுகிறவன் தன் எழுத்துடன் நின்று விடாமல் சமூக ஜீவி என்ற முறையில் சமூக மத்தியில் தன் எழுத்தைப் பற்றி வியாக்கியானம் செய்ய முன் வர வேண்டிய கட்டாயம். எழுத்தைப் படித்தவர்களும் படிக்க விரும்புகிறவர்களும் படிக்கச் சோம்பல் கொள்கிறவர்களும் எழுதியவனின் வாக்கு மூலத்தைக் கேட்க ஆவல் கொள்வதுண்டு.

ஒரு குழந்தையைப் பொறுத்த வரையில், கருவாக இருக்கும் போது மட்டுமல்ல, பிறவி நடந்து முடிந்த பின்னரும் பிறந்த சிசு

சுயமாக வாழத்துவங்கும் வரை போஷாக்கு அளித்து வளர்க்க வேண்டிய பொறுப்பு கருத்தரித்திருந்தவளுக்கு உண்டு. ஆனால், ஒரு படைப்பைப் பொறுத்தவரையில், அதைச் சூல் கொண்டு, பிரசவம் நடந்து முடிந்த பின்னர் படைப்பாளியின் தொப்புள் கொடி பந்தம் அற்றுப் போய்விடுகிறது. சொந்தஉடைமை (possession) தீர்ந்து விடுகிறது. படைப்பாளி அதைக் கழற்றிக் கொள்ள வேண்டும். பிறகு அந்தப் படைப்பின் சொந்தம் முழுக்க முழுக்க வாசக உலகிற்கு. பாராட்டையும் குறை கூறலையும் - புகழையும் இகழையும் - மௌனமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். எழுதியவன் ஒன்று போல் எழுதிவிட்ட பாவத்தினால் தன் எழுத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேச வேண்டியது தன் பொறுப்பு என்று அவன் நினைத்துவிடும் தருணத்தில் அவன் படைப்புலகம் பலகீனப்பட்டுவிடும் வாய்ப்புண்டு.

முன்பு ஓரிருமுறை நான் குறிப்பிட்டிருந்தவாறு என்னைப் பொறுத்தவரையில் நான் வேறு என் எழுத்து வேறு என்பதில்லை. நான் சம்பந்தப்பட்ட - தனிப்பட்ட - சொந்த வாழ்க்கையை (Personal life) கதை, கவிதை, நாவல்களில் நான் கையாண்டு கொண்டிருக்கிறேன் என்ற பொருளில் அல்ல நான் இவ்வாறு சொல்வது. சிலருக்கு எழுத்து என்பது வெறும் ஒரு அங்காடிப் பொருள் - வணிக வஸ்து. அதிலிருந்து தன்னை எப்போதுமே வலுக்கட்டாயமாக அகற்றிக் கொண்டு விடுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் அங்ஙனம் பார்வையாளனாக (Observer) இருப்பதைவிட பங்கேற்பவனாகவே (Participant) இருக்கத்தான் விருப்பம். என் நேரடி அனுபவங்களைப் போலவே என்னை வந்தடையும் பிறர் அனுபவங்களும் என் எழுத்தில் இடம் பெற்றிருக்கின்றன. சிலபோதெல்லாம் வேறு வழியின்றி கற்பனையையும் நாடவேண்டி வந்திருக்கின்றது. அந்தப் பிறர் அனுபவங்கள், கற்பனைகள் இவைகளைக் கையாளும்போது என் சொந்த அனுபவமாக உருமாற்றிக் காட்டுவதுதான் நான் என் கலைநுணுக்கம் (craft) என்று நினைக்கிறேன்.

என்னில் இருந்துதான் என் எழுத்துக்கள் பிறக்கின்றன. ஆயினும் என் எழுத்துக்களில் நிறைந்து நிற்பது நான் மட்டுமல்ல; நானும் உட்பட்ட இப்பிரபஞ்சமே! ஜீவாத்மா பரமாத்மா போல், தேகவும் தேகியும் போல், நானும் என் எழுத்தும் ஒன்றுக்குள் ஒன்றாய் இணைந்தேதான் இயங்குகிறது என்பது என் விசாரம். பிஞ்சு நாளிலிருந்தே என்னை எழுதத்தூண்டிக் கொண்டிருப்பது தான் என்ன? அதைக் காவியானந்தம் - இலக்கிய இன்பம் - என்று அழைக்கலாமா? அன்றிலிருந்து இன்று வரை என் அகத்தில்

அடிக்கடி இந்த ஆனந்தம் மின்வெட்டிக் கொண்டிருப்பதால் தான் எத்தனையோ இடையூறுகளுக்கிடையிலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். இந்தக் காவியானந்தத்தை 'ப்ரமானந்த சகோதரம்' என்று சிறப்பித்து கூறுவது நமது மரபு. இவ்வுலகமும் மனிதர்களும் என்னை மகிழச் செய்திருப்பதைப்போல், மனம் குமையவும் செய்திருந்தாலும் உலகியல் சம்பந்தப்பட்ட அனைத்தையும் குறைநிறைகளுடன் நேசிக்கவே நான் பிரியப்படுகிறேன். இருந்தும் இந்தக் காவியானந்தத்தை உலகியலுக்கு அப்பாற்பட்ட விசேஷ அனுபூதியாக என் அந்தரங்கத்தில் மனப்பூர்வமாக நம்பிப் பாதுகாக்கவே எனக்கு ஆசை. நமது அனுபூதிகள் யாவும் வெறும் உலகியல் சம்பந்தப்பட்டதென்றால், ஐம்புலன்களுக்கு எட்ட முடியாத மானசீக இயக்கங்களில் ஏன் இத்தனைக்கு முற்றிலும் வேறுபட்ட தன்மைகள்?

கண்டவை, கொண்டவை என் எழுத்தில் இடம் பெற்றிருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவை மட்டுமல்ல என் எழுத்துக்கள். அவை மட்டுமாக இருந்திருந்தால், ஒரு பத்திரிகை நிருபர் - ரிப்போர்ட்டர் என்ற நிலையிலிருந்து ஒரு படைப்பாளி என்று என்னை எவ்வாறு அடையாளம் காட்டியிருக்க முடியும்? கண்டவை, கொண்டவைகளிலிருந்து காணாதவை, கொள்ளாதவைகளுக்கு என் கற்பனை சிறகடிக்கின்றது. இதைப் புலன்களுக்கு அப்பாற்பட்ட மனக்கண் என்றோ அகத்தூண்டுதல் அருட்கிளர்ச்சி (Inspiration) என்றோ அழைத்தாலும், உலகியல் பாற்பட்டதல்ல என்பது உண்மை. உலகியலுக்கு அதீதமான இந்த தரிசனம் தான் என்னை ஒரு கலைஞனாக உங்கள் முன் இனம் காட்டியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இவ்வாறு காணாத காட்சிகள், தெரியாத நிகழ்ச்சிகள் பற்றிக் கற்பனையில் - மனக்கண்ணில் - காண்பதை வைத்துக் கொண்டு என்னை மனநோயாளியாக எளிதில் முத்திரை குத்திவிடலாம் என்னைப் பிடிக்காதவர்கள்.

சென்ற, இன்றைய, வருகிற முக்காலங்களும் ஒரே நேரத்தில் கற்பனையின் வலுவில் நடப்பியலுக்கும் உலகியலுக்கும் அப்பாற்பட்ட இந்த தரிசனத்தில் சங்கமிப்பதால் இதைத் தெய்வீகமாய் கொள்கிறவர்கள் உண்டு. பிரம்மானந்த சொரூபமான அழகியலின் ஒரு மின் வெட்டாக இருக்கலாம் இது. இந்த ஆன்மீக நிலையில் யாவும் சத்தியமானவைகளே; சுந்தரமானவைகளே. சத்தியமல்லாததாகவோ, சுந்தரமல்லாததாகவோ ஒன்றுமே இல்லை.

ரவீந்திரர் சொன்னவாறு "நமது வரையறை (Limitation) தான் நமது செளந்தரிய தரிசனத்தை சுந்தரம், அசுந்தரம் என்றெல்லாம்

பாகுபடுத்துகிறது. சுயநலத்திலிருந்தும் புலனாசைகளிலிருந்தும் விலகி விருப்பு வெறுப்பின்றி - பற்றற்று - நோக்கும் போது மட்டுமே எங்கணும் ஒளிரும் சௌந்தரியத்தின் தரிசனம் நமக்குக் கிடைக்க முடியும். அக்கணம் பிடிக்காதவை அழகற்றவை அல்ல என்பதும் அதில் உண்மையின் அழகு ஒளிருகிறது என்பதும் புரியும்". (ரவீந்தரநாத் தாகூரின் **Aesthetics** நூல்) இதை நானும் என் எழுத்தினுள் என்னளவில் பயின்று கொண்டிருக்கிறேன்.

'காண்ட்' சொன்னாரல்லவா, அதைப்போல் வெளி இயற்கையில் சத்தியத்தையும் எனக்குள்ளே நன்மையையும் என் எழுத்து மூலம் நான் தேடுகிறேன் என்றும் சொல்லலாம். சௌந்தரியம், சத்தியம், நல்லறம் இவையெல்லாம் பரஸ்பரம் தொடர்புடையவைகள் தானே. சத்தியம் - உண்மை என்றால் அது ஒரு கற்பனைப் பொருளல்ல. மனிதனின் தேடல்களில் தான் எத்தனை உண்மைகள்! சமூக உண்மை, அறிவியல் உண்மை, ஆன்மீக உண்மை. அழகியலை ஆராதிக்கும் கலைஞன் என்ற முறையில் இந்த உண்மைகளில் எதையாவது ஒன்றை மட்டும் நாடி நிற்காமல் அனைத்திலும் என் கவனம் செல்லும் போதுதான் என் தேடல் விகாசம் பெறுகிறது. இந்த விரிவான கவனித்தலில் என் அழகு நாட்டமும், உண்மை தேட்டமும் ஒன்றாகிறது. 'சன்மார்க்க உணர்வு, சமூக மாற்றம், அரசியல் உடன்பாடு இவற்றிலிருந்து ஒரே மாதிரி அழகை நுகர்ந்தெடுக்க ஒரு கலைஞனுக்கு இயலவேண்டும். குறைந்த பட்சம் இவையெல்லாம் கலைஞனுக்கு நிரந்தர உரிமையுள்ள விஷயங்கள் என்பதை ஒப்புக்கொள்ளவாவது வேண்டும்' என்று அரவிந்தர் **Letters on Poetry, Literature and Art** என்ற நூலில் சொன்னது எனக்கு மார்க்கதரிசனமாகிறது.

கலையின் உற்பத்திக்கு அழகியல் தத்துவ ஞானி க்ரௌச்சே சுட்டிக் காட்டிய இன்ட்யூஷன் (Intution) உள்ஞானம் தான் என் எழுத்துக்களின் தோன்றலுக்கும் மூல காரணமாக இருக்க வேண்டும். இந்த அகஞான உணர்வு பல்வேறு புலன் அனுபவங்களிலிருந்தும் (Sensations) கிடைக்கும். என் அனுபூதியல்ல இன்னொருவர் அனுபூதி. சமூகம், நாடு, உலகம், உலகை மீறியது - இப்படி எங்கிருந்து வேண்டுமானாலும் என்னை வந்தடையலாம். யோகிக்கு சத்யமாய், சிவமாய், சுந்தரமாய் தோன்றக்கூடும். கார்மேகச் சுருள்களின் வின்னல்கள் வழி வெள்ளைப்பறவைகள் பறப்பதைக் கண்டு ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப்போல் பாவ சமாதி அடையாவிட்டாலும் எனக்குள்ளேயும் விவரிக்கவொண்ணா அனுபூதி விசேஷங்கள் ஒரு மோன மயக்கமாய் நிறைவதுண்டு. விருட்சக்கூட்டங்களின் தத்தளிக்கும்

இலைகளின் இடைவழி இளம்பரிதியின் ஒளிக்கற்றைகள் தத்திவரும் போது வையம் முழுதும் அசாதாரணமான மோகன காந்தியில் குளித்து நிற்பதாய் திக்பிரமையில் ஆழ நான் தாகூராகப் பிறக்க வேண்டுமென்ற கட்டாயமில்லையே. படைப்புக்கோ பாவசமாதிக்கோ தூண்டும் இத்தகைய அபூர்வ அழகியல்அனுபூதி உணர்வுகள் வர்ணனைக்கு அதீதமானது. அனுபவித்தே மட்டும் உணரக்கூடியது. (It is to be experienced and not to be explained). இந்த அழகியல் அனுபூதியின் பல மட்டங்களில் உன்னதமான இறை அனுபூதியும் மிகமிக அரிதான - அபூர்வகணங்களில் - முகூர்த்தங்களில் தோன்றி மறைந்த கட்டங்களும் உண்டு.

எழுத்து என்னைப் பொறுத்தவரையில் ஒரு கலைத்துறை மட்டுமன்று; உண்மையைத் தேடும் கல்வியும் என்னையே (self) உணரும் வேள்வியுமாகும். 'எண்ணையும் எழுத்தையும் கண்'ணெனக் கொண்டவர்கள் நாம். 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்பது குறள் வாக்கு. சொல்லை நாம் கலைவாணியின் வரப்பிரசாதமாய் கொள்கிறோம். வார்த்தையே பிரம்மம் என்கிறோம். "வாக்வை பிரம்மேதி" என்கிறது பிரஹதாரண்யகம் (4-1-2). இங்கே வாக்கு தேவதைசொரூபம். திவ்யமான இந்த வாக்கல்லவா என் ஒரே கருவி. இதன் மூலமாகவன்றோ பொருள், பொருள் வேறுபாடுகள், இடைவெளி, மௌனம், பாவங்கள், ரஸங்கள். எல்லாம் உங்களிடம் - வாசகர்களிடம் - நான் பகர வேண்டியுள்ளது. என்னதான் முன்கூட்டி திட்டங்கள் தீட்டி பிரயோகித்தாலும் அதற்கெல்லாம் மேலே அதனுள் வந்து கூடுபாயும் வலுவும் வடிவும் அழகும் எல்லாம் என்னை மீறியவை. என்னையே அதிசயப் படுத்துபவை. இது எனக்கு மட்டுமல்ல; என்னைப் போன்ற படைப்புத்துறைச் சார்ந்தவர்கள் பலரின் அனுபவ உண்மை. இதைத் தெய்வீகம் என்றாலும் சரி, புலன்களுக்கு அப்பாற்பட்ட உள்தூண்டுதல் அருட்கிளர்ச்சி (Inspiration) என்றாலும் சரி. இக்கணங்களில் நான் எழுதுகிறேன் என்பதைவிட என்னால் எழுதப்பட்டு விடுகிறது என்பது தான் உண்மை. இதனால்தான் இதை சரஸ்வதி கடாட்சம் என்றோ பிரசாதம் என்றோ நம் முன்னோர்கள் அழைத்தார்கள் போலிருக்கிறது.

ஒரு படைப்பு என்பது முழுக்கமுழுக்க இந்த அபூர்வ அனுபூதியுடன் படைக்கப்படுவதாய் நான் சொல்ல வரவில்லை. அதன் உருவமும் உத்தியும் எல்லாம் போதமுடன் (Conscious) நெய்யப்பட்டாலும் அதன் உயிர் ஊடாடுவது மேலே குறிப்பிட்ட, என்னை மீறிய அபூர்வ முகூர்த்தத்தில், என் சுய சித்தத்தின் தொடு புலன்களுக்கு வெளியில் நேர்ந்து விடுகிறது. எந்தக் கனவுக்கும் பங்கம் வருவதுபோல்

இந்த அருட்கிளர்ச்சிக்கும் முறிவுகள் உண்டு. பிறகு ஒரு வெறுமை உணர்வு - சூன்ய போதம். இதைத்தான் வேர்ட்ஸ் வர்த் (Words Worth) போன்ற கவிஞர்கள் தம் காவிய சிந்தனைகளில் ஞாபகம் (Re Collection), சிந்தனை (Contemplition), தியானம் (Meditation), சாந்தி (Tranquility) போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள் போலும். இந்த சாந்தி ஒருவனைப் பாவசமாதிக்கு இட்டுச் செல்ல காவி உடுக்க வேண்டியதில்லை; கமண்டலம் எடுக்க வேண்டியதுமில்லை. இருந்தும் துயரமில்லை, சுகமில்லை, கோபதாபமில்லை, போட்டி பொறாமை இல்லை என்ற யோகியின் மனநிலை. எந்த ரஸமாயினும் ரஸனையின் கட்டத்தில் சாந்தியை - அமைதியை - ஏற்படுத்துகிறது என்று அபிநவகுப்தன் குறிப்பிட்டதும் இதைத்தான். அந்த சாந்தி ஆனந்தமயமானது. இந்த ஆனந்த அனுபூதிக்கும் பிரம்மானந்தத்திற்கும் என்ன தொடர்பு? பிரம்மானந்தம் நம்மை நாமே புரிந்து கொள்வது. அவனவன் பேருண்மையை ஆன்ம தரிசனத்தால் அறிந்து கொள்வது. புறச் சூழ்நிலையில் அகத்தின் ஆன்ம அனுபூதியைச் சாத்தியமாக்கும் பெரும் முயற்சி. **தலைமுறைகள்** திரவியாக பள்ளிகொண்டபுரம் **ஆனந்தன் நாயராக, உறவுகள் ராஜகோபாலாக, வட்டத்தின் வெளியே** ஜெயகுமாராக, தேரோடும் வீதி கதிரேசனாக **கூண்டினுள் பட்சிகள்** சச்சிதானந்தமாக ஒருவித பிரமையில் விழித்தே கழித்த என் இரவுகள் எனக்களித்த அனுபூதிகள். முழுவாழ்வை வாழ்ந்து தீர்த்த அனுபவம். நாகு குடும்பத்தினரின் ஏமாற்றம், அனந்தன்நாயரின் மரணம், ராஜகோபாலின் பித்ருசோகம், ஜெயகுமாரின் ஏகாந்த உணர்வு, கதிரேசனின் சுய இரக்கம், போகீந்திரனின் யோகவேட்கை - இவைகளை யெல்லாம் கடந்து வந்த என்னகத்தில் மேகமூட்டமாய் கவிந்த அனுபூதிதான் அபிநவகுப்தன் குறிப்பிட்ட ஆனந்தமயமான சாந்தியா?

இந்தக் காவியஅனுபூதி, எழுத்து அனுபவம் மனதில் அலைக் கழிப்புக்களை அகற்றி அமைதியைத் தந்ததை மறக்க முடியுமா? உலகியல் இங்கே அதை மீறிய ஒன்றுடன் சங்கமிக்கிறது. பூவுலகம் சொர்க்கத்துடன் இணைகிறது. இந்த ஆன்ம தரிசனம் தான் 'என் எழுத்தி'லிருந்து 'நான்' அடைந்த பேறு. இன்று திரும்பிப் பார்க்கையில் சிறுகதை, கவிதை, நாவல் இவ்வாறு ஒவ்வொரு படைப்பின் மூலமும் நான் பெற்ற ஆன்மானுபூதி சிறுகச்சிறுக என்னை முழு மனிதன் - பூரண மானிடன் என்று சொல்லலாமா? - என்ற இலட்சியத்தை நோக்கி நீங்கத் தூண்டிக்கொண்டிருப்பதாய்ப் படுகிறது. எழுத்தால் எழுதியவன் என்ற முறையில் நான் அடைந்த இந்த அனுபூதியின் ஓர் அணு எடையாயினும் வாசித்தவர்களுக்கும் பங்கிட்டு அளிக்க முடிந்ததென்றால் அதுவே என் ஜென்ம சாபல்யமாய் கருதி இக வாழ்வைத் துறக்க நான் சித்தமாயிருக்கிறேன்.

பிரபஞ்சன்

அப்பாவுக்கு மூன்று கள்ளுக்கடைகளும், இரண்டு சாராயக்கடைகளும் இருந்தன. தினம் இவைகளிலிருந்து சுமார் ஐந்நூறு ரூபாய் வருமானம் இருந்தது. இது நாற்பதுகளில். இன்றைக்கு அதன் மதிப்புப் பல ஆயிரங்கள். இந்தப் பணத்தில் பெரும்பகுதியை எங்கள் அப்பா, அப்போ எங்கள் மாநிலத்தில் அரும்பி வந்து கொண்டிருந்த காங்கிரஸ் பிரெஞ்சு இந்திய விடுதலைக்குத் தந்தார். கட்சிக் கூட்டம் ஒன்றில் ஒரு விடுதலைக்காகத் தந்தார். கட்சிக்கூட்டம் ஒன்றில் ஓர் உண்மைத்தொண்டன் - அப்போது எல்லாம் தொண்டர்கள் பேசுவார்கள். என் அப்பாவிடம் ஒருவர் கேட்டார் "காந்தியின் முக்கிய கொள்கைகளில் ஒன்று மது ஒழிப்பு. நீங்கள் கள்ளுக்கடையும் நடத்திக்கொண்டு காங்கிரஸ் கட்சிக்காரராய் இருக்கிறீர்களா? எப்படி? காந்தியா? கள்ளுக்கடையா? எதாவது ஒன்றைத் தெளிவு செய்துக் கொள்ளுங்கள்" என்று அவர் சொன்னாராம். அப்பா யோசித்தார். கள்ளுக்கடையும் சாராயக்கடையும் தினம் 500ரூ தந்தன. காந்தி ஒன்றும் தரப்போவது இல்லை. ஆனால் ஒரு நாள் காலை அப்பா ஒரு முடிவு எடுத்தார். கள்ளுக்கடையை விட்டுவிட்டார். காந்தியைப் பற்றிக் கொண்டார். என் முதல் ஆதர்சம் எனக்கு அப்பாதான். என் அப்பா உள்ளிட்ட என் மூதாதையர்களின் ஆண்கள் ஒரு மனைவியோடு வாழ்வதை அவமானமாகக் கருதினார்கள். என் தாத்தா ஒருவருக்கு ஐந்தாறு மனைவிகள். ஏனெனில் அவருக்கு ஐந்தாறு கள்ளுக்கடைகள். கள்ளுக்கடைகளில் சாக்கரை என்ற கடை இருக்கும். சாக்கரைக்கடை என்பது கள்ளு குடித்தவர்களுக்கு தொட்டுக்கொள்ள பலகாரம் விற்கிற கடை. இப்போது எல்லாம் அதை ஏலத்தில் விடுகிறார்கள். சினிமாக் கொட்டகைகளில் கேன்டின்களை சினிமா கொட்டகை உரிமையாளர்கள் வாடகைக்கு விடுகிறமாதிரி, அந்த சாக்கரைகளை வாடகைக்கு விட்டு விட்டு இருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் எல்லாம் யார் கள்ளுக்கடை நடத்துகிறானோ அவன் வீட்டுப் பெண்கள் தான் அந்த சாக்கரைக்கடைக்குப் பலகாரம் செய்து அனுப்புவார்கள். எங்க தாத்தாவுக்கு ஐந்தாறு கள்ளுக்கடை.. ஆகவே ஐந்தாறு மனைவிகள் தேவைப்பட்டார்கள். அப்போதெல்லாம் கள்ளுக்கடை உரிமை யாளர்கள் கடையில் சாக்கரைக்கடைப்பகுதி ஒரு மனைவிக்கான ஏற்பாடு. அந்த பாட்டி அந்த வருமானத்தைக்

கொண்டு நிலம் வீடு வாங்கி போட்டுக் கொள்வார். அவளுக்குப் பிறக்கிற குழந்தைகளுக்கு அந்தச் சொத்துபோய்ச் சேரும். சின்ன வயதில் எங்கள் வீடு ஏராளமான பெண்களால் நிரம்பி வழிந்தது. எல்லோரும் என் பாட்டிகள். ஒரு முறை பள்ளஞ்சாவடி சந்தைக்கு மாடு பிடிக்க போனார் தாத்தா. வரும்வழியில் தன்னந்தனியாக நின்ற ஒரு பெண்ணைப் பார்த்தார். இளம் பிராயமாக வேறு இருந்தது. ஆகவே இரக்கம் வந்துவிட்டது. வீட்டுக்கு அழைத்து வந்தார். பெண்டாட்டியாகத்தான். அந்தப்பாட்டி பொட்டி கட்டிக்கொண்டு மரம் ஏறி கள் இறங்குவதை நான் பார்த்திருக் கிறேன். கள் குடுக்கைகளை சைக்கிளில் கட்டிக்கொண்டு - அந்த காலத்தில் ரொம்ப சின்னதாக இருக்கும் - கன்றுக் குட்டி மாதிரி. பெரிய சைக்கிள். பெண்கள் கால்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்காரலாம். அந்த அளவுக்குச் சிறியதாக இருக்கும். அந்தப்பாட்டி பொட்டிக் கட்டிக்கொண்டு சைக்கிளில் கடைகளுக்குப் போய் ஊற்றிக் கொண்டு வருவார். வீட்டிலும் கள் விற்பார். வீட்டில் சதா குடிகாரர்கள் கூட்டமாக இருக்கும். ஈக்கள், ஆட்டுத்தலைகள், குடல் வறுவல் வீச்சம் எப்பொழுதும் என் வீட்டில் நிரந்தரமாக இருந்தது. இந்தச் சூழலில்தான் நான் வளர்ந்தேன். தாத்தா சந்தேகப்பட்டு அந்தப் பாட்டியை ஒரு நாள் வெட்டிக்கொன்று விட்டார். அவள் சாகிறபோது "என் பரம்பரைகளில் பெண்கள் பிறக்கமாட்டார்கள் அப்படிப் பிறந்தாலும் விளங்கமாட்டார்கள்" என்று சாபம் கொடுத்து விட்டு செத்தார் என்று எனக்கு அம்மா சொன்னது நினைவு. குழந்தை பிறப்புக்கு என்ன காரணம் என்பது எனக்கு தெரியும். ஆனால் எதார்த்தம் என்னவென்றால் நான்கு தலைமுறையாக பெண் குழந்தைகளே எங்கள் வீட்டில் இல்லை. எனக்கும், என் தந்தை, என் தாத்தாவுக்கும் இல்லை. எனக்கு மிகவும் தெரிந்த பெண்மணி ஒருத்தி குடும்பத்தில் ஒருத்தர்போல இருந்தார். தூரத்து உறவு, எனக்கு ஏழு எட்டு வயதில் அவரை அறிமுகம் ஆயிற்று. அப்போது அவருக்கு வயது 50 இருக்கும். பட்டைபட்டையான விபூதியுடன் பழுத்த பக்தையாக எந்நேரமும் காட்சி அளிப்பார். அந்தம்மாவைக் கவுரவிக்கும் பொருட்டு அந்தம்மா தங்கியிருக்கும் காலங்களில் எங்கள் வீட்டில் மீன்கறி ஆக்குவது இல்லை. இடுப்பில் பட்டுப்பை தொங்கியபடி இருக்கும். புதியதாக யாரைப்பார்த்தாலும் விபூதி எடுத்துக் கொடுப்பார். அவர்களும் அதைவாங்கி பக்தி பரவசத்துடன் பூசிக்கொள்வார்கள். அந்த அம்மாள் அதிகாலையில் ஸ்னானம் முடித்து ஈரக்கூந்தலில் இருந்து நீர் சொட்டு சொட்டாக உதிர சுவாமிபடங்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு இராமலிங்க சுவாமிகள் பாடல்களைப் பாடுவார். "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு

வேண்டும்" இது போன்ற பாடல்கள். அந்தம்மா பாடும் போது நான் பக்கத்திலிருந்து பார்த்திருக்கிறேன். கண்ணில் இருந்து தாரைத்தாரையாகக் கண்ணீர் வரும். அதைப்பார்த்து எனக்கும் கண்ணீர் சுரக்கும். பல வருடங்களுக்குப் பிறகு அந்தம்மாளின் பழைய வாழ்க்கையை நான் அறிய நேர்ந்தது. சின்ன வயதில் கணவனை இழந்த அந்தம்மாள் இன்னொருவனுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். இரவு நேரத்தில் அவர்களின் கூடலுக்கு இடையூறாக அவர்களுக்கு மூன்று குழந்தைகள்; ஆறு நான்கு இரண்டு வயதுகளில் இருந்த காரணத்தாலே இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு, அபின் அல்லது கஞ்சா கலந்த வாழைப்பழத்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்துத் தூங்கப் பண்ணிவிடுவாளாம். இப்படிப் பலமாதங்கள் பலவருடங்கள் தொடர்ந்து அபின், கஞ்சா தின்ற அந்த மூன்று குழந்தைகளும் (அதில் இரண்டு ஆண், ஒரு பெண்) மனநிலை பாதித்தவர்களாய் வாழ்ந்து செத்துப்போனார்கள். மூன்று குழந்தைகளும் பைத்தியம் பிடித்து அலைந்தன. நான் பார்த்து இருக்கேன். பெரியவன் பாலகிருஷ்ணன்; சென்னை கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனையிலிருந்து செத்துப்போனான்; இரண்டாவது ராமகிருஷ்ணன்; செருப்பு தேய்ந்துவிடக்கூடாது என்பதற்காக அதன் கீழ் தகரம் அடித்து இருந்தான். (த்கரம் அடித்து அதைப்போட்டு நடப்பான்) சர்சர் என்று கர்ணகொடூரமாக சத்தம் வரும். அப்புறம் அவனுக்கு பைத்தியம் எப்படி என்றால் நடந்து கொண்டேயிருப்பான். அவனை உட்காரவைக்க முடியாது. மயக்கமருந்து கொடுத்துத்தான் தூங்க பண்ணனும். விழித்தான் என்றால் நடந்துகொண்டேயிருப்பான். நடந்து நடந்து செத்துப்போனான். அவன் இரண்டாவது பையன். மூன்றாவது பெண் இருந்தாளே அது மிகப்பெரிய சோகம். அவள் பிச்சை எடுத்துத் திரிந்தாள்.அவளை காலிகள் கூட்டாகப் பலவந்தம் செய்தார்கள். அதன் பலனாய் பிரசவ ஆஸ்பத்திரியில் செத்த குழந்தையைப் பிரசவித்து அவளும் ஜன்னிகண்டு செத்துப்போனாள். தன் பெண் ஆஸ்பத்திரியில் செத்து போனாள் என்று அறிந்த அந்த அம்மாள் - அந்த பக்தை - தெரு திண்ணையில் தன் புடவை அவிழ்த்து நிர்வாணமாகத் தூக்கில் தொங்கினாள். சுவாமி பாடல்களுக்கு அழுதவளும் குழந்தைகளுக்கு கஞ்சா அபின் கொடுத்தவளும், அவஸ்தை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டவளும் அவள்தான். எல்லாமே ஒருத்திக்குள் தான். என்னை என் இளமையில் திகில் ஊட்டிய நிகழ்ச்சியாக இது அமைந்தது.

மனிதன் மனதில் உள்ள இருட்டும் வெளிச்சமும் இன்றும் என்னைப் பயம் கொள்ள வைக்கின்றன. மனிதர்களை ஒரு சட்டத்திற்குள் முழுமையாக அடைத்துவிட முடியுமா? முடியாது.

காத்துவதி நாச்சியாருக்கு ஆயிரம் கைகள் பல்லாயிரம் முகம்; பல்லாயிரம் ஆகிருதிகளும் கொண்டவளை எப்படி ஒரு சட்டத்திற்குள் அடைத்து விடமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

அம்மா, தான் வாழ்ந்து இம்சை பட்ட இந்தக் குடும்பத்திற்கு உழைத்து ஓடாய்ப் போன கதையை சொன்னார். ஒரே விஷயத்தைப் பலகுரல்களுடன், பல அபிநயங்களுடன், பாவனைகளுடன், அழுத்தங்களுடன், வருணிக்கும் ஆற்றல் என்னைப் பிரமிக்க வைக்கும். அப்பா வாசலில் வளரும் துளசிச் செடியைப் பார்த்துக் கொண்டே இருப்பார். செடியே அம்மா என்பது போல. இது அம்மாவுக்கு மேலும் உஷ்ணத்தைக் கொடுக்கும். அம்மா செத்த ஒரு வருடத்திற்குள் அப்பா பத்து வருட முதுமையை அடைந்தார். அவர்களின் சண்டை சம்பாஷணைகள் எல்லாம் அவர்களின் காதலின் வெளிப்படையான சங்கீதம் என உணர்ந்தேன்.

என் அப்பா எவ்வளவுக்கு எவ்வளவு அன்பானவரோ அவ்வளவுக்கு கடுமையானவர். ஒரு முறை அடிக்கிறபொழுது அவர் கையிலிருந்த வைரமோதிரம் தெறித்து விழுந்தது. அந்த அளவுக்குக் கடுமையாக அடிப்பார். ஒரு பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதி அப்பெண் வீட்டார் அப்பாவிடம் முறையிட்டனர். ஆக அடித்தே கொல்லப் போகின்றார் என்று நான் எதிர்பார்த்தேன். நான் வீட்டை விட்டு ஓடிப்போனேன். பெரியப்பா என்னைக் கண்டுபிடித்து அழைத்து வந்தார். அப்பாவின் ராட்ஸச அடிகளுக்குத் தயாரானேன். ஆனால் அப்பா இப்படிச் சொன்னார். "உனக்கு நல்லா எழுத வருகிறது. எழுது". ஆக நான் அப்பெண்ணுக்கு எழுதிய அந்த முதல் படைப்பு தான் என்னுடைய முதல் படைப்பு.

தொடர்ந்து கவிதைகளைத் தாமரை, கண்ணதாசன், தீபம், கணையாழி போன்ற இதழ்களுக்கு எழுதமுடிந்தது. இலக்கியத்திற்குச் சமமாக எனக்கு சங்கீதத்தில் ஈடுபாடு உண்டு. தஞ்சாவூரில் நான் இருந்த அந்தப் பத்து ஆண்டுகாலம் எனக்கு வாய்த்த ஒரு அற்புதம். மணிக்கொடி தொகுப்பு, இலக்கிய தொகுப்பு எல்லாவற்றையும் படித்தேன். சித்தூர் சுப்ரமணியம் பிள்ளை, எம்.டி. ராமநாதன், பாலமுரளி போன்ற உயர்தர கலைஞர்களின் சங்கீதம் எனக்கு சாத்தியமாயிற்று. சங்கீத நுட்பங்கள் புரிபடபுரிபட மானுடச் சிக்கல்களும் புரிபடத் தொடங்கின. சங்கீதம் நல்ல இலக்கியத்திற்குக் கச்சாப்பொருளாகத் தோன்றுகிறது. சங்கீதம்தான் மனிதர்களை அழகுள்ளவர்களாக ஆக்கும் எனத்தோன்றுகிறது எனக்கு. அங்கே நான் சந்தித்தவர்கள் பிரகாஷ், எம்.வி. வெங்கட்ராம், பிச்சமூர்த்தி,

சாமிநாத ஆத்ரேயன், கரிச்சான் குஞ்சு, வெங்கட் சாமிநாதன் போன்ற இவர்களை அறிமுகப்படுத்தியது அந்த ஏரியாதான். கூடவே வாஞ்சையாகப் பேசிப் பழகுகிற அன்புள்ளம் கொண்ட மாமிகளையும் அங்கேநான் பார்த்தேன். ஐயர்கள் சந்தனம் ஊதுபத்திக் கடைகள், அத்தர், புனுகு, ஜவ்வாது, மருக்கொழுந்து சென்ட், வெங்கடேச பெருமாள் கோயில், அக்ரஹாரம், ஐயன் குளம், (கருப்பு ஐயர் என்று சொல்லப்படுகிற) பஞ்சாமிருதம் சொன்ன கதைகள், இருட்டியபிறகு மல்லிகைச் சரம் வாங்குவது, பெண்கள் அரண்மனை பாழ்மண்டபத்திற்குள் துகில் உரித்து ஓர் இரவில் இருபது ரூபாய் சம்பாதித்து அதில் 12 ரூபாய்களை பூசாரிக்குக் கொடுத்துவிட்டு 8 ரூபாயுடன் அழுதுகொண்டே வீடு திரும்பும் இவர்களெல்லாம்தான் என்னை எழுதத் தூண்டியவர்கள். நான் மீண்டும் மீண்டும் இவர்களைத் தான் எழுதிக்கொண்டிருக்கிறேன். முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் உலகத்தின் கோணல்களை எல்லாம் நிமிர்த்து விடமுடியும் என்று நான் நம்பினேன். ஆனால் என் கோணல்களைக் கூட நான் நிமிர்த்துக் கொள்ள முடியவில்லை. எழுதி எழுதி அதை நிமிர்த்திக் கொள்ள முயல்கிறேன்.

தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் நூற்றில் அறுபது பேர்கள். கதை வாசிப்பவர்கள் முப்பது பேர்கள். நல்ல வார்த்தைகளைக் கதைகளில் வாசிப்பவர் ஐந்து பேர்கள் கூடத் தேறமாட்டார்கள். எழுத்து பலமானது என்று சொல்லமுடியுமா? என்றாலும் நல்ல எழுத்தாளர்கள் என்னை நல்ல வாசகனாக மாற்றி அமைத்து இருக்கிறார்கள்.

நல்ல வாசகனாக நல்லரசிகனாக நல்ல மனிதனாக என்ற பரிணாமம் பெறமுடியுமா? முடியும் என்பது என் கருத்து. எழுத்து நீதிமான்களை மேலும் அவர்களை நீதிமான்களாக நிலைபெறச் செய்கிறது. அயோக்கியர்களை எழுத்து எப்பொழுதும் தீண்டுவதில்லை. இது என்னை உருவாக்கிய சூழ்நிலை.

மிகக் கடுமையான சூழ்நிலையில்தான் நான் எழுத நேர்ந்தது என்பது உண்மை. எழுதுவதற்கு எந்த சம்பந்தமும் இல்லாத, சூழ்நிலையில்லாத, ஒரு தாய் தந்தையரின் குடும்பத்தார் உறவினர் உற்றார்களுடன் வாழ்ந்தேன். முதல் 20 ஆண்டுகள் வரைக்கும். ஆனாலும் கூட ஒரு 15-16 வயதில் நான் காதலிக்கத் தொடங்கினேன். பார்க்கின்ற பெண்களையெல்லாம் காதலிக்கத் தொடங்கினேன். ஒரு சிக்கல். என்னிடம் பெண்கள் நல்லா பேசி, பழகினால் உடனே காதல் கடிதம் கொடுப்பேன். இது வந்து 20-22 வயது வரை இருந்தது. ஆனால் எப்படியோ சில பேர் அந்த காதல் கடிதங்களுக்கு

ரெஸ்பான்ஸ் (Response) செய்வார்கள். ஒரு பத்து கடிதங்களில் 3 கடிதம் O.K. ஆகிவிடும். ஆக இந்தக் காதலும் இந்த அன்பும் ஸ்நேகிதமும் என்னை விரட்டிக்கிட்டே இருக்கும். என்னுடைய கதைகளை ஆராய்ந்த ஒரு ஆராய்ச்சி மாணவி சொன்னாள். உங்கள் கதைகள் வீட்டிற்கு வெளியே தொடங்கி வீட்டிற்கு வெளியே முடிந்து விடுகிறதே ஏன்? உங்கள் கதைகளில் வீடு இல்லை என்றாள். ஏன்னா என் கதைகளில் வீடு என் மனதில் வரவில்லை. வீட்டிற்குள் எப்போதும் எனக்குப் பிடிக்காத வாசனை. எனக்குப் பிடிக்காத மனிதர்கள், பேச்சுக்கள் இருந்தன. வீட்டில் நுழைந்தவுடன் பெரிய தென்னை இருக்கும். தென்னைக்குப் பக்கத்தில் கள்ளு. என் மாமியார் விற்றுக் கொண்டிருப்பார். இப்படித்தான் சூழ்நிலை. இங்கு எழுதவும் பிடிக்காது. எழுதுவது, புத்தகம் படிப்பது, வாங்குவது வந்து அநாவசியமான செயல்கள் என்பது என் குடும்பத்தின் எண்ணம். தேசியப் போராட்டத்தில் பங்கேற்ற பின் எங்கப்பாவுக்கு ஓரளவுக்கு படித்தவர்களுடன் உறவு இருந்ததினாலேயும், படித்த பிரெஞ்சுக்காரர்களுடன் உறவு இருந்ததினாலேயும் அவர் மட்டும் என்னை ஓரளவுக்குப் புரிந்துக்கொள்ள முயன்றார். இதுவரைக்கும் என் அப்பா நான் என்ன சம்பாதிக்கிறேன் என்று கேட்டதே இல்லை. இதுவரைக்கும் அவர் நடந்து உடல் உறுதியுடன் இருந்த வரைக்கும் அவர் துணியை அவர்தான் துவைத்துக்கொள்வார். நேற்று போட்ட சட்டையை நான் போட்டேன் என்றால் அவருக்கு வருத்தமாக இருக்கும். உனக்கு அழுக்குச் சட்டை போடவேண்டிய அவசியம் என்ன? நேற்றுபோட்ட சட்டையைப் பிள்ளை போடக்கூடாது என்று நினைப்பார். கொடியில் கிடந்த அழுக்குச் சட்டையை எடுத்து அவர் துவைத்துப் போடுவார். என்னுடைய பெரும்பாலான துணிகளை அப்பாதான் துவைப்பார். கல்லூரி படித்து முடிக்கும் வரைக்கூட இது நடந்தது. இந்தப் பகுதி என்னை எப்போதும் பூசித்துக்கொண்டிருந்தது. இந்த இரண்டு காரணத்தால் எனக்கு இந்தச் சூழ்நிலையை விட்டுவிடக் காரணமாயிருந்தது. சமஸ்கிருதம் நாங்க படித்தோம். தஞ்சாவூரில் நான் தமிழ்ப் படிக்கிறபோது, பள்ளி அக்ரஹாரத்தில் சமஸ்கிருத பண்டிதர் ஒருவர் இருந்தார்; விஜயராகவாச்சாரியார் என்று தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் சமஸ்கிருத பகுதிக்கு தலைவராக இருந்தவர். அவரிடம் நானும் பிரகாசமும் படித்தோம். தஞ்சை பிரகாசம் நானும் அவர் வீட்டிற்குப் போய் படித்தோம். அங்கு ஒரு பிரச்சனை. என் கூட ஒரு நண்பர், ஒரு பொண்ணுக்குக் கடிதம் எழுதப் போக அது விவகாரம் ஆகி இடையிலேயே பாடம் படிப்பது நின்று விட்டது. ஆனால் நான் இதை புதுச்சேரியில் தொடர்ந்தேன். கரிச்சான்குஞ்சு புதுச்சேரியில்

பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவரிடம் சமஸ்கிருத பாடத்தை தொடர்ந்து கொண்டேன். 12 உபநிஷத்துக்கள் கரிச்சான்குஞ்சு மூலமாகப் பாடம் கேட்டு இருக்கேன். சமஸ்கிருதம் ஓரளவுக்குத் தெரியும், எனக்கு சமஸ்திருதம் பிடிக்கும். சமஸ்கிருதத்திற்கு நேரிடையான தமிழைப் போடுகிற போது முழுஅளவில் பலன் கிடைக்கும். அதனால் அந்த வார்த்தை போடுறது. அதோடு அந்தக் கதை 18-ம் நூற்றாண்டில் நடக்கிற கதையாக நடப்பதால் ரொம்பப் பொருத்தமாக இருக்கும். ஆனந்தரங்கம் பிள்ளை டைரியில் நீங்கள் பார்த்தீர்களானால் சமஸ்கிருதம் தெலுங்கு தமிழ் இஸ்லாமிய பாஷைகளும் இருக்கும். அவருக்குப் பிடித்த அரபு, உருது எல்லாம் இருக்கும். இப்படிக் கலந்துதான் உரைநடை அந்த காலத்தில் இருந்தது. அதுக்கு அது உபயோகப்பட்டது.

எனக்குக் குறிப்பிட்ட இனத்தின் மீது வெறுப்போ, அவமரியாதையோ இல்லை. அப்படி எல்லாம் இருக்கமுடியாது. வாழ்க்கையின் உபயோகமாக இருந்தவர் உதவிசெய்தவர் எல்லாம் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்தாம். அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை இப்போதும் எனக்கு உதவுவது அவர்கள்தாம். யார் மேலேயும் வெறுப்பு கிடையாது. எப்ப எனக்கு ஏற்பட்டது என்றால் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது. இப்படி இந்த விஷயங்களைப் பேசுவதற்கான வாய்ப்பு ஏனென்றால் அது கோபத்தோடு அவருடைய பேட்டி புகைப்படம். அவன் பல்கலைகழகத்தின் முன்னால் உட்கார்ந்து கொண்டு செருப்புக்கு பாலிஷ் போட்டுக்கொண்டிருந்தவர் அப்போ அந்த நிருபர் போய் கேட்கிறான். நீயாக செருப்புக்கு போடுகிறாயே என்றார். இதுகாரும் நாங்க படிச்சிட்டு இருந்தோம். இப்போ இந்த நிலை வந்துவிட்டது. செருப்புக்கு பாலீஷ் போடுறவன் எல்லாம் இங்க வந்து உட்கார்ந்து விடுவான். நான் இப்போ செருப்புக்கு பாலிஷ் போட்டு பழகிக் கொள்கிறேன். அப்படி சொன்னதாகப் பேட்டி வந்தது. எனக்குக் கோபமாக இருந்தது. 2000 வருடங்காலமாக செருப்புக்கு நீங்க போட்ட பாலிஷ் இல்லாமையா போய்விடும் என்ற தொனியில் கோபத்தோடு எழுதியது உண்டு. ஆனால் தனிப்பட்ட மனிதர்களைப் பற்றி தத்துவார்த்த அறிவார்ந்த நிலையிலிருந்து எழுதுகிறேன். அதை மீறி சிலசமயம் வந்து சிலபேர் புண்பட்டு வருவாங்க. நான் அதனைக் காட்டிலும், அதிகமாகப் புண்பட்டு வருகிறேன். அது யாருக்கும் தெரியவில்லை. எழுதும்போது கோபத்தில் மிகக்கடுமையாக எழுதுகிறோம். இதை விமர்சனமாகத்தான் கருதி எழுதுகிறோம். ஆனால் அப்படி யாரைக்குறித்து எழுதுகிறோமோ அவர்கள் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் புண்படுவதால் அவர்களை

எழுதி விட்டோமே என்று நான் பட்ட அவஸ்தை யாருக்கும் தெரியாது. அதை நண்பர்களே மிகவும் பெரிதுபடுத்தாது காலம் தான் அதை ஆற்ற வேண்டும்.

எழுபத்தொன்பதாம் ஆண்டுதான் சென்னைக்கு வந்தேன். அன்று கங்கைகொண்டான் ஒரு சினிமா பண்றதாகச் சொல்லி என்னை அழைத்துவந்தார். கவிஞர் உங்களுக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கலாம். கங்கைகொண்டான் வானம்பாடி பத்திரிக்கையில் ஓர் அளவுக்கு நல்ல கவிதை எழுதுகின்ற ஒருத்தர்தான். அவர் என்னைக் கூப்பிட்டு வந்தார். கண்ணீரில் எழுதாதே என்னும் ஓர் படம். அதில் நான் துணை இயக்குநர். அந்தப் படம் சரியாகவில்லை. அவருக்கு (கங்கைகொண்டானுக்கு) கவிதைதான் தெரியும். சினிமா தெரியாது. ஆனால் சினிமா ஆகிவிட்டார். நான் ரொம்ப சங்கடப்பட்டு அதைவிட்டு வெளியே வரவேண்டும் என்ற சூழ்நிலையில் குங்குமம் பத்திரிகையில் நான் வேலை செய்தேன். கந்தசாமி அதற்குத் துணையாக இருந்தார். பாவைச் சந்திரனுக்குத் துணையாக நான் இருந்தேன். இரண்டரை ஆண்டு குங்குமத்தில் இருந்தேன். எனக்குள்ள கோபமே குங்குமத்தில் அந்த இரண்டரையாண்டு காலமும், ஒரு சிறுகதை கூட என்கிட்ட கேட்டு வாங்கிப்போடவில்லை. சிறுகதைகள் படிச்சு எழுதி நான்தான் பிழைகளை அடித்தேன். தட்டி அதை ஒழுங்குப்படுத்தி கடைகளில் போடுறேன். ஆனால் என்னுடைய கதை ஒன்று கூட வரவில்லை வெளியேவும், நான் எழுதக்கூடாது என்று சொன்னார்கள். இந்த வருத்தத்துடன் வெளியே வந்தோம். அடுத்த படியாக இரண்டு மூன்று வருடமாக சும்மா இருந்துவிட்டோம். குமுதத்திற்கு போய் சேர்ந்தோம். குமுதம் வந்து ரொம்ப சுவாராஸ்யமான விஷயம். பத்து மணிக்கு நாங்கள் வந்து கூடுவோம். ஆசிரியர் பத்து மணிக்கு சீட்டில் வந்து உட்காருவார். அவர் வந்ததும் எங்களுக்கு அறிவிப்பார். ரங்க்ராஜன் முதலில் உள்ளே போவார். புனிதன் போவார். மாலன் வருவார். அப்போ மாலனும் நானும் புதுசா சேர்க்கப் பட்டோம். பார்த்தசாரதி உட்கார்ந்து இருப்பார். ஆக ஆசிரியர் குழு தொடங்கும். முதலில் இறைவணக்கம். நம் வணக்கம் ஆசிரியர்கள் பிரதிநிதியாக என்று பகவத்கீதையில் இருந்து படித்து ஒரு ஸ்லோகத்தை ஆசிரியர் சொல்வார். அதுக்கு விளக்கம் அளிப்பார். அந்த விளக்கம் அளிக்கிற நேரத்தில் ரங்கராஜனும், சுந்தரேசனும், அதுக்கு விளக்கம் கேட்பார்கள். பலனை எதிர்பார்க்காம காரியத்தை பண்ணனும், என்று சொல்வார். கால்மணிநேரம் நடக்கும் முறைப்படி. பின்னர் அலுவல்கள் நடக்கும். வணிகமய இதழ்களுடன் பலநேரங்களில் சமரசம் செய்துகொள்ளமுடியாமல் போனது. இதனால்

குமுதம் இதழிலிருந்து விலகி ஆனந்த விகடனில் சேர்ந்து அதையும் துறக்கலாயிற்று.

பின்னர் தனியாக பல இதழ்களுக்கும் கதைகள் எழுதினேன். வரலாறு மற்றும் பண்பாட்டு சமூக ஆய்வு அடிப்படையிலும் பின்னாளில் கதைகள் எழுதினேன். ஆனந்தரங்கம் பிள்ளை டைரி குறிப்புகளும், புதுச்சேரியை ஆண்ட பிரெஞ்சுக்காரர்களின் பண்பாட்டுக் கலப்பும் பற்றி ஆராயலானேன். **மானுடம் வெல்லும், வானம் வசப்படும்** நாவல்கள் இதனை வெளிப்படுத்தும்.

பொன்னீலன்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்கோடியில் அரபிக்கடலிலிருந்து 1 கி.மீ. தொலைவிலமைந்த ஒரு குக்கிராமம் எனது கிராமம். இரவு 7 அல்லது 71/2 மணியானால் கிராமம் அடங்கிப் போகும் பொழுது அந்தக் கடலுடைய இரைச்சல் அருமையான தாலாட்டுப் போல எங்க கிராமத்தில் கேட்கும்.

கேரளத்திலே எங்கள் ஊர் ரொம்பப் பிரபலமான ஊர்; ஒரு காலத்தில் 1959 வரை நாங்கள் கேரளத்தோடு வாழ்ந்தவர்கள்; தோப்பில் முகம்மது மீரான் ஊரும் சரி, எங்கள் ஊரும் சரி; நாங்கள் தமிழர்கள்; தமிழ் உணர்வுள்ளவர்கள் என்றும் தமிழ் தமிழ் என்றும் மலையாளத்தோடு போராடிக் கொண்டிருந்தவர்கள். ஆனாலும் நீண்டகாலமாக, வரலாற்றுப் பூர்வமாக அவர்களோடு வாழ்ந்தோம். 1956-க்குப் பிறகுதான் நாங்கள் தமிழகத்தோடு வரலாற்றுப் பூர்வமாக இணைந்திருக்கிறோம்.

கேரளத்திலே, எங்கள் ஊரைச் சொன்னால் மணிகட்டிப் பொட்டல் என்று முழுமையாகச் சொல்ல மாட்டார்கள். 'பொட்டல்' என்றுதான் சொல்வார்கள். 'பொட்டல்' என்று சொன்னால் பலாப்பழத்திற்கு ரொம்ப பிரபலமான இடம். இங்கே 'பண்ருட்டி பலாப்பழம்' என்று சொல்கிறார்களே அதேபோல் கேரளத்திலே 'பொட்டல் பலாப்பழம்'.

பெரிய கதைகளெல்லாம் சொல்வார்கள். பெரிய நீதிபதிகளை (ஊரென்றால் குற்றமிருக்கும், குறையிருக்கும், கொலைகள் இருக்கும், எல்லாம் இருக்கும்) எங்களூர் பெரிய பலாப்பழங்களைக் கொண்டு கொடுத்து மயக்கி வெற்றி பெற்றதாகப் பெரியவர்கள் கதைகதையாகச் சொல்வார்கள். நானே பார்த்திருக்கிறேன்.

இப்பொழுது அரசாங்க வேலை அல்லது தொழில் ரீதியான விவசாயம், வருமானத்திற்கான விவசாயம், இவைகளெல்லாம் வந்தபிறகு, தென்னை மரம் மற்ற மரமெல்லாம் வந்து பழைய பலாமரங்களுக்கு மரியாதை குறைந்து விட்டது.

என்னுடைய வாழ்நாளில், நான் சிறுவனாக இருக்கும் போது பார்த்திருக்கிறேன். என் கழுத்தளவுள்ள பலாப்பழங்களைப்

பார்த்திருக்கிறேன். மூன்று பேர் சேர்ந்து தூக்க முடியாத பலாப்பழங்களைப் பார்த்திருக்கிறேன். பலா மரத்திற்கு என்ன செய்வதென்றால், மேலிருந்து ஓர் அரிவாளைப் போட்டால் அந்த அரிவாள் - பலாமரத்து - அந்த மண்ணுக்குள்ளே (புழுதிக்குள்ளே) முழுக்கப் புதைத்து போய்விடவேண்டும். அப்போதுதான் அந்தப் பலாமரம் சரியாக இருக்கிறது என்று சொல்வார்கள். அவ்வளவு புழுதி கிளம்பிய பலாமரத்தைப் பேணி வந்த காலம் இருந்தது.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. 1947-48ல் எங்கள் ஊரில், எங்கள் வீட்டிலிருந்த ஒரு பலாமரத்திலுள்ள பலாப்பழத்தில், 'நமக்கு விஐபி சீட் போட்டு வைப்பாங்கல்ல' அது மாதிரி பேர் எழுதி வைத்திருப்பார்கள். இந்தப் பலாக்காய் பழுத்தால் இன்னாருக்கு; பெரிய பெரிய அதிகாரிகளுக்கு; செகரட்டரி, சீப் செகரட்டரி, அவரு இவரு என இவர்களுக்குக் கொடுப்பதற்காக. அவர்களே வந்து முதலாவதாக 'புக்' பண்ணிக்கிட்டும் போய்விடுவார்கள். அந்த அளவுக்குப் பலாபழம் இருந்தது. கால வளர்ச்சியினால் இப்பொழுது பலாப்பழங்கள் செத்துக்கொண்டிருக்கின்றன. பலாமரங்களை இன்று அவ்வளவாகப் பேணுவார் இல்லை. அதைவிட லாபம் தரக்கூடிய நிறையப் பயிர்கள் வந்துவிட்ட காரணத்தினால் அது மங்கிப்போயிற்று, மனித மதிப்புகள் மங்கிப்போவதுபோல அவைகளும் மங்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. என்றாலும் 'பொட்டல்' என்ற என் ஊரையும் சேர்த்து அறிமுகப்படுத்திய ஓர் உணர்ச்சியில் இதைச் சொல்லுகிறேன்.

'மணிகட்டிப்பொட்டல்' என்றால் என்ன? என்று அடிக்கடி கேட்பார்கள். பழைய காலத்திலே மகாராஜாக்கள் வாழ்ந்த காலத்திலே - அவர்களுக்கு 1001 பொன், 5001 பொன் அல்லது 10001 பொன் என்று ஏதாவது அவர்களுக்கு வாய்ப்பான ஒரு நேரத்திலே காணிக்கையாக வைத்துக்கொண்டு சில சலுகைகளைப் பெறுவார்கள். என்ன சலுகைகள்? கிராமத்திலே, இவர்கள் ஒரு கொடி வைத்துக் கொள்ளலாம். இந்தக் கொடியை வேலைக்காரன் பிடித்துக்கொள்ள இவர்கள் போய்க் கொண்டிருப்பார்கள். இப்பொழுது கலெக்டர்கள் அவர்களுடைய வண்டிகளிலே ஒரு சுழலும் மின்விளக்குப்பொறியை வைத்துக்கொள்கிறார்களே அதுமாதிரி. இவர்கள் போனார்கள் என்றால் 'கொடிகட்டிக்காரர்கள்' என்று ஆட்கள் வழிவிடவேண்டும். அதே மாதிரியாக இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்தால் வீட்டுக்கு முன்னால் ஒரு மணிகட்டிக்கொள்ளலாம். யாரையும் அழைக்கலாம். அந்த ஊர் மட்டுமல்ல; அந்த வட்டாரத்துக்கே 'ஏய் அவர் மணிகட்டியப்பா' என்பார்கள். ஒரு காலத்தில் அப்படி இருந்திருக்கிறது. அப்படி ஒருவர் ஏதோ ஒரு தலைமுறையில் வாழ்ந்ததாகச் சொல்லுகிறார்கள். எனவேதான் அது மணிகட்டிப்பொட்டல்.

ஒரு 300 அல்லது 350 வீடுகள்தான் இருக்கும்; சின்னஞ்சிறிய கிராமம். போனவாரத்தில் அல்லது அதற்கு முந்தின வாரத்தில் 'தினமணி'யில் ஒரு சின்னவரி என்னை மிகவும் கவர்ந்தது. "கேரளத்திலே தென்னை மரங்களை விடப் பட்டதாரிகள் அதிகம்". எங்களூரிலும் அதே மாதிரிதான். தோளிலே ஒரு மம்பட்டியை வைத்துக்கொண்டு அவன் தோட்டத்திற்குப் போய்க் கொண்டிருப்பான்; கேட்டால், பிஎச்.டி. முடித்திருக்கிறேன் என்பான்.

50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் கேரளத்திலே விவசாயம் செழிப்பில்லாத காலத்தில், வேறு வகையான வளர்ச்சிகள் இல்லாத காலத்தில் - சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கட்டாயக் கல்வி கொண்டு வந்து எல்லோரும் படிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து, படித்தவர்களையெல்லாம் உலகம் முழுவதிற்கும் ஏற்றுமதி செய்தார்கள். இதனால்தான் இப்போதும் சொல்வார்கள். இமயமலையில் டென்சிங் ஏறி "கண்டேன் கண்டேன்" என்று சொல்லும்போது ஒரு மலையாளி 'சாய் சாய்' என்று சொல்லி அங்க வந்தான் என்பார்கள். இந்த மாதிரியான படிப்பறிவு மிக்க ஒரு சூழல் உள்ள சாதாரண கிராமங்களில் ஒன்றான எங்களூரில் 350 வீடுகள்தான் இருக்கின்றன. ஒரு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது; ஒரு கல்லூரி இருக்கிறது; எல்லா வசதிகளும் இருக்கின்றன. இத்தகைய ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே நான் பிறந்து வளர்ந்தேன்.

என்னுடைய இலக்கியத் தாக்கங்கள் எவை என்று நான் யோசித்துப் பார்க்கும்பொழுது என் தாயார் 'அழகிய நாயகி' எனக்கு முதல் ஆசானாக இருக்கிறார் என்று இப்பொழுது எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

சின்ன வயதிலே நான் தொட்டிலுக்குள்ளே கிடக்கும்பொழுது அவர்கள் பாடிய பாடல்கள் மறக்க முடியாதவை. நாங்கள் மலையாள நாட்டோடு இருந்து வந்த காரணத்தினால் கண்ணனும் கண்ணன் கதையும் பாரதமும் எங்கள் கிராமப்புறங்களிலே பெருக்கெடுத்து ஓடும்.

> "ஆம்பாடிதன்னிலே ஓர் உன்னி உண்டு. அங்ஙனே!
> உன்னிக்குப்பேரு உன்னிக்கிருஷ்ணன் உண்டு. அங்ஙனே!
> உன்னிக்குக் கையிலே கிண்கிணி உண்டு. அங்ஙனே!

என்று என் சின்னஞ்சிறு வயதில் என் தாயார் எனக்குப் பாடியபாடல் என்ன காரணமோ இப்பொழுதும் என் மனதில் இருக்கு. இதே மாதிரி பாகவதக் கதைகள், கண்ணன் கதைகள், மகாபாரதக்கதைகள்.

இந்தக் கதைகள் எல்லாம் தூங்குவதற்காக இரவு பூராவும் சொல்லி என்னை வளர்த்தார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட இலக்கியவாதியென்று இப்பொழுது யோசித்துப் பார்க்கிறேன்.

ஒரு ஆறுமாதத்துக்கு முன்னால் தினமணியில், "ஒரு மூதாட்டியின் கவலை" என்று தலைப்பிட்டு ஒரு கால் பக்கம் மதிப்பிற்குரிய திருப்பூர் கிருஷ்ணன் எழுதியிருந்தார்கள். அந்த மூதாட்டி வேறு யாருமல்ல என்னுடைய தாயார்தான்.

62, 63களில் நான், எங்கள் கிராமத்தைப் பற்றி, ஒரு நாவல் எழுத வேண்டும் என்று எண்ணினேன். மிகப்பெரிய வரலாறுகொண்ட கிராமம். பலவிதமான வரலாறு கொண்டது. கேரள வரலாற்றிலே ஒரு பகுதியாகவே எங்கள் கிராமம் இருந்தது என்று சொல்லாம். எத்தனையோ சண்டைகள் நடந்திருக்கின்றன. எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன. எத்தனையோ தடவைகள் இராணுவம் அக்கிராமத்தின் வழியாகச் சென்றிருக்கிறது.

இதையெல்லாம் என் அம்மா எழுதவேண்டுமென்று நான் ஆசைபட்டபோது எங்க அம்மாகிட்ட சொன்னேன். "தினசரி கதை சொல்றீங்க. தினசரி இப்படி நடந்தது அப்படி நடந்தது. உங்க தாத்தா இப்படி இருந்தார். அப்படி இருந்தார்ன்னு.... சொல்லிக்கிட்டிருக்கீங்க. அவ்வளவையும் எழுதுங்களேன்''ன்னு சொன்னேன்.

அப்ப(ம்) எங்க அம்மா சொன்னாங்க. "பேப்பர் வாங்கிக்கொடு நான் எழுதறேன்னு". நானும் அலட்சியமாகக் கொஞ்சம் பேப்பர் வாங்கிக்கொடுத்து ஒரு பேனாவும் வாங்கிக்கொடுத்து 'எழுதுங்கம்மான்னு' சொல்லிவிட்டு நான் மறந்து விட்டேன்.

அவர்கள் எழுதிக்கொண்டே இருந்தார்கள். ஒரு வேலையைத் தொடங்கிவிட்டால் அதற்குப்பிறகு பேயாக இருப்பார்கள். வயது இப்பொழுது 85. எழுதி முடித்து, அதை ஒரு நாள் என்னிடம் தந்தார்கள். இந்தாப்பா 'நீ தந்ததையெல்லாம் (பேப்பர்) நான் எழுதித்தந்து விட்டேன்'. என்றார். கிட்டதட்ட 450 பக்கத்தில் ஒரு குடும்ப வரலாறு. எங்கள் குடும்ப வரலாறு. அதற்கு முன்னால் அவர்களுடைய குடும்ப வரலாறு. இரண்டு குடும்பங்களுடைய வரலாறு. அவர்கள் திருமணத்தின் சந்திப்பால் ஒன்றாக மாறுவதை ரொம்ப அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் பழைய மதிப்புகள், பழைய மரபுகள், பழைய வாழ்நிலை எல்லாம், எப்படி வீழ்ச்சியடைந்துவிட்டது என்று சொல்லி "இது என் கவலை"

என்று, அந்தக் கதையை முடித்திருக்கிறார்கள். நாவல் என்று சொல்வதற்கில்லை. நிஜமான வாழ்க்கை.

இப்பொழுது, நான் திரும்பிப் பார்க்கும்பொழுது இவ்வளவு ஆற்றலுடைய தாயார் எனக்கு கிடைத்திருப்பது ஒரு காலத்தில் எப்படி என்னை வளர்த்திருப்பார்கள் என்று நினைத்துப்பார்க்க முடிகிறது.

என்னுடைய ஊரைப்பற்றிச் சொன்னாங்க மணிகட்டிப் பொட்டல். என்னுடைய பேரைப்பற்றிச் சொன்னாங்க பொன்னீலன் என்று.

அந்தக் கண்ணனை அவர்கள் கிராமபுறத் தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். பழைய காலத்தில் ஓர் ஊர் என்றிருந்தால், ஊரில் எந்தத் தெய்வம் இருக்கிறதோ, அந்தத் தெய்வத்தினுடைய பெயரைக் கட்டாயமாக வைக்க வேண்டும். வேறு எந்தப் பெயரும் வைக்க முடியாது. இப்போதுதான் - ரமேஷ், கணேஷ், சுரேஷ் என்று 'ஷ், ஷ்' போட்டு நம்முடைய தமிழன் தன்னுடைய மரபுகளையெல்லாம் இழந்து கொண்டிருக்கிறான்.

ஓர் ஊரைச்சொன்னால், ஒரு பேரைச் சொன்னால் 'நீங்க இந்த ஊரா? என்று கேட்கின்ற அளவுக்கு ஒரு காலம் இருந்தது.

எங்க ஊர்ல 'நீலன்' என்ற சாமி இருந்த காரணத்தினால் எந்தப் பேரை எடுத்துக்கிட்டாலும் நீலன்தான். எங்க அப்பா பெயர் பொன்னீலன். எங்க பெரியப்பா பெயர் வலிய நீலன். எங்க சித்தப்பா பெயர் சின்னநீலன். இன்னொரு சித்தப்பா பெயர் அழகுநீலன். என் அண்ணா ஒருவருடைய பெயர் நீலலோகிதன். நீலவடிவு. நீலகண்டன். எல்லாம் கொஞ்சம் நீளமான பெயர். நீலரத்தினசாமி, நீலமார்த்தண்டன் என்று எந்தப் பெயரை எடுத்துக் கொண்டாலும் 'நீலன்' என்ற பெயரை அவர்கள் மரபு ரீதியாக வைத்துக் கொண்டதினால் என்னுடைய தந்தையின் பெயர் பொன்னீலன்.

'பொன்னீலன் ஸ்ரீ கண்டேஷ்வர பக்தவத்சலன்' என்னுடைய முழுப்பெயர். அதிலே என்னுடைய தந்தையின் பெயர் எனக்கு ரொம்பவும் இஷ்டமானதாக இருந்தது. அவர்கள் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்; ஒரு லட்சியவாதி; ஆரம்பத்திலே நான் வளர்வதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்; ஆகவே அந்தப் பெயரையே நான் என் சொந்தப் பெயராக மாற்றிக் கொண்டேன்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம், இந்த மாதிரியாக என்னுடைய அன்னையின் ஊர் கிராமப்புறத்திலே இவர்களுடைய

ஊருக்குக் கொஞ்சம் முந்தியோ பிந்தியோ உள்ள ஊர் 'ஈத்தாமொழி' என்று சொல்வார்கள். தேங்காய்க்குப் பிரபலமான ஊர். "ஈத்தாமொழித் தேங்காய்' ரொம்ப அடர்த்தியாக ரொம்பச் சுவையாக நன்றாகவிருக்கும். இங்கு கூட (சென்னையில்) ஈத்தாமொழித் தேங்காய் என்று ஏமாற்றி, சாதாரணத் தேங்காயை விற்பார்கள். அந்த ஊரில் அழகியநாயகி அம்மன் என்று ஒரு சாமி இருக்கிறது. எனவே அந்த ஊரில் ஒரு 50 வயதுக்கு உட்பட்டவர்கள், மேற்பட்டவர்கள் யாரை எடுத்துக் கொண்டாலும் அவர்களுடைய பெயர் 'அழகு' என்றிருக்கும். இது ஒரு மரபு. என்னுடைய அன்னையின் பெயர் அழகிய நாயகி. என்னுடைய சிற்றன்னையின் பெயர் அழகிய சௌந்தரி. என் தாத்தாவின் பெயர் அழகிய நாயகம். என்னுடைய மாமா பெயர் அழகிய மனகாவலன். இது பழைய காலத்து மரபு. தமிழன் வரவர இந்த மரபுகளை இழந்து கொண்டிருக்கிறான் என்று பார்க்கும்போது எனக்கு சில சமயங்களில் சங்கடமாக இருக்கும். ஏன்? வடநாட்டில் அந்த இமயமலைச் சாரலில் போய் 'ஷ்-புஷ்' என்று புடிச்சுக்குவானாம். ஏன் இங்கேயே இல்லையா? 'சிவத்தம்பி' எவ்வளவு கம்பீரமான பேராக இருக்கிறது. இதெல்லாம் நான் யோசித்துப் பார்க்கிறது வழக்கம். என்னுடைய பேரைப் பற்றிச் சொல்ல வேண்டிய சூழல் வந்ததற்காக இதைச் சொன்னேன்.

ஆரம்பத்திலே என்னை வளர்த்து மிகப்பெரிய தாக்கம் தந்த ஒருவர் என்னுடைய ஆசிரியர் தாணுமாலையப் பெருமாள் பிள்ளை. 4,5,6-வது வகுப்புகளில் நான் சின்னஞ்சிறுவனாக படித்துக் கொண்டிருந்த காலத்தில் 6 அடி உயரமும் ராஜகம்பீரத்தோற்றமும் உள்ள அந்த மகான் ஜிப்பா போட்டிருப்பார். கேரளத்திலே அப்போது ஜிப்பா என்பது (State Dress) மகாராஜா உட்பட எல்லோரும் ஜிப்பா தான் போட்டிருப்பார்கள். வெள்ளை வேட்டியும் வெள்ளை ஜிப்பாவும் போட்டுக்கொண்டு அந்த ஆறடி மனிதன் என்னுடைய 2 அடி 3 அடிக்குக் குனிந்து கொண்டே 'அடேய்! பாரதியாரைப்படிடா. இதைச் சொல்லு. இப்படிச் சொல்லு. நீ வாசி. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடியது. தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு. சொல்லுடா நீ. இதுதாண்டா இலக்கியக்கூட்டம். இவன் பேசப் போறான். நீ பேசு" என்று என்னுடைய பிள்ளைப் பிராயத்திலே முதுகைத்தடவித் தடவி - (பல வாத்தியார்கள் இன்று முதுகில் அடித்துக் கொன்று விடுகிறார்கள்) இராமன் அந்த அணிலுக்கு முதுகைத் தடவினான் என்று கதை சொல்லுகிறார்களே அது மாதிரி - எனக்குப் பாரதியாரையும் கவிமணியையும் அவர் அன்று ஊட்டியது இன்று வரை என் மனதில் அசைக்க முடியாத பெருஞ்செல்வமாக இருந்து கொண்டிருக்கிறது.

அதன் பிறகு வருகின்ற காலத்திலே, என்னைப் பாதித்தவர்கள் என்று சொல்லும்பொழுது, நான் ஆரம்பத்திலே மிகப் பெரிய கவிஞனாக வரவேண்டுமென்று பாரதி, பாரதிதாசனைப் படித்து வரும்பொழுது கவிதை தான் உலகம், கவிஞனாக வரவேண்டுமென்று ஏகப்பட்ட கவிதைகள் எழுதியிருக்கிறேன். இரண்டு கவிதை காவியங்கள் எழுதியிருக்கிறேன். இன்றைய இலக்கியவாதிகள் அதை காவியமே இல்லை என்று சொல்லக்கூடும். அவை உண்மையிலே காவியமாக இல்லாமல் இருக்கும். என்னுடைய அபிப்பிராயத்தில் இரண்டு கவிதைக் காவியங்கள்.

வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய சோர்வுகள் காரணமாக - என்னோடு பிறந்த நால்வர் இறந்து விட்டார்கள். நான் படித்துக் கொண்டிருந்த போது என் தந்தையார் இறந்துவிட்டார்கள். என் பெரியப்பாவும் சித்தப்பாவும் இறந்து போனார்கள் - குடும்பத்திலே எல்லா இழப்புகளும் என்னுடைய அந்தக் கல்லூரி காலப் பருவத்திலே ஏற்பட்டது. சொத்து இழந்து விட்டேன். எனவே, உலகம் மாயம் என்ற பெரிய துக்கம். இதோடு மட்டுமல்ல. இந்த ஆங்கில இலக்கியம் இருக்கிறதே. அதைப் படித்தால் முதலில் வருகின்ற ஒரு தாக்கம் 'உலகம் மாயம்' என்ற எண்ணம். நிறையப் படித்திருக்கிறேன். உலகத்தின் மீதொரு காதல்; உலகத்தின் மீதொரு வசீகரம், உலகத்தின் மீது ஒரு நம்பிக்கை கொள்வதற்கு எனக்கு அந்தக் காலத்தில் ஆங்கில இலக்கியம் மூலமாக என்னுடைய ஆசிரியர்கள் ஒரு முயற்சியும் செய்யவில்லை. ஆமாம். இதெல்லாம் சேர்த்து எனக்கு வாழ்வு மாயமானது; மனித முயற்சிகள் அற்பமானவை; இது பிரயோஜனமில்லை; வாழ்வது அர்த்தமில்லை என்று எனக்கோர் உணர்ச்சி. ஒரு கட்டத்தில் இராத்திரி இரண்டு மணிக்கு எதையோ படித்துக் கொண்டிருந்த நான் புத்தகத்தைத் தூக்கித் தூர வீசியிருக்கிறேன். நாளைக்குப் பரீட்சை. படிச்சிக்கிட்டு இருக்கும்போதே உலகம் மாயம் என்று சொல்லிக்கொண்டிருந்த அந்த பாடல் உமர்கயாம் என்று கருதுகிறேன்- ஏதோ ஒரு பாடல், தூக்கித் தூரப் போட்டுவிட்டு இந்த மாயத்தைப் போய் ஏன்டா படிக்கணும்? எதுக்குப் பரீட்சை எழுதனும்னு கேட்கும் அளவுக்குத் தாக்கம் ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் நான் முதன்முறையாக ஒரு காவியம் எழுதினேன். **ஊமைகண்ட கனவு**. வாழ்க்கை என்பது ஊமை கண்ட கனவு. அதைக் கொண்டு ஒரு பிரயோஜனமும் கிடையாது. ரொம்பப் பெரிய தாக்கம் ஏற்பட்டுவிட்டது. அதைப்போல விமலை என்ற மிகப் பெரிய - கிட்டதட்ட 10,000 வரிகள் கொண்ட - ஒரு காவியம். அதை பப்ளிஷ் பண்ணல. ஒருத்தர் கிட்டேயும் காட்டல.

இன்றும் பத்திரமாக வைத்திருக்கிறேன். இதை சிவத்தம்பி பார்த்தால் என்ன பேத்தல் என்று சொல்லலாம். ஏனென்றால் ஆர்வங்கள் அதோடு அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட வழிகாட்டிகள் இருந்ததினால் எனக்கு அப்படிப்பட்ட ஒரு போக்கு இருந்தது அதன்பிறகு தான் - என்னுடைய 25வது வயதிலிருந்து தான் - நான் கூட்டை விட்டு வெளியே வருகிறேன்.

ஒரு வைதீகக் குடும்பம். அதிகமான தொடர்பில்லாத ஒரு குடும்பச்சூழல். அதற்குள்ளே தந்தை-மகன்-அம்மை என்று ஒரு சின்ன வட்டம். ஒரு சின்ன வேலை. வேலைக்காக அந்தக் கூட்டைவிட்டு நான் நெல்லை மாவட்டத்திற்கு வந்தேன். அது நம்முடைய செயப்பிரகாசம் ஊர்; நாகலாபுரம் ஊருக்கு வந்தபோதுதான் நான் முதன்முறையாக வனாந்தரத்தைச் சந்தித்தேன். எங்கள் ஊரில் அப்படி கிடையாது. எட்டிப்பார்த்தால் தென்னை மரம். அடுத்த வீடு தெரியாது. எங்கு பார்த்தாலும் மரங்கள். நாங்கள் ஊரைப் பார்ப்பதற்கு புளிய மர உச்சியில் ஏறி பார்ப்போம். என்ன தெரியும்? மரத்தில் ஏறினவன் டேய்! குருசடி தெரியுதடா என்பான். எங்க ஊர்ல பெரிய மிஷன் அதுதான். இவர்களுடைய ஊருக்குப் போனபிறகு தான், 'மனிதன் இவ்வளவு விசாலமானவன்; சமூகம் இவ்வளவு விசாலமானது; உலகத்தில் இவ்வளவு போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; மனித வாழ்க்கை இப்படி மாறிக் கொண்டிருக்கிறது; பிரபஞ்சம் இப்படி வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்று ஓர் எண்ணம் வந்தது.

என்னை மாற்றியவர்கள் என்று சொன்னால் 'வானமாமலை' அவர்களும் நம்முடைய - தமிழகத்துடைய முற்போக்கு இலக்கியத் துறைப் பேராசான் ஜீவா அவர்களும்தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய சந்திப்பும் அவர்களுடைய உறவும், இந்த கிராம-நாகலாபுரம்-வட்டத்துடைய பார்வையும் என்னை மாற்றின. நீங்க பார்த்தீங்கன்னு சொன்னா கம்பங்காடு. கம்பங்காட்டுக்குப் போனாதான் சுழி தெரியும். கம்பு மூன்று மூன்று அடி வளர்ந்து நீண்ட நீண்ட அணில்வால் போல கதிர் விட்டு பூத்துநிக்கும். சோளம் வரிசையாக அதற்கு விளிம்பு வெட்டி நிற்கும். உள்ளே நல்ல கொளுத்த இந்த கம்பம் பயிருக்குள்ள போய் நீங்க நல்ல சுவாசம் - எடுத்தீங்கன்னு சொன்னா - உலகத்துக்குத் தெரியாத ஒரு மயக்கம் - ஒரு வாசம். கம்பம் பூ, சோளப்பூ வாசம் இருக்கிறதே அதற்கு நிகரான வாசம் - நெல்லுல அவ்வளவு - இல்ல. நெல் வாசத்தை காட்டிலும் அடர்த்தியான, காரமான அந்த வாசத்தை சுவாசித்துத்தான் அந்த மண்ணில் நல்லவர்களும்

கெட்டவர்களுமாக- ஒன்று காலில் விழுந்து கும்பிடுபவர்களாக அல்லது அறிவாளை உடனே தூக்குபவர்களாக - கணத்துக்குக்கணம் மாறுகின்ற- அற்புதமான மனிதர்களை அதோடு முதன் முதலாக ஏமாறாத ஏமாற்றாத மனிதர்களைப் பார்த்தேன். எங்க ஊர்ல எல்லாம் ஏமாத்துவான். ஆமாம். மண்ணை ஒட்டி வசதியை ஒட்டி இருக்கிறவர்கள் ஆன்மாவை முதலில் அடகுவைத்து விடுவார்கள் எந்த நேரத்திலும்.

பள்ளித்துணை ஆய்வாளராக நான் இருந்த காலத்தில் பெருமாள் என்கிற ஒரு பியூன் இருந்தான். பெருமாள் நாம சோதனை போடப்போவோமா? நல்லது ஐயா! இன்னிக்கு நாம வந்து கேம்ப்-ஐ நிறுத்துவோமா? அதற்கும் நல்லதய்யா! என்னய்யா சொல்ற? சரின்னாலும் தப்பு வருமய்யா; மோசம்னு சொன்னாலும் தப்பு வருமய்யா. அதிகாரிகள்கிட்ட நல்லதுன்னு சொன்னா தப்பிக்கலாம். இதச் சோதிக்கிறதுக்காக ஒருநாள் கேட்டேன். எனக்கு ரொம்ப கடுமையான காய்ச்சல் இருக்குதப்பா? உடன் அதற்கும் நல்லதய்யா என்றான். அதிகாரத்தோடு பழகிய மனிதன் தனது ஆன்மாவை அடகு வைத்து விடுகிறான். எங்கே ஆன்மா இருக்கிறது? கிராமங்களில் இருக்கிறது. இதை நாகலாபுரம் கிராமத்தை நினைக்கிற போது இன்றும் நான் சிலிர்த்துப் போகிறேன்.

கிராமம் தோறும் திரிந்தேன். 30 கிலோமீட்டர் நடந்திருக்கிறேன். பள்ளித்துணை ஆய்வாளர். வண்டியைக் கொண்டுவரச் சொன்னா கொண்டு வருவாங்க; காரைக் கொண்டு வரச் சொன்னா கொண்டு வருவாங்க. ஆனால் நான் ஒரு குடையைத் தூக்கிக் கொண்டு கிராமம் கிராமமாக நடந்தே போனேன். அங்கே போகும்போது சில செடிகள் கிடக்கும். அப்படியே நின்று பார்த்திருக்கிறேன். அந்தக் கொடிகளை, அதே வேலிகளை, அந்தப் பயிர்களை, அந்த மனிதர்களை, ஒரு கோவணமும் - குஞ்சம்விட்டு கட்டிய கோமணமும் - தலையில் ராஜ கம்பீரமான தலைப்பாகையும் (அவர்களுடைய வேட்டி தலையில்தான் இருக்கும்.) உடம்பு முழுவதும் புழுதியும், உழைப்பின் வியர்வையும், பெரிய கட்டபொம்மன் மீசையுமாக அந்தக் காட்டிலே அலைகின்ற கம்பீரமான மனிதர்களை முதன் முறையாக என்னை இழந்து சந்தித்தேன். தினசரி டைரியை கையில் கொண்டு திரிந்தவாறே குறிப்பெடுத்தேன். நான் கவிஞன். இப்பொழுது தான் அந்தக் காலத்துக் கவிதைகள் எல்லாம் இப்ப(ம்) தான் வெளிவந்திருக்கிறது. என்ன கவிதை?-புல்லின் குழந்தைகள். என்னுடைய 24, 25 வயதில் காதல் வயப்பட்டு கரிசல் காட்டில் திரிந்த போது எழுதிய கவிதைகள் இப்ப(ம்) தான் வெளிவந்திருக்கின்றன. இதை அந்த அழகு சொர்க்கத்தை

- நான் கரிசல் காட்டை சொர்க்கம் என்றே கருத விரும்புகிறேன் - நீங்க போய் பார்க்கணுங்க.

'அதலக்காய்'னு ஒரு காய் இருக்கும். அதை அப்படியே பிடுங்கிக் கொண்டு வந்து வறுத்துச் சாப்பிட்டுப் பார்க்கணும். 1 கிலோ.மீ., 2 கிலோ.மீ. தூரத்துக்கு மல்லி நிற்கும். நகரக் காய்கறி மல்லி இல்ல. கடையில ஒரு மாதிரி-சொங்கி மாதிரி-நிற்கும். அந்த மல்லி அப்படியே - தூர், தண்டுடன் - இருக்கும். அந்த மல்லிய அப்படியே பிடுங்கிச் சாப்பிடலாம். அப்படியே கழுவி நறுக்கி தயிர்ல போட்டு உப்பும் போட்டு அப்படியே சாப்பிடுவாங்க. நான் சாப்பிட்டிருக்கிறேன்.

கொழுத்த மயில்கள் அந்தக் காடு பூரா அலையும். நீள கழுத்தை வச்சுக்கிட்டு அந்தக் கதிரை ஒரு கொத்து கொத்தி அப்படியே இழுக்கும். உலகத்தின் சொர்க்கலோகம், அது என்று எனக்குத் தோன்றிய போது என்னையறியாமல் கவிதை எழுதுவதை விட்டு விட்டு தினசரி நான் அங்கே பார்த்த காட்சிகளை எல்லாம் பதிவு செய்தேன். கிராமங்களில் பள்ளிக்கூடங்களில் போய் தங்கினேன். பள்ளிக்கூட ஆய்வாளர்னா பெரிய அதிகாரி அங்கு. இங்கு சில்லரை. கிராமத்திலே வந்து பெரிய கால்சட்டை போட்ட அதிகாரி நான்தான். ஒரு இரும்புக்கட்டிலக் கொண்டு வந்து போடுவாங்க. ஊர்ல உள்ள பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் வந்திருவாங்க. வந்து கதை சொன்னா, கிராமத்துல நடக்கிற அத்தனை விஷயங்களையும் இராத்திரி பூரா பேசுவாங்க. நகரம் வந்த போது என்ன செய்வாங்க? வண்டி கட்டிக் கொண்டு அவர்கள் சந்தைக்கு வரும்போது அதே கோவணத்தோடும், பெரிய தலைப்பாகையோடும், நரைத்த மீசையோடும், என்னுடைய அலுவலகத்திற்கு வந்திருப்பார்கள். வந்து கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு டீ சாப்பிட்டு கதை பேசுவார்கள். இவர்களைத் தினமும் சந்திப்பேன். தினமும் பேசி தினமும் குறிப்பெடுத்து அங்கு நடந்த வாடிக்கைகளை எல்லாம் நான் பதிவு செய்து தினசரி புரட்டிப் பார்ப்பேன் என்ன எழுதியிருக்கிறேன்னு. ஒரு குறிப்பிட்ட காலம் வரும்போது அது ஓர் அற்புதமான நாவல்போல் எனக்குத் தெரிந்தது. இந்த நாவல்தான் என்னுடைய முதல் நாவல் கரிசல். இதைத் திரட்டுவதற்காக நான் 5 ஆண்டுகள் அந்தக் கரிசல் காட்டிலே அலைந்தேன். எவ்வளவு அருமையான அனுபவங்கள் என்று நினைக்கின்றீர்கள். முதன்முறையாக ஒருத்தியைக் காதலித்து அவளுக்காக ஏங்கி அந்தக் காடெல்லாம் ஒருவன் அலைந்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது ஒரு காதலனுக்காக ஒரு காதலி அலைந்தாள் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதில்

எவ்வளவு சந்தோஷமோ அந்த சந்தோஷத்தை விடப் பத்து மடங்கு அதிகமான சந்தோஷம். கரிசல் காட்டிற்கு நிகரான காடு - இப்போதும் கரும்புக் காடு இருக்கிறது; வாசம்தான். மஞ்சள் காடு இருக்கிறது; வாசம்தான். கரிசல்காட்டுக் கம்பம் பயிருக்கு நிகரான வாசம் நான் பார்த்ததில்லை. ஒருவேளை என்னுடைய இளமையில் அதை நான் அனுபவித்தன் காரணமோ என்னவோ? தெரியவில்லை. அந்த நாவல் - அந்த அனுபவங்கள்தான். அந்தக் காலத்திலே தமிழ்நாட்டிலும் இந்தியா முழுவதிலும் 'நிலமீட்சி' என்ற ஒரு பெரும் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திக்கொண்டிருந்தது. எனக்கு கம்யூனிசமும் தெரியாது; ஒண்ணும் தெரியாது. கிராமங்களிலே போகும்போது போராட்டம் நடக்கும். இவர்களிடம் பேசுவேன். செய்திகளைச் சேகரிப்பேன். அடிதடிகளை அறிவேன். அப்படி அப்படிச் சேகரித்து நான் உருவாக்கியதுதான் அந்த கரிசல் என்ற நாவல்.

'பெரிதினும் பெரிதுகேள்' என்ற பேராசைக்காரன் நான். 1600 பக்கங்கள் நான் எழுதியிருக்கிறேன். ஒரு கம்பங்கதிரை மட்டும் நான் 6 பக்கம் எழுதியிருக்கிறேன். அது எப்படி அசைந்தது? அது அப்படியே வளையும்போது மகரந்தங்கள் காலை வெளிச்சத்தில் எப்படி விழும்? மயில்கள் எப்படிக் காலை நேரத்திலே தோகைவிரித்து ஆடும்? இதெல்லாம் எழுதினேன். யார் வெளியிடுவா? தமிழ்நாட்டில் எழுத்தாளனுக்கு மிகப்பெரிய சாபம் என்னவென்றால் அவனுக்கு வெளியிடுவதற்கு ஆளில்லை. தோழர் (மீரான்) சொன்னதாகச் சொன்னார்கள். 25,000 ரூபாய் கடன் வாங்குவதற்கு பேங்கில் போய் பொய் சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். வெளியிடுவதென்பது அவ்வளவு சிரமம். கொடுத்தா - 1600 பக்கத்தைக் கொடுத்தா - 'இவன் ஒரு சிறுகதை கூட எழுதல. இந்த 1600 பக்கத்தைப் போட்டா என்னாகிறது. 'வானமாமலை அவர்களை அப்பொழுதுதான் பழகியிருக்கிறேன். அவர் ஒரு எழுத்துக்கூட எழுதல. இந்த 1600 பக்கத்தையும் இரவு பகலாகப் படித்து முடித்தார். அவர் வீட்டில் எனக்குச் சோறுபோட்டு என் எழுத்தைப் படித்தார். அப்பேர்ப்பட்ட மனிதர்களை வேறு எங்கும் பார்த்ததில்லை-சாதி பார்க்காதவர்; சமயம் பார்க்காதவர்; இனம் பார்க்காதவர்; மொழி பார்க்காதவர்; எதையும் பார்க்காது மனிதன் என்கின்றதை மட்டும் பார்த்து அளவற்ற அன்பால் மனிதனை அணைத்துக் கொள்கின்ற ஒரு மாபெரும் சக்தி அவரிடம். போய் புத்தகத்தைக் கொண்டு வா! படித்துப் பார்ப்போம் என்று சொல்லி தினசரி ராத்திரி ஒன்பது மணிக்குப் படிக்கத் தொடங்குவோம். இரண்டு மணிவரை படிப்போம். இப்படியாக ஒரு பத்து பதினைந்து நாள் அவர்

வீட்டில் படித்து 'ரொம்ப அற்புதமாக இருக்கிறது பொன்னீலன். இதைப் போடணுமே! என்ன பண்ணுறது?' என்று சொன்னார். நான் 'எனக்கு ஒரு வழியும் கிடையாது. ஒரு சொத்த வித்து வேணுமானா கொண்டுவாரேன்' என்றேன். 'அதெல்லாம் கூடாது. பிறகு நீங்க இலக்கியத்தை விட்டே ஓடிப் போய்டுவீங்க. அப்படியெல்லாம் செய்யக்கூடாது. இலக்கியவாதிகள் பெரும்பாலும் அழிந்து போவது ஆசையில் ஒரு புத்தகம் போடுவார்கள். தங்கள் சொந்த காசில். அது வித்தே போகாது. வாழ்க்கை அழிந்து போகும். எனவே நீ சொந்தக் காசில் போடக்கூடாது. நான் பார்க்கிறேன்' என்று சொல்லி NCBH -ல் கொண்டு போய் கொடுத்தார். அவங்க இவ்வளவும் போட முடியாது என்று சொல்லி, பெரிய தகராறு ஆகி, 1972-ல் முடித்த புத்தகம் 1976-ல் - அதுவும் 430 பக்கமாகச் சுருங்கி - வந்தது. சில பக்கங்களைப் பார்த்தீர்களேயானால் ஒரு பாரா தான் இருக்கும். மீதி எல்லாம் வெட்டி விட்டார்கள். நான் வெட்டவில்லை. எனக்கு மனசே வரல. போய்ப் படுத்துக்கிட்டேன். ஒரு மாசமாக எனது தம்பிகள், சகோதரர்களெல்லாம் சேர்ந்து 400 பக்கமாகச் சுருக்கினார்கள். அப்படித் தந்தால்தான் வாங்குவோமுனுட்டாக. போட்டு வெட்டி, குளோஸ் பண்ணி, எழுத்தாளனுக்கு இத விடப் பெரிய கொடுமை உலகத்தில் இல்லவே இல்லை. தமிழ்நாட்டில்தான் எழுத்தாளனுக்கு இவ்வளவு கொடுமைகள் இருக்கின்றன. இலக்கியவாதிகள் என்றால் தமிழ்நாட்டில் மரியாதை இல்லை.

நான் ஒரு தடவை சாகித்திய அகாடெமி விருது வாங்கியபின் நமது பக்கத்து மாநிலம் - இந்த மலைக்கு அடுத்த அந்த மலை. நம்ம ஜனங்கள்தான். அவன் சேரன்தான். ஒரு காலத்தில் நம்ம சிலம்பு எழுதிய நம்முடைய இளங்கோவடிகள் அங்கு உட்கார்ந்து தான் எழுதினாரு. திருவஞ்சிக்களம் அங்குதான் இருக்குது. எல்லாம் தமிழன். ஆனால் மலைக்கு அந்தப் பக்கம் போகும் போது கலாச்சாரம் எப்படி மாறிப் போச்சுது. என்னைக் கூப்பிட்டிருந்தார்கள் - போயிருந்தேன். ஒரு பெரிய ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் பக்கத்திலே ஒரு பெரிய காயல். காயலுடைய ஓரத்தில் கட்டியிருந்தாங்க. அழகழகா இருந்தது. ஆனால் எனக்கு மலையாளமும் தெரியாது. பழைய ஒட்ட மலையாளத்தை எடுத்துக்கிட்டு (நினைவு கொண்டு) நானும் போய் சேர்ந்தேன். எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். உள்ள போனவுடனே அந்த ரிஸப்ஷன் -ல இருந்தவங்க-இங்கும் பல ஹோட்டல்களுக்கும் போயிருக்கிறோம்; பாத்திருக்கிறோம். நமக்கு என்ன மரியாதை கிடைக்கும் என்று தெரியும் - போன உடனே, அவர், அந்த இடையில் ஒரு பலகை மாதிரி இருக்குமில்ல அதை மறிச்சிப் போட்டுவிட்டு வந்து என்ன கட்டிப்புடிச்சிட்டார். யூ ஆர்

எ ரைட்டர், சார் டிக்கெட் கிட்டியோ? அப்படியே கட்டிக்கிட்டு, 'எங்க லக்கேஜ்-ஐ நான்தான் தூக்கிட்டு வருவேன்னு' கூவிகிட்டு இரண்டாவது மாடிவரை அவனே தூக்கிகொண்டு வச்சு, 2 மணி நேரம் நான் காத்திருந்த வேளையில், ஒரு பத்து பத்து நிமிஷம் வந்து பேசிக்கிட்டு போனான். அசந்து போய்விட்டேன். தமிழ்நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையே எவ்வளவு ரசனை வித்தியாசம். ஆமாம் மிகப் பெரிய சினிமாகாரரு. யாரு? இப்பக்கூட ஒரு பரிசு வாங்கினாரே கோபாலகிருஷ்ணன். என்னுடைய நண்பர் அடூர் கோபாலகிருஷ்ணன்-ஐ நான் திருவனந்தபுரத்திலே சந்திக்க போறேன். அவரைச் சந்திக்க போகுமுன்னால அவரு சந்தைக்குப் போயிருக்கிறதா சொன்னாங்க. போய்ப்பார்த்தா, காரைவிட்டு இறங்கி கையில பையெல்லாம் வச்சிக்கிட்டு கத்தரிக்காயை பிதுக்கிப் பிதுக்கிப் பார்த்து வாங்கிட்டு இருக்காங்க. யாரும் கண்டுக்கிடல. அவர் பாட்டுக்குப் போறாரு. எனக்குக் கற்பனை. இவன் மட்டும் தமிழ்நாட்டில் வந்தா இந்த சந்தை என்ன ஆயிருக்கும். முதல் மந்திரி பீடி குடிச்சுக்கிட்டு அவரு பாட்டுக்குப் போறாரு. செக்கரடேரியட்டுல பீடியை சிக்ரெட்டை நான் பார்க்கல்ல - பீடியை வலிச்சிகிட்டு அவரு பாட்டுக்கு 'எங்ஙனே' வாடே வாடே என்று சொல்லி முதுகில் தட்டிக் கொண்டே போறாரு. நம்ம நாட்டில வெள்ளைக்காரர் விட்டுட்டுப் போன பந்தாக்களும் போலிகளும், அநியாயங்களும் மனிதன் வந்து ஒரு முகத்தைக் காட்ட வழியில்லாமல் ஆகி திரைமறைவில்தான் என்ன அயோக்கியத்தனமாக இருக்கிறது.

இலக்கியக் கூட்டத்திற்கு ஓ.எம். குரூப்-பும் ஒரு எட்டுமணிக்கு வந்தார்கள். எனது தமிழ்ப் பேச்சை ஒரு மலையாள டீச்சரைக் கொண்டு மலையாளத்தில் வாசிக்கச் சொல்லிக் கேட்டு - மலையாளம் படிக்கத் தெரியாது மலையாளத்தை தமிழில் எழுதி 'பிரிய சுகூர்த்துக்களே' என்று தமிழிலதான் எழுதியிருக்கும், இப்படி ரெடி பண்ணிக்கிட்டுப் போய் - ஒரு பத்து பக்கம் - வச்சுக்கிட்டு 'பிரிய சுகூர்த்துக்களே' என்று தொடங்கினேன். 'நிங்ஙள் ஒரு தமிழனாணு. எங்களுக்கு வேண்டியது உங்களுடைய தமிழ் என்றனர். எப்பேர்ப்பட்ட மக்கள்; நம்ம நாட்டில விடுவானா?

நான் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் நேரம்; பள்ளிக்கூடங்க பூரா, இங்கிலீஷ் ஆகிப் போச்சு; எனக்கு தமிழ் வெறி கொஞ்சம் சாஸ்தி. பள்ளிக்கூடத்துக்குப் போனால் கூட்டத்தை அவர்கள் 'ரெஸ்பெக்டட் சீஃப் எஜீகேஷனல் ஆபீஸர்'-னு தான் தொடங்குவார்கள். நான் 'அன்பான முதல்வர் அவர்களே'ன்னு தொடங்கியவுடனே அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்கள், பிரின்சிபால்,

மாணவர்கள் 'இப்படி ஒரு பட்டிக்காட்டானக் கூட்டிக்கிட்டு வந்திட்டீங்களே' என்று எண்ணிடுவர். தமிழ்நாட்டில் தமிழுக்கோ, தமிழனுக்கோ, தமிழ் உணர்வுக்கோ மதிப்பு மங்கிப் போய்விட்டது.

நாங்க ரெண்டு பேரும் போறோம். சரி சாப்பிட்டுகிட்டு வர்லாம் அப்படின்னு ஓ.எம்.குருப் கூட்டிக்கிட்டு போறார். அந்த ஹோட்டல் அவ்வளவு பெரிசா இருக்கிறது. பெரிய ஹோட்டல். நாங்க போயிருக்கிறோம். இவரைப் பார்த்தவுடனே, கல்லூரி மாணவர்கள் இவரைக் கண்டால் எப்படி எழுந்து நிற்பார்களோ அப்படி அவ்வளவு பேரும் கிழவர்கள் முதல் குழந்தைகள் வரை அப்படியே (எந்திரிச்சி) ஒரு சத்தமும் இல்லாமல் எழுந்து நிற்கிறார்கள். ஒரு நிமிடம் இவர் போய் உட்காருங்க என்று கையை காட்டியவுடன் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டாங்க. நாங்க உட்கார்ந்து சாப்பிட்டோம். ஏன் கேரளம் உலகத்துக்கு தலைமை தாங்குகிறது? ஏன் கேரளம் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் மற்ற நாடுகளை விட வித்தியாசமாக இருக்கிறது? அங்கே நிஜமான மனிதர்கள் வாழ்கிறார்கள். ஆச்சரியமாக இருந்தது. இந்த உணர்வுகள் நம்மிடையில் எப்படிப் போய்விட்டது.

இந்தக் கரிசல் எழுதி முடித்து வெளியிடும்போது எனக்கு அவ்வளவு சிரமம் ஏற்பட்டது. ஆனால் உலகிற்கு நான் முதலில் அறிமுகமாகியது என்னுடைய ஊற்றில் மலர்ந்தது என்ற குருநாவல் மூலமாகத் தான். அதை 72-ல் எழுதினேன். கரிசல் நாவல் எழுதி முடித்த பிறகுதான் குறுநாவல் எழுதத்தொடங்கினேன். ஆனால் முதலில் குருநாவல் வெளி வந்ததனால் நான் அந்தக் குறுநாவல் மூலம் அறியப்பட்டேன்.

அந்த குறுநாவல் எழுதியதால் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. பல நண்பர்கள் அந்தக் கண்ணாடி ஊற்று எங்கிருக்கிறது? என்று ஊருக்குத் தேடி வந்து விட்டனர். எங்க ஊரிலிருந்து 2 கி.மீ. தூரத்துக்கு பஸ்லபோய் அந்தக் கண்ணாடி ஊற்றைப் பல நண்பர்கள் பார்த்தார்கள். எனக்கு எவ்வளவு சந்தோஷங்கிறீங்க. கண்ணாடி ஊற்றைப் பார்த்த சந்தோஷம் என்பதை விட நானே எழுதிய கண்ணாடி ஊற்றைப் பார்த்தார்கள் என்பது தான் சந்தோஷம். எல்லாவற்றுக்குள்ளும் 'நான்' இருக்கிறேன். இந்த மாதிரியாக ஆரம்பத்தில கவிஞனாக இருந்து, பிறகு நாவல் எழுதி, அதன் பிறகு சிறுகதை எழுதி, என்னுடைய வாழ்க்கை படிப்படியாக வளர்ந்தது. வானமாமலை அவர்களும் ஜீவா அவர்களும் என்னை உருவாக்கியவர்கள் என்று சொன்னேன். இந்த உருவாக்கத்தில்

என்னுடைய இலக்கிய பார்வை பிறந்தது. என்ன பார்வை பிறந்தது? நான் நிச்சயமாக நம்புகிறேன். மனித குலம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. மனித குலம் நேற்றிலிருந்து இன்றுவரை முன்னேறிக்கொண்டிருக்கிறது. இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கிப் போய் கொண்டிருக்கிறது. அது மிருதனத்திலிருந்து இறையாமையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அதாவது மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கையைத் தாண்டி ஒரு தெய்வீக வாழ்க்கையை நோக்கி. தெய்வீகம் என்றால் மேலே அல்ல. மனிதன் எப்பொழுது முழு மனிதனாக மாறுகிறானோ அது தெய்வீகம் என்று கருதுகிறவன் நான். அந்த மாதிரியான பரிணாமத்தில் இருக்கிறது. இந்த பரிணாமம் காலப் போக்கில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை முழுக்க முழுக்க நம்புகின்ற எழுத்தாளனாக நான் இருக்கிறேன். இதுதான் என்னுடைய இலக்கிய அடித்தளம்.

அப்ப(ம்) வரலாற்றில், இன்றிருக்கின்ற வரலாற்றை நாளையாக நகர்த்துகின்ற சக்தி ஒன்று நமக்கு வெளியே இல்லை. நமக்குள்ளேயே இருக்கிறது. ஒரு சமூகத்துக்குள்ளே, அந்த சமூகத்தை இயக்கி, அந்த சமூகத்தை நாளைய சமூகமாக நகர்த்துகின்ற ஒரு மாபெரும் சக்தி இருந்து கொண்டிருக்கின்றது. நாளை சமூகத்தை உருவாக்குவதற்கு வெளிப்படுவது இந்த சக்திதான் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன். ஒரு தென்னை மரம் பேசாமல் இருக்கிறது. ஒரு மாசம் கழிச்சுப் பார்த்தீங்கன்னா, ஒரு பூ வந்திருக்கிறது; ரெண்டு ஓலை வந்து விடுகிறது; தேங்காய் வந்துவிடுகிறது; எங்கிருந்து வந்தது? பூவும் காயும் ஓலையும் குருத்துமாக? ஏதோ ஒரு மாய சக்தி அந்தத் தென்னை மரத்துக்குள்ளே இருந்து பிரபஞ்ச (வியாபகம்) ஞாபகம் பெற்று வெளியே வருகிறது. இந்த மாதிரி நேற்றிருந்த மனிதரிலிருந்து இன்றைய மனிதனாக, இன்றைய மனிதனிலிருந்து நாளைய மனிதனாக, மனிதன் பரிமாணம் பெறுவதற்கு சமூகத்திற்குள்ளே ஒரு மாபெரும் சக்தி இருக்கிறது என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த சக்தியைத்தான் நான் 'எதார்த்தம்' என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த எதார்த்தம் ஒவ்வொரு காலகட்டத்திலும் வடிவத்திலும் சமூகத்தில் பரிணாமம் பெறுகிறது. தென் மாவட்டங்களிலே இது சாதிய விடுதலையாகப் பரிணாமம் பெறுகிறது. அங்க நடக்கிற எல்லாவற்றையும் ஒப்புக்கொள்கிறேன் என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். ஆனால் அங்க என்ன நடக்கிறது? நான் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த போது ஓர் இடத்தில் மாணவர்களுக்குள்ளேயே பெரிய சாதிய சண்டை. எஸ்.எஸ்.எல்.சி. பாடப்பரீட்சை நடக்க வேண்டும்; நான் ஒரு பக்கம்; அங்குள்ள டி..எஸ்.பி. ஒரு பக்கம்;

ஆர்.டி.ஓ. ஒரு பக்கம்; தினசரி காலையிலே போய் பரீட்சை முடிகிற வரை அங்கேயே இருக்கணும். ஒரு முப்பது போலீசார் சுத்தி இருப்பாங்க; யாரும் கத்திக் கொண்டுப் போகக்கூடாது. பிறகு சாயங்காலம் ஆன உடனே தினசரி நாங்க சமரசம் பேசுவோம். எல்லா சமரசமும் பேசியபோது ஒரு சகோதரன் வந்து என்னிடம் கேட்டான். சமரசம் எல்லாம் பேசறீங்க. நல்லா இருக்குது. இந்தப் பள்ளிக்கூடம் பிறந்து 50 ஆண்டுகள் ஆகிறது. நான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதில் சொல்வீங்களோ? 'கேளுங்க' என்றேன். இந்தக் கொடிக்கம்பம் இருக்கிறதே! இந்தக் கொடிக்கம்பத்தில் வாரத்திற்கு ஒருவர் கொடி. ஏற்றியிருந்தால் 50 ஆண்டுகளுக்கு எத்தனைபேர் கொடி ஏற்றியிருப்பார்கள். எங்களில் ஒருவர் ஒருநாள் கொடி ஏற்றினால் கம்பு வளைந்து விடுமா? கொடி ஏற மாட்டேன் என்று சொல்லிவிடுமா? அல்லது பள்ளிக்கூடம் இடிந்து விடுமா? இத்தனை ஆண்டு ஆகிறதே! எத்தனை பேர் இருக்கிறோம். கிட்டத்தட்ட பாதிப்பேர் இந்த வட்டாரத்தில் இருக்கிறோம். நாங்கள் கொடி ஏற்றினால் கொடி வளைந்து விடுமோ? பதில் சொல்ல முடியவில்லை. இது அடித்தளம். எனவே சாதிய ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில் அந்த உணர்வு அந்த யதார்த்தம் இருக்கிறதே அது சாதீய எழுச்சியாக வெளிவருகிறது.

இன அடக்கு முறை இருக்கின்ற இலங்கையிலே கொடுமையான இலங்கை அதை மாற்றி நாம் பார்க்கிறோம். இலங்கையிலே அது என்னவாக வெளிப்படுகிறது? இன எழுச்சியாக வெளிப்படுகிறது. பெண் அடிமைத்தனம் இருக்கிற இடத்தில் பெண் விடுதலையாக வெளிப்படுகிறது. வர்க்க அடக்குமுறை இருக்கிற இடத்திலே அது வர்க்க எழுச்சியாக வெளிப்படுகிறது. எங்கெல்லாம் அடக்குமுறை இருக்கிறதோ? எங்கெல்லாம் அசம்பாவிதம் இருக்கிறதோ? எங்கெல்லாம் ஆதிக்கம் இருக்கிறதோ? எங்கெல்லாம் தீமை இருக்கிறதோ? அங்கெல்லாம் இந்த யதார்த்தம் தக்க மனிதர்களின் வாயிலாக தக்க சூழல்களில் பொங்கி எழுகிறது. இந்தப் பொங்கி எழுகின்ற எழுச்சியைத்தான் உலகத்திலுள்ள அத்தனை பெரும் எழுத்தளார்கள் படைக்கின்றார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

உங்களுக்குத் தெரியும் வாட் இஸ் நாவல்? என்று. (Novel is an harmonious blending of drama and poetry built upon the life of the people who make the nation). Who make the nation -ன்னா காந்தியும் நேருவும் மட்டுமல்ல. சாதாரணமாகக் கிராமத்திலிருந்து, நேற்றைய கிராமத்தை இன்றைய கிராமமாக மாற்றுவதற்கு ஒருவர் அடிவாங்கிக்

கொண்டிருப்பானே அவனுக்கும் making of nation-ல் பங்கு உண்டு. எனவே இப்படியாக இந்த நாட்டை, இந்தச் சமூகத்தை, இந்த மனித குலத்தை யாரெல்லாம் உருவாக்குவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களையெல்லாம் கருதவேண்டும். ஒரு சின்ன - உதாரணம் சொல்கிறேன். பஸ் போய் கொண்டிருக்கிறது. இரவு பதினொரு மணி; திடீரென்று பஸ் போற வழியில ஒரு பெரியதடி வெட்டிப்போடப்பட்டுள்ளது. பஸ் நின்றுவிட்டது. உள்ளே மூணு பேரு கத்தியைத் தூக்கிட்டு வர்றாங்க. "எல்லாரும் எடுங்க. பெண்களும் தாலியைக் கழற்றுங்க. அதைக் கழற்றுங்க...... ஆ.....ஊ....." என்கிறார்கள். டிரைவர் போட்டுட்டு ஓடியாச்சு. கண்டக்டர் இந்தப் பக்கம் ஓடியாச்சு. எல்லாரும் ஐயையோன்னு எடுத்துக்கொடுக்கின்றனர். அங்கே இந்த 'யதார்த்தம்' ஒருவனைத் தேடுகிறது. அந்த சக்தி இருக்கிறதே "நான்", அது எவன் வழியாக வெளியே வருவேன் என்கிறதோ அதைக் கடவுளுன்னு சொல்லலாம். அது வழியாக "நான்" பொங்குவேன்; அவன் வழியாக "நான்" வெளிப்படுவேன்னு அங்க முட்டுது. எவனோ ஒருத்தன் எழுந்து நின்னு 'என்ன கொல்லுடா! அப்புடா! நான் விடமாட்டேன்டா! என்று அப்படி நிக்கிறான் பார்த்தீங்களா அங்கேதான் அந்தச் சமூக யதார்த்தம் (அவன் வழியாகப்) பொங்குகிறது. சமூக யதார்த்தம் மனிதர்கள் வழியாக, மாமனிதர்கள் வழியாக - மாமனிதர்ன்னா நீங்க உடனே நேரு, டால்ஸ்டாய்ன்னு நினைச்சிட்டுப் போகாதீங்க; மிகச் சாதாரண மனிதர்கள் வழியாக, பொங்குகிறது. ஒரு சின்ன சம்பவம். ஒரு பஸ் கண்டெக்டர் சிடுமூஞ்சி; எவனுக்கும் சில்லறை கொடுக்க மாட்டான். ஏழு ரூபாய் டிக்கெட். பத்து ரூபாய் கொடுத்தால் 'என்னய்யா! கீழ இறங்குய்யா' 'அப்படீன்னு சத்தம் போட்டுக்கிட்டு இருக்கான். நாங்க எல்லாம் கண்டுக்கிடாதது மாதிரி புத்தகம் படிச்சிக்கிட்டே இருக்கிறோம். வேறு என்ன செய்ய முடியும்? நம்மால அவன் மாதிரிப் பேசவும் தெரியாது. அடிக்கவும் தெரியாது. அவன கை ஓங்கி அடிச்சா நம்ம கைதான் வலிக்கும். அவன ஒண்ணும் பண்ணவும் முடியாது. பேசாது இருக்கிறோம். கொஞ்ச நேரம் பார்த்தான் ஒருத்தன். எந்திச்சு நிக்கிறான். "என்னடா நீ நினைச்சுகிட்டா." பட்டிக்காட்டான்; சட்டை சரியா போடல; தலையில துண்டைக்கட்டிக்கிட்டு, "என்னடா நீ நினைச்சிக்கிட்டா. (அவனுக்காக அவன் பேசவில்லை). எவனெல்லாம் வந்திருக்கான். நீ எவன்கிட்டேயும் இரண்டு ரூபாவும் இல்ல...... ஒரு ரூவாயும் இல்ல..... இறங்கு இறங்குன்னு பேசறியே. நீ என்னடா நினைச்சுகிட்டா" அப்படின்னு ஒரு போடு போட்டான். போட்ட உடனேயே கண்டெக்டருக்கு அப்படியே சத்தம் பதுங்கிப்போச்சு. ஒழுங்காக ஆகிவிட்டான். டி.வி-

யில ஒருத்தன காட்டுவான். ஒரு பெண் போய்க் கொண்டிருப்பாள்; பின்னால ஒருத்தன் போவான்; அவனுடைய கோரப்பல்லு பெரிசாக ஆகும்; அவள் உம் என்று முறைச்சுப்பார்ப்பாள்; அவளுக்கு கோரப்பல்லு இன்னம் பெரிசாக ஆகும்; இவன் ஒடுங்கிப் போவான். அத மாதிரி சமூக வாழ்விலே எங்கு எப்பொழுது எந்த ரூபத்தில் இந்த யதார்த்தம் வெளிப்படுகிறதோ அந்த ரூபத்திலே யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கான தைரியம் உள்ளவன் ஒருத்தன் இருக்கிறான் அவன் வெற்றி பெறுவாண்ணு சொல்ல முடியாது; சில சமயம் வெட்டிப்போட்டுடுவாங்க; அவன அடிச்சிருவாங்க; அவனே ஒரு கட்டத்திற்குப் பிறகு மிகவும் பயந்திருவான். இதெல்லாம் இருக்கிறது. ஆனால் இந்த யதார்த்தம் என்கிற மூல சக்தியினுடைய வெளிப்பாடு எந்த மனிதன் வழியாக வெளியாகிறதோ (நம்ம ஊரில ஒரு நூறு பேரு நிற்பான். கோயிலுல பங்கு கொடுத்திருப்பான். கோயிலிலே சாமியாட்டத்தில டங்கு டங்குண்ணு அடிப்பான். எவனோ ஒருத்தன், இரண்டு பேருதான் சாமியாடுவான். நாமெல்லாம் சாமியாட மாட்டோம். நமக்கு ஒரு மாதிரியாத்தான் வரும். ஆனால் சாமியாட மாட்டோம். இந்த மாதிரியாக) இந்த சமூகத்திலே யதார்த்தம் யார் வழியாகப் பொங்குகிறதோ அவர்களே யதார்த்தவாதிகள். அவர்களைப் படைக்கின்றவனே யதார்த்தவாதி. அப்படிப் பார்க்கின்ற போது தான் நாங்களெல்லாம் யதார்த்த இலக்கியவாதிகள். யதார்த்தவாதி என்கிறவன் உலக மனித குலத்தின் வளர்ச்சியை, உலகத்து மனித குலத்தினுடைய நீட்சியை நேற்றிலிருந்து இன்று, இன்றிலிருந்து நாளையாக மாறிப்போகின்ற அந்த மாற்றத்தைப் படைக்கின்றவன். அந்தப் போக்கைத்தான் கரிசலில் நான் படைத்தது. அந்த நிலமீட்சி போராட்டத்தினுடைய வீச்சு அன்று மாபெரும் மனிதர்களாக இருந்தவர்களை அந்த வீரைய்யன் அவனிவன் எல்லாம் தான் நான் படைச்சிருந்தேன். அதன் பிறகு பல இலக்கியங்களை நான் படைத்திருக்கிறேன். பல சிறுகதைகளைப் படைத்திருக்கிறேன். பல நாவல்களைப் படைத்திருக்கிறேன்.

இரண்டாவதாக நான் சொல்லத் தகுந்ததாக நினைத்துக் கொள்வது **புதிய தரிசனங்கள்.** 1973-74-75-76 ஆகிய ஆண்டுகளில் இந்த தேசத்திலே முக்கிய மாறுதல் வரப்போகுதுன்னு எல்லோரும் கருதினோம். சிலர் அது நன்மைக்காக வரப்போகிறது என என்னைப் போல அப்பாவித்தனமாகக் கருதினோம். இரண்டு விதமான கருத்துக்கள் இருந்தன. சிலர் இந்திரா காந்தியை (எமர்ஜென்ஸியை) ஆதரித்தார்கள். சோஷலிஸ சொர்க்கலோகம் வரப்போகிறதுன்னு நானெல்லாம் என் பிள்ளைகளிட்ட சொல்லுவேன். என் வீட்டுக்காரி

ஓயாமல் சண்டைக்கு வருவா. என்ன நீங்க இப்படியே அலையிறீங்களே! அரசியல் அரசியல்ண்ணுட்டு. “ஏய்! இந்திராகாந்தி, சோஷலிஸத்தைக் கொண்டுகிட்டு வரப்போறாங்க. நம்ம பிள்ளைகளுக்கெல்லாம் சீதனம் தேவையில்ல, அப்ப சீதனமேயிருக்காது, ரஷ்யா மாதிரி ஆயிடும்; அதுக்கப்புறம் நமக்கு எதுக்கப்பான்னு” நான் சொல்லுவேன். அதுக்கு அவ ‘உன்ன மாதிரி முட்டாள் உலகத்தில் உண்டான்னு’ சொல்லிட்டு போவா. ஆனால் நான் நம்பினேன். ஏதோ ஒரு நம்பிக்கை. நிறைய பேர் நம்பவில்லை. இந்திராகாந்தி இந்த தேசத்தைக் குட்டிசுவராக்கப் போறாங்கண்ணு சொன்னாங்க. அந்தக் கால கட்டத்திலே ஒரு பிரளயத்தின் ஊடாக பலர் அலைந்தோம்.

இலக்கியவாதி என்பவன் நேற்றையும் நாளையையும் பற்றி இன்றில் சிந்திக்கிறவன். நேற்றும் நாளையும் பல தளங்களிலே இன்றில் சந்திக்கின்றன. இன்று சந்திக்கின்ற இந்த சந்திப்பின் இந்த மோதலின் நடுமையத்தில்தான் இலக்கியவாதி இருக்கிறான். அந்த நடுமையத்தில் இல்லாதவன் இலக்கியவாதியாக இருக்க முடியாது. இப்போ மீரானுடைய கதையை எடுத்துக்கொண்டால் இஸ்லாமிய சமுதாயம் நேற்றும் நாளையும் இன்றில் சந்தித்துக் கொள்கின்றன. இந்த நேற்றும் நாளையும் இன்றில் சந்தித்துக் கொள்ளும் பொழுது நேற்று எவ்வளவு கொடூரமாக முகம் காட்டுகிறது என்பதுதான் அவருடைய கதை. அதனால் அவர் பட்டபாடு சொல்ல முடியாத பாடு; எனக்கு நன்றாகத் தெரியும்; நேற்றும், நாளையும் சந்திக்கின்ற அந்த சந்திப்பிலேயே இலக்கியவாதி மையம் கொண்டு நேற்றையும், நாளையையும் வரலாற்று நோக்கில் பார்த்து, வரலாறு எந்தப்பக்கம் செல்கிறது என்பதையும் உணர்ந்து ஆனாலும் சத்தியம், உண்மை, நியாயம் எங்கே நிற்கிறது என்பதையும் பாத்து, இரண்டு பக்கமும் பார்க்க வேண்டியிருக்கின்றது. ஒன்று வரலாறு எந்தப்பக்கம் நிற்கிறது? இரண்டு சத்தியம் இங்கு என்ன நிலை எடுக்கிறது? சத்தியத்தை யார் மதிக்கிறார்கள். யார் பழிக்கிறார்கள். இந்த இரண்டு பார்வையையும் பார்த்து இதில் தன்னுடைய பார்வை யார் பக்கம் இருக்கிறது என்று எவன் சொல்லுகிறானோ? அவன் யதார்த்த இலக்கியவாதி என்று நான் நம்புகிறேன். அந்த அவசர நிலைக்காலத்திலே நான் நம்பினேன். சர்வாதிகாரத்தின் மூலமாக உலகத்திலே சுபிட்சம் வரும் என்று. ஆனால் சர்வாதிகாரம் சர்வாதிகாரத்தைத்தான் தரும், எந்தவிதமான சுபிட்சத்தையும் தராது என்பது இரண்டு ஆண்டுகளில் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இதுதான் என்னுடைய புதிய தரிசனங்கள். எனவே, இரண்டாவது நாவல் எழுதும்பொழுது அங்கே ஒரு பாத்திரம், வீட்சியடைந்த

பாத்திரமாக வருகிறது. யதார்த்தவாதி, எப்போதும் வெற்றி பெறுகின்ற போராடுகின்ற பாத்திரமாக எழுத வேண்டுமென்பது இல்லை. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலே காலத்தின் நெருக்கடியிலே சில நம்பிக்கைகள் சோர்ந்து வீழ்ந்து வீழ்ச்சியடையும்போது அந்த வீழ்ச்சியும் மாபெரும் ஒரு இலக்கியமாக, ஒரு காவியமாக மாறிவிடுகின்றது. அதைத்தான் புதிய தரிசனங்களிலே நான் சொன்னேன்.

புதிய தரிசனங்கள் எழுதுவதற்கு எனக்கு 14 ஆண்டுகள் பிடித்தன; நாவல் எழுதுவது என்பது மிகக்கொடுமையான விஷயம்; எனக்கும் என் மனைவிக்கும், கடுமையான சண்டை என்று வைத்துக் கொள்ளுங்கள். நாயே பேயே என்று நான் திட்ட, அவ திட்ட நான் எறிய அவ எறிய, கடுமையாக இருக்கிறது. உச்சக்கட்டத்தில் போராட்டம் நடந்துக்கொண்டிருக்கும் பொழுது சிவத்தம்பி அவர்கள் வந்து 'பெல்லை' அடித்து உற்றுப் பார்க்கிறாா். உடனடியாக எங்கள் கோரைப்பற்களை எல்லாம் உள்ளே அடக்கி வைத்து விட்டு, 'வாங்க...... வாங்க' என்று வரவேற்று காப்பி கொடுக்கிறோம்; அதச் செய்யிறோம்; இதச் செய்யிறோம். எல்லாம் முடிந்து ஒரு மணிநேரம் கழித்து நாங்க ரெண்டு பேரும் அருமையாகப் பாசாங்கு செய்து அவரை அனுப்பிவிட்டோம். திரும்பச் சண்ட போட முடியுமா? போட்ட சண்டை? அதன் பிறகு நீங்கள் அந்தப் பழைய கோர ரூபத்தை எடுக்கவே முடியாது. இலக்கியவாதிகளுக்கும் இதே நிலைதான். நாலுநாள் நீங்கள் எழுதவில்லை என்றால், உங்களுக்குள்ளே பொங்கிக் கொண்டிருக்கிறதே, அந்த இலக்கிய வேகமிருக்கிறதே அந்த யதார்த்தம் இருக்கிறதே - அது மங்கிவிடும். மங்கியபிறகு திரும்ப அந்த பாத்திரங்கள் உங்களுடன் பேசாது. மனதில் இருக்கும். எழுதமுடியாது. எல்லாருக்கும் மனதில் நாவல் இருக்கும். எல்லாருக்கும் இருக்கிறது. இத எழுதலாம்.. அத எழுதலாமுண்ணு. ஏன் எழுத முடியவில்லை. அதற்கான எழுச்சி வேண்டும். அதற்கான ஒரு பொங்குதல் வேண்டும். நிறைய செய்திகள் இருக்கும். பேனா எடுத்தா கொட்டாவி வரும். அதனால் பதினான்கு ஆண்டுகள் இதே உணர்ச்சி பேனா எடுத்தவுடனேயே எழுதவேண்டும். என்ன பாடுண்ணு நினைக்கிறீங்க! நாவல் எழுதியவர்களுக்குத்தான் இந்தக் கொடுமை தெரியும். ரெண்டு நாள் மூணுநாள் எழுதலைண்ணா அந்தப் பாத்திரங்கள் நாம் வந்தவுடனே 'நீ யாருப்பா? உனக்கும் எனக்கும் என்ன 'உறவு'? என்று இப்படி பேசும். எனவே பல சந்தர்ப்பங்களில் நான் எழுதுகிறேன். அந்தக் காலத்திலெல்லாம் நான் வெளிநாடுகளுக்குக் கூட போயிருக்கிறேன். போகும்போது இந்த நாவலையும் தூக்கிக்கிட்டுப் போவேன். காலையிலே ஒரு

மணி நேரமாவது நான் அந்த நாவலோடு பேசி - என்னிடம் ஒரு தளத்தில் மூளை பூரா நாவல் இருக்காது - ஏதோ ஒரு தளத்தில் நாவல் வேலை செய்யுமே, அந்த உணர்வு மங்காமல் பதினான்கு ஆண்டுகள் அப்படியே சுடர்வீசி வைக்கும்படியாகப் பார்த்துக் கொண்டிருப்பது இருக்கிறதே இது நாவலாசிரியர்களுக்கான ஒரு மிகப் பெரிய கஷ்டம். மூணு தடவை கிழிச்சி எறிஞ்சிருக்கேன்.

நாவல் எழுதிக்கிட்டே இருந்தேன். திடீர்னு எங்க ஊருல சாதிச் சண்டை வந்திருச்சு. ஜீவா ஒரு சாதியினுடைய ஒரு தலைவராகச் சித்தரிக்கப்பட்டார். அவருக்கு எதிராக நேசமணி இன்னொரு சாதியினுடைய தலைவராகச் சித்தரிக்கப்பட்டு பஸ்ஸுக்குப் பேர் வைப்பதிலே ஜீவா பெயரா நேசமணி பெயரா என சண்டை வந்திடிச்சு. சண்டையிலே நமக்கு அபிப்பிராய வித்தியாசமே கிடையாது. சண்டை போடுங்கப்பாண்ணு விட்டிடலாம். ஆனால் என்ன ஆயிற்று? இந்த ஜீவா என்பவர் யார்? நோட்டீஸ் கூட ஒட்டிபோட்டான். யாரு இந்த ஜீவானந்தம் அப்படின்னு அடிச்சிட்டான். அப்போதுதான் எனக்கு அடப்பாவிங்களா, நீங்க ஜாதிச் சண்டைபோடுங்க....... நல்லாத்தான் இருக்குது...... பரவாயில்ல, ஆனால் ஜீவா யாருண்ணு நீ கேட்கலாமா? உடனே தான் நான் இந்தப் புதிய தரிசனங்களை எழுதிக் கொண்டிருந்தவன் புதிய தரிசனமும் மண்ணாங்கட்டி தரிசனமுந்தான் என்றொதுக்கிவிட்டு ஜீவா என்றொரு மானுடன் எழுதினேன். ஜீவா ஒரு மானுடன் இல்லையா? எம்.எல்.ஏ.வாக இருக்காரு; தேசம் அறிந்த தலைவர். காமராசர் அவர பார்க்கப் போறாரு. 'வாப்பா நேரமாச்சு, சீக்கிரம் போய் மீட்டிங்கை தொடங்கணும்' என்கிறார். "காமராஜ் கொஞ்சம் பொறுத்துக்குங்க. அவசரப்படாதீங்க". "ஏம்பா அவசரப்படாதீங்கண்ணு சொல்லுற". "வேட்டி காயல. இப்பத்தான் வெளியில காயப்போட்டிருக்கேன்" என்கிறார். இப்படி ஒரு எளிய மனிதன். காந்திக்கு இந்த நிலைமை உண்டுண்ணு நினைக்கிறீங்களா? ஒரு போதும் காந்தி இது போன்றதொரு வறுமைக்கு உள்ளானதில்லை. அவர் எளிமையாக வாழ்ந்தாரே ஒழிய வறுமை அவரைத் தொட்டதில்லை.

இங்கே ஒரு கூட்டம் நடந்தது. கூட்டம் மத்தியானம் இரண்டு மணிக்கு வைத்துவிட்டார்கள். அவர் வந்து பேசவேண்டும். ஒரு முக்கியமான பிரச்சனை. வந்துகொண்டே இருக்கிறார்; கூட்டத்தின் தலைவர் அவர். வெயிலிலே நடந்து வந்து கொண்டிருப்பதைப் பார்த்து, வெளியிலே கூப்பிட்டு கோபத்திலே "என்ன ஜீவா (வெயில் கொட்டுது) நீங்களெல்லாம் மனுசனா?" "ஏம்பா அப்படி கேக்கிற?" "ஒரு ஆட்டோ எடுத்துக்கிட்டு வந்திருக்க வேண்டாமா? இந்த

நேரத்தில் இப்படியா வருகிறது?" "ஏம்பா! ஆட்டோவுக்குக் காசு இருக்குமுண்ணா, நான் பத்துநாள் பஸ்ஸில வருவேனே!" எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். நமக்குத் தெரிந்த வாழ்க்கையில் இவ்வளவு பெரிய மனிதனை தமிழகம் சந்தித்ததில்லை. 'உனக்கு ஒரு வீடு கட்டித் தரப்போகிறேன்னு' சொன்னார் காமராஜர். 'நல்லா கட்டித்தா. நான் தங்கியிருக்கும் தாம்பரம் குடிசையிலே என்னைச் சுற்றி குடிசைகள் இருக்கின்றன. 1599 குடிசைகளும் வீடு ஆனவுடனேயே எனக்கும் வீடு கட்டித்தா". எந்த மனிதனுக்கு இந்தப்புத்தி வரும்? யாருக்காவது இந்த மனம் வருமா? எப்பேர்ப்பட்டவர் அந்த அற்புதமான மனிதருடைய தாக்கம் எங்கள் மீதில் இருந்தது. அந்த மாதிரியான ஒரு பெரிய மனிதனை இழிவு படுத்தும்போது எனக்குக் கோபம் வந்தது. ஜீவா ஒரு மானுடன் என்று எழுதினேன்.

நாலு மாதந்தான் அதை எழுதினேன். திரும்பிப் பார்க்கும் பொழுது நாவல் என்னிடம் முறைத்துக் கொண்டது. "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடிவிடும்". இது இலக்கியவாதிக்கும் உண்மைதான். 'நீ யாருப்பா? பாத்திரங்கள் என்னைக் கண்டு கொள்ளவே இல்லை. அத்தனை(யை)யும் கிழித்துப்போட்டேன். நாவல் போதும். வேறு நாவல் எழுதலாமுண்ணு திரும்பவும் எழுதினேன். திரும்ப எழுதி முடித்து வரும்பொழுது வேறு ஒரு புத்தகம் எழுதவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது.

மூன்றாவது தடவை எழுதி, ஏழுமுறை திருத்தங்கள் செய்தாகிவிட்டது. சிலர் சொல்லுகிறார்கள். நாவலை ஒரு முறைதான் எழுதவேண்டுமென்று; அதன்பிறகு தொடுவதே இல்லை என்று. நான் திரும்பத் திரும்பத் திருத்துவேன். ஏழுமுறை திருத்திய பிறகுதான் புதிய தரிசனங்கள் வந்தது. ஓர் எழுத்துக்கூட வித்தியாசமாக இருக்குமானால் எனக்குப் பிடிக்காது. திரும்பவும் அதை மாற்றுவதற்கான மனோபாவம் வந்துவிடும். அந்த நாவல் எனக்கு 'சாகித்திய அகாடமி' பரிசைப் பெற்றுத் தந்த ஒரு நாவலாக வந்தது. தமிழகத்திலே மிகச் சிறந்த வரவேற்பு பெற்றது. ஒரு நாவல் வந்த ஆறு மாதத்திற்குள்ளாக அதைப்பற்றிய ஒரு விமர்சன நூல் வெளிவந்தது வேறு நாவல்களுக்கு இல்லை என எனக்குச் சொல்லப்பட்டது. அது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அந்த நாவல் எத்தனை மாநிலங்களுக்குத் தெரிந்திருக்கிறது? யாருக்கு அந்த நாவலைப்பற்றித் தெரியும்? தமிழகத்திலும் எத்தனை பேருக்குத் தெரியும்? இவ்வளவு பெரிய நாவலா? யாரு படிக்கிறதப்பா!

தமிழக அரசு இது மாதிரியான சிறந்த நாவலைச் சுருக்கியாவது தரலாம். தமிழக அரசில் ஒரு துறை இருக்கிறது. தமிழ் வளர்ச்சித் துறை. சங்கத்தமிழ் வளர்க்கிறது மட்டுந்தானா அந்தத் துறையின் வேலை? அல்லது வருஷா வருஷம் நாலுபேருக்குப் பரிசு கொடுக்கிறதுதான் அந்தத் துறையா? மிகச் சிறந்த சமகால படைப்பையெல்லாம் சுருக்கியாவது தமிழனுக்கு மிகக் குறைந்த விலையில் அறிமுகப்படுத்துவது அதன் கடமையில்லையா? யாரும் கண்டு கொள்ளவில்லை. யாரிடம் போய்ச் சொல்லுவது. சாகித்திய அகாடமிக்காரங்க உடனடியாக எங்களிடம் ஒரு அக்ரிமெண்ட் போட்டு வாங்கினாங்க. அது என்ன ஆச்சுன்னே தெரியவில்லை. அதை என்ன செய்யனும்னு எனக்குத் தெரியவில்லை. தமிழகத்திலே இலக்கியவாதிகளுடைய படைப்புகள் புத்தக வெளியீட்டாளர் களுடைய கருணையில் தான் இருக்கிறது. அரசாங்க வேலையில் இருக்கிற எங்களுக்குச் சிக்கல் வந்துவிடும்; வெளியிட்டால் இதற்கு வரவென்ன செலவென்ன பிடிடா! என்பான். பெரிய சிக்கல், அரசு வேலையில் இருப்பவர்களுக்கு கத்திமேல் நடப்பது போன்ற சிக்கல். தமிழக அரசு இதுமாதிரியான சிறந்த படைப்புக்களைக் குறைந்த விலையில் மக்களிடம் கொண்டு போவதற்குக் கடமையுள்ளது. அதை அது செய்யவில்லை. இது எங்களைப் போன்றவர்களுக்கு மிகப் பெரிய இழப்பு. ஒரு விளையாட்டு போட்டியில் இந்தியாவுக்காகப் போய் பரிசு வாங்கிக் கொண்டு வந்துருவான். உடனே அவனுக்கு இங்கு கிரீடம் வைக்கிறாங்க. உனக்கு இன்னா ஏழு கிரவுண்ட் நிலம் என்கிறாங்க. உனக்கு 3 கார் என்கிறாங்க. அது இது என்கிறாங்க. அடப்பாவிங்களா இலக்கியம் என்பது கலைகளின் சிகரமல்லவா? கலைகளுடைய அரசியல்லவா? அதுதான் மனிதனின் ஆன்மாவைத் தட்டி எழுப்புகிறது! அதுதானே மனித குலத்துக்கு வழிகாட்டுகின்றது. வேறு எந்தக் கலையாலும் செய்ய முடியாத அற்புதங்களைச் செய்கின்றது. இல்லையா?

அமுதூறும், அமுதூற்றில் ஒத்த இதழ்களும், நிலவு ஊறித் ததும்பும் விழிகளும், என்று பாடுவானே இரண்டுவரி. இந்த இரண்டுவரியை என்னதிலய்யா காட்டுவ. இந்த 2 வரி போதுமே, தமிழன் நாள் முழுவதும் ரசிக்கிறதுக்கு. அவன் காலம் பூராவும். இந்த 2 வரி அவனுக்கு சந்தோஷத்தைக் காட்டும். இலக்கியத்தில் இருக்கக்கூடிய ஒரு மனிதனுடைய சஞ்சாரத்துக்கான பரப்புகள் வேறு எதில இருக்கமுடியும்? இலக்கியம் சரியாக வளர்க்கப்படவில்லை என்றால் அந்தச் சமூகம் அழியும். அந்தச் சமூகம் சுருங்கிப் போகும். கேரளம் இன்று இவ்வளவு கம்பீரமாக இருக்கிறதென்றால்

இலக்கியத்துக்கு அங்கு அப்படிப்பட்ட இடம் இருக்கிறது. தமிழகம் இன்று சுருங்கிக் கொண்டிருக்கிறது. ஏன் என்றால் இலக்கியத்தை இங்கு யாரும் கண்டு கொள்வதில்லை. ஒரு சினிமாக்காரன் - செந்தில் - என்று வைத்துக் கொள்ளுவோம். நான் யாரையும் குறை சொல்லவில்லை. மிக அருமையான மனிதர்கள்; சக கலைஞர்கள். அவர்களுக்குப் பரிசு கொடுக்கும் போது 2 லட்சம் கொடுக்கறீயே! பாராட்டுகிறோம். மதிக்கிறோம். இவனும் கலைஞன் தானே! தோப்பில் மீரானுக்கும் அதுமாதிரியான எங்களுக்கும் கொடுக்கலாமே? - நாங்கள் சோஷலிசவாதிகள்; எல்லா கலைஞர்களும் இங்கு சமமானவர்கள். எந்தக் கலைஞனாக இருந்தாலும், ஆண்டுக்கு நாங்க, ஒவ்வொரு கலைஞனுக்கும் ஒரு லட்சம் கொடுப்போம். கொடுத்திட்டுப் போயேன். அவனுக்கு 2 லட்சம், இவனுக்கு 2000 இவனுக்கு 1100 ரூபாய். இது என்ன நியாயமப்பா? பணத்துக்காக நான் சொல்லவில்லை. மேடையிலே எங்கள் மரியாதையை நீ இப்படித்தானே அளக்கிறாய்! இது நியாயமா? கலைஞர்களை ஒரு கலைஞர் ஆட்சி கண்டிப்பாகக் கவனித்து, முன்னோடியாகக் காரியத்தைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் - கலையும் இலக்கியமும் சமமாக மதிக்கப்படவில்லையென்றால் இலக்கியம் அழியுமானால் சமூகச் சிந்தனை அழியும். எந்த நாடாக இருந்தாலும் சரி.

சமீபத்தில் பிரான்சில் கருத்துக்கணிப்பு கொடுத்தார்கள். நம்ம நாட்ட மாதிரியா, 1001 டி.வி.சேனலிலும் புதுப்புது கதைகள் வந்திருக்கு. ஆனால் அந்த நாட்டில் எது ஆட்சி செய்கிறது என்று பார்த்தபோது, புத்தகம் - இவ்வளவு வசதி வந்த பிறகும் இன்டெர்நெட் வந்தபிறகும், பட்டன்போட்டா எல்லாம் வந்தபிறகும் புத்தகங்கள்தான் இன்னும் ஆட்சி செய்கின்றன - என்பதை அவர்கள் உணர்ந்திருக் கிறார்கள். நாம் உணர வேண்டாமா? இன்றைக்குப் பத்திரிக்கையிலிருந்து யாரெல்லாம் வந்திருக்கா என்று எனக்கு தெரியாது. சில சமயம் பிராந்து மாதிரி சொல்லி முதுகில் ரொம்ப அடிவாங்கி இருக்கேன். தினமணியை விட்டால் தமிழ் இலக்கியவாதிக்கு வேறு கதி என்ன. தயவுசெய்து மற்ற பத்திரிக்கைகாரர்கள் தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இங்கு எங்காவது இருப்பீங்க. இதுமாதிரி ஒரு தடவை சொல்ல, ‘பொன்னீலன் மாணவர்களை எல்லாம் விட்டு அவர் வீட்டு வேலை வாங்குகிறார்’ என்று பேப்பர்ல போட்டுட்டான். பெரிய தப்பா போச்சு எனக்கு.

இன்று தினமணியைத் தவிர வேறு கதி இல்லை இலக்கியவாதிக்கு. விளையாட்டு வீரன் பற்றி போடுறீங்க. சினிமாக்காரன் பற்றி போடுறீங்க. நான் வேண்டாம்ன்னு சொல்லல. ஒரு

பொம்பளையை கண்ணடிச்சார் என்று தப்பாவது எழுதுங்களேன். இலக்கியவாதிகள் பேசப்படட்டும். இலக்கியவாதி கண்ணடிக்க மாட்டார் என்பது நல்லா தெரியும். அருமையான தோழர்களுடைய வாழ்க்கை ரொம்ப சரியான வாழ்க்கைதான். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் கலைகள் எல்லாம் சமமாகப் பேசப்படவேண்டும். அது பத்திரிக்கைகளால் கவனிக்கப்படாமல் இருந்தாலும் சரி. அரசு எல்லாரையும் சமமாகக் கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்கப்படும் பொழுதுதான், பிறகு, படிப்படியாக எல்லாவித இலக்கியங்களும் எல்லாவித கலைகளும் சமமாக கவனிக்கப்படும். இதற்கான முயற்சி இந்தக்காலத்தில் தொடங்கப்பட வேண்டாமா? வேறு எந்தக் காலத்தில் தொடங்குவார்கள், மிகச் சிறந்தவர் கலைஞர். எங்களவர். ஒரு எழுத்தாளர். ஒரு கவிஞர். இவர் முதல்வராக இருக்கும் போது செய்யவில்லை என்றால் எப்போது முடியும்?

தமிழக அரசு பரிசளித்தால் பத்தாயிரம் ரூபாய். என் படைப்பு ஒன்று 6-வது பதிப்பு வந்து, மூன்று மாதத்திற்குள் விற்று போயிற்று. அவ்வளவுக்கு தமிழ் மக்கள் அதை நேசித்து வாங்குகின்றார்கள். N.B.T. அதை 14 மொழிகளில் போடுவதாக 18 ஆண்டுகளுக்கு முன்பு என்னோடு ஒரு அக்ரிமெண்ட். பிறகு ரொம்ப காலம் மறந்துபோய்விட்டது. திரும்ப அதற்கு கொஞ்சம் கடிதம் எல்லாம் போட்டு, செய்தபிறகு, அதற்குப் புதியதாய் ரகுநாதன் அவர்கள் முன்னுரை எல்லாம் எழுதிக்கொடுத்து இரண்டு ஆண்டு ஆகிவிட்டது. போடவேமாட்டேன் என்கிறார்களே. இது என்ன மந்திரம் என்று தெரியவில்லை. இலக்கியவாதிகளுக்காக நிறுவப்பட்ட N.B.T. இப்படி எங்களைப் புறக்கணிக்குமானால் இலக்கியவாதிகள் எங்கே போவார்கள்? இலக்கியம் சரியாகப் பேணப்படாவிட்டால் இலக்கிய வாதி செத்துப்போவான். அன்னப்பறவை இருந்ததாகச் சொல்லுகிறார்கள். கவரிமான் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஒன்றையும் காணவில்லையே. இதைப்போல நல்ல இலக்கியங்களைப் பேணுகின்றவர்கள், ரசிக்கின்றவர்கள், படிக்கின்றவர்கள், ஆதரிக்கின்றவர்கள் இல்லையென்றால் நல்ல இலக்கியவாதிகள் ஒரு காலத்தில் செத்துப்போவார்கள். அதன்பிறகு வியாபார இலக்கியம் தான் மிச்சம் இருக்கும். தமிழனுடைய வாழ்க்கை சூன்யமாகிவிடும். இதை நான் வருத்தத்தோடு சொல்கிறேன். எனக்கு மட்டும் சொல்லவில்லை. இலக்கியவாதிகளை - சில சமயங்களில் நான் ஒரு சாதாரண இலக்கியவாதியாக இருக்கலாம் - நல்ல இலக்கியவாதிகளையாவது பேணுங்கள். இந்த வகையில் பார்த்தால் இலங்கையில் என் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் கொடுக்கப்படுகிற மரியாதை இங்கு நமக்கில்லை.

இலங்கையிலே நான் ஒரு கூட்டத்தில் பேசப்போனேன். பெரிய கூட்டம். கடைசி நாள் திரிகோணமலை முழுவதும் இருந்து - 3 தமிழர்கள் வந்திருக்கிறார்கள் என்று கூறியவுடனே எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களையும் கொண்டு வந்து, 3 பிரிவாகப் பிரித்து, ஆட்டுமந்தைபோல் அடைத்துவிட்டார்கள். நான் ஓர் எட்டாயிரம், பத்தாயிரம் மாணவர்களிடம் பேசுகிறேன்; மகேந்திரன் அதுபோல் பேசுகிறார்; வல்லிக்கண்ணன் பேசுகிறார். 3 இடத்தில் பேசுகின்றோம். அரைமணிநேரம் தான் இருக்கிறது. நான் பேசப்போனேன். பேசி முடித்தபிறகு ஓர் ஆசிரியச் சகோதரி 'தவித்துக் கிடக்கின்றவனுக்கு ஒரு கரண்டி தண்ணி தொண்டையில் விட்டுவிட்டு இப்படி ஒடி விட்டால் துரோகம் அல்லவா?" என்று என் பின்னால் ஓடிவந்தே சொன்னார்கள். அந்தக் குரல் இன்றும் என் செவியில் இருக்கிறது. இந்தத் தமிழனுக்கு மட்டும் தமிழ் உணர்வு, தமிழ் மொழி உணர்வு, தமிழ்ப் பண்பாட்டுணர்வு, தமிழ் மேன்மை பற்றிய உணர்வு, செத்துக்கொண்டே போகிறது. நாம் யாரிடம்போய் அழமுடியும். இதை மாற்றுவதற்கான காரியம் ஏதாவது செய்தாக வேண்டும். தமிழ்ப் படைப்பாளிக்குச் சரியான பாதுகாப்பு வேண்டும். நிறைய படைப்பாளிகளுக்குப் புத்தக வெளியீட்டாளர்கள் பணமே கொடுப்பதில்லை. அவுட் ரேட்டில் வாங்கிக்கிறாங்க. பிறகு அவங்க வித்துக்கிறாங்க. சிலர் ஏமாத்திடறாங்க. ஃபர்ஸ்ட் எடிஷன்னு போட்டுருப்பாங்க. அது 6000, 8000 பிரதிகளாகக் கூட வந்திட்டே இருக்கிறது. என் சகோதரர் ஒருவர் போய் கண்டுபிடிச்சிட்டு வந்து 'பாவிங்க இப்படி ஏமாத்தறாங்களே' என்று சொன்னார்கள். உலகிலேயே இப்படி ஏமாற்றப்படுகிற முதல் இனம் இந்த இலக்கியவாதிகள் இனம் தான். நாங்களும் வியாபாரிகள் போலானால் - இலக்கியம் வியாபாரிகளாகப் போனால் - எவ்வளவோ செய்ய முடியும்.

என்னுடைய படைப்புகளில் நான் ரொம்பவும் ஆசையோடு வைத்துக் கொண்டிருப்பது என்னுடைய சமூகத்தைப் பற்றிய - என்னுடைய கிராமத்தைப் பற்றிய - ஒரு படைப்பைத் தான். என்னுடைய மாஸ்டர் பீஸ் என்று அதை வைத்திருக்கிறேன். எழுதும் போது 'அடடே உலகத்திலேயே சிறந்த வரி இதுக்கு மேல இல்லையாடா' அப்படின்னு எழுதுவேன். எழுதி மை உலருவதற்கு முன்னாடியே திரும்பிப் பார்த்தா 'தூ' இவ்வளவுதானா நீ பெரிய ஆர்ப்பாட்டம் பண்ண! இதத்தானா எழுதின. இதுக்கு மேல உனக்கு சக்தி இல்லையா? என்று மனம் கேட்பது எனக்கே சங்கடமாக இருக்கும். திருப்திக்கும் திருப்தியின்மைக்கும் இடையிலே எழுத்தாளன் படுகின்ற பாடு இருக்கின்றதே! எழுதி முடித்துப்பார்க்கும் பொழுது

ஒரு நிமிஷம் பார்த்தா நல்லா இருக்கும், அடுத்த நிமிஷம், 'இதத்தான நீ எழுதின? இவ்வளவுதானா? இதுக்குத்தான ராத்திரியும் பகலுமா இவ்வளவு பொங்கின' அப்படின்னு என் மனசு என்னை கேட்கும். இந்தத் தவிப்பு இருக்கிறதே இதுதான் ஒரு இலக்கியவாதியை முன்னெடுத்துக் கொண்டு செல்கின்ற ஒரு சக்தி என்பதில் எனக்கு மிகப்பெரிய சந்தோஷமா இருக்கும். என்னுடைய கருத்துக்களை நான் திரும்பப் படித்துப் பார்க்கும்பொழுது குறிப்பாக புதிய தரிசனங்களில் பல பகுதிகளைப் படிக்கும்பொழுது இப்பொழுதும் என்னால் அழாமல் இருக்கமுடியவில்லை. ஒரு வாசகன் என்கின்ற நிலையிலேயே என்னுடைய நாவல்களிலும் சிறுகதைகளிலும் நான் என்னையே இழந்து போய்விடுகிற பலவற்றைக் காண்கிறேன். அந்த திருப்தி, அந்த நினைவு என்னைத் திரும்பத் திரும்ப எழுதச் சொல்கிறது. எனக்கு எழுதுகின்ற ஒரு கனவாக இருப்பது என்னுடைய கிராமத்தைப் பற்றிய நாவல். இத ஐந்து தடவை தொடங்கியாச்சு. போனவருஷம் என்னை District Educational Institute-ல Principal-ஆகப் போட்டாங்க. நிறைய ஓய்வு. உடனடியாக மறுபக்கத்தை எழுதத் தொடங்கினேன். ஒரு 3 மாசத்தில C.E.O-வாகப் போட்டாங்க. ஒரு நிமிஷம் கூட மூச்சுவிட முடியாதபடி ஒரு நெருக்கடி.. தினசரி காலையில் நாவல் கேட்கும், 'என்னப்பா மறந்திட்டாயா?' பாரதி பாடுவானே. "வாராய் எந்தன் மணி பொற்காதலி" கவிதை. அது மாதிரியாய் கனவுகள் சிதைந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கனவுகள் மெய்ப்படவேண்டுமென்பது எனது இலட்சியம்.

திரும்பவும் நான் என்னுடைய பழையதிலிருந்து சொல்கிறேன். யதார்த்தவாதியாகத்தான் நான் இருக்கிறேன்.

தமிழ் இலக்கியத்தில் மூன்று மரபுகள் மிக வலுவாக இருக்கின்றன. மரபுகள் என்று சொல்கிறேன். கீழான மரபுகளைப் பற்றி பேச நான் வரவில்லை. நம்முடைய மூலவர்கள் மூன்று பேர் இருக்கின்றார்களே - மகாப்பெரியவர்கள். ஒன்று வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம். இந்த மரபுதான் இன்று கல்கியாகவும் அதன்பிறகு வந்த மிகப்பெரிய மனித நேய எழுத்தாளர்களாகவும் இலட்சியம், சுவை, வாழ்க்கை அனுபவம் ஆகியன கலந்த ஒரு மிகப்பெரிய பிரவாகமாக வளர்ந்துள்ளது. வேதநாயகம் பிள்ளையினுடைய ஒரு மரபு தமிழ் இலக்கியத்துக்குள்ளே ஓடிக்கொண்டே இருக்கிறது. அது ஆயிரம் பூக்களைப் பூக்கிறது. இதுதான் இந்த மரபுதான் தமிழ் மக்களை வலுவாகச் சென்றடைகிறது.

இரண்டாவது மரபு ராஜம் ஐயர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம். அகவய ஆய்வு. மனிதனுடைய உள்ளாய்வு அவனுடைய

வெளியுலகம் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவுக்குப் பெரியது உள் உலகம். சில சமயங்களிலே, சொல்லப்போனால் வெளி உலகத்தைவிடப் பெரியது; விசாலமானது உள்உலகம். இந்த் உள்உலகத்தைப் பற்றிய ஆய்வில் நான் யார்? எங்கிருந்து வருகிறேன்? ஏன் எழுதுகிறேன்? ஏன் சங்கடப்படுகிறேன்? ஏன் சந்தோஷப்படுகிறேன்? என் மூலம் என்ன? எங்கு போகப் போகிறேன்? என்ற கேள்விகளுக்கு எல்லாம் விடை தேடி முட்டி மோதி சமூகத்திற்குள்ளே முரண்படுகின்ற பல பாத்திரங்களைத் தருகின்ற ஒரு அகவயமான மிகப்பிரமாண்டமான ஒழுக்காகப் போய்கொண்டிருக்கிறது.

மூன்றாவது ஒழுக்கு **பத்மாவதி சரித்திரம்.** மாதவையா என்ற அந்த மகாமுனிவன் தந்தது. மனிதனைப் புறவயமாகப் பார்த்தல்; உலகத்தைப் பார்; மனிதனைப் பார்; குடும்பத்தைப் பார்; சமூகத்தைப் பார்; அவனுடைய லாப - நட்டத்தைப் பார்; சமூக மாற்றத்தை எழுது; நேற்றிருந்தவன் இன்று இப்படிப் போகிறான் என்பதை எழுது. இவ்வாறு மூன்றாவதாக ஒரு பிரவாகம் இருக்கிறது. மூன்று பிரவாகமும் வற்றாதவை. தமிழ் இலக்கியம் இருக்கும் வரை இவை உயிரோட்டமாக ஓடிக்கொண்டேயிருக்கும். இந்தப் பிரவாகங்கள் தனித்தன்மையானவை அல்ல. **பிரதாப முதலியார் சரித்திரம்** இப்படித்தான் போகும். **கமலாம்பாள் சரித்திரம்** இப்படித்தான் போகும். **பத்மாவதி சரித்திரம்** இப்படித்தான் போகும். ஒன்று வெகுஜன இலக்கியம். இன்னொன்று அகவய இலக்கியம். இன்னொன்று புறவய இலக்கியம். மூன்றும் தனியாகத்தான் இருக்கும் என்று நீங்களோ நானோ இதற்கு எல்லை கட்டிவிட முடியாது. பிரவாகங்கள் மாறி மாறி இருக்கும்.

நான் சமீபத்தில் ஒரு நாவல் படித்தேன். மதிப்பிற்குரிய சகோதரி, கேரளத்து தங்கச்சி அருந்ததிராய் எழுதிய அந்த **God of Small Things** நாவல். எல்லாரும் சொல்வாங்க அது ஒரு போஸ்ட் மாடர்னிஸ்ட் நாவல்ன்னு. படிச்சுப் பார்த்தா அது போஸ்ட் மாடர்னிஸ்ட் நாவல் அல்ல. அதுல யாரைச் சொல்லுகிறார்கள். கேரளத்தின் கடற்கரையிலே பிறந்த ஒரு இளைஞனான ஒரு புலையனைச் சொல்லுகிறார்கள். அவன் எப்பேர்ப்பட்ட ஒரு மனிதனாக வளர்ந்து வருகிறான் என்று சொல்லுகிறார்கள். அதைப் பொறாமல் - அதைக் கண்டு தாங்கிக் கொள்ளாமலே - அந்த மனிதனை அழிப்பதற்காக எந்தெந்த சக்தி நேரடியாகவும் மறைவாகவும் போலியாகவும் உண்மையாகவும் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்று அந்த நாவல் அற்புதமாகச் சொல்கிறது. அதில் என்ன செய்திருக்கிறார்கள். யதார்த்தம் ஒரு பக்கம்; நவீனத்துவம் இன்னொரு பக்கமுமாக இரண்டும் சமஅளவில் - சமகலவை - சமநிலையில்,

இதுவும் அதுவும். இது பெரியதா - அது பெரியதா என்று சொல்ல முடியாதபடி அதில் ஓர் சர்வாம்ச சமத்துவக் கலவை ஏற்பட்டு, அந்த நாவல் உட்பட்டதாக மாறி விடுகின்றது. அது முழுக்க முழுக்க ஒரு நவீனத்துவ நாவலாக மாறியிருந்தால் ஒரு நூறு பேரு கூட படிக்க முடியாது. முழுக்க முழுக்க யதார்த்த நாவலாக மாறியிருந்தால் இன்றைக்கு உள்ளவங்க யதார்த்தம் செத்துவிட்டது போடா என்றிடுவாங்க. (நிறைய பேர் இப்ப சர்டிபிகேட் வேற கொடுத்து விட்டாங்க 'பொன்னீலன் கதை முடிந்து விட்டது' என்று. நிறைய பேர் சொல்லிட்டாங்க 'யதார்த்தம் செத்துவிட்டது' என்று) ஆனால் அந்த அம்மா அவ்வளவு அற்புதமாக அவ்வளவு வீரியமாக யதார்த்தத்தையும் நவீனத்துவத்தையும் கலந்து தந்து உலகத்தையே கலங்க வைத்திருக்கிறார்கள். நாவல் நல்லதா? கெட்டதா? அதிலுள்ள காரியம் பற்றி நான் இங்கு விமரிசனம் பண்ணுவதற்கு வரவில்லை.

தோப்பில் முகம்மது மீரான் யதார்த்தத்தையும் நவீனத்துவத்தையும் கலந்து தந்ததால் தான் அவருடைய சாய்வு நாற்காலி இன்று சிகரமாக இருக்கின்றது. என்னுடைய புதிய தரிசனத்தில் நவீனத்துவத்தின் கூறுகளை நான் சேர்த்திருக்கிறேன். சுந்தர ராமசாமியின் எந்த நாவலிலும் யதார்த்தத்தின் கூறுகளும் போஸ்ட் மாடர்னிஸ்ட் கூறுகளும் கலந்திருக் கின்றன. எந்த நாவலும் எந்த வரிசையும் இன்றி தன்னிச்சையாக நான்தான் என்று சொல்வதற்கு ஏதுவாகயில்லை. அப்படி நான்தான் என்று கூறுவதற்கு எழுதப்பட்டவைகள் இலக்கணக் குறிப்பாக இருக்குமே தவிர தமிழில் போஸ்ட் மாடர்னிஸ்ட்க்கு ஒரு உதாரணம் தருக என்றோ அல்லது எம்.ஏ.இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான வினாவிற்குரிய ஒரு விடையாக சில நாவல்களைச் சொல்லிக் கொள்ளலாமே தவிர, நிஜமான வாழ்வில் மனிதன் அனுபவிக்கத் தகுந்த நாவல்கள் வந்ததாகச் சொல்ல முடியாது. இந்த மூன்று ஒழுக்குகளிலிருந்தும் வெகுஜன நாவல்கள் யதார்த்த நாவல்கள் கூறுகளை ரொம்பவும் எடுத்துக்கொள்கின்றன. கல்கியிடம் யதார்த்தக் கூறுகள் மிஞ்சிப் போகும்போது இது யதார்த்த நாவலா? வெகுஜன நாவலா? என்று சொல்ல முடியாது. வெகுஜன கூறுகளைக்காட்டிலும், பார்த்தசாரதியிடம் யதார்த்தக்கூறுகள் மின்னி மிளிர்ந்து ஒளி வீசுவதைப் பார்க்கிறோம். எனவே, என்னுடைய கருத்துப்படி "நீ யதார்த்தவாதியாக இருந்தாலும் சரி, நவீன வாதியாக இருந்தாலும் சரி, வெகுஜனவாதியாக இருந்தாலும் சரி, நீ உன் மரபு தான் உயர்வு என்று சொல்ல முடியாது. எல்லா மரபுகளையும் சுவீகரித்துக் கொள். எதை, எங்கு சொல்வதற்கு எது

சிறந்தது என்று நீயே தீர்மானி. இலக்கியத்திற்கு எவனும் கட்டுப்பட்டு இருக்க முடியாது. அவன் சுதந்திரமானவன். அவன் எதையும் எழுதுவான். எப்படியும் எழுதுவான். நீ படித்தால் நல்லது. நீ படிக்காவிட்டால் விட்டுவிடு. கீழே விழுந்து செத்து போகட்டும். எழுதும் முன்னால நீ இப்படித்தான் எழுதவேண்டும் என்று யாரும் கட்டுப்பாடு விதிக்க முடியாது. அவன் எழுதும்போது அவனும் அவனுக்குள்ளே கட்டுப்பாடு விதிக்க வேண்டாம். மனித குல நன்மைக்காக, இருளிலிருந்து வெளிச்சத்திற்காக விலகியிருந்து மனிதனுக்காக, ராட்சத குணத்திலிருந்து பரிபூரண ஜனநாயகத்திற்காக, உன் பயணத்தில் 'நான் என் மண்ணை இந்தப் பிரபஞ்சத்தோடு இணைக்கிறேன்' என்ற உணர்வில் எழுத வேண்டும்.

இலக்கியவாதி பெரிய மாயாவாதக்காரன். என் பொட்டல் மண்ணில் நின்று கொண்டு என் மக்களைச் சுவீகரித்துக்கொண்டு பிரபஞ்ச வியாபகம் பெறுகிறேன். இது தான் இலக்கியவாதியின் பெரிய அற்புதம். என் பொட்டல் மண்ணுக்குள்ளேயே புதைந்து போகிறேன் என்றால் நான் இலக்கியவாதியே கிடையாது. அதே சமயம் என் பொட்டல் மண்ணுக்குள்ளே கால் ஊனவில்லை என்றாலும் நான் இலக்கியவாதியே கிடையாது. நான் என் மண்ணில் கால்ஊன்றி நிற்க வேண்டியது மிக முக்கியம்; வளரவேண்டியது மிக முக்கியம். என் வியாபகம் உலகத்தை நோக்கியதாக, எல்லாக் கட்டுகளையும் மீறியதாக, மனிதகுலத்தை - சாதி, சமயம், குலம், இனம் எல்லாவற்றையும் தாண்டியதாக - வியாபகம்கொண்டுள்ளதாக வரும்பொழுதுதான் அது இலக்கியம். ஆனால் அந்த இரண்டையும் இணைக்கின்ற தொப்புள் கொடியாக இலக்கியவாதியின் இதயம் இருக்கிறது.

அப்படி இலக்கியம் படைக்கும்பொழுதுதான், அது பார்த்தீங்களா கேரளத்தில் ஒரு கிராமம். ஓர் ஆத்தங்கரையில- மீனாட்சிபுர ஆத்தங்கரையில - ஒரு சின்னஞ் சிறிய கிராமத்தில் உலகம் துன்பப்படுது என்னாச்சு. அதுல எல்.எம்.கே.டா என்னான்னு நம்ம அரசியலுக்கு வரவேண்டாம். அதுல பல பிரச்சனைகள் இருக்கு. ஆனால் அது ஒரு சாதனை. இலக்கியவாதிகள் நாங்கள் மண்ணில் வலுவாக காலூன்றி நிற்கிறோம்.

செயப்பிரகாசம் கதைகளைப் படிக்கும்போது அந்த காட்டில் இருக்கும் சோளப்பொதி இருக்குதே, அந்தச் சோளப்பொதியைப் பார்க்கலாம்; அந்தப் பொதி முனையில குஞ்சம் இருக்குமே, அதை, அந்த வாசம் அந்தக் கதைக்குள்ளே போவதைப் பார்க்கலாம். என் கதையில் கரிசலுக்குள்ளே போனீங்கன்னா ஆட்டிற்குள்ள கொச்சை

உங்க மூக்கைத் துளைக்கும். இது அவன் மண்ணுக்குள்ளே வேர்விட வேண்டும். மண்ணுக்குள்ளே வேர்விட்டு உலக வியாபகம்பெற வேண்டும். சாயாவனம் (சா. கந்தசாமி எழுதியது) நாவலை படிச்சீங்கன்னா அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய மண்ணுக்குள்ளே அது இறங்கிப்போய் அது கபகபவென எறிந்து இந்த உலகத்தைப் பார்க்கும். விசாரணைக்கமிஷன் நாவலையும் படித்திருக்கிறேன். அவருடைய சிறுகதைகளைப் படிச்சுப் படிச்சு நான் சொக்கியிருக்கிறேன். அவருடைய சின்னஞ்சிறிய ஊர்; அவ்வூரிலுள்ள தொழில்; அவருடைய சமூகம் பற்றி நாவல் எழுதியிருக்கிறார். இவை உலக வியாபகம் பெற்றுள்ளன.

இலக்கியத்தை யதார்த்தவாதி அருமையாகப் படைப்பான். மற்றவர்கள் உலகத்திலிருந்து தனக்குள்ளே சுருக்கிக் கொள்கின்றார்கள். சுருக்குவதை நான் நேசிக்கவில்லை; ஆனால் சுருக்குவதை நான் எதிர்க்கவுமில்லை.

மனிதா! இலக்கியவாதியே உன் மண்ணில், உன் நிலத்தில் வேர்விடு. அந்த மண்ணுக்குள்ளே இருந்து ஜீவனை எடு. சக்தியை எடு. ஒன்றிற்குள்ளேயிருந்து வியாபித்து உலகம் முழுவதுமாகப் பரவி உலகத்தின் எந்த மூலையிலும் எந்த மனிதனும் அதிலிருந்து கனிகளை எடுத்துக்கொண்டு தின்று அவன் மகிழ்ச்சியடைய வேண்டும். "மண் பயனுற வேண்டுமென்றான்" பாரதி. அப்படிப்பட்ட இலக்கியங்களை நாம் படைக்க முடியும்; படைக்க வேண்டும். ஏதாவது ஒரு காலத்தில்தான் படைக்க முடியுமென்று நான் சொல்வதால் நானே படைப்பேன் என்று சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் ஆற்றல் உள்ள மனிதர்கள் இனிதான் வருவார்கள். ஒருவேளை நான் நாளைக்குப் படைக்கலாம். நம்முடைய தோப்பில் படைக்கலாம். ஜெயபிரகாசம் படைக்கலாம். நாங்களெல்லாம் ஜெயிலுக்குள் அதாவது அரசுப்பணியில் இருப்பவர்கள். விடுதலையை - ஓய்வை எதிர்ப்பார்த்துக் காத்திருக்கிறோம். இன்னும் விடுதலைபெற்ற பிறகு இன்னும் வீரியத்தோடு படைக்க வேண்டிய காலம், குரல் எடுத்துப் பேச வேண்டிய காலம் வரலாம். ஆனால், வாழ்க்கை விசாலமானது. நம்முடைய வாழ்க்கையில் நாம் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். நம்முடைய தனித்தன்மை அழிந்து விடக்கூடாது. இலக்கியவாதிகள் தங்கள் வேர்களைப் பாதுக்காக்க வேண்டும். அந்த வேர்களை ஒருபோதும் அழியவிடக்கூடாது. தமிழன் தன்னுடைய வேரைப் பாதுக்காக்க வேண்டும்.வேர்கள் அழிந்து விடாமல், அவன் உலகத்திலுள்ள அழகையெல்லாம் சுற்றிப் பொதிந்து அந்த வேர்களை அழகுபடுத்த வேண்டும். அப்போதுதான் அவன் தமிழ் மணம் அதில் இருக்கின்ற தன்மையை உணர முடியும்.

நாம் நவீனத்துகுள்ளே போகிறோம். எங்களுக்கு இது தேவையில்லை. முழுக்க முழுக்க புரியாத மொழியில் தான் பேசுவோம். ஒரு பல்லியினுடைய ஓட்டையிலிருந்து, நாங்கள் இலக்கியத்தைப் பார்ப்போம். கிழவியினுடைய சுருக்கத்திலிருந்து தான் நாங்கள் இலக்கியத்திற்குள் போவோம் என்றும் கூறக்கூடாது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாடு. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு மொழி. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தன்மை. ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு போக்கு. வெள்ளைக்காரன் அழகாய் இருக்கிறான் என்று சொல்லி என் தோலை நான் உரித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவன் அவனாக இருக்கட்டும். நான் 'கருப்பன்', நான் கருமையாக இருக்கட்டும். கண்ணன் உலகத்தில் நிகரற்ற அழகுடையவன், ராமன் உலகத்தில் எல்லாம் - அற்புதத்தில் - அற்புதமானவன். கண்ணங்கரேலென்ற கருப்பன் அவன். அவன் வெள்ளையனாக இருக்கிறான் என்று சொல்லி நீ என்னைச் சுட்டுக் கொல்ல வேண்டாம். உனக்கு உன்னுடைய பாரம்பரியம், உன்னுடைய கம்பீரம், உன்னுடைய வரலாறு, உன்னுடைய கலாச்சாரம். இவை உனக்கு என்று ஒரு பார்வையைத் தந்து இருக்கின்றன. அதை அழகுப்படுத்துவதன் மூலம் அவனோடு போட்டிபோடு. உலக இலக்கியம், உலகத்தரம் என்று ஓடி உன்னை இழந்துவிட்டு ஒட்டுவார் ஒட்டியாக அவனிடம் போய் நீ கெஞ்சிக் கொண்டிருந்தால் நீ எப்போதும் இரண்டாம்தரம்தான். இரண்டாம்தாரத்திற்கு மதிப்பே கிடையாது. முகமூடி போட்டுக்கொள்ளலாம். என்ன பயன்? சிலர் Dress பண்ணிக்கிட்டு கோட்டு-டை-போட்டுக்கிட்டு வெள்ளைக்காரனிடம் போய் வெள்ளைக்காரன்னு நினைச்சி நின்னால், அவன் என்ன சொல்லுவான் 'You black get out' என்றுதான் சொல்லுவான்; மனசுக்குள்ளேயாவது சொல்லுவான்.

எனவே இலக்கியத்திலும் இன்று இளைஞர்கள் பலவிதமான மோகங்களில் மாய்ந்துகொண்டு சுயவேரை இழந்து விடுவது மட்டுமல்லமால் விழுதுகளையும் இழந்து, வேர்களையும் விழுதுகளையும் புறக்கணிக்கின்றார்கள். அவர்கள் காற்றில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். இதை நான் விரும்பவில்லை. வேரிழக்க வேண்டாம். மரம் இழக்க வேண்டாம். ஆனால் நம் வியாபகம் உலகம் முழுவதும் இருக்க வேண்டும்.

இந்த இலட்சியம் எனக்குண்டு. ஜீவா எனக்குக் கற்றுத்தந்த இலட்சியம் இது. என் ஆசான்கள் இதோ இருக்கின்றார்கள். க. சிவத்தம்பி; இவருக்கு மூத்தோர் 'கைலாசபதி'; என் மதிப்பிற்குரிய

சகோதரர் தொ.மு.சி.ரகுநாதன்; எல்லாரும் இதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். இது உலகத்திற்கு ஆதரவானது. எந்த விசாலத்துக்கும் விரிந்துக்கொடுக்கக் கூடியது. இதை நாங்கள் எங்களுடைய இலக்கியக் கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இலக்கியக் கொள்கை எங்களைச் சுருக்கிவிடக்கூடாது. ரகுநாதன் சொல்வார். எந்தக் 'கொள்கைக்குள்ளும் எந்தக் கொள்கையும் சுருங்கி விடக் கூடாது. "கொள்கையைக் குதிரையாக்கி அதன் மேல் ஆரோகணித்துச் செல் மனிதா! கொள்கையை உன் தலையில் தூக்கி வைத்து குதிரையை நீ சுமக்காதே! அது உன்னைக் குழிதோண்டி அமுக்கி விடும். கொள்கைக்கு மனிதர் அடிமையாகி விடக்கூடாது" என்பார். 'கொள்கையைக் கொண்டு கொள்கையின் மீது ஏறி உலகத்தை விசாலமான பார்வையால் பார்த்து நீ ஆரோகணித்துப்போகக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்ற இது இலக்கியவாதிகளுக்குத் தெரியவேண்டிய செய்தியாகும்.

முகம்மது மீரான், தோப்பில்.

என் வீடு என் கிராமம் வந்து கேரளா எல்லையில் இருக்கு. இந்தியாவின் கடைசி கோடியில் இருக்கும். எங்கும் கடல்தான். இந்தப் பக்கம்போனா கேரளா. ஒரு பக்கம் மலை. ஒரு பக்கம் கடல். ஒரு பக்கம் ஆறு. ஒரே ஒரு வழிதான் வெளியேறுவதற்கு. ஒரு குக்கிராமம் என்று சொல்லக்கூடிய இருளடங்கிய கிராமத்திலிருந்து வந்தவன் நான். சென்னையில் எத்தனையோ வருஷம் இருந்திருக்கேன். என் பேச்சில் மாற்றமில்லை. நெல்லையில் கிட்டதட்ட 25 வருஷமா இருந்திருக்கேன். நெல்லைச் சொல் ஒன்று கூட என் வாயில் நுழையவில்லை. என் தாய் முகத்திலிருந்து கேட்ட அந்தச் சொற்கள் என் மனசிலிருக்கு. அவைதான் என்னுடைய படைப்புகள். இப்படிப் பயின்ற மொழி தான் மற்ற எல்லா மொழிகளிலும் சிறந்ததாய்ப்பட்டு என் ஆத்மாவின் மொழி ஆகிறது. ஏன்னா தமிழ் முறையாகப் படிக்கவில்லை. நான் மலையாளத்தில் எழுதி, பிறகு தமிழில் தருவதாகக் கூறப்படுவதுண்டு. அது உண்மைதான். ஒரு கடலோரக்கிராமத்தின் கதை, துறைமுகம், கூனன் தோப்பு நாவல்களை எல்லாம் மலையாளத்தில் எழுதினேன். ஏன் மலையாளத்தில் எழுதினேன்னு சொன்னா - தமிழ் படிக்காத காரணத்தினாலே - எனக்குத் தமிழ் அவ்வளவு விரைவாக எழுத வராது. நான் சாதாரணமாக ஒரு நாவல் எழுதுவதற்கு - ஆங்கில நாவல் வாசிக்கறது இல்லை - மலையாள நாவல் தான் வாசிச்சிருக்கேன். கேட்டா உங்களுக்கு அதிசயமாக இருக்கும். என் முதல் நாவல் கடலோரக் கிராமத்துக்கதை வரை தமிழில் ஒரு நாவல் வாசிச்சது கிடையாது. தமிழில் உள்ள நாவலாசிரியர் யாரையும் எனக்குத் தெரியாது. 1988 என் கடலோரக் கிராமத்துக் கதையை மொழி பெயர்க்கிற நேரத்தில் (நீல. பத்மநாபன் மலையாள எழுத்தாளர்னு நினைச்சேன். சுந்தர ராமசாமி உருவத்தை பார்த்திருக்கேன். படிச்சது கிடையாது). நண்பர் ஒருத்தர் சொன்னார். சுந்தர ராமசாமி நாகர்கோவிலில் இருக்கார். நீல. பத்மநாபன் இருக்கார். இவங்களைக் கூப்பிட்டு வெளியீட்டு விழா நடத்திடலாம் என்றார். 1988-ல்தான் தமிழ் படைப்பாளிகளோடு எனக்குக் கிடைச்ச முதல் அனுபவம். அதோடு தமிழில் ஜெயகாந்தன் பற்றிக் கேள்வி பட்டிருக்கேன். யாரையும் தெரியாத இருண்ட உலகத்திலிருந்து நான் படைத்தேன்.

இந்தப் படைப்பில் நடந்த சம்பவங்கள் எங்கள் ஊரில் உள்ளது. போகவும் எங்க ஊர் ஓர் அற்புதமான ஊர். விசித்திரமான மனிதர்கள். பெண்கள் நிறைய மூடநம்பிக்கை கொண்டவர்கள். பழக்க வழக்கங்கள், பேச்சுக்கள். ஒரு வீட்டுக்கு ஒரு வீடு பேசமாட்டார்கள். கல்யாணம் ஆகி மொத்தமாகச் சேர்ந்து கொள்வார்கள். பள்ளி வாசலில் அடக்கி ஆளக்கூடிய பெரிய ஆட்கள். இந்தச் சூழலில் நாங்க வந்தோம்.

இந்த 'தோப்பி'ல் (தோப்பு) இருக்கு இல்ல. சரியான சுடுகாடாக இருக்கும். அங்கிருந்து புகை என் வீட்டில் சன்னல் வழியாக உள்ளே வரும். என் வீடு இருக்கும். சுடுகாட்டில் இருந்து கபால ஒடு வெடிக்கும். சத்தம் என் வீட்டில் கேட்கும். அந்த சவுண்ட கேட்டேதான் நான் வளர்ந்தேன். எப்படியும் ஒரு வாரத்திற்கு இரண்டு மூன்று நாள் இருக்கும். அந்தத் தோப்பில் தான் இந்தச் சுடுகாடு இருக்கு. சுடுகாடு ஒட்டி தான் என் வீடு. அப்பத் தோப்பிற்கு யாருமே வரமாட்டார்கள். ரொம்பப் புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதி. கல்யாண வீட்டில் யாருமே அங்கே வந்து கூப்பிடமாட்டார்கள். ஒரு கல் உண்டு. என் கடலோரக்கிராமத்துக் கதையில் சொல்லியிருக்கேன். குத்துக்கல், ஒத்தப்பனை உண்டு. சாய்வு நாற்காலியில் சொல்லியிருக்கேன். இந்தக் கதையில் பனை விழுந்த கதையைத் தான் முதலில் ஆரம்பித்திருக்கேன். இந்தக் குத்துக்கல் ஒத்தப்பனைக்குக் கிழக்கே அந்தத் தோப்ப அப்ப பார்த்தேன். தோப்பிலுள்ளவர்களும் அறியப்படனும். சின்ன வயசிலே "தோப்புன்னு" வச்சிக்கிட்டேன் பேருக்கு முன்னாடி. அப்படி ஒரு வெறி. வெறி என்றால் அடக்க முடியாத வெறி. எப்ப எப்படி வெளிப்படுத்துவது? ஒரு இது எனக்குள்ளே. அடிச்சி வெளிப்படுத்துவதா? கோபமிட்டு வெளிப்படுத்துவதா? அது கடலோரக் கிராமக் கதையில் சொல்லக்கூடிய வடக்கு வீட்டு அகமது பிள்ளை (கற்பனையிட்டுக் குறிப்பிடக்கூடிய அந்த வீடு). அந்த வீட்டிலே என் அக்காவைக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். எல்லா ஆபிசும் பூட்டியிருக்கு. கஞ்சிக்குக் கூட வழியில்லை. அந்த நேரத்தில் தான் என் அக்காவை கல்யாணம் கட்டிக் கொடுத்தார்கள். இந்தக் கஞ்சிக்குக் கிடைக்காத நேரத்தில் அந்த வீட்டில் ஒரு அக்காவுக்கு எட்டு வயசு பிள்ளை இருக்கும். அப்படியே கோபத்திலே தூக்கி வாரி போட்ருவேன். செத்தான். 5 வருடம் அக்கா வீட்டுப் பக்கம் போறது கிடையாது. அடிக்கடி அதச் சொல்லுவாங்க. அந்தக் கோபத்தை வெளிப்படுத்தினேன். அடிச்சது ஒரு பெரிய முதலாளி வீட்டுக் குழந்தை. முதலில் அடிகொடுத்துத்தான் கோபத்தை வெளிபடுத்தினேன். ஒரு முஸ்லிம் என்று சொல்லுவார்கள். நாங்கள்

எல்லாம் சகோதரன் என்று சொல்லுவாங்க. இந்த ஏதோ சகோதரத்துவம் வந்தாதான் ஆச்சு. பள்ளி வாசல்களில் எல்லாம் நாங்கள் பள்ளி வாசல்களுக்குள் சமம் என்று கூறப்படுவதுண்டு. ஆனால் அந்த முதலாளி வந்தா அந்த மூலை. இந்த முதலாளி வந்தா இந்த மூலை. நாங்கள் போனா கடைசியில் தான். இதெல்லாம் எனக்கு மனசுக்குள் கடுமையான எதிர்ப்பு உணர்வை உருவாக்கியிருக்கிறது. எப்படிப் பார்க்கிறது? இவங்களை அடிக்கொடுக்கவும் சக்தியில்லை. பேசவும் சக்தியில்லை. எழுதினேன். எழுதி எழுதிப் பார்த்தா மொழி தெரியாது. நான் தமிழன்; படிச்சது மலையாளம். அங்குமில்லை இங்குமில்லை என்கிற நிலையாகிவிட்டது. எனக்குத் தெரிஞ்ச வழி தமிழ் கொஞ்சம் அரபி கொஞ்சம் மலையாளம் எல்லாம் கலந்த மனசில உதயமாகிறத எல்லாம் அப்படியே எழுதிக்கிட்டிருப்பேன்.

நான் எழுத ஆரம்பித்தது 1988ல் இல்லை. கிட்டதட்ட 50 வருஷமா எழுதுகிறேன். 47ல் உண்மையில் என் வாழ்க்கையில் நடந்தது. வேகமா எழுதினேன். தமிழ் மலையாளம், எதையும் சேர்த்து வைத்திருக்கிறேன். கொடுக்கவோ, விற்கவோ மாட்டேன். அன்றைக்கு எழுதினது இன்றைக்கும் என் கையில் இருக்கு. அப்ப மொழி தெரியாது. நான் எழுதிக்கிட்டிருக்கேன். மலையாளம் முறையாப் படிச்சேன். தவிர எங்க ஊர் விஷயங்கள் எழுதுவதற்கு அந்த மொழி ஈடுகொடுக்க முடியவில்லை. தமிழில் தான் எழுதனும்னு பிடிவாதம், ஆனால் தமிழில் எழுதத் தெரியாது. எங்க ஊர் விஷயங்களைத் தமிழில் எழுதினாத்தான் அதை முறையாகக் கொண்டு வரமுடியும். இப்படி ஒரு குழப்ப நிலை. கிட்டதட்ட 40 வருஷம் கழிந்தது. என்னுடைய எழுத்தை நானும் விடாமுயற்சியாகத் தான் எழுதிக்கிட்டிருந்தேன். அப்பா சொல்லுவார். 'காண்டம் எழுதறான்னு'. காண்டம் எழுதறதுக்குப் போயிட்டியே. வேலை ஏதாவது நான் செய்யலையென்றால் நான் எழுதினதைக் கிழிக்கும். பள்ளிக் கூடத்திற்கு ஒளிஞ்சுதான் போவேன். அப்பா காணாமல் புஸ்தகத்தைப் பின்னாடி வைத்துக் கொண்டே போவேன். சுடுகாட்டுப் பக்கம் தூக்கிப் போட்டு விடுவேன். அப்பா கேட்பார். எங்கே போறே? அ.'!பாவுக்கு மீன் வியாபாரம். மீனுக்குக் காக்கா விரட்டப் போறேன்" என்று சொல்லுவேன். அப்படியே சுற்றி வந்து புஸ்தகத்தை எடுத்துப் பள்ளிக்கூடம் போவேன். இப்படித்தான் தப்பித் தவறி பாறை இடையில் பனை முளைச்சது போல அப்படி இப்படி தவறி படிச்சோம். அப்படி அந்த மொழி ஒரு பெரிய பிரச்சனையாகிவிட்டது.

இந்த நிலையில் தான் எழுதனும்னு தொடங்கினேன். எதைப்பற்றி? இந்தச் சமுதாயத்தைச் சுரண்டி வாழக்கூடியவர்கள்

வாழ்க்கைத் தரத்தை வெளிக்காட்டனும். இதைக் களை எடுக்கனும் என்கிற ஒரே குறிக்கோள். அதில் எனக்குப் புகழ் கிடைக்கனும் பாராட்டுக் கிடைக்கனும் என்கிற மற்ற நாவலாசிரியர்க்குரிய எண்ணம் எனக்கில்லை. ஒரே எண்ணம். ஒரே எதிர்ப்புள்ளம் அந்த எண்ணத்தோடு தான் நான் எழுதிவிட்டிருந்தேன். அப்ப எனக்கு மொழி ஒரு பிரச்சனை என்று சொன்னேன் இல்லையா? இதை எப்படி நிவர்த்தி பண்றது. மனசில பொங்கி வரக்கூடிய விஷயங்களைத் தமிழில் எழுதறதுக்கு வேகம் என்னிடம் இல்லை. ஆனால் நான் முதலில் என்ன பண்ணேன்னா, மலையாளத்தில் எழுதினேன். எழுத உட்காரும் போது என்ன என்ன எழுதறது என்று பிரித்து எண்ணத் தெரியாதபடி சுரந்துக்கிட்டே வரும் அவற்றை அப்படி அப்படியே எழுதினேன். தமிழ் இருக்கும் அரபி இருக்கும். தெரிந்த ஆங்கிலம் இருக்கும். எனக்கும் தெரிந்த நான்கு மொழியில் ஒரு அவியல். இன்னும் அர்த்தம் இல்லாத சில சொற்கள் இருக்கும். அதற்கு அர்த்தம் கேட்டா அர்த்தம் தெரியாது. வீட்டில் யார் என்ன பேசினாலும் சும்மா சேர்த்து எழுதிக்கிட்டே வந்தேன்.

பிறகு பஸீர் உடைய நாவல்களை எல்லாம் படிச்சேன். இதெல்லாம் எழுதறதுக்கு முன் நாவல் என்றால் என்னன்னு தெரியாது. நாடகங்கள் பார்த்தது கிடையாது. பள்ளிக்கூடம் படிக்கிற நேரத்தில் ஆசிரியர் கதை சொல்லித்தருவார். அவர் கதை சொன்ன ஒரு இது என் மனசுக்குள் இருந்திட்டிருக்கு. பஸீர் சொல்லில் ஒரு பெரிய பிடிப்பு கிடைத்தது. இவர் சொல்லில் இப்படி எல்லாம் இருக்கே. அரபு மொழி மிக்ஸ் பண்ணலாம் என்று புரிஞ்சது. நமக்குத் தெரிந்ததை எழுதுவோம். மக்கள் அங்கீகரிச்சாலும் சரி, அங்கீகரிக்காமல் போனாலும் சரி.

கூனன் தோப்பு (1968) நாவல் என் கண்ணால கண்ட நிகழ்ச்சி. அதில் முதலாளியைத் தாக்கித்தான் முழுவதும் எழுதினது. தொடக்கம் முதல் முடிவு வரை. இதை எங்க வீட்டில் சொன்னவுடன் கடுமையான எதிர்ப்பு. என் வாழ்க்கையில் நடந்த அந்த நிகழ்ச்சியைத் தான் அந்த நாவலில் எழுதினேன். என் அப்பாவுக்கு இரண்டு சம்சாரம். பிறந்து வளர்ந்து 13 வருஷமா நினைச்சேன். 'மூத்தவங்க தான் என் தாய்' என்று. என் அம்மா எங்களை வளர்த்தது கிடையாது. என் தகப்பனார் உடைய மூத்த மனைவியும் அம்மாவும் சண்டை போடுவா. என்னைத் தூக்கி எறிஞ்சிட்டுப் போயிடறது. அப்ப எங்க வீட்டில் ஓலை முடையவருவாங்க வள்ளி என்றொரு பொம்பளை. என் வயதில் அவங்களுக்கு ஒரு மகன் உண்டு. இந்தப் பொம்பள தான் பால் தர்றது. ஸ்கூலில் ராகவனுக்கு ஒரு

அடி கொடுத்தேன். அவன் என்னை மொட்டைத் தலையன் என்று கூப்பிட்டான். தலையைத் தடவி பரோட்டா அடிக்கலாம் என்றான். அப்பல்லாம் மொட்டை தான். தலையைத் தடவி வழு வழு என்று இருக்குடா என்றான். ஒரு குத்து. அச்சமயம் என்னன்னா மதியம் சாப்பிட்டுவரேன். வள்ளி மகன் தான் ராகவன், அவன், நீலகண்டம், மாதவன் இவங்க கையில் எல்லாம் பெரிய கத்தியிருக்கும்னு நான் நினைப்பேன். நம்மளைக் கொல்லத்தான் போறாங்கள்னு; என்னைப் பிடிச்சாச்சு. அப்ப வள்ளி சொன்னா, என் கிட்ட ராவெல்லாம் பால் குடிச்சேல்ல. அப்ப என் மகனை அடிக்கலாமா? உன் தம்பி இல்லையா? வெய்யிலா இருக்கு மக்களே. பார்த்துப்போ. என்ன ஒரு தாயுள்ளம்! அவள் மகனை அடிச்சிருக்கேன். அடிச்ச அடியில் மயங்கி விழுந்திருக்கான். அவன் தாய்ப் பாலை அவன் குடிப்பதற்குப் பதில் நான் குடிச்சி வளர்ந்திருக்கேன். அந்தத் தாய் என்ன சொல்றா வெய்யிலு நிழல் பார்த்துப்போ மக்களே என்று சொல்லுகிறாள். அந்தத் தாயின் நினைவுக்காகத்தான் எழுதினேன். எழுத ஓடவில்லை. டிக்டேட் பண்ணேன். பேராசிரியர் முகம்மது பாரூக். அவர் மகன் கலீல் அஹமது. நான் சொல்லச் சொல்ல எழுதுவான். நான் கடலோரக் கிராமத்துக் கதையை அப்படித்தான் எழுதினேன்.

முதலில் **கூனன் தோப்பு** எழுதினேன். கூனன் தோப்பில் வகுப்புக் கலவரத்தை மையமாக வைத்தேன். இந்தியாவிலேயே முதல் நாவல் அதுதான். இதற்குப் பிறகு, பீஸ்மர்ஷா எழுதியது. 73--74ல் வந்தது. முதல் முதலாக வகுப்புக் கலவரத்தை மையமாக்கி எழுதிய நாவல் கூனன் தோப்பு. எனக்கு அன்று வயது 22, 23 இருக்கும். அந்த நாவல் எழுதிய காலம் ஒரு வேகம். வகுப்புக் கலவரத்தில் கண்ட அந்த காட்சி. பூவார் என்ற ஊரில் வகுப்புக் கலவரம். கண்ணால் கண்ட காட்சி. அந்த ஊரில் இருதரப்பு. பணக்காரர்கள் அந்த ஊரைவிட்டே போய் விட்டார்கள். திருவனந்தபுரம் எம்.ஜி.எம். லாட்ஜில் இரு தரப்பும் தங்கியிருக்கு. மீனவர்களின் பணக்காரர்கள் அதே லாட்ஜில் தான் தங்கியிருக்கிறார்கள். வீடெல்லாம் எறிஞ்சி சாம்பாலாகக் கிடக்கிறது. இந்தக் காட்சி மனசில் அப்படியே நின்றது. இரவு பகலாகத் தூக்கம் இல்லை. இதை எப்படியாவது இதயத்திலுள்ள பாரத்தை- இறக்கி வைக்கனும் என்ற எண்ணத்தில் நான் எழுதினேன். நாவலா மாறி விட்டதே தவிர, நாவல் இல்லை. 1968-ல் எழுதிய அந்த நாவல் ஐந்து பத்திரிக்கையிலிருந்து திரும்ப வந்தது. 'நீங்க எழுதின இந்த விஷயத்தை வெளியிட்டா இந்தியாவில் பெரிய பிரச்சனையாகி விடும். இப்படி ஒரு நாவலை நாங்க வெளியிட முடியாது' என்று சொல்லி மூன்று மலையாளப் பத்திரிக்கையிலிருந்து திரும்பி

வந்துவிட்டன. கடைசியில் தமிழில் முஸ்லீம் முரசு என்ற பத்திரிக்கையில் வந்தது. அதுவும் கரைகள் என்ற பெயரில் ஒரே ஒரு சாப்டர் தான் வந்தது. அவன் என்ன பண்ணிட்டான். நான் எழுதினதப் போடாமல் நேரா திருப்பிப் போட்டுவிட்டான். மீனவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சண்டை என்று போட்டு விட்டான். "ஏண்ணே இங்க வாங்க ஒரு சாப்டர் போட்டதோடு சரி. இனி என் நாவலை நீங்க போட வேண்டாம்" என்று கூறிவிட்டேன். என்கிட்டேயே 93 வரை அதை அப்படியே வச்சிருந்தேன். எனக்குத் தெரியும் இந்த நாவலுக்கு ரசிகர்கள் வருவார்கள் என்று. அப்படி இந்த நாவலை உள்வாங்கும் வாசகர்கள் வரும் வரை காத்திருந்து 25 வருடத்திற்கு பிறகு 1993-ல் தான் வெளியிட்டேன். அந்த நாவலுக்கு அந்த ஆண்டு தமிழக அரசு பரிசு கிடைத்தது. அந்த நாவல் இப்ப ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது. அந்தப் பெருமை தமிழ் மொழிக்குத் தான். ஏன் என்றால் வகுப்பு கலவரம் என்றால் பீஸ்மர்ஷாவுடைய நாவல்தான் என்றார்கள். இல்லை தமிழில்தான் முதலில் வெளிவந்தது.

அடுத்தது துறைமுகம். சொல்லப்போனா விடிய விடிய பேசிக்கிட்டே இருக்கலாம். ஏன்னு சொன்னா எனக்குள்ளேயே ஓர் உலகம் இருக்கு. என் வாழ்வு அனுபவம், தமிழில் எந்தப் படைப்பாளிக்கும் இல்லாத அனுபவம், எனக்கு இருக்கு. நான் அப்படியே அந்த வேதனையில் குறுத்தவன்; வளர்ந்தவன்; இன்றைக்கும் அப்படியே வாழ்கிறேன். என்னில் ஒவ்வொரு அசைவுகளிலும் ஒரு கதை இருக்கும். சாதாரணமாகவே அவை மார்க்சிய இலக்கியம் தான். எனக்குள் ஒரு உலகம் இருக்கு. எனக்கு ஒரு மொழி இருக்கும். எனக்கு சொல்ல விஷயம் இருக்கும். எனக்கு எப்படி சொல்லணும்னு தெரியும். மொழி எனக்குச் சொந்தம். சொல்லும் முறை எனக்குச் சொந்தம். விஷயம் எனக்குச் சொந்தம். பிறகு யாரை நான் கடைபிடிக்கனும். திறனாய்வுக்குப் பிற இலக்கியம் எப்படி இருக்குன்னு தெரிஞ்சிக்கனும். மார்க்சிஸ்ட் லியோ டால்டாய்-ஐ நான் ஏன் ஃபாலோவ் செய்யணும்? டால்ஸ்டாய் எப்படி எழுதியிருக்கிறார்? அவர்கள் தங்களுடைய அனுபவங்களை எழுதியிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொருத்தரும் அந்தந்த நாட்டு ஊர்களைப் பற்றி எழுதியிருப்பார்கள்.

நமக்குள்ள பழங்கஞ்சி, கிழங்கு, கருவாடு, வயல், இது நம்ம விஷயம். நமக்கு இதிகாசங்கள் இருக்கு. நமக்கு அடிப்படை பிரச்சனைகள் எவ்வளவோ இருக்கு. தலித்களுக்கு உரிய பிரச்சனை. ரொம்பப் பிற்பட்ட நிலையிலிருக்கிற முஸ்லீம்களுக்கு நிறைய

பிரச்சனை. ஒவ்வொரு கம்யூனிட்டி-யிலும் பிரச்சனை இருக்கு. இந்தப் பிரச்சனைகளைவிட்டு வேற எழுத வேண்டியது என்ன இருக்கும். நம்ம விஷயங்கள் பற்றிச் சொல்லி முடிக்கலையே. சொல்ல வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. வாழ்க்கையை முழுமையா சொல்லிப் போடா! முஸ்லிம்களுடைய வாழ்க்கை முழுமையா இலக்கியத்தில் வந்துவிட்டதா? தலித் வாழ்க்கை முழுமையா இலக்கியத்தில் வந்துவிட்டதா? கிராமிய வாழ்க்கை முழுமையா இலக்கியத்தில் வந்துவிட்டதா? செட்டியார் வாழ்க்கை முழுமையா இலக்கியத்தில் வந்துவிட்டதா? நீல. பத்மநாபன் மட்டும் எழுதினா வந்துவிடுமா? மீரான் மட்டும் எழுதினா வந்துவிடுமா? இல்லை. தலைமுறை தலைமுறையா எழுதனும். நம்ம விஷயங்களை அறைகுறையாக விட்டுவிட்டு பிற விஷயங்களை ஏன் நாம் ஃபலோவ் செய்யணும். பிற மொழியில் நாம் ஏன் செய்யணும்? நமக்குச் சொந்தமாக மொழி இருக்கு. இதிகாசம் நம்ம தமிழ் மொழியில் வந்துள்ளது. அந்த மொழியைப் பெரிது படுத்தாமல் பிறமொழியை எப்படி எழுதவேண்டும் என்று ஏன் புதிய ஸெண்டன்ஸ் உருவாக்க வேண்டும். மார்க்சிஸ்ட்கள் இப்பத்தான் நீளமாக செண்டன்ஸ் எழுதி வருகின்றனர். அவருக்கு முன்னாலேயே தமிழில் பெரிய ஸெண்டன்ஸ் இருக்கு. அப்படி எனக்கு ஒரு எண்ணம். யாரையும் ஃபாலோவ் பண்ணக் கூடாது. யார் மொழியையும் பின்பற்றக்கூடாது. நமக்கு ஒரு மொழி; ஒரு விஷயம்; நாம் சொல்கின்ற பாணியில் சொல்லனும்; யாரையும் பற்றிக் கவலையில்லை. யார் என்னவோ சொல்லிவிட்டு போகட்டும்; அப்படித்தான் அந்தத் துறைமுகம் எழுதினேன்.

ஒரே கதையை திருப்பி திருப்பி சொல்லிக்கிட்டு வரேன். முதலில் கதையில் சொல்ல விஷயம் இல்லை. மொத்தம் நான்கு நாவல் வந்திருக்கு. நான்கு நாவலில் உள்ளதை விவரமா உங்களுக்குத் தெரியாத விஷயத்தைச் சொல்ல வரேன். **1. ஒரு கடலோரக் கிராமத்துக் கதை. 2. துறைமுகம். 3. கூனன் தோப்பு. 4. சாய்வு நாற்காலி.**

கடலோரக் கிராமத்துக் கதையில் கையாண்ட மொழி அல்ல துறைமுகத்தில் கையாண்ட மொழி. கூனன் தோப்பில் கையாண்ட மொழி அல்ல சாய்வு நாற்காலியில். இப்படி நான்கும் நான்கு மொழியில் எழுதினேன். சொல்லப்படக்கூடிய விஷயங்களுக்கு ஏற்ப என் மொழி வேறுபடும். அரபியை வேண்டுமென்று திணிக்கவில்லை. அந்த இடத்திலேயே திணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்த அரபு சொல்லுகிற தமிழ் தெரியாதா, சில இடங்களில் மலையாளத்தில் எழுதியிருப்பேன்.

உண்மையிலே மலையாளம் மொழியே இல்லை. அது தமிழ் சொற்கள்தான். நமக்குத் தெரியாததினாலே மலையாளம். சிங்களத்தில் ட்ராயர் என்ற "லாட்சி" அசல் தமிழ்ச் சொல். எங்க ஊரில் 'லாட்சிப் பெட்டி' என்றால் ட்ராயர் உள்ள பெட்டி. 'டேய் அவனை காவடிக்கிட்டு போய்ட்டான் என்று சிலோன்காரன்கள் பயன்படுத்துவார்கள். எங்க ஊரில் இருக்கு. இன்னும் சரியான மொழி என்றால் 'காவடு' என்ற சொல் சிலோனிலும் எங்க ஊரிலும் உண்டு.. இது வந்து குமரிக்கடலோர மக்கள் வழக்கு பேச்சு. இப்படிப்பட்ட சொற்கள் மலையாளம் என்று சொல்கிறார்கள். நம்மள்ள இருக்குற எத்தனை சொற்களை நாம் அழித்து விட்டோம். சிலதை விலைக்கு விற்று விட்டோம். இன்னும் விற்று விடுவோம். நீங்க விற்றதை நான் விலைக்கு வாங்குவேன். பழைய விலைக்கு. பழைய விலைக்கு வாங்குவதை மலையாள மொழி என்று அன்னியப்படுத்துகிறார்கள். தமிழில் எந்த வித உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தக்கூடிய பொருத்தமான சொற்கள் தமிழைத் தவிர மலையாள மொழி உள்ளிட்ட வேறு எந்த மொழியிலும் கிடையாது. இந்தியாவிலுள்ள மொழிகளில் தமிழுக்குள்ள பெருமை வேறு எதற்கும் இல்லை. தமிழில் ஐந்தாறு சொற்கள் இருக்கு. சின்னக் கயிறு 'மணிக்கொச்சம்" என்றும் கொஞ்சம் பெரியது 'கொச்சம்' என்றும் சொல்லுவாங்க. இன்னும் ஐந்தாறு பிரிவுக்குக் கயிறு என்று சொல்லுவார்கள். கிணற்றில் தண்ணியிழுக்க "வடம்" என்று சொல்லுவோம். இன்றும் இருக்கு. "கம்பா" தேரை இழுக்கும். "கம்பா". அகராதியைப் பாருங்க. இன்னும் எங்க ஊரில் இருக்கு. இதெல்லாம் எங்க ஊரில் இன்னும் புழக்கத்திலிருக்கு. நான் புதுசா பயன்படுத்தியிருக்கேன். மீனவர்களைப் பற்றி பேசும்போது "கம்பா" என்ற சொல் வரும். "வடம்" என்று பயன்படுத்தமாட்டார்கள். மீனவர்களிடத்தில் கம்பா தான். ஓலைக்கூடை என்று சொல்ல மாட்டார்கள். "ஓம்பல்" என்று தான் சொல்லுவார்கள். வாசகர் எனக்கு முன்னோடி கிடையாது. எந்த முன்னோடி எழுதினாலும் வாசகர்கள் இல்லை. வாசகர்களுக்குப் புரியுமா புரியாதா என்பது பிரச்சனை இல்லை. என் மன உணர்ச்சிகளை என் மக்கள் உணர்ச்சிகளை என் பகுதிகளை அன்பான சொற்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்பது தான் முக்கியம். நான் ஒரு உலகத்தை அடக்கிக் காட்டியிருக்கேன். வேறு யாரு சொற்களும் எனக்குத் தேவையில்லை. தமிழ் ஆசிரியர்களிடம் கேட்க வேண்டியதில்லை. எதுக்கு தமிழ் ஆசிரியர்களிடம் கேட்கவேண்டும். எனக்குன்னு மொழியிருக்கு. அந்த மொழி வாயிலாக இந்தக் கதையை எழுதினேன்.

இப்படி இந்த மொழி வந்து அழியக்கூடிய ஒன்று. மொழி நிரந்தரமற்றது. எப்ப நாம் மொழி வாயிலாக பிம்பங்களை உருவாக்கியாச்சோ, வாசகமனதில் பிம்பங்கள் வரும்போது மொழி அங்கே அடக்கியாச்சே. வடக்கு வீட்டு அகமது கண்ணு -முதலாளி வீட்டு சித்திரம் இல்ல துறைமுகத்தில் வரக்கூடிய கதவு பாத்திரம். துறைமுகத்தில் வரும் கதவு அல்ல தோப்பு கதாபாத்திரம். முஸ்தபா என்ற சாய்வு நாற்காலி வடக்குவீட்டு முகம்மதுகண்ணு முதலாளி பிரஸன்ட் செய்த மொழியிலே ஒரு பிம்பத்தை உருவாக்கியாச்சு. மொழி நிரந்தரமல்ல. ஒரு நாவலைப் பொறுத்தவரையில் யாருக்காவது 1,000 ரூபாய் தரேன் ஒரு பாரா கதை சொல்லுங்கள் என்று கூறிப்பாருங்கள். என் நாவல் ஏதாவது ஒன்றிலிருந்து ஆசிரியர் எழுதினபடி உங்களால் சொல்ல முடியுமா? பாரதியார் கவிதைகள், சீறாபுராணத்தை சொல்ல முடியும், ஞானக் கூத்தனுடைய கவிதைகள் சொல்ல முடியும். ஏன் உங்களால் நாவலில் சொல்ல முடியவில்லை. அதே சமயத்தில் அந்த நாவலாசிரியர்கள் உங்கள் மனசில் நின்றிருக்க அந்தக் கதாபாத்திரங்கள் துணை நிற்கின்றன. புளியமரத்தின் கதையில் உள்ள தாமோதர ஆசாமி கதாபாத்திரம் நின்னுகிட்டிருக்கு. அந்தப் புளியமரமும் நின்றிருக்கும். அந்தப் புளியமரத்தைச் சொன்ன மொழி உங்க மனசில் நிற்கிறதா? சுந்தரராமசாமியை அறிமுகப் படுத்தினோமேயானால், மொழிகளே தேவையில்லை. அவர் உருவாக்கின பிம்பங்கள் மனசில் பதிந்துவிட்டன. அங்கே மொழி அழியுது. அழியக்கூடிய மொழியைக் கெட்டி பிடிச்சிட்டு அழுகறதில் அர்த்தமில்லை. இந்த ஒரே காரணத்தினால் தான் நாம் வந்து ஒவ்வொரு நாவலுக்கும் தகுந்த மொழியைத் தேர்வு செய்யனும். மொழித் தேர்வல்ல, உள்ள மொழியைத் தேர்வு செய்யனும். நான் சொல்லும் மொழி என்பது எங்க பகுதியில் நம்ம அம்மா அக்கா, பக்கத்துவீட்டு அம்மா பேசறது.

எங்க ஊருக்கும் மாவடுக்கும் 20 கிலோ மீட்டர் தான் தூரம். எல்லா பேராசிரியர்களும் ஒருங்கே கூடியிருக்கிறார்கள். 11 மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய 11 சொற்கள். ஒரு சொல்லுக்கு யாராவது அர்த்தம் சொல்லுங்க என்றேன். 22 கிலோ மீட்டர் தூரம் வித்தியாசத்திலே, கேட்ட கேள்விக்கு யாருமே பதில் சொல்ல முடியவில்லை. நீங்களெல்லாம் தமிழ்ப் பேராசிரியர்களா? இது தான் கேட்டேன். உங்க ஜென்ம காலத்திற்கும் என்றைக்காவது டிக்ஷனரியை புரட்டியிருக்கிறீர்களா என்று கேட்டேன். உங்கள் இலக்கியத்தில் சொற்கள் இருக்கு. டிக்ஷனரியில் இருக்கு. தேவை உங்களுக்கு இல்லை. நான் எழுதின அந்தச் சொற்களை மீரான் மலையாளம் எழுதுகிறான் என்கிறார்கள்.

இப்படி இந்த மொழி அழிந்து பிம்பங்கள் உருவாகுமே யானால் அதுதான் ஒரு சிறந்த நாவல். நாவலில் முக்கியமான விஷயம் வாசகர்கள் மனதில் பிம்பங்கள் (இமேஜ்) உருவாகி மொழி அழியனும். இந்த அடிப்படையில் தான் என்னுடைய எழுத்து. ஏன்னா இன்றைக்கு நான் என் நாவலில் ஒரு இடத்தில் சொன்ன வசனத்தை இன்னொரு இடத்தில் சொல்ல மாட்டேன். கிட்டதட்ட 1500 பக்கங்களில் அப்படித்தான் கையாண்டிருக்கிறேன். நீங்க கூர்மையாகப் பார்த்தால்தான் தெரியும்.

இன்னொரு குற்றசாட்டு மீரான் வந்து ஒரே விஷயத்தை திருப்பித் திருப்பி சொல்லுவார். உண்மைதான். என்னுடைய ஊர் தேங்காய்பட்டிணம். நான் சொல்லக்கூடிய கதை விஷயம் தேங்காய் பட்டணம் மக்களுடையது. சென்னை, திருநெல்வேலி, திருச்சி வாழ்க்கை எனக்குத் தெரியாது. எழுதின எல்லாக் கதையும் எங்க தேங்காய் பட்டிணத்தைப் பற்றி தான். ஏன் என்று சொன்னா திருநெல்வேலி வாழ்க்கை என்னோடு ஒன்றவில்லை. சின்ன வயதில் நான் கண்டது; கேட்டது; பரிச்சயப்பட்டது. அனுபவிச்ச வாழ்க்கை.

உங்களிடம் உண்மையான முகத்தோற்றம் இல்லாது 'நல்லா இருக்கிறீர்களா' என்று கேட்டு சிரிக்கிட்டு கொஞ்சம் தொலைவு போனவுடன் அவன் ஒரு முட்டாள் என்றால் அது கள்ளத்தனமானது. இந்தக் கள்ளத்தனமான வாழ்க்கையைத்தான் திருநெல்வேலியில் பார்த்துக்கிட்டு இருக்கேன். தேங்காய் பட்டிணத்தில் சின்ன வயதில் ஒரு சின்ன பையன் வேட்டியை அவிழ்த்துவிட்டு இருக்கேன். குழந்தையா இருந்து வேட்டியை அவிழ்த்துவிட்டு இருக்கேன். விவரம் தெரியாது. அந்த வயதில், அந்த நாளில் அந்த மக்கள் எப்படி நடந்துகிட்டாங்க என்று விவரமாக அன்றைக்குப் புரிந்து கொண்டேன். அன்றைக்குப் புரிந்துக் கொண்டதை இன்றைக்கு எழுதுகிறேன். இப்படித்தான் மனிதனைப் படித்தேன். இப்ப எனக்குப் படிக்க முடியவில்லை. ஏனென்றால் எனக்கும் உங்களுக்கும் நிறைய திரை கிடக்கிறது. மனிதனுடைய மனதை வாசிக்கப் படிச்சது இன்றைக்கல்ல. நான் அன்டர்வியர் போட்ட காலத்திலேயே மனித மனதைப் படிச்சேன். இவன் எப்படிப்பட்டவன் இவனுடைய குணாதிசயங்கள் என்ன, எப்படி என்று முழுமையாகப் படிச்சாச்சு. இப்ப பிராக்டிக்கலா இருக்கேன். இப்ப யாரைப் பார்த்தாலும் வாங்க சாயா குடிச்சாச்சா? சரி போய்ட்டு வாங்க என்றிடும் அவரை நான் படிக்க முடியாது. சின்ன வயசிலே கண்ட வாழ்க்கை அனுபவங்கள் அதைத்தான் இங்கு எழுதிட்டு வரேன்.

நாலு நாவலும் ஒன்று தான். நான்கு நாவல் இல்லை. முக்கியமாகக் கவனிக்கக்கூடிய ஒன்று படைப்பில் அந்தப் படைப்புகளை வெளிப்படுத்தக்கூடிய பாவ உணர்ச்சிகள். அவைதான் முக்கியம். உருவம் ஒன்றுதான். ஓர் ஓவியன் நாலு காகத்தினுடைய படம் வரைகிறான். எல்லாம் ஒன்று போல் இருக்கும். சாதாரண என்னைப் போல் ஒருத்தன் வந்து என்ன பைத்தியம் ஒரே மாதிரி நாலு காகம் வரைகிறான் என்பேன். நான் பைத்தியக்காரன் அப்படி தான் சொல்லுவேன். முதல்ல நாலு காகத்தினுடைய உருவம் அல்ல முக்கியம். அந்த நான்கு காகம் வெளிப்படுத்தக்கூடிய "பாவம்" தான் முக்கியம். உருவம் ஒன்று தான். ஒன்று வந்த அந்த இரையை எப்படி கொத்திட்டு போவோம்னு தர்க்கம் பார்த்துக்கிட்டு இருக்கும்; இன்னொன்று அடுத்தவ வாயிலிருந்து எப்படித் தட்டிட்டுப் போவோம் என்று பார்க்கும். இன்னொரு காகம் கைவிட்டு போச்சு என்று ஏமாற்றத்தோடு இருக்கும். இன்னொன்று இயலாமையைக் காட்டும். இந்த நான்கு பாவமும் அந்த ஓவியனுக்குத்தான் தெரியும். பார்க்கக்கூடிய உங்களுக்கும் எனக்கும் தெரியாது. பார்க்கக்கூடிய உங்களுக்கும் எனக்கும் தெரியாத காரணத்தினால் ஏன் பைத்தியம் புடிச்ச மாதிரி வரைஞ்சிருக்கான். இப்படி ஒரு பைத்தியம் பிடிச்ச கேள்விதான் என்னுடைய படைப்பை நான்கும் ஒன்றுதான் என்றிடும். எந்த வகையிலே எந்த இடத்திலே எந்தக் கதாபாத்திரத்தில் ஒற்றுமை இருக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னா நான் ஏற்றுக் கொள்கிறேன். கடலோரக் கிராமத்தில் வரக்கூடிய இவருக்கு இன்னின்ன வகையில் ஒற்றுமை இருக்கு. மொழியில் ஒற்றுமை இருக்கு. எதுவும் சொல்லி இதுபோல் அது இருக்கு அது போலத்தான் இது இருக்குன்னு இன்றும் சொல்லவில்லை.

சாய்வு நாற்காலி கதையைப் புரிஞ்சிக்க வாசகர்கள் வரவே இல்லை. அடிச்சுப் பேசுவேன். நான் என்ன நோக்கத்தில் எழுதினேனோ அந்த நோக்கத்தை யாரும் புரிஞ்சிக்கவே இல்லை. பெருமையா பேசறேன்னு நினைக்காதீர்கள். நம்முடைய வாசிப்பு ரசனை மிகவும் குறைந்துள்ளது. சாய்வு நாற்காலியின் கதை குடும்பக்கதையாகத் தான் இன்று எல்லோரும் பேசிக்கிட்டு வராங்க. இந்தியாவுடைய முகம் அதை திருப்பி ஒப்பிட்டுப் பாருங்க. சாய்வு நாற்காலியை நம்ம அமைப்பினுடைய சிம்மாசனமாக, முஸ்தபா நம்ம பிரைமினிஸ்டர் ஆக. சவுதாம்களை இந்தியாவாகவும், மரியம்பீவியை இந்திய மக்களாக அந்த கட்டிலில் படுத்திருக்கும் முஸ்தபா அரசியல்வாதியாக, இப்படி ஒவ்வொன்றையும் ஒப்பிட்டு சொன்னா, சின்ன நாவலைப் படிக்க இந்தியாவுடைய முழுசித்திரம், இந்திய வாழ்க்கை குடும்பத்தின் வீழ்ச்சியைக் காட்டி, ஒன்றைக்காட்டி

ஒன்றைக்காட்டும். வெளிப்படையாக எதை நினைக்கிறோமோ அந்தக் காலச் சக்கரத்தை, சுழற்சியை யாரும் புரிந்து கொள்ளவில்லை. இன்னும் நிறைய புரியாம இருக்காங்க. இரண்டரை நூற்றாண்டு காலத்தில் ஒலிக்கோடுகள் வரைந்துள்ளார்கள். ஒலிக்கோடுகள் என்றால் கிராம போன்-ஐத்தான் ஒலிக்கோடு என்று குறிப்பிட்டு இருந்தேன். அதனால் சாய்வு நாற்காலி கிட்ட தட்ட வரலாற்றுத் தேடல்தான்.

இன்று வரை கேரளா வரலாற்றில் நம்பிக்கை கொடுக்கக்கூடிய நேரம். மார்த்தாண்டவர்ம அரசரை வந்து நவீன கேரளா சிற்பி என்று சொல்லுவார்கள். நான் இல்லை என்கிறேன். தெற்கு வீட்டு பிள்ளைமார், பப்பு தம்பி, ராமு தம்பி பற்றி அறியனும். மீசை உள்ளவர் நல்லவர்கள் இல்லை என்றிடும் கேரளா வரலாற்றை - மார்த்தாண்ட வர்மன் வரலாற்றை - அடிப்படையில் மறுக்கிறேன். அப்படி அந்த நாவலில் ஏன் மறுக்கிறேன். ஏனென்றால் இராமவர்மராஜா ஒருத்தர் இருந்தார். அவரு சுசீந்தரம் கோயிலுக்கு வந்தார். வடநாட்டிலிருந்து பெண்கள் வந்திருந்தார்கள். ஒரு பெண்ணைப் பார்த்து காதல் ஏற்பட்டது. அந்தப் பெண்ணைத் திருமணம் செய்கிறேன் என்றார். அந்தப் பெண் ஒரு கண்டிஷன் சொன்னாள். 'என்னுடைய குழந்தைக்கு அரச உரிமை - சிம்மாசன உரிமை - கொடுப்பியா' அப்படின்னு கேட்டாள். வாக்குக் கொடுத்தார். கல்யாணம் ஆகி ஒரு பையன் இருந்தான். பம்பு தம்பி, ராமு தம்பி, இவர்கள் என்ன பண்றார். சகோதரி குழந்தை பெறாத காரணத்தினால் இன்னொரு சகோதரியைத் தத்தெடுத்து அந்த சகோதரிக்கு ஒருத்தனை கல்யாணம் பண்ணி வச்சி, அதில பிறந்தவர் தான் மார்த்தாண்ட வர்மன். அவருக்கு ராஜ அதிகாரம் கொடுக்கவில்லை. அவரு என்ன செஞ்சார்னா மருமக்கமாருடைய அப்பாவுடைய சொத்து மகனுக்கு வரனும்னு இந்த பப்புதம்பி, ராமு தம்பியோட வாதிட்டாங்க. இவங்களை ராஜ துரோகியா ராஜா சொன்னார். அந்த எட்டு வீட்டுப் பிள்ளைமார் 40 பேரையும் தூக்கில் இட்டுக் கொல்கிறார்கள். தமிழ்நாட்டில் தூக்கில் கொல்லாது மைதானத்தில் ஏலம் போடுவார்கள். ஏலம் யாருக்கு? ஒதுக்கித் தள்ளப்பட்ட மீனவர்கள் தான் ஏலம் எடுக்கலாம். வேறுயாரும் ஏலம் எடுக்கக்கூடாது. மார்த்தாண்டவர்ம மஹாராஜாவும் இந்தக் குற்றம் செய்யாத பெண்களைப் பரச்சயமா ஏலம் போட்டு மீனவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்த மீனவர்கள் என்ன பண்ணாங்கன்னா ஏலத்தில் பெண்களை எடுத்துட்டுப் போய் திரும்ப வேறு ஊருக்கு பல்லக்கில் ஏற்றி அனுப்பிட்டாங்க. அந்தக் குடும்பம் கேரளாவுக்கு பகுதியிலும், கேரளாவின் வெளியிலும் சேர்ந்து போய்விட்டது. மீனவர்கள் தங்களுடன் வைத்துக் கொள்ளவில்லை.

அந்த அரசனை திருவிதாங்கூர் கேரளாவின் சிற்பி என்று சொன்னா எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். இந்தக் கேள்வி அந்த நாவலில் இருக்கு. அன்வர் பப்பு தம்பி, ராமு தம்பி போராடினார்கள். அதுதான் சட்டம் ஆகிவிட்டது. கூர்ந்து படித்தால் புரியும் 250 ஆண்டு நவீன திருவிதாங்கூர் வந்தது பப்பு தம்பி ராமு தம்பி மார்த்தாண்ட வர்மாவாலா?. இந்த வரலாற்று மறுப்பு இந்த நாவலில் இருக்கு. இதற்கு நான் ரொம்பப் படிச்சேன். சேலத்தில் பாதிரியார் ஒருத்தர் தான் ஆதரவாகப் பேசினார்கள். மற்ற மார்க்கத்தவர்; சிந்தனையாளர் சொன்னார். நீங்க சொன்னது சரி என்றால். அப்படி ஒரு தேசத்தினுடைய வரலாற்றை மறுக்கக்கூடியது இந்த நாவல் என்றனர். இந்த நாவலில் இந்தப் பக்கம் யாரும் பார்க்கவில்லை.

தேங்காய் பட்டணம் என்று சொல்லக்கூடிய குக்கிராமத்தில் ஒரு சின்ன வீட்டில் ஒரு முஸ்தபா வெளியே காமதேனுவில் பெரிய ஆள். நான்கு நாவலில் சாய்வு நாற்காலி தான் பிடிச்சது. இன்னொன்று அந்த மக்களுக்குரிய அதிகாரம், என்ற இந்த கால சுழற்சிதான் அந்த நாவல். இந்தச் சாய்வு நாற்காலி என்கிற அதிகாரம் முதலில், சந்நியாசி இடம் இருக்கு. சந்நியாசியிடமிருந்து ஒரு மன்னர் இடம் வருது. மன்னர் இடம் இருந்து முஸ்தபாவிடம் வருது. அவர் ஒரு தலித். கடைசியாக சாய்வு நாற்காலி கான் என்பவரிடம் வருது. சாணி அள்ளி வேலைப்பார்ப்பவர் குஷியா. கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து இருப்பார். இதைப் பார்க்கப் பொறுக்காது. காலச்சுழற்சியில் காம விகாரம் இப்படி மனிதனை ஆட்டிப் படைக்கும். முஸ்தபாக்கள் மூதாதையர்கள் ரத்தம் பின் தலைமுறையில் கொல்வார்கள். அது எப்படி? இந்த ஆங்கிள் எல்லாம் ஒன்றுமே பார்க்காம ஒரேயடியா ஒரு முஸ்லிம் குடும்ப வீழ்ச்சி என்ற குறுகிய வட்டத்தில் நாவலைப் பார்க்கிற ரசனை நம்மள்ள இருக்கு.

முதலில் நாவலை எழுதறதைவிட நாவல் என்ற கலையை ரசிக்க உண்டான நிலையைப் பாருங்க. பெரும்பாலும் நல்ல படைப்புகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. சிலோனில் வரக்கூடிய நல்ல படைப்புகளை நாம் யாரும் கண்டதில்லை. எங்க வீட்டில் நிறைய நூல்கள் இருக்கு. யார் தேடப் போறாங்க என்று அப்படி படிக்காமப் போட்டு விட்டேன். ஒரு நிர்ப்பந்தத்தில் தேவகானம் எடுத்து படிச்சேன். அற்புதமான நாவல். தமிழ்நாட்டில் பேசவே இல்லை யாரும். அமெரிக்காக்காரன் இங்கிலீஸ் எழுதினா இவன் பேசறான். லண்டன்காரன் எழுதினா கூட்டம் போடுறான். இரண்டு நாளைக்கு முன்கூட 'ஜியாவுத்தீன் தர்பார்'னு லண்டன் பப்ளிகேஷன் பற்றி மலையாளத்தில் ஒரு பெரிய ஆர்டிகிள்

லண்டனில் வெளியிட்டதைப்பற்றி மலையாளத்தில் கட்டுரை எழுதியிருந்தார். மலட்டு நூல்களுக்கு கருத்தரங்கு நடக்குது. ஒரு நல்ல படைப்பாளி ஊற்றுக்கண். அதிலிருந்து ஏதாவது நாம படைக்கனும்னு தோனும். ஒரு பொறி எனக்குக் கிடைக்கும். இந்தப் பொறி எந்த நாவலில் இல்லையோ அது தான் மலட்டு நாவல்.. இந்த மலட்டு நாவல்களுக்குத் தான் நிறைய கருத்தரங்கு நடக்குது. நல்ல நாவலைக் கண்டதும் யாருமே மௌனமாக இருந்துவிடுகிறார்கள். இந்தப் போக்கு தமிழில் மாறனும். நல்ல விமர்சனம் நம்மகிட்ட இல்லை. நாவல் யார் எழுதினது என்பதைப் பார்க்காமல் நாவல் எப்படிப்பட்டது என்று பார்க்க நல்ல விமர்சகர் நம்மக்கிட்ட இல்லை. நமக்கு ஏன் வம்புன்னு கம்முனு இருந்துவிடுகின்றனர். துணிச்சலா பொறுப்புணர்வோடு தமிழ் இலக்கியம் வளரனும் என்ற குறிக்கோளுடன் நல்ல எண்ணத்திலே நல்ல படைப்புகளை விமர்சிக்கனும். தரமற்ற படைப்பு மோசமானது என்று சொல்வதற்கு தி.க.சி. அளவுக்குத் துணிச்சல் வேறு யாருக்கும் இருக்காது. வாயில சொன்னா போறாது; எழுதிக் காட்டனும். மீரான் எழுதறது குப்பை; சுந்தரராமசாமி எழுதினது குப்பை என்று சொல்றதுக்கு யாரும் துணிச்சலுடன் இருக்கிறார்களா? குப்பை என்று போட்டா பத்திரிகைக்காரன் போடாம பாராட்டாம இருப்பான். இது மாதிரி பாராட்டமுடியாத நாவல் நிறைய வருது. சில நாவலுக்கு எந்தத் தகுதியும் இருக்காது. படிச்சு உங்க கருத்தை சொல்லுங்க என்றார் ஒருவர். கருத்தைச் சொல்றதுக்கு மொழி இல்லை என்னிடம். விமர்சன மொழியே தெரியாது. எனக்குத் தெரிஞ்ச மொழி படைப்பு மொழி. இரண்டும் வேறு என்பதை முதலிலேயே சொல்லிவிட்டேன். படைப்பு மொழிக்கும் தமிழ் மொழிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அது ஒரு கல்லூரி வளாகத்தில் உள்ளது. மக்கள் மொழி வேறு. மக்கள் மொழி வாயிலாகத்தான் படைக்க முடியும். இதை ஏன் படைப்பு மொழி என்று ஆணித்தரமாகச் சொல்கிறேன் என்றால் முறையாகக் கற்று இனி மலையாளத்தில் எழுத முடியாது. மலையாளம் நல்லாத் தெரியும். இலக்கணம் தெரியும். நிறைய வாசிச்சு இருக்கேன். ஆனால் எனக்கு எழுத வராது. எனக்கு நாவல் மொழி பெயர்க்க வேறு ஆள் வேணும். தப்பு இருந்தால் நானே சொல்லிவிடுவேன். என்னுடைய படைப்பு மொழி, நான் எழுதும் இந்த மொழியைத் தவிர வேறு மொழியில் எழுதச் சொன்னால் எழுத முடியாது. நானே எவ்வளவோ முயன்றும் பார்த்தேன். முடியவில்லை. என்னால் செய்யமுடியும். ஆனால் அந்தப் படைப்பு மொழியில் வரவில்லை. அந்தப் படைப்பு மொழியை வச்சுத் தான் இப்போ நான் மலையாளத்தில் எழுதுகிறதாகச் சொல்கிறார்கள். நான் ஆக்சுவல்ட் ஆக மலையாளத்தில் எழுதவில்லை.

சாய்வு நாற்காலி முழுவதும் தமிழில்தான் எழுதினேன். மொழி வசம் தெரிந்திருந்தது. இப்ப வேகம் வந்துவிட்டது. இன்று எனக்கு எழுத நிறைய விஷயம் இருக்கிறது. ஆயிசு தான் நிறைய வேண்டும். இப்பக் கூட புதிய ஒரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். ஒவ்வொரு பத்திரிக்கையில் ஒவ்வொரு கதை. மொத்தமாக எழுதினா அது ஒரு நாவல். நீங்க எங்கிருந்து எடுத்துப் படிச்சாலும் ஒரு முழுமை கிடைக்கும். 20 சாப்டர் எடுத்துப் படிச்சா ஒரு முழுமை கிடைக்கும். திரும்ப 1 சாப்டர் படிச்சு அதிலும் ஒரு முழுமை கிடைக்கும். அப்படி இப்படி குழப்பிப் படிச்சாலும் கடைசியில் ஒரு உருவம் கிடைக்கும். இப்படி ஒரு புதிய மொழி இப்படி ஒவ்வொரு பத்திரிக்கையில் எழுதியிருக்கேன். என்னுடைய முதல் பாகம் கணையாழியில் வந்தது. இப்ப நான்கு சாப்டர் எழுதி வைத்திருக்கிறேன். நான்கு பத்திரிக்கைக்கு ரெடியாய் செய்து வைத்திருக்கிறேன். இப்படி ஒரு புதிய முயற்சி. இந்த சாய்வு நாற்காலி எழுதின டெக்னிக் இன்னும் யாருக்கும் புரியவில்லை. இவன் எப்படி இந்தக் கதையை சொன்னான். ஒரு விமர்சனம் என்று சொன்னால் ஒரு கதையை சொன்ன முறை எப்படி? அதற்குப் பயன்படுத்தின மொழி எப்படி? இந்த மொழி வாயிலாக அந்தக் கதாபாத்திரங்களைப் பற்றி முழுமையான ஒரு உருவம் கிடைச்சுதா? இப்படியெல்லாம் விமர்சனக்கண் கொண்டு பார்க்கனும். இந்தக் கட்ட விமர்சனம் தான் இப்ப இருக்கும் இருக்கிறார்கள். பூரா உருப்படி ஆக மாட்டான். வருகின்ற நாவல் எல்லாம் பரிதாபமாக இருக்கும். குப்பை போல அனுப்பிக்கிட்டே இருக்கிறான். படிச்சு இரண்டு இடத்தில் இரண்டு வார்த்தை சொன்னால் அதற்கு மேல் போனால் படிக்க முடியவில்லை. உள்ளே போகவே முடியாமல் அவர்களை வழி நடத்த நல்ல விமர்சனம் இல்ல. மலையாளத்தில் நீங்க எடுத்துக்கிட்டீங்கன்னா கிழிச்சு போடுவாங்க. தீவச்சு சுடு என்று எழுதுவான். குப்பை என்பான் இரண்டு வாரத்திற்கு முன் பேரன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஜெயமோகன் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார். சில உலகத் தரமான நாவல் மலையாளத்தில் தான் இருக்கு என்றார். மலையாளத்தில் ஒரு பத்திரிக்கை வருது. அந்தப் பத்திரிக்கையில் வார பலன் என்று நிரந்தரமாக ஒரு செய்தியைப் போடுகிறார்கள். மலையாள படைப்பாளிகளில் தமிழில் பெருமையாக பேசப்படும் பஷீர் அகம்மது, எம்.டி. வாசுதேவன் நாயர், அதே மாதிரி மலையாளத்தில் என். கிருஷ்ணராய் மலையாளத்தில் வந்த நாவலை தமிழில் எழுதினா இங்கு கூட்டம் நடக்கும். மலையாளத்தில் மொழி பெயர்ப்பு ஒரு பேஷன் ஆகிவிட்டது. தமிழில் நல்ல படைப்பு இருக்கிறது. அவற்றை தெலுங்கு கன்னடத்தில் கொண்டு

போகவில்லை. பெங்காலிக்குக் கொண்டு போகவில்லை. யாராவது ஒருத்தர் தனிப்பட்ட ஆர்வத்தின் பேரால் தமிழிலிருந்து ஒரு நாவலை இந்தியாவின் பிறமொழிகளில் மொழிபெயர்க்க இருக்காங்களா சொல்லுங்க. சாகித்ய அகாடமிக்குப் போய் தலைகாணி போட்டு படுத்திருந்து அங்கிருந்து வாங்கி பெங்காலியில் சொல்லுவான். மலையாளத்தில் கன்னடத்திலும் செய்வான். ஆனா இங்க நம்ம ஆசாமி என்ன பண்றார். அவங்க கால்ல விழுந்து மலையளாத்திலிருந்து தமிழில் கொண்டு வர்றேன் என்கிறார். ஒருத்தர் இப்ப ஒரு புக் பண்ணார். வெளியிட்டார். பலபேர் காலைப் பிடிச்சு முடியாமல் கடைசியாய் இங்க வந்துட்டார்.

புத்தகம் வெளியிடும் கஷ்டம் பற்றி நான் சொல்றேன். நம்ம மொழி நம்ம படைப்புகளைப் பிற மொழிக்குக் கொண்டு செல்லனும். பிறமொழி படைப்புகளை நம்ம மொழிக்கு கொண்டு வரவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதில் இருக்குற ஆர்வம் அதே ஆர்வத்தை இதிலேயும் காட்டுங்கள். சமீபத்தில் ஒரு கட்டுரை படிச்சேன். மலையாளத்தில் இந்தியாவிலேயே கிட்டதட்ட ஒரு 15 பெரிய படைப்பாளிகளைக் கூப்பிட்டு ஒரு கருத்தரங்கு நடந்தது. ஏன் தாகூருக்கு பிறகு இந்தியாவில் இலக்கியத்திற்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை என்பது அங்கு விவாதம். அத்தனை பேரும் சொன்ன கருத்து என்ன தெரியுமா? தாகூர் வாழ்ந்திருத்த காலத்திலேயும் தாகூருக்குப் பிறகும் சரி. நோபல் பரிசு கொடுப்பதற்குத் தகுதியானவர் “பாரதி”. அவருக்குக் கொடுக்காததற்கு காரணம் அவருடைய படைப்பு அந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப் படவில்லை. தாகூர் படைப்புகளை அவரே ஆங்கிலத்தில் எழுதி வெளிநாட்டில் பயணம் செய்த போது வெளியிட்டார். இது தமிழன் செய்யவில்லை. வடநாட்டிலுள்ள 15 மிகப் பெரிய படைப்பாளிகள் கருத்தரங்கத்தில் அவர்கள் சொன்ன இக்கருத்தை மலையாளப் பத்திரிக்கைகளில் நான் படிச்சது. அப்படி அவ்வளவு மிகப் பெரிய உலக அங்கீகாரம் நம் தமிழுக்குக் கிடைக்கவில்லை. இந்தியில் சுமாரான புக் ஆங்கிலத்தில் வேறு விதத்திலும் போகிறது. தமிழ்நாட்டில் ஒரு எழவும் இல்லையே. சாகித்ய அகாடமியில் நானும் இன்னும் சிலரும் சேர்ந்து 10 நாள் நாகரீகம் என்ற ஒரு மொழிபெயர்ப்பு நடத்தினோம். இது மொழி பெயர்ப்பு பெற்ற முக்கியம். 28 பேர் மலையாளத்திலிருந்து தமிழிலும் 28 பேர் தமிழிலிருந்து மலையாளத்திலும். சுந்தரராமசாமி, நீலபத்மநாபன், நான், ஜெயமோகன் ஆகியோர் போயிருந்தோம். அங்க இருந்து பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். மலையாளத்திற்கு போன 28 கதைகள் பதிப்பாகிவிட்டன. மலையாளத்திலிருந்து தமிழுக்கு வந்த பேப்பரே எங்கே என்று

யாருக்கும் தெரியாது. இன்றைக்கு ரூ.25,000/-, ரூ.50, 000/- கொடுக்கத் தயாரா இருக்கோம். சாகித்ய அகாடமி இருக்கா? பல்கலைக்கழகம் இருக்கா? பொறுப்புள்ள இலக்கிய அமைப்புகள் இருக்கா? அந்த பேப்பர் ஸ்கிரிப்ட் கடைசியில் டி.பி. தம்பி என்பவரிடம் இருந்து யாரிடமோ கொடுத்துப் போன வாரம் நீல.பத்மநாபனிடம் இதைப்பற்றி ரொம்ப நேரம் பேசிட்டு இருந்தேன். இதுதான் நம்முடையகேடு. பலர் பணம் தந்து எழுதித் தரத்தயாராக இருக்கிறார்கள். அந்தப் பணத்தை ஏற்று நடத்த பொறுப்புள்ள நிறுவனம் இலக்கிய அமைப்பு இல்லை. தமிழ் ஆர்வம் கூடி உள்ளவர்கள் தமிழ்ப் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். மூச்சு விட தமிழ் தான். என்ன செய்ய? இந்தத் தமிழ்நாட்டிற்கு இந்த அவலம். சரி நம்ம தமிழ்நாடு அரசாவது நல்ல படைப்புகளை ஊக்குவிப்பது உண்டா? அதுவும் இல்லை. சாய்வு நாற்காலி பிரிண்ட் பண்ணதும் கதை தான். என்னுடைய நாவல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கதை உண்டு. அதைப் பெரிய பெரிய நாவலாக எழுதலாம். இந்த சாய்வு நாற்காலி அச்சடிக்க வேண்டி வங்கிக் கடனுக்குப் போனேன். எழுத்தாளர்களுக்குக் கிடையாது என்றனர். அச்சடிக்கனும் வழி சொல்லுங்க என்றேன். உங்க மனைவி படிச்சிருக்காங்களா என்று கேட்டார்கள். ஆமாம், மூன்றாம் வகுப்பு தான் படிச்சிருங்காங்க என்றேன். சிக்கலாகப் போச்சே சார். சரி ஏதாவது வழி வேணும். எஸ்.எஸ்.எல்.சி. படிச்சேன் என்று சொல்லுங்க என்றார். எழுதப் படிக்க தெரியாத மனைவி பெயரில் கடன். ரூ. 25,000 கடன் வாங்கித்தான் சாய்வு நாற்காலியை பிரிண்ட் செய்து விட்டேன். அந்த சாய்வு நாற்காலியின் முதல் வரியில் வங்கிக்கு நன்றி போடனும் என்றார்கள். படைப்பாளியான எனக்கு லோன் இல்லை. எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். முடியாது என்றார்கள். ரூபாய் 25,000/- லோன் தகுதி அவளுக்குத்தான் இருக்கு. எனக்குக் கேவலமாகப் போய்விட்டது. அதனால் பஞ்சாப் நேஷனல் வங்கியில் இப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இது இன்றைய லட்சணம். முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இந்த மாதிரி படைப்பாளியை ஊக்குவிக்கத் தமிழில் எந்த அமைப்பு இருக்கு. அரசில் என்ன சலுகை இருக்கு. பஸ்ஸில என்னை இறக்கிவிடுகிறான். நான் கம்ப்ளெயின்ட் பண்ணப்போறேன். நாகூருலிருந்து திருநெல்வேலிக்கு பஸ்ஸில நான் உட்கார்ந்திருந்த ஸீட் கண்டக்டர் ஸீட்டாம். அவர் சீட் முன்னால இருக்கு. அதுல நடத்துநர் எழுதியிருக்கு. இங்க வந்து என்னை வந்து எழுந்திரு என்றான். நான் எழுந்திருக்கல, எங்களுக்கு என்ன முன்னுரிமை இருக்கு. நிறைய பேரிடம் கேட்டேன். நாங்க இவ்வளவு கஷ்டப்பட்டு சிரமப்பட்டு லோன் வாங்கி எங்களால முடிஞ்சதைத்

தமிழுக்குச் செய்றோம். ஆனா எங்களுக்கு இங்கு என்ன இருக்கு. என்ன அங்கீகாரம் இருக்கு. சாகித்ய அகாடமி விருது வாங்குவதில் என்ன மதிப்பு இருக்கு. இன்றைக்கு சாகித்ய அகாடமி வாங்கினவர்கள் வறுமையில் வாடுகிறார்கள். வல்லிக்கண்ணன் போன்ற இவங்கள்ளாம், பரிதாபமான விஷயம். அவர்களுடைய நான்கு பெண் குழந்தைகளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்காம இருக்காங்க. ஒரு பெண்ணுக்கு 35, 32, 30 வயசு இப்படி இருக்கு நிலைமை. 1973-ல் சாகித்ய அகாடமி வாங்கினார். சாகித்ய அகாடமிக்கு என்ன அர்த்தம்? நான் கேட்கிறேன். படைப்பாளிக்கு இங்கு என்ன அங்கீகாரம்? தமிழன் ஆளக்கூடிய தமிழ் மண்ணில் இந்தத் தமிழ்நாட்டில் எந்தச் சலுகையும் கிடையாது. மலையாளத்தில் புக் அச்சடிக்க தமிழ்நாட்டில் கடன் கொடுத்திருக்கான். திருக்குறள் மலையாளத்தில் வர தமிழக அரசு கடன் கொடுத்திருக்கு. மீரானுக்கு கொடுப்பாரா? தி.க.சி. கட்டுரை வெளியிடக் கொடுப்பாரா?

முதலில் சாகித்ய அகாடமி படைப்பாளிக்கு அங்கீகாரம் அளிக்கனும். அவனுக்கு அரசுதரப்பில் ஊக்குவிக்கனும். ஒரு இலக்கிய அமைப்பு அரசு சார்பாக இருக்கனும். கேட்டா அந்த மினிஸ்டர், இந்த மினிஸ்டர் ஃபைல் அங்க இருக்கு, இங்க இருக்கு என்கிறார்கள். அன்றைக்குக் கொடுத்த அறிக்கையோடு சரி. கேரளா சாகித்ய அகாடமி என்னவெல்லாம் நடத்தியிருக்கு. மாதாமாதம் ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு கூட்டம். பிற மொழிகளிலிருந்து கூப்பிட்டிருந்தார்கள். நானும் போயிருந்தேன். கருத்துப் பரிமாற்றம் நடந்தது. தமிழில் கொண்டு வந்த கதைகளைப் போல் கன்னடம், மலையாளம் சேர்ந்த ஒரு மொழி பெயர்ப்பு கட்டுரை. கன்னடப் பல்கலைக்கழகங்கள் எழுதிக்கிட்டிருந்தது. இங்க எந்தப் பல்கலைக்கழகத்தில் நடந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு போனா மதுரைப் பல்கலைக்கழகத்துக்குப் போங்க என்றார்கள். நானும் அலைந்தேன். சார் வெளியிட வழி இருக்கா? இல்லை. இதுதான் தமிழ்நாட்டின் நிலை. முதல்ல இந்த அவல நிலை மாறனும். ஏன் சிறந்தவர்கள், பேராசிரியர்கள் நீங்கதான் இந்த நிலை மாற குரல் கொடுக்கனும். சாகித்ய அகாடமி உருவாக்கனும் நம்ம தமிழில் உள்ள படைப்புகளைப் பிற மொழிக்கு கொண்டு வரனும். ஏன் நமக்கு மீண்டும் மீண்டும் 'ஞானபீடவிருது' கிடைக்கவில்லை என்று யாராவது என்றைக்காவது சிந்தித்தது உண்டா? இங்கு யாராவது பேசினோமா ஏன் கிடைக்கவில்லை. நம்ம தமிழில் உள்ள நல்ல படைப்புகளை ஆங்கிலத்தில், இந்தியில் மொழி பெயர்க்காத காலம் வரை, ஞானபீடவிருது கிடைக்காது. அப்படி வந்தால் நாம் யாரை புரப்போஸ் செய்யனும். நான் ஒருத்தர்னா

இவரு இன்னொருத்தர் என்று 10 பேர் 10 பேரை சாடினால் என்னாவது? ஒரு தகுதியான படைப்பாளியை ஊக்குவிக்க ஒரு அமைப்பு இருக்குமேயானால் நமக்கு ஞானபீட விருது கிடைக்க வாய்ப்பு இருக்கு. கேரளாவில் அப்படி அல்ல. எனக்குத் தெரியும். எங்கிட்ட வந்து 10 பேர் போன் பண்ணி சொன்னாங்க. பாலாமணி அம்மாவுக்கு ரெகமெண்ட் பண்ணினேன். பாலாமணி அம்மாவுக்கு தெரியும் நான் அடிக்குறிப்பு எழுதினேன். நீங்க எவ்வளவு நாளா இந்த சரஸ்வதி சம்மான் கொடுத்தீங்க. ஏன் நீங்க தென்னிந்தியர்களைக் கலந்தாலோசிக்கவில்லை. ஆனா நீங்க நிச்சயமா விருது கொடுத்தே ஆகணும் தென்னிந்திய மொழிக்கு கொடுக்கனும் என்றனர். அந்த வருடம் பாலாமணி அம்மாவுக்குக் கிடைத்தது. ஏன் இதைச் சொல்றேன். சொன்னால் பாலாமணி அம்மாளுக்கு குடுக்கணும்னு கேரளாவிலிருந்து 10 பேராவது போன் செய்ய வேண்டாமா. அப்ப அங்க எதோ ஒரு அமைப்பு இருக்குனு தான் அர்த்தம். சரி இந்த வருடம் இவருக்குக் கொடுக்கனும் என்று முறையாப் பரிந்துரைக்க அமைப்பு நம்ம கிட்ட இல்லை. 10 பேர் 10 பேரைச் சொன்னால் யாருக்குக் கொடுப்பாங்க. யாரோ ஜெயகாந்தனுக்கு கொடுக்கறதில கடுமையான எதிர்ப்பு இருக்கறதாச் சொன்னாங்க. இரண்டு பேரும் 10 பேர் சொன்னால் எப்படி ஒருத்தர் இரண்டு பேர் சொன்னாலாவது பரவாயில்லை என்று தமிழ்நாட்டிலிருந்து வந்து வருத்தப்பட்டுச் சொன்னாங்க. இந்த லட்சணத்தில் இருக்கு. நமக்குத் தேவை அதிகார பூர்வமான ஒரு இலக்கிய அமைப்பு. இப்ப இருக்கிற அமைப்பு எல்லாம் உபயோகம் இல்லை. நான் ஒரு அமைப்பு. மற்றொருவர் ஒன்று. அவரு தனி. எந்த அமைப்பு பற்றி முடிவு இருக்கும். அவங்க 5 பேர் சேர்ந்துவிடுவாங்க. இலக்கிய அமைப்பில் என்ன இருக்கு. நான் வந்து அவரைப் பற்றியும் தங்கர்பச்சான் இன்னொரு அமைப்பு பற்றியும் மாறிமாறி பேசி குழாய் சண்டை நடக்கும். இந்த முடி கொண்டை பிடிசண்டையை நிறுத்தனும். தேசிய அளவிலான அங்கீகாரம் நம் மொழிக்குக் கொண்டு வரனும். குறைந்தபட்சம் நமக்குள்ளே ஒற்றுமை இருக்கனும். அதற்கு நீங்க எல்லோரும் ஒத்துழைக்கனும்.

முத்துசாமி, நா.

படைப்பாற்றல் (Creativity) என்றால் என்ன என்று புத்தகங்களைப் படித்துக் குறிப்புகளை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குறிப்பைப் புரட்டிப் பார்க்க வேண்டும். இரவில் தூக்கம் வரக்கூடாது. கனவில் இந்த வரிகள் எல்லாம் வரவேண்டும். நாளை இப்படிப் பேசப்போகிறேன்; அப்படிப் பேசப் போகிறேன் என்று முடிந்தால் ஒரு ஒத்திகை செய்து கொள்ள வேண்டும் என்ற இவற்றை நான் செய்யவில்லை. நான் கொஞ்சம் பின்தங்கி விட்டேன்.

எங்களுடைய ஆட்கள் பின்தங்கக்கூடாது என்ற அக்கறை இருக்கிறது. அதனால்தான் அவர்கள் படிக்க வேண்டும் என்று சொல்லும் போது, தயாரிப்பதிலிருந்து கொண்டு வந்து விட்டோம். அதனால் ஒரு விஷயத்திலிருந்து நான் தொடங்கலாம் என்று நினைக்கிறேன். பிரசன்னா, பாகீரதி, இவர்கள் இரண்டு பேரும் நாடகத்தில் ஈடுபட்டதனால் "நான் எழுதுவதை விட்டு விட்டேன்" என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இதில் குறைப்பட்டுக் கொள்ள ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. யார் எழுது எழுது என்று வற்புறுத்துகிறார்கள்? ஏதாவது ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதமான விஷயத்தில் மாட்டிக் கொள்கிறான். இப்படி ஒரு காலகட்டத்தில் சிறுகதை எழுதுவது என்ற மனோபாவத்தில் என் படைப்பாற்றல் போனது. அதன் பிறகு தற்செயலாக நாடகம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்று நடிகர்களுடன் வேலை செய்கிறேன். அவர்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இதில் உள்ள பிரச்சினைகள் எனக்குத் தோன்றுகின்றன. அவற்றைத் தீர்ப்பதில் என் அறிவு செல்கிறது. அப்போது என்னுடைய படைப்பு அறிவு போகிறது. ஆனால் உங்களுக்கு நான் எழுதுவேன் என்று தோன்றுகிறது; எனக்கு எழுத வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுகிறது. ஏனென்றால் என்னுடைய படைப்பாற்றல் வேறு வழியில் போகிறது. என்னுடைய படைப்பாற்றலுக்காக எழுதாமல் உங்களுக்காக நான் எழுதுகிறேன். என்னுடைய படைப்பாற்றலும் உங்களுடைய தேவைகளும் ஒன்றாக இணைகின்ற ஒரு காலக்கட்டம் இருந்தது. அது மாறிவிட்டது.

என்னுடைய படைப்பாற்றல் போகின்ற விஷயத்தில் மாறுகிறது. அல்லது நான் எழுதுவனவற்றையெல்லாம் கொடு கொடு என்று கேட்டு வாங்கி வெளியிட்டு எனக்கு ஏராளமாகப் பணம் கொடுத்திருந்தால் நான் எழுதிக் கொண்டு இருந்திருப்பேன். அந்த வேலையை நீங்கள் இப்போதுதான் தொடங்கி இருக்கிறீர்கள். எழுத்து என்பது முக்கியமானது. அதற்கு சமூகத்தில் அந்தஸ்து வேண்டும். அதனை நீங்கள் தொடங்கி இருக்கிறீர்கள். எங்கிருந்து தொடங்குவது? இலக்கியச் சிந்தனைகள், அதன் தேவைகள், போக்குவரத்து எல்லாம் முடிந்துவிட்டது. இவை இல்லாத காரணத்தால் எழுத்து நின்று விட்டது. இப்பொழுது நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். எந்த சமூகத்திற்கு எழுத்து என்பது அவசியம்; எந்த மனிதனுக்குப் படிப்பு அவசியம்; எந்தச் சூழ்நிலை சமூகத்திற்கு அவசியம்; முழு சமுதாயமும் படிப்பு இல்லாமல், தீவிர படிப்பு படிக்கின்ற ஒரு சமூகம் இல்லாவிட்டாலும் கூட ஒரு சிறு பகுதியாவது படிப்பவர் இருக்க வேண்டும். இதுதான் சமூகத்திற்கு ஆரோக்கியமானது. இதனை உருவாக்குவதற்காக இன்று இதனைத் தொடங்குகிறீர்கள்.

"உன்னுடைய ஆர்வம் எவ்வளவு நாளைக்கு; தொடரும்; எப்படிக் குன்றும்; ஆர்வம் குன்றுவதற்குள்ளாக இங்கு, சூழ்நிலை உருவாகிவிடுமா? எந்தப் பிரச்சினை எல்லாம் இருக்கிறது. எப்படி நான் வந்து திரையரங்கில் அமர்ந்து கொண்டு தொடர்ச்சியான கற்றல் முறை (Continuous learning process) மூலமாக ஒரு நடிகருக்கு என்ன ஆகிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆர்வம் என்று குன்றும் என எனக்கு இன்று தெரியாது. இதே போன்று சமூகத்தில் பல விஷயங்கள்.

ஒரு கோவணத்தைப் போல ஒரு ஹால், யாருமே உபயோகிக்காத ஹால், சிமெண்ட், செங்கல் வைத்துக் கட்டத்தெரிந்த ஆட்களை வைத்து, கட்டப்பட்ட ஒரு பெரிய உத்வேகத்தோடு பலம், ஒரு இடத்தை வாங்கிப் பல வருடங்கள் காத்திருந்து கட்டிடத்தைக் கட்டிப் போட்டு, அதனை முடிப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டு, அதன்பிறகு வந்திருக்கின்ற ஒரு அவசியம், தேவை இருக்கிறது இல்லையா? இதனைப் போன்று சமூகத்திற்குப் பலரின் தேவைகள் இருக்கின்றன. எவ்விதத் தேவைகளை நாம் பெருக்கப் போகிறோம்? எப்படி எது மனிதனுக்கு ஆரோக்கியம் என எனக்குத் தோன்றுகிறதோ அந்த ஆரோக்கியமான வேலையை இந்தச் சமூகத்தில் நான் உருவாக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இங்கு வந்து எனக்குப் பொழுதுபோகாது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். சைக்காலஜிகலாக (Psychologically) நிலை கொள்ள முடியாமல்

போய்விடும். ஏதாவது மன இறுக்கம் (Depression) வந்து விடும். ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். பட்டினி கிடந்தாவது செய்து கொண்டே இருக்க வேண்டும். இதுதான் அந்தப் படைப்பாற்றல் (Creativity) என்பது.

யார் யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோமானால் வெவ்வேறு விதமாக நடந்திருக்கிறது. எவன் வந்து படைப்பாற்றலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் திறமைக்கு (Skill) மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, இந்தச் சமூகத்தில் என்ன தேவை இருக்கு எங்க மார்க்கெட் பண்ணலாம்; எப்படிப் பண்ணலாம் என்று செய்யறானோ அவன்தான் பிழைப்பான். அவனுக்குத்தான் Creative person (படைப்பாளி) அப்படிங்கற பெரிய முத்திரை குத்தப்படுகிறது. எவன் ஒருத்தன் ரொம்ப ஆழத்துல இருந்து விஷயங்களைக் கண்டுபிடித்து வெளியே கொண்டு வரானோ, அதற்காகக் காத்துக்கிட்டு இருந்து, விஷயத்தை ரொம்ப ரொம்ப அற்புதமான விஷயங்களை உண்டாக்குகிறானோ அவனை வந்து இந்தச் சமூகம் கண்டுகொள்வதில்லை. அவர்களை எப்படி வெளியே கொண்டுவருவது? அந்த வேலையைத்தான் இப்போது இவர்கள் செய்கிறார்கள்.

இலக்கியச் சங்கங்கள் ஏன் அமைக்க வேண்டும்? அதில் எழுத்தாளர்கள் ஏன் கலந்து கொள்ள வேண்டும்? சமூகத்தில் எழுத்தை மதிக்கின்ற சூழ்நிலை உண்டாக்க வேண்டும். சீரியஸ் (serious) எழுத்தை மதிக்கின்ற நிலை வரவேண்டும். பெரும்பாலும் சக எழுத்தாளர்கள் படிப்பதில்லை. இது உலக மார்க்கெட்டில் படிக்கப்படாமலேயே அச்சாகிறது. பணம் கொடுக்கணும், அதுக்குப் பிரசுரம் செய்யணும், அது வந்து நம்மூரில் நடக்கவில்லை, வெளியில் நடக்கிறது. அச்சாகும் நூல்களுக்கு இருக்கும் மதிப்பு மாற வேண்டும். அதைப்பத்து பேர்தான் படித்திருப்பார்கள். இந்தச் சமூகத்தில் நிரம்பி இருக்கும் பல அம்சங்களை நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் இல்லாவிட்டால் எல்லாவற்றையும் வெளியூரிலிருந்து கொண்டுவந்து விற்றுவிட்டுப் போய்விடுவான். இப்போது விற்கத் தொடங்கி இருக்கிறார்கள்; எல்லாவற்றையும் கொண்டு வந்து விற்பார்கள். அவை உயர்ந்தவை என்று நாம் சொல்லுவோம். இனிமேல் நம்மிடம் உள்ள சரக்கின் அளவோ மதிப்போ நமக்குத் தெரியாது. சங்கீதம் கேட்பது போன்ற ஒரு பழக்கத்தை உருவாக்க வேண்டும். சங்கீதத்தில் புதுமை செய்வதுதான் படைப்பு (Creativity). எது காதில் வந்து ரொம்ப அழகாகக் குடைகிறதோ அதுதான் சிறந்த சங்கீதம். இந்த தேசத்தில் இதுதான் நடக்கிறது.

யாருக்குப் படைப்பாற்றல் இருக்கிறது? நகரத்தில் உள்ளவர்களுக்கு இருக்கிறது. கிராமத்தில் இருப்பவர்களுக்குப் படைப்பாற்றல் கிடையாது; அதற்கு இந்தச் சமூகத்தில் இடம் கிடையாது. இப்படி இருக்க உலகச் சந்தையில் நமது சமூகத்திற்கு எந்தவகை மதிப்பு கிடைக்கப் போகிறது? ஆப்பிரிக்கன் டிரம் என்ற இசைக்கருவி நமக்கு எப்படித் தெரிகிறது? தெரிய வந்தது? இயற்கையாக ஹார்ட் பீட்டோட அடிக்கிறான். ஆனால் இங்கு ஒன்றும் கிடையாது. இங்கு முயற்சி செய்யனும் என்றால், தோலைத் தொடக்கூடாது; தீட்டு; மிருதங்கத்துக்குப் போட்ட தோல்தான் தொடனும் அதுதான் மதிப்பு. பறையில் போட்ட தோல் தீட்டு, மிருதங்கத்தில் போட்ட தோல் மதிப்பானது. இப்படித் தோலில் பேதம் பார்க்கும்போது மொத்த சமூகத்திற்குமான மனநிலை வளர்ச்சி ஆவதற்குக் காலமாகும். நம்முடைய நாட்டுப்புற வடிவங்கள் என்னவாக இருந்தன என்பதைப் பற்றிய அக்கறை கிடையாது.

திடீரென்று ஆங்கிலேயர் வந்ததும் என்ன ஆனது? நகரத்தைச் சார்ந்த ஆங்கிலம் படித்தவனைச் சேர்ந்து கலாச்சாரம் ஆங்கிலம் பேசுகிறவர்களைச் சார்ந்து போய்விட்டது. படிப்படியாகப் புரிந்து கொண்டது என்ன வென்றால் ஆடை அளவில் கூட பெரிய வித்தியாசம் இல்லை. பழக்க வழக்கங்களிலே பெரிய வித்தியம் இல்லை. ஒரே மொழி, ஒரே அடிப்படையில் இருக்கிறது. அப்போது வந்து இதனைக் கேட்டுக் கேட்டுப் பழகினான். இதிலே பங்கெடுத்துக் கொள்ள இங்கே வந்து கேட்க முடிகிறது. கலந்து கொண்டு சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட கலையை வெளிப்படுத்த அவனால் முடிகிறது. ஆனால் இன்று முடிவதில்லை. கிராமியக் கலை, சாஸ்திரீய கலை என இரண்டாக வெட்டியாகிவிட்டது.அது தமிழ் மட்டும் பேசுபவனுடையது, தாழ்ந்த சாதிக்காரனுடையது. இது ஆங்கிலம் பேசுபவனது கலை என்று பிரித்து விட்டார்கள். இந்தப் பிரிவு எப்படி வந்தது. இந்த வேற்றுமையை எப்படிப் போக்குவது? இதில்தான் என் படைப்பு இருக்கிறது.

தேவதாசிகளைப் பற்றிய நாடகம்தானே நாடகம் என்றோம். மேதா என்ற நடனக்கலைஞர் எங்கள் நடிகர்களோடு சேர்ந்து ஒரு தேவதாசியினுடைய வரலாற்றை (1860லிருந்து 1911 வரையிலான காலக்கட்டத்தில்) இங்கு என்ன நடந்தது என்ற நாடகமாக மாற்றினார்கள். அப்போது கண்ணப்பத்தம்பிரான் சொன்னார். அவருடைய ஊருக்குப் பக்கத்தில் திருமடி என்ற ஊரில் மட்டும் தேவதாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் நடனமெல்லாம் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது குடிசையில் ஒரு விழா என்று

சொன்னால், நாதஸ்வரம் எப்படி வந்து வாசிக்கப்படுகிறதோ அதே மாதிரி தேவதாசிகள் வந்து பரதநாட்டியம் அங்கு ஆடுகிறார்கள். பக்கத்தூரில் உள்ளவர்கள் எல்லாம் பார்க்கிறார்கள். அப்படியென்றால் பரதநாட்டியம் எல்லாருடைய மத்தியிலே இவர்களோடு இருக்கிறது. பிறகு சீர்திருத்தம் தொடங்கிய உடனே சபாவுக்கு வந்துவிட்டது. அவர்கள் கையிலிருந்து போய்விட்டது. ஆனால் இங்கே பார்க்கின்ற தொகையும் குறைந்து விட்டது. கிராமத்தில் இருந்தவன் பார்த்தான். இன்று எத்தனைபேர் பரதநாட்டியம் பார்க்கிறார்கள் சொல்லுங்கள்? சினிமாவில் ஏதாவது வந்ததென்றால் பார்க்கிறார்கள். சபாவில் உட்கார்ந்திருப்பவன் எத்தனை பேர் கிராமத்தைச் சேர்ந்தவன்? இப்படி மாறிவிட்ட நிலையில் நாம் எதில் கை வைக்கிறோம் என்பதில் கவனம் வேண்டும். நாம் கைவைப்பது ஜனங்களுடன் உறவைக் கெடுக்கிற மாதிரியா அல்லது ஜனங்களோடு உறவாக இருக்கிற மாதிரியா என்பது தெரியாது. அப்படியானால் ரொம்ப சிக்கலானது நம்முடைய கலாச்சாரம். அதனுடைய அற்புதமான விஷயங்களை வெளிக்கொண்டு வர வேண்டுமென்றால் முதலில் ஜாதி போக வேண்டும்.

நான் திராவிட இயக்கத்திலிருந்து வந்தவன். காந்தியை மட்டும் பிடிக்கும். வேறு காங்கிரஸ்காரர்கள் யாரையும் பிடிக்காது. ஏன் காந்தியை மட்டும் பிடிக்கும் என்றால், அற்புதமான விஷயங்கள் நிறைந்த இந்த தேசத்திலே, ஜாதி இருந்தது என்று சொன்னால் இந்த அற்புதங்கள் யாருக்கு வேண்டும்? அவருக்கு இல்லாத அற்புதம் இவருக்கு மட்டும் இருக்கிறது என்றால் தகராறு வரும். விரோதம் வரும். அற்புதம் இல்லாமல் போய்விடும். இப்போது இந்த தேசத்தின் அற்புதமான விஷயங்கள் எல்லாருக்கும் வரவேண்டும். அதற்கான வேலை முதலில் ஜாதியை ஒழி, அப்போதுதான் எல்லாம் எல்லோருக்கும் பொதுவாகும். வீட்டில் கீரையை வெட்டுகிற போது நான் உயர்ந்தவன். கசாப்புக்கு ஆட்டை வெட்டுகிறவன் தாழ்ந்தவன். இப்போது இந்தக் கட்டத்திலிருந்து நான் என்னுடைய வேற்றுமையைத் தெரிந்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் இந்த வேற்றுமைகள் போனாலொழிய அற்புதங்களை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது.

நந்தனார் சரித்திர கீர்த்தனை எழுதிய கோபால கிருஷ்ண பாரதி தான் எனக்குத் தாக்கமாக (Inspiration) இருந்தார். நான் சேரிக்குப் போய்ப் பார்த்தது, சேரிக்கு நடுவில் குட்டைகள், நண்டு நகக்கால்களுடன் காய்ந்து கொண்டிருக்கிறது. ஆடு தலை வாயிலில் கட்டிப்போடப் போட்டிருக்கிறது. பச்சைச் சிறுநீரின் மணமும்

புழுக்கையின் மணமும் வருகிறது. எல்லாம் எனக்கு முழுமையாகப் பாடமாக ஆனதற்குக் காரணம் கோபாலகிருஷ்ண பாரதிதான். ஒரு கேள்வி வந்தது. கோபாலகிருஷ்ண பாரதி பெரியவரா? தியாகராஜர் உயர்ந்தவரா? என்ற கேள்விதான் அது. தியாகையரின் கிருதிகளைப் பாடிப்பாடி அவரை உயர்ந்தவராக்கினார்கள். அந்த அளவுக்கு கோபாலகிருஷ்ண பாரதியுடைய மகத்துவத்தை வெளியே கொண்டு வந்திருக்கிறார்களோ? இவரைப் பற்றி வெளிக் கொண்டு வந்தது உவே.சாமிநாதையர். அவருடைய கீர்த்தனை 'பாப்புலர்' ஆக இருந்தது. ஆனால் சமூகம் என்ன செய்கிறது? இசையில் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. சிறப்பாக உள்ளன. நிறைய சோதனைகள் செய்து பார்த்திருக்கிறார். அப்புறம் இராமனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பேசுகிற மாதிரி ஒரு பெரிய திறமையாக என்னென்னவோ செய்திருக்கிறார் என்ற விஷயங்கள் இருக்கின்ற போது எனக்குத் தெரியும். கோபால கிருஷ்ண பாரதியிடம் இது இருக்கிறது; இல்லை என்பதை யார் காண்பித்தார்கள்? ஏன் காண்பிக்க வில்லை? எனக்கு என்ன பெரிய குறையென்றால் தமிழ் இலக்கியத்தில் புதையல் இருக்கிறது என்று யோசனை. இவ்வளவு பாட்டுகள் ஏன் இப்படி சோதனை செய்திருக்கிறான். இதனால் இதில் சங்கீதம் இருக்கிறதா? எதுகை, மோனை இருக்கின்றனவா? இவற்றையெல்லாம்வெளியே கொண்டு வந்ததால்தான் சமூகத்தை ஊக்குவிக்க முடியும். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் கொண்டு வந்து விற்று விட்டுப் போய்விடுவான். எனக்கு சங்கீதம் சிறுகதை. சங்கீத ராகங்கள் எனக்குத் தெரியாது. என்னுடைய காது பிரபஞ்ச கானம். அதில்தான் மௌனி பெரிய ஆள் 'பிரபஞ்ச கானம்' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதி இருக்கிறார். மௌனியுடன் பழகிய நாட்கள் அற்புதமாக இருந்திருக்கு. சங்கீதத்தைக் கேட்பது போல. ஆனால் சங்கீதம் கேட்க மௌனி எனக்கு ஒன்று சொல்லிக் கொடுத்தார். அதைப் பிடித்துக் கொண்டேன். கும்பகோணத்தில் சங்கீதம் கேட்பாராம். நண்பர்களுடன் உட்கார்ந்து விட்டு, நாங்கள் அவருடன் மணலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம். அங்கே வந்த பாடகர் பாடிக்கொண்டே இருப்பார். ஒரு பகுதி பெரிய சங்கதிகள் போட்டு பிரமாதமாக வரும். இதுவரையிலும் கேட்டே இருக்க மாட்டாங்க. வந்தவுடன் நிறுத்திவிட்டு கதை கேட்பாங்களாம். கேட்டவுடன் அப்புறம் அரைக்க ஆரம்பித்தவுடன் அப்ப வந்து மீண்டும் இவங்க அரைக்க ஆரம்பித்துவிடுவார்கள் வெற்றிலை பாக்கை. இதே மாதிரிதான் சங்கீதம் கேட்கணும் என்பார்.

காந்திஜியின் சுயசரிதை படித்துக் கொண்டிருந்தேன். மூன்றாம் வகுப்பு வண்டி இருக்கிறது இல்லையா? இந்த தேசத்தை நடத்திப் பார்க்கிறார்களா தெரியவில்லை. எப்போதாவது புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறார்களா தெரியவில்லை. இந்த தேசத்தை எங்கே கொண்டு போக வேண்டும் எப்படிப் பார்க்க வேண்டும் என்பதற்காக. ஒரு காங்கிரஸ் காரராவது காந்தியை எடுத்துப் பார்க்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. கேட்டுப் பார்க்க வேண்டும். பார்வை நூல் (Refernce Book) எந்த நூல். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்ட புத்தகம் இருக்கிறது அதை எடுத்துப் படித்துப் பார்த்து நிர்வாகம் (Management)என்றால் என்ன? நவீன நிர்வாகம் (Modern Management) என்றால் என்ன செய்ய வேண்டும் என்று படிப்பானே தவிர காந்தியை எவன் படிப்பான்?

சங்கீதத்தில் சங்கதி இருப்பது போல சிறுகதையில் சங்கீதம் இருக்கிறது. ஏன் சங்கதி போடுகிறீர்கள்? அவரோகனத்தில் பாடிவிட்டு சுத்தமாக முடித்து விடுங்கள். புதிய புதிய சங்கதிகள். என்ன சங்கதி இருக்கிறது இதிலே என்று கேட்கிறான். எப்படிப் போய் விட்டது? மொழி சங்கீதம் போலப் போகிறது. அது மாதிரி எனக்கு ஒவ்வொரு சிறுகதையும். இசையைப் போல. இரண்டாக நான் கேட்க மாட்டேன். எழுதுகிற வரையில் தேவையானதைப் படித்து விடுவேன். முடித்தவுடன் படிப்பதே இல்லை. இப்போது என்ன கதை எழுதி இருக்கிறேன் என்று மறந்து விட்டது. எழுதும் போது இருக்கும் அனுபவம் அப்புறம் வெளியே போய்விடும். அது பணம் கொடுத்தது என்றால் எடுத்து அலமாரியில் வைத்து விடுவேன். அதுதான் பணம் கொடுக்கவில்லையே! நீ பணம் கொடுத்தாய் எனறால் பூனாவில் காசிராம் கோத்வில் போடுங்கள் பணம் வந்துவிடும். அதுமாதிரியாக இருக்கிறது சிறுகதை. அது எதற்காக, என் மனைவி சொல்லுவார்கள். "நான் ஒவ்வொரு காப்பியும் எடுத்து வைக்க வேண்டியது, நீங்க வந்து அதை எடுத்துப் போய்விட வேண்டியது, ஏதாவது வீட்டில் வைத்திருந்தால் நீங்க எடுத்துகிட்டுப் போய்விடுவீர்கள்" என்பார்.

கூத்துப்பட்டறை வந்துவிட்டதாலே, எப்படி நாடகமாகப் போடுவது என்பது தெரியவில்லை. ஏன்....... என்ன தரவேண்டும் நான் சாதாரண ஆள் முக்கியமான விஷயங்களைத் தர வேண்டும் அதை எப்படி எழுத்தாக்க வேண்டும்? எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்? என்பது தெரிய வேண்டும்.

எழுத்து என்பது சங்கீதம் மாதிரி, எழுத்து என்பது மனதில் இருக்கக்கூடிய ஒரு முறை. எனக்கு உங்களுடன் வார்த்தைகள்

மூலமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். கட்டுரையாகப் பகிர்ந்து கொள்ளலாம். எப்படி வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளலாம். இப்போது தியேட்டர் மனத்தில் இருக்கக்கூடிய ஒரு முறையை நடிகர்கள் மூலமாக நான் பகிர்ந்து கொள்கிறேன். அவ்வளவுதான். சிறுகதைக்கு எத்தனை வாசகர்கள் இருந்தார்களோ அத்தனை அளவுக்கு என்னுடைய தியேட்டரைப் பார்ப்பதற்கும் ரசிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் இப்போது ஒன்று செய்கிறோம். இதிலிருந்து மாற்றியாக வேண்டும் எப்படியாவது தியேட்டரை பார்வையாளனுக்குக் கொண்டு வர வேண்டும். அப்படி ஒரு முயற்சி. அப்படி எழுத்துக்களைக் கொண்டு வரவேண்டும். முக்கியமாக 10 பேர், இருந்தாலும் கூட இதுபோன்ற காரியங்கள் சமூகத்தில் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இது பெருக வேண்டும்.

கணையாழியில் எழுதினேன். எழுத ஆர்வம் இருக்கிறது. யார் வெளியிடுவார்கள்? நிறைய விஷயங்களைச் சொல்ல வேண்டும். தியேட்டரைப் பற்றி ஏராளமாகச் சோதனைகளை நடத்திக் கொண்டு இருக்கிறேன். இவற்றையெல்லாம் பற்றிச் சொல்ல வேண்டும். இவை சமூகத்திற்குத் தேவையில்லை என்ற போது யார் வெளியிடுவார்கள்? மொழி இது மாதிரியான சோதனை செய்திருக்க வேண்டியது. எப்போதும் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை. ஒன்று திறன் (Skill) இன்னொன்று படைப்பு (Creativity). ஒரு கட்டத்தில் திறன் ஓடிப் போய் விடுகிறது; படைப்பு தான் மிஞ்சுகிறது. அப்போது திறன் தேவையில்லை. சிறுகதை எத்தனை எழுதுகிறோமோ அது திறன் (Skill) அப்படியானால் உங்களுக்குக் கதை எழுதுவதற்கென்று ஒரு சரக்கு தேவைப்படுகிறது. ஒரு கிரியேடிவ் இருக்கிறது திறன் (Skill) இருக்கிறது எழுதிவிடுகிறீர்கள் ஆனால் கிரியேட்டிவ் அவசியம். திறன் (Skill) இல்லாமல் கூட போகலாம். இப்போது நினைத்தாலும் உட்கார்ந்து சிறுகதை எழுதிவிடுவேன். எனக்கு அவசியம் கிடையாது. எனக்கு அவசரமும் கிடையாது. சிறுகதை எழுதி விட்டேன். இப்போது தேவையாக இருக்கிறதா என்று நினைக்கிறேன். தேவையில்லாத விவரங்களால் முத்துசாமியுடைய சிறுகதை என்று சொல்கிறார்கள். தாட்சண்யம் இல்லாமல் 'எடிட்' செய்கிறார்கள். எல்லாமே புஞ்சை பற்றிதான் எழுதியிருக்கிறேன். என்னுடைய அனைத்து சிறுகதைகளையும் ஆரம்பத்திலிருந்தே இதில் போட்டிருக்கிறேன். புஞ்சை என்னுடைய ஊர், புஞ்சலி என்னுடைய மனைவியின் பெயர். அதற்கு அற்பணம் செய்திருந்தேன். இந்த இரண்டு பேரிலும் என் அன்பு மாறாமல் இருக்கிறது. எல்லோரும் இந்தப் புஞ்சையைப் பெரியதாகக் கொண்டு வந்து விடவேண்டும் என்பர் எல்லா

கேரக்டர்களிலும் அங்கிருந்த போக்குவரத்து உள்பட எல்லாவற்றிலும் ஒரு சிறுகதையில் அவசியமாக இருக்கும். அந்த விவரத்தை நான் இதில் எழுதுவேன். இப்போது உங்கள் பார்வை குறுகிப்போனது என்று வைத்துக் கொள்வோம். என்னுடைய கூடுதலான விவரங்கள் எங்காவது இருக்கிறதா என்று சொன்னால், அந்தக் கூடுதலான விவரங்கள் இன்னொரு இடத்தில் புஞ்சை என்ற கான்வாஸ் இருக்கிறதே அதற்குத் தேவையான விஷயமாக இருக்காது. நாடகத்தில் கூட புஞ்சை என்பது எங்கிருக்கிறது, சிறுகதையில் புஞ்சை எங்கிருக்கிறது? மாயவரத்தி லிருந்து தரங்கம்பாடி போன்ற வடிவில் காயல்பட்டினம் போன்ற வடிவில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

உ.வே.சா. பதிப்பித்த நந்தன் கீர்த்தனைகள் பல இடங்களில் பாடப்பட்டிருக்கிறது. கதாகாலட்சேபங்கள் மாதிரிப் பாடப் பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் உங்களுக்குத் தமிழின் அற்புதங்கள் இருக்கின்றன. அற்புதம் என்று எதைச் சொல்லி நிரூபணம்செய்வீர்கள்? அடிப்படையான விஷயம். கூத்து மேலே எவ்வளவு அபிமானம் இருக்கிறதோ அதே மாதிரி பகவதி மேலேயும் இருக்கிறது. அங்கே போய் Dr. முருகேசன், காசி, நான் எல்லோரும் உட்கார்ந்து கொண்டு, மகாலிங்கத்தோட அப்பா, வயதானவர். கூத்து ராத்திரி 2 மணிக்கு மோர்சாதம் சாப்பிடுகிறார்கள், அப்படியென்றால் ஆடி முடித்தபிறகு அவர்களிடமிருந்து Dress வாங்கிப் போட்டுக் கொண்டு அன்றைக்கு ராத்திரி 2 மணிக்கு மேலே இவங்க கூத்தாடப் போறாங்க. அந்த நேரத்தில் Dress மாற்றிப் போடுவதற்குள் நாங்க உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம்.

ஒரு தெலுங்குக் கவிஞர், பாகவத மேளாவில் கூத்து இழந்து போனது என்று நீங்கள் நினைத்தால் என்ன தஞ்சாவூரில் கூத்து நடக்கிறது பார்த்திருக்கிறீர்களா? என்றால் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. கூத்து என்று அடிதடிக்குப் போய்விட்டது? நொறுக்கி எடுக்கிறான். அங்கே காளிக்கு ஆவேசம் வந்து விட்டது. அரவான் மேலே பலி கொடுக்க வேண்டும். தேசத்தை ஆளுகிறவர்களுக்கும் சம உரிமை (Equal Rights) இருக்கிறது. அவனை எப்படி பலி கொடுப்போர் கொடுக்க முடியாது. கிருஷ்ணன் வந்து யாராவது பலி கொடுக்க வேண்டும் என்றால் பலி கொடுக்காமல் இருக்க முடியாது. அர்ச்சுனனைக் கொடுக்க முடியும். போகிறது. மறுநாள் மாலை தீமிதி நடக்கப் போகிறது. ஜனங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். கடைசியில் பலி கொடுக்கச் சொல்லி விட்டார்கள். காது அறுத்து ரத்தம் காண்பித்தார்கள். கடைசியில்

மகாபாரதம் முடிந்த பிறகு நான் சாகவில்லை. காளி வேஷத்திற்கு மாஸ்க் போட்டிருக்கிறார்கள். அந்த ஆளுக்கு ஆவேசம் வந்து விட்டது. பத்து பேர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பத்து பேரையும் தாண்டி இழுத்து வருகிறார். இங்கு வந்து திரௌபதி வேஷம் தமிழரசன் போட்டிருக்கிறார். மாடுகள் பூட்டிய வண்டியில் விறகுகள் வந்திருக்கிறது. தமிழரசன் அப்பாவுக்கு சாமி வந்து ஆடுகிறார். காளி வேஷம் போட்டவரது நடிப்பு பிரமாதம். பாகவத மேளாவில் நடக்கிறது. எப்படி இருக்கும்? அவருக்கும் நரசிம்மர் வருகிற சமயத்தில் ஆவேசம் வந்து இருந்தது. கூத்து பார்க்க வந்தவர்களுக்கு விடியற்காலையில் நீராகாரம் கொடுப்பார்கள். எங்கிருந்து பாகவத மேளா வந்தது? அந்த மொத்த சமுதாயத்தினுடைய அற்புதமான அந்த சொரணையை அங்கீகரிக்காமல் ஒதுக்கி விட்டு ஒரு தேசம் முன்னேற வேண்டும் என்றால் எப்படி முன்னேறும்? அவனுடைய Specification-க்கு முன்னேற வேண்டும். வெள்ளைக் காரனுடைய முன்னேற்றத்திற்கு மக்களுடைய சொரணையை ஒதுக்கி வைத்து விட்டு முன்னேற வேண்டும். எங்காவது போய் இதைக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும்.

நம்முடைய பகுதியில் அற்புதமான விஷயங்கள் இருக்கின்றன. பன்னிரண்டு புத்தூருக்குப் போனோம். அங்கே நாலு பக்கமும் குன்று. நடுவில் அற்புதமான விஷயம். யாருக்குத் தெரியும், கூத்து பார்க்கப் போனோமென்றால் அது எங்களுக்குத் தெரிந்திருக்காது. அதாவது உங்களுக்கு இடையே இருக்கக் கூடிய உணர்வுப் பூர்வமானவற்றை எல்லாம் நாம் அங்கீகரித்தல் பண்ணாத வரையில் இந்தச் சமூகம் எப்படிப் பெரிய பிரமாதமானதொரு உலகத்திற்குப் போகும் சொல்லுங்கள்?அவன் ஆட்டு இடையனாக இருப்பான் ஒரு நிலையில் உயர்ந்த நிலையில் (Higher level) இருப்பான் ஆனால் ஆடுமேய்த்துக் கொண்டிருப்பான். ஆனால் இந்த சமூகத்தில் எப்படி முத்துசாமியுடைய சிறுகதைகளுக்கு அவசியம் இல்லையோ, அதே மாதிரி சொரணையுள்ள ஆடு மேய்த்துக் கொண்டு, அதிலிருந்து வரக்கூடிய விஷயத்தை ஒருநோய் விற்று விடும். அடுத்த நாள் சூப்பியர்களுக்கு ஒரு கதை சொன்னார். ஒரு ஆடு வாங்க அது இரண்டு குட்டி போட்டது. அது நாலு குட்டி போட்டது. அந்த மந்தையே சொந்தமானது. அப்புறம் நோய் வந்தது. எல்லா ஆடும் போய்விட்டது. ஆடே இல்லை. அப்புறம் புதுசா ஒரு ஆடு அவர் வாங்குகிறார். இதுதான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. என்னுடைய இடம் வந்தது. உங்களுக்கு இந்த சமூகத்திற்குச் செலாவணியாகக் கூடிய விஷயங்கள் தேவையாக இருக்கிறது. மேய்க்கத்

தெரியாத ஆட்களுக்கு நோபல் பரிசு கொடுக்கிறார்கள். இந்த முறை பெயர் தெரிந்த ஆட்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுமாதிரி இந்திய சமூகத்தில் நோபல் பரிசு பெற ஆளே இல்லையா சொல்லுங்கள்? ஆளே இல்லையென்றால் இந்த அரசாங்கம் தேவையில்லை. இதைப் பெரிதாக்கிச் சொல்லவில்லை. பல விஷயங்கள் ஏன் வளரவில்லை. உலகம் தழுவிய பார்வையில் நம் செயல்பாடுகள் முன்மாதிரிகளாக அமைந்திட வேண்டும்.

ராமாமிருதம், லா.ச.

நான் பதினாறாவது வயதிலேயே (1937-ல்) எழுத ஆரம்பித்து விட்டேன். அப்பொழுது நான் என்ன எழுதுகிறேன் என்று ஒன்றும் எனக்குத் தெரியாது. உள்ளே ஏதோ ஒரு உத்வேகம், ஆரம்பத்தில் சிறுவனாக இருக்கும்போது ஏற்படுவதில்லையா? அந்த உத்வேகத்தில் என்ன வேண்டுமானாலும் எழுதியிருப்பேன். ஒருவிதமான வேகம், உடம்பைவிட்டு அது வெளியே போனால் போதும் என்றிருப்பதில்லையா? அதில் என்ன வேண்டுமானாலும் எழுதியிருப்பேன்.

நான் எழுதத் தொடங்கியதே ஆங்கிலத்தில்தான். என் தகப்பனார், ஆங்கிலத்தின் மீது, அதன் இலக்கியங்கள் மீது எனக்கு ஒரு தனியான பற்றையே ஏற்படுத்தி விட்டிருந்தார். எனது முதல் கதையே பதிப்பானது எனக்கு நல்ல ஒரு ஆரம்பமாக அமைந்து விட்டது. அன்றிலிருந்து எனது எந்தக் கதையுமே திரும்பாமல் பதிப்பாகியிருக்கிறது.

சாதாரணமாகவே நான் மெதுவாக எழுதுபவன். ஆனால் சதா எழுதிக் கொண்டிருப்பவன். I write slowly, but I write always. இந்தக் கொள்கைதான். இதிலே நிறைய மேற்கத்திய இலக்கியங்களின், எழுத்தாளர்களின் தாக்கம். அவர்களைப்போல எழுத வேண்டும் என்ற ஆசையும் கூட. உதாரணமாக எர்னஸ்ட் ஹெமிங்வே. He is the author whom I admire most. அவன் ஒரு நாளைக்கு 320, 330 வார்த்தைகள் எழுதிவிட்டால் அன்றைய வேலை அவனுக்குத் தீர்ந்து போச்சு. அவன் விடியற்காலை ஆறு மணிக்கு எழுந்திருப்பானாம். மேஜையின் ஓரமாக நின்று கொண்டே எழுதுவானாம். எழுதுவதற்கு முன்பு பத்துப் பன்னிரெண்டு பென்சில்களை சீவுவானாம். அப்பொழுதுதான் அவனுக்கு எழுதவே வருமாம். டால்ஸ்டாய் ஒரு பெரிய கலைஞன். ஆனால் ரொம்ப ஜாக்கிரதையான பெரிய உழைப்பாளி. இப்படி உழைப்புடன் சம்பந்தப்பட்டவர்களின் எழுத்துக்களைப் படித்ததனால் அவர்களது பழக்கவழக்கங்கள் என் மீதும் படிய வேண்டும் என்ற ஒரு ஆசை எனக்கு ஏற்பட்டது. அதனாலும், தமிழ் பாஷை எனக்குப் புதிதாக இருந்ததாலும் நான் மெதுவாகத்தான் எழுதினேன். நான் இந்த வியஷயத்தில் ரொம்ப

Strict Discriplinarian. அதனால்தான் இன்றும் கூட என்னால் வேகமாக எழுத முடிவதில்லை. 60 ஆண்டுகளில் 200 கதைகள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவற்றுடன் கூட 6 நாவல்கள் இரண்டு கட்டுரைத் தொகுப்புகளும் எழுதியிருக்கிறேன். இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் அளவிலே கணிசமாக இல்லாமற் போனாலும் தரத்திலே மிகச் சரியானதாகத் தானிருக்கும். ஏனென்றால் என்னுடைய பிரயத்தனம் ஒரு பக்கமிருக்க, என் குறிக்கோளே எந்த இடத்திலேயும் மறுபடியும் இன்னொரு வார்த்தையை வேறு யாராலும், ஏன் என்னாலும் கூட போடப்படக்கூடாது. 'கூடாது' என்ன, என்னாலேயே முடியாது என்றிருக்க வேண்டும். அந்த அளவுக்கு எல்லா இடங்களிலேயும் உழைத்திருக்கிறேன். எங்கே உழைப்பு இருக்கிறதோ அங்கே தாமதமும் இருக்கத்தானே இருக்கும்? இந்த 'அஞ்சலி' கதைத் தொகுதியின் 12 வருஷக் கதை என்னவென்றால், முதல் நான்கு கதைகள் நீர், நெருப்பு, காற்று, மண். இந்த 4 கதைகளையும் கிட்டத்தட்ட இரண்டு வருஷங்களில் எழுதி முடித்து விட்டேன். ஆகாயம் - Space-ஐ ஒட்டின ஒரு கதை இருக்கிறது பாருங்கள். அதற்கு ஒரு குறிப்பே கிடையாது. ஆனால் எப்படியோ ஆரம்பித்துவிட்டேன். எனக்கு எப்பொழுதும் ஒரு நம்பிக்கையுண்டு. இன்னும்கூட அது என்னிடம் இருக்கிறது. அதாவது, ஆரம்பித்தேனென்றால் முடித்துவிடுவேன். ஜன்மாவே எப்படியிருக்கிற தென்றால், காலத்தை மீறின சிருஷ்டி அந்தக் காலத்தை எண்ணிப் பார்க்காதது போலத்தான். செத்து ஒழி நீ. இந்த ஜன்மத்தில் இல்லையென்றால் அடுத்ததில். இந்த உண்மைதான் எனக்கு மனதில் பதிந்திருக்கிறதே ஒழிய, ஆகாயத்தைப் பற்றிய 'ஏகா' என்ற கதையை எழுத எட்டு வருஷங்கள் நான் காத்திருந்தேன். எனக்கு வரும் அது என்று எனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அந்தக் கதையை எழுதி முடித்துப் படித்துப் பார்த்த பிறகு அது இன்னும் ரொம்பப் பேருக்கு எட்டவில்லை. கோமல் ஸ்வாமிநாதன் சொன்னார், அதைப் படிக்கும்போது சத்யஜித்ரேயின் படத்தைப் பார்ப்பது போலிருக்கிறது என. ஒரு இத்தாலியப் பெண்மணி (GABRIELLA EICHINGER FERRO LUZZI) என்னைப் பற்றி ஒரு முழுப்புத்தகமே எழுதியிருக்கிறார். அந்த 'ஏகா'வைக் குறித்துச் சிறப்பாக 'இந்த மாதிரியான கற்பனை எங்களது மேற்கத்திய இலக்கியங்களிலே கூடக் கிடையாது' என்று. படிக்கிறவர்களுக்கு, தெரிந்தவர்களுக்குத் தெரிந்தவரை தெரிகிறது. எழுதியவனுக்கும் அப்படித்தான். பொதுவாகவே என் கதைகள் எல்லாவும் முழுக்க முழுக்க கற்பனையல்ல. அவை யாவற்றிலும் ஏதாவது ஒரு வாஸ்தவமான

உண்மை-சின்னப் பொடி ஒன்று இருக்கும். அதைச் சுற்றிக் கடகடவென மேலே போய்க் கொண்டேயிருக்கும். இந்த 'ஏகா'வின் அடிநுனி தெரியாது எனக்கு. என்னவோ ஒரு நாள் கும்மட்டியில் தணல் திகுதிகுவென்று, நகநகவென்று இருந்தது. அதைக் கண்ட உடனே என்னையறியாமல் கதை உருவாகியாச்சு. இந்தக் கதைக்கும், இந்தத் தணலுக்கும் என்ன சம்பந்தம் என்று இப்பொழுது கேட்டாலும் எனக்குத் தெரியாது என்று தான் சொல்லுவேன். ஆனால் கடைசியில் கதைக்கு அதுவே கருவாக அமைந்து போயிற்று. 'ஏகா' - ஏகம் + அம்பரம் = ஏகாம்பரம் ஆகலாம். அம்பரம் - ஆகாயம். அப்படித்தான் முதலில் ஆரம்பித்தேன். ஆனால் அது பெண்ணாக உருவெடுத்து 'ஏகாம்பரி' என்றாகி, அது ஏகாவாகி, பிறகு 'ஏகா' என்று பெயர் பிரசித்தமாகி விட்டது.

மணிக்கொடி காலம் பற்றி அவரவர் தம்மைத் தொடர்பு படுத்திக் கொண்டு ஏதேதோ சொல்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் பார்க்கப் போனால் இந்த அத்தைப்பாட்டி கதைக்ள் எல்லாம் படித்து ஜனரஞ்சகமாக எழுத வேண்டுமென்று எழுதுபவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டு, உதறி விலகி நிற்க ஒரு குரூப் கிளம்பி புதிதாக ஏதாவது செய்யவேண்டும் எனக் கிளம்பியது நிச்சயம்தான். அந்த குரூப்பில் நான் சேர்ந்த பொழுது எனக்கு வயது ஒன்றும் அதிகமில்லை. 17 அல்லது 18 தான். ஆனால் இவர்களெல்லாம் சேர்ந்து கடற்கரையில் போய் உட்கார்ந்து பேசுவார்கள். அப்படி அவர்கள் பேசும் பொழுது நமது லட்சியங்களை யெல்லாம் தூண்டி விடுவதாக இருக்கும். மிகவும் அறிவுப் பூர்வமானதாக அந்தப் பேச்சுகள் இருக்கும். அக்கப்போர்களெல்லாம் இருக்காது. மேல்நாட்டு இலக்கியங்களையெல்லாம் அவர்கள் படித்திருக்கிறார்கள். இந்த நாளில் எழுதுகிற எழுத்தாளர்களிடம் அந்த அளவு ஈடுபாடு இருக்கிறதா இல்லையா என்பதில் நான் உள்ளூர சந்தேகப்படுகிறேன். முக்கியமாக மணிக்கொடி எழுத்தாளர் பற்றி நான் என்ன கூறமுடியுமென்றால் மணிக்கொடியிலும் நானும் எழுதியிருக்கிறேன். அப்பொழுது அவர்கள் கொஞ்சம் புதுமைகளைச் சொன்னார்கள். வாழ்க்கையை யதார்த்தமாகப் பார்த்தது பார்த்தபடி எழுதுவது என்று ஒரு School ஆரம்பித்தது அப்பொழுதுதான். இல்லையென்றால் சந்திரன், அமாவாசை இருட்டு என்று அத்தைப்பாட்டி கதைகளாக அவர்கள் எழுதவில்லை. கொஞ்சம் மேற்கத்திய தாக்கம் அவர்களிடமிருந்திருக்கிறது. ஏனென்றால் அவர்கள் இலக்கியம் படித்தவர்கள். மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். வேறுபட்டபோது ஒரு புதுயுகம் வரவேண்டிய சமயம் அப்போது வந்தாயிற்று என்று நான் நினைக்கிறேன். அவர்களுடன் சேர்ந்தவன்

தான் நானும். ஆனால் இன்னொன்றும் நான் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. மணிக்கொடியில் வந்த கதைகள் யாவுமே மணி மணியான கதைகள் என்று கூறிவிட முடியாது. அவற்றிலும் நிறையத் தோல்விகள் இருக்கும். நன்றாக வெற்றிகரமாக எழுதும் எழுத்தாளர்களுக்கும் மேடு பள்ளங்கள் உண்டு. எல்லாரும் சேர்ந்தாற் போல ஒரே ஸ்ருதியில் எழுதிக்கொண்டிருக்க முடியாது. ஒரே ஸ்தாயியில் இருந்து கொண்டிருக்க இயலாது. ஆனாலும் எல்லாரும் வித்யாசமாக எழுதினார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

நான் எழுதுகிற சமயத்தில், எனக்கு நான் எழுதியது நிரம்பப் பிடித்திருந்தது. எனக்கு அந்த மாதிரிதான் தோன்றியது. ஒவ்வொரு மனிதனுக்கும் விஷயமே தோன்றக் காரணம் என்ன? அவனது சூழ்நிலை, சந்தர்ப்பம், எழுச்சி, இவை எந்த அளவு உள்ளத்தைப் பாதிக்கிறது. பிறகு ஆரம்பத்திலேயே கிடைக்கும் வெற்றி இவையெல்லாம் மேலும் மேலும் பரிசோதனை பண்ணிப் பார்க்கக் கூடிய தைர்யத்தையும் எண்ணத்தையும் கூட்டும்.

நான் புரியாத எழுத்தாளன்தான். அந்த நாளிலேயே கொஞ்சம் வக்ரமான நோக்குள்ளவன் என்ற பெயர் எனக்குண்டு. இப்படியெல்லாம் பார்க்கிறபொழுது ஒரு லாரன்ஸ் ஆகட்டும், தாஸ்தயேவ்ஸ்கி ஆகட்டும், ஒரு டால்ஸ்டாய் ஆகட்டும், இவர்களெல்லாம் மனித இயல்பை ஆராயவில்லையா? அவ்வாறெனில் நான் இவர்களையெல்லாம் முழுங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். தவிர நான் ஏழ்மையான சூழலிலிருந்து வந்தவன். என்னைச் சுற்றிலும் ஏழ்மைதான். ஏழ்மையிமையிருக்கிற இடத்தில் வாழ்க்கையும் கொஞ்சம் ஸ்வாரஸ்யமாகத்தானிருக்கும். அந்த ஸ்வாரஸ்யம் என்னைப் பாதித்திருக்கிறது. பரிவு எனக்கிருந்திருக்கிறது. பரிவு இல்லாமல் எந்த எழுத்தாளனுமே, நச்சிலக்கிய எழுத்தாளனும் கூட, எழுத முடியாது என்று நான் திடமாகக் கூறுவேன். இப்படி நான் சொல்வதே ஒரு பாசாங்கு - ஹிப்பாகரசி - என்று கூடத் தோன்றலாம். ஆனால் எழுதின சந்தோஷம் எப்போதும் எனக்கிருந்திருக்கிறது. இந்த பாஷையிலே, இந்த எழுத்து, இந்தச் சொல் இப்படி அமைந்தது என்று நினைக்க எனக்சே பின்னால் பிரமிப்பு ஏற்படும். இப்பொழுது கூட அந்த பிரமிப்பை நான் உணர்கிறேன். சொல்வதானால், சிந்தா நதியாகட்டும் வேறு என் கதைகளாகட்டும் எடுத்துப் பார்த்தால் இப்போது கூட எனக்கு 'திக்' என்றிருக்கும். ஏதோ ஒரு வேகம். அதில் எழுதுவதுதான் எல்லாமே. இதில் வெற்றி தோல்வியை நான் எதிர்பார்ப்பதில்லை. வாசகர்களான உங்களையெல்லாம் பற்றி நான் எழுதும் போது

நினைப்பே வந்தது கிடையாது. வெற்றி என்னைத் தேடி வந்ததே வெற்றியின் வெற்றியாக இருக்கலாம். வெற்றி - தோல்வி என்பது மனித அபிப்பிராயம். அது மாறிக் கொண்டேயிருக்கும். உண்மை என்பதே ஒரு பத்துப் பன்னிரெண்டு வருஷங்களில் மாறி விடுவதாகச் சொல்கிறார்கள். ஏனெனில் இன்றைக்கு உண்மை என நீங்கள் நினைத்திருப்பது அடுத்த சகாப்தத்திலேயே பொய்யாகி விடும். இந்த ஜன்மத்தில் நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கிறோம். நான் செத்துப் போய்விட்டால் மறுபடி என் குழந்தைகள் என் வயிற்றில் பிறக்குமோ, அல்லது நான் என் பெற்றோர்களுக்கே குழந்தை யாவேனா? நிச்சயமாக இல்லை என இப்பொழுது தெரிந்து விட்டது. அவனவன் வருகிறான்; இருக்கிறான்; வேலை முடிந்தவுடன் போகிறான். எல்லாம் நீர்க்குமிழிகள் போலவோ, நெருப்புப் பொறிகள் போலவோதான். அமிழ்ந்து போகிற குமிழிகளும் உண்டு. கொஞ்சம் தணல்விட்ட சுடர்களும் உண்டு. அவ்வளவுதான் வாழ்க்கை.

யாருக்குமே அவரவர் எண்ணத்திற்கு எப்பொழுதும் ஓட்டம் இருந்து கொண்டேதானிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஒருஜீவன் வெறுமனே படுத்துக் கொண்டிருந்தாலும் கூட அதனுடைய தடத்தில் அடுத்த இரை எப்பொழுது கிடைக்கும். அது என்னவாக இருக்கும் என்று யோசனை பண்ணாமலிருக்காது அது. அதாவது யோசனை இல்லாத மனிதனே கிடையாது. சிந்தாநதி என்ற பெயர் அதற்கு. அதனதிர்ஷ்டம் எனக்கு. அந்த எழுத்துக்குத் தூண்டுதல் ஏற்பட்டதே ஒரு வகையான தற்செயல்தான். தொடர்ந்து அதுபோல எழுதிக்கொண்டே இருக்க முடியுமா? ஏதோ ஒரு விதமான விதிப் பயன்தான் அது. ஓடிக் கொண்டேயிந்த அதன் நேரமும் வேளையும் வந்தவுடன் நின்று போயிற்று. எல்லாவுமே அப்படித்தான். சிந்தாநதியும் அப்படித்தான். சிந்தையின் ஓட்டத்தை நதியின் ஓட்டமாகக் கவிதாபூர்வமாக - Poetic ஆக நான் பார்த்தேன். தொடர்பில்லாத எண்ணங்கள் எப்பொழுதும் இருப்பதில்லை. மேலெழுந்தவாரியாக ஒன்றுக்கொன்று தாக்கல் முகவரி இல்லாதது போலப் பட்டாலும்கூட தொட்ட சரடு பின்னால் எங்காவது ஓட்டத்திலிருக்கும். அது எங்காவது ஓரிடத்தில் ஒட்டிக்கொள்ளும். எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் வாழ்க்கையைப் பற்றி ஒரு சித்தாந்தம் இப்பொழுது எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உலகம் எப்படி ஒரு அடிப்படையான மாறாத நியாயத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது? அதற்கும் ஒரு சத்தம், ஒழுங்கு இருக்கிறது. அது தன்னுடைய இசையிலே தன்னுடைய ஏற்பாட்டில் சுழன்று போய்க் கொண்டேதானிருக்கிறது. தனியாக அதற்கென்று பிரக்ஞை எல்லாம்

கிடையாது. ஆனாலும் அதனுடைய ஏற்பாடு எனத் தனியாக ஒன்று இருக்கிறது. அந்த ஏற்பாட்டின்படி அது போய்க் கொண்டே இருக்கிறது. இதுதான் சிந்தாநதியின் எண்ணத்தின் ஓட்டமாக அமைந்துள்ளது. இதையெல்லாம் சேர்த்து நாம் பிணைக்கிறோம். இதிலெல்லாம் முக்தர்கள், சித்தர்கள் என்று நாம் சொல்கிறோம். காலம் என்று ஒன்று கிடையவே கிடையாது. காலம் என்பது மனிதன் உண்டாக்கிக் கொண்ட ஒன்று தான். மரணம் என்பதும் பிறப்பு என்பதும் ஒரே கயிற்றில் உள்ள முடிச்சுகள்தாம். இந்த முடிச்சுகளைத் தாண்டிப் போனால் மறுபடியும் ஒரு ஜன்மம். ஜென்மங்களை அப்படித்தான் பார்க்க வேண்டுமே ஒழிய அதிலே தொடர்பு என்பது ஒரு முடிச்சினால் அறுபட்டுப் போகாது. ஒரு தொடர்பு இருந்து கொண்டேதானிருக்கிறது. இதுவரை மட்டுமே எனக்குத் தெரிகிறது. ஆனால் சிந்தாநதியாகட்டும், எண்ணத்தினுடைய ஓட்டமாகட்டும் எல்லாவற்றிற்கும் பொதுதான் அது. எழுத்தாளனுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையின் சித்தாந்தமே இதுதான். மனிதனுக்குள்ள ஆறாவது அறிவினால் இப்படி யூகிக்கிறோம்.

ஒரே எண்ணமே தவம். இப்பொழுது ஒரே எண்ணம் என்று சொல்லும்போது பலவித வர்ணங்களோடு அலங்காரங்களுடன், சாயல்களுடன் கதை என்ற ரூபங்களுடன் எடுத்து, கரு (Plot) என்றமைத்து எண்ணத்தை அலங்காரம் செய்கிறோம். அடிப்படையில் பார்த்தால் அந்த அலங்காரம் - அழகு அதைக் காணவேண்டும். சௌந்தர்ய உபாசனை தான் அது.

நானின் நான் என்பது என்ன? ஒரு பிரக்ஞைதான் அது. பிரக்ஞை (Consciousness) என்றால் என்ன? இதற்கெல்லாம் பதில் கூறப் போனால் எங்கெங்கோ போகவேண்டியிருக்கும். பதில் கூறினால் அதில் அது அடங்குமோ என்றும் தெரியாது. ஆயினும் முயற்சி பண்ணுகிறேன். பிரக்ஞை என்பது என்ன என மீண்டும் பார்க்கும்போது, இப்படி யெல்லாம் எண்ண ஒரு அநுதாபம் ஒரு சாதாரண பரிவு (Sympathy) இருக்கிறதே... ஏன் Sympathy என்ற சொல்லைவிட Empathy என்று அதைவிடச் சிறந்ததொரு சொல் ஆங்கிலத்திலுண்டு. மாதவன் முகத்தில் நான் லா.ச.ரா.வைப் பார்த்து விட்டேனானால் நான் என்னுடைய நானை அடையாளம் கண்டு விட்டேன் என அர்த்தம். அதன் சூட்சமம் இதுதான். சில நேரங்களில் அதன் அடையாளங்கள் தெரிகின்றன. பல நேரங்களில் தெரிவதில்லை. தெரிய மறுக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணம் நானே ஒழிய எதிராளி அல்ல. என்னுடைய பக்குவ நிலைக்கேற்ப எனக்கு அடையாளங்கள் கிட்டும்.

நனவோடை உத்தி என்று எவனோ ஒரு மேற்கத்தியான் சொல்லி விட்டான். உடனே நீங்களெல்லாம் அதை எடுத்துப் பேசுகிறீர்கள். நனவோடை உத்தி ஒன்றும் புதிதல்ல. நம்முடைய பண்புக்கு ஆச்சாரத்துக்கு ஒத்தது எல்லாம் நனவோடை உத்திதான்.

நமது பண்பாடுதானே தியானம், பக்தி, ஆழ்நிலை தியானம் எல்லாம். இவை யாவுமே நம்மிடம் தானிருக்கின்றன. தியானம் என்பது நமுடைய ஆச்சாரத்துக்கு மிகவும் ஏற்றதொரு சமாச்சாரம். உன்னையே நீ தட்சிணாமூர்த்தி சொரூபம் என்று நினைத்துக் கொள்ளவேண்டும் என தியானத்திற்கென்றே கடவுள் ஒருவனை நியமித்திருக்கிறான். அப்படிப் பார்க்கும்போது நனவோடை உத்தி எண்ணத்தின் ஓட்டம் அவ்வளவுதானே? இதைத்தான் மேற்கத்திய இலக்கியத்தில் Stream of consciousness என ஒரு வார்த்தையைத் தூக்கிப் போட்டுவிட்டார்கள். அப்படியென்றால் மற்றவை எல்லாம் கனவோடையா?

நாம் அறிந்தோ அறியாமலோ நனவோடையில் தானிருக்கிறோம். ஆனால் இதை எழுத்தில் மாற்றிக் காட்டுவது தான் ஒரு பிரச்னை. நனவோடை உத்தியென்றும் Realism என்றும் ஏதேதோ சொல்லிக் கொள்கிறார்கள். அதாவது பார்த்ததை பார்த்தபடி சொல்கிறோம் என்று கூறி ஆபாசங்களை யெல்லாம் அருவருப்பு வருகிறார் போல் எதெதையோ எழுதுகிறார்கள். நீங்களெல்லாம் எண்ணும் நனவோடை அல்ல அது. எண்ணத்திலேயே பரிசுத்தமாக அதை நான் கையாண்டு இருக்கிறேன். குதிரை பசும் புல்லைத்தான் தின்னும். வைக்கோலைத் தின்னாது. அது போலப் பசும்புல்லை மேய விட்டிருப்பேன் அதை. இது மாதிரி எழுத நான் தனியாக எதுவும் தேடவில்லை. சங்கீதம் பற்றி நான் ஒரு கதை எழுதுவதாக இருந்தால் சங்கீத ஞானமிருந்தால் டெக்னிகலாக எழுதலாம். இந்த ஸ்வரம் அந்த ஸ்வரம் என்று ராகத்தின் விஸ்தாரம் பற்றி எழுதலாம். ஆனால் யதார்த்தம் என்று சொல்லி, தம்பூரா, கஞ்சிரா, மிருதங்கம் மண்ணாங்கட்டி என்று எழுதினால்? சங்கீதம் என்பது மனோதர்மம். ஆலாபனையும் அப்படியே. நான் பார்க்கிற, நினைக்கிற நனவோடை அதுதான். என்னுடைய முயற்சி அதை நோக்கித்தான்.

என்னுடைய ஆரம்பகால எழுத்துக்களில் ஒரு மூர்க்கத்தனத்தைக் காண்கிறேன். அதில் Discipline அவ்வளவு இல்லை. சரியாகச் சொன்னால் கொஞ்சம் வேகம் அதிகம்.. அதனால் கொஞ்சம் தொய்வு கூடத் தானாக வந்து கலந்திருக்கலாமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. கலைஞர்களுக்கே அது சகஜம். ஆனால் நேர்மை

அவற்றில் உண்டு. எடுத்த உடனே தோன்றிய புதுமை அவற்றிலுண்டு. அவை புதிதாகப் பிறந்த குதிரைக் குட்டிகள். கழுதைக் குட்டிகளல்ல. புதிதாகப் பிறந்தவுடன் உடல் முழுக்க ஒட்டிக் கொண்டிருக்கும் எச்சில், அழுக்கு எல்லாம் இருக்கத்தானே செய்யும்? அந்த அளவுக்கு அவை பற்றி நான் சொல்ல முடியும். மத்ய காலக் கதைகள் எனக்கு நிரம்பப் பிடித்திருக்கின்றன. இப்பொழுது கூடச் சொல்கிறார்கள் என்னுடைய எழுத்திலே ஆரம்பகால எழுத்தின் பலமில்லை. வேகமில்லை என்றெல்லாம். பொதுவாகப் பார்க்கப் போனால், எழுத்து, மனசு எல்லாமே உடலினுடைய பலத்தைப் பொருத்துதானிருக்கிறது. நாளாக ஆக நமக்குள் ஒரு கனிவு ஒன்று ஏற்படுமல்லவா? We become mellowed. பழைய குரோதங்களையும் விரோதங்களையும் நாம் பாராட்டிக்கொண்டிருப்பதில்லை. அந்த அளவுக்கு நம்முடைய தன்மையும் மாறி விடுகிறதல்லவா? தன்மை மாற, கதையும் மாறுகிறது. எனக்கு எனது மத்ய காலக்கதைகள் தாம் பிடித்திருக்கின்றன. எல்லாமே என் குழந்தைகள். அதை நான் மறுக்கவே முடியாது. எப்பொழுதும் முடியாது.

நல்ல காவியம் தமிழில் இல்லை என்று கூறும் யோக்யதை எனக்குக் கிடையாது. கம்பராமாயணம், சிலப்பதிகாரம் இவற்றையெல்லாம் நான் படித்ததில்லை. ஆனால் சில வர்ணனைகளையோ, உதாரணங் களையோ யாராவது விளக்க, அதைக் கேட்கிறபோது வெகு அற்புதமாகத்தான் அவை உள்ளன. ஆனால் தொடர்ந்து நான் அதில் ஆழவில்லை. அதனால் அவற்றில் விஷயமில்லை என்று கூற நான் தயாராக இல்லை. சொல்லக் கூடாது. சொல்லும் தகுதி எனக்கில்லை. எப்படியோ என் மனம் அதில் சாயவில்லை. அப்படித்தான் நான் சொல்லமுடியும். அப்புறம் இப்போது வரும் சரக்கெல்லாம் பார்க்கிற போது, அவற்றை நான் படிக்காததால் பெரிய நஷ்டத்திலொன்றும் நானில்லை எனத்தான் கூற முடியும்.

ஒரு விஷயத்துல நான் கொஞ்சம் கொடுத்து வச்சவன். என் எழுத்தல ஒரு Organic Growth- உள்ளார்ந்த வளர்ச்சி - ஒண்ணு இருக்கு. இன்னிக்கு நட்டு, நாளைக்கு முளைவிட்டு, அப்புறம் இலைவிட்டு, பூப்பூத்து, காயாகி, கனியாகி.... தடியால அடிச்சு திமீர்னு கனிஞ்ச பழமாக இல்லை அது. ஏற்கெனவே ஒழுங்கா வளர்ந்து வர்ற எழுத்து, வாசகர் கண்ணுல படற நேரத்திலே ஒரு பக்குவம் அடைஞ்சிட்டது.

செடிங்கிற போது அதுக்கு ஒரு பூரணத்தன்மை. அதுவே மரமாகிற போது ஒரு பூரணம். அந்தந்த ஸ்திதிக்குத் தகுந்த

மாதிரி.. ஒண்ணுரண்டு எழுத்து வேணா மாத்திருக்கலாமோன்னு தோணும். மத்தபடி விஷயம் அதேதான். இன்னி வரைக்கும் உள்ளடக்க்ம் உணர்வு அதேதான்.

கங்கா என்ற என் தொகுப்புல 'சொல்' அப்படீன்னு ஒரு முகவுரை எழுதியிருக்கேன். அதில் என்ன சொல்றேன் - ஒரு எழுத்தாளனாகட்டும், துறவியாகட்டும். தான் பிறந்த ஒரு பிறவியினுடைய கதையைத்தான் சொல்ல முடியும். க.நா.சு.வே. என்னைப் பத்தி இதைத்தான் சொல்லியிருக்கிறார். லா.ச.ரா. ஒரு கதையைத்தான் திரும்பத் திரும்ப சொல்லிக்கிட்டிருக்கார்' அப்படீன்னு. இதைக் குற்றமா சொன்னாரோ என்னமோ; உண்மை அதுதான். ஒரே காட்சியைப் பார்க்கிறப்போ ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு அர்த்தம் ஏற்படறது மாதிரி எனக்குப்படறது.

வார்த்தைகள் தான் என்னுடைய சாகசம். adventure என்ற சொல்லை லா.ச.ரா. பயன்படுத்தினார்? அதனால செப்பிடு வித்தைங்கிறதை நாம் ஒப்புக் கொள்ளல்லே. ஆனா நான் நம் பாதுகாப்புக்காக சண்டை போடமாட்டேன். அப்படி சண்டை போட்டா அது நம் பலவீனம். ஐம்பத்து மூணு வருஷம் நான் இதுக்காகத் தவம் இருந்திருக்கேன். இதை செப்பிடுவித்தைன்னு மத்தவங்க சொன்னா, நான் என்ன பண்ணமுடியும்? நான் எழுத்தை வியாபாரம் பண்றவன் இல்லை. சமரசப் படுத்திக்கிறவனும் இல்லே. எனக்கு வேண்டாதவங்க கூட இதை ஒத்துப்பாங்க.

நான் எனக்காக எழுதறேன். அது மத்தவங்களுக்கு Communicate ஆனா எனக்கு சந்தோஷம். நாதோபாசனையோட இதை ஒப்பிடலாம்னு நெனைக்கிறேன். பாடகன் முக்கியமாக தனக்காகத்தான் பாடறான். தம்புரா சுருதியோட லயிச்சு. அதுபோல நான் எனக்காகப் பாடறேன். வார்த்தைகளை சுருதியோட சேர்த்துக்கறேன். எழுத்தும் ஒரு சப்தம்தான். என்ன, அந்த சப்தம் மௌனமாக இருக்கு, அவ்வளவுதான். வௌவால் சப்தத்தை வழிகாட்டியா வச்சிண்டு முன்னால போகுமாம். அந்த சப்தம் மத்த ஜந்துகளுக்கு கேக்காது. அது மாதிரிதான் இதுவும்.

நான் அத்வைத சித்தாந்தத்துல கொஞ்சம் நம்பிக்கை உள்ளவன். தனிக் கடவுள்னு ஒண்ணை என்னால அடையாளம் காட்ட முடியாது. அந்த சக்தியே கடவுள்னு வச்சுப்பமே! பேரைக் கொடுக்கறத்தில என்ன தப்பு?

செக்ஸ் என்ற அந்த இயற்கையான தவிப்பை சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சக்தியா மாற்றுகிறோம். பிறகு விட்டு

விடறோம். இந்த வயசுல நான் செக்ஸை எப்படி பார்க்கிறேன்னு உங்களுக்கு என்ன மாதிரி நான் சொல்ல முடியும். எதைப் பார்த்தாலும், எனக்கு ஆனந்தமாக இருக்கும். என்னைக் கேட்டா எல்லாமே செக்ஸ்தான்.

என் குடும்பத்துல சாவு ரொம்ப நடந்திருக்கு. அடிக்கடி நடந்திருக்கு. ஆனாலும் சாவும்கூட இயற்கையின் பல்வேறு வெளிப்பாடுகளில் ஒண்ணு. ஆனா சாவினுடைய அந்தத் தருணம் வந்தா நான் எப்படி முகம் கொடுப்பேன்னு எனக்குத் தெரியாது. சாவோட சமாதானம் செய்து கொள்ளவே முடியாது. ஒரு விதத்தில வாழ்க்கையினுடைய நிராகரிப்பு அது. எண்ணம், அறிவு, அனுபவம், அந்த அனுபவத்தை பிறருக்குச் சொல்லுதல் இந்தத் தொடர்ச்சி எல்லாத்தையும் சாவு அறுத்துடுது. முதல் முதலா அது 'நான் இருக்கேன்' என்கிற நினைவை அறுத்துடுது. ஆனா 'வாழ்தல்' என்ற சுமையை எத்தனை நாளைக்குத் தான் நாம தாங்க முடியும். உடம்பு இருக்கு.... அது நாளாவட்டத்தில் சீரழியறது. சக்தியை இழந்துண்டு வருது. மனசு இளமை ஆக, ஆக உடம்பு ஒத்துழைக்க மறுக்குது. எனக்கு எழுதுகிற விஷயம் வறண்டு போகல்லே. ஆனா நான் நெனச்சதை எல்லாம் எழுத எனக்கு ஆயுசு இல்லே. இதை நான் மனசுல உணரவச்சுடறேன். அதனால எல்லாமே முடிவடையாத அத்தியாயங்கள்.

வருங்கால எழுத்தாளர்கள் நிறையப் படிக்கணும், நிறைய எழுதணும். என்னத்தை எழுதறதுன்னு கேட்டா... நான் சொல்றதை அவுங்க கேட்க மாட்டாங்க. நான் சொல்றது சரின்னு அவுங்க ஒத்துக்கமாட்டாங்க. எழுத்தாளர்களுக்கு காரெக்டர் வேணும். காரெக்டர்னு நான் சொல்றது குடிக்கிறேனா, சிகரெட் பிடிக்கிறேனா அதைப்பத்தி இல்லை. அது எல்லாம் அனாவசியம். நான் சொல்றது அதுக்கு மேல. மனமுனைப்பு வேணும். தியானம் வேணும். தியானம்னா என்ன.. சாமிக்குப் பூப்போடறதில்லே. சிந்தனை.. உந்து சக்தி வேணும். பரிதாப உணர்வு வேணும். உங்க உடம்புல துடிக்கிற நாடியும் அந்த மரத்துல துடிக்கிற நாடியும் ஒண்ணு என்று உணரணும். அந்தப் படபடப்பு உங்களுக்குத் தெரியணும். அது தெரியாட்டா, அது இருக்குங்குற உணர்வாவது உங்களுக்குத் தெரியணும்.

ராஜநாராயணன், கி.

நான் ஒரு பேச்சாளி அல்ல. கிராமத்திலேயே இருக்க விரும்பியவன். புதுவையில் உள்ள கிராம மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு பணியில் அமர்த்தப்பட்டேன். அதற்காக நான் புதுவை சென்றிருந்த போது புதுவை மாநில ஆளுநராகவும் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி பொறுப்பு ஏற்றிருந்தார்.

எனக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்காது. ஆகவே நான் புதுவையில் - தங்குவதற்கு அல்ல - வாழ்வதற்கு ஒரு வீடு வேண்டும் என்று மனுப்போட்டேன். புதுவைக்கு வந்திருந்த ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்களிடம் என் மனைவி தெலுங்கிலும் பேசிப் பார்த்தாள். ஆனாலும் வீடு கிடைக்கவில்லை.

அதன் பிறகு எனது கதைகளை யாரோ ஹிந்தியில் வெளியிட்டிருந்தார்கள். அதைப் படித்திருந்த பாஜபாய் என்ற ஒரு பெண்மணி எனது ரசிகையாக மாறினார். அந்த அம்மையாரே புதுவை மாநில ஆளுநராகவும் வந்தார். நான்தான் அந்த கதையின் ஆசிரியர் என்று சொன்னேன். "வீடு" என்னைத் தேடி வந்தது. இதுதான் நான் வீடு பெற்ற கதை.

எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கவிஞர்களுமான உங்களோடு தமிழ் இலக்கியத்தைப் பற்றி என் சிந்தனையைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் இலக்கியத்தில் கவிதைச் செல்வம் தான் நிறைய இருக்கிறது. உரைநடையோ மிகமிகக் குறைவு. உரைநடை வளராமல் போனதற்குக் காரணம் அதை ஏட்டு மொழியாகவே பேசியதுதான். ஏட்டுமொழி வேறு, பேச்சு மொழி வேறு. பேச்சு மொழி வளர்ந்தால்தான் உரைநடை வளரும்.

என்னிடம் சிலர் கேட்கிறார்கள். தமிழுக்கு ஞானபீட விருது கிடைக்கவில்லையே என்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழ்மொழி தமிழ்ப் பேராசிரியர்களிடம் கட்டுண்டு கிடக்கிறது. ஒன்று பேராசிரியர்கள் அதனை விட்டுவிட வேண்டும். அவர்கள் விட மாட்டார்கள். அதனால் நாம்தான் அதனை விடுவிக்க வேண்டும்.

படைப்பாளிகள் மொழியைக் கையாளுகிற பொழுது அதை ஒரு லாவகமாகக் கையாளுகிறார்கள். பண்டிதர்களைப் போல கையாளுவதில்லை. அது கொச்சையாக இருக்கிறது. பச்சையாக இருக்கிறது என்று நீங்கள் படைப்பாளிகளைக் கேள்வி கேட்கக் கூடாது. பிரம்மா பற்றி உங்களுக்குத் தெரியும். பிரம்மா தன் விருப்பத்திற்கு உயிர்களைப் படைக்கிறார். உங்களுக்கு அழகாக இருப்பது இன்னொருவருக்கு அழகாக இருக்காது. இதைப் பிரம்மாவிடம் கேட்பீர்களா? பிரம்மாவின் வேலை சிருஷ்டிப்பதுதான். சிருஷ்டியை நீங்கள் விமர்சிக்கக் கூடாது. அனுபவிக்கலாம். அவ்வளவுதான் உங்கள் உரிமை. பிடிக்கவில்லை என்றால் இன்னொரு பிரம்மாவிடம் போக வேண்டியது தான்.

தமிழ் மக்கள் பேசுவது தான் உண்மையானத் தமிழ் மொழி. உண்மையான தமிழ் மொழியைப் பண்டிதர்களிடம் தேடக் கூடாது. தமிழ் எழுத்தைப் பற்றி எனக்கொரு மரியாதை உண்டு. ஏட்டு மொழியை நான் கேலி செய்பவன் அல்ல. அதற்கு மரியாதை தருபவன்.

தமிழிலே எத்தனை தமிழ் இருக்கிறது தெரியுமா? நாஞ்சில் நாட்டு தமிழைக் கேட்டிருக்கிறீர்களா? கொங்கு நாட்டுத் தமிழைச் சுவைத்திருக்கிறீர்களா? யாழ்ப்பாணத் தமிழை ருசித்திருக்கிறீர்களா? நாட்டுகோட்டைத் தமிழைக் கேட்டுப்பாருங்கள். பேச்சுத் தமிழில் உள்ள சில ஒலிகளுக்கு எழுத்தே இல்லை. ஆகவே பேச்சு மொழிதான் அற்புதமானது. கிராமத்துக்காரனிடம் கொஞ்சம் பேசிப் பாருங்கள். தன் உணர்ச்சிகளை எல்லாம் கொட்டுவான். சின்னச் சின்ன கதைகளைச் சொல்லுவான். அவை எல்லாம் எழுத்தில் இல்லை. ஏடேறாத இலக்கியங்களாக உள்ளன.

பாண்டிச்சேரியில் நான் பணி செய்கிறேன். அங்கே விறகு வெட்டிகளின் கதைகள் ஏராளமாகக் கிராம மக்களிடம் உள்ளன. ஏன் என்று எண்ணிப் பார்த்தேன். அப்போதுதான் தெரிந்தது. பண்டைய காலத்தில் இந்தப் பாண்டிச்சேரி ஒரு வனாந்திரப் பிரதேசமாக இருந்திருக்கிறது. வனாந்திரம் என்றால் மரங்கள்தானே. அதனால் விறகு வெட்டிக் கதைகள் இருப்பது நியாயம் தான். இப்படித்தான் ஒரு பிரதேசத்தின் கதைகளின் மூலம் புராதனத்தைக் கண்டுபிடிக்க முடியும். அந்த வனாந்திரங்கள் என்ன ஆயிற்று? எரிந்து சாம்பலாகி மண்ணோடு மண்ணாகி மக்கிப்போய்விட்டது. மக்கிப்போன அவைகள்தான் பழுப்பு நிலக்கரியாக நெய்வேலியில் புதைந்து கிடக்கின்றது. இன்னும் கொஞ்சம் தோண்டினால் பெட்ரோலும் கிடைக்கும்.

ராஜாக்களின் கதையை மிகச் சுலபமாகக் கண்டுபிடித்து எழுதி விடலாம். ஏனென்றால் அவன் வாழ்ந்த புதையுண்ட அரண்மனையின் சிதலங்களைத் தோண்டி எடுக்கலாம். ஏராளமான கல்வெட்டுக்கள் கிடைக்கலாம். இவைகள் மூலம் ராஜாக்கள் கதையை எழுதிவிடலாம். அதைப் பண்டிதர்கள் செய்துகொண்டு தான் இருக்கிறார்கள்.

ஆனால் மக்களின் கதையை எப்படி எழுதுவது?

அதை எழுத வேண்டுமானால், அங்கு உலவுகிற விறகுவெட்டிக் கதைகள்தான் மூலம். ஒரே கதை பல்வேறு சிதைவுகளை அடைந்து இருக்கும். அதையும் கண்டுபிடித்தாக வேண்டும். கதைக் கட்டுமானம் என்கிறார்கள். கதையில் உள்ள மொழி நடையை உணர வேண்டும். கரிசல் காட்டு கடுதாசிகள் நூலில் பேச்சு நடையை ஆசிரியர் நடையாக நான் மாற்றினேன்.

ஏட்டு மொழி என்பது செயற்கையானது. அதனால் நெருக்கத்தை ஏற்படுத்தமுடியாது. பெரியார் எந்த நடையில் பேசினார்? கொச்சை நடையில்தான் பேசினார். ராஜாஜி, காமராஜர் ஆகியோர் செந்தமிழ் நடையிலா பேசினார்கள். மக்கள் தலைவர்களாக அவர்கள் வாழவில்லையா? பேச்சு நடை என்பது இயற்கையானது. அதைக் கல்லூரிகள் கற்றுத் தராது. ஆடு மேய்ப்பவனிடம் சென்றால் அதைக் கற்றுக் கொள்ளலாம். அவனுடைய 'சொலவடைகளை'க் கற்றுக் கொள்ளலாம். அதற்குள் தேங்கிக் கிடக்கும் அனுபவப் பொக்கிஷங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ரசிகமணி டி.கே.சி.-யின் சகவாசம் எனக்குக் கிடைத்தது. அப்போது கவிச்சக்கரவர்த்தி கம்பர் எங்கெல்லாம் பேச்சு நடையை தன் கவிதையில் புகுத்தியிருக்கிறார் என்பதை எங்களைப் போன்றவர்களுக்கு விளக்குவார். எனக்குத் தெரிந்த வரை பாரதிக்கு முன்பு வள்ளலார்தான் தமிழுக்குப் புது வாசனையைத் தந்தவர்; எளிமையாக்கினவர்.

கரிசல் பாஷையில் நான் எழுதுகிறேன் என்று கண்டனம் செய்தவர்கள் உண்டு. ஆனால் அக்ரஹார பாஷையில் எழுதப்பட்ட கதைகளை 40 ஆண்டுகளாக அவர்கள் ரசித்தவர்கள். இப்போது கூட அழகியநாயகி அம்மாளின் 'கவலை' என்ற வட்டார வழக்கு நாவலைப் படித்து சிலிர்த்துப் போனேன். அதற்கு நோபல் பரிசே தர வேண்டும்.

தெலுங்கு மக்கள் இம்மண்ணின் பூர்வகுடி மக்கள் அல்ல. அவர்கள் குடிபெயர்ந்து வந்தவர்கள்தான். அதனை அவர்களுடைய கதைகளே வெளிப்படுத்துகின்றன.

ஆகவே, மண்வாசனை வீசும் வட்டார வழக்குக் கதைகளைத் தரம் கெட்ட கதைகள் என்று யாரும் குறைபட்டு கொள்ளத் தேவையில்லை. இன்றைக்குப் பல்கலைக்கழக மரியாதையை அது பெற்றுவிட்டது.

ராஜம் கிருஷ்ணன்

எழுபது வருடங்களுக்குமுன், தமிழ்நாட்டில் ஓர் இடைநிலை அந்தணக் குடும்பத்தில் 'பெண் ஓர் எழுத்தாளராகத் திகழ வேண்டும்' என்ற இலட்சியத்துடன் வளர்க்கப்பட்டதில்லை. அவளுக்குக் குறைந்த பட்சம் பள்ளிக்கல்வி கூடப் போராட்டம் தான். என் தந்தை ஓர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராக இருந்த நிலையிலும், துவக்கப் பள்ளிக் கல்விக்குப்பிறகு ஒவ்வோர் ஆண்டிலும் இந்த வகுப்புடன் நிறுத்தி விடலாம் என்றுதான் பெற்றோருக்கு மூத்தோர் முட்டுக்கட்டை போட்டார்கள். அக்காலத்தில் எங்கள் சமுதாயத்தில், பெண் பருவமெய்து முன்பே திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்பது விதி. 'பத்துவயது ஆகுமுன்' எவன் கையிலேனும் பிடித்துக் கொடுக்கத் தவறமாட்டார்கள். இந்தச் சூழலில், போராட்டங்களுக்கிடையே என் படிப்பு தொடர்ந்தது. உயர்நிலைமுடியுமுன்பே, பதினைந்து நிரம்பு முன் திருமணமும் நடந்தேறியது. அகண்ட காவிரி ஓடும் திருச்சி மாவட்ட, முசிறியில் இருந்து, நான் சென்னையில் வந்த ஒரு பெரிய குடும்பத்தின் இளைய மருமகளாகப் புதிய வாழ்க்கைக்கு அடி வைத்தேன்.

நான் கணவர் வீடு புகுமுன், என் வீட்டில் மூத்தோர் சொன்ன முக்கியமான அறிவுரை இதுதான். எப்போதும் புத்தகமும் கையுமாகக் காட்சிதந்த நான், புகுந்த வீட்டில் இருந்து ஒத்துப் போகாமல் திருப்பிவந்துவிடுவேனோ என்ற கவலை அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். என் தந்தை ஆங்கிலத்திலும் வடமொழியிலும் தேர்ந்த அறிஞர். எங்கள் வீட்டில் அதன்பயனாக அரிய நூல்கள் பல இருந்தன. சார்லஸ் டிக்கன்ஸின் நூல்கள், ஷேக்ஸ்பியர் நாடகங்கள், காளிதாசரின் காவியங்கள் எல்லாமே இருந்தன. ஆங்கிலம் படித்துப்படித்துப் புரிந்தும் புரியாமலிருந்தாலும் ஊகத்தினாலும் ஆர்வத்தினாலும் என் அறிவை ஒருவகையில் வளர்த்துக் கொண்டிருந்தேன். பள்ளியில் ஐந்து வகுப்புகளோடு தமிழ்ப் பாடம் முடிந்தாலும், இன்றுபோல் ஆங்கில வழி பயிற்சி முறை இருந்திருக்க வில்லை. மூன்றாம் வகுப்பிலேயே எடுத்த நூலைப் படித்து முடிக்கவும், பிழையில்லாமல் தமிழை நன்கு எழுதவும் முடிந்தது. தொடர்ந்து, தமிழ் மொழி தாய்மொழி என்ற வகையில் என் கருத்தை வெளியிடக் கூடிய மகிழ்ச்சியூட்டக்கூடிய சாதனமாயிற்று. ஆங்கில புத்தகங்களைப் படித்துப்புரிந்து கொள்கையில், இந்தத் தமிழ் அறிவு, கற்பனையூற்றுக்

கண்களைத் திறக்கச் செய்தது என்றால் மிகையில்லை. ஆறாம் வகுப்பில் வடமொழி ஆங்கிலத்துக்கு அடுத்த மொழியாயிற்று.

என் புத்தக வாழ்வு தொடங்கிய நாட்களில் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இந்திய சுதந்தரப் போராட்டமும் சூடுபிடித்தது. மாணவர்கள் தேசாவேச அரசியலில் குதித்த நாட்கள் அவை. "புத்தகம் கையில் எடுக்காதே, பெரிய குடும்பத்தில் உழைத்துத் தேய்; தேய்ந்த கட்டையே மணம் பெறும் என்ற அறிவுரையை நினைத்துப்பார்க்க நேரமில்லாதபடி மாமி, நாத்திமார், பிரசவக்காரி, நோயாளி, குஞ்சு குழந்தைகள் சூழ்ந்த குடும்பத்தின் இன்றியமையாத அடுக்களைப் பொறுப்பு எனக்கு வாய்த்திருந்தது. யுத்த பீதியினால் சென்னையைவிட்டுப் பெயர்ந்து வேற்றூரில் வாழவேண்டிய நாட்கள், கணவரின் பணி சென்னையில் இருந்து வேற்றூர் சென்றபின் பெரிய குடும்பத்தின் சில உறுப்பினர், குழந்தைகள் என்று அந்த ஊரில் தங்கிய நாட்கள், எல்லாம் என் வாழ்வில் பிற - அக அழுத்தங்களால் உந்துதலைத்தோற்றுவித்த காலம் எனலாம். அன்றாட பத்திரிகையைப் படிக்கவும் நேரம் கிடைக்காது. மீண்டு சென்னை திரும்பினாலும், போர் ஓயவில்லை. இருட்டடிப்பு; உணவுப் பொருட்களுக்குப் பங்கீட்டு முறை வந்து நல்ல அரிசி கிடைக்காமல் போயிற்று. துணிப்பஞ்சம்; மருந்துப்பஞ்சம்; எல்லாம் வந்தன. குடும்ப உறவின் மதிப்புகள், குறிப்பாகப் பெண்களிடம் பணம், பொன் வயிர நகைகள், பட்டாடைகள் ஆகிய வளமையையே மையமாகக் கொண்டிருந்தன. ஒருகால் என் வாழ்வின் இந்த முக்கியமான பகுதி எனக்கு அந்த வளமையுடன் இணைந்திருந்தால், நான் வித்தியாசமாகச் சிந்திக்கத்தலைப்பட்டிருக்க மாட்டேனோ என்று இப்போது நினைக்கிறேன்.

"இது ஏன் இப்படி இருக்கிறது? இந்தப் பெண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? எத்தனை விதமான பிரச்னைகள் பெண்களைப் பாதிக்கின்றன? ஏன்? ஏன்? என்ற சிந்தனைகள் என்னுள் குடைந்தன. அதன் விளைவே, வடிகாலாகப் பேனாவைக் கைக்கொள்ளச் செய்தது. திட்டமிட்ட செயல் அல்ல. வெளிஉலகம் அறியாமல், முற்றிலும் மாறுபட்ட வீச்சாய் என் எழுத்தார்வம் செயல்பட்டது. அந்நாட்களில் எழுதக்காகிதம் கிடையாது; வீட்டாருக்குத் தெரியாமல் எழுதும் கருவியைப்பெற்று, கிறுக்க முனைந்தேன். ஏழெட்டு ஆண்டுகள் போராட்டம். இலக்கியம் படைப்பதற்குரிய கல்வி, பழக்கச்சூழல், உற்சாகமூட்டும் நண்பர், உறவினர் என்ற எந்தச் சாய்காலும் இல்லாமல், நான் கொஞ்சம் கொஞ்சமாக இலக்கிய உலகில் நட்ட விதைபோல் வேர்விட்டேன்.

மாக்ஸிம் கார்க்கியின் சுயசரிதையில், இளமைப்பருவம் முடிந்து, என்பல்கலைக்கழகங்கள் என்ற பகுதி தொடங்குமுன் ஒரு வாக்கியம் வருகிறது. "Out into the world I went" - வெளிஉலகுக்கு நான் வந்தேன் என்ற அந்த வாசகம், உலக அனுபவங்களே, முட்டல் மோதல்களே, பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்தன என்பதை உணர்த்தும். அவ்வாறு, என்போன்ற பெண், குடும்ப வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களினால் தாக்கம் கொண்டு, வெளிஉலகம், விரிந்த சமுதாயம், அரசியல் உள்ளிட்ட பல அரங்குகளின் பிரக்ஞையைப் பெறுவதாகக் கொள்ளலாம்.

சிலந்தி வலைபின்னுமுன் குறுக்கும் நெடுக்குமாகச்சில கோடுகளை இழுக்கும். அப்படித்தான் நானும் எழுதினேன். உருவம் எப்படியோ பெறும். பத்திரிகைகளுக்கு அனுப்புவது மிகவும் கடினம். நான் எழுதுவது வீட்டாருக்குத் தெரிந்து, நீலகிரியில் இருக்கையில், **ஊசியும் உணர்வும்** என்ற சிறுகதையை எழுதி, அது அகில உலகச் சிறுகதைப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபின்னரும், போராட்டம் தான். பத்துக்கதைகள் எழுதினால், ஒன்றுதான் பிரசுரமாகும். ஒருகால், என் கருத்தோட்டம் சமுதாயத்தில் நிலவிய - நிலவப் பெற்ற கருத்துகளுக்குமுரணாக இருந்ததால் தான்போலும், ஒப்புக் கொள்ளப் படவில்லை.

ஒரு நடுத்தரவயசுக்காரர், தம்மூன்று மக்களை விட்டுவிட்டு மனைவி இறந்ததும் இளம்பெண் ஒருத்தியை மணந்து கொள்கிறார். மூன்று மக்களையும் அவள் பாசத்துடன் வளர்த்துப் பெரியவர் களாக்குகிறாள். அவளுக்கும் ஒரு பையன் பிறக்கிறான். மூத்தவள் மக்கள் திருமணமாய்க்குடும்பம் என்று வடக்கே நல்ல வேலையில் பொருளீட்டி வாழ்கிறார்கள். முதியவர், தம் பார்வையை இழந்த பின்னரும் இளையமனைவிக்கும், படிக்காமல் ஊதாரியாகப்போய்விட்ட அவள் மகனுக்கும் சம்பாதித்துப்போடுகிறார். பிள்ளைகள் தந்தையைக் கஷ்டத்திலிருந்து மீட்க, அவர்களிடம் அழைத்தாலும் போகவில்லை. ஊரும், சமுதாயமும், இளையமனைவியைத் திட்டிக் கொட்டுகிறது. அந்த முதியவர் இறந்து போகிறார். அவள், வழிமாறி ஒழுக்கமற்றுப் போன மகனுடன் நடுத்தெருவில் விடப்படுகிறாள்.

நான் அந்த இளைய மனைவியின் கோணத்தில் ஒரு கதை எழுதினேன். மகன் என்ற பாசம்; யாரும் பொறுப்பு ஏற்றுக் கொண்டிராத அவலநிலை. அவளுக்கு ஏன் இந்த தண்டனை?

திரும்பிவரும் கதைகள் ஏன் வருகின்றன என்று சிந்திப்பேன். கதைகள் பிரசுரமாவதற்காக, என் கருத்தோட்டத்தை மாற்றிக் கொள்ளமுடியவில்லை.

முதலில் நான் எழுதிய கதையே பலமுறைகள் பல பத்திரிகைகளுக்கு அனுப்பியும் பிரசுரமாகவில்லை. நான் இலக்கிய உலகில் தடம் பதித்து, பல வெற்றிதோல்விகளைக் கண்டபின்னரும், நீலகிரியை நான் கண்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளியைப் பற்றிய அந்தக் கதையின் மதிப்பு நான் அன்று நினைத்தாற்போல் பசுமையாக இருக்கிறது. அந்தத் தொழிலாளி, வெற்று ஒற்றைச்சட்டை வேட்டியுடன் செருப்பில்லாமல் மேலாளரிடம் உதகையில் சேதி சொல்ல முப்பது மைல் ஓடிவந்திருந்தான். கதகதப்புக்கம்பளி உடையுடன் நகரில் நடமாடும் வாழ்வுக்கே பரிச்சயப்பட்டிருந்த நான் உள்ளூறக் குலுங்கினேன். ஒருநாள் இரவு, ஏதோ ஒரு நிகழ்ச்சிமுடிந்து, பத்து மணிக்கு நாங்கள் வதிந்த இடம் திரும்புகையில், 'காஷ்பஜார்' எனப்படும் கடைவீதியின் தடுப்பு ஓரங்களில் முடங்கிக்கிடந்த ஏழைகள், மலைராணியின் இன்னொரு முகத்தை எனக்குக் காட்டினார்கள். இந்தப்பதிவுகளே பிற்காலத்தில், பெண்கள், ஒடுக்கப் பட்டவர்கள் என்று அமுங்கிப் போன சமுதாயத்தின்பால் என்சிந்த னையைச் செலுத்த உந்துதலைத்தந்தன.

ஓர் இலக்கியப் படைப்பாளியின் அனுபவங்களில் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. பத்திரிகைகள், அந்நாளிலேயே தங்கள் தேவைகளுக்கேற்ப எழுத்தாளரை உருவாக்கினார்கள் என்றால் தவறில்லை. பத்திரிகைகளுக்காக என்னை மாற்றிக் கொள்ளாமல் போராடிய காலத்தில் எனக்கு ஓர் அனுபவம் நேர்ந்தது. ஒரு பெண் என்ற அக்கால நிலை, குடும்பக் கூட்டுக்குள் சுழலவைத்தது. புத்தகங்கள், பத்திரிகைகள், பழகும் குடும்பச் சூழல்மட்டுமே அவள் உலகம். ஆண் எழுத்தாளர் போன்று, நண்பர்கள், பிற எழுத்தாளர்கள், பத்திரிகை உலகத்தவர் தொடர்புகள் இருக்க வாய்ப்பு இல்லை. கடிதங்கள் மட்டுமே தொடர்புக்கான சாதனங்கள். சுதேசமித்திரன் வார இதழில், என்னிடம் ஒரு தொடர்கதை கேட்டார்கள். நானும் மகிழ்ச்சியுடன் எழுதிக் கொடுத்தேன். எப்போதுமே, முழுக்கதையையும் முதலிலேயே கொடுத்துவிடுவேன். அப்போதுதான் எனக்கே நம்பிக்கை வரும்.

அவர்களும் கதையை ஏற்று, விளம்பரம் செய்து விட்டார்கள். கையோடு எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். என் கதை, ஒரு குறிப்பிட்ட சாதியை மையமாக்கி இருக்கிறது. எனவே கதாபாத்திரங்களின் பெயர்களை மட்டும் பொதுவாக மாற்றிவிடுங்கள் என்று கதையையும் அனுப்பி வைத்தார்கள். நான் திடுக்கிட்டு, விழித்தேன். விளம்பரம் செய்த பிறகு இப்படி ஒரு திடுக்கிட்டபடி..

நான் பிறந்து வளர்ந்து பழகும் குடும்ப சமுதாயம் தான் எனக்கு இயல்பாக எழுதக்கூடிய களம். பெயரை மட்டும் மாற்றி விட்டால் அது வேர் மாறுமா?

வேறு வழியில்லாமல் அவர்கள் நிபந்தனையை ஏற்று, பெயர்களை மாற்றிக் கொடுத்தேன். நான் கலைமகள் நாவல் பரிசு வாங்கிய பிறகு நடந்த அனுபவம் இது.

ஆனால் இந்த ஓர் அனுபவமே, என்னை முற்றிலும் புதிய களங்களுக்கு இட்டுச் செல்லும் உந்து சக்தியாக அமைந்தது. இந்தப் பரந்த சமுதாயத்தில், எத்தனை தொழில்கள்! எத்தனை விதங்களான வளர் முறைகள்! எத்துணை வண்ண வேற்றுமைகளுடன் கூடிய முகங்கள்! என்னுடைய படைப்புக்கள் புதிய தளங்களில் புதிய கருத்துகளைக் கொண்டுவர வேண்டும். இனி அரைத்தமாவை அரைக்கும் முயற்சியைக் கைவிடுவேன் என்று உறுதி கொண்டேன்.

உளவியல் தொடர்பான கருத்துகளை மையமாக்கி, மலர்கள் நாவலைப் படைத்தேன். பெண்ணுக்குக் குமரப்பருவம் முகிழ்ந்து வரும்போது இயல்பான அன்பு ஆதரவுடன் கூடிய தாயோ, பாசச்சூழலோ இல்லாது போனால் அரும்புப் பருவத்தில் புழுக்கடி பட்டாற் போன்று சிக்கலுக்குள்ளாகிறாள். அக்காலங்களில், ஒருதிருமணம் நடக்கும்போது, வேறு ஒரு பெண் திடீர்மயக்கமுற்றுவிடுவது சாதரணமான காட்சியாக இருந்தது. சமுதாயக் கட்டுப்பாடுகளும் அன்பற்ற சூழலும், ஓர் இளம் பெண்ணுக்குத்தன் வளர்ச்சியைப் பற்றிய உணர்வே அச்சுறுத்துவதாக இருந்த காலம் அது.

அப்போது நாங்கள் பூவிருந்தவல்லியில் இருந்தோம். அங்குள்ள பார்வையற்றோர் பள்ளியின் தலைவர், பேராசிரியர் நந்தகோபால் எங்களுக்கு உற்ற நண்பரானார். அவர் உளவியல் பேராசிரியர். அவர் எனக்கு உளவியல் தொடர்பான ஃபிராய்ட், ஆட்லர், ஜங் போன்றோரின் ஆய்வுகளைப் பற்றிய நூல்களைக் கொடுத்து உதவினார். ஒருநாவல் என்பது சுவாரசியமூட்டும் நிகழ்வுகளை மட்டும் உள்ளடக்கியது என்ற வரையறைக்கு அப்பால் ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்தும் கருத்துகளைச் செய்தியாகக் கொடுக்கலாம் என்ற நோக்கில் நான் செயல்படலானேன்.

கதை நிகழும் பின்புலம் - அல்லது களம் எனக்கு முக்கியமாகப்பட்டது. வெவ்வேறு களங்களில் ஆய்வு செய்து படைப்புகளைத் தருவதாகவும், அதுவெறும் செய்திகளேயென்றும் என் படைப்புகளை விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

புதிய களங்கள் படைப்புக்கான உந்துதலைத்தருகிறது என்பது உண்மைதான். புதியகளங்களில் செய்திகளைச் சேகரித்துக்கட்டுரைகள் எழுதலாம். பிறகு அதைமறந்தும் போகலாம். வாசகர் கவனங்களை ஈர்த்து அவர்கள் நெஞ்சங்களில் உயிருள்ள பாத்திரங்களை இயங்கச் செய்வது எளிதல்ல. அதே சூழலில், அவர்களோடு நாளும் வாழ்ந்து, அவர்கள் பிரச்னைகள், இன்பதுன்பங்களில் மனம் கொடுத்து, ஒன்றாகக் கலக்கவேண்டும். இலக்கியப் படைப்பு எளிதல்ல.

பூவிருந்தவல்லியில் இருந்து, நீலகிரியில் அப்போது உருவாகிக் கொண்டிருந்த குந்தா நீர்மின் திட்டக்களத்தில் வாழப்போனேன். நான் விடைபெற்றுச் செல்லுமுன், பெண்கள் கிறிஸ்தவக்கல்லூரியில் பேராசிரியராக இருந்த பெட்ஃபோர்ட் அம்மையார், என்னிடம், மலைவாழ் மக்களைப்பற்றிய நாவலை நான் எழுதவேண்டும் என்று கூறினார்.

குறிஞ்சித்தேன் உருவாக விழுந்த வித்து ஆகும். நாட்டின் வளமையை நோக்கிய முன்னேற்றத்துக்காக நேரு முக்கியமாகக் கருதி செயல்படுத்திய அணைத்திட்டத்தை வரவேற்காதவர்கள் இருக்க முடியாது என்றுகருதியிருந்த எனக்கு, எங்கள் வீட்டுக்கு அருகாமையில் இருந்த தாசில்தார் வீட்டுக்கு அன்றாடம் சோகமுகத்துடன கூட்டமாக வந்து செல்லும் முதிய படகமக்களைப் பார்த்து வியப்படைந்தேன். தங்கள் மலையிலும், காலம் காலமாக அவர்கள் வாழ்வில் பழகிய பண்பாட்டிலும் மாற்றங்கள் வருவதை அவர்களால் ஏற்க முடியவில்லை. மூன்றாண்டுகள் அவர்களோடு வாழ்ந்து, ஆய்வுகளை மேற்கொண்டு குறிஞ்சித்தேனைப் படைத்தது, அரிய அனுபவமாகும். மண்ணை அடிப்படையாகக் கொண்டு உழைத்து வாழும் வாழ்வு, 'பணத்தை' இலட்சியமாக்கி வாழும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்ட மாற்றம், இன்றளவில் மனிதத்தையே காவு கொண்ட தீமைகளை வளர்த்திருப்பதைக் காண்கிறோம்.

இந்தப் பண்பாட்டுச் சீரழிவின் தொடக்கம், மின்திட்டத்தில் பணிபுரிய வந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் பிரச்னையாக உருவெடுத்ததை ஒரு குறுநாவலில் பிரதிபலிக்கச் செய்திருக்கிறேன். இறுதியும் தொடக்கமும் என்ற தலைப்பில் அது வெளியாயிற்று.

நீர் மின் திட்டத்தில் கல் மண் சுமக்கவும் கொத்துவேலை செய்யவும் வந்திருந்த மக்கள் அனைவருமே கிராமங்களில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள். தொடர்ந்து வானம் பொய்த்ததாலும், குடும்பத்துக்குப் பொதுவான நிலம் தலைமுறை மக்களிடையே பிரிந்து குறுகியதாலும், பணத்தின் தேவை இன்றியமையாததாக

நெருக்கியதாலும், ஆணும் பெண்ணும் குஞ்சு குழந்தைகளுமாக சிமிட்டி நெடியிலும் வாழ இடமில்லா நெருக்கத்திலும், உழைப்பைக் கொடுக்க வந்தார்கள். பயிர்த்தொழில் பசுமையையும் மனித ஈரங்களையும் பாதுகாக்கும் தொழில். ஆனால், இந்தத் தொழிற் களத்தில், புதிதாக வந்த பெண்கள், எத்தகைய பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது? அவர்கள் காலம் காலமாகக் கட்டிக்காத்த கலாசார வேர்கள் ஒரு நொடியில் அறுந்து போயின. களத்தில் பருவமெய்தும் பெண்ணை கூலிக்கு அனுப்பலாமா என்ற பிரச்னையைவிட, அவளைத்தனியே விட்டுச் செல்லமுடியாத பிரச்னை பெரிதாகும். தொழிற்களத்தில் பணம் சம்பாதித்துக் கொண்டு மீண்டும் கிராம மண்ணில் நீர்வளம் கண்டு பயிர்த்தொழில் செய்யலாம், பெண்களை நல்லமுறையில் கட்டிக் கொடுக்கலாம் என்று கண்ட கனவுகள் வண்ணமிழந்து பொய்த்தன.

அணைத்திட்டத்தில் ஒருகட்டம் முடிந்ததும், ஊருக்குப் போகலாம் என்று கனவுகண்டு மூன்று மாதக் கூலியை போனசாகப் பெற்ற குடும்பம் படிக்கப் போட்ட மகள் யாரோ ஒருவனுடன் ஓடிவிட்ட செய்தியில் அதிர்ந்து, ஊர்திரும்ப இயலாமல், இன்றும் குளிர் நெருக்கும் மலைமுகடுகளுக்குத்தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் புதிய கூலிகளாக அங்கு செல்லும் வரிசையில் சேர்ந்து செல்வது மனதை உருக்கும் காட்சி.

ஒவ்வொரு படைப்பும் மறக்கமுடியாத அனுபவங்களையும், புதிய புதிய இடங்களையும், மக்களின் இதயங்களையும் எனக்குக் கொடையாக்கித்தந்திருக்கிறது.

கோவாவில் நான் இரண்டாண்டுகள் தங்கி இருந்தேன்.1961-டிசம்பரில் கோவா சுதந்தரம் பெற்று இந்திய அரசோடு இணைந்தது. நான் அங்கு 1965இல் சென்றபோது, சுதந்தரப் போராட்டத்தின் சுவடுகள், ரணங்கள், அப்படியே இருந்தன. இந்தியா, பிரட்டிஷாரின் ஆளுகையில் இருந்து விடுதலை பெற அஹிம்சையே ஆயுதமாக இருந்தது. உலகிலேயே எங்கும் கண்டிருந்திராத சாதனை அது. ஆனால், மிகச்சிறிய கோவாப் பிரதேசம், இறுதியில் இராணுவத் தாக்குதலை எதிர் கொள்ளவேண்டியிருந்தது. ஏறக்குறைய பதினாறு ஆண்டுப்போராட்டத்தில் பங்கெடுத்த பெரியவர்கள், எங்கோ கண்காணாத மேற்கு ஆப்பிரிக்கச் சிறையில் பல்லாண்டுகளுக்கு அடைபட்ட போராளிகள் பலர் எனக்கு காந்திய நெறியில் அவர்கள் நின்றதை உணர்த்தினார்கள். இந்திய விடுதலைப் போராட்ட காலத்துச் செய்திகளை விட, கோவா விடுதலைப் போராட்டச் செய்திகள்,

காந்தியடிகளின் அஹிம்சை நெறியையும் சத்தியாக்கிரக தத்துவத்தையும் எனக்கு ஊன்றிக்கருத்தில் கொள்ள மனதை ஈர்த்தது. 'வளைக்கரம்' எழுநூறு பக்கங்களுக்குமேல் கோவா சுதந்தரப் போராட்டத்தை விரிக்கும் நூல். காந்திய தத்துவம் பற்றி பலநூல்களையும் பிறகுதான் பயின்றேன். 1969இல் காந்தி நூற்றாண்டு கொண்டாடப்பட்டது. சுதேச மித்திரன் இதழுக்கு, சிறுவருக்காக, 'காந்தி தரிசனம்' என்ற தலைப்பில் சில கட்டுரைகளை எழுதினேன்.

அஹிம்சை நெறியில் விடுதலையைச்சாத்தியமாக்கிய அண்ணலின் நூற்றாண்டைக் கொண்டாடிய அதேநேரத்தில் நாட்டில் எத்தனை வன்முறைகளைக்கண்டோம்? கேரளத்து புல்பள்ளி இருந்து, வடக்கே வங்கம் தொடங்கிய தீவிரவாத வன்முறை என்னைச் சிந்திக்கச்செய்தது. தேசியக்கட்சிகள் கொள்கை, இலட்சியம் இரண்டையும் மறந்து தனிநபர் சுயநலத்தை அம்பலப்படுத்தின. தமிழ் நாட்டில் மதுக்கடைகள் திறக்கப்பட வழிவகுக்கும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அந்த ஆண்டில் வடநாட்டில் கல்கத்தா, பாட்னா, நேபாளம் என்று நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வாய்த்தது. வங்கத் தலைநகரில், காந்தி சிலையைச்சுற்றி ஆயுதம் தாங்கிய காவலர் நின்று கொண்டிருந்தனர். காந்தி சிலையை உடைக்குமளவுக்கு அவருடைய அஹிம்சை நெறி ஓய்ந்து போயிருந்தது. பார்த்துக் கொண்டே இருக்கும்போது, பெட்ரோல் குண்டு வெடிக்கும். கத்தியும் இரத்தமும் சாதாரண மக்கள் புழக்கத்தையும் அதிர்ச்சி கொள்ளச் செய்தன. பாட்னாவில், அரசியல்வாதிகளின் மக்களைச் சுரண்டும் ஆதிக்கமும், வன்முறைக்கலவரங்களும், ஏழைகளின் அறியாமை நிறைந்த மூடநம்பிக்கைகளும், என்னுள் பல வினாக்களைத் தொடுத்தன. நேபாளத்தில் நான் கண்ட காட்சிகளில், சீனாவைப்பற்றி இந்திய அரசியல் பிரசாரங்கள் தீட்டியிருந்த வடிவமே மாறின. சீன மக்களின் உழைப்பு விவசாய முன்னேற்றங்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் தெரியக்கிடைத்தன.

நேபாளத்துக்கடைவீதிகளில், இந்தியப் பொருட்களைக் காட்டிலும் தரமான மலிவான சீனத்துப் பொருட்கள் கிடைத்தன. பாத்திரங்கள், பருத்தித் துணிகள், கம்பளிகள், எல்லாமே அங்கு சீனத்தில் இருந்து வந்திருந்தன. இந்தியரின் அந்நியமோகத்தை, வெளிநாட்டுப் பொருட்களையே நாடிய அவலத்தையும் உணர்ந்தேன். 'தேசாபிமானம்' என்ற சொல்லே தொலைந்துபோயிருந்தது.

நம்நாட்டின் அஹிம்சைக் கொள்கை பொய்யாகி விட்டதா? ஏன்? என்ற வினாவுக்கு விடைபோல் வேருக்கு நீர் நாவல் பிறந்தது.

1972ம் ஆண்டு நம் நாட்டில் இரண்டு நிகழ்வுகள் நடந்தேறின. ஒன்று. இம்சையை ஆயுதமாக்கிய 'பங்களாதேஷ்' போர். மற்றது, காலம் காலமாக சம்பல் பள்ளத்தாக்குகளில் ஒளிந்து வன்முறை, பழிக்குப்பழி, கொள்ளை என்று வடநாட்டின் பலபகுதிகளை அச்சுறுத்திக் கொண்டிருந்தவர்கள் அஹிம்சை நெறிக்குத்த தலைவணங்கி, சரணடைந்த செய்தி. ஏற்கெனவே, அறுபதுகளில் ஆசர்யவினோபாபாவே, இந்த முயற்சியில் வெற்றிக்கொண்டிருந்தாலும், அதற்குப்புத்துயிரூட்டி, ஜயப்பிரகாசநாராயணர், சம்பல் மறவர்களில் பெரும்பான்மையினரையும் சரணடையச் செய்து மறுவாழ்வுக்குத் திரும்பச் செய்தார்.

இந்தச் சம்பவத்தை, முக்கியமான நிகழ்ச்சியை எனது படைப்புக்கான பொருளாகத்தேர்ந்தேன். முற்றிலும் புதிய நிலைக்களன். ஏற்கெனவே 'கோவா' சுதந்தரப் போராட்ட நாவல் வளைக்கரத்துக்கு நான் ஆங்கிலமும் தமிழும் பயன்படாத சூழலில் மராத்தி, கொங்கணி, கன்னடம் என்று நனைந்த அனுபவம் இருந்தது.

ஆனால் இந்த மத்தியப்பிரதேச, ராஜஸ்தான், உத்திரப்பிரதேச எல்லைகளில் பரந்திருந்த பிரதேசத்தில் இந்தியைத்தவிர வேறு எந்த மொழியறிவும் பயன்படாது. அதுமட்டுமன்று. புத்தகப் படிப்பறிவும் பயனில்லை. மத்தியப்பிரதேச கிராமமொன்றில் டாக்டர் தொழில் புரிந்த நண்பர் ஒருவரின் வீட்டில் சென்று தங்கி, பல இடங்களைச் சுற்றிப்பார்த்து, என்னை நான் தயார் செய்து கொள்ளவேண்டிஇருந்தது.

கொள்ளையர் சரணடைந்த நிகழ்ச்சிகள் 'ஹிந்துஸ்தான்' இந்தி வார இதழில் தொடராக வெளிவந்து கொண்டிருந்தது 'மொரினா' என்ற இடத்தில் இருந்த "மன்மோகன்குமார் தமன்னா" என்ற பஞ்சாபி நிருபரின் முகவரியை டெல்லிப் பத்திரிகை அலுவலகத்தில் இருந்து பெற்றேன். குவாலியர் வந்திரங்கியபோது துணையாக என் கணவரும் சென்னையில் இருந்துவந்தார்.

புதுடில்லிக்கு ரயிலில் செல்லும்போதே கூர்ச்சுக்கூர்ச்சாகத் தெரியும் மேடுகளையும் ஆழ்ந்த பள்ளப்பாதைகளையும் பார்க்க முடியும். மொரினாவுக்குச் சென்று அங்கிருந்த காவல்துறை கண்காணிப்பாளர் இந்தூர்கரிடம் செய்திகள் அறிந்தேன். இப்போதைய பூலான்தேவியைப்போல் அக்காலத்தில் 'புத்லிபாயி' என்ற கொள்ளைக்காரி இருந்தாள். அவள் சுட்டு வீழ்த்தப்பட்ட படத்தை அவர் காட்டினார். குட்டைப்பாவாடையும், இரவிக்கையுமாக அவள்

வீழ்ந்து கிடந்தாள். அவர்களின் சாகசங்களை அவர் விவரித்துக் கொண்டே, சம்பல் நதி கரையில் விரிந்து கிடந்த பள்ளத்தாக்குப் பிரதேசத்தை அவர் எனக்குக் காட்டினார்.

"போலீசு வண்டியைக் கண்டால் குண்டு பாய்ந்து வரலாம். நீங்கள் மட்டும் இறங்கி இந்தக்காட்டுக்குள் சென்று பார்க்கிறீர்களா? என்று கேட்டார்

நெடிய நெடிய பாம்புப் புற்றுகள் போல் தெரிந்த அந்த முண்டு முடிச்சுப் பள்ளத்தாக்குப் பாதையில் நான் இறங்கி நடந்தேன். என்கணவரோ, இடிந்திருந்த சம்பல் ஆற்றுப்பாலத்தில் நின்று அதைப் பரிசீலனை செய்வது போல் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிது தொலைவு நடந்த பிறகுதான் அச்சம் என்னுள் பரவியது. ஏனெனில் நான் வந்தபாதை எதுவென்று தெரியவில்லை. எப்படியேனும் திரும்பிவிடவேண்டும் என்ற துணிவை வரவழைத்துக் கொண்டு நடந்தேன். சாலை தெரிந்தது.

பத்துநாட்கள் சென்றபின் 'இந்துர்கர்' சுடப்பட்ட செய்தி அறிந்ததும் திடுக்கிட்டு அதிர்ந்தேன்.

மறுநாள் காலையில், என் கணவர் நின்று பரிசீலனை செய்த பாலம் இடிந்து ஆற்றில் வீழ்ந்த செய்தியும் ஏதோ கண்டத்தில் இருந்து தப்பினோம் என்ற உணர்வைத்தந்தது.

குவாலியரின் அருகில்தான் காந்தி அமைதி அறக்கட்டளை தோற்றுவித்த ஆசிரமம் இருந்தது. அங்குதான் சரணடைந்த வன்முறையாளர் சிலர் இருந்தனர். இன்னும்பலர் குவாலியர் சிறையில் இருந்தனர். வழக்குரைஞர்கள் அவர்கள் செய்த கொலை கொள்ளை களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, வழக்குகளை உயிர்ப்பிப்பார்கள். சிறைவளாகத்தில் திறந்த வெளி நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்படும். பின்னர் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு, மறுவாழ்வுக்கான மன்னிப்பு வழங்கப்படும்.

ஆசிரமத்தில், புகழ்பெற்ற கொள்ளைக்காரன் மான்சிங்கின் புதல்வர் தாசில்தார் சிங் இருந்தார். இவர் வினோபாபாவேயிடம் சரணடைந்து மறுவாழ்வு பெற்றிருந்தார். பதிநான்கு வயதில், தந்தையின் குழுவுடன் சேர்ந்து, சம்பல் காட்டில் வாழ்ந்து வன்முறைகளில் ஈடுபட்டவர். நானூறு கொலைகளுக்குக்காரணமாக இருந்தவர். காவலரின் குண்டுபட்டதனால் ஒருகால் சற்று ஊனமடைந்தவர். காந்தி ஆசிரமத்தின் செயலாளர் 'மகாவீர் பாய்' என்னிடம் அவரை

அறிமுகப்படுத்தி வைத்தார். 'அவருடன் பேசுங்கள்' என்று சொல்லிவிட்டு அவர் எங்கள் இருவரையும் அலுவலக அறையில் தனியே விட்டுவிட்டுச் சென்றார்.

தாசில்தார்சிங் என்னைப்பார்க்கவிரும்பாதவர்போல், ஒருபத்திரிகையை எடுத்துப் படிப்பது போன்ற பாவனையில் முகத்தை மறைத்துக் கொண்டார். ஆஜானுபாகுவான உருவம். பிள்ளைகள் பயப்படும் மீசை. கொள்ளைக்காரர் என்ற உருவத்துக்கு எடுத்துக் காட்டாக அந்த அறுபது வயதிலும் திகழ்ந்தார்.

எனக்குப் பேச்சு எழும்பாமல் நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. நான் உருப்போட்டு வைத்திருந்த இந்தி வினாக்கள் சுத்தமாக மறைந்து போயின. அத்துணை நடுக்கம் எப்போதுமே எனக்கு ஏற்பட்டதில்லை. அரைமணிநேரம் ஆகிவிட்டது அதே நிலையில் இருந்தோம். 'மகாவீர் பாய்' உள்ளே வந்தார். என்னிடம் ஆங்கிலத்தில், 'நீ பேசவில்லையா? என்று கேட்டார். நான் விடை கூறாமல் சங்கடத்தைக்காட்ட எழுந்து நின்றேன். "இது அலுவலக அறை. யாரேனும் வருவார்கள். நீ அடுத்த அறைக்குச் சென்று அவனிடம் காட்டு வாழ்க்கையைப்பற்றி விசாரி?" என்று சொன்னார்.

அடுத்த அறை வக்கீல்கள் மாலையில்கூடி வழக்குகளை ஆராயும் அறையாம். அங்கு ஒரே ஒரு நாற்காலி மட்டும் இருந்தது. இன்னொன்று கொண்டுவந்து போடப்பட்டது. நான் என் நடுக்கத்தை மறைக்க, கால்மேல்கால்போட்டு அமர்ந்துகொண்டு குறிப்புப் புத்தகத்தை வைத்துக் கொண்டேன். "நீங்கள் எத்தனை வயதில் உங்கள் தந்தையின் குழுவில் சேர்ந்தீர்கள்?" என்று வினவினேன்.

அவர் கூறிய விடை என்னைத்திகைக்கவைத்தது. கால்மேல்கால் போட்டு அமர்ந்திருந்த நிலையை மாற்றிக் கொண்டேன். அவர் கூறிய விடையில் இருந்த உட்பொருள் என்னைத்தாக்கியது.

"என் தந்தைமுன் நேருக்குநேராக இப்படி ஒரு பெண் வந்து நிற்க, அமரமுடியுமா?" என்ற விடையில் வருத்தமும் பரிதாபமும் தொனித்தன. தலையில் துணியில்லாமல் ஒரு ரஜபுத்திர ஆணின் முன் தோன்றினால் அவள் ஒழுக்கமற்றவளாகவே இருக்க முடியும். அவர் தந்தை ஒழுக்கசீலர். அத்தகைய பெண்கள் எவரும் அவர் முன் வரமாட்டார்கள் என்பதே அதன் பொருள். நான் மன்னிப்புக் கேட்டேன்.

பின்னர் சமநிலைக்கு வந்து, இரண்டு மணிநேரம் பேசினோம். திறந்த மனதுடன் பல உண்மைகளைக் கூறினார். பணமும்

பொருட்களும் இருக்கும். உணவு கிடைக்காது. ஆனால் கொலை கொள்ளைகள் எல்லாமே அக்கிரமக்காரர்கள், அநியாயம் செய்தவர்கள், வட்டிக்கு வட்டி வாங்கி ஏழைகளைக்கசக்கி பிழிந்தவர்கள் என்ற இலக்கின் பழிவாங்கல்களாகவே நிகழ்ந்தன. தீவிர காளி பக்தர்கள். இரவில் அவர் தந்தையையும் சகாக்களையும் அழைத்து வயிறார உணவு கொடுத்த கிராமங்கள் இருந்தன. எவரேனும் போலீசுக்கு உளவு கொடுத்தால் அவர்கள் உயிருடன் தப்பியதில்லை. சில சமயங்கள் அவர்கள் கொள்ளையர் கோலத்திலும் இவர்கள் காவலர் உடையிலும் மோதிக் கொண்டதும் உண்டு. இந்தி சினிமாக்களில் குதிரைகள் மீதேறிக் கொள்ளைக்காரர் வருவதுபோல் காட்டுவது சரியல்ல. காட்டில் குதிரைகள் வளர்த்துப் பயிற்றிப் பராமரிப்பது எளிதல்ல...." என்றெல்லாம் பல விவரங்களைத் தெரிவித்தார். 'இன்றைய சமுதாயத்தில், வெள்ளை உடையணிந்த கொள்ளைக்காரர்கள் வரதட்சணை என்று வாங்குகிறார்களே, அது கொள்ளையல்லவா!' என்றும் கேட்டார்.

இதெல்லாம் நான் எதிர்பார்த்திராத மறக்கமுடியாத அனுபவங்கள்.

சிறைவளாகத்துக்கும் சென்று அரிய அனுபவங்களைப் பெற்றேன். ஏதோ ஒரு சிறிய திருட்டைச் செய்து விட்டுச் சிறைக்குள் இருக்கும் மகனைப்பார்க்க கிராமத்திலிருந்து ரொட்டியைக்கட்டிக் கொண்டு வந்து அனுமதிக்காக ஏழைகள் வாயிலில் தவமிருந்தனர். ஆனால் அதே போழ்தில் நூற்றுக்கணக்கில் கொலை, கொள்ளை என்று தொழில்புரிந்தவர்களின் மனைவியர், உறவினர், அடுக்காக தங்க வளையல்கள், கடிகாரம் என்று அணிந்து கொண்டு, பையில் சூட்டுக்குப்பியில் காப்பியும் பண்டங்களுமாக நேராக உள்ளே நுழைந்த முரண்பாட்டையும் கண்டேன். சம்பல் காட்டு முட்களாக இருந்தவர்கள், அஹிம்சைத் தத்துவத்தால் மலர்களாகமாறிவரச் செய்த சோதனை முயற்சி அது. முள்ளும் மலர்ந்தது நாவலுக்கு முன்னுரை வேண்டி ஆசாரிய வினோபாபாவேயிடம் சென்றேன்.

அவர், நான் எழுதியிருந்த முன்னுரையின் தமிழ் அச்சுப் படிகளைப் படித்தார்; பாராட்டினார். ஆனால் தாம் எழுத்துத் துறவு மேற்கொண்டுவிட்டதால் முன்னுரை எழுதுவதற்கில்லை என்றார். இந்தியா முழுவதற்குமான ஒரே 'எழுத்து லிபி வந்தால் பேதங்கள் மறைந்துவிடும்; அதற்காக நீ எடுத்துச் சொல்' என்று பணித்தார். நான்விடவில்லை. ஏதேனும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினேன்.

'பாபாகே ஆசீர்வாத்' என்று இந்தியிலும்,
கீழேதமிழில் 'பாபாவின் ஆசிர்வாதம்' என்றும்

எழுதி தந்தார்.

சிறுகதைகள், குறுநாவல்கள், வாழ்க்கை வரலாறுகள், நாவல்கள் எல்லாமே எனக்கு அந்தந்தப் பாத்திரங்களையும் சூழலையும், பிரச்னைகளையும் உட்கொள்ளும் பேரனுபவத்தை அளித்திருக்கின்றன. **கரிப்பு மணிகள், அலைவாய்க்கரையிலே, சேற்றில் மனிதர்கள், கூட்டுக் குஞ்சுகள், மண்ணகத்துப்பூந்துளிகள்** ஆகிய நாவல்கள் ஒடுக்கப்பட்ட மக்களையும், பெண்களின் அவலநிலையையும் ஆராய எனக்கு வாய்ப்பளித்தன. தீவிரமான சிந்தனைகளின் பயன் மேலும் மேலும் பெண்களின் பல்வேறு தளங்கள், அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது.

பாதையில் பதிந்த அடிகள் என்ற தலைப்பில் 1891இல் பிறந்து 1953இல் மறைந்த புரட்சிகரமாக வாழ்ந்த மணியம்மையின் வாழ்க்கை வரலாற்றை எழுதினேன். இளமையில் இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டு கைம்பெண்ணாக, மொட்டை, முக்காடு என்று ஒடுக்கப்பட்ட மணியம்மை, சநாதன சமுதாயத்தை நிலச்சுவான்தார் ஆதிக்கங்களை, எதிர்த்து ஒடுக்கப்பட்ட அரிசன மக்களுக்காக விவசாயிகள், உழைப்போர் சார்ந்து இயக்கங்கள் கண்டாள். சுதந்தரப் போராட்டத்திலும் பங்கேற்றாள்.

இறுதியில் அவள் கொல்லப்பட்டாள். இவள் வரலாறே மறைக்கப்பட்டிருந்தது. கீழ்த்தஞ்சை கிராம மக்களின் வாய் மொழிகளிலிருந்தே வரலாற்றுத்தகவல்களைச் சேகரித்து, இந்த நூலை உருவாக்கினேன்.

அரசியல் சுதந்தரம் பெற்று, பெண்களின் பலபிரச்னைகளுக்கும் சட்டபூர்வமான தீர்வு ஏற்பட்டும், பெண்விடுதலை பெற்றிருக்கிறாளா என்ற சிந்தனையின் விளைவே, காலந்தோறும் பெண் என்ற தலைப்பில் பெண்களின் சமூக வரலாற்று ஆய்வு நூல்களை எழுத உந்துதலாகப் பரிணமித்தது. சமய சாத்திரங்கள், மரபுகள் பெண்ணை ஒடுக்க அவளையே அவளுக்கு அந்நியமாக்க எவ்வாறு பயன்படுத்தப் பட்டு இன்றளவும் பெண்ணின் ஆளுமையையும், சுயசிந்தனையையும் கட்டிப்போட்டிருக்கின்றன, என்ற நோக்கில் செய்யப்படும் ஆய்வுகள் பெண்களின் விழிப்புணர்வுக்கும், மொத்த சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் இன்றியமையாதவை.

ஏறக்குறைய அறுபதாண்டுகளாகும் எனது இலக்கிய வாழ்வில் பலநூற்றுக்கணக்கான பாத்திரங்களோடு ஒன்றியிருந்திருக்கிறேன். ஒரு நடிகர் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்கிறார். ஆனால் காட்சியமைப்புகள், ~~உரையாடல் எல்லாம்~~ அவர் பொறுப்பல்ல. ஆனால் எழுத்து என்று வரும்போது முழுமைக்கும் அதுவே பொறுப்பாகிறது. ஒருகளத்தில் பல்வேறு மனிதர்களிடம் பழகி உரையாடி செய்திகள் அறிகிறேன். உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்கிறேன். அவர்களில் ஒருவர் நாயகராக, நாயகியராக, நிலை பெறுவார். நான் அவருக்கு ஒரு பெயர் சூட்டுவேன். நிகழ்ச்சி உரையாடல்களைச் செதுக்கி அமைப்பேன். உள்ள பெயர்கள் மறந்து விடும்படி, அவர்கள் என்னுள் அமரத்துவம் பெற்று விடுவார்கள். கரிப்பு மணிகளின் செவத்தாச்சியும், மண்ணகத்துப் பூந்துளிகளின் அழகாயியும் எடுத்துக்காட்டுகள்.

மொத்தத்தில் என் இலக்கிய வாழ்வு, மொழிகள், பிரதேசங்கள், பழக்க வழக்கங்கள், வாழ்முறைகள், மரபுகள், வரலாறுகள் எல்லா வற்றுக்கும் அப்பால் மனித நேயத்தையும், அது என்றும் மாயாமல் காப்பாற்றப்படவேண்டும் என்ற அக்கறையையும் கருத்தாக, கொடையாக அளித்திருக்கிறது. ஒருவகையில் எழுத்தே ஒரு தேடல் முயற்சியாக, மீண்டும் மீண்டும் பரிணமிப்பது போலும் தோன்றுகிறது. மனித மதிப்பீடுகள் சரிந்து இயற்கையின் கொடைகளும், உயிரினங்கள் இயற்கையின் நியதிகளின் படி ஏகோபித்து வாழும் வரை முறைகளும் அழிக்கப்பட்டு வரும் இச்சூழலில், கூட்டிக்கழித்துப்பார்த்தால் எதையோ இழந்துவிட்டாற்போன்று துயரம் மேலிடுகிறது. எனினும் கருக்கிருட்டையும் வெள்ளி முளைத்துக் கரைக்கும் என்ற நம்பிக்கையைப்பற்றிக் கொள்கிறேன்.

வண்ண நிலவன்

எங்கள் ஊர் தாதன் குளம். திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர்க்குச் செல்லும் ரெயில் மார்க்கத்தில் செய்துங்க நல்லூருக்கும், ஸ்ரீவைகுண்டம் ஸ்டேஷனுக்கும் இடையில் உள்ளது தாதன்குளம். எங்கள் வீட்டின் புறவாசலிலிருந்து அதாவது பின் வாசலிலிருந்து பார்த்தால் ரயில் போவது தெரியும். வீட்டிற்கு எதிரே, மீனாட்சி அத்தை வீடு. அவளுடைய மகன் புத்தி சுவாதீனம் இல்லாதவன். எங்கள் வீட்டிற்கு மேற்கே "வாலாட்டி தாத்தா" வீடு; இதற்குப் பிறகு பனைவிடலைகள்; இதற்கு அடுத்து உப்பிடாதி அம்மன் கோவில்; இதனை ஒட்டி காட்டுக்குள் இருக்கிற சாத்தான் கோயிலுக்குப் போகிற பாதை; அந்தப் பாதை ஒரு காலத்தில் ரொம்ப அழகானதாக இருந்தது. இரண்டு பக்கமும் பனை மரங்களும் உடை மரங்களும் அடர்த்தியாக இருந்தன. பார்வதி அக்காவுடைய அப்பா நயினார் நோன்பு அன்னிக்கு சித்திர புத்திர நயினார் கதைகளை வாசிப்பார். எல்லார்க்கும் பானகம் கொடுப்பார். எங்கள் ஊரில் நிறைய பூவரசம்பூ மரம் இருந்தன. சாத்தப்பா வீட்டை ஒட்டியும் ஒரு வயதான பூவரசம்பூ மரம் இருந்தது. அந்தமரத்தின் இலையில் சாத்தப்பா எங்களுக்கு ஊதல் செய்து கொடுப்பார். சாத்தப்பா மிலிட்டிரியில் இருந்து ஓய்வு பெற்றவர்; ராத்திரி 6, 7½ மணிக்கெல்லாம் எல்லார் வீட்டிலேயும் சாப்பிட்டு விடுவார்கள். எங்கள் வீட்டில் ஒரு பெரிய பனை நார் கட்டிலுண்டு, அந்தக் கட்டிலில் சாயந்தரமே தண்ணீர் தெளித்து பதப்படுத்தியிருப்போம். ராச்சாப்பாடு முடித்து, அந்தக்கட்டிலை வீட்டிற்கு முன்னால் போட்டு எல்லோரும் அதில் உட்கார்ந்து கொள்வோம். வீட்டிற்கு முன்னால் சாய்மான திண்ணை ஒன்று உண்டு. அந்தத் திண்ணையில் சாத்தப்பா உட்கார்ந்து கொள்வார். என்னுடைய 6-வது வயதுவரை, இரவு நேரங்களில் சாத்தப்பாவிடம்கேட்ட கதைகளுக்குக் கணக்கே இல்லை. சாத்தப்பா இப்போது இல்லை. அவர் சொன்ன கதைகள் தான் என்னை எழுதத்தூண்டுகிறதோ என்று இந்த 49-வது வயதில் தோன்றுகிறது.

அவரை மாதிரி சுவாரஸ்யமாக கதை சொல்லுகிறவரை இன்னும் நான் சந்திக்கவில்லை. அப்பா கல்கியின் பரமரசிகர். எங்கள் வீட்டின் முன் வராண்டாவில் குடும்பத்திலுள்ளோர்களின் போட்டோ

பிரேம்களுடன் கல்கியின் பெரிய படமும் சட்டமிடப்பட்டு மாட்டியிருந்தது. 'கல்கி'என்றால் இப்போது பேசப்படுகிற 'பகவான் கல்கி' இல்லை. எழுத்தாளர் கல்கி. 1954-ல் திருநெல்வேலிக்கு அம்மாவின் வீட்டிற்கு வந்தோம். 1959 வரை திருநெல்வேலியில்தான் வாசம். திருநெல்வேலி டவுன் ரயில்வே பீடர் ரோட்டில் (இப்போது லட்சுமி டாக்கீஸ் இருக்கிற இடத்தில்) ஒரு மைதானம் இருந்தது. அங்கே ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் குஸ்தி நடக்கும். அந்த குஸ்தியை நானும் எனது நண்பர்களும் திருட்டுத்தனமாகப் போய் பார்ப்போம்; சமயங்களில் குஸ்தி ஆரம்பிக்கும் நேரத்தில் சிறுவர்கள் இலவசமாக குஸ்தி பார்க்க அனுமதிப்பது உண்டு. ஒருமுறை தினத்தந்தியை நிறுவிய ஆதித்தனார் மூலம் 'நாம் தமிழர் கட்சி' மாநாடு அந்தத் திடலில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. அந்த மாநாட்டில் ஈ.வே.ரா.வும் பேசினார்.அவர் பேசும்போது அவர் வளர்த்து வந்த பெரிய அல்சேஷன் நாயும் படுத்துக்கிடந்தது. பெரியாரை முதன் முதலாகப் பார்த்தது அப்போது தான். என்னுடைய தாய்மாமன் ஆன கிட்டு என்ற கோபாலகிருஷ்ணன் சோவியத்து நாடு இதழின் சந்தாதாரராக இருந்தார். அழகான வண்ணப் படங்களுடன், உயர்ந்தரக காகிதங்களுடன் அச்சிடப்பட்டு வந்த சோவியத்து நாடு இதழ். எனக்கு ரொம்பப் பிடிக்கும். இன்னொரு ஒன்று விட்ட மாமாவான லட்சுமணன் பா. ராமசாமியின் சீடன். சட்டை அணியாத காங்கிரஸ் தியாகி; சிறை சென்றார். அவர் ஒரு சோசலிஸ்ட்டும் கூட. இன்னொரு மாமா சங்கரசுப்பு. இடது, வலதுசாரி கொள்கைகளில் நம்பிக்கை உடையவர். அவர் வீட்டில் இருந்த பத்திரிக்கைகளில் உள்ள மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் என்னை வெகுவாக ஈர்த்தன. அப்போது காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக நெல்லை மாவட்டத்தில் தி.மு.க.வும் கம்யூனிஸ்ட் கட்சியும் செல்வாக்கோடு வளர்ந்து வந்தன. டவுன் சந்திப்பிள்ளையார் முக்கில் உள்ள காந்தி சதுக்கத்தில் தான் பெரும்பாலான கட்சிக் கூட்டங்கள் நடைபெறும். அதை விட்டால் ரயில்வே பீட்-ல் உள்ள மந்திரமூர்த்தி ஹைஸ்கூலில் கூட்டங்கள் நடைபெறும். நாங்கள் வசித்து வந்த சம்பந்த மூர்த்தி கோவில் தெருவில், எங்கள் வீடு இருந்த வளைவு எதிரே 'சுதந்திர சங்கம்' இருந்தது. சுதந்திர சங்கத்தில் ஆண்டுதோறும், காந்தி ஜெயந்தி, சுதந்திரதினவிழா விமர்சையாகக் கொண்டாடுவார்கள்.

பாப்புலர் டாக்கீஸில் தி.மு.க. சிறப்புச் சொற்பொழிவுக்கு கூட்டங்கள் நடக்கும். அக் கூட்டம் ஒன்றில் கண்ணதாசன் கலந்து கொண்டு பேசக்கேட்டிருக்கிறேன். அந்தக் கூட்டங்களுக்குக் கட்டணம் செலுத்திதான் செல்ல வேண்டும். பேச்சை கேட்கக் கட்டணம் வைத்தவர்கள் தி.மு.க. வினராகத்தான் இருக்க வேண்டும். காசு

கொடுத்துக் கேட்கும் அளவுக்கு அவர்களுடைய பேச்சு உத்வேகத்துடன் இருந்தது. அந்த நாட்களில் காங்கிரஸ் உட்பட எல்லாக் கட்சியினரும் தங்கள் கட்சி தலைவர் பெயரால் மன்றங்கள் அமைத்துப் படிப்பகங்கள் நடத்தி வந்தனர். அப்படிப் படிப்பகங்களில் தினசரி பத்திரிக்கைகளுடன் வார, மாத இதழ்களும், புத்தகங்களும் இருந்தன. படிப்பகங்களும், பொது நூல்கங்களும் என்னுடைய படிப்பார்வத்திற்குத் தீனியிட்டன. 1959-ல் மீண்டும் எங்கள் குடும்பம் திருநெல்வேலியிலிருந்து தாதன்குளத்தின் பக்கத்தில் உள்ள கருங்குளத்திற்குக் குடிபெயர்ந்தது. கருங்குளம் மிக அழகான கிராமம். ஊரின் வடக்கே தாமிரபரணி ஆறு ஓடியது. கீழ்புறம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பச்சைப்பசேல் என்று வயல்வெளி. ஊரில் ஆரம்பத்தில் சிவன் கோயிலை ஒட்டி ஒரு தாமரைக் குளம். அக்ரஹாரத்திற்கு நடுவே குன்றின் மீது இருந்த பெருமாள் கோயிலுக்குப் போகும் படிகட்டுகள், அக்ரஹாரம் மிக நீளமானது. பெருமாள்கோவிலில் நடக்கும் புரட்டாசி மாத கருட சேவை விஷேசமானது. சித்ரா பௌர்ணமி அன்று பெருமாள் மலையைவிட்டு கீழே இறங்கி வருவார். சித்ராபௌர்ணமி சப்பர அலங்காரம் இன்றும் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. அக்ரஹாரத்தில் உள்ள இளைஞர்கள் எல்லாம் சேர்ந்து வாலிபர் சங்கம் ஒன்றை நடத்தி வந்தார்கள். அதற்கு யூத் அஸோஸியோஷன் என்று பெயர். அங்கும் ஏராளமான புத்தகங்கள் இருந்தன.

நான் சிறிது காலம் கருங்குளத்திலிருந்து தினசரி ஸ்ரீவைகுண்டத்திற்கு பஸ்ஸில் சென்று ஆறாவது படித்து வந்தேன். யூத் அஸோஸியேஷன் தவிர ஊரில் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் நூலகம் ஒன்று இருந்து வந்தது. அந்த நூலகத்தை மேற்பார்த்த ஆறுமுகம் என் அப்பாவின் நெருங்கிய நண்பர். பள்ளி விடுமுறை நாட்களில் அந்த இரண்டு நூலகங்கள் தான் எனக்கு கதி. நூலகர் ஆறுமுகம் கல்கியின் பொன்னியின் செல்வன், மகுடபதி, பொய்மான் கரடு, அநுத்தமாவின் பலநாவல்கள், தமிழ்வாணன் நாவல்களை வாசிக்கக் கொடுத்தார். 1960-ல் என் படிப்பை உத்தேசித்து நான் மட்டும் என் சித்தப்பா வீட்டிலும் என் மாமா வீட்டிலுமாகத் தங்கிப் படித்து வந்தேன். மாமா பஞ்சாயத்து போர்டு நூலகத்தைத் திறந்து வைத்து மேற்பார்வையிடுகிறவராக இருந்து வந்தார். பள்ளி விடுமுறை நாட்களில் நானும் மாமாவின் இரண்டு பையன்களும் சென்று சேர்ந்து நூலகத்தைத் திறந்து வைப்போம். அந்த நூலகத்தில் சக்திகாரியாலயம் வெளியிட்ட பல அபூர்வமான மொழிபெயர்ப்பு நூல்கள் இருந்தன. எமிலிஸோலாவின் ஜெர்மினால், நானாவின்தாஸ்

போன்ற மொழிபெயர்ப்பு நூல்களை ஆசைத்தீரப் படிக்க முடிந்தது. அந்த வருடம் 7-வது வகுப்பில் பெயிலாகிவிட்டேன். ஏற்கெனவே படிப்பில் நான் சூரப்புலி; கதைப் புத்தகம் படிக்கும் ஆர்வம் பள்ளிப்படிப்புக்கு எமனாகவே வந்து வாய்த்தது. 1961-ல் குடும்பம் திரும்பவும் பாளையங்கோட்டைக்குக் குடிபெயர்ந்தது. பாளையங் கோட்டையில் நான் படித்த கதீட்ரல் ஹைஸ்கூலில் அருமையான நூலகம் ஒன்று இருந்தது. அங்கேயிருந்த நூலகரின் பெயர் 'உயிர்'. பம்பாய் பியர்ல் பதிப்பகம் தென்மொழி புத்தக டிரஸ்ட் வெளியிட்ட பல நூல்கள் அங்கு இருந்தன. பியர்ல் பதிப்பகம் வெளியிட்ட வில்லியம் ஃபேக்னர், எஹமிங்வே போன்றோர் நாவல்களைத் தமிழ் மொழிபெயர்ப்பில் படித்தேன். அப்போதுதான் க.நா.சு., வல்லிக்கண்ணன் போன்றோர் மொழிபெயர்ப்பு நூல்கள் மூலமாக எனக்கு அறிமுகமாயினர். நாங்கள் குடியிருந்த வடக்கு ரத வீதியில் முத்துகிருஷ்ணன் என்ற அருமையான நண்பர் எனக்கு அறிமுகமானார். அப்போது நான் 8-வது வகுப்பு படித்து வந்தேன். அவர் பி.எஸ்ஸி முதலாண்டு படித்துக் கொண்டிருந்தார். முத்துக்கிருஷ்ணன் ஒரு தீவிரமான வாசகர்; மார்க்ஸியத்தில் ஆழ்ந்த பிடிப்பு கொண்டவர். அவர்தான் எனக்கு மு.வ., நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன், வி.ஸ. காண்டேகர் போன்றவரையும் தாமரை, தீபம், சரஸ்வதி, போன்ற பத்திரிக்கைகளையும் அறிமுகம் செய்து வைத்தார். அந்த சமயத்தில் கோயம்புத்தூரிலிருந்து 'புதிய தலைமுறை' என்ற பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தது; அது எம்.எல். பத்திரிக்கையாகக் கருதப்பட்டது. அந்த சமயத்தில் நா. பார்த்தசாரதி கல்கி நிர்வாகத்தை எதிர்த்து வெளியே வந்தார். அதைப் பற்றிய கட்டுரை புதிய தலைமுறையில் வெளிவந்திருந்தது. அந்தக் கட்டுரையை முத்துகிருஷ்ணன் என்னிடம் காட்டினார். அந்தக் கட்டுரை எனக்குப் பிடித்திருந்தது. எஸ்.எஸ்.எல்.சி. முடித்ததுமே, எங்கள் ஊரிலிருந்த பெல் பின்ஸ் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து விட்டேன். சுமார் ஒரு வருட காலம் அதில் வேலை செய்தேன். பெல் கேப்ஸ் என்ற பொட்டு வெடி கம்பெனியிலும் வெடி மருந்து திருகி பசைபோடுபவனாகவே வேலை பார்த்தேன். 67 வாக்கில் மதுரையில் மேலைக் கோபுர வீதியிலுள்ள முருகன் ஜோதி ஸ்டோர் என்ற ஜவுளிக்கடையில் வேலைபார்த்தேன். அங்கிருந்த போது தீபாவளி சமயத்தில் இரவெல்லாம் கண்விழித்து வேலை பார்த்ததால் உடல்நலக்குறைவு ஏற்பட்டு பாளையங் கோட்டைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. எனக்குத் தெரிந்த நாகூர் மாமா என்ற முஸ்லீம் நண்பர் உடன்குடியில் சைக்கிள் கடை வைத்திருந்தார். அவர் என்னை தன்னுடன் அழைத்துச் சென்றார். உடன்குடியில் கடை; குலசேகரப்பட்டினத்தில் வீடு;

இரண்டுபேரும் தினசரி சைக்கிளில் உடன்குடிக்கு வந்துவிட்டு, இரவு 9.30 மணிவாக்கில் ஊர் திரும்புவோம். அப்போது தான் மீன்பிடி இயந்திர படகு (Launch) அந்தப் பகுதிகளில் அறிமுகமாயிருந்தது.

திருச்செந்தூர் அருகிலுள்ள வீரபாண்டிய பட்டணத்தில் வல்லத்துக்காரர்களுக்கும் லான்ச் காரர்களுக்கும் ஏற்பட்ட மோதலில், சிலர் படுகொலை செய்யப்பட்டனர். எங்கள் சைக்கிள் கடைக்குவரும் மீனவ நண்பர்கள், இதைப்பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்கள். இந்த விஷயம்தான் **கடல்புறத்தில்** நாவல் உருவாகக் காரணமாயிருந்தது. 69 வாக்கில், உடன்குடியிலிருந்து பாளையங்கோட்டைக்கு வந்துவிட்டேன். அங்கே டிஎஸ். ஸ்ரீனிவாசகம், ராமசுந்தர ஸ்ரீனிவாசன் என்ற அட்வகேட்டிடம் வக்கீல் குமாஸ்தாவாக வேலை பார்த்தேன். 1969 முதல் 73 ஜுன் வரை வேலைபார்த்தேன். அப்போதுதான் வண்ணதாசன், வல்லிக் கண்ணன், விக்கிரமாதித்தன், கலாப்ரியா, தி.க.சி. போன்றோர்களின் நட்பு கிடைத்தது.

நானும் என் நண்பர் செல்வகுமாரும் 'புருணை' என்ற கையெழுத்துப் பத்திரிக்கையில் வண்ணதாசன், கலாப்ரியா, விக்கிரமாதித்தன் போன்ற இலக்கிய நண்பர்களின் படைப்புகளை வெளியிட்டு வந்தோம். கல்யாணி (அதாவது தி.க.சி. மகன் வண்ணதாசனின்) வீட்டில் படிப்பதற்கு ஏராளமான நவீன இலக்கியங்கள் கிடைத்தன. க.ந.சு.வின் பல நூல்களைப் படிக்க முடிந்தது. அவரது இலக்கிய விசாரம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. 'ஓர் இலக்கியவாதி பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட வேண்டும்' என்ற க.ந.சு.வின் அபிப்பிராயம் என் மனதில் ஆழமாகப் பதிந்தது. எந்தக் கதாபாத்திரமும், நேரடியாகப் பேசிக்கொள்ளாத உரையாடலே இல்லாத இரேனியஸ் ஐயர் தெரு ஒரே நாளில் நடந்த சம்பவங்களைக் கொண்டு புனையப்பட்ட ஒரு குறுநாவல். வறட்சியை மையமாக வைத்து வெவ்வேறு நடையில் எழுதப்பட்டவை **எஸ்தர், மிருகம்** கதைகள். இதேபோல் வித்தியாசமான மொழிநடையில் எழுதப்பட்ட **பாம்புப் பிடாரன், பிணத்துக்காரர்கள் அழைக்கிறார்கள்** போன்ற வித்தியாசமான படைப்புகளை நான் உருவாக்கக் காரணமாக இருந்தவை க.நா.சு.வின் இலக்கிய அபிப்ராயங்களே.

1973 வாக்கில் திருவல்லிக்கேணியிலிருந்து மாம்பலத்திற்கு 13-ம் நம்பர் பஸ்ஸில் வந்துக்கொண்டிருந்த போது பின் ஸீட்டில் இரண்டுபெண்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி ராமன் இருக்கும் இடம் தான் சீதைக்கு அயோத்தி என்று சொன்னாள்.

அயோத்தி என்ற சிறுகதை அந்த பெண் சொன்னதை வைத்துதான் உருவாயிற்று. ஆதம்பாக்கத்திலுள்ள தி.க.சி.யின் புதல்வரின் வீட்டிற்கு ஒருமுறை சென்றிருந்தேன். அவர்கள் வீட்டிற்கு ஊரிலிருந்து பலாப்பழம் வந்திருந்தது. வீடு பூராவும் பலாப்பழவாசனை; பலாப்பழம் என்ற சிறுகதையை மறுநாள் எழுதினேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புதிய பார்வையில் வெளிவந்த திருடன் என்ற சிறுகதை தினத்தந்தியில் வெளிவந்த சிறுசம்பவத்தை வைத்து எழுதப்பட்டது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எஸ்தர் சிறுகதை திருநெல்வேலியிருந்து பாண்டிச்சேரிக்கு, வறட்சியான கோடைக்காலத்தில் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தபோது உருவான கதை. நேரில் பார்த்தது, கேள்விப்பட்டது, இப்படி ஐம்புலன்களின் வழியாக மனதுக்குள் சென்ற விஷயங்கள்தான் படைப்புகளாக வெளிவருகின்றன. இதை அனுபவம் என்றும் சொல்லலாம். மற்றபடி எந்தவிதமான லட்சியப்பூச்சும் என் எழுத்துக்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் நான் ஏழை எளியவர்களைப் பற்றி அதிகமாக எழுதியிருப்பதால் என்னைப் பல நண்பர்கள் முற்போக்கு எழுத்தாளன் என்று கூட வரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி. விக்கிரமாதித்தன் போன்ற நெருங்கிய நண்பர்கள் என்கதையில் அக உலக வாழ்க்கை பெண்களின் இயல்புகள் என்ற அம்சங்கள் தூக்கலாக இருட்பதாகக் கூறுகிறார்கள். அவர்களுக்கும் என் நன்றி. வணக்கம்.

கவிதைகள் எழுத சில முயற்சி செய்திருக்கிறேன். அதில் நான் ஒரு பெரிய ஆள் என்று சொல்ல முடியாது. எனக்கு அதில் நான் சாதனை பண்ணியதாகத் தோன்றியதில்லை. ஏதோ முயற்சி பண்ணியிருக்கிறேன். மற்றவர்கள் எழுதியிருக்கிறதைப் பார்க்கும் போது என்னுடைய கவிதைகள் ரொம்ப விஷேசமாகத் தெரியவில்லை.

எனது எந்த ஒரு படைப்புக்கும் நோக்கம் என்றெல்லாம் இல்லை. பொதுவாக மனதில் தோன்றியதை எழுதியிருக்கேன் என்று நினைக்கிறேன். அதுக்கு மேலே நோக்கங்கள் கற்பிக்க முடியுமா என்று தெரியவில்லை. தோன்றுகிறதை எழுதுகிறேன். அதுக்கு மேலே விஸ்தரணப் படுத்த முடியவில்லை; சொல்ல முடியவில்லை. கவிதை எழுதறதுக்கு அவ்வளவு எல்லாம் யோசித்துப் பார்த்தது இல்லை.

பத்திரிக்கைகளில் வந்து, அதுதான் விற்றுப் போகிறது. 'துக்ளக்'கில் இருந்தேன். 11 வருடம் இருந்தேன். பத்திரிக்கைகளில் வேலை பார்க்கிறது; பாதகமாக இன்றும் இல்லை. இந்த எழுத்து வேலையைப் பாதிக்க வில்லை. பொதுவாக என்னுடைய பேச்சு

அவ்வளவு இம்ப்ரஸிவ் ஆக இருக்காது. எனக்கு வந்து எந்த விஷயமும் பெரிசாகத் தோனவில்லை. மனசில் செஞ்சிட்டிக்கிறோம் என்று நினைக்கிறோம். அதனால் இதெல்லாம் பிரமாண்டப்படுத்த வேண்டியிருக்கு. இது மேடைங்கறதுனால சொல்ல வேண்டியிருக்கு. அதுதான் முதலில் சொன்னேன் நான் வரவில்லை என்று இதெல்லாம் எனக்குச் சொல்ல தெரியாதுன்னு சொன்னேன். அப்புறம் அவங்களப் பேசச் செய்யலாம் அப்படிங்கற மாதிரி சொன்னதாலே வந்தேன்.

என் நண்பர்கள் மூன்று பேருடைய கவிதைகளையும் கலாப்ரியா, விக்கிரமாதித்தன், வண்ணதாசன் என்ற மூன்று பேரையும் பிடிக்கும்; மூன்று பேருமே மூன்று விதமாக எழுதுகிறார்கள்.

அரசியல் எல்லாம் ஒன்றும் இல்லை. அதில் நம்பிக்கையே கிடையாது.

தேசியம், தமிழியம் என்ற அதெல்லாம் அந்தந்தக் காலத்திற்குரிய ஷர்ட் அதாவது ஃபுல் ஹாண்ட் / ஷார்ட் ஹாண்ட் டிசைன் அந்த மாதிரித்தான் படுது. இன்னும் 15 வருடம் அந்த பேச்சு இருக்கும் அல்லது அதுக்கு ஏற்றாற்போல புதுசா ஒரு கோஷம் வரும். அப்படிதான் நடந்திட்டிருக்கு. வாழ்க்கையில் நடந்திருக்கின்ற விஷயங்கள் மாதிரி வந்திட்டிருக்கு. இது மாறலாம் என்று நினைக்கிறேன். இதில் நான் ஒண்ணும் ரொம்ப உள்ளே தீவிரமா ஈடுபாடு கொள்ளவில்லை.

வண்ணநிலவன் என்று நானே இந்த பெயர் வைக்கவில்லை. அது என்னுடைய நண்பர் வல்லிக்கண்ணன் வைத்த பெயர். அவங்கதான் அந்த பெயர் வைத்தார்கள். ஒரு பத்திரிக்கைக்கு எழுதும்போது வேற ஒரு பெயர் இருக்கணும் அப்படீன்னு அவங்க வைத்த பெயர்தான்.

பத்திரிக்கைகள் பற்றி எப்படி என்ன சொல்றது 'தரம்' ரொம்பக் கீழே போயிருக்கு. அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கு; முன்னமாதிரியில்ல. ரொம்ப கீழே உள்ளது. கல்கி, ஆனந்த விகடன் ரொம்ப கீழே போயிருக்கு. அந்த காலம் 15, 20 வருடத்திற்கு முன்னாடி உள்ள ஸ்டாண்டர்டு இல்லை. தரம் இல்லைன்னா எல்லாம் சினிமாவா ஆயிடுறது. சினிமாவைப் பற்றிதான் பொதுவா வருது.

சினிமா, கட்சிக்களைப் பற்றி நிறைய விஷயங்கள் இருக்கு. க.நா.சு.-வை நேரில் பாத்திருக்கேன். இங்கே இரண்டு மூன்று வருடம் சங்கத்திலே இருந்த அவரு காலமாகிறதற்கு முன்னால)

வீட்டிற்குப் போயிருக்கேன். பார்த்து பேசியிருக்கேன். பிரமிப்பா இருக்கும். நான் என்ன பேசினேங்கறதை விட அவர் பேசியதைத் தான் கேட்பேன். அவ்வளவு தான் இப்பத் தெரியுது. அனாவசியமாக பார்த்ததில்லை. அவரது புத்தகங்கள் நிறைய படிச்சிருக்கேன். அவருடைய டிரான்ஸ்லேஷன்ஸ் எல்லாம் படிச்சிருக்கேன். அப்புறம் அவருடைய சிறுகதைகள் எல்லாம் படிச்சிருக்கேன். பத்திரிக்கையில் பார்த்திருக்கேன். அவ்வளவுதான். பெரிய அனுபவம் ஒன்றும் கிடையாது.

நா. வானமாமலை வீட்டிற்குப் போய் பேசிட்டிருப்பேன். இந்த விஷயம் வேற. ரொம்ப இதா காட்டிக்கமாட்டேன்.

பார்த்தசாரதி எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அவருடையதை ரொம்பச் சொல்லமுடியவில்லை. அந்தக்காலத்தில் பிடிச்சது. இப்ப எப்படி என்று தெரியவில்லை. ரொம்ப நேர்மையானவர். பிடிக்கும். ரொம்ப நல்லா போட்டிருக்கார்.

விமர்சனம் படிக்கிறது உண்டு. விமர்சகர் உடைய அபிப்பிராயத்தைத் தெரிந்திருக்க முடியாது. அப்படி நான் ஒன்றும் படிச்சதில்லை.

புத்தகங்கள் தானா கிடைச்சது. தேடிபார்க்கிறதுண்டு. இப்படி வர்ற புத்தகங்கள், அப்படி ஒன்றும் பல படைப்புகள் திருப்தியில்லை என்று எனக்கு மனதில் தோன்றுகிறது. இப்ப எழுதுகிற எழுத்துக்கள் அவ்வளவு மனதுக்கு சந்தோஷமாக இல்லை. இப்பக் கூட புதுசா எழுதற படைப்புகள் என்னை அவ்வளவாக ஈர்க்கவில்லை.

புதுமை என்று எதை சொல்லுகிறீர்கள்? இப்ப வந்து ருசி சம்பந்தப்பட்டது என நான் நினைக்கிறேன். பொதுவாக நான் வந்து வேறொன்றும் சொல்வதிற்கில்லை. என் கதைகள் தாமரையில் வெளிவர தி.க.சி. தான் காரணம். நிறைய எனக்கு லட்டர் எழுதுவாங்க. 'இப்படிதான் கதை எழுதனும், உங்க கதை இப்படி எழுதலாம்' என்று லட்டர் எழுதுவாங்க. அதைச் செயல்படுத்தவில்லை. அவங்க நிறைய ஊக்கப்படுத்தியிருக்காங்க. நான் வேறொன்றும் சொல்ல வேண்டியதில்லை.

அவங்களுடைய பத்திரிக்கையில் மூன்று வருடம் வேலை பார்த்திருக்கேன். பத்திரிக்கையில் இருந்த போது நான் இமேஜ் வச்சிருக்கேன். ஒரு பெர்ஸனல் - ஆக இருந்தேன். கோமல் தான் காரணம். அவருடைய மரணம் வந்து ரொம்ப தாங்க முடியாத விஷயம், ரொம்ப நல்ல மனுசன். அவரை எனக்கு பெர்ஸ்னல்- ஆக ரொம்பப் பிடிச்சிருக்கு.

பொதுவாக எழுதியிருக்கேன். எப்பவும் பேசுகிற மாதிரி பேசலாம். நீ என்றே கூப்பிடலாம் 'நீங்க' என்று சொன்னால் செயற்கையாக இருக்கு. எனக்கு மனதில்பட்டதை சொல்றேன். எழுதுகிறேன். சொல்றதுக்கு காரணம் இருக்கு. கதை நல்லா இருக்கா? இல்லையா? என்று காசிநாதன் கடைசியில் சொல்ல முடியாது. வாஞ்சிநாதனிடம் சென்றால் கடைசியில் அண்ணாதுரை திராவிட நாகரிகம் ஆற்றுப்பக்கத்தில் இருக்கிறதாக சொன்னார். அப்படி இல்லை எனக்கென்னமோ அது பேத்தலாக இருக்கிறது. அது அவ்வளவு நியாயமாகப்படவில்லை.

பெண்ணியம் எல்லாம் வந்திருக்கு. எனக்கு அவ்வளவு பழக்கம் இல்ல. அப்படி ரொம்ப பழக்கம் கிடையாது. இரண்டு தடவை பார்த்திருக்கேன்.

நம் பாஷை, பிராந்தியம் எல்லாம் ஒரு இது தானே சார். சங்கீதம் கேட்கணும், சங்கீதம் வேற. இந்தியிலே கேட்க இந்தி எனக்கு தெரியாது. ஆனா ஹிந்திப்பாட்டைப் பாட முடியும். இந்த விஷயமும். அந்த மாதிரிதான்னு எனக்குப் படுது.

தொலைக்காட்சி பார்ப்பேன். எப்பவாவது பார்ப்பேன். பரவாயில்லை. சிலது பார்ப்பேன். சில பார்க்கிற மாதிரி இருக்காது. இந்த நாடகங்கள் எல்லாம் மோசமாக இருக்கிறது. இப்ப சா. கந்தசாமி சார் நாடகம் தான் ரொம்ப பிடிக்கும். நல்லாவும் வந்திருக்கு. அப்படி ஒன்றிரண்டு வந்தாலும் பார்க்கிறதுக்கு தொலைக்காட்சியில் ஒன்றும் இல்லை. நாடகம் எல்லாம் திரும்பத் திரும்ப போடுகிறார்கள். அதிகமாக டிவி. பார்க்கிறது இல்லை.

ரொம்ப இதா பார்க்கிற அதை நான் எழுதவில்லை. புத்தகம் போட்டோம்னு எழுதியிருந்தார்கள். அங்க எழுதினது நான் எழுதினது இல்லை. அப்படிச் சொல்ல முடியாது. எனக்கு முன்னாடி பெரியவங்க இருப்பாங்க. நான் வந்து ஏதோ எழுதியதை வைத்துப் பெரிய சாதனை பண்ணிடலாம் என்று தெரியவில்லை.

அதுக்கும், இதுக்கும் சம்மந்தமில்லை. 'ருத்ரா' சினிமா கூட எழுதிக்கொடுத்தேன். வொர்க் பண்ணேன்னு சொல்ல முடியாது. அவர் ரொம்ப நல்ல பிரண்ட். அப்ப சீன்கள் எழுதி கேட்பார். எழுதிக் கொடுப்பேன். அதெல்லாம் ஒரு பெரிய விஷயமாக சொல்ல முடியாது.

நாம எழுதறதில் காந்தி நேரு பற்றி தெரிஞ்சிருக்கலாம். நாம் எழுதறது ஆறு, ஊரு அத, இத பற்றித் தானே எழுதறோம். இதப்

படிச்சு யாருக்கு என்ன பிரயோஜனம். அப்புறம், லட்டர்ங்கறது ஒரு ஸ்பெஷல்-ஆக நினைக்கிறேன். நான் உங்களுக்கு எழுதினா அதை ஊரில் உள்ளவர்களுக்கு படிச்சிக் காட்டினா அது தேவையில்லாத விஷயம். அந்த மாதிரி எல்லாம் வேண்டியதில்லை. இப்ப எல்லாம் நிறைய வந்திருக்கு. நிறைய லட்டர் புத்தகம் எல்லாம் போட்டிருக்கிறார்கள். எனக்கு அதிலெல்லாம் நல்ல அபிப்ராயம் இல்லை. இதெல்லாம் போடக்கூடாது அப்படின்னு நான் நினைக்கிறேன். நான் எனக்கு மனதில் பட்ட விஷயத்தை எழுதுகிறேன். அதைத் தான் நீங்கள் நோக்கம் கற்பிக்கலாம். நான் எழுதும் கதை நோக்கத்தைப் பெரிய க்ளைம் ஆகச் சொல்ல முடியாது. என்னுடைய எழுத்தையே பெரிய க்ளைம் ஆக நினைக்கிறது இல்லை.

நான் இந்த கூட்டத்துக்கு வர மாட்டேன் என்றிருந்தேன். இதை நான் பெரிசா எடுத்துக் கொள்ளவில்லை. அதில் உடன்பாடில்லை. உடன் கொள்கிறேனா என்பதை யோசித்துப் பார்க்கிறது இல்லை. இப்படித்தான் இருக்கணும்னு அப்படியெல்லாம் நினைச்சு எழுதறது கிடையாது. என்ன தோணுகிறதோ அதை எழுதறேன். அந்த நேரத்தில் மனதில் ஒரு பொறு (spark) பட்டு இருக்கும். அதை எழுதறேன். சங்க இலக்கியங்கள் எல்லாம் அதிகமாகப் படிச்சது இல்லை, ஒன்று இரண்டு படிச்சிருக்கேன். அதில் ரொம்பப் பரிச்சயம் கிடையாது.

வாஸந்தி

எழுத்தாளர்களின் எழுத்துக்குப் பின்னால் இருக்கும் சரித்திரத்தைக் கேட்டு அறிவதில் வாசகர்களுக்கு ஒரு இயல்பான ஆர்வமும் சந்தோஷமும் ஏற்படும் என்று நினைக்கிறேன். எனது அனுபவங்களையும் என் எழுத்துக்குத் தூண்டுகோலாக இருந்த சம்பவங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு அளித்ததை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன். சிறுமியாக இருந்தபோது அன்று பிரபலமாக இருந்த எழுத்தாளர்களின் புத்தகங்களைப் படிக்கையில் என்னுள் ஏற்பட்ட பிரமிப்பு எனக்கு இன்றும் துல்லியமாக நினைவிருக்கிறது. எல்லா கதாசிரியர்களும் என்னுடைய கதாநாயகர்கள், நாயகிகள். ஆதர்ஷ மனிதர்கள்.

படைப்பார்வத்தை என்னுள் வித்திட்டவர்களே அவர்கள்தான். ஆனால் அதுவே காலம் கனிந்தபோது என்னை ஒரு படைப்பிலக்கிய வாதியாக மாற்றும் என்று நிச்சயமாக நினைத்திருக்கவில்லை. நான் எந்த எழுத்தாளப் பரம்பரையிலும் பிறக்கவில்லை. நான் ஒரு மத்திய வகுப்பு பிராமண குடும்பத்தில் பிறந்தேன். பிறந்து வளர்ந்ததெல்லாம் கர்நாடக மாநிலத்தில். ஆசாரமான குடும்பம். ஆனால் விநோதமாக கருத்து சுதந்திரம் கொண்ட சூழலாக இருந்தது. அதற்குக் காரணம் என்னுடைய தாத்தாவும் பாட்டியும் என்று நினைக்கிறேன். மரபு சார்ந்த வாழ்க்கை வாழ்ந்தாலும் என்னுடைய பாட்டிக்கு சுதந்திரமான கருத்துக்கள் இருந்தன. பூஜை புனஸ்காரங்களில் ஆசாரமான நியமத்தைக் கடைபிடித்தாலும் புராணங்களில் பெண்ணுக்கு எதிராக வரும் கதைகளையும் கருத்துக்களையும் அவர் கேள்வி கேட்கத் தயங்கியதில்லை. எங்கள் தாத்தா ஓர் ஆங்கில ஆசிரியர். இலக்கிய ரசிகர். அவரிடமிருந்துதான் எனக்கு ஆங்கில இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் சிறு வயதிலேயே மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. அவருடைய காலடியில் அமர்ந்து அவர் மிகுந்த ரசனையுடன் படித்துக் கேட்ட ஷெல்லியும் கீட்ஸும் என்னுள் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தினார்கள். பாரதியும் இளங்கோவும் கம்பனும் எனக்கு பரிச்சயமானார்கள். தாத்தா ஒரு தேசியவாதி. இன்னும் என்னுள் அவரது கருத்துக்கள் பசுமையாக இருப்பதோடு உத்வேகத்தை எழுப்புபவை. எங்கள் வீட்டுக்கருகில் ராம மந்திரம் என்று ஒரு கோவில் உண்டு. அங்கு ஒரு பெரிய கூடமும் இருக்கும்.

கதாகாலட்சேபம் நடக்காத நாளே இல்லை. கன்னடம் பேசும் பெங்களூரில் ராம மந்திரத்தில் தினமும் தமிழில் யாராவது இராமாயணத்தையோ மகாபாரதத்தையோ அல்லது கந்தபுராணத்தையோ தமிழில் காலட்சேபம் செய்வார்கள். குளிரானாலும் மழையானாலும் என்னுடைய பாட்டி அதைத் தவறாமல் போய் கேட்பார். வீடு திரும்பியதும் என்னுடைய தாத்தாவுடன் மிக அறிவார்த்தமானதொரு சர்ச்சையில் ஈடுபடுவார். சீதையைத் தீக்குளிக்க இராமன் பணித்தது மிகப் பெரிய அநியாயம் என்று வாதிடுவார். என்னுடைய பெண்ணிய சிந்தனைகளுக்கெல்லாம் வித்திட்டது அவர்தான் என்று நினைக்கிறேன். சிறுமியாக இருந்தபோது என்னைச் சுற்றி இருந்த விஷயங்கள் என்னை அந்த அளவுக்குப் பாதித்தன என்பது நான் எழுத ஆரம்பித்த காலத்தில்தான் எனக்குப் புரிந்தது. எங்கள் வீட்டில் ஓர் அத்தைப் பாட்டி இருந்தார். தலையில் முக்காடிட்டு நார்மடிப் புடவை கட்டியிருப்பார். ஒரு துறவியைப் போல. எப்பவுமே சிரித்துக் கொண்டிருக்கும் மற்றவர்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் துறவி. தீபாவளி சமயத்தில் நாங்கள் பட்டுப் பாவாடைகள் உடுத்தி அவர் முன்னால் வணங்கி எழும்போது பாவாடையைத் தொட்டுப் பார்த்து எவ்வளவு நைசாக இருக்கு என்று சந்தோஷப்படுவார். அவர் கண்களில் மின்னிய ஆர்வம் எனக்கு இன்னும் நினைவுக்கு வருகிறது. அவர் என்றுமே அப்படிப்பட்ட ஒரு பட்டை உடுத்தியிருக்க மாட்டார் என்று என்னுள் ஏற்பட்ட சலனம் நினைவுக்கு வருகிறது. சிறு வயதிலேயே, அதாவது பத்து வயதுக்கு முன்னாலேயே அத்தைப் பாட்டி விதவையாகிப் போனார். அதற்கான தண்டனைதான் அந்தக் கோலம் என்று புரிந்துகொள்ள எனக்கு வெகுகாலம் ஆயிற்று. ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்கிற சமூகத்தின் அளவுகோல் என்னைக் குழப்ப ஆரம்பித்தது. ஆனால் கேள்விகள் எதையுமே யாரையுமே கேட்க முடியவில்லை. பெண்ணாகப்பட்டவள் எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது என்ற அறிவுரை சதா அளிக்கப்பட்டது. அதனால் நான் வாய் திறக்காமல் அதிகமாக என்னைச் சுற்றி நடப்பதை கவனிப்பதில் நிறைய உள்வாங்கிக் கொள்ள முடிந்தது. நான் கல்லூரியில் இருந்தபோது அந்தச் சம்பவம் நடந்தது. என்னுடைய அம்மாவின் மாமா ஒரு விபத்தில் இறந்தார் என்ற செய்தி வந்தது. அந்த மரணச் செய்தி எங்கள் குடும்பத்தில் மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எல்லோரையும் விட எனக்கு பிரத்யேகமாக அதிர்ச்சி ஏற்பட்டதற்கு சில காரணங்கள் உண்டு. அந்த மாமாவும் மாமியும் ஒரு வித்தியாசமான தம்பதியாக நான் கண்டவள். மிக அன்னியோன்யமாக இருப்பார்கள். அவர்களுடைய அன்னியோன்யம் வெளிப்படையாகத் தெரியும். என்னுள் பலவிதமான

கற்பனைகளை எழுப்பியிருக்கிறது. எனக்கும் அப்படிப்பட்ட ஒரு திருமண வாழ்வு அமைய வேண்டும் என்கிற ஒரு ரொமான்டிக் கற்பனை. அவர்கள் மிக நாகரீக தம்பதிகளாகவும் இருந்தார்கள். மாமா ஒரு பெரிய பதவியில் இருந்தார். முன்பு ஆங்கிலேயர்கள் வகித்த பதவி. மாமா தன் அலுவலக விஷயமாக வெளியூர் சென்றாலும் மாமியும் கூடச் செல்வார். இந்த விபத்து சமயத்திலும் மாமி கூட இருந்தார். கால் மட்டும் ஒடிந்து உயிர் தப்பினார். மெல்ல மெல்ல வெளியூரிலிருந்து செய்தி வருகையில் என்னை மிகவும் பாதித்த விஷயம் ஒன்று நடந்தது. கணவன் இறந்ததற்கு மாமி கண்ணீர் வடிக்கவே இல்லை என்று அதை மிகப் பெரிய குற்றமாக வீட்டில் உள்ளவர்கள் எல்லாம்பேச ஆரம்பித்தார்கள். இ,த்தனை நாள் மாம் போட்டதெல்லாம் வேஷம் என்றார்கள். அதைக் கேட்டு எனக்கு தாங்கவே முடியவில்லை. மூன்று நாட்கள் அந்த மன உளைச்சலில் மிகுந்த அவஸ்தைப்பட்டேன். நான்காவது நாள் தனியாக அமர்ந்து எல்லாவற்றையும் வார்த்தைகளில் வடித்தேன். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பேனா ஓய்ந்து நின்றதும் மிகப் பெரிய வடிகால் கிடைத்தாற்போல எனக்குள் நிம்மதி ஏற்பட்டது. சாதாரணமாக நான் கல்லூரியில் ஆங்கிலத்தில்தான் அதிகமாக எழுதிப் பழக்கம். ஆங்கிலத்தில் ரொம்ப கெட்டிக்காரி என்ற பேர் வாங்கியவள். ஆனால் நான் வடிகாலைத் தேடியபோது தமிழில்தான் வார்த்தைகள் வெளிப்பட்டன. எழுதி முடித்ததைப் படித்ததும் அது சிறுகதை வடிவத்தில் இருந்ததை உணர்ந்தேன். அதற்கு ஒரு தலைப்பிட்டு என் பெயரை மாற்றி கொஞ்சமும் யோசிக்காமல் அன்றைக்கு மிகப் பிரபலமாக இருந்த ஆனந்தவிகடன் பத்திரிகைக்கு அனுப்பிவிட்டேன். அடுத்து பத்து நாட்களில் அது முத்திரைக் (வாரத்தின் சிறந்த கதை) கதையாக வெளிவந்ததும் வியந்து போனேன். முன்னால் ஏற்பட்ட துக்கமெல்லாம் போய் ஒரு புதிய சந்தோஷம் ஏற்பட்டது. அதில் வந்த கதை எங்கள் வீட்டில் நடந்த கதையாக இருக்கவே எங்கள் உறவினர்களெல்லாம் விகடன் அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கதையை யார் எழுதியது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டார்கள். கதை வெளிவந்த சில தினங்களில் நான் ஒரு திருமணத்திற்காக சென்னைக்குச் செல்ல நேர்ந்தது. திருமணத்திற்கு வந்திருந்த மாமி என்னை அழைத்து என் கையைப் பிடித்துக் கொண்டு விசித்து விசித்து அழுதாள். என் கதையைப் படித்த பிறகுதான் தன் கண்களில் நீர் வந்தது என்று சொன்னாள். பிறகு ஓர் ஆச்சரியமான விஷயத்தையும் தெரிவித்தாள். அவருக்கும் மாமாவுக்கும் இடையே என்றோ நடந்திருந்த, வெளியில் யாருக்கும் தெரிந்திராத சம்பாஷணையை நான் எப்படி

எழுதினேன் என்று கேட்டார். அது எனக்கு மிகுந்த வியப்பை அளித்தது. இது போன்ற வியப்பு பிற்காலத்தில் என்னுடைய எழுத்துப் பணியில் பல முறை, பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கிறது. அதை பின்னால் விளக்குகிறேன்.

முதல் சிறுகதை முத்திரைக் கதையாக வெளியான துணிச்சலில் எழுதிய இரண்டாவது கதையும் முத்திரைக் கதையாக வெளிவந்தது. இதுவே எனக்கு எழுதத் தூண்டுதலாக இருந்தது. ஒரு படைப்பாளியாக உருவாக வேண்டும் என்று கனவுகள் விரிந்தன. ஆனால் இன்னும் என்னுடைய எண்ணங்களுக்கு ஒரு ஃபோக்கஸ் கிடைக்கவில்லை. நான் பெண் என்ற காரணத்தில்தான் பெண் சார்ந்த விஷயங்களெல்லாம், பிரச்சனைகளெல்லாம் என்னைப் பாதித்தன. அந்தப் பாதிப்பை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தவே நான் என் எழுத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். திருமணம் ஆன பின், என் கணவர் மத்திய அரசில் ஓர் இன்ஜினியராக வேலை பார்த்ததால் வடக்கிலும் வடகிழக்கு மாநிலங்கள் பலவற்றிலும் நாங்கள் இருக்க நேர்ந்தது. அவையெல்லாம் என்னுடைய எழுத்துக்கு களங்களாக மாறின. அங்கு நான் பார்த்த மக்கள், பெண்கள் எல்லாம் என்னுள் ஏற்படுத்திய சலனங்களே அப்போது எழுதப்பட்ட பல நாவல்களில் வெளிப்பட்டிருக்கின்றன. 70களில் நாங்கள் நேபாளத்தில் நான்கு ஆண்டுகள் இருந்ததை என்னால் மறக்க முடியாது. மிக அதிகமாக நான் எழுதியது அப்போதுதான். எனக்கு கொஞ்சமும் பரிச்சயமில்லாத, நான் பார்த்தே இராத தமிழ் பத்திரிகை ஆசிரியர்கள் என் எழுத்தைப் பார்த்து ஆதரவு தந்து விரும்பிப் பிரசுரித்து என்னை ஊக்குவித்ததை நான் இன்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். அந்த நான்கு ஆண்டுகளில் நான் எழுதாத நாட்களே இல்லை எனலாம். நேபாளம் தொலைவில் இருந்ததால் முழு நாவலையும் எழுதி முடித்துதான் பத்திரிகைகளுக்கு அனுப்புவேன். ஒரு காலகட்டத்தில் என்னுடைய 5 வேறு வேறு நாவல்கள் ஒரே சமயத்தில் 5 பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தன. நான் முழு நாவலும் எழுதி அனுப்புவதை அறியாத பலர் இதை விமர்சித்தார்கள். ஆனால் எந்த விமர்சனமும் என் காதில் படாத தொலைவில் நான் இருந்தேன். வடகிழக்கு மாநிலங்களிலும் நேபாளத்திலும் நான் இருந்தது எனக்கு மிகப் பெரும் அனுபவம். எனக்கு இலக்கியத்தைத் தவிர அரசியலிலும் சமூகவியலிலும் மாணவ நாட்களிலிருந்து மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த வடகிழக்கு மாநிலத்து மக்களெல்லாம் மிக வித்தியாசமான கலாச்சார பின்னணி கொண்டவர்கள். அவர்களுடைய தேவைகள், ஏக்கங்கள், கோபங்கள்

இவையெல்லாம் தில்லியிலிருந்து செல்லும் அதிகாரிகளுக்கும் மத்திய அரசை நடத்துபவர்களுக்கும் விளங்காத காரணத்தாலேயே அங்கு அரசியல் நெருக்கடிகள் ஏற்படுவதை நான் அறிந்தேன். இதையெல்லாம் கூட நான் பின்னாளில் என்னுடைய எழுத்தில் சூசகமாக வெளிப்படுத்தியிருக்கிறேன். எந்த மாநிலத்துக்குச் சென்றாலும் அந்த மாநிலத்து சரித்திரத்தையும் மக்கள் கலாச்சாரத்தையும் பற்றிய நூல்களைப் படிப்பது என் வழக்கம். அது என்னுடைய எழுத்துக்கு மிகுந்த பலத்தை அளித்தது. நேபாளத்திலிருந்து தில்லி வந்த பிறகு என்னுடைய சிந்தனைத் திறன் நான் சந்தித்த எழுத்தாள சமூகத்தின் மூலம் ஊட்டம் பெற்றது. என்னுடைய பெண்ணிய சிந்தனைகளுக்கும் அரசியல் சித்தாந்தங்களுக்கும் கூர்மையும் வடிவமும் கிடைத்தன. தில்லியில் பல இலக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் பல்வேறு இந்திய மொழிகளில் எழுதும் பிரபல எழுத்தாளர்களின் பரிச்சயமும் எனக்குக் கிடைத்தது என்னுடைய மிகப் பெரிய அதிர்ஷ்டம். பெண்ணிய பிரச்னைகள் குறித்து நான் சில ஆய்வுகளையும் தில்லியில்தான் மேற்கொண்டேன். களப்பணி செய்வதற்காக நான் பல முறை தமிழகத்துக் கிராமங்களுக்குச் சென்றபோது பல சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் கருக்கள் கிடைத்தன. நான் தில்லியில் இருந்தபோதுதான் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டார். படுகொலை நடந்த நிமிடமே சகோதரர்கள் போல் அது வரை இருந்த சீக்கியர்களும் இந்துக்களும் இனவெறியாட்டத்தில் ஈடுபட்டபோது கதிகலங்கிப் போனேன். நான் கண்ட அனுபவங்களே, உணர்ந்த உண்மைகளே பிறகு மௌனப்புயல் என்ற நாவலாகப் பரிணமித்தது. சீக்கியர்களைப் பற்றின மிக சரியான பார்வையை பாரபட்சமில்லாமல் நான் காட்டியிருப்பதாக அதன் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்த பிரபல சீக்கிய எழுத்தாளர் குஷ்வந்த் சிங் பாராட்டினார். மௌனப்புயல் நாவலுக்குக் கிடைத்த வெற்றியினால் இலங்கை இனப் பிரச்னை பற்றியும் எழுதுமாறு நான் கல்கி ராஜேந்திரனால் கேட்டுக்கொள்ளப் பட்டேன். இதற்காக யாழ்ப்பாணம் சென்று நேரில் அங்கு நடக்கும் விஷயங்களைப் பார்த்து பிறகு நான் எழுதிய கருத்துக்களை அன்றைக்கு புலிகளுக்கு ஆதரவாக இருந்த தமிழக வாசகர்கள் ஏற்க மறுத்தார்கள். ஆனால் நான் பயங்கரவாதம் அரசியல் தீர்வாக முடியாது என்கிற கருத்தை பிரதானமாக வைத்து என் நாவலை எழுதினேன். இன்றைக்கும் நான் அதே கருத்தைத்தான் சொல்வேன். அரசியலில் ஈடுபாடும் சுயேச்சையான கருத்துக்களும் தெரிவிக்கும் துணிச்சல் எனக்கு இருந்ததே பின்னாளில் அரசியலைப் பிரதானமாகக் கொண்ட செய்திப் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தை

ஏற்படுத்தியது என்று நினைக்கிறேன். பத்திரிகையாளராக எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும் படைப்பிலக்கியத்திற்கு உதவக்கூடிய வாய்ப்பாகவே எனக்குத் தோன்றுகிறது.

எனக்கு சில விசித்திர அனுபவங்கள் ஏற்பட்டிருப்பதாக ஆரம்பத்தில் சொன்னேன். பல எழுத்தாளர்களுக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் நேர்ந்திருக்கக்கூடும். நான் எழுதுவது உண்மையாக நடந்திருப்பதாக அறிகிறேன். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தில்லியில் என்னைப் பார்க்க ஓர் இளைஞன் வந்தான். என் எழுத்தின் ரசிகன் என்று சொன்னவன் எழுத்தில் சத்தியம் இருப்பதாக தான் நம்புவதாக சொன்னான். அது ஒரு ரசிகனின் ஆர்வத்தால் வெளிவந்த வார்த்தைகள் என்று நான் சிரித்தேன். அவன் பிறகு தன்னுடைய சொந்த வாழ்வின் கதையைச் சொல்லி அப்படி ஏன் நடந்தது என்று என்னால் விளக்க முடியுமா என்று கேட்டான். அவன் சொன்ன கதை என்னை சிந்திக்க வைத்தாலும் எனக்கு எந்த விளக்கமும் கொடுக்கத் தெரியவில்லை. அவனைப் பிறகு நான் சந்திக்கவே இல்லை. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு என் மனசுக்குள் அவன் சொன்ன கதை ஊறிப்போய் வடிவம் பெறத் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவனுடைய அனுமதி இல்லாமல் அதை எப்படி எழுதுவது என்று தயங்கினேன். அவன் எங்கிருக்கிறான் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அதை எழுத வேண்டும் என்ற காரணத்தால்தான் அவன் அதை என்னிடம் சொல்லியிருப்பான் என்ற சமாதானத்துடன் குற்றவாளி என்ற நாவலை எழுதினேன். அதில் ஒரு கதாபாத்திரம் அவன். அந்தக் கதாபாத்திரம் அசாம் மாநிலத்தின் கௌஹாத்தியில் இருப்பதாக புனைந்தேன். இந்த நாவல் இந்தியா டுடேயில் தொடராக வந்தது. அந்தக் கதாபாத்திரம் மூன்றாவது அத்தியாயத்தில் வரும். நான்காவது வாரம் என்னுடைய அலுவலக விலாசத்திற்கு ஒரு கடிதம் வருகிறது - அசாமிலிருந்து. அதை எழுதியது அந்த நிஜ பாத்திரம். உங்கள் மாது எழுதுகிறேன் என்று கதாபாத்திரத்தின் பெயரை வைத்தே எழுதியிருந்தான். உங்கள் எழுத்தில் சத்தியம் உண்டு என்று சொன்னேனே, அதை உண்மையாக்கிவிட்டீர்களல்லவா என்று எழுதியிருந்தான். நான் அசாமிலிருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டிருந்தான். எனக்கு மயிர்க்கூச்சல் ஏற்பட்டது. இது எதேச்சையான ஒரு சம்பவமாக இருந்தாலும் ஏதோ எனக்குப் புலப்படாத ஓர் அமானுஷ்ய சக்தியின் ஆட்டுவிப்புக்குள் இருப்பது போல எனக்குப் பட்டது. கடைசி வரை என்று இன்னொரு நாவல். அதில் எனக்குப் பரிச்சயமான சிநேகிதியே கதாநாயகி. கதைப்படி கதாநாயகியின் தந்தை

சாகவேண்டும். நிஜவாழ்வில் உயிருடன் இருக்கும் அவளுடைய தந்தையை எப்படி சாகடிப்பது என்று ரொம்பவும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த அத்தியாயத்தை நான் எழுத உட்காரும்போது எனக்கு அந்த சிநேகிதியின் ஊரிலிருந்து டெலிபோன் வந்தது. என்ன செய்தி என்கிறீர்கள்? அந்த சிநேகிதியின் தந்தை அன்று காலை திடீரென்று மரணமடைந்தார் என்ற செய்தி. நான் பதறிப்போனேன். பேனாவைப் பிடிக்கவே பயமாக இருந்தது. என்னுடைய சொந்த வாழ்விலும் இப்படிப்பட்ட அதிர்ச்சி எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தாய் மூளை செயலிழந்த ஒரு நோயாளியைப் போல ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். அப்பொழுது என்னுடைய தாய் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார். ஏன் இப்படிப்பட்ட ஒரு கதை எழுத எனக்குத் தோன்றியது என்று எனக்குப் புரியவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து என்னுடைய தாய் நான் என்னுடைய சிறுகதையில் விவரித்திருந்தது போலவே மூளை செயலிழந்து பரிதாபமாக மாறிப் போனார். என்னிடம்தான் கடைசி காலத்தில் இருந்தார். என் சிறுகதையால்தான் அவருக்கு அந்த கதி என்கிற ஒரு பைத்தியக்கார குற்றச்சாட்டிலிருந்து என்னால் வெகு நாட்களுக்கு மீள முடியவில்லை.

ஓர் எழுத்தாளருக்கு மனத்தில் தோன்றும் கேள்விகளே கதை எழுத ஊன்றுகோலாகிறது. என்னுடைய எழுத்துப் பணியும் அப்படி ஆரம்பித்ததுதான். மனத்தில் தோன்றும் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைப்பது சாத்தியமில்லை. விடையைத் தேடும் பயணம்தான் எழுத்து என்பது. விடை கிடைக்க வேண்டியது முக்கியமில்லை. பயணம் ஒன்றே முக்கியம்.

ஜெயகாந்தன்

நான் எழுதிய ஒவ்வொரு கதையும் எந்தச் சூழ்நிலையில் எந்த மனோபாவத்தை என்ன சமூகப் பிரச்சனையில் எழுதப்பட்டது என்பதைக் கால அட்டவணைப்படி யோசித்துப் பார்ப்பது எனக்கு ஒரு தனியான சுக அனுபவம் அதை நான் செய்ததுண்டு என்று சொல்லிக் கொள்கிறேன்.

நான் ஒரு வித்தியாசமான எழுத்தாளன் தான். நீங்கள் எல்லாம் படித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறீர்கள். அது மாதிரி இல்லாமல் நானே உணர்கிற மாதிரி அமைகிறது. ஏனென்றால் நான் எழுத வரும்போது எனக்கு ஒன்றுமே தெரியாது. எதுவும் தெரிந்திருக்க வேண்டிய வயதும் இல்லை. நான் 1950-ல் எனது முதல் கதையைப் பிரசுரித்துப் பார்த்தேன். அதற்கு முன்னாலேயே கொஞ்சம் எழுதியிருக்கிறேன். அப்போது எனக்கு 16 வயது. அந்த 16 வயதிலேயே நான் எழுதுவதற்குப் பலர் தூண்டுகோலாக இருந்தார்கள் என்று சொல்லுவதுகூட அவ்வளவு சரியில்லை. அதாவது அவர்கள் தான் என்னை எழுத்தாளனாக ஆக்கினார்கள். அதைத் தான் நான் குறிப்பிட்டேன். நான் வித்தியாசமானவன் என்றேன். நான் எழுத விரும்பியோ ஆசைப்பட்டோ, அறிவுச் செல்வங்களைத் தேடியோ (அல்லது நிறைய இலக்கியங்களைப் படித்து அந்தப் பரிசுகளைக் கொண்டு இன்றும் சவுந்தரியத்தில் வாழ்கின்ற தங்களுடைய கிராம மக்கள் இவர்கள் மீது கொண்ட அன்பினாலேயோ) ஒரு முழு இன்ப விருப்பத்தோடு எழுத வந்தவன் அல்ல. நான் எழுத்தாளனாக ஆக்கப் பட்டேன். எல்லாரும் சேர்ந்து எழுதச் சொல்லி, நான் எழுதுவேன் என்று நம்பியும், என்னை அந்தப் பாதையில் திருப்பி விட்டார்கள். அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் தமிழைப் படித்திருக் கிறார்கள். ஆனால் உலகத்தையும் படித்து இருக்கின்றார்கள். உண்மையாக. குறிப்பாக அவர்களில் பலபேரைக் குறிப்பிட முடியும்; எனக்கு உற்ற துணையாக இருந்த பலரை நினைத்துப் பார்க்கின்ற பொழுது அவர்கள் உலக இலக்கியங்களை எல்லாம் தேர்ந்து தெரிந்தவர்கள். அது போலவே தமிழ் இலக்கியத்திலும் புலமையும் பெற்றவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கையைப் புரிந்து கொண்டு புதிய லட்சியம் படைப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். போராட்ட உணர்வு கொண்ட இவர்கள் மத்தியில் நான் ஒரு மாணவனாக, சிறுவனாக, குழந்தையாக வளர்க்கப்பட்டேன். என்னை அவர்கள் எழுது என்றும், படி என்றும் சொல்லுகின்ற போது கதை எழுதுவதற்காக என நான் நினைத்தேன். நான்

சேகரித்துக் கொண்டேன். நான் பார்த்ததை எழுதினேன். இதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். நான் கண்டது, நான் கேட்டது, பிறர் எனக்குச் சொல்லியதை, நான் திரும்பவும் சொல்லுகிறேன். ஆனால் நான் கண்டதையெல்லாம் சொல்லி விட்டேனோ? இல்லை. நான் கேட்டதையெல்லாம், நான் கேட்டேன் என்பதற்காக இல்லை. நான் கேட்டதையும், கண்டதையும், எதையும் சொல்லுவதற்கும் எதிலுமே நான் கவனமாக இருப்பேன். நான் கண்டேன் என்பதனால் எல்லா பாகங்களிலும், காட்டிவிடாமல், (நான் கேட்டேன் என்பற்காக வெறும் உபசாரத்தில் கேட்டேன் என்று நினைத்து விடலாம் என்கிற) பொறுப்புணர்ச்சியுடன் நான் யாரை மனதில் வைத்துக் கொண்டு யாருக்காக எழுதினேனோ அதனால் ஏற்பட்டது என்று இப்பொழுது நினைக்கிறேன். என்னைப் படிக்கிறவர்களெல்லாம் என்னைவிட மூத்தவர்களாகவும் என்னை விட அறிவிலே சிறந்தவர்களாகவும், ஏன், இலக்கியத்திலே கூட என்னைவிட அதிக ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருப்பதாய் அக்காலத்திய வாசகர்கள் சொல்லுவார்கள். அவர்களிடம் மார்க் வாங்கவேண்டும். அவர்களிடம் நான் மதிப்பு பெற வேண்டும். அவர்கள் என்னைப் பாராட்ட வேண்டும் என்கிற நோக்கம் எனக்கு இருந்திருக்கும். அதிலே நான் எதிர்பார்த்ததை விடவும், இமாலய வெற்றி பெற்றவனாக எழுத ஆரம்பித்தேன். சில நாட்களிலேயே அதை உணர்ந்தேன்.

முதலிலே, எந்த ஒரு படைப்புக்கும் அடிப்படை மூலம் கதை. அதற்கேற்ப வெளியிடுகிற வடிவமும் அமைகிறது. அக்காலத்திலே பத்திரிகைகளில் நல்ல சிறுகதைகள் போடவேண்டும் என்பதிலே ரொம்ப முனைப்போடு இருந்தார்கள். சிறுகதை என்றால் அதிகப்பட்சம் ஒரு ஆறு பக்கம், ரொம்பப் பெரிய கதையாக இருந்தால் எட்டு பக்கம் என்று தீர்மானித்து என்னதான் அவர்கள் கொடுத்திருக்கும் வரம்புக்குள்ளே சொல்ல வேண்டும் என எண்ணினாலும், இரு மடங்காவது ஆகிவிடும். 12,15,16 பக்கம் வரும். நான் பத்திரிக்கைகளிலே அச்சுக் கோர்க்கும் வேலை பார்ப்பதால் தபாலில் எழுதி அனுப்பியதில்லை.

பரிசீலிக்கும்முன் மற்றவையெல்லாம் நோக்கவில்லை. ஏன் என்றால் நான் ஒரு பத்திரிக்கை ஆபிஸில் அச்சுக்கோர்க்கும் வேலை பார்ப்பதால் யாரையேனும் ஆசிரியருக்குக் கடிதம் எழுதியிருக்கும்படி எனக்கு நேர்ந்ததில்லை. ஒரு பத்திரிக்கை அச்சகத்தில் வேலை பார்ப்பதால் பள்ளிக்கூடமும் போகாமல் வேறு எந்தத் தொழிலுக்கும் லாயக்காக இல்லாமல் ஆகி இருக்கிற ஒரு மனிதனுக்கு சமூக மரியாதை எதனால் ஏற்படும் என்று யோசித்த பொழுது மரியாதைக்கு, கட்சிப்பணி போல, எனக்கு அச்சகப்பணித் தரப்பட்டது.

சுதந்திரத்திற்கு முன்னால் 1946-லே ஜனசக்தி அலுவலகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இருந்தேன். அன்றைக்கு

சென்னை நகரத்தில் கிட்டத்தட்ட 100 முழுநேர ஊழியர்கள் இருந்தார்கள். அந்தக் கட்சியில் முழுமையான மனிதர்கள் அவர்கள். அவர்களை மாதிரி 100 பேர் இப்போதும் இருந்தால் நமது லட்சியங்களை அப்படிப்பட்ட மெய்யான காந்தி மாதிரி. அன்றைக்கு காந்தி எல்லோரையும் பாதித்திருந்தார். அவர்களை எதிர்ப்பவர்களைக் கூட. காந்திஜியை முரண்பட்டவர்களும் உண்டு. எதிர்த்தவர்களும் உண்டு. ஆனால் அவரால் பாதிக்கப்படாதவர்கள் யாரும் அந்தக் காலத்தில் இந்த மண்ணில் இல்லை என்பதற்கு நல்ல அடையாளமாக இந்த கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. எனக்கு அங்கு பகுதி நேர வேலை வாய்ப்பு. கிடைத்த வாய்ப்பில் இவர்கள் அல்லவோ காந்திய தொண்டர்கள் என்று அரைக்கால் சட்டை அணிந்த அந்தக்கால வாழ்க்கையில் உணர்ந்தேன். கம்யூனிஸ ஆசிரம வாழ்க்கை போல் வாழ்ந்து கொண்டு இருந்த அவர்களைத் தான் நான் கண்டேன். அவர்களில் ஒருவனாக என்னை ஆக்கிக் கொள்வது தவிர வேறு லட்சியம் ஏதும் அப்போது இருந்தது இல்லை. அவர்கள் என்ன பணியைக் கொடுத்தாலும் அந்தப் பணியைச் செய்வது; எதைக் கண்டு மிரண்டு ஓடினேனோ அந்தப் பள்ளிக் கூட பணியை எனக்கு ஏற்படுத்தினார்கள். எனக்கு அரசாங்க வகுப்புநிலைகளில் ஏற்படுத்திய ஆங்கிலம் தமிழ் எனக்கு வராத கணிதம் கற்றுக் கொடுத்தார்கள். அதீத சமயத்தில் எனக்கு அச்சகத்தில் கம்போஸ் செய்கிற வேலை. அது ரொம்பக் கஷ்டமானது; விரல் நுனி எல்லாம் எரியும். அந்த வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் பார்த்தால் எல்லோரும் ஒல்லியாக இளைத்துப் போய் இருந்தார்கள். அவர்களுக்கு அனேகமாக 30,40 வயதிலே பலருக்கு சயரோகம் வந்து விடும். 50 வயதிலே ரொம்ப பேர் இறந்து விடுவார்கள். இது மாதிரி அச்சகத்தில் வேலை செய்யும் அவர்கள் மீது கொண்ட அன்பினால் அவர்களைப் பற்றி எனக்கு எழுதத் தோன்றியது.

அதற்கப்புறம் அந்தப் பார்வை இன்னும் விகாசம் அடைந்தது. சென்னைக்கு வந்த போது தான் ஒரு புதிய மிருகத்தைப் பார்த்தேன். மனித மிருகம். மனிதனை வண்டியில் வைத்துக் கொண்டு இழுத்துப் போகும் காட்சி என்னைப் பாதித்த விஷயங்களில் ஒன்று. அதற்காக அவர்கள் மீது கருணையோ பரிவோ இல்லை. அந்தக் காலத்தில் ரிக்ஷாகாரர்கள் 'அவர்கள்' இல்லை - 'அடே' என்று தான் கூப்பிடுவார்கள். பதிலுக்கு 'சாமி' என்று தான் சொல்லுவான். அன்றைக்கு அப்படித்தான் கூப்பிடுவார்கள். அவனை ஏற்றிக் கொண்டு போய்விட்டவுடன் காசு கொடுப்பார்கள். இப்படி இருந்த அவர்கள் பால் எனக்கு நட்பு நேர்ந்தது. அவர்களைப் பற்றி எங்க கட்சி ஆபிஸ்லே இருந்த டேவிட் என்பவரிடம் சொல்வேன். மினர்வா தியேட்டர் அருகில் தான் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகம். அந்த ஆபிஸுக்கு வெளியிலே கூலிக்காரர்கள் வாழ்வார்கள்; அது

இன்னொரு ஆச்சரியம்; அந்தத் திறந்த வெளியிலேயே வாழ்கிறார்கள். நம்மைப் போலவே வாழ்கிறார்கள். சாயங்காலம் நேரத்தில் அவர்கள் சமைப்பது நமது வாயில் நீர் ஊர வைக்கும். அவ்வளவு மணம் இருக்கும். அங்கு வேலை செய்கிற எங்க ஆபிஸ் குப்பையெல்லாம் தள்ளிக் கூட்டி வைக்கிற பச்சையம்மாள் என்கிற கிழவி என் மீது மிகவும் அன்பு கொண்டவள். அவள் மூலம் அவர்களது கிராமம் அறிந்தேன். நான் கடலூரிலிருந்து தானே வருகிறேன். அனேகமாக இம்மாதிரி சென்னையிலே ரிக்ஷா இழுப்பவர் பூராவும் தென்னார்க்காடு ஜில்லாவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். எந்த ஊர் என்று கேட்டால் மயிலம், திண்டிவனம், விழுப்புரம், வில்லியனூர், அப்படிம்பார்கள். எனவே அவர்கள் பால் இன்னும் கொஞ்சம் நெருக்கம் ஏற்பட்டது. தெரிந்தவை தானே எழுதனும். எனவே அவர்களைப் பற்றித்தான் நான் எழுதவேண்டும் என்கிற கொள்கையை வைத்துக் கொண்டது போலானது. அப்படி இல்லாம பின்னாலே என்னுடைய கதைகளைப் படிப்பவர்கள் பேசினாலும் அதற்காக என்னைப் பாராட்டினார்கள். அதை நான் மறுக்கவும் இல்லை. நல்லதைத்தானே சொல்லுகிறார்கள். ஆரம்ப காலத்திலே அவர்களைப் பற்றித்தான் நிறைய எழுதினேன். வேடிக்கை என்னவென்றால் அவர்களே மாறுகிறார்கள். அவர் ஆட்டோ வாங்கிக் கொள்கிறார். அப்புறம் 4 ஆட்டோ வாங்கிவிட்டு முதலாளி ஆகிவிடுகிறார். இதை எல்லாம் பார்த்து வரும் என் கண் முன்னால் பட்டணம் வளர்கிறது. 50 வருடமாக இந்த சென்னை நகரத்தின் வளர்ச்சியை ஒவ்வொரு அங்குலமாக அறிவேன். விபரீதமான வளர்ச்சி எய்தியிருக்கிறது. வியக்கத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. ஆனால் அன்றைக்கு இருந்த எளிய மனிதர்கள் கதைக்கு பாத்திரமாவதற்குத் தகுதி உடையவர்களாக இருந்தார்கள். காரணம் அவர்களுக்குள் இருந்த சுயாபிமானம். அப்புறம் அதே காலத்தில் அச்சு கோர்க்கும் வேலை வராததினாலே பிழை திருத்துபவனாக நான் மாறினேன்.

எனக்குத் தமிழ் மட்டும் எப்படியோ தெரிந்திருந்தது. அதற்காக எந்தக் கல்லூரிக்கும் எந்தப் பாடத்திட்டத்திற்கும் நான் நன்றி சொல்ல வேண்டியவன் அல்ல. ஏனென்றால் எனக்கு இயல்பாகவே தெரியும். பிழையற எழுதுவதற்கு நான் கற்றிருந்தேன். அப்புறம் எனக்குத் தமிழ் படிப்பது மாதிரியே தோன்றவில்லை. ஆங்கிலம் படிப்பதோ அல்லது வேறு ஏதாவது படிப்பதோ தான் கல்வி மாதிரி இருந்ததே ஒழிய இராமலிங்க சுவாமிகள் பற்றிப் படிக்கின்றபோது எனக்குக் கல்வி மாதிரி இல்லை; சொந்த விஷயம் போலும் புரிந்தது. எனக்குப் புரியாமல் இல்லை. திருக்குறளைப் படிக்கின்ற போது உரையாசிரியர்கள் உதவி இல்லாமலேயே புரிந்தது. அதில் இன்னும் என்னென்ன அர்த்தங்கள் இருக்கின்றன; இன்னும் என்னென்ன விளக்கங்கள் இருக்கின்றன என்பதைத்தான் நான்

உரையாசிரியர்கள் மூலமும் இன்னும் வேறு ஆள் மூலமும் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் ஒன்றும் புரியாமல் இல்லை. அப்புறம் படிக்கப் படிக்கப் புரியாத வார்த்தைகளும் புரிந்தன. ஆனால் அறிவு வளர்வதற்கு அது மட்டும் போதாது என்று அனுபவம் கூறியது. தமிழறிவு மட்டும் போதாது. உலக அறிவும் வரலாற்று அறிவும் இன்ன பிற அறிவுகளும் ஏற்படுவதற்கு அன்று சரியான சூழலில்லை. கம்யூனிஸ்ட் ஆபிஸிலே அனேகமாக தமிழ் சத்தமே காதில் விழாது. எல்லோரும் ஆங்கிலத்தில் தான் பேசுவார்கள். சிவானந்தம் அதற்காக வந்து திட்டுவார். அதற்குப் பிறகு அவர் இருக்கும் போது கொஞ்சம் சிரமப்பட்டு தமிழில் பேச முயலுவார்கள். அவர் அந்த பக்கம் போனவுடனே அது தானே ஆங்கிலம் ஆயிடும். அதுதான் வசதியாய் இருந்தது. அவர்கள் படித்த விஷயங்களை அவர்களே பகிர்ந்து கொள்வதற்கு. எனக்கு ஆங்கில ஆசானாக விளங்கியவர் பண்டித ஜவர்கர்லால் நேரு; வரலாற்று (சரித்திர) ஆசானும் அவர்தான். பிறகு அங்கே பிழைத்திருத்துகிற (Proof Reading) வேலை செய்து கொண்டிருக்கும் போதே இன்பர்மேஸன் ப்யூரோ என்று ஒன்று உண்டு; அதைச் சார்ந்தது தான் லைப்ரரி. நான் இந்த மூன்று வேலையும் செய்ய வேண்டும். அந்த இன்பர்மேஸன் ப்யூரோவில் என்ன வேலை என்றால் காலையில் எல்லாரும் பத்திரிகைகள் படித்து எல்லாச் செய்திளையும் தரவாரியாக படிக்கும் போதே ரெட் பென்சிலால் மார்க் பண்ணி விடுவார்கள். T என்று போட்டால் Trade என்று அர்த்தம். இது மாதிரி ஒவ்வொன்றையும் போட்டு வைத்து விடுவார்கள். அதையெல்லாம் வரிசைப் படுத்தி அது எந்தெந்த தலைப்பில் வருதோ அந்தந்த ஃபைலில் ஒட்டி வைக்கணும். இந்த முறை மூலம் எனக்கு வேலை செய்தவன் மூலமே விஷய ஞானம் உண்டாகும். அந்த வேலைகளிலே எனக்கு ரொம்ப ஈடுபாடு உண்டு. Discovery of India-வை நான் படிக்கும் போது இங்கிலீஷ் தெரியவில்லை என்றாலும், வேறு விஷயம் தெரியவில்லை யென்றாலும் அவர்களிடம் கேட்க வேண்டும். அதைப் படித்து முடிக்கிற போது எனக்கு நல்ல ஆங்கிலத்திலே எதையும் படிக்கிற அளவுக்கு ஓர் ஆண்டிலேயே பயிற்சி ஏற்பட்டது. அதன் பிறகு தமிழில் படித்து ஆங்கிலத்திலேயும் படிக்க வேண்டும். இரண்டாவதாக நான் படித்த புத்தகம் ராஜாஜியினுடைய சாக்ரடீஸ். அதைப் படித்துவிட்டு பிளேட்டோவுடைய ஒரிஜினலையும் படிக்க வேண்டும். இப்படியாக இதெல்லாம் ஒரு பெரிய விஷயமாக இல்லாமல் அங்கே கட்சிவேலை சம்பந்தப்பட்டாதாகக் கருதி நான் படித்தேன்.

அப்போதெல்லாம் நான் எப்போதாவது எழுதுவேன். ஆனால் நிறைய எழுதுவேன். 20 வயதுக்கு முன்னாலே எழுதியிருந்தாலும் கூட அதிகமாக எழுதியிருப்பேன். 20 வயதிலே எல்லோரும்

அப்போதுதான் கட்சியிலே சேருவார்கள். நான் அப்போதுதான் கட்சியிலிருந்து (ஜனசக்தி-யிலிருந்து) வெளியே போனேன். அதாவது 1952-53-ல் அப்போது என்னை மாதிரியே கட்சியிலிருந்து விலகி இருந்த ஒரு தோழர் இஸ்மத் பாட்ஷா என்று பெயர்; கும்பகோணத்திலே சமரன் என்ற பத்திரிக்கையாசிரியர். அதனுடைய அடிப்படை சாராம்ச குணம் என்னவென்றால் திராவிட இயக்கங்களில் மிகுத்திராத பற்று. அதை அப்படியே நான் வாங்கிக்கொண்டேன். எந்த விஷயத்திலேயாவது கம்யூனிஸ்ட் கட்சியோடு எனக்குக் கருத்து வேறுபாடும் அதிலே சில ஊடல்களும் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் அது அந்த திராவிட இயக்கம் குறித்த கருத்து வேறுபாடுதான். அதிலே அவர்களைக் கடுமையாக விமர்சித்து அந்த சமரன் பத்திரிகையை அவர் நடத்திக் கொண்டிருந்தார். இங்கே கம்யூனிஸ்ட் கட்சி ஆபிஸிலேர்ந்து கட்சி உறுப்பினர்கள் யாரும் அதைப் படிக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டு ஸர்குலர் அனுப்பப்பட்டது. ஒன்று மறுக்கப்பட்டால் தான் யாருக்குமே அதிலே அதிக ஈடுபாடு ஏற்படும். அதைப் படிக்கக்கூடாது என்று சொன்னதற்காக நான் நேராக ஜனசக்தியை விட்டுவிட்டு, சமரனுக்குப் போய் சேர்ந்துவிட்டேன். அங்கே வந்து கதை எழுத ஆரம்பித்தேன். அந்தக் கதைகளெல்லாம் ரொம்பக் கடுமையாக அன்றைக்கிருந்த திராவிட கழக உறுப்பினர்களை விமர்சிப்பதற்காகவும் புழுதி வாரி இறைப்பதற்காகவும் அதிலிருந்த கசப்பும் கடுப்பும் அதன் கலை வடிவமாக இருந்தது. அவற்றை நூலாக்கவில்லை. ஒரு காலத்திற்குப் பிறகு அவற்றையெல்லாம் கிழித்துவிட்டேன். ஆனால் சமரன் கோப்பில் முதல் பகுதியிலிருந்து சில கதைகளில் இது மாதிரி பார்த்துச் செய்தேன். துணிந்து யாரையாவது புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் எழுதியிருந்தேன். அவற்றுக்கெல்லாம் இலக்கிய அந்தஸ்து தரவேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன்; ஒரு திரும்பப்படிக்கிற அந்தஸ்தைக் கூட தரவில்லை. இந்தக் கதையை நீங்கள் படியுங்கள் என்று ஒருவரிடம் நான் சொல்லும் போது யாராவது படித்தேன் என்று சொன்னால் மனதுக்குள் வெட்கம் இருக்கிறது. எனவே அந்த மாதிரி எழுத்துக்களை எல்லாம் நான் எழுதக்கூடாது. ஒருவருடைய எழுத்துக்கள் கருத்துக்கள் எல்லாமே கதைகளிலே போய் இந்தக் காரியங்களைச் செய்யக்கூடாது; நம்முடைய விருப்பு வெறுப்புக்களைப் பார்க்காமல் வாழ்க்கை எப்படி நடத்த வேண்டும் என்று சொல்ல வேண்டுமே தவிர வாழ்க்கையில் என்ன ஏற்படுகிறது, மனிதர்கள் எப்படிப் போராடுகிறார்கள் என்று பார்த்தாலே போதும். ஒரு வாழ்க்கையை விமர்சனம் செய்வதற்காக நான் எழுதலாகாது. வாழ்க்கையை எப்படி விமர்சனம் செய்வது என்பதைக் குறித்து வைக்கிற மார்க்கத்தினைப் பிறர்க்கு எடுத்துச் சொல்கிற காரியங்களைச் செய்தால் போதும். என் மனதளவில் நான் சொல்லிக் கொள்கிறேன். எனவே, என்னுடைய எழுத்திலே

அந்த பொஸஸிவ் (Possesive) தன்மை ஒருதலைப் பக்கமாகக் கதைகளில் இருக்கக் கூடாது.

கதை சொல்கிறவன் வேறு. அவன் வர்க்கம், கட்சி, ஜாதி, மதம், எல்லாவற்றையும் தாண்டியவன் என்கிற உணர்வுடன் இருக்க வேண்டும். அதன் பிறகு பெண்களின் நிலைமை என்பதிலே நான் என்னுடைய தாய், சகோதரி, அத்தைகள் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருந்து எனக்குத் தெரிந்த பல பெண்கள் இவர்கள் எல்லாம் என்ன மாதிரி துன்பப்படுகிறார்கள்; அதே சமயத்திலே அதைத் தாங்கிக் கொள்கிறார்கள்; எப்படிப் போராடுகிறார்கள்; எப்படி அதிலிருந்து விடுபடுகிறாா்கள் என்பதையெல்லாம் பார்த்ததின் விளைவாக வேறு யாரையும் விட அதிகமாகப் பெண்களைக் குறித்து எழுத வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அதில் வேடிக்கை என்னவென்றால் ஓர் அம்மா ஒரு பெரிய படிப்பாளி. அவருக்குப் பிடிக்காத எழுத்தாளனோ கதையோ அவர் இருந்தவரைக்கும் தமிழ் நாட்டிலே இருந்தது கிடையாது. அவங்களுக்கு என் கதை ஏனோ அதிகமாகப் பிடிக்கும். ஒரு காலத்திலே கட்சி சார்ந்ததாக அப்படியெல்லாம் இருந்தது. இந்த மாதிரி கதைகள் எழுத ஆரம்பித்தபோது என்னுடைய முதல் வாசகியாக அவர் மாறி இருப்பதை உணர்ந்தேன். அது ஒரு நல்ல நம்பிக்கை. அப்புறம் எனக்குக் கற்பித்த கற்றுக் கொடுத்த ஆசான்களெல்லாம் தலைசுற்றி என் புகழைப் பாடுகின்ற போது இன்னும் எனக்குத் திருப்தி ஏற்பட்டது. இவர்களை எல்லாம் மகிழ்விப்பதற்காகத்தான் எழுதினேன். இவர்களை மகிழ்விப்பதற்கும் அவர்களிடம் மார்க் வாங்க வேண்டும். மற்றபடி இது தொழில் என்றோ பணம் தரும் என்றோ புகழ் தரும் என்றோ நான் எதிர்பார்த்தது இல்லை. நான் அப்புறம் இதைப் பத்திரிகைகளில் எழுத ஆசைப்பட்டதே இல்லை. எங்கு எந்த பத்திரிகைகளில் எழுதினாலும் ஜனசக்திக்கு எழுதவேண்டும் (அல்லது ஜனசக்தி) என்ற எண்ணம் 20 வயதிலேயே போய்விட்டது. ஜனசக்திக்கு மட்டும் எழுதக்கூடாது என்றாகி விட்டது மனசு. ஆனால் சமரன் போன்ற சரசுவதி போன்ற லட்சியப் பத்திரிகைகளில் எழுத வேண்டும் என்ற எண்ணம் கொண்டேன். அவர்களோடு நெருங்கிய உறவு இருந்தது. அப்படித்தான் எனது எழுத்துத் தோன்றியது. ஆனால் அது நாம் அறியாத உள்ளங்களையெல்லாம் பாதிக்கக் கூடாது.

விந்தன் என்றொரு எழுத்தாளன். அவர் 'மனிதன்' என்று ஒரு பத்திரிக்கை நடத்தினார். அந்தப் பத்திரிக்கை மூடு விழா நடத்துகிற வேளையிலே நான் அதிலே வேலைக்குப்போனேன். அந்தப் பத்திரிகை நின்றபோது நானும் அவரும் நல்ல நண்பர்களாக இருந்தோம். நான் 'சரசுவதி'க்கு எழுதிய 'ஒரு பிடி சோறு' என்ற அக்கதையைப் படித்து விட்டு (அவர் என்னைவிடப் பல வயது

மூத்தவர், ரொம்ப சமமாக பழகக் கூடிய நண்பர்). காலையில் ஒரு நாள் தேடிக் கொண்டு வீட்டிற்கு வந்து கண்ணெல்லாம் கலங்கக் கட்டிப்பிடித்துக் கொண்டு, "நான் எழுதறதை விட்டுறப்போறேன்" என்றார். அதற்காக **புத்தகப் பூங்கா** என்ற ஒரு பதிப்பகத்தை ஆரம்பித்து என்னுடைய முதல் சிறுகதை தொகுப்பை வெளியிட்டார். அப்படித்தான் ஒரு தொகுதி போட்டிருக்கிறேன். இதற்கு முன்பே நான் அச்சுத்தொழிலாளியாக இருந்த போது அங்கே ஒரு பிரஸ்ஸில் நானே எனக்குத் தெரிந்த அளவுக்கு கம்போஸ் செய்து, (அங்கே கூடஒரு போர்மேன் இருந்தார். ஒரு பக்கம் பாரமெல்லாம் முடுக்கித் தருவார். அவரு ஒரு மோட்டார் கடை ஆரம்பிக்க), நானே மிதித்து அப்படி ஒரு புத்தகம் போட்டு, (உதயம்னு அதுக்கு பேரு) அது எனக்குப் பிடிக்கல அவ்வளவுதான். கட்டிப் போட்டுட்டு என்னுடைய முதல் தொகுதி அந்த ஒரு பிடி சோறு தான் என்று ரொம்ப நாள் சொல்லிக் கொண்டேன். அந்த ஒரு பிடி சோறு கதையைப் படித்து 'சரசுவதி'யில் நான் எழுதிய கதைகள் அந்த 'மனிதன்' பத்திரிக்கையிலே அதை மூடுவிழா பண்றதுக்காக எழுதின கதை, இதையெல்லாம் சேர்த்து விந்தன் புத்தகம் போட்டார். அதுக்கு நான் பிழை (Proof) திருத்திக்கிட்டிருக்கேன். அப்போ நான் இருந்த தெருவே வந்து ஒரு எழுத்தாளர் சங்கம் மாதிரி இருக்கும், டி.சா.ரா., மஞ்சு ஹரி கிருஷ்ணன், சோமசுந்தரம், வசந்தன், பே.ப. பெருமாள், தமிழ் முடிமணியன் இவங்களெல்லாம் செட்டா இங்க தான் இருப்போம். எல்லாம் சேர்ந்திட்டாலே சேர்ந்து கதைகளைத் தரம் பிரித்து சிந்திக்காம இருக்கமாட்டோம். டி.சா.ராவை. எனக்குத் தெரியும்; அவரிடத்தில் எனக்கொரு மரியாதை; 'மஞ்சரி' பத்திரிகை- யினுடைய ஆசிரியர்; நானும் அவரும் ஒரே வீட்டில் ஒண்டுக் குடித்தனத்தில் வசித்தோம். ஏன்னா ரொம்ப பேருக்கு என்பெயர் ஜெயகாந்தன் என்பது தெரியாது. என் வீட்டில் வந்து காந்தன் என்று தான் கூப்பிடுவார்கள். 'சரஸ்வதி' பத்திரிகையிலே அப்ப என்னை அட்டைப் படமாய்ப் போட்டு ஒரு இதழ் வந்தது. அதை சீதாராம் பார் இது காந்தன் உடையது என்று எடுத்துக் கொண்டு வந்தார். நீ தான் ஜெயகாந்தனா? என்றார். ஆமாம் என்றேன். அந்த பிழை (Proof)-ஐ திருத்திக்கிட்டிருந்தேன். இந்த மாதிரி விந்தன் ஒரு தொகுதி போடுறார். இதுக்கு நான் தான் முன்னுரை எழுதினேன். இப்படியெல்லாம் ஒருத்தர்க்குச் சில வாய்ப்புகள் எழுதி வந்ததை போலவே இன்ஸிடென்ட் ஆகறது உண்டு. அற்புதமான முன்னுரைகள். நான் தமிழில் சில முன்னுரைகள் எழுதினேன். சில மகத்தானவர்களான மகாகவி பாரதியார்க்கு, வ.வே.சு.ஐயர்க்கு எழுதினேன். நா. ஸ்ரீநிவாசனுக்கு புதுமைப்பித்தனுக்கு ராஷ்டிரிய தேசிகனுக்கு முன்னுரை எழுதினேன். அப்புறம் அடியேனுக்கு டி.சா.ரா. ஒரு முன்னுரை எழுதினார். அது மாதிரி

முன்னுரைகளை இலக்கியத்துக்கு ஒரு சாட்சியமாக, அடையாளமாகக் கொள்ளலாம். அதுக்கப்புறம் தான் நானே முன்னுரை எழுதினேன்.

என்னுடைய அந்த முடிவிலே தான் இப்போ நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அது மாதிரி விஷயங்கள் அந்தந்தத் தொகுதியிலே அந்தந்தக் .காலத்திலே என்ன கதைகள் வந்ததோ என்னென்ன விவாதம் வந்ததோ அப்போ யார் மேல எனக்குக் கோபம் வந்ததோ அதையெல்லாம் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு களமாக அவற்றை என் கதைகள் போலவே நீண்ட முன்னுரைகளாய் நான் எழுதியிருக்கிறேன். அப்போ 52-ல் நானே அங்கீகரித்துக் கொள்கிற என்னுடைய முதல் சிறுகதையாக அந்த ஒரு பிடி சோறு மதிப்புரைக்குச் சொல்லி புத்தகங்களை பல பத்திரிகைகளுக்கு அனுப்பிச்சிட்டிருந்தார் விந்தன். 'ஆனந்த விகடனி'ல் புத்தக மதிப்புரை எழுதமாட்டார்கள். என்ன காரணமோ தெரியாது. அது அவர்களின் பாலிஸி. அந்தப் புத்தகம் அங்கேயும் போய் இருக்கு. அதே அந்தப் புத்தகத்தைப் படித்து விட்டு நாம் முன்னுரை எழுத முடியாவிட்டால் பரவாயில்லை அவரையே கூப்பிட்டு நம்ம ஆனந்த விகடனில் எழுதச் சொல்லனும் என்று அவர்கள் முடிவு பண்ணினார்கள். அவர்கள் யாரு என்னனு சொல்லிக்கிற அதுல பலபேர் போட்டி; சார்லி நான் தான் என்பார்; மணியன் நான்தான் என்பார்; அப்புறம் ஒருவர் லைப்ரரியன் ஆக இருக்கார்; முதல்ல படிச்சு தானே கொண்டு வந்து காட்டி நான்தான் என்பார். நல்ல விஷயத்திற்கு எல்லாரும் தாமே உரிமை கொண்டாடுவார்கள். அது போல மணியன் என்னைத் தேடிக் கொண்டு வந்து வீட்டில் கொடுத்தார். அதற்கு முன்னால் அவர்களுக்கு மத்தியில் எழுத்தாளர்கள் சங்கம்; அதில் நிஜமாக உற்சாகப்படுத்திய எழுத்தாளர்கள் நிறைய பேர் இருக்காங்க.

கல்கி இருக்கின்ற போது நாங்க சங்கத்துக்கும் போகல. கல்கி இறந்த பிறகு ம.பொ.சி. இருந்தார். கு.ப. சோமசுந்தரம் நாங்க எல்லாரும் சேர்ந்து முற்போக்குக்காரர்கள் என்பதாய் ஒரு கூட்டம் இருக்குமே - ஜீவானந்தம், நான், ஆர்.கே. கண்ணன், விஜயபாஸ்கர் போன்ற நாங்கள் சேர்ந்து அந்தச் சங்கத்தில் முனைப்பாக ஒரு வேலை செய்தோம்; தேர்தல் வந்தது. எல்லாரும் சேர்ந்து ஒரு மனதாக நம்ம தலைவரை ஆதரிக்கணும் என்று முடிவெடுத்தோம். "போட்டியில்லாமல் என்றால் நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொன்னார் ஜீவானந்தம். காமராசர் சொன்னார் 'அதெல்லாம் இல்லை'. எனக்கு உரிமை இருக்கு. நானும் சங்க உறுப்பினர்ங்கற உரிமையில் தலைவர் பதவிக்குப் போட்டியிட எனக்கும் உரிமை இருக்கு என்றார். நானும் போட்டி போட வந்தேன். அப்படின்னா எனக்கு ஒன்றுமில்லையா நானும் எழுத்தாளன் என்க. நீயும் சரி போட்டி போடு யார் வேண்டாண்ணு சொன்னது என்றனர். நானும் காமராசும் கா. அப்பாதுரை மூன்று பேரும் சேர்ந்து அந்தத்

தலைவர் பதவிக்குப் போட்டி போட்டோம். அப்போ எனக்கு 23 வயது. நானே கம்போஸ் செய்து நோட்டீஸ் அடிச்சி ஓட்டுக் கேட்டேன். யாரும் ஓட்டு போட்டு என்னத் தலைவனாக்கிடாதீங்கற மாதிரி அவரு சொன்னாரு. அதுகாகத்தான் நான் போட்டிக்கு ஒத்துக்கிட்டேன். உங்க மனசாட்சி படி ஓட்டளியுங்கள் என்று அந்த நோட்டீஸில் போட்டேன். அதில காமராசு ஒரு ஓட்டு வாங்கி தோத்து போயிட்டார். கா. அப்பாத்துரை அவர் தி.மு.கவுடைய வேட்பாளர்; அவர் 101 ஓட்டு வாங்கி ஜெயிச்சார். நான் 5 ஓட்டு வாங்கினேன். எனக்கென்னவோ ஜனநாயகமாக இருக்கணும். அதுக்கப்புறம் நாங்களெல்லாம் வெளியிலே வந்துட்டோம். அப்புறம் அந்த சங்கம் என்னென்னமோ ஆச்சு.

நான் எழுத ஆரம்பித்த பொழுது 'நான் தான் எழுத்தாளன்' என்ற உணர்வு, நான் தான் எழுத்தாளன் மற்றவங்க கிடையாது என்கிற அகம்பாவம் மனசுக்குள்ள உண்டு. ஆனால் நான் அப்போ ரொம்ப எழுதல; எழுத ஆரம்பிச்ச பிறகுதான் அகம்பாவம் குறைய ஆரம்பிச்சது. முதல்ல பயில்வான் வரும் போது துள்ளிக் கொண்டு வருவான்; நாலு அடி வாங்கின பிறகு சரியா போய் விடும். அது மாதிரி என் நிலை.

இப்படி கூடிய வரைக்கும் கட்சி உறவும் அரசியல் தொடர்பும் என்னை உருவாக்கி இருக்கின்றது. நான் பின்புறம் இருந்திருந்தாலும் கூட நான் தனியாகவே இலக்கிய பணியைக் கூடிய அளவுக்கு செய்தேன். எனக்கு அவர்கள் உதவிகரமாகிய வழி நான் எப்படியும் பிரச்சாரத்திற்கு ஆளாகிவிடக்கூடாது என்று எண்ணினார்கள். அடிப்படையிலே இலக்கியம் ஒரு பிரச்சாரம் அவர்களுக்கு. ஆனால் பிரச்சாரம் என்பதுவேறு; ஒரு பிரச்சாரம் எப்பொழுது இலக்கியம் ஆகிறது? ஒரு இலக்கியமே எப்போது பிரச்சாரமாக உறைந்து போகிறது? என்ற முக்கியமான விசயங்களைச் சாதாரணமாக பேசுகிற உரையாடலை சாயங்கால நேரத்தில் எங்கேயாவது காற்று வாங்கி உட்கார்ந்து பேசுகிற இடத்தில் கூட அவர்கள் என்னை இலக்கிய பூர்வமாக உருவாக்குவதற்கு அவர்கள் முயற்சி மேற்கொண்டு இருந்தார்கள். அது இப்போது எனக்குப் புரிகிறது.

அந்த எழுத்தாளர் சங்கப் போட்டியின் பொழுதுதான் மணியனும் சாவியும் இரண்டு பேரும் என்னைப் பார்த்து 'ஆனந்த விகடனு'க்குக் கதை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். புதுமைபித்தன் சொன்னாராம் ஒரு தடவை 'இதே ஆனந்த விகடன் பத்திரிகையில் 'என் கதையெல்லாம் போட்டா உன்னுடைய பத்திரிகையை எரிச்சுவிடுவேன்'. என்றாராம். நான் அப்படி சொல்லவில்லை. என் கதையெல்லாம் போடமாட்டீர்கள் என்று சொன்னேன். எங்களுக்குத் தராமலேயே அப்படி முடிவு செய்தால்

எப்படி இது? அநியாயமான குற்றச்சாட்டாக இருக்கிறது. இப்போது ஆனந்த விகடனுக்கு கதை தந்தீர்கள், ஆனால் போடமாட்டோம் என்று திருப்பி தந்தோமா? நீங்களாக ஏன் எங்கள் மீது குற்றச்சாட்டு சொல்கிறீர்கள்? என்றனர். இதைக் கேட்டவுடனே எனக்கு நியாயத்திற்குக் கட்டுப்படும் நிலை. கதை எழுத முடியாத நிலையிலுள்ள எனது நியாயத்தை வலியுறுத்த வேண்டும் என்று நினைத்தேன். அப்போது ஆனந்த விகடன் அச்சகத்திலே தொழிலாளிகள் நிர்வாகத்திலே ஒரு பெரிய போராட்டம்; ஓவர் டைம் செய்ய மாட்டோம். ஓவர் டைம் செய்வதினாலே ஒவ்வொருவருக்கும் வேலை இழப்பு நிகழ்கிறது. புதியவர்களுக்கு வேலை கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்று ஏதோ ஒரு பிரச்சனை அங்கிருக்க நான் "ஓவர் டைம்" என்ற தலைப்பிலே ஒரு கதை எழுதி கொடுத்தேன். நிச்சயமாக திருப்பிக் கொடுப்பார்கள்; மணியனிடம் சொல்லிவிடலாம்; பார்த்தியா நான் சொன்னது சரிதானே என்று. என்ன ஆச்சரியம்? எப்படி இந்த சமூகத்தின்பால் இருக்கிற பார்வையைச் சில நிகழ்ச்சிகள் மாற்றிவிடுகின்றன. அது எப்பொழுதும் எந்தக் கதைக்குமே இல்லாத வகையில் இரண்டு கவர் எல்லாம் போட்டு ரொம்பப் பிரமாதமாக அந்தக் கதையைப் போட்டு யாருக்குமே தராத ஒரு பெரிய சன்மானம் போட்டு ஒரு கதைக்கு ரூ. 100/- போட்டு அனுப்பினார்கள். ரூ. 100 என்பது அப்போது பெரிய பணம். இப்போ எல்லாம் 100 ரூ என்பது பணமே இல்லை. புதுமைபித்தன் சொல்லுவாராம். தமிழ்நாட்டில் ஒரு சிறுகதைக்கு சன்மானம் ரூ. 100/- தரக்கூடிய நிலையைப் பத்திரிகைகள் உருவாக்க வேண்டும் என்பாராம். எனவே, யாருக்கும் தராத அந்த உயர்ந்த தொகை சன்மானம், ஏன்னா அப்போ ஒரு சவரன் ரூ. 75/- ரூ. 100/- என்றால் என்ன மதிப்பென்று நீங்களே கணக்கு போட்டுக்குங்க. இதுலகூட வருந்துவார்கள். இப்ப 100ரூ.க்கு கர்சிப் கூட வாங்க முடியாது. இதெல்லாம் வளர்ச்சி எப்படின்னு பார்க்க வேண்டும்.

கொஞ்சம் என்னை நான் யோசிக்க ஆரம்பித்தேன். நாம் ஏன் இவ்வளவு தவறாகப் பிறரைப் பற்றி முடிவு செய்பவனாக உள்ளோம். எழுத்தாளனுக்கு அந்தப் புத்தி தான் இருக்கக்கூடாது. பிறரைக் குறித்துத் தவறாக முடிவு செய்துவிட்டு அதையே உங்களுக்குத் திறமை இருக்கிறதினால், உங்களுக்கு வல்லமை இருக்கிறது என்பதினால், நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அப்படிப் பேசிவிடக்கூடாது. மனசாட்சி விரோதமில்லாமல் நினைத்திருக்கிறோம். அதுவன்றி நமக்கு வேறுஎதுவும் இருக்கக்கூடாது. எழுதுபவன் வர்க்கங்களைக் கடந்தவன். முதலாளித்துவப் பத்திரிகை என்றால் என்ன? முதலாளித்துவப் பத்திரிகையில் அன்றைக்கு நான் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிறேன் என்று தெரியும் என்னைக் கேட்கிறார்கள். நான் தரமாட்டேன்

என்றேன். தந்தால் போடமாட்டேன் என்பீர்கள் என்று சொன்னேன். தந்தும் போடக்கூடாது என்ற புத்தியோடும் நான் எழுதுகிறேன். அதை அவர்கள் பிரசுரித்துக் கவுரவம் செய்கிறார்கள்; மரியாதை தருகிறார்கள்; மதிக்கிறார்கள். என்னுடைய அந்தக் குணத்திற்காக நான் கொஞ்சம் வெட்கப்பட்டு அதற்கு விமோசனம் காண்பதற்காக அவர்கள் கேட்கும் பொழுது எல்லாம் அவர்களுக்கு எழுத ஆரம்பித்தேன். கேட்காமல் இருக்க மாட்டார்கள். அவர்களுக்குள் போட்டி. உடனே கல்கியில் பார்த்தசாரதி (கல்கி பத்திரிகைக்குப் பொறுப்பாக இருந்தார்). மதுரையிலிருக்கும் அவரிடம் இங்கிருந்து கதைகள் போகும்; பார்த்துப் பரிசீலித்து அதை அனுப்புவார்; இதையெல்லாம் பொறுப்பாகப் பார்த்துக் கொள்வார். மதுரையில் நானும் கொஞ்ச நாளிருந்தேன். கிட்டதட்ட தமிழ்நாடு பூராவும் இருந்தேன்.

மதுரையிலிருந்த போது நான் டாக்டர். எஸ். ராமகிருஷ்ணன், (அப்போ அவர் பேர் எஸ்.ஆர்.கே. தான்) நான், எஸ்.ஆர்.கே. செல்லப்ப செட்டியார் (அவரை செட்டியார் என்று சொல்லுவார்கள். நான் 'சேனா' அல்லது செட்டியார் என்று சொல்லுவேன்). மூன்று பேரும் ஒன்றாகப் போய் மதுரையில் கால் பதித்தோம். இரண்டு பேரும் நிலையாக இருந்தார்கள். நான் ஒரு வருடத்தில் அங்கிருந்து கிளம்பி விட்டேன். சென்னைக்கு அவர் ராமகிருஷ்ணனிடம் சொல்லி பார்த்தசாரதி ஜெயகாந்தனை கல்கிக்கு எழுதச் சொல்வார்கள். பார்த்தசாரதி தான் கல்கிக்குக் கதை எழுத வேண்டும் என்று பிரியப்படுகிறார். எழுதேன் என்பார்கள். சரின்னு ஒரு கதை எழுதினேன். அந்தக் கதை எழுதினவுடனே ஆனந்த விகடனிலிருந்து என்ன சார் கல்கிக்கு கொடுத்தீங்க? என்றனர். இந்த மாதிரி போட்டி போட்டு என்னை ரொம்ப உயர்த்திவிட்டார்கள் என்று தோன்றியது. ரெண்டு பேருக்கும் எழுதினேன். கல்கிக்கும் ஆனந்த விகடனுக்கும் எழுதுவேன். நிறைய எழுதுகிற மாதிரி அவர்கள் நடந்து கொண்டார்கள். கல்கியில் ஒரு எழுத்தாளன் கதையை அவர் பத்திரிகைக்கே தரணும்னு ரொம்ப எடிட் பண்ணி என் பேர்ல உள்ளதைச் சிதைத்து வந்தது. சதாசிவம் ரொம்ப கோபக்காரர்னு பேரு. நான் போய் அவரிடம் கடுமையாய் கோபித்துக் கொண்டேன். அதன்பின் கல்கியில் கொஞ்சநாள் எழுதாமல் இருந்தேன். அந்த மேனஸ்கிரிப்ட் (Manuscript) எங்கேன்னு கேட்டுத் தேடி பிரஸ்ஸுக்குள் புகுந்து ராஜாபாதர்னு போர்மேன் ஒருவரைப் பிடித்து மிரட்டியதில் வேஷ்டிக்குள் கட்டிகொண்டு வந்து மேனஸ்கிரிப்ட்டைக் கொடுத்தார். அதற்கப்புறம் அந்த கல்கியிலே மூன்றில் ஒரு பகுதிதான் வந்தது. கடைசியும் சேர்த்து 'நான் ஏன் எழுதினேன்' என்கிற தலைப்பு போட்டு முன்னுரை எழுதி அப்புறம் கொஞ்ச நாள் எழுதாமல் இருந்தேன்.

நம் கோபம் எல்லாம் அதிக நாள் நீடிக்காது. சும்மா கோச்சிக்கறது தான். கூடாதுன்னு. அப்புறம் அவர்களுக்கும் எழுதினேன். நான் இப்போ பேசறதெல்லாம் என் எழுத்தைப் பற்றிய மேலெழுந்த வாரியான, அது எப்படி வந்தது, யார் யார் காரணம் என்று இதைத்தான் நான் பேச முடியும். மீதியெல்லாம் பேசறதுக்கு எனக்குத் தகுதி கிடையாது. அது விமர்சகர்களையே கேட்டால் பதில் சொல்லலாம். இப்படிப் பதில் சொல்லுகிற மாதிரி ஒரு சிறுகதை எழுதி அது ரொம்பக் கண்டனங்களை எல்லாம் கடந்து வந்தது. அது புடிக்கலைன்னா அதன் முடிவை மாற்றினால் அந்தச் சிறுகதை விஷயம் நாவலாயிடும்; அது நாவலாக வந்த பிறகு விட்டுவிட்டால்அதன் முடிவு இன்னும் வருத்தமாக இருக்கும். எனவே மறுபடியும் இன்னொரு முறை எழுதிடும்படி நேரும். இப்படியாக என்னை எழுத வைப்பதற்காகத்தான் இந்தக் கண்டனங்கள் என நான் நினைக்கிறேன். இப்படியாக ஒன்னு ஒன்னுக்கும் இந்த மாதிரி பின்னணி என்னனு யோசிச்சிருக்க மாட்டேன்.

எழுத உட்காரும் போது நான் யோசிப்பதில்லை. எழுதுவேன். பெண்களைக் குறித்து நான் எழுதியிருப்பதாக எனக்குத் தோன்றியது. அதில் ரொம்ப ஆழமாவதற்குக் காரணம் ஒரு மனிதனுக்கு இருக்கிற தாயன்பு காரணமாக இருக்கலாம். தன் மனைவி மீது கொண்ட அன்பு காரணமாக இருக்கலாம். எல்லாம் நான் சொன்னா அவர்கள் ஒத்துக்க மாட்டாங்க என்று எனக்குத் தோன்றுகிறது. மக்கள் மீது கொண்ட அன்பினால் தான் தோன்றுகிறது. எனக்கு பிடிக்காதவர்களைக் குறித்து நான் எழுத மாட்டேன். எனக்கே பிடிக்காதவர்களைக் குறித்து நான் எழுதினா படிக்கிறவர்களுக்கு எப்படி பிடிக்கும். எனக்குப் பிடித்தமானவர்களையும், எனக்குப் பிடித்த விஷயங்களையும் எழுதினேன். பல அப்போது தான் புதிதாக ஒவ்வொன்றாகத் தெரிந்து கொள்வதினால் அது நெஞ்சில் வந்து ஆழ்ந்து பதிய அப்புறம் நாளாவட்டத்திற்கு எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்று அந்தப் பருவத்தில் நான் கண்ட வாழ்க்கையினுடைய நிகழ்ச்சிகள் அமைந்தன. புதுமைப்பித்தனைச் சொல்கிறபோது "வாழ்க்கை முட்கள் குத்தி உறுத்தி உள்ளே ரத்தம் பீரிடுவதைப் பார்த்தீர்களா" என்பார். நாம தான் போய் குத்திக்கிறோம். பிறர் துன்பங்களைத் தேடிட்டு போகிறோம் என்று அவர்கள் காலத்தில் உணர்வு கிடையாது. அவர் கிட்ட நான் கஷ்டப்பட்டதை நான் புலம்புவேனே ஒழிய அவர் யார்கிட்டேயும் போய் புலம்புறது இல்லை. எனவே அவர்களுக்கு நம்பிக்கை தரும் விதமாகவும் அந்தக் காலத்தை நாம் மாற்றிட விரும்புவோம். அதற்கு ஒரு உலகம் தழுவிய சித்தாந்தமும் இயக்கமும் வெளிச்சம் இருந்த நம்பிக்கையும் அதை உணர்த்துகிற செய்தியும் தேவை. கொஞ்சம் ஒரு கோடு காமிச்சா போதும் அப்படிப்பட்ட புதிய மனிதர்களை

நாம் பார்த்தும் விரும்பியும் கொஞ்சம் உருவாக்கி பல பாத்திரங்களில் படைப்பதிலே என்னைப் பாராட்ட என் ஆசான்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறேன். அப்புறம் இந்த ஆசான்களில் பலர் நண்பர்களாயினர். அது சமூகத் தொடர்புக்கும் பிற மனிதர்களோடும், சில மொழியினர்களோடும் கூட இதெல்லாம் உதவின. நிறையப் படித்ததின் விளைவு நான் சொன்னேன். "நான் படிக்கவே மாட்டேன் என்றேன். சொல்றது எல்லாம் நடக்கவா செய்கிறது" என்று புதுமைபித்தன் கேட்டார்கள். புதுமைபித்தன் எழுத்தால் என்னை பாதித்தவர். பாரதிக்குப் பிறகு அந்தப் பாதிப்பு வேணும்.

நான் படிப்பதினால் தான் உருவாகினேன். சாப்பிடுகிறோம், சட்டை போட்டுகிறோம். உடம்பைப் பார்த்துக் கொள்கிறோம். இதனால் மட்டுமா ஒரு மனிதன் வளர்ந்துவிடுகிறான் என்கிறீர்கள்?அவன் என்ன படிக்கிறான்? அவன் எந்தெந்த மாதிரி புத்தகங்களில் ஈடுபாடு கொள்கிறான் என்பதிலேதான் வளர்கிறான். (இன்னர் மேன் இஸ்மோட்டில்). அப்படிப் பார்த்தால் எனக்கு முதலில் பாரதி ஞானகுரு. கடைசியிலே அவரையும் பிற்போக்குவாதி என்றெல்லாம் சொல்வாங்க. அவரையே பிற்போக்குனா அப்புறம் நாங்கள் எம்மாத்திரம் என்று எனக்குத் தோன்றியது. வள்ளுவரும், தொல்காப்பியரும் பின்னடைவுக்குத் துணை போய்விட்டார்கள் என்றால் நிஜமோ? நம்பணும். சித்தர்கள் பாடலில் எப்படி நமக்கு ஈடுபாடு இருந்ததோ? அந்தக் கருத்துக்களை ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் அவற்றினால் ஈடுபாடு உண்டு. அருணகிரி நாதரிடம் எப்படி நமக்கு ஈடுபாடு இருந்தது? கடவுள் நம்பிக்கையே இல்லை. ஆனால் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட கடவுளைப் பற்றிய இலக்கியத்திலே ஈடுபாடு இருந்தது. இலக்கியங்கள் உள்ளவரை, கலைகள் உள்ளவரை கடவுள் இருக்கிறார். உண்டா? இல்லையா? நீ நம்புகிறாயா இல்லையா? அதுவே பிரச்சனையாக இருக்கிறது. உடனே ஒரு பக்தனுக்கு எப்படி இராமாயணம் முக்கியமோ அதுபோல பக்தி இல்லாமலே எனக்கு இராமாயணத்தின் மீது ஈடுபாடு உண்டு. இதுக்கும் கதை உண்டு. 'சும்மா கதைபடிக்காதே அது ஆரிய சூழ்ச்சி அது பிற்போக்குத்தனமானது' என்றெல்லாம் சொல்லியுள்ளனர். நான் பள்ளிக்கூடம் போற வழியிலே இருசப்பக் கிராமணித்தெருன்னு ஒரு தெரு. அந்தத் தெருவுல வீரமணி இருந்தார். அப்ப அவருக்கு 12 வயது, எனக்கும் 12 வயது. அங்கே கம்பராமாயண குருகுல நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதனாலேயே கம்பர் மீது எனக்கு ஈடுபாடு உண்டு. அதுபோல் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. படித்தால் புரிந்தது அங்கே அதுதான் விஷயம். எடுத்தவுடனே படித்தால் ஏதோ பயமுறுத்தற மாதிரி இல்லை. புரியாததை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இப்போ இங்கேயிருந்து வேலூர் போக வழி தெரியும் என்று

நினைக்கிறோம். திடீர்னு போனா யாரிடமாவது வேலூர் போக வழி என்னப்பா என்று கேட்கிறோம். அது மாதிரி தெரியாது என்கிறபொழுது பிறர் உதவியை நாடுகிறோம்.

பழைய இலக்கியங்களில் இயல்பாகவே எனக்கு ஈடுபாடு உண்டு. அதற்கு இந்தச் சில காரணங்களும் உண்டு. அதற்கு நன்றி சொல்கிறதற்காகச் சொல்கிறேன். அந்த இலக்கியங்களைப் படிக்கக் கொடுக்கலை என்றால் நான் படிச்சிருக்கப் போறதில்லை. அதன் பிறகு 'ஜீவானந்தம்' என்கிற நாட்டின் பொதுஉடைமை வாதி. அவர்கள் கம்பன் உடன் பிறப்பு மாதிரியே என்பதை என்னுடைய பணி என்ற முடிவு எடுத்து பணியாற்றுகிறவர். அந்தக் காலத்தில் ஊர்கள்தோறும் கம்பன் கழங்கள் தோன்றின. அப்போது 20 வயதில் நான் மதுரையில் இருந்தபோது வீட்டுல சாப்பிட வழியில்லை. வேறு எங்கும் எந்த வேலைக்கும் போக முடியாத நிலையில் இருந்தேன். வீட்டிற்கு எதிரில் ஒரு மாவட்ட நூலகம் இருந்தது. அங்கே போய் ஏழு காண்டங்களும் கொண்ட கம்பராமாயணம் படிக்கிற ஒருவனுக்கு உபந்நியாசம் பண்ணனும் அது பற்றி கட்டுரை எழுதணுன்னு வளர்த்துக் கொள்வதற்கு அப்படியெல்லாம் இல்லை. நம்முடைய உள்ளுணர்வு வரவேற்றுக் கொள்வதற்கு அது தேவையாக இருக்கும் என்னை உருவாக்குவதற்கு. வெளியில் நின்ற நாயக்கர் அதென்ன ஒன்றைச் சொல்லி வேறு எதையாவது செய்யப்படாது. சொல்லுகிறபடி செய்வதுதான் உத்தமனுக்கு அடையாளம். அதுபோல் அது என்ன நோக்கத்தில் எழுதப்பட்டிருந்தாலும். எனக்கு என்ன நோக்கமுடன் இருக்கிறதோ அதன்படி உதவி செய்வதாக உணர்வு. கம்பன் மீது தமிழருக்கே ஓர் அன்பு. கற்பனை செய்து பாருங்கள். சாதாரண ஜனரஞ்சக வார பத்திரிகைதானே? ஆனந்த விகடன், கல்கி இதிலெல்லாம் கம்பன் சித்திரம் என்று ஒன்று வரும், வேற கம்பன் தரும் காட்சியும் வரும். இதுக்கு மேல இராஜாஜி சக்கரவர்த்தித் திருமகன் எழுதுவார். அப்போ இருந்த வாசகர்களுக்கு அதுமேல ஈடுபாடு இருந்த காலம். அந்த ஈடுபாடு எனக்கு மட்டும் தான் வந்ததா அல்லது அந்தக் காலத்திலுள்ள எல்லாருக்கும் வந்ததா? பழைய இலக்கியங்கள் படிப்பது, நானே படிப்பது, வகுப்பறையிலிருந்தால் நான் படித்திருக்கமாட்டேனோ, என்னவோ? முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, இதெல்லாம் படிப்பதற்குக் கூடஇருந்த நண்பர் கட்சி தோழர், அவர்தான் (எனக்கு வந்து கொஞ்சம் முறையாகத் தெரியும் என்று சொன்னாலும்) எங்காவது தப்பு வந்தால் திருத்திவிடுவார். தமிழில் என்னென்ன வந்திருக்கோ அதெல்லாம் இயன்ற வரை படித்தேன். எல்லாவற்றையும் படிக்க முடியாது. கொஞ்சம் படித்துவிட்டு தூக்கிப்போட்டு விடலாம். சிலவற்றைத் தவிர்க்கவே முடியாது. அப்படிப்பட்ட பழைய நூல்களை இன்னும் கூடப் படிக்கிறேன் என்று சொன்னால், எப்படித் தெரிந்த

நண்பர்களைத் தேடிக்கொண்டு போவோமோ, அது போல படித்துப் படித்துப் பார்த்த புத்தகங்களைத்தான் படிக்கத் தோன்றுகிறதே தவிர புதிய நூல்களுக்குப் போவதற்குக் கொஞ்சம் அச்சமாக இருக்கிறது.

முதலில் டெஸ்ட் ஆப் டைம் தேர்ந்து நம்மை உருவாக்கிக் கொள்வதற்குப் பதிலாக நமக்கு முன்னாலே சமகாலத்தில் முன்னாலேயே என்றால் அழகர்சாமி, கல்கி. (கல்கியை நான் அதிகம் படித்ததில்லை என்றாலும் கூட,) போன்ற அந்தக் காலத்தில் நமக்கு முன்னாலே உள்ள எழுத்தாளனைப் படிக்கிற ஒரு மரபு கூட இன்றைக்கு மங்கிப் போய்விட்டதோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. பிறமொழிகளில் அப்படி இல்லை. ஒருகேரள வாசகனைப் போய் உங்கள் மொழியில் உள்ள எழுத்தாளனை வரிசைக் கிரமமாகச் சொல்லுங்கள் என்று சொன்னால், அவர் குமரன்ஆசானிலிருந்து இன்றைக்கு இருக்கிற வாசுதேவன்நாயர் வரைக்கும் சொல்லுவார். ஒழுங்காகச் சொல்லுவார்கள். படித்திருப்பார்கள். 'சங்கம்புழ' என்று சொன்னால் பாடவே ஆரம்பித்து விடுவார்கள். அப்படியெல்லாம் தமிழகத்திலும் இருந்தது. அந்தச் சூழ்நிலையில் வளர்ந்த பொழுது புதுமைபித்தனை எனக்கு அறிமுகம் செய்து வைத்து புதுமைபித்தன் நூலைப் படிக்கச் சொல்லி வற்புறுத்தியவர் தமிழ்முடி முதல்ல **புதுமைபித்தன் கதைகள்** என்கிற தொகுதியைப் படித்தேன். அது எனக்கு இன்னொரு கதைத்தரிசனமாக, எனக்கு பிசாசு பிடித்து ஆட்டிப் படைத்தது மாதிரி என்னை ஆட்டிப் படைத்தது. முதல் வரியிலிருந்து கடைசிவரி வரைக்கும் புதுமைப்பித்தன் கதைகளையே நான் ஒப்பித்துவிடுவேன். அந்த அளவுக்கு அதிலே எனக்கு ருசியும் ஈடுபாடும் தனியாத தாகமும் இருந்தது. அதற்கு மேலே மறுபடியும் ஒரு வாய்ப்பு புதுமைப்பித்தன் நூல்களையெல்லாம் ஸ்டார் பிரசுரத்தார் போடுவது என்று தீர்மானித்த பொழுது அதன் ப்ரூப் பார்க்கும் வேலை நமக்குத் தரப்பட்டது. எனக்கு கரும்பு திண்ணக்கூலி வாங்கியது மாதிரி அந்த பணியின் மூலம் இன்னும் என் பார்வை பிரகாசம் அடைந்தது. அப்புறம் சுத்தானந்த பாரதியாரின் **ஏழை படும் பாடு** என்ற அறிவு மொழிகள். அது நம்மிடையே ஒரு திருடனை எப்படிப் பார்க்கவேண்டும் என்று எனக்குக் கற்றுக் கொடுத்தது. 'வீழ்த்தப்பட்டவர்களை' நாம் எப்படி பார்க்கவேண்டும்; நாம் செய்யக் கூசுகிற உயிர் போனாலும் நாம் செய்ய மாட்டோம் என்று நினைக்கிற ஒரு காரியத்தை, சமகால மனிதன் என்னோடு பிறந்தவன் என்னோடு வாழ்ந்தவன் - கூடவே இருக்கிறவன் - இருப்பதாக காட்டிக் கொள்கிறவன் - தோற்றமளிக்கிறவன் எப்படிச் செய்ய முடிகிறது. இதற்காக நான் செய்ய மறுத்தால் அவன் தண்டித்தால் அதுவும் சரியென்று எனக்குத் தோன்றவில்லை; அவனை நான் சரியான மனிதனாகச் சொல்லவில்லை;

அதுவும் சரியென்று எனக்குத் தெரியவில்லை; அவனைப் பழித்தால். அது தகாத காரியம்; அவன் செய்கிற காரியத்தை விடவும் தகாதது என்று தோன்றியது. அப்புறம் அவனை எப்படிப்பார்ப்பது என்ற பார்வையை - வீழ்த்தப்பட்ட மனிதர்களை எப்படிப் பார்ப்பது என்ற பார்வையை - நான் கற்றுக்கொண்டேன்.

என் எழுத்தின் மூலம் என்னையே நான் ஆராய்கின்ற போது, இந்தப் பார்வை எப்படி வந்தது? லியோடால்ஸ்டாய் எழுதிய **Resurrection**-ஐப் படித்திருக்காவிட்டால் நான் சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற கதையை எழுதியே இருக்க மாட்டேன். இப்போது தோன்றுகிறது; 'நானும் என் எழுத்தும்' என்பதைப் பேசும்போதுதான் எது எது என்னை உருவாக்கியது என்று சொல்லி வரும் போது தான் 'ஒவ்வொன்றும் நானே உருவாக்கிக் கொண்டேன்' நான் என்னுடைய சந்தோஷத்திற்காக எழுதுகிறேன் என்றெல்லாம் சொல்லுகிற பள்ளியிலிருந்து நான் வரவில்லை என்றிட முடியாததை அறிகிறேன். அதுவும் உண்மை. எனவே உலக இலக்கிய கர்த்தாக்களிடமிருந்தும் ஏன் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னாலிருந்த மேல்நாட்டு எழுத்தாளர்களிடமிருந்தும் 2000 வருடங்களுக்கு முன்னாலிருந்த நம்முடைய தமிழ் எழுத்தாளர்களிடமிருந்தும் தாக்கம் பெற்றுள்ளேன். தாத்தா ஒரு தீவிர வைஷ்ணவர். பின்னாளில் நாத்திகராகி பெரியாரிடம் நண்பராகிவிட்டார். என் தாயாருக்கே வரதராஜுலு நாயுடு தலைமையில் சுயமரியாதைக் கல்யாணம். ஆனால் அவர் நாத்திகராகி விட்ட பின்பும் கூட நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பாடல்களை பாடினால் இரண்டு கண்ணிலிருந்தும் தாரை தாரையாய் கண்ணீர் வரும். நான் கிண்டல் பண்ணுவேன். "நீர் என்ன நாத்திகர் என்கிறீர். பின் ஏன் அழுகிறீர்கள்?" என்பேன். 'அது தமிழ்டா' என்பார். எனவே, திவ்வியப்பிரபந்தத்தின் மீது 10,15 வயதிலேயே நாட்டம் உண்டு. அதன் பிறகு படிப்பு. இதெல்லாம் தான் நம்மை உருவாக்குகிறது.

எல்லாவற்றிற்கும் மகாகவிபாரதியார் காரணம். யாரையாவது ஒரு குருவைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று நான் நினைத்த காலத்தில் அதற்குத் தகுதியான ஆசிரியர்களாக ரொம்பப்பேர் இருந்தார்கள். தெரியாததைக் கற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக ரொம்ப பேர். ஆனால் ஒருவன் முழுசாக குருவாக ஏற்றுக் கொள்வதற்கு மகாகவி பாரதியாரின் நூல்கள்தான் ரொம்ப உதவியாக இருந்தது. உங்களுக்கு எல்லாம் உண்டோ? இல்லையோ? எனக்கு ரொம்பக் குழப்பம். கடவுளை நம்பாம இருக்கிறது சரியா? நம்பறதற்கு ஒரு காரணமும் இல்லை. ஆனால் நம்பாமல் இருப்பது குற்றம் போல் தோன்றுகிறது. பாரதியாரின் புஸ்தகத்தைப் புரட்டினால் தமிழே தெய்வம் தெய்வம் என்பார். அப்புறம் நம்பிக்கை கொண்டு தெய்வம் என்றால் என்ன என்பதை பாரதியார் மூலமே அறிய

முற்படும் போது, அடடா! தெய்வத்தை தினசரி உபவாசித்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் அது மாதிரி உணர முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் எங்கள் கண்ணனே" என்று சொன்னது. ஒரு வேலைக்காரனை எப்படிப் பார்ப்பது? அவர் கண்ணனை வேலைக்காரனாக, கண்ணனைக் குழந்தையாக, கண்ணனைக் காதலியாக என ஆழ்வார்கள் செய்யாத காரியத்தை அவர் செய்திருக்கிறார். பெரியாழ்வார் வந்து கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துத் தன்னைத் தாயாகப் பாவித்து முலைப்பால் கொடுக்கும் பெண்ணாகப் பாவித்து

"உன்திருமலிந்து திகழும் மார்பு தேக்கவந்து என் அல்குலேறி
ஒருமுலையை வாய்மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு
இரு முலையும் முறை முறையாய் ஏங்கியேங்கி இருந்துண்ணாயே"

என்று பாடுகிறார். தன்னைப் பெண்ணாகப் பாவித்து, கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துக் கொள்கிறார். பாரதியார் தான் கண்ணனைக் கண்ணம்மாவாக்கி, தன்னை கண்ணம்மாவுக்குக் காதலனாக்கி தன் வேலைக்காரனாக்கி, தன் குருவாக்கி, தனக்கு அரசனாக்கி - எந்த ஆழ்வார் இத்தனை டைமென்சன் ஆகப் பார்த்திருப்பார்கள்? எந்த ஆழ்வார் இத்தனை அழகாகப் பார்த்திருப்பார்கள்? திவ்வியப் பிரபந்தத்தின் மீது ஒரு புதிய நாட்டம் மறுபடியும் படிக்கத் தோன்றக் காரணம் தாத்தாவுக்குப் பிறகு பாரதியார்தான். அப்படியும் பழைய நூல்களைப் படிக்கின்ற போது அவர்கள் படைப்புகள் மத்தியிலே பல புதிய தாக்கங்களை ஏற்படுத்தும். எப்படிப் புதுமைப்பித்தனுக்கு சாப விமோசனம், அன்றிரவு இதெல்லாம் எழுத வேண்டும் எனத் தூண்டியது எது என்றால் அந்தப் பழைய இலக்கியங்களிலே கொண்ட ஈடுபாடும் அதிலே இருக்கிற தேர்ச்சியின் விளைவாக அதை எதிர் நின்று பார்க்கின்ற துணிவும் தான் காரணங்கள். இராமாயணம் பரிச்சயம் உள்ளவர்களுக்கு இந்தக் கதை பிடித்தும் இருக்கலாம்; பிடிக்காமலும் இருக்கலாம். இது சாப விமோசனத்திற்கு முன்னுரை மாதிரி.

எனவே பழைய இலக்கியங்களில் பயிற்சி, அந்தக் காலத்தில் நமக்கு முன்னாலிருந்த எழுத்தாளர்களினுடைய படைப்புகளில் ஆழ்ந்த ரசனை முதலியன வேண்டும். இன்றைக்கும் நான் பழைய இலக்கியங்களைக் குறித்து கட்டுரை எழுதினா அதெல்லாம் பண்டிதர்கள் வித்துவான்கள் போன்றவர்கள் செய்தால் நாம் செய்வதை விடச் சிறப்பாக இருக்கும் என்றெண்ணுவேன். ஆனால் அதை உணர்வதற்கு நமக்கென்று தனி உள்ளம் வேண்டும். அந்த உள்ளம் தான் எழுத வைத்தது. படிக்க வைத்தது.

மக்கள் மீது கொண்ட அன்பு இன்னும் அவர்களிடம் உறங்கிக் கொண்டிருக்கிற அவர்களுக்கே தெரியாமல் ஒவ்வொரு மனிதனிடம்

உள்ள தெய்வத்தை அதாவது சேவகனிடம் கண்ணனைப் பார்க்க வேண்டும்; குழந்தைகளிடம் கடவுளைப் பார்க்க வேண்டும். இப்படிப் பார்த்தீர்கள் என்றால் நான் சொல்லுகின்ற கடவுள் என்னவென்று உங்களுக்குப் புரியும். அதுமாதிரியான ஒரு பார்வையை ஒரு படைப்பாளி உணர்ந்து கொள்வதற்கான சூழ்நிலையை எனக்குக் கற்பிப்பதற்கு உடனிருந்தவர்களும் காரணம். வேறு எந்த ஒரு மொழியிலேயும் விளைந்திருக்கிற நல்ல விளைச்சலைக் தமிழிலே கொஞ்சம் எழுதாட்டி போனாக் கூட நஷ்டமில்லை. இருப்பவற்றை எல்லாரும் படிக்க வேண்டும். அதைப் படிக்காமல் புதுசா எழுதிக் கொண்டு இருப்பதன் காரணத்தினாலே இன்றைய எழுத்துக்களில் ஒரு தொய்வு இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

தமிழ் தெரிகிறது. எனக்கு எழுதமுடியும். எனக்கு எழுத உரிமை இருக்கிறது. நான் எழுதலாம். ஏன் எழுதக் கூடாதா? இதெல்லாம் சரிதான். எல்லாவற்றிற்கும் மேலே நமக்கு முன்னாலே யார் யார் என்னென்ன இந்த மொழியிலே எழுதி வைத்திருக்கிறார்கள். உலகம் பூரா என்ன எழுதி வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுகின்ற ஒரு நாட்டமும், ஓர் ஈடுபாடும் இளைஞர்களுக்கு வேண்டும்.நான் இளைஞனாக இருந்தபோது நான் பாலகனாக இருந்தபோதே - அது எனக்கு நேர்ந்தது.அப்புறம் நான் எழுதிய கதைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு நான் சொல்ல வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கமாட்டீர்கள். ஏதேனும் கதைகளைக் குறித்து யாராவது பேசினால் வேண்டுமானால் பதில் சொல்லலாமே ஒழிய நான் எழுதியதெல்லாம் ஒரே புத்தகம் தான். பெரிய புத்தகமாக அதை எழுதியிருக்கலாம். ஒவ்வொரு காலத்தில், ஒவ்வொரு நிர்பந்தத்தில், ஒவ்வொரு சூழ்நிலையில், ஒவ்வொரு தூண்டுதலில் எழுதிக் கொண்டது தானே ஒழிய அதிலே சொல்லப்படுகிற செய்தி அடிப்படை நாதம் எப்போதும் ஒன்றுதான். அதில் சுருதி எப்போதும் பிசகியது இல்லை. பிசகாது. அந்த அளவுக்கு நானும் என் எழுத்தும் பற்றி நல்ல முறையாகப் பிற்காலத்தில் புரிந்து கொள்ள முடியும். இது குறித்து விஷேசமான சந்தோஷம். ரொம்பப் பேரு நல்லாவே எழுதுகிறார்கள். அவர்களுக் குரியதைப் படிக்க மாட்டேன் என்று குறை சொல்லுவார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுவது ஒன்றுதான். நீங்கள் எனக்கு எழுதுங்கள். நான் படிக்கிறேன். "நான் எழுதுவதை மற்றவர்கள் படிக்கட்டும்" என்று சுந்தரராமசாமி சொல்லுவார். ஓய்! உம்மைக் கண்டா எனக்குப் பொறாமையா இருக்கையா! அவர் என்னைவிட நல்ல எழுத்தாளன் என்று நானே ஒத்துப்பேன். அவ்வளவு அற்புதமாய் எழுதுவார். ஆனால் அவருக்கு எனக்குக் கிடைச்ச மாதிரி இந்த காலத்தில் வாசகர்கள் இருந்ததில்லை. அது குறித்து அவர் சொல்லுவார். 'அது ஒரு பாக்கியம் தான்' என்று. அதை நான் நன்றாக புரிந்து

கொள்ள முடிந்தது. அதனுடைய பலன்களை என் எழுத்து பலனளித்துவிட்டது. அதனுடைய நோக்கம் நிறைவேறிவிட்டது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேனே. என்னை ரொம்பவும் பாதித்த விஷயம் 'கை ரிக்ஷா'. இன்றைக்கு இல்லை. ஆனால் காரணம். எல்லாரும் காரணம். ஆனால் எனக்குத் தோன்றிய உணர்வு "இது இருக்கக்கூடாது; இது மனிதனை அவமானப் படுத்துகிறது; அதனைச் சமூகத்திலிருந்து இந்தத் தொழிலை விலக்கிவிட வேண்டும்." என நான் எண்ணியது நிறைவேறிவிட்டது. Thanks to the Government. அது வேறு விஷயம். மனிதனை ஆக்குவதற்கு, எண்ணத்தைப் புரிந்து கொள்வதற்கு, அதுபோலவே பலவிஷயங்களைச் சொல்லலாம், பல விஷயங்கள் நிறைவேறியிருக்கின்றன. அவனை மரியாதை இல்லாமல் வேலை செய்யக் கூப்பிடுவது; அவர்களும் அதை ஏற்றுக் கொள்வது; பெண்மக்களை அவமதிப்பது; பெண் ஆணுக்கு அடிமைதான் என்ற வாதம் புரிவது; அடிமையாகத் தான் இன்றைக்குக் கூட நடத்துவார்கள். அடிமைதான் என்று வாதம் புரிகிற அபத்தமான மனிதன் இந்தக் காலத்தில் இருக்கமாட்டான் என்று நினைக்கிறேன். இதெல்லாம் எழுத்தின் மூலமாக வாழ்க்கையின் வளர்ச்சியை வளர்ந்து வரும் சந்ததியினர்க்கு நாம் எடுத்துக் காட்ட வேண்டும். வாழ்க்கையிலிருந்து தான் வாழ்க்கை வளர்ந்து வருகிறது; மக்களால் உருவாக்கப்படுகிறது. அதிலே அதைப் பார்த்து அந்தப் போராட்டத்தை, அந்தத் துன்பத்தைத் தான் உள்வாங்கிக் கொண்டு கூடுவிட்டுக் கூடு பாய்கிற மாதிரி அந்தத் துன்பப்படுகிற மனிதனுடைய உள்ளத்தை அவனுக்கில்லாவிட்டாலும் அதை நாம் வாங்கிக் கொண்டு தருகிற - உணர்வுகள் எல்லா படைப்பாளிக்கும் பொது என்று கூறுவேன். அந்த அடிப்படையில் எனது எழுத்துக்கள் எழுதப்பட்டவை. அதற்கு இன்று வரைக்கும் நல்ல மரியாதை. காரணம் என்னவென்றால் எனக்கு எப்போது எழுதவேண்டும். எப்பொழுது கூடாது என்று தெரியும். ஏன் எழுதமாட்டேன் என்கிறீர்கள்? நீங்கள் எழுதி பத்தாண்டு ஆகிவிட்டது! என்றெல்லாம் என்னிடம் உரிமையோடு சண்டை போடுகிறவர்களும் இருக்கிறார்கள். அது தான் என் எழுத்தின் வெற்றி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
Indian Epistemology	125.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு	75.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
பயிலரங்கக் கவிதைகள்	18.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2	64.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1	56.00
இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து	125.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2	110.00
எட்டையபுரப் பள்ளு	60.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2	65.00
ON TRANSLATING TIRUKKURAL	50.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
செந்தமிழ் அகராதி	150.00
சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி	200.00
THIRUVACHAGAM	175.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
பொருள் புதிது	35.00
ஆளும் தமிழ்	28.00
தமிழர் கொடிகள்	30.00
தமிழர் சமூகவியல்	35.00
THE NARRINAI FOUR HUNDRED	175.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
தமிழ் கற்பித்தலில் உன்னதம்	20.00
மேலை நோக்கில் தமிழ்க்கவிதை	100.00
SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE	35.00
அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள்	125.00
TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY	200.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00

Pub.No. 411 **நானும் என் எழுத்தும்** **60.00**